SECRETARIAT LIBRARY

Nadu Legislative Assembly / ~~Council~~ Debates:-

1981 Vol. XII S.No 1-4 No.

1981 XII 1-4

இந்த / புத்தகக் கட்டை வரிசை மாற்றாமல்
புத்தகமாகப் பைண்டு செய்யும்படி கேட்டுக்
கொள்ளப்படுகிறது.

118

for LIBRARIAN.

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகளின் அட்டவணை

## இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படியான ஏழாவது சட்டமன்றப் பேரவையின் இரண்டாவது கூட்டத்தொடர்

*1981, பிப்ரவரி, 9, 10, 11, 12-ஆம் நாட்கள்*

(தொகுதி XII எண்கள் 1 முதல் 4 வரை)

©
தமிழ் நாடு அரசு
1983

சட்டமன்றப் பேரவைத் துறை,
புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை-600 009

[விலை ரூ. 1]

D
V211,31 'N81
N83.12;2
182175

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகளின் அட்டவணை.

---

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படியான ஏழாவது சட்டமன்றப் பேரவையின் இரண்டாவது கூட்டத் தொடர்.

1981 பிப்ரவரி 9, 10, 11, 12 ஆம் நாட்கள்.

(தொகுதி XII—எண்கள் 1 முதல் 4 வரை)

## உள்ளடக்கம்.


| | பக்கங்கள் |
|---|---|
| தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும் | i—iv |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் | v—vi |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் பெயர்ப் பட்டியல் (தொகுதிகள் உட்பட அகர வரிசையில்) | xvii—xiii |
| அமைச்சரவையின் கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானம்—விவாதம் | 56—128 |
| அரசினர் சட்ட முன்வடிவுகள்— | |
| (1) கடன் நிவாரண (திருத்தச்) சட்ட முன்வடிவு, 1981 | 335—359 |
| (2) தனிக் குடியிருப்புப் பகுதி உடைமைச் சட்ட முன்வடிவு, 1981 | 276—277 |
| (3) நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு, 1981 | 334 |
| (4) பச்சையப்பன் பொறுப்புக்கழக (நிர்வாகத்தை அரசு எடுத்துக்கொள்ளுதல்) சட்ட முன்வடிவு, 1981 | 373—380 |
| (5) பொது வக்புகள் காலவரையறையை நீட்டித்தல் திருத்த சட்ட முன்வடிவு, 1981 | 359—379 |
| அரசினர் தீர்மானம்— | |
| பேரவை ஒத்திவைக்கப் பெறுதல் | 289 |
| அறிக்கை அளித்தல்— | |
| பொதுக் கணக்குக் குழு | 275 |
| பொது நிறுவனங்கள் குழு | 276 |
| மாவட்டங்களில் வறட்சி நிலை | 181—191 |

பக்கங்கள்

அ—தொடர்ச்சி.

**அறிவிப்பு—**

நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெறும் பகுதிகள் குறித்து — 388

நீர்ப்பாசனத் துறை அமைச்சரின் திருத்த அறிக்கை — 192

**உரிமைப் பிரச்சினை—**

ஊரகத் தொழில் அமைச்சர் மீது — 171—180

**ஒழுங்குப் பிரச்சினை—**

கண்டனத் தீர்மானத்தின் மீது கட்சித் தலைவர்களைப் பேச அனுமதிப்பது — 170—171

**கவன ஈர்ப்பு(கள்)—**

காட்பாடி, குடியாத்தம் பகுதிகளில் கால்நடைகள் நோயினால் பாதிக்கப்பட்டிருப்பது — 195—199

செங்கல்பட்டு மாவட்ட மீனவர்களுக்கு நிவாரணம் — 192—195

மேட்டுப்பாளையம் ரோடில் சாராயம் கடத்தல் கார் ஏறி காவல் துறை அதிகாரி மரணமடைந்துள்ளது — 48—59

வெள்ளக்கோவில் தொகுதியில் விசைத்தறிக்கூடங்கள் மூடப்பெற்றதால் தொழிலாளர்களுக்கு ஏற்பட்ட நிலை — 52—58

**வினாக்கள்-விடைகள்—**

(1) உடுக்குறியிட்ட வினாக்கள் — 1—40, 133—170

(2) உடுக்குறியிடாத வினாக்கள் — 275, 391—413

## அகர வரிசைத் தொகுப்பு அட்டவணையைப் பயன்படுத்தும் முறை.

இவ்வட்டவணை அகர வரிசைப்படி அமைக்கப் பெறுகிறது. முக்கியத் தலைப்புகள் ஓரங்களிலிருந்து அச்சடிக்கப் பெறுகின்றன, துணைத் தலைப்புகள் முக்கியத் தலைப்புகளிலிருந்து சற்று உள்ளடங்க அச்சிடப் பெறுகின்றன.

வினாக்கள் தவிர, மற்ற நடவடிக்கைகளைக் குறித்த பல்வேறு குறிப்புகள் யாவும், பெயர்கள் உள்ளிட்ட வெவ்வேறு முக்கியத் தலைப்பின்கீழ் சம்பந்தப்பட்ட பொருள் விளக்கத்தினை அடுத்து அடைப்புகளுக்குள் அச்சிடப்பெறுகின்றன. எடுத்துக்காட்டாக, (தீ) என்று போடுவது தீர்மானத்தையும் (க.ஈ.) என்று போடுவது கவன ஈர்ப்பையும், (ஒ.தீ.) என்று போடுவது ஒத்திவைப்புத் தீர்மானங்களையும், (அ) என்று போடுவது அறிக்கையையும் குறிக்கும்.

இத்தகைய குறிப்புகள் எதுவும் பெற்றிராத பொருள் விளக்கம் வினாக்களைச் சுட்டும் எனினும், சட்ட முன்வடிவுகள், நிதி அலுவல்களைப் பொறுத்தவரையில் சம்பந்தப்பட்ட பொருள் விளக்கமே அவற்றைத் தெளிவாக்கும்.

எல்லாச் சட்ட முன்வடிவுகளும் "சட்ட முன்வடிவு" என்ற முக்கியத் தலைப்பின் கீழ் அகர வரிசைப்படி முறைப்படுத்தப் பெறுகின்றன.

குழுக்கள், மன்றங்கள், வாரியங்கள், மாநகராட்சிகள் போன்ற அமைப்புக்கள் அனைத்தும், 'குழு(க்கள்)', 'மன்றம்(கள்)', 'மாநகராட்சி(கள்)' வரிசைப்படுத்தப் பெறுகின்றன.

பள்ளிகள், கல்லூரிகள், மாநாடுகள், துறைமுகங்கள், ஆலயங்கள் குறித்த பல்வேறு விரிந்த பொருள்களும் அத்தகைய முக்கியத் தலைப்புகளின் கீழேயே அகர வரிசைப்படி காட்டப் பெறுகின்றன.

பேரவை முன் வைக்கப்பெறுகின்ற ஏடுகளின் பக்கங்கள் இத்தலைப்பின் கீழ் கொடுக்கப் பெறுகின்றன.

தலைவர் மற்றும் துணைத் தலைவர், மாற்றுத் தலைவர் ஆகியோரின் தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும் "தலைவர்" என்ற தலைப்பின் கீழ் வரிசைப்படுத்தப் பெறுகின்றன.

அகர வரிசைத் தொகுப்பு அட்டவணையில் பயன்படுத்தப் பெற்றுள்ள சில சுருக்கங்களின் விளக்கப் பட்டியல் ஒன்று கீழே கொடுக்கப் பெற்றுள்ளது:

| | | |
|---|---|---|
| அ. | | அறிக்கை |
| அறிவி. | : | அறிவிப்பு |
| அ.வி. | : | அரை மணி நேர விவாதம் |
| கு.வி. | : | குறுகிய கால விவாதம் |
| பொ.வி. | : | பொது விவாதம் |
| ஆ.உ. | : | ஆளுநர் உரை |
| உ.பி. | : | உரிமைப் பிரச்சினை |
| ஒ.பி. | : | ஒழுங்குப் பிரச்சினை |
| க.ஈ. | : | கவன ஈர்ப்பு |
| க.ஈ.அ. | : | கவன ஈர்ப்பு அறிக்கை |
| ச.அ.நி. | : | சட்ட முன்வடிவின் அறிமுக நிலை |
| ச.ஆ.நி. | : | சட்ட முன்வடிவின் ஆய்வுநிலை— இந்நிலையில், (1) ஆய்வு/கூட்டாய்வுக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப்பெறும் தீர்மானம். (2) ஆய்வு/கூட்டாய்வுக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்ப வேண்டுமென்ற திருத்தம். (3) சுற்றுக்கு அனுப்பப் பெறுவதற்கான திருத்தம். (4) ஆய்வு/கூட்டாய்வுக் குழு அறிவித்தபடி ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கான தீர்மானம். (5) ஆய்வு/கூட்டாய்வுக் குழுவிற்கு மீண்டும் அனுப்புவதற்கான திருத்தம் முதலியன. |
| ச.பி.ஆ. | : | சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்தல் |
| ச.பே. | : | சட்டமன்றப் பேரவை |
| ச.மே. | : | சட்டமன்ற மேலவை |
| த.கோ. | : | தகவல் கோரல் |
| த.வி. | : | தன்னிலை விளக்கம் |
| தீ. | : | தீர்மானம் |
| உ.தீ. | : | உரிமைத் தீர்மானம் |
| ஒ.தீ. | : | ஒத்திவைப்புத் தீர்மானம் |
| த.தீ. | : | தனித் தீர்மானம் |
| து.மா.கோ. | : | துணை மானியக் கோரிக்கை |
| மி.மா.கோ. | : | மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கை. |
| பே.அ. | | பேரவையில் அலுவல். |

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

### தமிழ்நாடு ஆளுநர்.

திரு. சாதிக் அலி

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் (முதல அமைச்சர்)—பொது, பொது நிர்வாகம், திட்டம், இந்திய ஆட்சி பணியாளர், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்ட துணை ஆட்சியாளர் சம்பந்தப்பட்டவை, காவல், இலஞ்ச ஒழிப்பு, பொதுப்பணித் துறை மற்றும் பொதுப்பணித் துறை (நிறுவனம்) சம்பந்தப்பட்ட அலுவல்கள்.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (நிதிஅமைச்சர்)—நிதி, சட்டமன்றம், தேர்தல்கள், உணவு, மீனளம் பிற்பட்ட வகுப்பினர், இளைஞர் அணி, விலைவாசிக் கட்டுப்பாடு, முன்னாள் இராணுவத்தினர்.

3. மாண்புமிகு திரு. சு. இராமச்சந்திரன் (மின் துறை அமைச்சர்)—மின்சாரம், இரும்பு எஃகு கட்டுப்பாடு.

4. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி (ஊரகத் தொழில் அமைச்சர்)—கிராம குடிசை சிறு தொழில்கள். உள்ளிட்ட ஊரக தொழில்கள், பால், பால் பெருக்குத் திட்டம், ஆவணப் பதிப்புத் துறை.

5. மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் (வருவாய்த் துறை அமைச்சர்)—வருவாய்கள், வணிக வரிகள், ஆயத்துறை, மக்கள் தொகைக் கணக்கு.

6. மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் (செய்தி அறநிலையத்துறை அமைச்சர்)—செய்தி, விளம்பரம், திரைப்பட தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சி கழகம், இந்து அறநிலையத்துறை, காடுகள், சின்கோனா, திரைப்படச்சட்டம், மது அனுமதிச் சீட்டு வழங்கல்.

7. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (கல்வி அமைச்சர்) தொழில் நுட்பக் கல்வி உள்ளிட்ட கல்வி, ஆட்சி மொழி.

8. மாண்புமிகு திரு. கா. காளிமுத்து (வேளாண்மைத்துறை அமைச்சர்)—வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மை பொறியியல் பிரிவு மற்றும் வேளாண்மை பொறியியல்.

9. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் (கூட்டுறவு-சட்ட அமைச்சர்)—சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள், எடைகள், மற்றும் அளவைகள் பற்றி சட்டம் இயற்றல், நிறுவனங்கள், பதிவு கடன் வழங்கல் மீதான நிவாரணச் சட்டம், சீட்டு பற்றிய சட்டம், கூட்டுறவு.

10. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு (உள்ளாட்சித் துறை அமைச்சர்)—நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி, கிராமப்புற கடன் நிவாரணம்: பூமிதானம், கிராமதானம் நெடுஞ்சாலைகள்.

11. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நலத்துறை அமைச்சர்)—தொழிலாளர், வீட்டு வசதி, குடிசை மாற்று வாரியம், புள்ளி விவரங்கள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், நகர அமைப்பு, இட வசதி கட்டுப்பாடு.

12. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்)—மக்கள் நல்வாழ்வுத் துறை

13. மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது (நீர்ப்பாசனத் துறை அமைச்சர்—வேளாண்மை பணி, கூட்டுறவு சங்கங்கள், சிறுபாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டங்கள், வஃபு.

14. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி (போக்குவரத்துதுறை அமைச்சர்)—அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், துறைமுகங்கள்.

15. மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு (தொழில் அமைச்சர்)—பெருந் தொழில்கள், சுரங்கங்கள், கனிப் பொருள்கள், நெசவாலைகள்.

16. மாண்புமிகு திரு. எஸ். எஸ். இராஜேந்திரன் (கைத்தறி-கதர்த்துறை அமைச்சர்)—கைத்தறி, கதர், மது அனுமதிச் சீட்டு வழங்கல் நீங்கலாக மது விலக்கு, பயண இசைவுச் சீட்டு.

17. மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி (அரிசன நலத்துறை அமைச்சர்)—அரிசன நலம், எழுது பொருள் அச்சுத் துறை, அரசு அச்சகம், அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, மலைவாழ் பழங்குடியினர், பிணைத் தொழிலாளர், வேலை வாய்ப்பும் பயிற்சியும்.

18. மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் (சமூக நலத் துறை அமைச்சர்)—மகளிர், குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், கால் நடை பராமரிப்பு, பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப்பட்டவர்கள் நலம், சீர்திருத்த நிர்வாகம்.

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## Governor of Tamil Nadu

## Thiru SADIQ ALI

### MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

1. Hon. Thiru M.G. RAMACHANDRAN (Chief Minister)—Public General Administration, Planning, Indian Administrative Service District Revenue Officers, Deputy Collectors, Police, Prevention of Corruption, Public Works Department and Establishment Matters relating ot Public Works Department.

2. Hon. Dr. V.R. NEDUNCHEZHIYAN (Minister for Finance)—Finance, Legislature, Elections, Food, Fisheries, Backward Classes, Youth Service Corps, Price Control and Ex-Servicemen.

3. Hon. Thiru S. RAMACHANDRAN (Minister for Electricity)—Electricity, Iron and Steel Control.

4. Hon. Thiru K.A. KRISHNASAMY (Minister for Rural)—Industries)—Rural Industries including Village, Cottage and Small Industries, Milk, Dairy Development and Registration.

5. Hon. Thiru S.D. SOMASUNDARAM (Minister for Revenue)—Revenue, Commercial Taxes, Excise and Census.

6. Hon. Thiru R.M. VEERAPPAN (Minister for Information and Religious Endowments)—Information and Publicity, Film Technology, Tourism, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forest and Cinchona and Grant of Liquor Pesmits.

7. Hon. Thiru C. ARANGANAYAGAM (Minister for Education)—Education including Technical Education and Official Language.

8. Hon. Thiru K. KALIMUTHU (Minister for Agriculture)—Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing and Agro-Engineering.

9. Hon. Thiru C. PONNAIYAN (Minister for Co-operation and Law)—Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits and Co-operation.

10. Hon. Thiru P. KULANDAIVELU (Minister for Local Administration—Municipal Administration, Panchayats and Panchayat Unions, Community Development, Rural Indebtedness, Bhoodan and Gramdhan and Highways.

11. Hon. Thiru S. RAGHAVANANDAM (Minister for Labour—Labour, Housing, Slum Clearance Board, Statistics, Tamil Nadu Water Supply and Drainage Board, Town Planning and Accommodation Control.

12. Hon. Dr. H.V. HANDE (Minister for Health)—Health.

13. Hon. Thiru K. RAJA MOHAMMED (Minister for Irrigation)—Agro Service Co-operative Societies, Irrigation including Minor Irrigation and Wakf.

14. Hon. Thiru S. MUTHUSAMY (Minister for Transport)—Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports.

15. Hon. Thiru S. THIRUNAVUKKARASU (Minister for Industries)—Large Scale Industries, Mines and Minerals and Textiles

16. Hon. Thiru S.N. RAJENDRAN (Minister for Handloom and Khadi)—Handlooms, Khadi, Prohibition excluding grant of Liquor permits and Passports.

17. Hon. Thiru M. VIJAYASARATHY (Minister for Harijan Welfare)—Harijan Welfare, Stationery and Printing, Government Press, News Print Control, Hill Tribes and Bonded Labour and Employment and Training.

18. Hon. Thirumathi GOMATHI SRINIVASAN (Minister for Social Welfare) Social Welfare including Women and Children Welfare Animal Husbandry, Beggars Home, Orphanages, Indians Overseas, Refugees and Evacuees and Correctional Administration.

## தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

### பேரவைத் தலைவர்.

*மாண்புமிகு திரு. க. இராசாராம்

### பேரவைத் துணைத் தலைவர்.

*மாண்புமிகு திரு. பி. எச். பாண்டியன்.

### † மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

1. திரு. வி. வி. சுவாமிநாதன்.
2. திரு. ஜே. எஸ். இராசு.
3. திரு. என். எஸ். வி. சித்தன்.
4. திரு. எஸ். சிவசாமி.

### சட்ட மன்றப் பேரவைச் செயலாளர்.

திரு. அ. மு. அழகர்சாமி, பி.ஏ., பி.எல்.

### துணைச் செயலாளர்கள்.

திரு. த. இராதாகிருஷ்ணன்.
திரு. இரா. பாலகுரு, பி.எ.
திரு. பி. எம். பத்மநாபன் நம்பியார், பி.ஏ., பி.ஜி.எல.

### குழு அலுவலர்.

திரு. ச. பாஷ்யம், பி.ஏ. (ஆனர்ஸ்),

### சார்புச் செயலாளர்கள்.

திரு. வி. சீதாராமன், பி.காம்.
திரு. பெ. பள்ளிகொண்டபெருமாள், பி.ஏ., பி.எல்.
திரு. செ. சு. ஜானகிராமன், பி.ஏ., பி.எல்.
திரு. பெ. ச. கனகசபாபதி, பி.ஏ., பி.எல்.
திரு. பா. பாலகிருஷ்ணன், பி.காம்.
திரு. ஜே. ரெஜினால்ட் ஜான், பி.ஏ.
திரு. டி. எஸ். துளசிராம் (எஸ்டேட் அதிகாரி).

---

* 21-6-1980 அன்று தேர்ந்தெடுக்கப்பெற்றார்கள்.
† 23-1-1981 அன்று நியமனம் செய்யப்பெற்றார்கள்.

பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர்

திரு. பி. கோதண்டராமன்.

தலைமை நிருபர்

திரு. மா. சந்திரசேகரன்.

விவாதப் பதிப்பாளர்

திரு. ஜி. எஸ். அனந்தநாராயணன், பி.லிட்.

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி) தயாரிக்கப்பட்ட பெயர்ப் பட்டியல்.

| | தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|---|
| 1 | அங்குசாமி, திரு. ச. .. | .. | திருவாடானை. |
| 2 | அப்துல் ரசாக், திரு. கே. எம். | | ஆலந்தூர். |
| 3 | அப்பாதுரை, திரு. மு. | .. | ஒட்டப்பிடாரம் (செ.வ.) |
| 4 | அம்பிகாபதி, திரு. மு. | .. | மன்னார்குடி. |
| 5 | அரங்கநாதன், திரு. எஸ். | | தர்மபுரி. |
| 6 | அரங்கநாதன், திரு. மு. | .. | கூனூர் (செ.வ.). |
| 7 | அரங்கநாயகம், திரு. செ. | .. | கோவை (மேற்கு). |
| 8 | அரங்கராசன், திரு. வெ. | .. | உப்பிலியாபுரம். |
| 9 | அருணாசலம், திரு. இரா. | .. | நாமக்கல் (செ.வ.). |
| 10 | அழகர்சாமி, திரு. சோ. | .. | கோவில்பட்டி. |
| 11 | அன்பழகன், திரு க. | .. | புரசைவாக்கம். |
| 12 | அன்பழகன், திரு. தி. | .. | நாட்ராம்பள்ளி. |
| 13 | அன்பில் தர்மலிங்கம், திரு. | .. | லால்குடி. |
| 14 | ஆண்டி அம்பலம், திரு. மெ. | | நத்தம். |
| 15 | ஆண்டித்தேவர், திரு. எஸ். | .. | உசிலம்பட்டி. |
| 16 | ஆறுமுகம், திரு. எம். | .. | அவினாசி (செ. வ.). |
| 17 | சேலம் ஆறுமுகம், திரு. மு. | .. | சேலம்-2. |
| 18 | ஆறுமுகம், திரு. த. .. | .. | அரியலூர். |
| 19 | இரத்தினம், திரு. எம். வி. | .. | பொள்ளாச்சி. |
| 20 | இராசகுமார், திரு. மெ. அ. | | மருங்காபுரி. |
| 21 | இராசமாணிக்கம், திரு. இரெ. | | குத்தாலம். |
| 22 | இராசரத்தினம், திரு. து. | | பூந்தமல்லி. |
| 23 | இராசாம்பாள், திருமதி. தா. | | தலைவாசல் (செ.வ.). |
| 24 | இராசாராம், திரு. க. | .. | பனமரத்துப்பட்டி. |
| 25 | இராசாராமன், திரு. எஸ். | .. | பாபநாசம். |
| 26 | இராசு, திரு. ஜே. எஸ். | .. | பெரம்பலூர் (செ.வ.). |
| 27 | இராசேந்திரன், திரு. எஸ். என். | | தூத்துக்குடி. |
| 28 | இராமச்சந்திரன், திரு. எம். ஜி. | | மதுரை (மேற்கு). |
| 29 | இராமச்சந்திரன், திரு. கே கே. எஸ். எஸ். ஆர். | | சாத்தூர். |
| 30 | இராமச்சந்திரன், திரு. ச. | .. | பண்ருட்டி. |
| 31 | இராமச்சந்திரன், திரு. செஞ்சி ந. | | செஞ்சி. |
| 32 | இராமசாமி, திரு. த. | .. | இராமநாதபுரம். |
| 33 | இராமசுப்பிரமணியம், திரு. எஸ். | | ஸ்ரீவைகுண்டம். |
| 34 | இராமலிங்கம், திரு. ஏ. | .. | காட்டுமன்னார் (செ.வ.). |
| 35 | இராமலிங்கம், டாக்டர் கே. பி. | | இராசிபுரம். |
| 36 | இராமலிங்கம், திரு. செ. | .. | திருவிடைமருதூர். |

| தொடர்எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். | | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| | (1) | (2) |
| 37 | இராஜசேகரன், திரு. வெ. .. | |
| 38 | இராஜாராம் நாயுடு, திரு. தெ. | இராதாகிருஷ்ண நகர். |
| | இரா. | தல்லி. |
| 39 | இராஜேந்திரன், திரு. எஸ். எஸ். | ஆண்டிப்பட்டி. |
| 40 | இளையபெருமாள், திரு. எல். | எழும்பூர் (செ.வ.). |
| 41 | ஈஸ்வரமூர்த்தி என்கிற | |
| | சொரணம், திரு. பி. | அம்பாசமுத்திரம். |
| 42 | உகம்சந்த், திரு. எஸ். டி. | |
| 43 | உச்சி, திரு. கே. .. .. | மதுராந்தகம். |
| 44 | உத்திராபதி, திரு. பொ. .. | கூடலூர். |
| | .. | திருத்துறைப்பூண்டி (செ.வ.). |
| 45 | உமாநாத், திரு. ரா. | |
| 46 | கண்ணன், திரு. ம. .. | நாகை. |
| 47 | கணபதி, திரு. கே. ஆர். .. | கண்டமங்கலம் (செ.வ.). |
| 48 | கணேசன், திரு. இ. .. .. | சிதம்பரம். |
| 49 | கணேசன், திரு. சி. .. | இடப்பாடி. |
| 50 | கந்தசாமி, திரு. கா. வே. .. | அச்சாப்பாக்கம் (செ.வ.). |
| 51 | கந்தசாமி, திரு. பி. .. | கிணத்துக்கடவு. |
| 52 | கபாலி, திரு. டி. கே. .. | பொங்கலூர். |
| 53 | கருணாநிதி, டாக்டர், மு. .. | மைலாப்பூர். |
| 54 | கருப்பசாமிப் பாண்டியன், .. | அண்ணாநகர். |
| | திரு. வி. | பாளையங்கோட்டை. |
| 55 | கருப்பையா, திரு. இரா. | |
| 56 | கருப்பையா, திரு. ஏ. டி. .. | குளித்தலை. |
| 57 | கல்லன், திரு. கே. .. .. | வால்பாறை. |
| 58 | கலிதீர்த்தான், திரு. சோ. .. | உதகமண்டலம். |
| 59 | கலியமூர்த்தி, திரு. பெ. .. | சங்கராபுரம். |
| 60 | நன்னிலம் கலையரசன், திரு. ஆ. | மங்களூர் (செ.வ.). |
| 61 | காளிமுத்து, திரு. கா. | நன்னிலம் (செ.வ.). |
| 62 | கிட்டப்பா, திரு. என். .. | திருப்பரங்குன்றம். |
| 63 | கிருஷ்ணசாமி, திரு. கா. கோ. .. | மாயவரம். |
| 64 | கிரு ணசாமி, திரு. கே. ஏ. .. | காங்கேயம். |
| 65 | கிருஷ்ணமூர்த்தி, திரு. சா. | ஆயிரம்விளக்கு. |
| 66 | கிருஷ்ணமூர்த்தி, திரு. வி. | ஆண்டிமடம். |
| 67 | கிருஷ்ணராஜ், திரு. ஜி. .. | நெல்லிக்குப்பம். |
| 68 | கிருஷ்ணன், திரு. ரா. .. | சேலம்-1. |
| 69 | குப்புசாமி, திரு. என். .. | வாசுதேவநல்லூர். |
| 70 | குப்புசாமி, திரு. கே... .. | மொரப்பூர். |
| 71 | குப்புசாமி, திரு. செ. .. | ஒட்டன்சத்திரம். |
| 72 | குமரி அனந்தன், திரு. .. | வந்தவாசி (செ.வ.). |
| 73 | குருசாமி, திரு. ப. .. .. | திருவொற்றியூர். |
| 74 | **அண்ணாதாசன், திரு. எம்.** .. | **அந்தியூர் (செ.வ.).** |
| | | **திருவரும்பூர்.** |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். | | தொகுதியின் பெயர் |
|---|---|---|
| | (1) | (2) |
| | | சிங்காநல்லூர். |
| 75 | குலசேகர், திரு. ஏ. டி. .. | வாணியம்பாடி. |
| 76 | குலசேகரப் பாண்டியன், திரு. ந. | உடுமலைப்பேட்டை. |
| 77 | குழந்தைவேலு, திரு. ப. .. | திருச்செந்தூர். |
| 78 | கேசவ ஆதித்தன், திரு. சி... .. | சோளிங்கர். |
| 79 | கோபால், திரு. சி. .. | பெரியகுளம். |
| 80 | கோபாலகிருஷ்ணன், திரு. கா. | கம்பம். |
| 81 | கோபாலன், திரு. ஆர். டி. .. | வலங்கை. (செ.வ.). |
| 82 | கோமதி சீனிவாசன், திருமதி.. | பேராஊரணி. |
| 83 | கோவேந்தன், திரு. எம். ஆர். .. | பேரூர். |
| 84 | கோவைத்தம்பி, திரு. .. | பொன்னேரி |
| 85 | சக்கரபாணி, திரு. ஆர். .. | மதுரை (கிழக்கு). |
| 86 | சங்கரய்யா, திரு. என். .. | தென்காசி. |
| 87 | சட்டநாத கரையாளர், திரு. கி. .. | திருத்தணி. |
| 88 | சண்முகம், திரு. இரா. .. | ஆரணி. |
| 89 | சண்முகம், திரு. ஏ சி. .. | கடலாடி. |
| 90 | சத்தியமூர்த்தி, திரு. வ. .. | சோழவந்தான். |
| 91 | சந்திரசேகரன், திரு. ஏ. .. | அரூர் (செ. வ ). |
| 92 | சபாபதி, திரு. சி. .. | காவேரிப்பட்டணம். |
| 93 | சமரசம், டாக்டர் கே. .. | கடையநல்லூர். |
| 94 | சாகுல்ஹமீது, திரு. ஏ. .. | செங்கம். |
| 95 | சாமிக்கண்ணு, திரு. தா. | திருமங்கலம். |
| 96 | சித்தன், திரு. என். எஸ். வி. .. | காரைக்குடி. |
| 97 | சிதம்பரம், திரு. சி. த. .. | இளையான்குடி. |
| 98 | சிவசாமி, திரு. செ. .. | திருவோணம். |
| 99 | சிவஞானம், திரு ந. | சேந்தமங்கலம் (செ.வ.) |
| 100 | சிவப்பிரகாசம், திரு. சி. .. | ஓமலூர். |
| 101 | சிவபெருமான், திரு. மு. .. | சின்னசேலம். |
| 102 | சிவராமன், திரு. எஸ். .. | கரூர். |
| 103 | சின்னசாமி, திரு. எம். .. | மேல்மலையனூர். |
| 104 | சின்னதுரை, திரு. ஏ. | கிருஷ்ணகிரி. |
| 105 | சின்னராசு, திரு. க. இரா. .. | தொண்டமுத்தூர். |
| 106 | சின்னராஜ், திரு. எம். .. | குடியாத்தம். |
| 107 | சுந்தரம், திரு. கே. ஆர். .. | திருப்பத்தூர். |
| 108 | சுந்தரம், திரு. ப. .. | ரிஷிவந்தியம். |
| 109 | சுந்தரம், திரு. மு. .. | முகையூர். |
| 110 | சுந்தரமூர்த்தி, திரு. ஆர். | திருமயம். |
| 111 | சுந்தரராஜ், திரு. நா. .. | விருதுநகர். |
| 112 | சுந்தரராஜன், திரு. மு. .. | சிவசங்கை. |
| 113 | சுப்பிரமணியன், திரு. உ. .. | போடிநாயக்கனூர் |
| 114 | சுப்பிரமணியன், திரு. கே. | |

| | தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 115 | சுப்பிரமணியன், திரு. மா. | திருவையாறு. |
| 116 | சுப்பிரமணியன், திரு. வி. | திருநாவலூர். |
| 117 | சுப்பிரமணியன், திரு. ஜி. கே. | பவானிசாகர். |
| 118 | சுவாமிநாதன், திரு. வி. வி... | புவனகிரி. |
| 119 | செங்கோட்டையன், திரு. கு. அ. | கோபிசெட்டிப்பாளையம். |
| 120 | செம்மலை, திரு. செ. .. | தாராமங்கலம். |
| 121 | செல்லமுத்து, திரு. எம். .. | திருவாரூர் (செ.வ.). |
| 122 | செல்வராசன், திரு. அ. .. | துறைமுகம். |
| 123 | சென்னிமலை என்கிற கந்தசாமி, திரு. பூ. செ. | அரவக்குறிச்சி. |
| 124 | சேதுராமன், திரு. ஏ. எம். | ஆற்காடு. |
| 125 | சொக்கலிங்கம், திரு. கே. | திருப்போரூர். |
| 126 | சோமசுந்தரம், திரு. எஸ். டி. | பட்டுக்கோட்டை. |
| 127 | சோமு, திரு. என். வி. என். | பூங்காநகர். |
| 128 | சௌந்திரராசன், திரு. கே... | திருச்சி-2. |
| 129 | டாக்டர் சௌரிராஜன், திரு. கே. | தி. நகர். |
| 130 | தங்கமணி கவுண்டர், திரு. கே. எம். | திண்டிவனம். |
| 131 | தங்கராசு, திரு. ஏ. .. | குறிஞ்சிப்பாடி. |
| 132 | தங்கவேல்ராஜ், திரு. பி. எம். | கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 133 | தங்கவேலு, திரு. பி. .. | செயங்கொண்டான். |
| 134 | தவசி, திரு. ஆர். .. | பரமக்குடி (செ.வ.). |
| 135 | தனபால், திரு. ப. .. .. | சங்ககிரி (செ.வ.). |
| 136 | தனுக்கோடித்தேவர், திரு. கே. | முதுகுளத்தூர். |
| 137 | தாமரைக்கனி, திரு. இரா. .. | ஸ்ரீவில்லிபுத்தூர். |
| 138 | தியாகராசன், திரு. ஆர். .. | விருத்தாசலம். |
| 139 | திருச்சி சௌந்திரராஜன், திரு. ஆர். | ஸ்ரீரங்கம். |
| 140 | திருநாவுக்கரசு, திரு. எஸ். .. | அறந்தாங்கி. |
| 141 | திருமாறன், திரு. பெ. .. | ஆலங்குடி. |
| 142 | திருமான், திரு. .. .. | ஏற்காடு (செ.வ.). |
| 143 | திருவேங்கடம், திரு. பெ. சு. | கலசப்பாக்கம். |
| 144 | தீர்த்தராமன், திரு. ப. .. | பென்னகரம். |
| 145 | துரைசாமி, திரு. பி. எஸ். .. | பர்கூர். |
| 146 | துரைமுருகன், திரு... .. | ராணிப்பேட்டை. |
| 147 | துரைராமசாமி, திரு. .. | வெள்ளக்கோயில். |
| 148 | துரைராஜ், திரு. பி. .. | சங்கரநாயினார்கோவில் (செ.வ.). |
| 149 | தேவராஜ், திரு. வி. எம். .. | வேலூர். |
| 150 | நடராசன், திரு. எஸ். .. | தஞ்சாவூர். |



| | தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 51 | நரசிம்மன், திரு. பூ. மு. .. | பள்ளிப்பட்டு |
| 152 | நல்லப்பன், திரு. தி. கா. .. | பெருந்துறை |
| 153 | நவநீதகிருஷ்ணபாண்டியன், திரு | ஆலங்குளம் |
| 154 | நாச்சிமுத்து, திரு. கே. பி. .. | மேட்டூர் |
| 155 | நாராயணசாமி, திரு. கே. .. | திருவண்ணாமலை |
| 156 | நாராயணன், திரு பி. ஜி. .. | பவானி |
| 157 | நெடுஞ்செழியன், டாக்டர் இரா | திருநெல்வேலி |
| 158 | நெடுமாறன், திரு. ப. .. | மதுரை (மத்திய) |
| 159 | பக்கீர் முகமது, திரு. இ. எஸ். எம் | கும்பகோணம் |
| 160 | பட்டாபிராமன், திரு. செ. .. | திருவள்ளூர் |
| 161 | பம்மல் நல்லதம்பி, திரு. .. | தாம்பரம் |
| 162 | பரமசிவ கவுண்டர், திரு. பி. என். | பல்லடம் |
| 163 | பலராமன், திரு. இல. .. | போளூர் |
| 164 | பழனிசாமி, திரு. சு. .. | மேட்டுப்பாளையம் |
| 165 | பழனிமுத்து, திரு சி .. | ஆத்தூர் |
| 166 | பழனியப்பன், திரு. கு. ப. .. | விழுப்புரம் |
| 167 | பழனிவேல், திரு. என். .. | பழனி (செ வ) |
| 168 | பாண்டியன், திரு. பி. எச். .. | சேரன்மாதேவி |
| 169 | பாபு கோவிந்தராஜன், திரு. | கடலூர் |
| 170 | பாபு ஜனார்த்தனன், திரு. | செய்யாறு |
| 171 | பாரமலை, திரு. க. .. | மானாமதுரை (செவ.). |
| 172 | பாலகிருஷ்ணன், திரு. ச. .. | மொடக்குறிச்சி |
| 173 | பாலகிருஷ்ணன், திரு. வி. | சிவகாசி |
| 174 | பாலசுப்பிரமணியன், திரு. க. | சீர்காழி (செ.வ.) |
| 175 | வேடசந்தூர் பாலசுப்பிரமணியன், திரு. வி. பி. | வேடசந்தூர் |
| 176 | பாலன், திரு. சு. .. | பெரம்பூர் (செ.வ.) |
| 177 | பாலுச்சாமி, திரு. ஏ. | சமயநல்லூர் (செ.வ.) |
| 178 | பிச்சை, திரு. எம். | அருப்புக்கோட்டை |
| 179 | பிரபாகரன், திரு. ஜே.சி.டி. | வில்லிவாக்கம் |
| 180 | புருஷோத்தமன், திரு. து. .. | சைதாப்பேட்டை |
| 181 | பூங்காவனம், திரு. என்.ஏ. | காட்பாடி |
| 182 | பெரியசாமி, திரு. ஏ. .. | தாராபுரம் (செ.வ.) |
| 183 | பெரியசாமி, திரு. ரா. .. | தொட்டியம் (செ.வ.) |
| 184 | பெருமாள், திரு. என். .. | வரகூர் (செ.வ.) |
| 185 | பெருமாள், திரு. ரா. கு. .. | விளாத்திகுளம் |
| 186 | பொன்னம்மாள், திருமதி. ஏ.எஸ். | நிலக்கோட்டை (செ.வ.) |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 187 பொன்னுரங்கம், திரு. ப. .. | ராயபுரம் |
| 188 பொன்னையன், திரு. சி. .. | திருச்செங்கோடு |
| 189 மணி, திரு. டி. .. .. | விளவங்கோடு |
| 190 மணிமாறன், திரு. ஆர். .. | திருப்பூர் . |
| 191 மாணிக்கம், திரு. எம், எஸ். | வேதாரண்யம் |
| 192 மாரிமுத்து, திரு. த. .. | குளத்தூர் (செ.வ.) |
| 193 முகமது இஸ்மாயில், திரு. பி. | பத்மநாபபுரம். |
| 194 முசிறிப்புத்தன், திரு. ம. .. | திருச்சி II |
| 195 முத்துக்கிருஷ்ணன், திரு. சு. | கன்னியாகுமரி |
| 196 முத்துசாமி, திரு. சு. .. | ஈரோடு |
| 197 முத்துராமலிங்கம், திரு. இ. | ராதாபுரம் |
| 198 முத்துவேல், திரு. என். .. | வானூர் (செ.வ.) |
| 199 முத்தையா, திரு. இரா. | சேடப்பட்டி |
| 200 முனிரத்தினம், திரு. இரா. சா. | கும்மிடிப்பூண்டி |
| 201 முனுசாமி, திரு. மு.ப. .. | பாலக்கோடு |
| 202 மூர்த்தி, திரு. ஜி. .. .. | பேரணாம்பட்டு (செ.வ.) |
| 203 மொக்கையன், திரு. பி. .. | ராஜபாளையம் (செ.வ.) |
| 204 யசோதா, திருமதி. டி. .. | ஸ்ரீ பெரும்புதூர் (செ.வ.) |
| 205 ரகுமான்கான், திரு. அ. .. | சேப்பாக்கம் |
| 206 ரங்கசாமி, திரு. ஆர். .. | சத்தியமங்கலம் |
| 207 ரங்கசாமி, திரு. கு. .. | உளுந்தூர்பேட்டை (செ.வ.) |
| 208 ரமணி, திரு. கு. .. .. | கோயம்புத்தூர் (கிழக்கு) |
| 209 ராமசாமி, திரு. எஸ். என். .. | சாத்தான்குளம் |
| 210 ராஜமாணிக்கம், திரு. எஸ். கே. | முசிறி |
| 211 ரெத்தினராஜ், திரு. எஸ். .. | குளச்சல் |
| 212 வரதராஜன், திரு. என். .. | திண்டுக்கல் |
| 213 | (வெற்றிடம்) |
| 214 விசயலட்சுமி, செல்வி. வி. .. | வீரபாண்டி |
| 215 வின்சென்ட், திரு. மி. .. | நாகர்கோவில் |
| 216 விஜயசாரதி, திரு. எம். .. | அரக்கோணம் (செ.வ.) |
| 217 விஜயபாலன், திரு. என். .. | பூம்புகார். |
| 218 விஜயரெகுநாத தொண்டமான் | புதுக்கோட்டை |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 219 விஜயராகவன், திரு. பொ. | கிள்ளியூர் |
| 220 விஸ்வநாதன், திரு. கோ. .. | அணைக்கட்டு |
| 221 வீராசாமி, திரு. த. .. .. | ஒரத்தநாடு |
| 222 வீராணம்பலம், திரு. க. வெ. .. | பேரூர் |
| 223 வெங்கடசுப்பிரமணியம், திரு. ப. | காஞ்சி |
| 224 வெங்கடரெட்டி, திரு. டி. .. | ஓசூர் |
| 225 வெங்கடேசன், திரு. பி.எம். | பெரணமல்லூர் |
| 226 வெள்ளைச்சாமி, திரு. அ. .. | ஆத்தூர் |
| 227 வேணுகோபால், திரு. த. .. | தண்டராம்பட்டு |
| 228 வேலப்பன், திரு. சி.வி. .. | கபிலர் மலை |
| 229 ஜகத்ரட்சகன், திரு. எஸ். .. | உத்திரமேரூர் |
| 230 ஜான் வின்சென்ட், திரு. மு. | நாங்குனேரி |
| 231 ஜெகதீசன், ஆனூர், திரு. பு. கோ. | செங்கல்பட்டு |
| 232 ஜெயராமன், திரு. வே. இரா. | தேனி |
| 233 ஹாஜா செரீப், திரு. கே. எஸ். ஜி. | திருவல்லிக்கேணி |
| 234 ஹேமச்சந்திரன், திரு. ஜே. .. | திருவட்டார் |
| 235 மார்கரெட் எலிசபெத் பீலிக்ஸ், திருமதி. | நியமன உறுப்பினர் |

## பேரவை நடவடிக்கைகளில் பங்கு கொள்ள உரிமை பெற்றவர்கள்.

1. மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்—அமைச்சர்.
2. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்—அமைச்சர்
3. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே—அமைச்சர்.
4. மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது—அமைச்சர்.
5. திரு. ஆர். கிருஷ்ணமூர்த்தி—தலைமை வழக்கறிஞர்.

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகளின்

## அட்டவணை

இந்திய அரசியலமைப்பு சட்டத்தின்படியான ஏழாவது சட்டமன்றப் பேரவையின் இரண்டாவது கூட்டத்தொடர்.

1981 பிப்ரவரி 9, 10, 11, 12 ஆம் நாட்கள்

(தொகுதி XII—எண்கள் 1 முதல் 4 வரை)


| | பக்கங்கள் |
|---|---|
| **அ.** | |
| அங்காடிகள்— சென்னை கொத்தவால் சாவடியை மாற்றுவது குறித்து | 14—16 |
| அப்பாதுரை, திரு. மு.— மேட்டுப்பாளையம் ரோட்டில் சாராயக் கடத்தல் கார் ஏறி காவல் துறை அதிகாரி மரணம் | 48 |
| அரங்கநாயகம், திரு. செ.— பச்சையப்பன் பொறுப்புக் கழக (நிர்வாகத்தை அரசு எடுத்துக் கொள்ளுதல்) சட்ட முன்வடிவு, 1981 | 58, 373—374, 382—387 |
| அழகர்சாமி, திரு. சோ.— பாண்டிபஜார் காவல் நிலையத்தில் ஒருவர் மரணம் (ஒ.தீ.) | 40, 41 |
| அன்பழகன், திரு. க.— அமைச்சரவையின் கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானம் (தீ.) | 235—249 |

## அ.—தொடர்ச்சி


| | பக்கங்கள் |
|---|---|
| **அன்பழகன், திரு. இ.—** | |
| பீடி இலை மரங்கள் வளர்த்தல் | 148—156 |
| பொது நிறுவனங்கள் குழு—அறிக்கை அளித்தல் | 278 |
| **ஆண்டித் தேவர், திரு. எஸ்.—** | |
| அமைச்சரவையின் கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானம் (தீ.) | 216—224 |
| " புகையான் " நோயால் நெல் பயிர்கள் சேதம் | 152—153 |
| **ஆதி திராவிடர் நலன்—** | |
| ஆதி திராவிடர் துறை, தனித்து இயங்கல் | 33—35 |
| **ஆலயங்கள்—** | |
| தஞ்சை கோயில்களை புதுப்பிக்க 1978 முதல் 1980 வரை வழங்கப்பட்ட மானியங்கள் | 406 |
| | 408 |
| **ஆறுமுகம், திரு. எம்.—** | |
| பாண்டிபஜார் காவல் நிலையத்தில் ஒருவர் மரணம் (ஒ.தீ.) | 40 |
| மேட்டுப்பாளையம் ரோட்டில் சாராயக் கடத்தல் கார் ஏறி காவல்துறை அதிகாரி மரணம் (க.ஈ.) | 46 |

## இ—தொடர்ச்சி

இரங்கல் குறிப்பு—

வாணியம்பாடி அருகே இரயில் விபத்தில் இறந்தவர்கள் 271—273

இராகவானந்தம், திரு. எஸ்.—

அமைச்சரவையின் கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானம் 249—265, 277—301, 315, 316—317, 318—327

தனிக் குடியிருப்புப் பகுதி உடைமை உரிமைச் சட்ட முன்வடிவு, 1981 276—277

வெள்ளக்கோவில் தொகுதியில் விசைத்தறித் தொழிலாளர்களுக்கு ஏற்பட்டுள்ள நிலை (க.ஈ.அ.) 52, 54

இராசமாணிக்கம், திரு. இரெ.—

தஞ்சை கோயில்களை புதுப்பிக்க 1978-80 வரையில் வழங்கப்பட்ட மானியங்கள் குறித்து 406—408

இராசு, திரு. ஜே. எஸ்.—

அரசு குடியிருப்புகளுக்கு வாடகை நிர்ணயம் 138

இராமச்சந்திரன், திரு. எம். ஜி.—

அமைச்சரவையின் கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானம் 114—115, 116

கைலாசம் கமிஷன் நியமனம் (அ) 269

இராமச்சந்திரன், திரு. ச.—

பாண்டிபஜார் காவல் நிலையத்தில் ஒருவர் மரணம் (ஒ.தீ.) 46—48

பேரவை ஒத்திவைக்கப் பெறுதல் (தீ) 389

பேட்டைப்பாளையம் ரோட்டில் சாராயக் கடத்தல் கார் ஏறி காவல்துறை அதிகாரி மரணம் (க. ஈ. அ.) 48—51

பக்கங்கள்

இ—தொடர்ச்சி.

**இராஜசேகரன், திரு. வே.—**
ஊரகத் தொழில் அமைச்சர் மீது (உ.பி.) 171—175

**இராஜா முகமது, திரு. கே.—**
பொது வக்ஃபுகள் காலவரையறையை நீட்டித்தல் திருத்தச் சட்ட முன்வடிவு, 1981 359, 368—379, 378

**இராஜாராமன், திரு. எல.—**
சென்னையில் போக்குவரத்துக் கணக்கெடுப்பு 165—166

**இளையபெருமாள், திரு. எல்.—**
அமைச்சரவையின் கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானம் (தி) 201—208
கண்டனத் தீர்மானத்தின் மீது கட்சித் தலைவர்களைப் பேச அனுமதிப்பது (ஒ.பி.) 170—171
பச்சையப்பன் பொறுப்புக் கழக நிர்வாகத்தை அரசு எடுத்துக்கொள்ளுதல் சட்ட முன்வடிவு, 1981 379—381

ஈ

**ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு. பி.—**
இலவசமாக அரிசி முதியோர்களுக்கு வழங்கல் 169—170
காட்பாடி, குடியாத்தம் பகுதிகளில் கால்நடைகள் பாதிப்பு (க.ஈ.) 195
பாண்டிபஜார் காவல் நிலையத்தில் ஒருவர் மரணம் (ஒ.தி.) 40, 45, 66

உ

**உகம்சந்த், திரு. எஸ். டி.—**
செங்கற்பட்டு மாவட்டத்தில் தொழில்துறையில் பின்தங்கிய தாலுகாக்கள் 32
மதுராந்தகத்தில் புதிய நீதிமன்றங்கள் 33

**உணவகங்கள்—**
ஓட்டல்களில் விலையைக் குறைத்து விற்பனை செய்தல் 133—138

பக்கங்கள்

உ—தொடர்ச்சி.

**உத்திராபதி, திரு. பொ.—**
கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு, 1981 346—349
வளவன் ஆற்றின் குறுக்கே பாலம் 157—158

**உமாநாத், திரு. ரா.—**
(1) அமைச்சரவையின் கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானம், விவாதம் 58—83, 200, 201, 301—315, 319—320, 324, 325, 327
திருச்சி மத்திய சிறையை அமைச்சர் பார்வையிடல் 38

ஏ.

**ஏடுகள்—**
பேரவை முன் வைக்கப்பெற்றவை 128—129, 266, 272—273, 389—390

ஒ

**ஒத்திவைப்புத் தீர்மானங்கள்—**
பார்க்க—தலைவர்.

க

**கட்டடங்கள்—**
கள்ளக்குறிச்சி வட்ட அலுவலகத்துக்குக் கூடுதல் கட்டிடங்கள் 1—2

**கமிஷன்(கள்)—**
கைலாசம் கமிஷன் நியமனம் (தி)

## க—தொடர்ச்சி.


| | பக்கங்கள் |
|---|---|
| **கருணாநிதி, டாக்டர் மு.—** | |
| அமைச்சரவையின் கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானம் (தீ) | 265 |
| கைலாசம் கமிஷன் நியமனம் (அ) | 266 |
| **கருப்பையா, திரு. இரா.** | |
| அமைச்சரவையின் கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானம், விவாதம் | 110—126 |
| பச்சையப்பன் பொறுப்புக் கழக நிர்வாகத்தை அரசு எடுத்துக்கொள்ளுதல் சட்ட முன்வடிவு, 1981 | 3[illegible] |
| பாண்டிபஜார் காவல் நிலையத்தில் ஒருவர் மரணம் (ஒ.தீ.) | 40 |
| **கால்நடைகள்—** | |
| காட்பாடி, குடியாத்தம் பகுதிகளில் பாதிப்பு (க.ஈ.) | 195—199 |
| **காவல்துறை—** | |
| கலவை காவல் நிலையத்தில் மரணம் (ஒ. தீ.) | 181—183 |
| **கிருஷ்ணன், திரு. சா.—** | |
| ஓட்டல்களில் விற்கப்படும் உணவுப் பண்டங்களின் விலை | 133 |
| காட்பாடி, குடியாத்தம் பகுதிகளில் கால்நடைகள் பாதிப்பு (க.ஈ.) | 195 |
| குளோரைட் தயாரிக்கும் தொழிற்சாலை | 28 |
| கைத்தறித் துணிகள் ஏற்றுமதி | 167—168 |
| பூமிதான இயக்கத்தின் கீழ் எடுக்கப்பட்ட நிலங்கள் | 153—155 |


## க—தொடர்ச்சி.


| | பக்கங்கள் |
|---|---|
| **குப்புசாமி, திரு. கே.—** | |
| கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு, 1981 | 344—346 |
| **குழுக்கள்—** | |
| பொதுக் கணக்குக் குழு—அறிக்கை அளித்தல் | 275—276 |
| பொதுநிறுவனங்கள் குழு—அறிக்கை அளித்தல் | 276 |
| **கூட்டுறவு—** | |
| வேதாரண்யம் புகையிலை உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்க நிதிநிலை | 11—28 |
| **கைத்தறி—** | |
| திருவில்லிபுத்தூரில், வளர்ச்சிக் கழகத்தின் உற்பத்திக் கிளை அமைத்தல் | 166—167 |
| துணி ஏற்றுமதி | 167—168 |
| **கோமதி சீனிவாசன், திருமதி—** | |
| காட்பாடி, குடியாத்தம் பகுதிகளில் கால்நடைகள் பாதிப்பு (க.ஈ.அ.) | 195—199 |


### ச


| | |
|---|---|
| **சங்கரய்யா, திரு. என்.—** | |
| கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு, 1981 | 340—344 |
| பச்சையப்பன் பொறுப்புக் கழக (நிர்வாகத்தை அரசு எடுத்துக் கொள்ளுதல்) சட்ட முன்வடிவு, 1981 | 278—279 |

ச—தொடர்ச்சி.

பக்கங்கள்

சட்ட முன்வடிவுகள்—
கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு, 1981—
பி. ஆ. 335—359
நிறைவேற்றுதல் 359
தனிக் குடியிருப்புப் பகுதி உடைமை உரிமைச் சட்ட முன்வடிவு, 1981—
அ.நி. 276—277
நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு, 1981—
அ.நி. 384
பச்சையப்பன் பொறுப்புக் கழக (நிர்வாகத்தை அரசு எடுத்துக்கொள்ளுதல்) சட்டமுன்வடிவு, 1981 66
ஆ.நி. 373—386
பி.ஆ. 387—388
நிறைவேற்றுதல் 388
பொது வக்ஃபுகள் காலவரையறையை நீட்டித்தல் திருத்தச் சட்ட முன்வடிவு, 1981—
பி.ஆ. 359—373
நிறைவேற்றுதல் 373
375
சண்முகம், திரு. ஏ. சி.—
அமைச்சரவையின் கொள்கையை கண்டிக்கும் தீர்மானம் 100—106
சமூகநலம்—
இலவச அரிசி, முதியோர்களுக்கு வழங்கல் 169—176
சாகுல் ஹமீது, திரு. ஏ.—
சித்த மருந்துகளுக்கு விற்பனை வரி குறைப்பது குறித்து 2
பொது வக்ஃபுகள் காலவரையறையை நீட்டித்தல் திருத்தச் சட்ட முன்வடிவு, 1981 365—369
...நாதன், திரு. என். எஸ். வி.—
...பஜார் காவல் நிலையத்தில் ஒருவர் மரணம் (ஒ.நி.) 41



ச—தொடர்ச்சி.

பக்கங்கள்

பொதுக் கணக்குக் குழு அறிக்கை, அளித்தல் 275—276
வத்தலகுண்டு பகுதியில் வெடி விபத்து 4
சிறைச்சாலைகள்—
திருச்சி மத்திய சிறையை அமைச்சர் பார்வையிடல் 35—40
சிவசாமி, திரு. செ.—
பாண்டிபஜார் காவல் நிலையத்தில் ஒருவர் மரணம் (ஒ.நி.) 40
வத்தலக்குண்டு பகுதியில் வெடி விபத்து 6
சிவராமன், திரு. எஸ்.—
கள்ளக்குறிச்சி வட்ட அலுவலகத்துக்கு கூடுதல் கட்டிடம் 1
சின்னசாமி, திரு. எம்.—
ஹரிஜன நலத்துறை தனித்து இயங்குதல் குறித்து 33
சின்னராசு, திரு. க. இரா.—
கிருஷ்ணகிரியிலுள்ள அண்ணா-காந்தி மண்டபம் 158—159
சுந்தரம், திரு. கே. ஆர்.—
கலவை காவல் நிலையத்தில் மரணம் (ஒ.நி.) 181—183
காட்பாடி, குடியாத்தம் பகுதிகளில் கால்நடைகள் பாதிப்பு (க.ஈ.) 195—198, 199
சுந்தரம், திரு. ப.—
ஜோலார்பேட்டையிலுள்ள மருத்தகம் 159—160
சேதுராமன், திரு. ஏ. எம்.—
புதுப்பாடி, திமிரி ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு சுற்றுச் சுவர் 160—161

### ச— தொடர்ச்சி.


**சோமசுந்தரம், திரு. எஸ். டி.—**

மாவட்டங்களில் வறட்சி நிலைமை (அ.) 188—191

**சௌந்தராசன், திரு. கே.—**

அமைச்சரவையின் கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானம் விவாதம் 83—87

**சௌரிராஜன், டாக்டர் கே.—**

அமைச்சரவையின் கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானம் 208—218

பாண்டிபஜார் காவல் நிலையத்தில் ஒருவர் மரணம் (ஒ.தீ.) 40, 41, 42


### த


**தலைவர்—**

தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும்.

**உரிமைப் பிரச்னை—**

ஊரகத் தொழில் அமைச்சர் மீது—

ஊரகத் தொழில் அமைச்சர் 29—1—1981 அன்று பேரவையில் தாம் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சி பற்றி குறிப்பிடுகையில், உண்மைக்கு மாறான தவறான, தம் கௌரவத்திற்குக் களங்கம் ஏற்படுத்தும்படி குறிப்பிட்டது உரிமை மீறிய செயல் ஆகும் என ஒரு உறுப்பினர், 10—2—1981 ஆம் தேதி ஊரகத் தொழில் அமைச்சர்மீது உரிமைப் பிரச்னை எழுப்பினார்.

அவை முன்னவர் அதுபற்றி விளக்கம் அளித்தார்.

தலைவர் இதுபற்றிய தீர்ப்பினை பின்னர் * அறிவிப்பதாகத் தெரிவித்தார் 171—180


* [illegible]—2—1981 ஆம் தேதியன்று தீர்ப்பளிக்கப் பெற்றது.



### த—தொடர்ச்சி.


**தலைவர்—தொடர்ச்சி.—**

தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

**ஒத்திவைப்புத் தீர்மானங்கள்—**

வடஆற்காடு மாவட்டம், கலவை காவல் நிலையத்தில் லாக்-அப்பில் இருந்த சிறுவன் அடிக்கப்பட்டதன் காரணமாக, மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு இறந்ததினால் அப்பகுதி மக்களிடையே நிலவும் பதட்ட நிலை குறித்து.

அவை முன்னவரின் விளக்கத்திற்குப் பின் இசைவு மறுக்கப் பெற்றது. 181—183

அமைச்சரவையின் கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானத்திற்கு முதலமைச்சர் பதிலளிக்க வேண்டும் என ஓர் உறுப்பினர் வற்புறுத்தியபோது, தலைவர் அளித்த குறிப்புரையாவது :—

“அந்தந்த இலாகா சம்பந்தப்பட்ட அமைச்சர்களே பதில் சொல்லலாம். அமைச்சரவைக்குக் கூட்டுப் பொறுப்பு இருக்கிறது. முதலமைச்சர்தான் பதில் சொல்லியாக வேண்டும் என்று வற்புறுத்த இயலாது 200—201

**கவன ஈர்ப்பு—**

அமைச்சர் அறிக்கைக்குப் பின் தீர்மானம் கொடுத்த உறுப்பினர் பேச முடியாது. கேள்வியைச் சுருக்கமாகக் கேட்க வேண்டும் 192

**பேசும் முறை—**

கையை நீட்டிப் பேசக்கூடாது 214

**மேற்கோள்—**

பத்திரிகைகளில் வருவதை ஆதாரமாக வைத்து குற்றச்சாட்டுகளைப் படிக்கக் கூடாது 259

பக்கங்கள்

### த—தொடர்ச்சி.


வைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

வினாக்கள்-விடைகள்—

அமைச்சர் உறுப்பினரிடம் ஆலோசனை கேட்கக் கூடாது (து.வி.) 163

துணைக் கேள்விக்குப் பதிலளிக்கையில் பதில் சுருக்கமாக இருக்க வேண்டும். நீண்ட பதில்களாக இருந்தால் அவை அச்சிட்டு வைக்கப்பெற வேண்டும் 37

துணை வினாக்கள் மூலவினாவை ஒட்டி இருக்க வேண்டும் 4,7,30

துணை வினாக்கள் வேண்டுகோளாக இல்லாமல, சுருக்கமாக இருக்க வேண்டும் 12

தாமரைக்கனி, திரு. இரா.—

உசிலம்பட்டிக்கு குடிநீர் வழங்கு திட்டம் 17

ஓட்டல்களில் விற்கப்படும் உணவுப் பண்டங்கள் விலை 139

கைத்தறி வளர்ச்சிக் கழகத்தின் உற்பத்திக் கிளை திருவில்லிப்புத்தூரில் அமைத்தல் 166—167

பூச்சி மருந்து, உரங்கள் மீதான விற்பனை வரி விலக்கு 6

வெள்ளக்கோயில் தொகுதியில் விசைத்தறித் தொழிலாளர்களுக்கு ஏற்பட்டுள்ள நிலை (க.ஈ.) 52, 55

தீர்மானம்(கள்)—

அமைச்சரவையின் கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானம் 277—334

பேரவை ஒத்திவைக்கப் பெறுதல் 389




பக்கங்கள்

### த—தொடர்ச்சி.


துரைமுருகன், திரு.—

அமைச்சரவையின் கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானம் 87—89

பச்சையப்பன் பொறுப்புக் கழக நிர்வாகத்தை அரசு எடுத்துக் கொள்ளுதல் சட்ட முன்வடிவு, 1981 374—375

தொழிலாளர்கள்—

விசைத்தறித் தொழிலாளர்கள், வெள்ளக்கோயில் 53—56

தொழிற்சாலைகள்—

குளோரைட் தயாரிக்கும் தொழிற்சாலை 28—29

செங்கற்பட்டு மாவட்டத்தில் பின்தங்கிய தாலுக்காக்கள் 32—33

செயற்கை வைரம் தயாரிக்கும் தொழிற்சாலை 29—31

ஜவ்வாது மலைப் பகுதியில் பேப்பர் தொழிற்சாலை 31—33


### ந


நல்லப்பன், திரு. கி. கா.—

ஈரோட்டில் பாதாள சாக்கடைத் திட்டம் 18

பாண்டிபஜார் காவல் நிலையத்தில் ஒருவர் மரணம் (ஒ.தீ.) 40

நிலங்கள்—

பூமிதான் இயக்கத்தின்கீழ் எடுக்கப் பெற்றவை 153—155

நினைவுச் சின்னம்—

அண்ணா-காந்தி மணிமண்டபம், கிருஷ்ணகிரி 158—159

நீதிமன்றங்கள்—

மதுராந்தகத்தில் புதிய நீதிமன்றங்கள் 13—14

நெடுஞ்செழியன், டாக்டர் இரா.—

பாரகத் தொழில் அமைச்சர் மீது (வபி.) 175—180

பக்கங்கள்

ந—தொடர்ச்சி.

நெடுஞ்செழியன், டாக்டர் இரா.—தொடர்ச்சி.

கலவை காவல் நிலையத்தில் மரணம் (ஒ.தீ.) 181—183

செங்கல்பட்டு மாவட்ட மீனவர்களுக்கு நிவாரணம் (க.ஈ.அ.) 192—193

நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு, 1981 334

நெடுமாறன், திரு. ப.—

அமைச்சரவையின் கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானம் (தீ) 224—235

ப

பல்கலைக் கழகம்—

பழனி ஸ்ரீ தண்டாயுதபாணி தேவஸ்தானத்தின் மூலம் அமைத்தல் 141—144

பனாமன், திரு. இல.—

பாலாற்றின் குறுக்கே பாலம் 155—156

ஜவ்வாது மலை, காகிதத் தொழிற்சாலை 31

பழனிமுத்து, திரு. செ.—

வசிஷ்டா நதியின் குறுக்கே அணை 23

பழனிவேல், திரு. என்.—

ஆயக்குடி பேரூராட்சி, குடிநீர் வழங்கு திட்டம் 18

பழனியில் பல்கலைக் கழகம் 141—144



பக்கங்கள்

ப—தொடர்ச்சி.

பாசனம்—

காளிங்கராயன் வாய்க்கால், பாசன வசதி 24—25

கோடையாறு கால்வாய் பயன்படுத்தப்படாமை 19—21

சிற்றாறு பட்டணங்கால் கால்வாய் பாசனம் 26—28

ஆர்பாடனல்லி நீர்த் தேக்கத் திட்டம் 21—22

வசிஷ்டா நதியின் குறுக்கே அணை 23

பாரமலை, திரு. க.—

அரிசன நலத்துறை, தனித்து இயங்கல் 33

பாலகிருஷ்ணன், திரு. ச.—

காளிங்கராயன் வாய்க்கால் பாசன வசதி 24

பாலகிருஷ்ணன், திரு. வி.—

அர்ஜுனா நதியின் குறுக்கே பாலம் 156—157

பாலங்கள்—

(1) அர்ஜுனா நதியின் குறுக்கே (சிவகாசி அருகே) 156—157

பாலாற்றின் குறுக்கே (போளாம்பட்டு அருகில்) 155—156

வளவன் ஆற்றின் குறுக்கே (மேலாறுதார் சாலையில்) 157—158

பாலசுப்பிரமணியம், வேடசந்தூர், திரு. வி. பி.—

செயற்கை வைரம் தயாரிக்கும் தொழிற்சாலை 29

புருஷோத்தமன், திரு. அ.—

அரசு குடியிருப்புகளுக்கு வாடகை நிர்ணயம் 136,

சென்னை கொத்தவால்சாவடியை மாற்றுவது குறித்து 14

தஞ்சை மாவட்டத்தில் தென்னை ஆராய்ச்சி நிலையம் 180—181

பக்கங்கள்

ப—தொடர்ச்சி.

புருஷோத்தமன், திரு. து—தொடர்ச்சி.

பாண்டிபஜார் காவல் நிலையத்தில் ஒருவர் மரணம் (ஒ.நி.) 40

பிணி பல்கள் விடுதல் 162—164

பூங்காவனம், திரு. என். ஏ.—

காட்பாடி, குடியாத்தம் பகுதிகளில் கால்நடைகள் பாதிப்பு (க.ஈ.) 195

பொன்னம்மாள், திருமதி ஏ. எஸ்.—

பச்சையப்பன் பொறுப்புக் கழக நிர்வாகத்தை அரசு எடுத்துக் கொள்ளுதல் சட்ட முன்வடிவு, 1981 381—382

பொன்னுரங்கம், திரு. ப.—

செங்கல்பட்டு மாவட்ட மீனவர்களுக்கு நிவாரணம் (க. ஈ.) 193—195

பாண்டிபஜார் காவல் நிலையத்தில் ஒருவர் மரணம் (ஒ.நி.) 40

பொன்னையன், திரு. சி.—

கடன் நிவாரண (திருத்தச்) சட்ட முன்வடிவு, 1981 338, 349—355

போக்குவரத்து—

சென்னை கணக்கெடுப்பு 165—166

சைதாப்பேட்டை, பிணி பல்கள் விடுதல் 162—164

ம

மக்கள் நல்வாழ்வு—

ஈரோடு, பாதாளச் சாக்கடைத் திட்டம் 16—17

பக்கங்கள்

ம—தொடர்ச்சி.

மணிமாறன், திரு. ஆர். திருப்பூர்—

வெள்ளக்கோவில் தொகுதியில் விசைத்தறித் தொழிலாளர்களுக்கு ஏற்பட்டுள்ள நிலை (க.ஈ.) 52, 55

மருத்துவமனைகள்—

புதுப்பாடி, திமிரி ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு சுற்றுச் சுவர் 160—161

ஜோலார்பேட்டையில் உள்ள மருந்தகம் 159—160

மாணிக்கம், திரு. எம். எஸ்.—

வேதாரண்யம் புகையிலை உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் 11

முகமது இஸ்மாயில், திரு. பி.—

அமைச்சரவையின் கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானம் 106—110

முத்துக்கிருஷ்ணன், திரு. க.—

கோட்டயடி கால்வாய், பயன்படுத்தப்படாமை 19

முனுசாமி, திரு. மு. ப.—

அம்பளமல்லி நீர்த்தேக்கத் திட்டம் 21

ர

ரகுமான்கான், திரு. அ.—

கடன் நிவாரண (திருத்தச்) சட்ட முன்வடிவு, 1981 335—350, 354

பாண்டிபஜார் காவல் நிலையத்தில் ஒருவர் மரணம் (ஒ.நி.) 40, 43, 44, 48

பொது வக்ஃபுகள் கால வரையறையை நீட்டித்தல் திருத்தச் சட்ட முன்வடிவு, 1981

பக்கங்கள்

வ

வரதராஜன், திரு. என்.—

கலவை காவல் நிலையத்தில் மரணம் (ஒ.நி.) 181—183

வரிகள்—

சித்த மருந்துகள் விற்பனை வரி 2—5

பூச்சி மருந்து, உரங்கள் மீதான விற்பனை வரி 6—7

வனவளம்—

கண்ணன் மேடை வனப்பகுதி, திருத்தியமைத்தல் 144—145

சிப்பாறை இரப்பர் தோட்டத்தில் ஷெல்ஸ் மற்றும் ஸ்ராப்ஸ் விற்பனை 145—148

பிடி இலை மரங்கள் வளர்த்தல் 148—150

விபத்துக்கள்—

வத்தலகுண்டு பகுதியில் வெடி விபத்து 6—11

வாணியம்பாடி—இரயில் விபத்து (இ.கு.) 271—272

விஜயராகவன், திரு. பொ.—

சிற்றாறு-பட்டணங்கால் கால்வாய்ப் பாசனம் 28

வீட்டு வசதி—

அரசு குடியிருப்புகளுக்கு வாடகை நிர்ணயம் 138—141, 261

வேளாண்மை—

தமிழகத்தில் மாவட்ட வாரியாக நெல் பயிரிடப்பட்ட மொத்த பரப்பளவு 1971 முதல் 1980 வரை 404—40

தென்னை-தஞ்சை மாவட்டத்தில் ஆராய்ச்சி நிலையம் 150—15

நிலவள பாதுகாப்புத் திட்டம், திருவில்லிபுத்தூரில் செயல்

பக்கங்கள்

வ—தொடர்ச்சி

வேளாண்மை—தொடர்ச்சி.

வேளாண் விளை பொருள்கள் வடார்க்காடு மாவட்டத்தில் 1979-80-ல் விற்பனை செய்யப்பட்டவை 409—411

வேணுகோபால், திரு. த.—

கண்ணன் மேடை வனப்பகுதி—திருத்தியமைத்தல் 144—145

வேலைவாய்ப்பு—

1980 ஜூலை வரை பதிவு செய்தவர்கள் விவரம் 112—118

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

## திங்கட்கிழமை, 1981 பிப்ரவரி 9

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

மனத்தூய்மை செய்வினை தூய்மை இரண்டும்
இனத்தூய்மை தூவா வரும்.

ஒருவருடைய உள்ளம் தூய்மையாக இருத்தல் அவர் செய்யும் செயல் தூய்மையாக இருத்தல் ஆகிய இரண்டும் அவர் மேற் கொண்டுள்ள பண்பாட்டின் தூய்மை காரணமாகவே அமையும்.

### I. வினாக்கள்— விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### கள்ளக்குறிச்சி வட்ட அலுவலகக் கட்டிடம்.

*வினா எண். 241 திரு. எஸ். சிவராமன் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கள்ளக்குறிச்சி வட்ட ஆட்சியர் அலுவலகத்தில் கூடுதல் கட்டிடம் கட்ட 1971 ஆம் ஆண்டில் அனுமதி வழங்கப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில், கட்டிடம் கட்ட காலதாமதத்திற்குக் காரணம் என்ன ?

(இ) கட்டிடம் கட்டும் வேலை எப்போது முடிவடையும்?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ), (ஆ), & (இ) கட்டிடம் கட்ட ஆணை பிறப்பிக்கப்படவில்லை.

[1981 பிப்ரவரி 9

திரு. எஸ். வீரராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1971 ஆம் ஆண்டு உத்தேசிக்கப்பட்டதாக எனக்குத் தகவல் கிடைத்தது. ஆகவேதான் இந்தக் கேள்வியை நான் கேட்டிருந்தேன். அப்படி இல்லையென்றால், எப்பொழுது கட்டிடம் கட்ட உத்தேசம் உள்ளது என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறை வட்டாட்சி அலுவலகம், மாவட்ட ஆட்சி அலுவலகம், கோட்ட வளர்ச்சி அலுவலகம் ஆகியவை கட்டுவதற்காக முன்னால் எதை எடுத்துக் கொள்வது, பின்னால் எதை எடுத்துக் கொள்வது என்று முறைப்படுத்தி எடுத்துக்கொள்ளப்படுகிறது. அது வரும் ஆண்டில் யோசிக்கப்படும். இதற்கு முன்னால், அந்தக் கட்ட உத்தரவு பிறப்பிக்கப்படவில்லை.

சித்த மருந்துகள் மீதான விற்பனை வரி.

* வினா எண். 242 - திரு. ஏ. சாகுல் ஹமீது : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) சித்த மருந்து உற்பத்தி செய்பவருக்கு விற்பனை வரி 8 சதவீதம் போட்டிருப்பதைக் குறைக்க அரசிடம் ஆலோசனை ஏதாகிலும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. ஏ. சாகுல் ஹமீது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய பழம் பெரும் வைத்திய முறையிலே, சித்த வைத்தியம் பண்டைய காலத்திலிருந்து நடந்து வருகிற தொழிலாகும். அதே நேரத்திலே, கை முறையிலே செய்கின்ற தொழில். பட்டை வேர் போன்ற நாட்டுப் பொருள்களை வைத்துக் கொண்டு செய்கிறார்கள். கையினாலே செய்யப்படுகின்ற இதர சிறு தொழில் பொருட்களுக்கு வரி விலக்கு அளிப்பது போல் இதற்கும் வரி விலக்கு அளிக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.



1981 பிப்ரவரி 9]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, முதலிலே சித்த மருந்துகளுடைய விலை குறைவாகத்தானிருக்கிறது. அல்லோபதியினுடைய மருந்துகளை விட இதன் விலை குறைவாகத்தானிருக்கிறது. இதிலே வரி விலக்குக் கொடுப்பதால் சௌகரியம் இல்லையென்ற காரணத்தினால், அரசு இந்த வரியைத் தள்ளுபடி செய்யும் எண்ணத்தில் இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, சித்த மருந்து உற்பத்தி செய்பவர்களுக்கு விற்பனை வரி தேவையான அளவு குறைவாக இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். சித்த மருந்து உற்பத்தி செய்பவர்களுக்கு வரி விலக்குச் சலுகையை மீண்டும் வழங்குவதற்கு அரசு ஆலோசனை செய்ய முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது அதனால் அரசுக்கு ரூ. 10½ இலட்சம் வருமானம் வருகிறது. அதைக் குறைப்பதாலோ, அல்லது நீக்குவதாலோ, எந்தவிதமான லாபமும், யாருக்கும் இருக்காது, சௌகரியம் இருக்காது என்பதாலே அதைக் குறைக்கின்ற எண்ணத்தை அரசு இப்போது பரிசீலிக்கவில்லையென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, சித்த வைத்தியம், ஆயுர்வேத வைத்தியம் போன்ற நமது நாட்டு வைத்திய முறைகளுக்கு, உள்நாட்டு வைத்திய முறைகளுக்கு மிகப் பெரிய போட்டியாக ஆங்கில வைத்திய முறை இருக்கிறது என்பதை அமைச்சர் அறிவாரா? அந்த முறையில், ஏற்கனவே வரி இல்லாமல் இருந்து சித்த வைத்திய முறைக்கும், ஆயுர்வேத வைத்திய முறைக்குமான மருந்துகளுக்கு வரியே போடாமல், அந்த வைத்திய முறையை வளர்க்க உதவி செய்வார்களா என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, அந்த வைத்திய முறைகளை வளர்ப்பதற்காக அரசு பல்வேறு வசதிகளைச் செய்து, உதவிகளைச் செய்து கொண்டிருக்கிறது. ஆனால் வரி விதிப்பதற்கும் அது வளர்ச்சி பெறுவதற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லையென்பதாலே தான் அதுபற்றி அரசு யோசிக்கவில்லையென்று தெரிவித்துள்ளேன்.

திரு. பழ. நெடுமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மற்ற மாநிலங்களில் அந்த முறை இல்லை. மேலும் அந்த மருந்துகளை உற்பத்தி செய்கின்ற மருத்துவர்கள் சாதாரண

கிராமவாசிகள். அவர்கள் இந்த விற்பனை வரியை கணக்கிட்டு வைத்துக் கொள்ள வேண்டுமென்றால் அவர்களுக்கு பழக்கமில்லாத காரணத்தால் பல கஷ்டங்கள் அவர்களுக்கு ஏற்படுகிறது. அதிகாரிகளால் பல தொல்லைக்கு ஆளாக்கப்படுகிறார்கள். அதில் அரசாங்கத்திற்கு வருமானம் அதிகம் இல்லையென்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதிகம் வருமானம் இல்லாதபோது சித்த மருந்துகளுக்கு விற்பனை வரியிலிருந்து தள்ளுபடி செய்து கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** சிறுதுளி பெருவெள்ளம் என்பதுபோல 10 இலட்சம் வருமானம் வருகிறது. அதைக் கொண்டு சிறிது சிறிதாக நன்மை செய்ய வேண்டும். அதிகமென்று சொல்லவில்லை. அதுமட்டுமல்ல, இந்த சித்த வைத்தியத்திலே யாரும் இதுவரைக்கும் பாதிக்கப்படுகிறார்கள், அதிகாரிகளால் துன்புறுத்தப்படுகிறார்கள் என்று எந்தவிதமான தகவலும் இல்லை. அப்படி இருந்தால் அரசு பரிசீலனை செய்யும்.

**திரு. கே. ஆர். சுந்தரம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சித்த மருந்துகளுக்கு வெளி மாநிலங்களில் இரண்டு சதவீதம் விற்பனை வரி வசூலிக்கப்படுகிறது. அந்த அளவிற்கு நம்முடைய தமிழ்நாட்டிலே விற்பனை வரியிலிருந்து முழுவதுமாக ரத்து செய்யாவிட்டாலும், விற்பனை வரியைக் குறைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** பேரவைத் தலைவரவர்களே, வெளி மாநிலங்களுக்கு அனுப்புவதில் சங்கடம் இருப்பதாக அரசுக்குத் தகவல் இல்லை. அவ்வாறு இருந்தால் அதைத் தடுக்க எல்லாவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படும்.

**திரு. கே. ஆர். சுந்தரம் :** பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு விதமான வரிகள் வசூலிக்கப்படுகின்றன. நான் கேட்பது மற்ற மாநிலங்களுக்கு இரண்டு சதவீதம் இருப்பதுபோல இங்கும் வசூலிக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** தகவல் இல்லை. இருந்தால் பரிந்துரை செய்து ஆவன செய்கிறேன்.

**திரு. கி. கா. நல்லப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சித்த மருந்து தயாரிக்கும் தயாரிப்பாளர்கள் எந்தெந்த மூலப்பொருள்களை உபயோகப்படுத்துகிறார்கள்? அவர்களுக்கு அந்த மூலப்பொருள்களை வழங்க இந்த அரசு பரிசீலனை செய்யுமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இக் கேள்வி விற்பனை வரி பற்றியது...



**திரு. ஏ. சாகுல் ஹமீது :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சித்த வைத்திய மருந்துகள் விலைக் குறைப்பு பற்றிச் சொன்னார்கள். அதிக விலை கொடுத்து வாங்கக்கூடிய நிலை இருக்கிறது. சித்த வைத்திய சங்கத்தின் சார்பாக அரசுக்கு வரியை ரத்து செய்ய வேண்டுமென்று மனுக்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன. அரசு அதை மீண்டும் பரிசீலனை செய்யுமா? பரிசீலனை செய்து பரிந்துரை செய்யுமா என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** தலைவர் அவர்களே, சித்த வைத்தியத்தை வளர்ப்பதற்கு இந்த அரசு எல்லா விதமான நடவடிக்கையும் எடுக்கும். வரி போடப்படுவதினாலேயே வளர்ச்சி பாதிக்கப்படுமானால், அதுபற்றி அரசு பரிசீலனை செய்யும்.

**திரு. சோ. அழகர்சாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அல்லோபதி முறையைவிட சித்தா முறை நல்லமுறையில் இருப்பதாக அந்த முறையில் சிகிச்சை பெறுபவர்கள் சொல்கிறார்கள். அந்த முறைக்கு ஊக்கம் அளிப்பதற்கும் அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு— அந்த முறையில் அதற்கு வேண்டிய மூலப்பொருள்களான சில மூலிகைகளை வைத்துக் கொண்டு அவர்கள் மருந்துகள் தயாரிக்கின்றார்கள். அவர்களுக்கு இந்த அரசு ஊக்கம் கொடுத்து சித்தா துறை முன்னேறுவதற்கு வசதியாக இந்த விற்பனை வரியை நீக்குவதனால் அரசாங்கத்திற்கு எவ்வளவு வருமான இழப்பு ஏற்படுகிறது என்பதையும் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலேயே தெரிவித்து விட்டேன். பத்தரை இலட்சம் ரூபாய் வருமானம் வருகிறது என்று தெரிவித்து விட்டேன். வரி போடுவதினாலேயே சங்கடம் ஏற்படுமானால் நிச்சயமாக இந்த அரசு பரிசீலனை செய்யும்.

**திரு. ஏ. சி. சண்முகம் :** பேரவைத் தலைவர் அவர்களே, கொடிய வியாதிகளைத் தீர்க்கக்கூடிய மருந்துகள் சித்த மருத்துவத்தில் உள்ளன. ஆனால் ஆஸ்பத்திரியில் போதுமான அளவிற்கு மருந்துகள் இல்லை. ஆஸ்பத்திரியில் சித்த மருத்துவ முறையில் சிகிச்சை செய்து கொள்வதற்கு மக்கள் 100 பேர், 150 பேர்கள் என்று கியூவில் நிற்கின்றார்கள். மருந்துகள் கிடைக்காததினால் தடை ஏற்படுகிறது. அந்தத் துறைக்கு மானியம் கொடுக்க அரசு முன்வருமா? விற்பனை வரியை ரத்து செய்யுமா?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** பேரவைத் தலைவர் அவர்களே, சித்த மருத்துவம் வளர்வதற்கு எல்லாவித நடவடிக்கையும் எடுக்கப்படும். வரி போடுவதினாலே கஷ்டம் என்றால் அரசு பரிசீலனை செய்யும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

[1981 பிப்ரவரி 9

பூச்சி மருந்து, உரங்கள் மீதான விற்பனை வரி.

*வினா எண் 243—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பூச்சி மருந்து, உரங்கள் முதலியவைகளுக்கு விதிக்கப்பட்டுள்ள விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்கும் உத்தேசம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இல்லை.

[முற்பகல் 9-10]

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, இரசாயன உரங்கள், பூச்சிக்கொல்லி மருந்துகள் ஆகியவைகளுக்கு விதிக்கப்பட்டிருக்கிற வரியினால் எவ்வளவு வருமானம் வருகிறது? தமிழக அரசினால் இந்த வரியை விலக்க முடியவில்லை என்றால் மத்திய அரசிடம் மானியம் வாங்கி இதற்கு வரி விலக்கு அளிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, பூச்சிக்கொல்லி மருந்துகளுக்கு விதிக்கப்பட்ட வரியினால் வருமானம் 40 இலட்சம் ரூபாய்; மற்ற இரசாயன உரங்கள் வரியிலிருந்து அரசுக்குக் கிடைப்பது 5 கோடி ரூபாய். விவசாயிகளுக்கு அரசு பலவித நன்மைகளைச் செய்து கொண்டிருக்கிறது; ஆகையால் இந்த வரியைக் குறைக்கும் எண்ணமோ, ரத்து செய்யும் எண்ணமோ அரசுக்கு இல்லை.

திரு. ஆ. வெள்ளைச்சாமி : தலைவரவர்களே, இந்தப் பூச்சிக்கொல்லி மருந்து, உரங்கள் மீது மத்திய அரசு விதித்திருக்கிற வரி எத்தனை சதவீதம்? மாநில அரசு விதித்திருக்கிற வரி எத்தனை சதவீதம் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, ஆயத்தீர்வை 3½ சதவீதமாக விதிக்கப்பட்டிருக்கிறது.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, பூச்சிக்கொல்லி மருந்துகளுக்கு வரி விதிக்கப்பட்டதினால் அதிலிருந்து அரசுக்கு ஆண்டுக்கு 40 இலட்சம் ரூபாய்தான் வருமானம் என்று சொன்னார்கள். இந்த 40 இலட்சம் என்பது அவ்வளவு பெரிய தொகையாக இல்லாத காரணத்தால் மத்திய சர்க்காரை எதிர்பாராமல் விவசாயிகளுக்கு 40 கோடி ரூபாய் 50 கோடி ரூபாய் என்று சலுகை அளித்துக் கொண்டிருக்கும் இந்த அரசு இந்த 3½ சதவீதம் வரியை 2 சதவீதமாகக் குறைக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.



1981 பிப்ரவரி 9]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, நீண்டகாலமாக 1965 லிருந்தே இந்த வரி விதிக்கப்பட்டிருக்கிறது. அதிலே எந்தவிதமான மாற்றமும் இதுவரையில் இல்லை. எத்தனையோ பொருட்களுக்கெல்லாம் வரி விதிக்கப்பட்டு அல்லது வரி உயர்த்தப்பட்டிருந்தாலும் இந்த அரசு இவைகளுக்கு உயர்த்தாமல் அப்படியே வைத்திருக்கிறது. அதுமட்டுமல்ல, விவசாயிகள் உற்பத்தி செய்கிற உணவுப் பொருட்கள் மீது இந்த அரசு வரியே விதிக்கவில்லை. ஆகையால் இப்போது போடப்பட்டிருக்கிற வரியை நீக்குவதற்கோ, குறைப்பதற்கோ அரசுக்கு எண்ணம் இல்லை.

திரு. என். வரதராஜன் : தலைவரவர்களே, அரசு தொடர்ச்சியாக தன்னுடைய கொள்கையிலே சிறு விவசாயிகள், குறுநில விவசாயிகள் ஆகியோருக்கு உதவி செய்வது என்பதை ஏற்றுக்கொண்டிருக்கிறது. அதைப்போல இந்தப் பூச்சிக்கொல்லி மருந்திலும் இப்படிப்பட்ட விவசாயிகளுக்கு பல்வேறு கஷ்டங்கள் இருக்கின்ற காரணத்தால், சலுகை அளித்து அல்லது வரி விதிக்காமல் இந்த அரசு பார்த்துக் கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, இந்தப் பூச்சிக்கொல்லி மருந்து விற்பனையைப் பொறுத்தவரை யில் அது பெரிய விவசாயிகளுக்கு விற்கப்படுகிறதா அல்லது சிறிய விவசாயிகளுக்கு விற்கப்படுகிறதா என்று கண்டறிவது கஷ்டம். பெரிய விவசாயிகள் சிறு விவசாயிகளிடம் பணத்தைக் கொடுத்து வாங்கிச் செல்வார்கள் என்பது உங்கள் அனைவருக்கும் தெரியும். ஆகவே அத்தகைய தவறுகள் நடக்காமல் இருக்க பெரிய விவசாயி, சிறிய விவசாயி என்று பார்க்காமல் எல்லோருக்கும் ஒரேமாதிரியாக விற்பனை செய்யப்படுகிறது.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவரவர்களே, இந்த உரத்தினுடைய விலை ஏறிக்கொண்டே போகிறது. இந்த மாதம் 1-ம் தேதியிலிருந்து டன் ஒன்றுக்கு 150 ரூபாய் ஏறியிருப்பதாக பத்திரிகையில் பார்த்தேன். இப்படி விலை ஏறுகிற காரணத்தால் ஏற்கெனவே விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற பொருட்களுக்கு நியாயமான விலை கிடைக்கவில்லை என்று கூறுகிறார்கள். ஆகவே இந்தப் பூச்சிக்கொல்லி மருந்தின் விலையைக் குறைக்க வேண்டுமென்று மத்திய அரசை வற்புறுத்த இந்த அரசு முன் வருமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது விற்பனை வரியைப் பற்றியது. அடுத்து வினா எண் 244.

[1981] பிப்ரவரி 9

## வத்தலக்குண்டு பகுதியில் வெடி விபத்து.

*வினா எண் 244—திரு. என். எஸ். வி. சித்தன், திரு. செ. சிவசாமி : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) கடந்த (1980) ஆகஸ்ட் மாதம் கடைசி வாரத்தில் வத்தலக்குண்டில் ஏற்பட்ட வெடி விபத்தில் மரணமடைந்தவர், காயமடைந்தவர் எத்தனை பேர்?

(ஆ) பாதிக்கப்பட்டவர்களுக்கும், அவர்தம் குடும்பங் களுக்கும் அரசு அளித்த உதவித் தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: (அ) 1980 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் கடைசி வாரத்தில் வத்தலக்குண்டில் ஏற்பட்ட வெடி விபத்தில் மரணமடைந்தவர் 42 பேர். காயமடைந்தவர்கள் 60 பேர்.

(ஆ) பாதிக்கப்பட்டவர்களுக்கும், அவர்தம் குடும்பங் களுக்கும் முதல்வரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ. 2,11,000 நிவாரணமாக வழங்கப்பட்டது. இது தவிர, பிரதமரின் தேசிய நிவாரண நிதியிலிருந்து ரூ. 66,000 நிவாரணமாக வழங்கப் பட்டது. அது பற்றிய விவர அறிக்கை ** ஒன்றும் அவையில் வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. கா. கோபாலகிருஷ்ணன் : தலைவரவர்களே, வெடி விபத்து சம்பந்தப்பட்ட இடத்திலே எவ்வளவு மதிப்புள்ள வெடி பொருட்கள் பதுக்கி வைக்கப்பட்டிருந்தன? பதுக்கி வைத் திருந்த வியாபாரிகள்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதை அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, அவர்கள்மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு, வழக்குமன்றத் திலே வழக்கு இருக்கிற காரணத்தால் அதுபற்றிய முழு விவ ரங்கள் என்னிடத்தில் இல்லை.

திரு. செ. சிவசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர் களே, வத்தலக்குண்டில் ஏற்பட்ட இந்த பயங்கரமான வெடி விபத்து ஏன் ஏற்பட்டது என்பதைக் கண்டறிந்து அதற் குரிய சரியான விவரமான அறிக்கை இங்கே வைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

---

**130—132-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பெற் றுள்ளது.

*1981 பிப்ரவரி 9]*

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** தலைவரவர்களே,
ஏன் ஏற்பட்டது என்பதைக் கண்டறிந்துதான் அந்தக் குற்றத்
தைச் செய்தவர்கள் மீது வழக்கு தொடரப்பட்டிருக்கின்றது.
வழக்கு நீதிமன்றத்தில் இருக்கின்றது.

**திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான் :** தலைவ
ரவர்களே, இந்த விபத்தினால் எவ்வளவு சேதம் ஏற்பட்டது
என்கின்ற விவரம் அரசுக்குத் தெரியுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** தலைவரவர்களே,
சேதம் எவ்வளவு என்ற புள்ளிவிவரத்தைப் பார்ப்பதை விட
எவ்வளவு பேர்கள் உயிரிழந்து இருக்கிறார்கள் என்பதைக் கணக்
கிட்டு அரசு அதற்கு ஆவன செய்திருக்கின்றது. மேலும்
விபத்து நடந்த உடனே அந்த இடத்திற்கு அமைச்சர்கள் சென்று
பார்த்திருக்கிறார்கள் என்பதும் மருத்துவமனைக்கும் சென்று
பார்த்திருக்கிறார்கள் என்பதும் உங்களுக்கெல்லாம் தெரியும்.

**திரு. சோ. அழகர்சாமி :** தலைவரவர்களே, அரசைப்
பொறுத்தவரையிலே இவ்வாறு விபத்திலே இறந்துவிட்டவர்
களின் குடும்பத்திற்கு கொடுக்கின்ற நஷ்ட ஈடு அக்குடும்பத்
திலே நான்குபேர் இறந்திருந்தாலும் இறந்துவிட்ட ஒருவரை
மட்டும் கணக்கில் எடுத்துக்கொண்டு அக்குடும்பத்திற்கு உதவித்
தொகை கொடுக்கப்படுகின்றது. ஆகவே நான்கு பேர் இறந்
திருந்தால் அந்த நான்கு பேரையும் கணக்கில் எடுத்துக்கொண்டு
அதற்குத் தகுந்தவாறு அக்குடும்பத்திற்கு உதவி செய்ய
அரசு முன்வருமா ? இப்போது 5 ஆயிரம், ரூ. 2 ஆயிரம் என்
றெல்லாம் நஷ்ட ஈடு கொடுக்கப்பட்டாலும் ஒன்றுக்கு மேற்
பட்டவர்கள் இறந்திருந்தாலும் அக்குடும்பத்திற்கு மொத்த
மாக ஒரு ஆள் இறந்துவிட்ட கணக்கின் அடிப்படையிலேதான்
கொடுக்கப்படுகின்றது.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** தலைவரவர்களே,
விபத்து நடந்து அதனால் இறந்துவிட்டவர்களின் குடும்பங்
களுக்கு ஆயிரம் ரூபாய் தான் கொடுக்கவேண்டும் என்று அர
சாணையில் இருப்பது எல்லோருக்கும் தெரியும். இருந்தாலும்
நாங்கள் 5 ஆயிரம், 10 ஆயிரம் என்றெல்லாம் கொடுத்திருக்
கிறோம். மேலும் நான் அவை முன் வைத்திருக்கின்ற அறிக்கை
யினை முழுவதும் படித்தால் கேள்வி கேட்க வேண்டிய அவசியம்
இல்லாத அளவுக்கு எல்லா விவரங்களும் அதிலே இருக்கின்றன
என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மு. அப்பாதுரை :** மாண்புமிகு பேரவைத் தலைவ
ரவர்களே, இப்படிப்பட்ட ஒரு வெடி விபத்து ஏற்பட்டதற்குப்
பிறகும் கூட சிலர் வெடி மருந்துகளை லைசன்சு இல்லாமல்

[1981 பிப்ரவரி 9

விற்றுக்கொண்டிருக்கிறார்களே, அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, லைசென்சு இல்லாமல் வெடி மருந்து வைத்திருப்பவர்கள் மீது அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது. ஆனால் அப்படி எங்கேயாவது யாராவது வைத்திருக்கின்றார்கள் என்ற தகவலைக் கொடுத்தால் அவர்கள்மீது நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. சிவசாமி : தலைவரவர்களே, சில வியாபாரிகள் ஒரு சிலவெடிமருந்துகளுக்குரிய லைசென்ஸை வாங்கி வைத்துக்கொண்டு பல வெடி மருந்துகளை விற்றுக்கொண்டிருக்கிறார்கள். அதன் காரணமாகவும் இப்படிப்பட்ட சம்பவங்கள் நேர்கின்றன. மேலும் நடந்த இச்சம்பவத்தில் 46 பேர் இறந்திருக்கிறார்கள். அவர்களுக்கு மொத்தமாக 2 இலட்சத்து 11 ஆயிரம் கொடுக்கப்பட்டிருக்கின்றது. இது மிகக் குறைந்த அளவு. ஆகவே மீண்டும் ஒரு குறிப்பிட்ட தொகையை அக்குடும்பத்தினருக்கு கொடுக்க இந்த அரசு முயற்சி எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, ஆயிரம் ரூபாய்தான் கொடுக்கப்படவேண்டும் என்று அரசாணையில் இருக்கின்றது. ஆனால் நாங்கள் 5,000, 10,000 என்றெல்லாம் கொடுத்திருக்கிறோம். மேலும் மாநில அரசு கொடுத்தது 5,000 என்றால் மத்திய அரசும் ஆயிரம் கொடுத்திருக்கின்றது. ஆகவே சிலருக்கு 6,000 ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கின்றது. அதுமட்டுமல்ல, இறந்துவிட்டவர்களின் குடும்பத்தைச் சேர்ந்த குழந்தைகளுக்கு படிப்பதற்கும், மற்றும் பல காரியங்களுக்கும் உதவி செய்யப்படுகின்றது. ஆகவே நான் அவையிலே வைத்திருக்கின்ற விவரமான அறிக்கையைப் படித்தாலே கேள்வி கேட்பதற்கு இடமில்லாமல் எல்லா விவரங்களையும் தெரிந்துகொள்ளலாம்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவரவர்களே, இந்த வெடி விபத்துக்குப் பிறகு விவசாய காரியங்களுக்குப் பயன்படுகின்ற தோட்டாக்களின் விலையை எல்லாம் வியாபாரிகள் ஏற்றிவிட்டார்கள். ஏன் இவ்வாறு விலையை ஏற்றிவிட்டீர்கள் என்று கேட்டால் அரசாங்கம் அனுமதிப்பதில்லை என்று சொல்லி ஏராளமான பணத்தை வசூலிக்கிறார்கள். ஆகவே அதைக் கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?



1981 பிப்ரவரி 9]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, அரசுக்கு அப்படிப்பட்ட தகவல் வரவில்லை. யாராவது அப்படி விலையை ஏற்றி விற்கிறார்கள் என்று அவர்களுடைய பெயரைக் கொடுத்தால் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வேதாரண்யம் புகையிலை உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம்.

*வினா எண். 245—திரு. எம். எஸ். மாணிக்கம் : மாண்புமிகு கூட்டுறவு—சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேதாரண்யம் புகையிலை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம் நிதி நெருக்கடி நிலையில் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அதைப்போக்க அரசிடம் மானியம் ஏதும் கோரப்பட்டுள்ளதா ?

(இ) மானியம் கொடுக்கும் உத்தேசம் ஏதும் உண்டா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) & (ஆ) ஆம்.

(இ) கூட்டுறவுப் பதிவாளர் சங்கத்திடமிருந்து திட்டவட்டமான கோரிக்கைகள் கேட்டுள்ளார். வரப்பெற்றதும் அவை பரிசீலிக்கப்பட்டு தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

[முற்பகல் 9-20]

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேதாரண்யத்திலேதான் அதிகமான அளவில் புகையிலை விவசாயத் தொழிலாளர்கள் வாழ்கிறார்கள். அந்தப் பகுதியிலே இருக்கும் கூட்டுறவுத் துறை சங்கத்திற்கு நிதி உதவி செய்யாததின் காரணமாக அவர்கள் தனியார்களிடத்திலே சென்று அதிகமான அளவு வட்டி வீதத்தில் பணம் பெற்று விவசாயம் செய்தும், நிர்ப்பந்தத்தின் காரணமாக உற்பத்தி செய்த புகையிலையை பாதி விலைக்கு விற்று கடனை அடைக்கும்போதும் மறுபடியும் கடனாளிகளாகவே இருந்து கொண்டிருக்கிறார்கள். எனவே அதை அமைச்சர் அவர்கள் நன்கு பரிசீலித்து அவர்களின் கஷ்டத்தைப் போக்குகிற வகையில். . . . . .

(மணியடிக்கப்பெற்றது.)

[1981 பிப்ரவரி 9

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வேண்டுகோள் என்ற முறையில் பேசக் கூடாது. கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. பொ. உத்திராபதி : அரசு அதை விரைவில் பரிசீலனை செய்து அந்தக் கூட்டுறவுச் சங்கத்திற்கு நிதி உதவி வழங்கி, அந்த விவசாயிகளை பாதுகாக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியிலே உற்பத்தியாகிற புகையிலையை பொறுத்தவரைக்கும் கிட்டத்தட்ட 25 சதவீதம் கூட இந்தச் சங்கத்தின் மூலமாக கொள்முதல் செய்யப் பெறுவதில்லை என்ற தகவல் அரசுக்கு கிடைத்திருக்கிறது. அப்படி இச்சங்கம் அதனை கொள்முதல் செய்தாலும்கூட அதை மீண்டும் விற்பனை செய்கிறபோது நஷ்டம் பெருமளவில் ஏற்படுகிறது என்று சொல்கிறார்கள். அந்த வகையில் அங்கே தனியார்களின் டாமினேஷன் இருப்பதாகச் சொல்லப்பெறுகிறது. அதை ஒரு முடிவுக்குக் கொண்டு வரவேண்டுமானால், புகையிலை தூள் பொட்டணம் தொழிற்சாலை ஒன்று அமைக்கப் பெறுமானால், இச்சங்கத்தின் மூலமாக கொள்முதல் அதிக அளவில் செய்து, நல்ல விற்பனைக்கு வெளியே விற்று சங்கமும் லாபம் ஈட்ட முடியும். அந்த வகையில் இச்சங்கத்தைச் சேர்ந்தவர்கள் யாரேனும் முன்வருவார்களேயானால், அத்தொழிற்சாலை அமைக்கும் பணிக்கு உதவும் வகையில் அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேதாரண்யம் புகையிலை உற்பத்தியாளர்கள் சங்கம் தற்போது நெருக்கடியான நிலையில் இருப்பதாக அமைச்சர் அவர்களே ஒத்துக்கொண்டிருக்கிறார். அந்தச் சங்கத்தில் வேலை செய்கிற தொழிலாளர்கள் தற்போது என்ன நிலையில் இருக்கிறார்கள்? அவர்களுக்கு ஏதாவது உதவி செய்யப் பெறுகிறதா இல்லையா? அல்லது அவர்கள் பட்டினி கிடக்கிறார்களா? என்பதை தெரிவிப்பதோடு, அறிக்கை கேட்டுள்ளதாக கூறினார்களே, அரசாங்கம் கேட்டுள்ளதா? அல்லது கூட்டுறவுச் சங்கம் விவசாயிகளை கேட்க வேண்டும் என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்களா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தச் சங்கத்திலே பணியாற்றுகிற தொழிலாளர்கள் பிரச்னை மட்டும் அல்ல. அந்தச் சங்கத்திலே அங்கத்தினர்களாக இருக்கிற விவசாயிகள் உற்பத்தி செய்கிற புகையிலைக்கு நல்ல விலை கிடைக்கவில்லை என்று சொன்னால் அனைவரும் கஷ்டப்பட நேரிடும். அந்த அளவு தனியார் டாமி



1981 பிப்ரவரி 9

னேஷன் இருக்கிறது என்றும் சொல்கிறார்கள். அந்தப் பிரச்
னைகளை நீக்கக் கூடிய முறையில் வழி வகை காண வேண்டும்
என்றால் புகையிலை தூள் பொட்டணம் உற்பத்தி செய்யும்
தொழிற்சாலை அமைத்தால் ஏற்படும் என்கிற செயற்குறிப்பும்
இருப்பதாகச் சொன்னேன். அப்படி ஒரு தொழிற்சாலை ஏற்
படுத்தப்படுமேயானால், விவசாயிகளின் உற்பத்திப் பொருளுக்கு
நல்ல விலை கிடைக்கும், சங்கமும் நஷ்டம் அடையாது, தொழி
லாளர்களுக்கும் நல்ல ஊதியம் கிடைக்கும் என்கிற அடிப்படையில்
தான் அரசு இதைப் பரிசீலிக்கும். அப்படிப்பட்ட நடவடிக்கையை
அந்தக் கூட்டுறவுச் சங்கத்தில் பதிவு செய்துக் கொண்டிருக்கும்
விவசாயிகளே எடுக்க முன்வருவார்களேயானால் அரசு அதற்கு
நிதி உதவி அளிக்க வேண்டிய தேவை ஏற்படும். மற்றும் பல
காரணங்களினாலும் அரசு அதைப் பரிசீலிக்கும்.

திரு. இரெ. இராமமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, வேதாரண்யம் பகுதியிலே இருக்கிற புகையிலை
உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தில் தற்போது எத்தனை
பேர் உறுப்பினர்களாக இருக்கிறார்கள், அந்தச் சங்கத்தினுடைய
மூலதனம் என்ன? இதிலே பணியாற்றிக் கொண்டிருக்கிற பணி
யாளர்கள் எவ்வளவு பேர்? இப்பொழுது அதன் நிதி நிலைமை
எந்த அளவில் இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள்
தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, இச்சங்கத்திலே 760 உறுப்பினர்கள்
இருக்கிறார்கள். 71,650 ரூபாயை அவர்கள் மூலதனமாக இச்
சங்கத்தில் செலுத்தியிருக்கிறார்கள். அரசு இதில் 25,000
ரூபாய் மூலதனம் செலுத்தியிருக்கிறது. 1975-76 நீங்கலாக,
77-லிருந்து 80 வரை தொடர்ந்து இச்சங்கம் நட்டத்திலே
தான் இயங்கிக் கொண்டு வருகிறது.

மதுராந்தகத்தில் புதிய நீதிமன்றங்கள்.

*வினா எண் 246 திரு. எஸ். ஏ. உகம்சந்த்: மாண்புமிகு கூட்டுறவு-
சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) செங்கற்பட்டு மாவட்டம் மதுராந்தகத்தில் முன்சீப்
கோர்ட்டு அல்லது சப்-கோர்ட் அமைக்கும் திட்டம் அரசின்
பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

[1981 பிப்ரவரி 9

திரு. எஸ். டி. உகம்சந்த் : மதுராந்தகம் தாலூகா பெரியதொரு தாலூகா. அந்தத் தாலூகாவில் 450 கிராமங்களில் ஏழை மக்கள், ஏழை விவசாயிகள் வாழ்கிறார்கள். அவர்கள் வழக்குகள் நடத்த செங்கல்பட்டு செல்ல வேண்டியிருப்பதால் இந்தப் பிரச்னையை மீண்டும் அரசாங்கம் அனுதாபத்தோடு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : நீதிமன்றங்கள் அதிகார வரம்புக் குழு இதுகுறித்து பரிந்துரை செய்யவில்லை. காரணம், மதுராந்தகம் பகுதியிலிருந்து ஏற்கனவே செங்கைப் பகுதிக்கு சென்றுகொண்டிருக்கிற வழக்குகளுக்கு தனியாக ஒரு துணை நீதிமன்றம் அங்கே அமைப்பதற்கு ஏற்றளவிற்கு சாத்தியக்கூறு இல்லை என்ற குறிப்பினை உயர்நீதிமன்றம் அரசுக்கு தந்திருக்கிறது. அதன் அடிப்படையில் இது தற்போது பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டியதில்லை.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மதுராந்தகத்திலிருந்து செங்கல்பட்டு செல்லவேண்டுமென்றால் மதுராந்தகம் தாலூகா கடைக்கோடியில் இருப்பவர்கள் நாற்பது மைல்கள் செல்ல வேண்டியிருப்பதால் பல வழக்குகள் கோர்ட்டுக்குப் போகாமலேயே கிராமங்களிலே மிராசுதாரர்கள் சொல்வதற்குட்பட்டு நடக்க வேண்டிய நிலை இருக்கிறது. ஆகவே மதுராந்தகத்தில் ஒரு சப்கோர்ட் அமைக்க வேண்டும் என்று அங்குள்ள மக்களிடமிருந்து கோரிக்கைகள் வந்துள்ளனவா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : 1973 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட அதிகார வரம்புக் குழு இதை பரிந்துரை செய்யவில்லை. ஆனால் ஆண்டுகள் பல தற்போது ஆகிவிட்டதால் அந்தப் பகுதியிலிருந்து வருகிற வழக்குகளின் எண்ணிக்கையை வேண்டுமென்றால் மீண்டும் ஆய்ந்து அதன் அடிப்படையில் என்ன நடவடிக்கைகள் எடுக்கலாம் என்பதை உயர் நீதிமன்றத்தோடு கலந்து அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

### சென்னையில் உள்ள கொத்தவால்சாவடி.

*வினா எண். 247—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ?

சென்னையில் உள்ள கொத்தவால் சாவடியை வேறு இடத்திற்கு மாற்றும் திட்டம் தற்போது எந்நிலையில் உள்ளது —



1981 பிப்ரவரி 9]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தற்சமயம் கொத்தவால் சாவடியில் இயங்கி வரும் மொத்த வியாபாரத்தலத்தை சென்னை நகர எல்லைப்புறத்தில் கோயம்பேடு கிராமத்தில், பூவிருந்தவல்லி நெடுஞ்சாலையை ஒட்டிய வரையறுக்கப்பட்ட இடத்திற்கு மாற்றுவதற்கு ஒரு திட்டத்தை சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் தயாரித்து அனுப்பியது. அத்திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. சு. பாலன் : ஏற்கனவே சென்னை மாநகராட்சி கொத்தவால்சாவடியை கேசவ பிள்ளை பூங்காவில் அமைக்க வேண்டுமென்று அதற்காக முன்னாள் அரசு அடிக்கல் நாட்டு விழாவும் நடத்தி இருக்கிறார்கள். தற்போது அந்த இடத்தை வீடு கட்டும் திட்டத்திற்காக உபயோகப்படுத்தியிருக்கிறார்கள். சென்னையைப் பொறுத்த வரையில் இந்த கொத்தவால் சாவடி பூந்தமல்லிக்குப் போகுமானால் இங்கே வேலை செய்கிற நபர்களுக்கு காய்கறிகள் வாங்க அதிக தூரம் செல்ல வேண்டியிருக்கும் என்பதை அரசாங்கம் அறியுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இந்த ஏற்பாட்டிற்கு வியாபாரிகள் உள்ளிட்டு எல்லோரும் ஆதரவு தந்திருக்கிறார்கள். இங்கே ரீட்டேல் டீலர்ஸ் வியாபாரம் செய்வார்கள். அங்கு மாண்புமிகு உறுப்பினர்கள் போன்றவர்கள் வாங்கிக் கொள்ளலாம்.

திரு. இரா. தாமரைக்கனி : எங்களைப் போன்று கிராமங்களில் இருந்து வருகிறவர்களுக்கு இந்த கொத்தவால் என்ற வார்த்தையே புரியமாட்டேன் என்கிறது. ஆதலால் இந்தப் பெயரை மாற்றி இனிமேல் வருகிற இடத்திற்கு பெயர் வைக்கும்போது பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயரில் அது மாற்றப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இது பற்றியும் பரிசீலனை செய்யலாம்.

திரு. என. கிட்டப்பா : சென்னையில் உள்ள கொத்தவால் சாவடியை வேறு இடத்திற்கு மாற்றும் திட்டம் தற்போது எந்நிலையில் உள்ளது என்பது கேள்வி. விவர அறிக்கை தனியே வைக்கப்பட்டுள்ளது என்று இதில் இருக்கிறது. விவர அறிக்கை யாருக்கும் வைக்கப்படவில்லை, குறிப்பாக எனக்கு வைக்கப்படவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்று விவர அறிக்கை இந்த வினாவிற்கல்ல. வினா எண் 244-க்கு ஒரு குறியிடப்பெற்று அந்தக் குறியின்படி விவர அறிக்கை தனியே வைக்கப்பட்டுள்ளது என்று போடப்பட்டுள்ளது எனவே, அந்த இரண்டையும் சேர்த்து படித்துக் கொள்ளவேண்டும்.

**திரு. ஏ. சி. சண்முகம் :** இந்த கொத்தவால் சாவடியை வேறு இடத்திற்கு மாற்றும் திட்டத்திற்கு, எவ்வளவு தொகை அந்தத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது ? அது எப்போது முடிவடையும் ? அப்படி கொத்தவால் சாவடியை வேறு இடத்திற்கு மாற்றும்போது தற்போது கொத்தவால் சாவடியில் வேலையில் ஈடுபட்டுள்ள அனைவருக்கும் புதிய இடத்தில் இடம் கிடைக்குமா ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** தனிக் கேள்வி போடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. என். வரதராஜன் :** இந்த கொத்தவால் சாவடியைப் பொறுத்து அங்கே போக்குவரத்து நெருக்கடியும் சுகாதாரக் கேடும் இருப்பதால் அதை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டும். என்று எவ்வளவோ முறை இந்த மன்றத்தில் விவாதித்திருக்கி றோம். ஆகவே அரசாங்கம் பரிசீலனை செய்து எப்போது இது மாற்றப்படும் என்பதை அறிவிக்க இயலுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** விரைவில் மாற்று வதற்கு ஏற்பாடு செய்கிறோம்.

[முற்பகல் 9–30].

**திரு. என். பழனிவேல் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கொத்தவால் சாவடி தமிழ் நாடு முழுவதிலும் உள்ள வர்களுக்குத் தெரிந்த முக்கியமான இடம். அதிலே சுகாதாரக் கேடுகள் இருக்கின்றன என்ற காரணத்திற்காக அதை மாற்றுவது என்பது சரியல்ல. அந்தச் சாவடியிலே சுகாதார வசதி ஏற் படுத்திக் கொடுத்து, அந்தக் கொத்தவால் சாவடியை அபிவிருத்தி செய்தால், அந்தப் பகுதி வியாபார மக்களுக்கும் வசதியாக இருக்கும். அதைச் செய்ய அரசு முன் வருமா ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** தலைவர் அவர் களே, உறுப்பினருடைய கருத்துக்கு யாரிடத்திலிருந்தும் ஆதரவு இல்லை. அது சரியான யோசனையும் இல்லை.

### ஈரோடு நகரில் பாதாள சாக்கடை அமைப்புத் திட்டம்.

*வினா எண் 248— **திரு. தி. கா. நல்லப்பன் :** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) ஈரோடு நகரத்திற்கு பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம் உண்டா ?

(ஆ) ஆம் எனில், எந்த ஆண்டில் எடுத்துக் கொள்ளப்படும்?

மாண்புமிகு திரு. எஸ் இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. 1982 ல் எடுத்துக் கொள்ளலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் எத்தனை கோடி ரூபாய் மதிப்பீட்டில் தயாரிக்கப்படுகிறது? எந்த ஆண்டு முடிவு அடையும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, இப்போது உத்தேச மதிப்பீடு மீது அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டம் செயலுக்கு 1982 ஆம் ஆண்டில் எடுத்துக் கொள்ளப்படலாம்.

### உசிலம்பட்டிக்கு குடிநீர் வழங்கு திட்டம்.

*வினா எண் 249— திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) உசிலம்பட்டி நகரத்திற்கு வைகை நதியிலிருந்து குடிநீர் கொண்டு வரும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் மேற்படி செயற் குறிப்பு எப்போது நடைமுறைக்கு வரும் ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) உசிலம்பட்டி பேரூராட்சிக்கு வைகை நதியிலிருந்து குடிநீர் கொண்டு வரும் திட்டத்திற்கு அரசு ஜனவரி 1980-ல் ஒப்புதல் அளித்துள்ளது.

(ஆ) செயலாக்கத்திலுள்ள இத்திட்டம் மார்ச் 1982-ல் நடைமுறைக்குக் கொண்டு வரப்படலாம்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, இதற்காக எவ்வளவு ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

[1981 பிப்ரவரி 9

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் ரூ. 56.35 இலட்சத்தில் அமைக்கப்படும். பராமரிப்புச் செலவு ரூ. 1.65 இலட்சம்.

**திரு. இரா. முத்தையா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டிக்கு வைகை நதியில் இருந்து தண்ணீர் கொடுக்கும் திட்டம் 1979 ஆம் ஆண்டிலேயே தொடங்குவதாக இருந்தது. காலதாமதம் ஏன் என்று தெரியவில்லை. 1982 வரையில் காத்து இருக்காமல், வரும் நிதியாண்டிலேயே எடுத்துக் கொள்ள அரசு முன் வருமா ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** பேரவைத் தலைவர் அவர்களே, இத்திட்டம் செயலாக்கத்தில் உள்ளது. 1982 ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்திற்குள் முடிவு அடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**திரு. கா. கோபாலகிருஷ்ணன் :** தலைவர் அவர்களே, வைகை நதியில் இருந்து உசிலம்பட்டிக்குக் குடிநீர் கொண்டு வரும் திட்டத்தால் இடையில் உள்ள கிராமங்களுக்கும் பயன் கிடைக்குமா ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** தலைவர் அவர்களே, அதைப்பற்றிய விவரமான தகவல் என்னிடத்தில் இல்லை.

ஆயக்குடி பேரூராட்சிக்கு குடிநீர் வழங்கு திட்டம்.

*வினா எண் 250—**திரு. என். பழனிவேல் :** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பழனி வட்டம் ஆயக்குடி பேரூராட்சிக்கு வரதமா நதி அணையிலிருந்து குடி நீர் கொண்டு வரும் திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

(ஆ) இந்த ஆண்டுக்குள் அத்திட்டம் நிறைவேற்றித் தரப்படுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** (அ) செயலாக்கத்திலுள்ளது.

(ஆ) மார்ச் 1982-க்குள் முடிவுறும் என் எதிர் பார்க்கப்படுகிறது.



1981 பிப்ரவரி 9]

**திரு. என். பழனிவேல் :** தலைவர் அவர்களே, இந்த ஆயக்குடி குடிநீர் திட்டத்திற்கு ஒரு வருடத்திற்கு முன்பே அரசு அனுமதி அளித்துள்ளது. சென்ற 6 மாதத்திற்கு முன்பு அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது. ஆனால் இது வரையில் வேலை ஒன்றும் துவங்கப்படவில்லை. சென்ற நான்கு நாட்களுக்கு முன்னால் எனக்கு வந்த கடிதத்தில் 12.75 லட்ச ரூபாய் அந்தத் திட்டத்திற்காக செலவு செய்யப்பட்டது என்று தகவல் சொல்லியிருக்கிறார்கள். என்ன காரணத்திற்காக அந்தச் செலவு செய்யப்பட்டது என்கிற விவரத்தை அமைச்சர் அவர்கள் அளிக்க முடியுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** தலைவர் அவர்களே, இது வரையில் அதற்காக கிட்டத்தட்ட 13 லட்சம் செலவிடப்பட்டுள்ளது.

**திரு. என். பழனிவேல் :** தலைவர் அவர்களே, அங்கே சுமார் 13 லட்சம் ரூபாய் செலவிடப்பட்டது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களும் சொல்கிறார்கள். அந்த ஊர் என்னுடைய சொந்த ஊர். அங்கே எந்த வேலையும் ஆரம்பிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. ஆகவே, அது குறித்த விவரங்களை அமைச்சர் அவர்கள் அளிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** பேரவைத் தலைவர் அவர்களே, இது வரையில் சுமார் 13 லட்ச ரூபாய் செலவழிக்கப்பட்டுள்ளது. இத் திட்டம் 1982 ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்திற்குள் முடிவு அடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**திரு. என். இட்டப்பா :** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குடிநீர்த்திட்டமாக இருந்தாலும், பாதாளச் சாக்கடை திட்டமாக இருந்தாலும், உத்தேசிக்கப்படுகிறது என்றுதான் சொல்கிறார்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 13 லட்ச ரூபாய் செலவழிக்கப்பட்டுள்ளது என்று மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்லியிருக்கிறார்.

கோட்டயடி கால்வாய்

*வினா எண் 251—**திரு. சு. முத்துக்கிருஷ்ணன் :** மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கன்னியாகுமரி தொகுதி புத்தனாறு சானலில் உள்ள கோட்டயடி கால்வாய் ஏற்படுத்த பல இலட்சம் ரூபாய் செலவு செய்தும், பாசன வசதிக்கு பயன்படாமல் உள்ளதா?

(ஆ) இதற்கு நிவாரணம் காண என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

[1981 பிப்ரவரி 9

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** (அ) மற்றும் (ஆ): கோட்டயடி கால்வாய்த்திட்டம் முடிக்கப்பட்டு ஆயக்கட்டு முழுவதற்கும் போதுமான தண்ணீர் கிடைத்தபோதிலும், ஆயக்கட்டுத்தாரர்கள் இத்திட்டத்தைப் பயன்படுத்தி தங்கள் நிலங்களை நன்செய் நிலங்களாக மாற்றாமல் உள்ளனர். நன்செய் பயிர் மூலம் கிடைக்கும் வருவாயை விட தற்போது பயிரிடப்படும் தென்னை மிகுந்த வருவாயைத் தருவதாலும் மற்றும் தென்னை சாகுபடி செய்ய இந்த நிலங்கள் ஏதுவாக இருப்பதாலும், இந்நிலை உள்ளது. இதுவரையில் நன்செய் நிலங்களாக அபிவிருத்தி செய்யப்பட்ட பகுதிகளுக்குத் தேவையான தண்ணீர் விடப்படுகிறது. மேலும் நிலங்களை நன்செய்யாக அபிவிருத்தி செய்யவும் எந்தவிதமான நன்செய் பயிர் செய்ய வேண்டுமென்றும் ஆயக்கட்டுதாரர்களுக்கு கூறவும் வருவாய் மற்றும் விவசாயத் துறைகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். இதுபற்றி அத்துறைகள் தனியாகக் கேட்டுக் கொள்ளப் படும்.

**திரு. சு. முத்துக்கிருஷ்ணன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே. என்னுடைய கேள்வி, கோட்டயடி கால்வாய்க்கு பல லட்ச ரூபாய் செலவு செய்தும், பாசனத்திற்குப் பயன்படாத அளவிலே அந்தக் கால்வாயில் தண்ணீர் வீணாகிக் கொண்டிருக்கிறது. அந்தக் கால் வாய் மோசமான நிலையிலே இருக்கிறது. ஆகவே அந்தக் கால் வாய் பழுதுபார்க்கப்படுமா? என்று நான் கேட்கிறேன். ஏனென்று சொன்னால் இந்தக் கால்வாயில் ஆரம்பத்திலே தண்ணீர் விடப்பட்டால் கடைசி வரை தண்ணீர் போய்ச் சேர்வ தில்லை. இது பற்றி அரசுக்குத் தெரியுமா? இந்தப் பகுதியிலே உள்ள மக்களுக்கு இது வருத்தத்தை அளிக்கக்கூடிய செய்தியாக உள்ளது. இதுபற்றி பல முறை அரசுக்கு முறையிட்டும், இந்தக் கால்வாய் பராமரிக்கப்படாமல் இருக்கின்றது. இந்த ஆண்டிலாவது அந்தக் கால்வாய் பழுதுபார்க்கப்படுமா? இந்தக் கால்வாய் எப்போது ஏற்படுத்தப்பட்டது? யாருடைய ஆட்சிக் காலத் திலே ஏற்பட்டது? அதற்காக எவ்வளவு தொகை செல வழிக்கப்பட்டது? இதைத் துரிதமாகச் செய்ய அரசுக்கு உத் தேசம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** மாண்புமிகு தலைவர் அவர்களே, மூலக் கேள்வி கன்னியாகுமரி தொகுதி புத்தனாறு சானலில் உள்ள கோட்டயடி கால்வாய் ஏற்படுத்த பல இலட்சம் ரூபாய் செலவு செய்தும், பாசன வசதிக்குப் பயன்படாமல் உள்ளதா என்பதுதான். முழுமையாக அது பயன்படவில்லை. தென்னை வளர்ப்பால், இந்த நிலை உள்ளது என்று நான் பதில் சொல்லியிருக்கிறேன். கால்வாய் பழுதடைந்து உள்ளதா என்று கேட்கவில்லை. எனவே, இதைப்பற்றி விளக்கமாக கேட்பார்களானால், தகுந்த பதிலைச் சொல்ல முடியும்.



1981 பிப்ரவரி 9]

**திரு. ஜே. ஹேமச்சந்திரன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் பல கால்வாய்கள் காலாகாலத் திலே பராமரிக்கப்படாததன் காரணமாக, பழுதடைந்து இருக்கி றது என்று பல முறை அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட் டிருக்கின்றது. இதைப் போக்குவதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** மாண்புமிகு தலை வர் அவர்களே, தனிக் கேள்வி போடும்படி கேட்டுக் கொள் கிறேன்.

## தும்பளஹல்லி நீர்த்தேக்கத் திட்டம்

*வினா எண். 252—**திரு. மு. ப. முனுசாமி :** மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா:

தும்பளஹல்லி நீர்த்தேக்கத் திட்டத்தின் கீழ் பாசன வசதிக்கு நிலம் சர்வே செய்ததின் தொடர்பாக பெசுஹள்ளி ஊராட்சி, இண்டமங்கலம் ஊராட்சி, காரப்பனள்ளி, பூமாண்ட அள்ளி, மல்லிக் குட்டை ஊராட்சிகளுக்கு கால்வாய் விஸ்தரிக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது.

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** வினாவில் குறிப் பிடப்பட்ட எல்லாகிராமங்களும் தும்பலஹல்லி நீர்த்தேக்கத் திலிருந்து சுமார் 5 முதல் 8 மைல் தொலைவில் உள்ளதாலும், சுமார் 131 மி. க. அடி கொள்ளளவுடைய இந் நீர்த்தேக்கத்திலிருந்து 2184 ஏக்கர் புஞ்சை நிலங்களுக்குப் புதிதாகப்பாசனமளிக்கவும், 326 ஏக்கர் நிலங்களுக்கு பாசன உறுதி அளிப்பதற்கும், 96 ஏக்கர் நிலங்களின் பாசன பற்றாக் குறையைப் போக்குவதற்கும் மட்டுமே போதுமானதாக உள்ள தாலும் குறிப்பிட்டுள்ள கிராமங்களுக்குப் பாசன விஸ்தரிப்பு செய்ய தற்போதைக்கு இயலாது.

**திரு. மு. ப. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத்தலைவரவர்களே தும்பளஹல்லி நீர்த்தேக்க திட்டம் எடுத்துக் கொள்ளப்பட்டு ஆரம்பிக்கும் போது தர்மபுரி நகரத்திற்கு குடிதண்ணீர்கொடுப்ப தற்கான திட்டம் அதிலே சேர்க்கப்பட்டது. இந்தக் குடிதண்ணீர் கூட சின்னாறு நீர்த்தேக்கத்திற்குத் திருப்பி விடப் பட்டதால் வீணாகிறது. பைசு அள்ளி, கானப்பனஅள்ளி பூமாண்ட அள்ளி, மல்லிக்குட்டை ஆகிய இந்தக் கிராமங் களுக்கு ஏறத்தாழ 900 ஏக்கர் சர்வே செய்து அந்த

[1981 பிப்ரவரி 9

நிங்களுக்குத் தண்ணீர் கொடுப்பதாக மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாகச் சொல்லப்பட்டிருந்தது. இப்போது எடுத்துக் கொள்ளப்பட இயலாது என்று அமைச்சர் அவர்கள் பதிலளிக்கிறார்கள். ஆனால், அந்தப் பகுதி பாசன வசதி இல்லாமல் வறட்சியான பகுதி. அதை மேம்பாடடையச் செய்வதற்கு அங்கே இத்திட்டத்தை விஸ்தரித்து, இந்த அரசு தண்ணீர் அளிக்க முன்வருமா என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

[முற்பகல் 9-40]

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தும்பாளஹல்லி நீர்த்தேக்கத் திட்டத்தில் 131 மில்லியன் கன அடி நீர்தான் இருக்கிறது. எனவே, இந்த நீரை வைத்துக் கொண்டு எட்டு மைல் தூரத்திலுள்ள பல கிராமங்களுக்கு பாசன வசதி அளிப்பது என்பது இயலாத நிலையில் உள்ளது என்று குறிப்பிட்டிருக்கிறேன். அணைக்கட்டு கட்டப்பட்டிருப்பதன் காரணமாக கோட்டூஹல்லி, உடனூஹல்லி, காரியாங்கலம் போன்ற இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட ஏக்கர்களுக்கு ஏற்கனவே பாசன வசதிகளுக்கான வாய்ப்புகள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நீண்ட அக்கறையோடு கேட்கிற காரணத்தால் திரும்பவும் அது பற்றிப் பரிசீலனை செய்யலாமே தவிர, உத்திரவாதமாக எடுத்துக் கொள்ளமுடியும் என்று சொல்ல இயலாது.

திரு. மு. ப. முனுசாமி : ஏற்கனவே இந்தத் திட்டம் ஆரம்பிக்கப் படும்போதே இந்த கிராமங்களுக்குத் தண்ணீர் அளிக்க பெறும் என்ற உத்தரவாதம் அளிக்கப்பட்டது. மாண்புமிகு அமைச்சர் அவர்களையும் அரசையும் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். இந்தக் கிராமங்களுக்கு இந்தத்தண்ணீர் தவிர வேறு எங்கிருந்தும் தண்ணீர் வர இயலாத நிலை இருப்பதால் பொதுமக்களின் குறையைப் போக்க கண்டிப்பாக இதிலிருந்து தண்ணீர் கொடுக்க உத்தரவாதம் கொடுப்பார்களா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : நீரின் கொள்ளளவு எவ்வளவு என்பதைத் தெரிவித்திருக்கிறேன். 131 மில்லியன் கன அடி தண்ணீர் ஏற்கனவே நான் தெரிவித்த பல பகுதிகளுக்கு வழங்கப்படுகிறது. கூடுதலாகக் கொடுக்க வாய்ப்பு இருக்குமா என்பதைப் பரிசீலித்தப்பிறகு அரசுத் தரப்பில் உறுதியோடு கூறமுடியுமே தவிர தற்போது எதுவும் கூற இயலாது.



1981 பிப்ரவரி 9]

## வசிஷ்டா நதியின் குறுக்கே அணை

*வினா எண். 253— திரு. பி. பழனிமுத்து : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) வசிஷ்டா நதியின் குறுக்கே கல்பகனூருக்கு அருகில் 'ரெட்டி அணை' கட்டும் திட்டம் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இந்தத்திட்டம் எந்நிலையில் உள்ளது?

(இ) இந்தத் திட்டம் உடனடியாக நிறைவேற்றப்படுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) (ஆம்.)

(ஆ) முதலில் இத் திட்டத்தை ரூ. 3.63 லட்சத்தில் நிறைவேற்ற, சென்ற ஆண்டு டிசம்பர் திங்களில் அரசு ஒப்புதல் அளித்தது. ஆனால், தற்போது இத்திட்டத்தின் மதிப்பீடு ரூ. 11.00 லட்சமாக உயருமென்றும், ஆகவே இத்திட்டத்தின் திருத்திய மதிப்பீட்டிற்கு ஒப்புதல் அளிக்கும்படி தலைமைப் பொறியாளர் (பாசனம்) கேட்டு உள்ளார். இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

(இ) அரசு ஒப்புதல் அளித்த பின் வேலை எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. பி. பழனிமுத்து : கடந்த நிதி ஆண்டிலேயே இதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது. இப்போது பதினோரு லட்ச ரூபாய்க்கு புதிய மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அந்தத் திட்டத்தை இந்த ஆண்டிலாவது எடுத்துக் கொள்ள அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : ஏற்கனவே கட்டப்பட்டிருக்கிற அந்த அணையின் நீளம் 100 மீட்டர். 3050 மீட்டர் நீளமுள்ள நீர் வழங்கும் கால்வாய் வெட்ட வேண்டுமென்று டிசைன் மாற்றப்பட்டிருக்கிறது. அதற்குரிய மதிப்பீடு அதன் காரணமாக உயர்ந்திருக்கிறது. அரசு விரைவாகப் பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டு எவ்வளவு விரைவாக செயலாற்ற முடியுமோ அந்த அளவுக்கு ஒப்புதல் அளிக்கும்.

காளிங்கராயன் வாய்க்கால்

*வினா எண். 254— திரு. ச. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம் காளிங்கராயன் வாய்க்கால் பாசனத்தில் கடைமடைப் பகுதி நிலங்களுக்கு தண்ணீர் சரிவரக் கிடைக்காமல் அப்பகுதி விவசாயிகள் அவதிப்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) நீர்த் தட்டுப்பாட்டினைப் போக்க அந்தக் கால் வாயைச் செப்பனிடும் திட்டம் ஏதாவது அரசிடம் உள்ளதா ?

(இ) அதற்காக ஏதாவது நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா?

(ஈ) ஆம் எனில் அப்பணி எப்போது துவக்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ) காளிங்கராயன் வாய்க்கால் கடைமடைப் பகுதி நிலங்களுக்கு தண்ணீர் சரிவர கிடைக்காததால் அரசு இவ்வாய்க்கால் சீரமைக்கும் பணிக்கு ரூ. 66 இலட்சம் செலவிட ஒப்புதல் அளித்தது. இதைத் தொடர்ந்து ஆயக்கட்டுக்களை ஒருங்கிணைத்தல் மற்றும் மதகுகளை சீரமைத் தல் ஆகிய பணிகள் தவிர அனைத்து வேலைகளும் முடிக்கப்பட்டு விட்டன. இப்பணிகள் அனைத்தும் முடிந்தவுடன் கடைமடைப் பகுதிகளுக்கு சீராகத் தண்ணீர் கிடைக்க வாய்ப்பு ஏற்படும்.

திரு. ச. பாலகிருஷ்ணன் : தற்போது இந்தக் கால்வாயில் மதகுகள் சரியாக இல்லாததன் காரணமாக தண்ணீர் வீணாகும் நிலைமை இருக்கிறது. ஆகவே, மதகுகளைச் சீர் செய்து கடைமடைப் பகுதி வரை தண்ணீர் கொடுக்க அரசு திட்டம் வைத்துள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : நான் என்னுடைய பதிலில் 'ஆயக்கட்டுகளை ஒருங்கிணைத்தல் மற்றும் மதகுகளைச் சீரமைத்தல் ஆகிய பணிகள் தவிர அனைத்து வேலைகளும் முடிக்கப்பட்டுவிட்டன என்று தெரிவித்தேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியபடி மதகுகளைச் சீரமைக்கும் பணியை எடுத்துக் கொண்டிருக்கிறோம். விரைவில் முடிக்கப் பெறும்.

1981 பிப்ரவரி 9]

திரு. கு. ரமணி : காலிங்கராயன் வாய்க்கால் அருகே இருக்கக் கூடிய பவானி காவிரியாற்றில் சங்கமமாகக் கூடியதற்குப் பக்கத்தில் இருக்கிறது. அந்த வாய்க்காலைச் செப்பனிட்டு விட்டால் மட்டும் கடை மடைப் பகுதிக்கு தண்ணீர் அளித்துவிட முடியாது. தண்ணீர் ஜாஸ்தி ஆகிவிட்டது. தண்ணீர் வெளியிலே போவதை தடுக்கலாம்.

தண்ணீர் வருவதற்காக நீண்டகாலத்திற்கு முன்னதாகவே அமைக்கப்பட்ட அந்த காளிங்கராயன் என்ற வாயிலே இருக்கின்ற அந்த அணையை உயர்த்துவதற்கும் இந்த நேரத்திலே அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : அந்த வாய்க்காலிலே அதிகமாக வண்டல் மேடிட்டு இருந்தது. கடைமடைப் பகுதிக்கு தண்ணீர் போகாததற்கு ஒரு காரணம. புல்டோசர்கள் மூலமாக அந்த வண்டல் எல்லாம் முழுவதும் அகற்றப்பட்டு விட்டது. வாய்க்காலில் உடைப்பு ஏற்படக்கூடிய சில முக்கியமான இடங்களிலே பாதுகாப்புச் சுவர்கள் கட்டப்படுகின்றன. இருக்கின்ற மதகுகளை ஒழுங்குபடுத்தி, மேடுகளை அகற்றினாலே அந்தப் பகுதிகளுக்குத் தண்ணீர் கிடைக்கும். மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற கருத்துக்களைத் தனியாக கேள்வி கேட்பதன் மூலம் தெரிவித்தால் அந்த அணையை உயர்த்துவது பற்றி நான் பதில் சொல்கிறேன்.

திரு. ச. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, இந்தக் கால்வாயிலே நீண்ட நாட்களாகத் தண்ணீர் ஓடுவதால் நீர்த் தாவரங்களும், கழிவுகளும் வளர்ந்து நீர் ஒழுங்காகச் செல்லமுடியாமல் கால்வாயின் கரைமேல் வழிந்து சென்று தண்ணீர் வீணாவது மட்டுமல்லாமல் தண்ணீர் கரைமேல் செல்கின்ற நிலைமை ஏற்படுவதால் கரைகள் சேதமடைகின்றன. ஆகவே, கால்வாயைச் சேதமடையாமல் பார்த்துக் கொள்கின்ற வகையில் கரைக் காவலர்களை நியமிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : அதைப் பற்றி என்னிடம் குறிப்புகள் இல்லை. தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

### சிற்றாறு-பட்டணங்கால் கால்வாய் பாசனம்

*வினா எண் 255.—திரு. பொ. விஜயராகவன் : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் சிற்றாறு-பட்டணங்கால் கால்வாய் திட்டத்தில் அணையில் நிரம்பத் தண்ணீர் இருந்தும் பல வருடங்களாக கடைமடைப் பகுதிகளுக்குத் தண்ணீர் ஒழுங்காகச் செல்லாதிருப்பதை அரசு அறியுமா?

(ஆ) அதற்கான காரணங்கள் என்னென்ன?

(இ) மேற் குறிப்பிட்ட குறையைப் போக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது** : (அ) மற்றும் (ஆ) கோதையாறு பட்டணங்கால் ராதாபுரம் நீர்ப்பாசன அமைப்பின் கீழ் உள்ள ஆயக்கட்டுகளுக்கு 24,000 மில்லியன் கன அடி நீர் தேவை. ஆனால், கடந்த 7 ஆண்டுகளாக நீர்ப்பிடிப்புப் பகுதியில் போதுமான மழை இன்மையால், இந் நீர்த் தேக்கங்களுககு நீர் வரத்து தேவைக்குக் குறைவாக இருந்தது. மேலும், கடைமடைப் பகுதியில் உள்ள ஆயக்கட்டுதாரர்கள், 150 ஏக்கருக்குக் கீழே உள்ள ஆயக்கட்டுப் பகுதிகளில் உள்ள நீர் வரத்து கால்வாய்களை குடிமராமத்தின் கீழ்தூர் வாரி சரிவர பராமரிக்கவில்லை. கடைமடைப் பகுதிகளுக்கு போதிய நீர் செல்லாததற்கு இவைகளே காரணங்களாகும்.

(இ) குடிமராமத்தின் கீழ் நீர்வரத்துக் கால்வாய்களை பராமரிக்கும்படி நிலச் சொந்தக்காரர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர் என தலைமைப் பொறியாளர் (பாசனம்) கூறியுள்ளார்.

**திரு. பொ. விஜயராகவன்** : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கடந்த 7 வருட காலமாக குறிப்பிட்ட அளவுக்கு 24 ஆயிரம் மில்லியன் கன அடி அளவுக்கு நீர்வரத்து இல்லாத தால், தண்ணீர் அந்தப் பகுதிகளுக்குக் கிடைக்கவில்லை என்று சொன்னார்கள். 1978-79 ஆம் வருடத்திலே மிகப் பெரிய புயல், வெள்ளம் ஏற்பட்டதன் காரணமாக அந்த அணையில் தண்ணீர் நிரம்பி வழிந்த காலத்திலே கூட கடை மடைப் பகுதிகளுக்கு தண்ணீர் கிடைக்கவில்லை என்ற நிலைமை தான் இருந்தது. அந்தக் கால்வாயிலே ஷட்டர்கள் கிடையாது, மழை பெய்தால் நீர் ஒழுகிக் கொண்டு இருக்கிற நிலைமைகள் இருக்கின்றன. ஆகவே நிரந்தரமாக இந்தக் கால்வாயைச் சீரமைக்கிற வகையில் குறைகளை முழுமையாகக் கண்டுபிடித்து தண்ணீர் கிடைக்கச் செய்வதற்கு ஆவன செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது** : 1978-79 ஆம் ஆண்டிலேகூட அவ்வளவு புயலும் மழையும் பெய்த காலத்திலே கூட 24 ஆயிரம் மில்லியன் கன அடி இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தபடி மதகுகள் சரியாக பொருத்தப்படாமல் இருந்தால் அல்லது நீரை முறையாக விநியோகிப்பதிலே குறைகள் இருக்குமானால் நிச்சயமாக அதுபற்றி விரிவான ஆய்வை மேற் கொண்டு குறைபாடுகளை நீக்க வழிவகை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1981 பிப்ரவரி 9]

திரு. பொ. விஜயராகவன் : தலைவர் அவர்களே, இந்தப்
பாசனத் திட்டத்தில் கால்வாயில் இருக்கின்ற நீரை முறையாக
விநியோகம் செய்ய முடியாத நிலை இருக்கிறது. காரணம்
நீர்க்கசிவு ஏற்பட்டு முறையாகத் தண்ணீர் போகாத நிலைமை
இருப்பதால், அதற்காக சிமின்ட் லைனிங் கருங்கல் குளம் கால்
வாயில் 25 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் போடப்பட வேண்டு
மென்ற முறையிலே திட்டம் ஒன்று இருந்ததாக அறிகிறேன்.
அந்தத் திட்டத்தை நிறைவேற்றுகிற முறையிலே கிடைக்கின்ற
நீரை முறையாக ஒழுங்காக விநியோகம் செய்கிற வகையிலே
சிமின்ட் லைனிங் போடுவதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்
களே, கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில்
நீர்ப் பற்றாக்குறை என்பதை விட இருக்கின்ற நீரை முறையாக
வினியோகிக்க வேண்டுமென்ற கருத்தை கொள்கை அளவில்
அரசு வரவேற்கிறது. கொள்கை அளவிலே அதை ஒப்புக்
கொண்டிருக்கிறது. அதற்காகப் பல்வேறு திட்டங்களை இப்
பொழுது அரசு தீட்டிக் கொண்டிருக்கிறது. அடுத்த ஆண்டிலே
கூட கிட்டத்தட்ட மூன்று நான்கு கோடி ரூபாய் செலவிலே
பல்வேறு பகுதிகளிலே கால்வாய்களை லைனிங் செய்வதற்கான
திட்டங்களை அரசு நிறைவேற்றுவதற்கு இருக்கிறது. மாண்பு
மிகு உறுப்பினரவர்கள் குறிப்பிட்ட இந்தப் பகுதிகளையும் நிச்சய
மாக அரசு கவனத்திற் கொண்டு முழுவதுமாக—குமரி மாவட்டம்
முழுவதுமாக இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்பது
தான் அரசினுடைய கொள்கை. இந்தத் திட்டத்தை நிறை
வேற்றுவதற்கு அரசு விரைவான நடவடிக்கை மேற்கொள்ளும்.

[முற்பகல் 9-50]

திரு. டி. மணி : பேரவைத் தலைவரவர்களே, சித்தாறு—
பட்டணங்கால் திட்டத்தில் சித்தாறு 1, சித்தாறு 2 என்று
இருக்கின்றன. ஏற்கனவே இரண்டாவது அணைக்கட்டில்
சுமார் 40 அடிக்குமேல் தண்ணீர் எப்பொழுதுமே வீணாகிக்
கொண்டு தேங்கி இருக்கிறது. காரணம் 40 அடிக்கு மேல் தண்
ணீர் இருந்தால் தான் இணைப்பு கால்வாய் வழியாக இன்னொரு
அணைக்கட்டுக்குப் போய்ச் சேரும். ஆகவே, இரண்டாவது
அணைக்கட்டில் இருக்கிற மதகைத் திறந்தால் திற்பரப்பு
அணையில் இந்தத் தண்ணீர் போய்ச் சேர்ந்தால் ஏற்கனவே
நீண்ட நெடுங்காலமாகத் தண்ணீர் இல்லாமல் இருக்கின்ற சிதறால்
பகுதிகளுக்கு தண்ணீர் கொடுக்க திற்பரப்பு வலது கரை கால்
வாய்த் திட்டம் ஒன்று உள்ளது. அந்தக் கால்வாய்த் திட்டத்தை
வெட்டி அந்தப் பகுதி மக்களுக்குத் தண்ணீர் கொடுக்க அரசு
முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவரவர்களே. அவர்கள்
கேட்ட கேள்விக்கு இங்கே பதில் இல்லை என்றாலும், இப்படி
நிறைவேற்றப்பட வேண்டிய திட்டங்கள் என்னென்ன இருக்

கின்றன என்று ஒவ்வொரு உறுப்பினரையும் கேட்டிருக்கிறோம். அவைகளை இப்பொழுது தீவிரமாகப் பரிசீலனை செய்து கொண்டு இருக்கிறோம். பரிசீலனையின் பொழுது இப்பொழுது சொன்ன கருத்துக்களையும் சேர்த்து அரசு தக்க நடவடிக்கைகளை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## குளோரைட் தயாரிக்கும் தொழிற்சாலை

*வினா எண் 256—திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் குளோரைட் தயாரிக்கும் தொழிற்சாலை நிறுவ அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

(ஆ) எப்போது ஆரம்பிக்கப்படும் ?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** (அ) குளோரைட் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்று ஏற்கனவே தமிழ் நாட்டில் நிறுவப்பட்டுள்ளது.

(ஆ) மற்றுமொரு புதிய தொழிற்சாலை நிறுவ மைய அரசு அனுமதி அளித்துள்ளது. இப் புதிய தொழிற்சாலை 1981—82-ல் உற்பத்தியைத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**திரு. ரா. கிருஷ்ணன் :** தலைவரவர்களே, தமிழ் நாட்டில் தீப்பெட்டித் தொழிற்சாலைகளுக்குத் தேவைப்படும் குளோரைட் எவ்வளவு ? இப்பொழுது தமிழ் நாட்டில் எவ்வளவு தயாராகிறது? வெளி மாநிலங்களிலிருந்து ஏதாவது வருகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஏற்கனவே ஆண்டொன்றுக்கு 4,825 டன் அளவிலே தயாரிக்கின்ற தொழிற்சாலை இயங்கி வருகின்றது. வளர்ந்து வருகின்ற தீப்பெட்டித் தொழிலின் தேவைகளைக் கருதி அதனுடைய விரிவாக்கமாக டிட்கோ உதவியோடு இராமநாதபுரம் மாவட்டம், புலியூர் என்ற இடத்தில் ஏறத்தாழ மூவாயிரம் டன் உற்பத்தித் திறன் கொண்டதாக நூற்றைம்பது பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கத் தக்க வகையில் ஏறத்தாழ ஒரு கோடி ரூபாய் அளவில் இந்தத் தொழிற்சாலை நிறுவப்பட்டு வேலைகள் நடந்து வருகின்றன. 1981—82 இல் தன்னுடைய உற்பத்தியை அந்த நிறுவனம் துவக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மற்றப்படி, தீப்பெட்டித் தொழிற்சாலை

என்று கேட்டார்கள்.
களுக்கு மொத்தம் எவ்வளவு தேவை என்னிடத்தில் இல்லை. தனியாகக்
அதற்கான விவரங்கள் என்னிடத்தில் இல்லை.
கேள்வி கேட்டால் அதைப் பற்றிச் சொல்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவரவர்களே, கோவில்பட்டி,
கழுகுமலை, சாத்தூர், சிவகாசி, சென்னை போன்ற இடங்கள்
வேறு எந்தத் தொழிலும் இல்லாத பகுதி. இப்படிப்பட்ட
குளோரைட் தட்டுப்பாட்டின் காரணமாக தொழில் முடக்க
மாகிறது. ஆகவே, தொழிலாளர்கள் வேலையில்லாமல் அவதிப்
படுகிறார்கள். இப்படிப்பட்ட அவல நிலையைப் போக்க
அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய
விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவரவர்களே,
நான் ஏற்கனவே குறிப்பிட்டதைப் போல் ஏறத்தாழ 5,000 டன்—
4,825 டன் அளவிலே, மதுரை மாவட்டத்தில் நரசிங்கப்பட்டி,
என்ற இடத்தில் உள்ள தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்
படுகிறது. 3,000 டன் ஏற்கனவே குறிப்பிட்டதுபோல இராம
நாதபுரம் மாவட்டம் புலியூர் என்ற இடத்தில் உற்பத்தி செய்ய
இருக்கிறது. இந்த இரண்டு நிறுவனங்களும் முழு அளவில்
உற்பத்திச் செய்யும்பொழுது ஓரளவிற்குப் பற்றாக்குறை இல்லா
மல் இருக்கும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. அதற்குப்
பிறகு ஏதாவது பிரச்சினைகள் இருந்தால் மாண்புமிகு உறுப்பினர்
அவர்கள் சொல்வதைப்பற்றி அரசு பரிசீலிக்கும், நடவடிக்கை
எடுக்கும்.

டாக்டர் சி. சமாசம் : பேரவைத் தலைவரவர்களே,
குளோரைட் தயாரிக்கும் தொழிற்சாலைகளை ஏற்படுத்துவதற்கு
என்னென்ன விதிமுறைகள் அரசாங்கத்தால் வரையறுக்கப்பட்
டுள்ளன ? இது தனியார் துறையா அல்லது கூட்டுறவு துறையா
அல்லது அரசாங்கத் துறையா ? புதிதாக அரம்பிக்கப்படவிருக்
கின்ற தொழிற்சாலை கூட்டுறவுத் துறையால் ஆரம்பிக்கப்பட
இருக்கிறதா அல்லது தனியார் துறையால் ஆரம்பிக்கப்பட இருக்
கிறதா ? அல்லது இரண்டும் இணைந்த துறையால் ஆரம்பிக்கப்
பட இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டிட்கோ உதவியுடன்
என்று அமைச்சர் சொன்னாரே, டிட்கோ என்றால், அரசுத் துறை
உதவிதான்.

## செயற்கை வைரம் தயாரிக்கும் தொழிற்சாலை

* வினா எண் 257—திரு. வே. சந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்:
மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு
விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் செயற்கை வைரக்கற்கள் தயாரிக்கும்
தொழிற்சாலை நிறுவ அரசிடம் தனியார்கள் அனுமதி கோரி
யுள்ளார்களா ?

(ஆ) ஆம் எனில், எத்தனை பேர் ?

(இ) அத்தகைய தொழிற்சாலையை அரசே நிறுவும் திட்டம் பரிசீலனையில் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** (அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் :** தலைவர் அவர்களே, இப்படி செயற்கை வைரம் தயாரிக்கின்ற தொழிற்சாலை தென் மாநிலங்களிலே ஒன்றே ஒன்றுதான் இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. ஆகவே, வருகின்ற காலங்களிலாவது அப்படிப்பட்ட தொழிற்சாலை ஆரம்பிக்க அரசு பரிசீலிக்குமா ? 4, 5 ஆண்டுகளுக்கு முன்னால் தமிழகத்திலே, அப்படிப்பட்ட தொழிற்சாலை அமைக்க அனுமதி கேட்டு மறுக்கப்பட்டது அரசுக்குத் தெரியுமா ? அவர்களுக்காவது அந்த அனுமதி கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே திருச்சி, புதுக்கோட்டை, மதுரை மாவட்டங்களில் சிறு சிறு வியாபாரிகள் தனியாக அந்த உற்பத்தியிலே ஈடுபட்டிருக்கிறார்கள். அரசுத் துறையிலே நிறுவுவதற்கு எந்த உத்தேசமும் இப்பொழுது இல்லை. தனியார்கள் அதிக அளவிலே யாரும் மனுக்கள் செய்யவில்லை. ஒரே ஒருவர்தான், திரு. தியாகராசன் என்பவர் செயற்கை வைரம் தயாரிக்கும் திட்டம் உள்ளது என்று சொல்லி, டிட்கோவுக்கு மனு செய்தார். அதன் பேரிலே நடவடிக்கை எடுக்கப்பட்டு, 18—2—1980-ல் அவரையும் வரவழைத்து பேசப்பட்டது. அவர் தன்னிடத்திலே அந்தத் தொழிலைத் துவங்குவதற்கான மூலதனம் இல்லையென்றும் அரசே முழுமையாக உதவ வேண்டுமென்றும் கூறினார். அதற்குப் பின்னாலே, அதற்கான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, அது அவராலே சரியான முறையிலே நடத்தப்பட முடியாது என்பதாலே, கைவிடப்பட்டது. அது தவிர வேறு மனுக்கள் வந்ததாக என்னிடத்திலே தகவல் இல்லை.

**திரு. மி. வின்சென்ட் :** பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டம் வைர மலை மாவட்டம். அந்த மாவட்டத்தில் தடிக்காரன் கோணத்தில் கொத்தளம்பள்ளம் அரசுத் தேக்குத் தோட்டத்தில் கோடிக் கணக்கான........................

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது செயற்கை முறையில் வைரம் உற்பத்தி செய்வதைப் பற்றிய கேள்வி.

*1981 பிப்ரவரி 9]*

திரு மி. வின்சென்ட் : இயற்கை வைரம் வெட்டி எடுப்பார்களா என்று கேட்கிறேன். கேட்கக் கூடாதா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி, செயற்கை வைரம் உற்பத்தி செய்வதைப் பற்றி. இயற்கை வைரம் பற்றி கேட்காதீர்கள். மூலக் கேள்வியை ஒட்டிக் கேளுங்கள்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே இந்தச் செயற்கை வைரங்கள் தயாரிக்கக்கூடிய தொழில் திருச்சி மாவட்டத்திலே மிக அதிகமாக நடைபெறுகிறது. பல்லாயிரக்கணக்கான மக்கள் அதிலே ஈடுபட்டு, அந்தத் தொழிலைச் செய்து கொண்டு வருகிறார்கள். அவர்கள் உற்பத்தி செய்து, தனியார் வியாபாரிகளிடத்திலே விற்கக் கூடிய நேரத்திலே, சரியானவிலை கிடைப்பதில்லை. அவர்களுக்கு சரியான ஊதியமும் கிடைக்காத காரணத்தாலே, அரசாங்கமே ஒரு தொழிற்சாலை நிறுவ வேண்டும். அல்லது கூட்டுறவு முறையிலே ஒரு தொழிற்சாலை துவங்க, எந்த அளவு உதவி செய்ய முடியுமோ, அந்த அளவு உதவி செய்ய அரசாங்கம் முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தற்பொழுது அது போன்ற திட்டம் ஏதும் அரசினுடைய பரிசிலனையில் இல்லை.

## ஜவ்வாது மலைப் பகுதியில் பேப்பர் தொழிற்சாலை.

* வினா எண். 258—திரு. இல பலராமன் : மாண்புமிகு தொழில்அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஜவ்வாதுமலை (வட ஆற்காடு) பகுதியில் கிடைக்கும் மூங்கிலை மூலப் பொருளாகக் கொண்டு அங்கு ஒரு காகித தொழிற்சாலை துவக்கும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) இல்லை.

(ஆ) இவ் வினா எழவில்லை.

திரு. பெ. கு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தில் ஜவ்வாது மலையில் ஏராளமான மூங்கில்கள் கிடைக்கின்றன. அங்கு [illegible] மலைவாழ் மக்களும் வேலையில்லாமல் அவதிப்படுகிறார்கள். [illegible] கொண்டாவது, இல்லையென்றாலும் அங்கு ஒரு காகிதத் தொழிற்சாலை அமைக்க அரசாங்கம் முயற்சிக்குமா, நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: பேரவைத் தலைவர் அவர்களே, ஜவ்வாது மலைப் பகுதியில் ஆண்டொன்றுக்கு ஆயிரம் டன் மூங்கில்கள்தான் அங்கே கிடைப்பதாகத் தகவல். எனவே, அதைக் கொண்டு ஒரு காகிதத் தொழிற்சாலையை அங்கே நிறுவி, முழுமையாக நடத்த முடியாது. இரண்டாவது, அந்த பகுதியிலே, மூங்கில்கள் இருப்பு அதிகமாகக் குறைந்து வருகிற காரணத்தாலே, இருக்கிற மூங்கில்களையும் வெட்டக் கூடாது என்கிற அளவிலே வெட்டப்படாமல் இருக்கிறது. எனவே, இந்தச் சூழ்நிலையில் ஒரு காகிதத் தொழிற்சாலையை, அங்கே கிடைக்கிற மூங்கில்களை மட்டும் வைத்துத் துவங்குவதற்கு, அதற்கான திட்டங்கள் அரசிடம் இல்லை.

[முற்பகல் 10-00]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதியுடன் கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. கே. ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டம் தொழிற்சாலையில் மிகவும் பின் தங்கிய மாவட்டம். ஜவ்வாது மலையிலிருந்து கிடைக்கும் மூங்கிலிலிருந்தும், அந்த மாவட்டத்திலிருக்கிற மூன்று சர்க்கரை ஆலைகளிலிருந்து கிடைக்கிற கரும்பு சக்கையிலிருந்தும், ஒரு காகிதத்தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே மூன்று பெரிய தொழிற்சாலைகள் காகிதத் தொழிற்சாலைகள் நடைபெற்று வருகின்றன. இது போக ஆறு தொழிற்சாலைகள் உரிமம் பெற்று வேலைகள் துவங்கி இருக்கின்றன. இதைத் தவிர "புட்கோவிலே" கங்கா கிருஷ்ணமூர்த்தி பேப்பர் போர்டு அண்டு லிமிடெட் என்கிறவர்கள் சென்னையில் ஆறாயிரம் டன் உற்பத்தித் திறன் கொண்ட காகிதத் தொழிற்சாலையை நிறுவ அனுமதி கோரி மனு வந்திருக்கிறது.

இதைத் தவிர நியூஸ் பிரிண்ட்லேயிருந்து ஏறக்குறைய 150 கோடியிலே நிறுவப்படுகிற திட்டம் ஒன்று அரசின் பரிசீலனையில் இருக்கிறது. இப்படி பல்வேறு திட்டங்கள் அரசின் பரிசீலனையில் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது போல வேறு திட்டம் எதுவும் இப்போது அரசினிடத்திலே தனியாக இல்லை.

செங்கற்பட்டு மாவட்டத்தில் பின்தங்கிய தாலுக்காக்கள்

* வினா எண் 259 — திரு. எஸ். டி. உகம் சந்த்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டம், மதுராந்தகம், செங்கற்பட்டு, உத்திரமேரூர் தாலுக்காக்களை தொழிற்துறையில் பின் தங்கிய பகுதிகளாக அறிவிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) மற்றும் (ஆ) மாநில அரசின் செலவிலேயே சிறு ரகத் தொழில்களுக்கு மட்டும் மூலதன உதவித் தொகை அளிக்கும் வகையில் செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள மதுராந்தகம் தாலுக்கா தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது. செங்கற்பட்டு, உத்திரமேரூர் தாலுக்காக்களை தொழில் துறையில் பின் தங்கிய பகுதிகளாக அறிவிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மதுராந்தகம் தாலுகாவை பின் தங்கிய பகுதியாக அறிவித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, செங்கல்பட்டு, உத்திரமேரூர் ஆகிய தாலுக்காக்களில் எந்தவிதமான தொழில் முன்னேற்றமும் இல்லாததால் இதையும் பின்தங்கிய பகுதியாக அறிவிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே இந்த அவையிலே பல தடவை சொல்லி இருக்கிறேன். மாநில அரசு 24 தாலுக்காக்களையும், மத்திய அரசு 33 தாலுக்காக்களையும் பின் தங்கிய பகுதியாக அறிவித்து இருக்கின்றன. ஏற்கனவே அரசு அறிவித்த "சப்சிடி" ஸ்கீமில் நடைபெற்றுக் கொண்டிருக்கிற இந்த வேலைகளை கூட கைவிடுவதற்கான ஒரு ஆய்வு மத்திய அரசின் பரிசீலனையில் இருப்பதாக தெரிந்தது.

நேற்றைய தினம் நடைபெற்ற மாநில தொழில் அமைச்சர்கள் மாநாட்டிலே கூட தமிழ் நாட்டின் சார்பிலே, ஏற்கனவே சென்று இருந்தவர் சப்சிடி ஸ்கீமில் சிவராமன் கமிட்டி—திரு. சிவராமன் தலைமையில் ஒரு கமிட்டி போட்டு, பெரிய நகரங்களில் 200 கிலோ மீட்டர், அந்த ரேடியஸ்லே இருக்கிற எல்லாப் பகுதிகளையும் இதிலே இருந்து நீக்குவதாக இருந்தது. அதை நாம் ஆட்சேபித்து தற்போது நடைபெறும் பணிகள் முறையாக நடைபெற வேண்டும்; மேலும் சில தாலுக்காக்களை இந்த பட்டியலிலே சேர்க்க வேண்டுமென்று கேட்டிருக்கிறோம்.

## அரிசன நலத்துறை

* வினா எண் 260.—திரு. க. பாரமலை, திரு. எம் சின்னசாமி: மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரிசன நலத்துறை தனியாக இயங்கும் என்ற அரசின் முடிவு நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் விரைவில் அதை அமல்படுத்தும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** (அ) மற்றும் (ஆ) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி மக்கள் நலத்துறை (முந்தைய அரிசன நலத்துறை) தனியாக இயங்க பல்வேறு விதிமுறைகளை மாற்றுவது குறித்து பரிசீலனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அவை மேல் தக்க முடிவுகள் விரைவில் எடுக்கப்படும்.

**திரு. எம். சின்னசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பரிசீலனை முடிந்து எவ்வளவு காலத்தில் இந்தத் துறை தனியாக இயங்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** தலைவர் அவர்களே, கூடிய விரைவிலே இது பற்றிய முடிவு எடுக்கப்படும்.

**திரு. எல். இளையபெருமாள் :** பேரவைத் தலைவர் அவர்களே, அரிசன நலத்துறை தனியாக இயங்க முடியாத கஷ்டங்கள் என்ன இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன். இதற்கு முன்னே பரமேஸ்வரன் கமிட்டி, கூர்மைய்யா கமிட்டி, வர்கீஸ் கமிட்டி போட்டிருந்தும், இது குறித்து முடிவுகள் அறிவித்து இருக்கின்ற நிலையில் அவற்றை நிறுவ முடியாத நிலைமை என்ன? இன்னும் ஒரு கமிட்டி ஏன் என்று அறிய விரும்புகிறேன் .

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** பேரவைத் தலைவர் அவர்களே, அரிசன நலத்துறை தனியாக இயங்க வேண்டுமென்று 26—5—1979-லே அரசு ஆணையிட்டது. மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலிருந்து 15 மாவட்ட ஆதி திராவிட நல அலுவலர்கள் பதவியை பிரித்து வருவாய்த் துறையிலிருந்து ஏழு பேர்கள், அரிசன நல மாநில அலுவலகத்திலிருந்து 4 பேர்களையும், தேர்வு நிலை கண்காணிப்பாளர், கண்காணிப்பாளர் அளவில், கோட்ட வளர்ச்சி அலுவலகத்திலிருந்து 4 பேர்களையும் நியமிக்க ஆணையிடப்பட்டது.

அதுமட்டுமல்லாமல், பெரியார் மாவட்டம் புதிதாக ஆரம்பிக்கப்பட்டதால், மேலும் மற்றொரு நல அலுவலர் பதவி ஏற்படுத்தப்பட்டது. ஆதி திராவிட மற்றும் பழங்குடியினர் நல அலுவலகத்திலிருந்து தேர்வு செய்யப்பட்ட ஒரு கண்காணிப்பாளர் (திரு. டி. சுந்தரராஜ்) தேர்வு சரியல்ல என்பதை எதிர்த்து, திரு. ராஜகோபால் என்பவர் உயர்நீதி மன்றத்தில் நீதிப் பேராணை மனு தாக்கல் செய்திருந்தார். அதன் மீது முடிவு வரும் வரையில் காத்து இருக்க வேண்டியிருந்தது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ர.ா. கிருஷ்ணன் :** தலைவர் அவர்களே, அரிசன நலத் துறையை தனியாக ஒரு துறையாக அமைக்க வேண்டும் என்று பல காலமாக பேசப்பட்டு வருகிறது. இருப்பினும், அதை நடைமுறைப்படுத்துவதில் காலதாமதம் ஏற்படுவது ஏன் என்று

தெரியவில்லை. இதிலே நடைமுறைச் சிக்கல் என்னவென்றால், மாவட்ட நலத்துறை அலுவலர்களில் யாராவது தவறு செய்தால் அதைக் கண்டிக்க இந்தத் துறைத் தலைவருக்கு அதிகாரம் இல்லை. அவரை மாற்ற வேண்டும் என்று சொன்னால் கூட, அதற்காக வருவாய்த் துறையை நாடவேண்டியிருக்கிறது. எந்த விதமான நடவடிக்கையையும் எடுக்க முடியாத ** ** நிலையில் அந்தத் துறை இருப்பதால் அந்தத் துறையை தனித் துறையாக மாற்ற அரசு முன் வருமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : * * என்கிற வார்த்தை அவைக்குறிப்பில் இருந்து நீக்கப்பெறவேண்டும் என்று ஆணையிடுகிறேன்.

Thiru L. ILAYAPERUMAL : It is a Parliamentary word.

Mr. SPEAKER : It is not necessary to be included in this question.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : தலைவர் அவர்களே, அந்தக் குறைகளைக் களைய வேண்டும் என்ற எண்ணத்தோடு தான் அரசு ஆராய்ந்து கொண்டு இருக்கிறது. ஐந்து குறிப்புரைகள் மீது முடிவு எடுக்கவேண்டியிருப்பதால், கூடிய விரைவில் அது பற்றி முடிவு எடுத்து, அரசு ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருச்சிராப்பள்ளி மத்திய சிறைச்சாலையைப் பார்வையிடல்.

*குறுகிய கால வினா எண். 6—திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சட்டப் பேரவையின் 1980 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தியக் கூட்டம் முடிந்தபின் கனம் அமைச்சர் அவர்கள் சில சட்டப் பேரவை உறுப்பினர்களுடன் திருச்சி மத்திய சிறைச்சாலையை பார்வையிடுவதற்காக சென்றதுண்டா?

(ஆ) அது சமயம் சிறைக்கைதிகளிடம் இருந்து பெற்ற பிரதான கோரிக்கைகள் என்ன?

(இ) அந்த கோரிக்கைகள் மீது எடுத்த நடவடிக்கைகள் யாவை?

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

கோரிக்கை ஏற்பட்டிருக்கிறது. மத்திய அரசின் 7-வது பினான்ஸ் கமிஷன் நிதி ஒதுக்கீடு கிடைத்தவுடன் அதை செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ரா. உமாநாத்: தலைவரவர்களே, சிறைச்சாலைக்கு சென்ற போது கூடவே அமைச்சரிடம் சாட்சியம் கூறுவதற்கு அங்கு இருக்கக்கூடிய கைதிகள் முதலில் அஞ்சினார்கள்: தாராளமாக நீங்கள் சொல்லலாம். உங்கள் மீது எந்தவிதமான பழிவாங்கலும் வராது என்று அமைச்சர் கொடுத்த உத்தரவாதத்தின்மீது அவர்கள் சாட்சியம் அளித்தது அமைச்சருக்குத் தெரியும். உண்டிமுத்து உட்பட பலர் சாட்சியம் சொன்னார்கள். அதன் பிறகு உண்டிமுத்து உட்பட 12 பேர்களை கடலூர் சிறைக்கு மாற்றி, அவர்களை இன்டர்வியூ கூட காண முடியாத அளவுக்கு பழிவாங்கப்பட்டிருப்பது அமைச்சருக்குத் தெரியுமா? தெரியும் என்றால் அது அமைச்சருடைய பொசிஷனையே கொஸ்டின் பண்ணுவதாக இருக்கிறது. அப்படி பழிவாங்கியவர்கள்மீது என்ன நடவடிக்கை? அந்த கைதிகள் மீண்டும் மாற்றப்பட நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கி. பொன்னையன்: தலைவரவர்களே, சிறையிலே உள்ள கைதிகள் சில சலுகைகளை அளிக்க வேண்டுமென்று கோரிக்கை கொடுத்ததினால் பழி வாங்கும் எண்ணத்தோடு அவர்கள் மாற்றம் செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதில் எந்த அளவுக்கு ஆதாரம் இருக்கிறது என்று தெரியவில்லை. ஏற்கனவே திரு. கருப்பையா அவர்கள் மூன்று கைதிகளின் பெயர்களைச் சொல்லி, அவர்கள் கடலூருக்கு மாற்றப்பட்டிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதுபற்றி தகவல் கேட்டிருக்கிறேன். அந்த தகவல் வந்தவுடன், பழிவாங்கும் எண்ணத்துடன் அவர்கள் மாற்றப்பட்டிருக்கிறார்கள் என்றால் நிச்சயமாக சம்பந்தப்பட்டவர்கள்மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு இரா. கருப்பையா: தலைவரவர்களே. மாண்புமிகு அமைச்சரவர்களும் சில சட்டமன்ற உறுப்பினர்களும் சென்றிருந்தபோது சில கைதிகள் அவர்களிடம் முறையீடு செய்தார்கள் என்பதற்காக நாகப்பன் சாம்பசிவம் பொன்னையன் மற்றும் 9 பேர்கள் மாற்றம் செய்யப்பட்டிருக்கிறார்கள். பழிவாங்கும் நடவடிக்கையாக அவர்கள் அப்படி மாற்றப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, அவர்களை மீண்டும் அவர்களுடைய சொந்த ஊருக்கு பக்கத்தில் இருக்கிற திருச்சி சிறைக்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நடவடிக்கை எடுப்பதாகச் சொல்லி விட்டார்கள்.

1981 பிப்ரவரி 9]

**திரு. ப. நெடுமாறன்** : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் திருச்சி சிறைக்குச் சென்றபோது அங்குள்ள சிறைக் கைதிகள் சொன்ன பல்வேறு புகார்களில் 1979 ஆம் ஆண்டு இரண்டு கைதிகள் அந்தச் சிறையிலே இறந்து போனதைப்பற்றிய புகாரும் அடங்கும். ஆகவே அதன்மீது ஏற்கெனவே அமைக்கப்பட்ட முருகேஷன் கமிஷன் அளித்துள்ள ரிப்போர்ட் என்ன ஆயிற்று? அந்த ரிப்போர்ட்டின் மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? அந்த ரிப்போர்ட்டை இந்த அவையிலே வைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்** : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பியிருக்கின்ற பிரச்சினை பற்றியும் சிறைக்கைதிகள் எழுப்பினார்கள். அந்தக் கமிஷனின் அறிக்கை வந்திருக்கின்றது. அரசு அதைப் பரிசீலித்துக்கொண்டிருக்கிறது. அது அவையில் அவசியம் வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. என். கிட்டப்பா** : தலைவரவர்களே, பொதுவாக மத்திய சிறைச்சாலைகளில் இருக்கின்ற கைதிகளை இந்த சட்டமன்றப்பேரவையின் உறுப்பினர்கள் சந்தித்து அவர்களுடைய குறைபாடுகளைக் கேட்டறிவதற்கு அனுமதிக்கப்படுகிறார்களா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்**: தலைவரவர்களே, சிறை விதிகளுக்கு உட்பட்டு கைதிகளின் உறவினர்களும், நண்பர்களும், வழக்கறிஞர்களும் கண்டிப்பாகக் கைதிகளைச் சென்று பார்க்கலாம். அவர்களுடைய பிரச்சினைகளைக் கேட்கலாம். பேரவை உறுப்பினர்களுக்கு என்று தனியான விதிமுறைகள் இல்லை. அவர்கள் சென்று பார்க்கவேண்டும் என்று விரும்பினால் குறிப்பிட்ட விதிமுறைகளுக்குட்பட்டு அவர்களுக்கு அனுமதி வழங்கப்படும்.

**திரு. எம். சின்னசாமி** : தலைவரவர்களே, திருச்சி சிறைக்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் சென்று பார்வையிட்டபோது சட்டமன்ற உறுப்பினர்களையும் அழைத்துக்கொண்டு சென்றிருந்தார். இதுபோன்று தமிழ்நாட்டிலுள்ள மற்ற சிறைச்சாலைகளுக்குச் செல்கின்றபோதும் சட்டமன்ற உறுப்பினர்களை அழைத்துச் செல்கின்ற வகையில் ஆவன செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்** : தலைவரவர்களே, திருச்சி சிறைச்சாலையைப் பார்வையிட நான் சென்றபோது வழக்கமாக என்னுடன் சட்டமன்ற உறுப்பினர்கள் கட்சி பேதமின்றி வந்து இருக்கிறார்கள். அது தொடர்ந்து கடைப்பிடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1981 பிப்ரவரி 9

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம் : தலைவரவர்களே, சட்டமன்றத்திலே சிறைச்சாலை பற்றிய பிரச்சினைகளைக் கிளப்பியபோது மாண்புமிகு அமைச்சரவர்கள் விசாரணை நடத்தப்பட்டு வருவதாகச் சொன்னார்கள். ஆனால் விசாரணைக்காகச் சென்றிருந்தபோது அமைச்சரவர்களின் முன்னிலையிலேயே கைதிகள் விவரங்களை சொல்லக்கூடாது என்று மேலதிகாரிகளால் மிரட்டப்பட்டதை அமைச்சரவர்கள் பார்த்தார்கள். ஆகவே அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது? இப்படி மிரட்டுகின்றவர்கள் மீது சரியான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, நான் சிறைக்கு விசாரணைக்காகச் சென்றபோது மாண்புமிகு உறுப்பினர் திரு. சொர்ணம் அவர்கள் என்னுடன் வரவில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் தான் வந்திருந்தார். ஆகவே அங்கே கைதிகள் என்ன சொன்னார்கள், அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்பது மாண்புமிகு திரு. உமாநாத் அவர்களுக்குத் தெரியும். எங்கள் எதிரிலேயே கைதிகளை அதிகாரிகள் எதுவும் சொல்லவில்லை. அங்குள்ள பிரச்சினைகள் பற்றி கைதிகளிடம் ரகசியமாகக் கேட்டறிந்தோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. ஒத்திவைப்புத் தீர்மானம்.

பாண்டி பஜார் காவல் நிலையத்தில் ஒருவருக்கு ஏற்பட்ட மரணம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் சோ. அழகர்சாமி, இரா. கருப்பையா, எம். ஆறுமுகம், இ.கா. நல்லப்பன், செ. சிவசாமி, டாக்டர் கே. சௌரிராஜன், என்.எஸ்.வி. சித்தன், ப. பொன்னுரங்கம், து. புருஷோத்தமன், அ. ரகுமான்கான், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம் ஆகியோர் சென்னை பாண்டிபஜார் காவல் நிலையத்தில் நித்யானந்தம் என்ற வாலிபர் மர்மமான முறையில் மரணமடைந்துள்ளதால் எழுந்துள்ள பதட்ட நிலை குறித்து ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து அவர்களுள் ஒருவர் திரு. சோ. அழகர்சாமி அவர்கள் மிகச் சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

1981 பிப்ரவரி 9]

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவரவர்களே, பாண்டி பஜாரிலே நடந்த சம்பவத்தின் தொடர்பாக கடந்த இரண்டு தினங்களாக அங்குள்ள பல கடைகள் மூடப்பட்டு அங்கே பெரும் பரப்பரப்பாக இருக்கின்றது. இறந்துவிட்டதாகச் சொல்லப்படுகின்ற நபரை போலீஸ்சார்தான் விரட்டிச் சென்று அடித்துக்கொன்றதாகவும் அதனால் அங்குள்ள மக்கள் எல் லாம் காவல் நிலையத்திலே பெருங்கூட்டமாகக் கூடிய பிறகு பெரிய பரப்பரப்பு ஏற்பட்டிருக்கின்றது. இதைத் தொடர்ந்து பதட்டநிலை இன்னும் இருந்து வருகின்றது. ஆனால் பல இடங்களிலே இப்படிப் போலீசாரால் லாக் அப்பிற்கு கொண்டு செல்லப்படுகிறவர்கள் திடீரென்று இறந்துவிடுவதும் அதன் பிறகு அவர் தூக்கு போட்டுக்கொண்டு இறந்து விட்டார் என் றும் அல்லது தானாக இறந்துவிட்டார் என்றும் பல காரணங்கள் சொல்லப்படுவதுமான மிக மோசமான ஒரு நிலைமை தமிழகத் திலே இருந்து வருகின்றது. இப்படி போலீசார்களின் நட வடிக்கைகள் காரணமாக ஒரு பரப்பரப்பான நிலை ஏற்படு கின்றது என்பது மட்டுமல்ல, உயிருக்கே இப்படி எந்த நேரத் திலும் ஆபத்து ஏற்படும் என்ற அச்சத்தையே ஏற்படுத்தி இருக்கின்றன.

[முற்பகல் 10–20]

இவைகளையெல்லாம் ஒரு சீராக்க போலீசாருடைய நடை முறைகள் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று வரையறுப் போடு, இப்படி கைது செய்யப்பெற்ற நபர்கள் லாக்கப்பிற்கு கொண்டு செல்லப்படும் போது இப்படித்தான் நடத்தப்பெற வேண்டும் என்ற முறைகளை ஏற்படுத்தவும், அதை போலீசார் கடைபிடிக்கும் வழிகளில் சரியானபடி நடைமுறைக்கு கொண்டு வரவும், இனிமேல் இப்படிப்பட்ட பிரச்சினைகள் தமிழகத்தில் ஏற்படாதவாறு தடுப்பதற்கும் என்ன செய்ய வேண்டும் என்று பல உறுப்பினர்கள் இங்கே கருத்து தெரிவித்தால், அதன்மீது நடவடிக்கை எடுக்க உதவியாக இருக்கும் என்கிற வகையில், இது குறித்து விவாதிக்க அவையின் மற்ற அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

டாக்டர் கே. சௌரிராஜன் : மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, இந்தச் சம்பவம் நடந்தது என்னுடைய தொகுதி யிலேதான். 2 ஆம் தேதியன்று காலை 10-30 மணியளவில் மருத்துவமனைக்கு கிளம்பிக் கொண்டிருந்த என்னை, சிலர் ஓடி வந்து, மாம்பலம் ஆர்-1 காவல் நிலையத்தின் முன்பாக ஆயிரக் கணக்கான மக்கள் கூட்டமாக கூடி காவல் நிலையத்தை தாக்கு கிற நிலையும், அதனால் நிச்சயமாக கண்ணீர் புகைக் குண்டும், துப்பாக்கிப் பிரயோகமும் ஏற்படலாம் என்றும் கருதுவதால், உடனடியாக அத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் என்ற முறை யில் நான் அங்கு வந்து இவைகளைத் தடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டபடி, நான் அங்கேச் சென்று விசாரித்த போது,

[டாக்டர் கே. செளரிராஜன்] [1981 பிப்ரவரி 9

நித்தியானந்தம் என்கிற 18 முதல் 20 வயது வரை இருப்பான் அந்தப் பையன் என்னுடைய தொகுதியிலே வசிப்பவன். அவனை குற்றப் பிரிவு இன்ஸ்பெக்டர் அவர்கள் விசாரணைக்காக, பாண்டி பஜார் காவல் நிலையத்திற்கு, ஆர்-3 லிமிட்டிலிருந்து கொண்டு சென்றிருக்கிறார். அசோக் நகரத்திலிருந்து அவனை துரத்திப் பிடித்து வந்தார்கள் என்பது நான் கேள்விப்பட்ட மற்றொரு விஷயம். அப்படி விசாரணைக்காக பிடித்து வரப்பெற்ற அவனை கடுமையான அளவு அங்கே துன்புறுத்தியதன் காரணமாகத்தான் அவன் இறந்து விட்டதாகவும், உடனடியாக அவனை அந்த இரவே மருத்துவ மனைக்கு எடுத்துச் சென்று அங்கே உள்ள டாக்டர்கள் அவன் இறந்து விட்டான் என்று அறிவித்தவுடன், பதறி துடித்து, அன்று இரவே அவனுடைய வீட்டிற்குச் சென்று, அவனுடைய தாய், தகப்பனைப் பார்த்து, என்னுடைய பையனுக்கு ஏற்கெனவே காக்காய் வலிப்பு இருந்தது என்றும், அவனுடை விரை வீங்கியிருந்தது என்றும் பொய்யான ஒரு ஸ்டேட்மெண்டையும் காவல் பிரிவைச் சேர்ந்தவர்கள் பெற்றுக் கொண்டார்கள் என்றும் மக்கள் கூறினார்கள்.

அந்தக் கூட்டம் அடங்காமலிருந்த காரணத்தாலும், அதன் விளைவாக மாபெரும் கலகம் உருவாகும் என்ற காரணத்தாலும், நான் உடனடியாக சென்று அந்தப் பையனின் பிரேதம் ஜெனரல் ஆஸ்பத்திரியில்தான் இருக்கிறது, இங்கே போலீஸ் ஸ்டேஷனில் இல்லை என்றும் எடுத்துச் சொல்லி, அசிஸ்டெண்ட் கமிஷனர், டெபுடி கமிஷனர் முதலியோரை வரவழைத்து, அவர்கள் மூலமாக கூட்டத்திற்கும் எடுத்துச் சொல்லச் செய்தேன். நிச்சயமாக நீதி விசாரணை நடைபெறும், கலெக்டருடைய நேர்முக உதவியாளர் கள், ஆர்.டி.ஓ. ரேங்கில் உள்ளவர்களால் விசாரணை நடத்தப் பெற்று, குற்றவாளிகள் நிச்சயமாக தண்டிக்கப்படுவார்கள் என்று போலீஸ் அதிகாரிகளை வைத்து மக்களுக்குச் சொல்லச் செய்த பின்புதான், கூட்டம் ஒருவாறாக கலைந்தது. ஆனால் இப்படிப் பட்ட தடுப்பு முறைகள் எடுக்கப்பெறாமல் இருந்திருந்தால், ஒரு போலீஸ் நிலையம் எரிந்திருக்கும், தடியடி, கண்ணீர் பிரயோகம் லத்திப் பிரயோகம் முதலியவை நடைபெற்றிருக்கும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

நான் ஒன்று கேட்க விரும்புகிறேன். இந்த 20 ஆம் நூற் றாண்டில் கொலை செய்தவனுக்குக் கூட தூக்குத் தண்டனை தரக் கூடாது என்று இந்தச் சட்டமன்றத்தில் உத்தரவு நிறை வேற்றியிருக்கும் போது, உலகம் பூராவும் அது ஒரு பிரச்னையாக பேசி அலசப்படும்போது, Capital Punishment must be abolished என்றுசொல்லப்படும் போது காவல் துறையினரே விசாரணைக்குக் கொண்டு வந்த கைதிக்கு கொலை தண்டனை அளிப்பது என்பது எப்படி நியாயம்? அதை எப்படி இந்த நாடு பொறுத்துக் கொள்ளும்? நாம் 20 ஆம் நூற்றாண்டில் தான் இருக்கிறோமா அல்லது காட்டு மிராண்டிகள் காலத்தில் வாழ்ந்துக் கொண்டு இருக்கிறோமா என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும் ......

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொலை செய்தவனுக்குத் தூக்கு தண்டனை வழங்கப் பெறக் கூடாது என்பது நீதி மன்றத்தில் வழங்கப் பெற்ற உத்தரவாக இருக்கலாம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதை சட்டமன்றத்தில் நிறைவேற்றிய உத்தரவு என்று தவறுதலாக சொல்லிவிட்டார்.

டாக்டர் கே. சௌரிராஜன் : நீதிமன்றத்தில் வெளியான உத்தரவின் மீது சட்டமன்றத்திலும் விவாதம் நடைபெற்றது. அப்படி. அது உலகம் பூராவும் பேசப்பட்ட பிரச்னை. 20 கொலை செய்துவிட்ட ஒருவன் 21-வது கொலை செய்தபோது தான், கையும் மெய்யுமாக மாட்டிக் கொண்டுவிட்ட காரணத்தால் பிடிபட்டு, தூக்கு தண்டனை அளிக்கப்பட்டான்.

அந்தக் கொலையாளி நீதிபதியைப் பார்த்து சிரித்தானாம். ஏன் நீ சிரிக்கிறாய் என்று நீதிபதி கேட்டாராம். நான் இருபது கொலைகள் முன்பே செய்திருக்கிறேன், அதற்கு வேறு நபர்களை நீங்கள் தூக்கிலிட்டு விட்டீர்கள், 21-வது கொலைக்குத் தான் எனக்கு தண்டனை தருகிறீர்கள், ஆகவே நீங்கள் தான் பெரிய கொலையாளி என்று அவன் நீதிபதியைப் பார்த்து சிரித்தானாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பிரச்னைக்கு வாருங்கள்.

டாக்டர் கே. சௌரிராஜன் : ஆக, தமிழ்நாட்டில் சட்டம்-ஒழுங்கு கெட்டு, இங்கே போலீஸ் ஆட்சி நடக்கிறதா அல்லது மக்கள் ஆட்சி நடக்கிறதா என்று மக்கள் சிந்தித்துக் கொண்டு இருக்கிறார்கள். ஆக, இன்று படித்தவர்களிடையேயும் பட்டம் பெற்றவர்களிடையேயும் ஒரு பதட்டமான நிலைமை உருவாகிக் கொண்டிருக்கிறது. ஆகவே எனது ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி வழங்க வேண்டும் என்று தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : பேரவைத் தலைவர் அவர்களே, திருட்டு வழக்கு சம்பந்தமாக கைது செய்யப்பட்ட நித்யானந்தம் என்பவர் போலீஸ் லாக்கப்பில் இறந்திருக்கிறார். போலீஸ் தரப்பிலிருந்து சொல்லப்படுகிற வாதம், அவர் காக்காய் வலிப்பு காரணமாக இயற்கையாக இறந்து போனார் என்பதாகும். ஆனால் எனக்கு தரப்பட்டிருக்கிற தகவல் அவருக்கு காக்காய் வலிப்பு கிடையாது, உடல் ஆரோக்கியமாகத்தான் இருந்தார் என்று சொல்லப்படுகிறது. அங்கே விசாரணையின் போது காவலில் இருக்கும் போது அடித்துக் கொல்லப்பட்டிருக்கிறார் என்ற தகவல் தந்திருக்கிறார்கள். அந்தத் தகவல்படி அவர் அடித்துக் கொல்லப்பட்ட பிறகு பிரேத விசாரணைக்கு ஆஸ்

பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டிருக்கிறார். எந்தக் காரில் கொண்டு போனார்கள் அதன் நெம்பர் என்னவென்று விபரங்கள் தெரியவில்லை. மெடிக்கல் சர்டிபிக்கெட்டு காலதாமதமாக தரப் பட்டிருக்கிறது. இவைகள் எல்லாம் போலீஸ் சொல்கிற தகவல் களுக்கு முரணானதாக இருக்கின்றன. அது மட்டுமல்ல, நித்யானந்தத்தோடு ப்ரேம்குமார் என்று ஒருவர் கைது செய்யப் பட்டார். கைது செய்யப்பட்டு காவல் நிலையத்திற்கு அழைத் துச் செல்லப்பட்டிருக்கிறார். அவர் என்ன ஆனார் என்ற தகவல் தெரியாமல் இருக்கிறது. நித்யானந்தத்திற்கு ஏற்பட்ட கதிதான் அவருக்கும் ஏற்பட்டதா என்ற விவரங்கள் தெரியவில்லை என்ற தகவல் கொடுக்கப்பட்டிருக்கிறது.

ஆகவே இவைகள் சம்பந்தமாக ஒரு நீதி விசாரணை வைத் தால்தான் அதைப் பற்றி முறைமையாகத் தெரிந்து கொள்ள முடியும். எனவே ஒரு ஜுடிஷியல் என்கொயரி, நீதிபதியைக் கொண்ட ஒரு நீதி விசாரணை இருக்க வேண்டும். டிப்பார்ட் மென்டல் என்கொயரி மூலம் இதில் உள்ள உண்மைகளை நாம் தெரிந்துகொள்ள முடியாது. அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி ஏற்பட்ட பிறகு போலீஸ் லாக்கப்பில் இது போன்ற பல சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றன. கம்பத் தில் முத்துசாமி, ராயபுரத்தில் இடும்பன், திருவொற்றியூரில் மணி, கும்பகோணத்தில் செல்வராஜ், கடலூரில் வாசு ............

மாண்புமிகு திரு. க. இராமச்சந்திரன் : வேறு எதையோ பேசிக் கொண்டிருக்கிறார், திரு. ரகுமான்கான்.

திரு. அ. ரகுமான்கான் : போலீஸ் லாக்கப்பில் இப்படி பலர் கொல்லப்பட்ட சூழ்நிலையில் இதற்காக நீதி விசாரணை போடப் படும் என்று முதல் அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தில் அறிவித்தார்கள். நித்யானந்தம் போலீஸ் காவலில் இருக்கும் போது இறந்திருக்கிறார். அடித்துக் கொல்லப்பட்டார் என்ற தகவல் உறுதியாகிக் கொண்டிருக்கும் போது இதற்கு ஒரு ஜுடிஷியல் என்கொயரி வேண்டும் என்று கேட்கிற போது இது போன்ற பல்வேறு சம்பவங்கள் நடைபெற்று நமது முதல மைச்சர் அவர்களால் ஒரு ஜுடிஷியல் என்கொயரி கமிஷன் போடப்படும் என்று சொல்லப்பட்ட பிறகும் கூட எதாவது கமிஷன் போட்டாலும் அது பற்றிய ரிப்போர்ட்டை இந்த மன்றத்தில் வைத்திருக்கிறார்களா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நித்தியானந்தம் பிரச் சினைபற்றி சொல்லுங்கள்.

திரு. அ. ரகுமான்கான் : ஆக, இது ஒரு கண்துடைப்பாகத் தான் இருக்கக் கூடும். ஏற்கனவே நீதி விசாரணை செய்த எந்த அறிக்கையும் இந்த மன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை. குற்றவாளி யாரும் கண்டு பிடிக்கப்பட வில்லை. அதன் மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை. எனவே இது ஒரு கண் துடைப்பு மாதிரி இருந்துவிடக் கூடாது.





அடுத்து, ஒரு நாயின் உயிர் கூட புனிதமானது தான்.
போலீஸார் குற்றவாளிகளை கைது செய்யலாம், விசாரிக்கலாம்.
வழக்கு போடலாம். நீதிமன்றத்தின் முன்னால் கொண்டுபோய்
நிறுத்த வேண்டும். அதோடு அவர்கள் வேலை முடிந்துவிடுகிறது.
குற்றவாளி என்று சொன்னாலும் தீர்ப்பு வழங்குகிற அதிகாரம்
கோர்ட்டுக்குத்தான் உண்டே தவிர போலீஸ் அதிகாரிகளுக்கு
அல்ல. இன்னும் சொல்லப்போனால் சட்டத்தைப் பாதுகாக்க
வேண்டிய போலீஸார் சட்டத்திற்கு விரோதமான காரியங்களில்
ஈடுபடுவார்களானால் அவர்கள் தங்கள் சொந்தப் பொறுப்பில்
தான் சட்ட விரோதமான காரியங்களில் ஈடுபடுகிறார் என்று
பொருள். அந்த அடிப்படையில்தான் கேரளாவில் ராஜன்
கொல்லப்பட்டு போலீஸார் மீது வழக்கு போடப்பட்டது. அந்த
அடிப்படையில்தான் டெல்லியில் சுந்தர்சிங் என்ற கொள்ளைக்
காரன் ஆற்றில் மூழ்கடிக்கப்பட்டு கொல்லப்பட்டார் என்று அந்த
போலீஸ் அதிகாரி தண்டிக்கப்பட்டார். செங்கனாங்குளத்தில்
11 பெண்கள் கற்பழிக்கப்பட்டார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாங்கள் வக்கீலுக்குப்
படித்தவர்கள். நித்யானந்தம் பிரச்சனைக்கு வாருங்கள்.

[முற்பகல் 10—30]

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, நித்தியானந்தம் போலீஸ் லாக்அப்பில் அடித்துக்
கொல்லப்பட்டான் என்பதற்கு ஏராளமான தகவல்கள் இருக்
கின்றன. இதுகுறித்து நீதி விசாரணை செய்யப்பட வேண்டும்.
அதைப்போலவே, பிரேம் குமார் கைது செய்யப்பட்டதற்குப்
பிறகு என்ன ஆனார் என்பது தெரியாத நிலை இருக்கின்
றது. ஆகவே, இதுகுறித்து நீதி விசாரணை ஒரு என்கொயரி
கமிஷன் போட வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இதுபற்றிய விவ
ரங்களை டாக்டர் சௌரி ராஜன் அவர்கள் சொல்லியிருப்ப
தால், அதையே மீண்டும் சொல்லி நேரத்தை வீணாக்க விரும்ப
வில்லை. ஆனால், ஒத்திவைப்பதற்கான காரணங்களைக் கூறு
கின்றபோது, ஒவ்வொரு தடவையும் போலீஸ் லாக்அப்பிலே
இருக்கின்ற போது, இறந்ததற்குப் பிறகு போலீஸ் தரப்பிலே
சொல்லப்படுகின்ற காரணம், 'காக்காய் வலிப்பு' தப்பி ஓடி
னான்' என்று கற்பனையான காரணங்களைக் கற்பிக்கின்
றார்கள். இன்னும் சொல்லப்போனால், போலீசாரால் கைது
செய்யப்பட்டால், மீண்டும் உயிரோடு திரும்பிவர முடியாத ஒரு
நிலைமை இருக்கிறது. அந்த அடிப்படையிலே பார்க்கும்போது
இதிலே, சம்பந்தப்பட்ட நபர்கள், கைது செய்யப்பட்டு அழைத்
துச் சென்ற பிறகுதான் இறந்திருக்கிறார்கள். ஆனால் போலீஸ்

தரப்பிலே தப்பி ஓடினான், கல் தடுக்கி விழுந்தான், இறந்தான் என்ற தவறான விவரங்கள் சொல்லப்படுகின்றது. ஆகவே, இதைப்பற்றி பரிபூரணமாக விசாரிக்க வேண்டி இருக்கின்ற முறையிலே, நாம் இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து பேச வேண்டியிருக்கின்றது. இன்னொன்று, போலீஸ் லாக் அப்பிலே யாராவது செத்தால், அவர்கள்மீதும் கூட 302 செக்ஷன்படி வழக்கு தொடரப்படும் என்று போலீஸ் மானியத்தின்மீது பேசுகின்றபோது முதலமைச்சர் அவர்கள் கொடுத்த வாக்குறுதிகளை அமல்படுத்துகின்ற வகையிலே, அதை வற்புறுத்துகின்ற நிலையிலே இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய அவசியம் காரணமாக, அதைப் பற்றி விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.எஸ்.வி. சித்தன் அவர்களும் இதுசம்பந்தமாக ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். ஆனால், அவர்கள் இப்போது இந்த அவையிலே இல்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள்

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே எதிர்க் கட்சிகளைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் இந்தச் சம்பவத்தைப் பற்றி பல்வேறு தகவல்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அரசின் சார்பில் எங்களுக்கு கிடைத்த தகவல்களை நான் முதலில் இம்மன்றத்திற்கு அளித்துவிட்டு, அதற்குப் பிறகு அவர்கள் எழுப்பிய ஒருசில பிரச்னைகளுக்கு என்னுடைய பதிலைத் தங்களுடைய அனுமதியோடு தர இருக்கிறேன்.

1981 ஜனவரி மாதத்தில் சென்னை தியாகராயநகரில் பல வீடுகளில் நடந்த கொள்ளைகளில் வெள்ளிப் பாத்திரங்கள், துணிகள் முதலியன திருட்டுப் போயின. இவைகுறித்து இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 457-வது மற்றும் 380-வது பிரிவுகளின்படி நான்கு வழக்குகள் பதியப்பட்டு புலனாய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

இக்கொள்ளை நடந்த இடங்களில் கிடைத்த கைரேகைகளை பரிசோதித்ததில், தியாகராயநகர், கெங்கு ரெட்டி ரோட்டில் குடியிருக்கும் முன் தண்டனை பெற்ற திரு நித்தியானந்தன் கைரேகையை ஒத்திருந்தது. ஆகவே, இவரைப் பிடிக்க சென்னை பாண்டி பஜார் காவல் நிலைய காவல் துறை துணை ஆய்வாளர் திரு. நந்தகுமார், துப்பறியும் ஆய்வாளர் திரு. சண்முகம், தலைமைக் காவலர்கள் மாதவன், குணசேகரன், காவலர்கள் அனந்தகிருஷ்ணன், தங்கவேலு ஆகியோர் அடங்கிய பார்டி ஒன்று அமைக்கப்பட்டது.





திரு. நித்தியானந்தம் அசோக் நகர் பக்கம் காணப்பட்டதாயும், அவர் ஜாபர்கான்பேட்டைக்கு மதுவருந்த வரக்கூடுமென்றும் அன்று மாலை 3-00 மணிக்கு தகவல் கிடைக்கப்பெற்று, இவர்கள் 2—2—1981 மாலை 5-00 மணி அளவில் சென்னை அசோக் நகர் 11-வது அவின்யூ ரோட்டில் சென்று கொண்டிருந்தபோது, எதிர்திசையிலிருந்து திரு. நித்தியானந்தம் வருவதைக் கண்டனர். காவல் துறையினர் பார்டியைக் கண்டவுடன் நித்தியானந்தம் திரும்பி ஓடினார். அவரைக் காவல் துறையினர் ஓடிப் பிடித்தபோது, ஓடிக் கொண்டிருந்த நித்தியானந்தம் சாலை சமமாக இல்லாததால், கீழே விழுந்து பிறகு எழுந்து ஓடினார். அப்போது அவரை காவல் துறையினர் சுற்றி வளைத்துக் கொண்டபோது கீழே விழுந்தார். காவல் துறையினர் பிடித்துக் கொண்டனர். சிறிது நேரம் வலிப்பு ஏற்பட்டு சுயநினைவை இழந்தார். அவர் வலிப்பு நோயால் கஷ்டப்படுகிறார் என்று, அவ்வழியே சென்ற திருவாளர்கள் குருசாமி, ரமேஷ்சந்திரன் ஆகியோரின் உதவியுடன் நித்தியானந்தத்திற்கு முதலுதவி செய்து, அவ்வழியே வந்த எம்.எஸ்.எஸ். 4450 எண் காரில் பொது மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லப்பட்டார்.

மேல் விசாரணைக்கு, முதல் தகவல் அறிக்கை, நிர்வாக மாஜிஸ்ட்ரேட்டுக்கு அனுப்பப்பட்டது. அன்று மாலை 6-00 மணியளவில் பொது மருத்துவமனை அவசர சிகிச்சை மருத்துவ அதிகாரி முன்பு நித்தியானந்தத்தை ஆஜர் செய்தபோது, அவர் இறந்துவிட்டதாக மருத்துவ அதிகாரி அறிவித்தார். இது குறித்து அசோக் நகர் காவல் நிலைய கு.எ. 208/81-இல் பாண்டி பஜார் காவல் நிலைய துணை ஆய்வாளர் நந்தகுமார் கொடுத்த புகாரின் மீது குற்ற விசாரணை முறைச் சட்டத்தின் 174-வது பிரிவின்படி வழக்கு பதியப்பட்டது.

நித்தியானந்தத்தின் உடல் பொது மருத்துவ சவகிடங்கிற்கு எடுத்துச் செல்லப்பட்டது. சென்னை மாவட்ட ஆட்சியாளரின் நேர்முக உதவியாளரான முதல் வகுப்பு நிர்வாக மாஜிஸ்ட்ரேட் பிரேத விசாரணை செய்தார். சவப் பரிசோதனை செய்த டாக்டர் நித்தியானந்தத்திற்கு உடலில் காணப்பட்ட பல ரத்தம் கட்டிய காயங்களின் மொத்த விளைவினால் மரணம் ஏற்பட்டிருக்கக்கூடும் என்று கருத்துத் தெரிவித்துள்ளதாயும், விசாராவை ( viscera ) பரிசோதனைக்கு அனுப்ப எடுத்து வைக்கப்பட்டிருப்பதாயும் இச்சம்பவம் குறித்து காவல்துறை நிலையாணை 145-ன்படி மாஜிஸ்டிரேட் விசாரணையொன்று சென்னை மாவட்ட கூடுதல் நிர்வாக மாஜிஸ்ட்ரேட் தான் செய்வதாயும் தெரிவித்துள்ளார். பிரேத விசாரணை அறிக்கையும் சவப்பரிசோதனை முடிவும் மாஜிஸ்ட்ரேட் விசாரணை அறிக்கையும் இன்னும் அரசுக்குக் கிடைக்கவில்லை. இவை கிடைத்த பின்பே முழு விவரமும் தெரியவரும். இப்பொழுது நிலைமை அமைதியாகவே உள்ளது.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் சௌரிராஜன் அவர்கள் பேசுகிறபோது இந்தச் சம்பவம் சுமார் காலை 10-30 மணிக்கு நடந்தது என்ற அளவில் குறிப்பிட்டார்கள். எனக்குக் கிடைத்த தகவல் மாலை 5 மணி என்று இருக்கிறது. அதேபோல் அவர்களே பேசுகிறபோது எடுத்துச் சொன்னது போல், கலெக்டர் அவர்களின் பி.ஏ. இது குறித்து தீர்க்கமாக விசாரிக்க வேண்டுமென்று சொன்னதுபோல், பொதுமக்களும் கேட்டுக் கொண்டது போல் அந்த விசாரணையை நடத்தி வருகிறார். முழுத் தகவலும் இன்னும் கிடைக்கவில்லை. அந்த விசாரணை முடிந்து தகவல் நமக்குக் கிடைக்குமாயின் எந்தவிதமான தயவு தாட்சண்யமும் இல்லாமல் தவறு இழைத்தவர்கள் மீது தக்க நடவடிக்கை அரசு எடுக்கும் என்று கூறி, இப்போது அமைதியான சூழ்நிலை ஏற்பட்டிருக்கும் காரணத்தால் அவையை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டிய அவசியமில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை இல்லையென்பதால் இதற்கு இசைவு மறுக்கப் பெறுகிறது.

## 3. கவன ஈர்ப்புகள்.

### (அ) மேட்டுப்பாளையம் ரோடில் சாராயக் கடத்தல் கார் ஏறி காவல்துறை அதிகாரி மரணமடைந்துள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் எம். ஆறுமுகம், மு. அப்பாதுரை ஆகியோர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த ஓர் நிகழ்வினைக் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் மாண்புமிகு முதலமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. எம். ஆறுமுகம் : தலைவர் அவர்களே, 'கோயம்புத்தூர் மாவட்டம் அன்னூர்-மேட்டுப்பாளையம் சாலையில் சாராயம் கடத்திய காரை சோதனை போட முயன்ற காவல்துறை அதிகாரி கொல்லப்பட்டது குறித்த' அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைமுன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.—





அறிக்கை.

அரசுக்குக் கிடைத்த தகவலின்படி மேட்டுப்பாளையம் போக்குவரத்து காவல் பிரிவைச் சேர்ந்த இருப்பு சார் ஆய்வாளர் (ரிசர்வ் சப்-இன்ஸ்பெக்டர்) அப்துல் குத்தாஸ் 27—1—1981 அன்று இரவு மேட்டுப்பாளையம்—அன்னூர் சாலையில் காவலர் (போலீஸ் கான்ஸ்டபில் 561) ஒருவருடன் போக்குவரத்துச் சோதனை செய்து கொண்டிருந்தார். அவர்கள் ஒரு டாக்ஸியில் (எம். டி. பி. 1227) இச் சோதனைக்கென சென்றார்கள். இரவு 2.00 மணிக்கு, அன்னூர் பக்கத்திலிருந்து மேட்டுப்பாளையத்தை நோக்கி செல்லும் அம்பாஸிடர் கார் (எம். டி. எப். 2447) ஒன்று வந்தது. இருப்பு சார் ஆய்வாளர் (ரிசர்வ் சப் இன்ஸ்பெக்டர்) காரை நிறுத்தச் சொல்லிச் சைகை செய்தார். முதலில் மெதுவாக வந்து இருப்பு சார் ஆய்வாளர் (ரிசர்வ் சப் இன்ஸ்பெக்டர்) அருகில் வந்ததும் அவரைக் கொல்லும் நோக்கத்துடன் அவர் மீது மோதி விட்டுத் தப்பித்துப் போய்விட்டது. இருப்பு சார் ஆய்வாளர் (ரிசர்வ் சப் இன்ஸ்பெக்டர்)-ஐ மோதிய பிறகு 30அடி தூரத்திற்கு அவரை இழுத்துக் கொண்டு மிகுந்த வேகத்துடன் அக்கார் சென்றது. பிறகு ஒரு மரத்தின் மீது மோதி கார் நின்று விட்டது. கார் டிரைவரும், காரிலிருந்த இருவரும் காரை விட்டு விட்டு மறைந்து விட்டனர். அப்படி மறைகின்ற அவர்களை டாக்சி ஓட்டுனர் பார்த்தார்.

2. காயமுற்ற இருப்பு சார் ஆய்வாளரை (ரிசர்வ் சப் இன்ஸ்பெக்டர்) மேட்டுப்பாளையம் அரசாங்க மருத்துவமனைக்கு மேற்படி டாக்ஸி டிரைவர் உதவியுடனும் சம்பத் குமார் என்ற பெயருள்ள வேறொருவர் உதவியுடனும், மேற்படி காவலர் 561 (போலீஸ் கான்ஸ்டேபில்) டாக்ஸியில் எடுத்துச் சென்றார். இரவு 2.20 மணிக்கு இருப்பு சார் ஆய்வாளர் (ரிசர்வ் சப்-இன்ஸ்பெக்டர்) திரு. அப்துல் குத்தாஸ் இறந்து விட்டதாக மருத்துவ அதிகாரி அறிவித்தார். இ. பி. கோ. 34, 302 ஆம் பிரிவின் கீழும், தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டம் 4 (1) (எ) ஆம் பிரிவின் கீழும் காரமடை காவல் நிலயத்தில் குற்ற வழக்கு (எண். 10/81) ஒன்று பதிவு செய்யப்பட்டு புலன் விசாரணை செய்யப்பட்டது. 28—1—1981 அன்று காலை 4.00 மணிக்கு குற்றவாளி என்ற சுப்பிரமணி என்பவரை மேட்டுப்பாளையம் ஆய்வாளர் (இன்ஸ்பெக்டர்) கைது செய்தார்.

3. ஏழு சாக்கு மூட்டைகளில் மறைத்து வைக்கப்பட்ட ரப்பர் குழாய்களில் 300 லிட்டர் சாராயம் (ஐ. டி. அராக்) அக்காரில் (எம். டி. எப். 2247) கடத்தப்பட்டது. ஊட்டியிலுள்ள அக்பர் அலி என்ற பெயருள்ள சாராயம் விற்பனை செய்யும் ஒருவரிடம்

சேர்ப்பதற்காக திருப்பூருக்கு அருகிலுள்ள காவிலிப்பாளையத்திலிருந்து கள்ளச் சாராயம் எடுத்துச் செல்லப்பட்டது என்று விசாரணையின் போது சுப்பிரமணியம் ஒத்துக் கொண்டார். வேறொரு குற்றவாளி முத்துசாமி 30—1—1981 அன்று இரவு 8.00 மணிக்கு திருப்பூரில் மேட்டுப்பாளையம் ஆய்வாளரால் (இன்ஸ்பெக்டர்) கைது செய்யப்பட்டார். குற்றவாளியான டிரைவர் மருதையன் திருப்பூர் உட்கோட்ட குற்றவியல் நீதிபதி (சப் டிவிஷனல் ஜுடிஷியல் மேஜிஸ்டிரேட்) முன்னர் 30—1—1981 அன்று காலை 11-30 மணிக்குச் சரணடைந்தார்.

4. காரை மிகவும் கவலைக் குறைவாகவும் அதிக விரைவாகவும் ஓட்டி கார்வத்துன்ற அதிகாரியை வேண்டுமென்றே கொல்லச் செய்தார் என்பது தெளிவாக புலன் விசாரணையில் புலப்பட்டது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

திரு. எம். ஆறுமுகம் : இங்கே வைக்கப்பட்டிருக்கக்கூடிய அறிக்கையில் சாராயத்தைக் கடத்தியவர்கள் யார் என்று சொல்லவில்லை. மேலும் திருப்பூரிலிருந்து சாராயம் குன்னூருக்குக் கடத்தப்பட்டதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. திருப்பூரிலிருந்து இந்தச் சாராயத்தைக் கடத்தியவர்கள் யார் என்று சொல்லவில்லை. திருப்பூரிலிருந்து அந்தச் சாராயத்தைக் கடத்தியவர்கள் யார், அந்தக் கார் யாருக்குச் சொந்தமானது என்பதைப் பற்றி அமைச்சர் அவர்கள் விளக்கவேண்டும். போலீஸ் இன்ஸ்பெக்டர் கொல்லப்பட்டிருப்பதால் அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய சாதாரண மக்களை எல்லாம் பிடித்து போலீசார் வழக்குகளைப் பதிவு செய்து கொண்டிருக்கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா ? இரண்டு நாட்களுக்கு முன்னால் கூட திருப்பூரில் கள்ளச் சாராயம் விற்கக்கூடிய வியாபாரி '' இங்கே கள்ளச் சாராயம் மொத்தமாகவும் சில்லரையாகவும் விற்கப்படும் '' என்று போர்டு போட்டு விற்கக்கூடிய நிலைமை இருக்கிறது.

[முற்பகல் 10-40]

அரசு கள்ளுக்கடைகளையும், சாராயக் கடைகளையும் திறந்து விடுவதற்கு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

* மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, இந்த வழக்கு சம்பந்தமாக யார் கடத்தினார்கள், யார் காரைத் தந்தார்கள், யார் அதற்கு உடந்தையாக இருந்தார்கள் என்பது எல்லாம் அவர்களுடைய இன்வெஸ்டிகேஷனிலே இருக்கிறது. ஆனால் இந்த அறிக்கையிலே சில விவரங்கள் தரப்பட்டு இருக்கின்றன. சுப்பிரமணி என்ற ஒருவர்



குற்றஞ் சாட்டப்பட்டுள்ளார். அதேபோல் ஊட்டியிலுள்ள அக்பர் அலி என்ற பெயருள்ள சாராயம் விற்பனை செய்யும் ஒருவரிடம் சேர்ப்பதற்காக திருப்பூருக்கு அருகிலுள்ள காவிலிப் பாளையத்திலிருந்து கள்ளச் சாராயம் எடுத்துச் செல்லப்பட்டது என்று விசாரணையின்போது சுப்பிரமணியம் ஒத்துக்கொண்டார். வேறொரு குற்றவாளி முத்துசாமி 30—1—1981 அன்று இரவு 3.00 மணிக்கு திருப்பூரில் மேட்டுப்பாளையம் ஆய்வாளரால் (இன்ஸ்பெக்டர்) கைது செய்யப்பட்டார். குற்றவாளியான டிரைவர் மருதையன் திருப்பூர் உட்கோட்ட குற்றவியல் நீதிபதி (சப்-டிவிஷனல் ஜுடிஷியல் மேஜிஸ்டிரேட்) முன்னர் 30-1-1981 அன்று காலை 11-30 மணிக்குச் சரணடைந்தார். இப்படி ஏற்கெனவே தரப்பட்ட விவரங்கள் இந்த அறிக்கையிலே தீவிரமாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அந்தப் பகுதியிலே கண்டவர்கள் மீது பட்டிருக்கின்றன.

வழக்குப் போட்டிருக்கிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அப்படி அவர்களுக்குத் தகவல் இருக்குமானால் அரசுக்கு அதை அனுப்பி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். யாரோ ஒருவர் கள்ளச் சாராயம் விற்கப்படும் என்ற போர்டே போட்டு விற்பதாகக் குறிப்பிட்டார்கள். கள்ளச் சாராயம் விற்பவர்கள் கூட அது நல்ல சாராயம் என்று தான் போர்டு போடுவார்களே தவிர கள்ளச் சாராயம் என்று போட்டு விற்க மாட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் சொல்வது சரியல்ல என்று கருதுகிறேன். மதுவிலக்கை ரத்து செய்ய வேண்டுமா வேண்டாமா என்ற கொள்கைப் பிரச்சினையை இதிலே எழுப்ப வேண்டியதில்லை.

திரு. மு. அப்பாதுரை : நம்முடைய அவையே காலையிலே வள்ளுவருடைய குறளை சொல்லித்தான் ஆரம்பிக்கப்படுகிறது.

'' நோய்நாடி, நோய்முதல் நாடி, அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல் ''

என்று சொன்னான் வள்ளுவன். அந்த அடிப்படையில் இந்த மாபெரும் கொலை நடைபெற்றதற்குக் காரணமே சாராயக் கடத்தல்தான். யாருக்கு அந்த சாராயம் கடத்தப்பட்டிருக்கிறது என்பதை குற்றவாளியே ஒத்துக்கொண்டு இருக்கிறார். அந்தக் கொலை நடைபெற்றதற்கு மூல காரணமாக இருந்த அக்பர் அலி என்ற சாராய வியாபாரி ஏன் கைது செய்யப்படவில்லை ? அவர் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : நான் ஏற்கனவே குறிப்பிட்டதைப் போல் ஒரு வழக்கு விசாரணையில் இருக்கிற போது அரசாங்கம் தலையிட்டு ஒன்றும் சொல்லக் கூடாது.

The case is under investigation என்று இருக்கிறபோது நீதிபதிகள் கூட அதிலே தலையிடமுடியாது என்பது சட்டம்.

(ஆ) வெள்ளக்கோவில் தொகுதியில் விசைத்தறிக் கூடங்கள் மூடப் பெற்றதால் தொழிலாளர்களுக்கு ஏற்பட்டுள்ள நிலை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருவாளர்கள் திருப்பூர் ஆர். மணிமாறன், இரா. தாமரைக்கனி ஆகியோர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த ஓர் நிகழ்வினைக் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருவார்.

திரு. ஆர். மணிமாறன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "வெள்ளக்கோவில் தொகுதியில் விசைத்தறி உரிமையாளர்களால் முன்னறிவிப்பின்றி விசைத்தறிக் கூடங்கள் மூடப்பட்டுவிட்டதால் 4,000 தொழிலாளர்கள் வேலையின்றி இருக்கும் நிலைமை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

பெரியார் மாவட்டம், வெள்ளக்கோவில் மற்றும் அதன் சுற்றுப் புறத்தில் சுமார் 400 விசைத்தறி கூடங்கள் உள்ளன. இவைகளில் சுமார் 2,500 விசைத் தறிகள் உள்ளன. அவற்றில் 4,000 தொழிலாளர்கள் வேலை செய்து வருகின்றனர். இவர்கள் பருத்தி கெஸ்மெண்ட் வகைகள் 2/17 மற்றும் 19 நூல்களைக் கொண்டு தயாரிப்பில் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் கரூரில் உள்ள ஜவுளி உற்பத்தியாளர்களுக்காக துணி உற்பத்தி செய்து வருகின்றனர். பொதுவாக, விசைத்தறி நெசவாளர்கள் ஜவுளி உற்பத்தியாளர்களிடமிருந்து சாயம் தோய்த்த நூலை விலைக்கு வாங்கி, பின் அவற்றை நெய்து தீர்ந்த சரக்குகளைத்





திரும்ப நூல் பெற்ற ஜவுளி உற்பத்தியாளர்களிடமே விற்று முதல் செய்து விடுகின்றனர். விசைத்தறி நெசவாளர்களும், ஜவுளி உற்பத்தி உரிமையாளர்களும் நெய்ய வேண்டிய ரகத்தைப் பற்றி உற்பத்தி துவங்குமுன், கூலி, சேதாரம் ஏனையவற்றினை பேசி நிர்ணயம் செய்து கொள்கின்றனர்.

ஆனால் தற்பொழுது விசைத்தறி நெசவாளர்கள், ஜவுளி உற்பத்தியாளர்களிடம் கீழ்க்கண்ட 7 கோரிக்கைகளை சமர்ப்பித்துள்ளனர் :—

(1) நல்ல தரமான எடை குறையாத நூல்களை தருதல் அல்லது நூல் எடைக்கு சரக்கை வரவு வைத்துக் கொள்ளுதல்;

(2) காய்ந்த நூல்களாகத் தருதல்;

(3) சரியான எடையுள்ள நூல் கட்டு ஒன்றுக்கு சேதாரம் 300 கிராம் தருதல்;

(4) தீபாவளி/பொங்கல் காலங்களில் தங்களால் வழங்கப்படும் போனஸ், கைத்தறியாளர்களை அனுசரித்து, விசைத்தறி உற்பத்தியைக் கருத்தில் கொண்டு, தறி ஒன்றுக்கும், ராட்டை ஒன்றுக்கும் சேர்த்து ரூ. 500 வழங்க கோருதல்;

(5) நூல் பில், ஜவுளி பில் உடனுக்குடன் கொடுத்தல்;

(6) கூலி உயர்வு தற்பொழுதுள்ள கூலியில் 50 சதவிகிதம் உயர்த்தி வழங்கக் கோருதல்; மற்றும்

(7) ஓடும் ரகத்தை மாற்றும்பொழுது, ஓடி எடுப்புக் கூலி கொடுக்க வேண்டும்.

இதே போல் கரூர் பகுதியில் உள்ள 150 விசைத்தறி உரிமையாளர்களும் இதே கோரிக்கைகளை வலியுறுத்தி வருகின்றனர். இதன் தொடர்பாக மேற்கண்ட இரு சாரார்களிடம் 21—1—1981 மற்றும் 22—1—1981-ல் பேச்சு வார்த்தை நடத்தியதில் 10 சதவிகிதம் கூலி உயர்வு தருவதாக ஜவுளி உற்பத்தியாளர்கள் ஒப்புக்கொண்டனர். ஆனால், விசைத்தறி நெசவாளர்கள் இதற்கு ஒப்புக் கொள்ளவில்லை. எனவே, விசைத்தறி நெசவாளர்கள் 25—1—1981-லிருந்து தங்களது விசைத்தறிகளில் உற்பத்தி செய்வதை நிறுத்தி வேலை நிறுத்தம் செய்துள்ளனர். இதனால் பெரியார் மற்றும் திருச்சி மாவட்டங்களில் உள்ள சுமார் 15,000 விசைத்தறி தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

விசைத்தறி நெசவாளர்களுக்கும், கரூர் ஜவுளி உற்பத்தியாளர்களுக்கும் ஏற்பட்டுள்ள இந்தத் தகராற்றில் தீர்வு காண்பதற்காக, கரூர் கோட்டாட்சித் தலைவர் தகுந்த நடவடிக்கை எடுத்து வருகிறார். அதோடு, ஈரோடு தொழிலாளர் துறை அலுவலரும் இருதரப்பினரையும் பேச்சு வார்த்தைக்கு அழைத்துள்ளார்.

திரு. ஆர். மணிமாறன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது பெரியார் மாவட்டத்திலே இருக்கிற வெள்ளக்கோவில் தொகுதியையும் திருச்சி மாவட்டத்திலே இருக்கிற ஒரு சில பகுதிகளையும் உள்ளடக்கியுள்ள தொழிலாளர்கள் பிரச்சினை. வெள்ளக்கோவில் தொகுதியிலே ஏறத்தாழ 4 ஆயிரம் தொழிலாளர்கள் இன்றைக்கு வேலையின்றி அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்ற அவல நிலை இருக்கிறது. அதைப்போல திருச்சி மாவட்டத்திலே 12 ஆயிரம் தொழிலாளர்கள் வேலையில்லாமல் இருக்கின்ற பரிதாபகரமான சூழ்நிலை இருக்கின்றது. ஒட்டு மொத்தமாக 16 ஆயிரம் விசைத்தறி தொழிலாளர்கள் வேலையின்றி தத்தளித்துக் கொண்டிருக்கின்ற அவலமான சூழ்நிலைக்கு அவர்கள் இன்றைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். விவர அறிக்கை இங்கே தரப்பட்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.

அந்தத் தொழிலாளர்கள் ஏழு அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து ஜவுளி உற்பத்தியாளர்களிடம் விடுத்திருக்கிறார்கள். ஆனால் இந்த விவர அறிக்கையில் சம்பளத்தில் 50 சதவிகிதம் உயர்த்த வேண்டுமென்ற, ஏழு அம்சக் கோரிக்கைகளில் ஒரு பகுதியாக இருக்கின்ற ஒரு கோரிக்கையைப் பற்றி மட்டும் சொல்லியிருக்கிறார்கள். இந்த விவர அறிக்கையில் அந்த ஒரு அம்சம் பற்றித்தான் காணப்படுகிறதே தவிர பாக்கியுள்ள ஆறு அம்சங்கள் என்னவாயிற்று? அதனுடைய நிலை என்ன? அதற்கு என்ன இறுதி முடிவு? அதிலும், 50 சதவீதம் உயர்வு கேட்டதற்கு 10 சதவீதம் கூலி உயர்வு தருவதாக ஜவுளி உற்பத்தியாளர்கள் சொல்லியிருக்கிறார்கள். அப்படியென்றால் அடுத்த 6 அம்சங்களுக்குண்டான நிலைமைகள் ஏதாவது தெரிகிறதா? கோட்டாட்சித் தலைவர் அவர்களும், தொழிலாளர் துறையைச் சேர்ந்த சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் நடவடிக்கை எடுத்து வருவதாகக் கூறப்பட்டுள்ளது; இந்த ஆறு அம்சங்களுக்கு உண்டான தெளிவு புலப்படுகிறதா? அதற்குண்டான அறிக்கைகளை ஜவுளி உற்பத்தியாளர்கள் தந்திருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மற்ற 6 கோரிக்கைகளைப் பொறுத்தவரையில் இங்கே ஒன்றும் தெரியவில்லை. பேச்சு





வார்த்தையில் கூலி உயர்வுக்கு மட்டும் கொடுத்திருப்பதால் மற்றவைகளைப்பற்றி வலியுறுத்தவில்லை என்று தெரிகிறது. எப்படியிருந்தாலும், விசைத்தறி நெசவாளர்களுக்கும், கரூர் ஜவுளி உற்பத்தியாளர்களுக்கும் ஏற்பட்டுள்ள இந்தத் தகராறில் தீர்வு காண்பதற்காக, கரூர் கோட்டாட்சித் தலைவர் தகுந்த நடவடிக்கை எடுத்து வருகிறார். அதோடு ஈரோடு தொழிலாளர் துறை அலுவலரும் இருதரப்பினரையும் பேச்சு வார்த்தைக்கு அழைத்துள்ளார்.

திரு. ஆர். மணிமாறன் : பேரவைத் துணைத் தலைவர்வர்
களே, இதிலே இருக்கின்ற அடிப்படை உணர்வே, மையக் கருத்தே
தொழிலாளர்களுக்கு முக்கியமாக நோட்டீஸ் தராமல், முன்னறி
விப்பு செய்யாமல் திடீரென்று அந்தத் தொழிற்கூடங்களை
இழுத்து மூடியிருக்கிறார்கள்; முன்னறிவிப்பு இல்லாமல் இப்
படிச் செய்வது சட்டப்படி நியாயமா? தர்மமா? பொதுவாக,
தொழிலாளர் பிரச்னை வரும்பொழுது அவர்களுக்கு முன்னறி
விப்பு கொடுத்த பிறகு அந்தக் கூடங்களை மூடவேண்டுமே தவிர,
நோட்டீஸ்—அறிக்கை கொடுக்காமல், அதைப்பற்றிய விவரங்
களை முன்கூட்டியே சொல்லாமல், கூடங்களை இழுத்து மூடுவது
சட்டத்திற்கு விரோதமான காரியம் இல்லையா? அப்படிச் சட்
டத்தை அவமதிக்கின்ற காரியத்தைச் செய்கின்ற அந்த உரிமை
யாளர்கள் மீது அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய
விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் துணைத்
தலைவரவர்களே, விசைத்தறிகளில் உற்பத்தி செய்பவர்கள்
வேலையை நிறுத்தியிருப்பதால் 15,000 தொழிலாளர்கள் பாதிக்
கப்பட்டிருக்கிறார்கள். அந்த விசைத்தறிகள் ஓடுவதை நிறுத்தி
யதற்குச் சட்டபூர்வமான நடவடிக்கை எடுப்பதற்கில்லை.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் துணைத் தலைவர
வர்களே, ஜவுளி வியாபாரிகளிடமும், விசைத்தறியாளர்களிடமும்
வேலை செய்கின்ற சுமார் 16,000 தொழிலாளர்கள் மிகவும்
பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் கொத்தடிமை மாதிரி
ரொம்ப சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குச்
சம்பளம் கொடுப்பதும் கிடையாது; சாப்பாடுதான் கொடுப்
பார்கள். இப்பொழுது அந்தச் சாப்பாட்டிற்கும் வழியில்லாமல்
பிச்சையெடுக்கக்கூடிய நிலையில் அவர்கள் இருப்பதால், கொத்
தடிமைகளுக்கு எப்படி அரசு புனர்வாழ்வு கொடுக்கிறதோ
அதைப்போல விசைத்தறிகளை அரசாங்கமே எடுத்து, நெச
வாளர் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக இந்த விசைத்தறி
களுக்கு நூல் கொடுத்து, அவர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்
குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** பேரவைத் துணைத் தலைவரவர்களே, அரசே எடுத்துக்கொள்கின்ற ஆலோசனை இப்பொழுது இல்லை. இந்தத் தொழிலாளர்களின் மேம்பாட்டிற்காக, நல்ல தொழிற்சங்கங்களை அமைத்து, அதன்மூலமாக அவர்கள் முறையிடுவார்களேயானால் அவர்களுடைய வாழ்க்கை முன்னேறுவதற்கு அது வழிவகை செய்யும்.

**திரு. இரா. தாமரைக்கனி :** பேரவைத் துணைத் தலைவரவர்களே, நாட்டிலுள்ள தொழிற்சங்கங்களின் மூலமாகத்தான் இவர்களுக்கு வேலைவாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. ஆகவே, தொழிற்சங்கங்களை ஒழுங்குபடுத்துவதற்கு ஏதாவது சட்டம் இயற்றவிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

(பதில் இல்லை.)

## 4. அரசினர் சட்ட முன்வடிவு.

**பச்சையப்பன் பொறுப்புக் கழக (நிர்வாகத்தை அரசு எடுத்துக் கொள்ளுதல்) சட்ட முன்வடிவு, 1981.**

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** துணைத் தலைவரவர்களே, 1981 ஆம் ஆண்டு பச்சையப்பன் பொறுப்புக் கழக (நிர்வாகத்தை அரசு எடுத்துக்கொள்ளுதல்) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

## 5. அமைச்சரவையின் கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானம்— விவாதம்.

[முற்பகல் 10–50]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அடுத்து, அமைச்சரவையின் தொழிலாளர் விரோதக் கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானம். திரு. ரா. உமாநாத்.

**திரு. ரா. உமாநாத் :** துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

> "மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களைத் தலைவராகக் கொண்ட தமிழக அரசின் தொழிலாளர் விரோதக் கொள்கையை இப்பேரவை கண்டிக்கிறது."

**திரு. என். வரதராஜன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு திரு. உமாநாத் அவர்கள் மொழிந்த கண்டனத் தீர்மானத்தை நான் வழிமொழிகிறேன்.





**திரு. ரா. உமாநாத் :** துணைத் தலைவர் அவர்களே, தமிழக அரசிற்குக் கடந்த காலத்தில் நெருக்கடி ஏற்பட்டபொழுது துணை நின்ற, தமிழக அரசு நிறைவேற்றிய, விவசாய ஆதரவு—பல சட்டங்களை மனதார ஆதரித்த, பாராட்டிய மார்க்சிஸ்ட், மற்ற தோழமைக் கட்சிகள் இந்தக் கண்டனத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். கொண்டு வந்திருக்கிறவர்களில் தோழமைக் கட்சிகள் உண்டு என்பதை அக்கறையோடும், கவலையோடும், அரசாங்கமும் சரி, ஆளுங்கட்சியைச் சார்ந்திருக்கக் கூடிய மாண்புமிகு உறுப்பினர்களும் கணக்கில் கொள்ள வேண்டுமென்று நான் முதலிலேயே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

நான் பேசுகிறபொழுது சில சந்தர்ப்பங்களில் வேகமாக இருக்கும். சில சந்தர்ப்பங்களில் வேதனையுடன் பேசுவேன், சில சந்தர்ப்பங்களில் ஹாஸ்யமாகவும் பேசுவேன். நான் பேசுவதனுடைய வடிவத்தை நீங்கள் கணக்கில் எடுக்க வேண்டாம். பேசுவதனுடைய உள்ளடக்கத்தை நீங்கள் கொஞ்சம் ஆழமாகச் சிந்தித்து, அரசாங்கத்தினுடைய கொள்கையில் தவறு இருக்கிறது, தொழிலாளர் வர்க்க விரோதம் இருக்கிறது என்று சொல்வதில் உண்மை இருக்கிறதா என்பதை நீங்கள் ஆழமாகச் சிந்திக்க வேண்டுமென்று சர்க்காரையும் சரி, ஆளுங்கட்சி உறுப்பினர்களையும் நான் கேட்டுக்கொள்கிறேன். அரசாங்கத்தின் தொழிலாளர் விரோதக் கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானம் கொண்டு வந்திருப்பதனால், மார்க்சிஸ்ட் கட்சி, ஏதோ சமுதாயத்தின், ஒரு பிரிவினரின் கூலி, பஞ்சப்படி போன்று இருக்கக்கூடிய பிரச்னைகளுக்காக மட்டும்தானிருக்கிறார்கள். ஆகவேதான் அதைப் பற்றி மட்டும் கொண்டு வருகிறார்கள் என்று நினைக்க வேண்டாம்.

அரசு தொழிலாளி வர்க்கத்தைத் தாக்குவது என்றால், இந்த நாட்டில் வளர்ந்து வரும் ஜனநாயகச் சக்தியைத் தாக்குவதாக நாங்கள் கருதுகிறோம். இந்த நாட்டிலே இருக்கக்கூடிய மோஸ்ட் அன் ஆர்கனைஸ்ட் இடதுசாரி சக்தியைத் தாக்குவதாக நாங்கள் கருதுகிறோம். இப்படி ஒரு இடதுசாரி சக்தியையும், ஜனநாயக சக்தியையும் தாக்குவது என்ற விளைவு கொண்டிருக்கக்கூடிய ஒரு கொள்கையானது, நிச்சயமாக இந்த நாட்டில் வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கக் கூடிய சர்வாதிகார சக்திக்கு, அந்தத் தாக்குதல் இந்தச் சக்தியை, வீக்கன் பண்ணுகிற பொழுது, சர்வாதிகார சக்திக்குத்தான் அது துணைபோகும் என்ற விளைவு ஏற்படும் என்பதால்தான் தொழிலாளி வர்க்கத்திற்கு எதிராக தமிழக அரசு தொடுத்திருக்கக்கூடிய அந்தத் தாக்குதலை எதிர்த்து, டிஃபென்ட் பண்ணக்கூடிய அந்தக் கடமையை, வெறும் தொழிற்சங்கக் கடமையாக நான் கருதவில்லை. நாங்கள் அந்த முக்கியமான, நாட்டினுடைய நலனைக் கருதி, தமிழக மக்களின் நலனை, எதிர்காலத்தைக் கருதி, ஒரு அரசியல் கடமையாகவே இந்தத் தீர்மானத்தை நாங்கள் கருதுகிறோம்.

[திரு. ரா. உமாநாத்] [1981 பிப்ரவரி 9

நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன் அரசின் கொள்கை முழுக்க முழுக்க தொழிலாளிகளுக்கு விரோதமாக இருந்தது. நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பின், சற்று பின்வாங்கி, நம்பிக்கைத் தரக்கூடிய சில நிலைமைகள் ஏற்பட்டன. சட்டசபைத் தேர்தலுக்குப் பின் சில முற்போக்கு நடவடிக்கைகளும் எடுத்தார்கள். ஆனால், பிறகு மைய அரசின் பொருளாதாரக் கொள்கையின் காரணமாக, ஏற்பட்டிருக்கக் கூடிய பொருளாதார நெருக்கடி முற்ற, விலைவாசிகள் ஏற, தொழிலாளிகள் போராட்டப் பாதையில் முன்னேற, அ.இ.அ.தி.மு.க. தலைமையும் இந்திரா காங்கிரசுடன் நெருங்க, மீண்டும் தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட கொள்கை ஒரு ரவுண்ட் வந்து, அது தொழிலாளி வர்க்க விரோதமாக அமைந்துள்ளது என்பதுதான் நான் கூறும் விஷயம்.

பி. அண்ட் சி. பிரச்னை ஒரு முக்கியமான பிரச்னையாகக் இன்றைக்கும் விளங்குகிறது. இன்னமும் மைய அரசு அமைச்சர் யாரோ வருவதாகப் பத்திரிகையில் இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னால் பார்த்து, அவர் வந்து, பேச்சு வார்த்தை நடத்தி, தீர்க்கப் போவதாக நாம் படித்தோம். அவர் வந்தார், அவர் பார்த்தார், அவர் போனார் என்று சொல்கிறமாதிரி, ஒன்றும் நடக்கவில்லை. இப்பொழுது அவர் வந்து என்ன சொல்லிவிட்டுப் போகிறார் என்று சொன்னால், மீண்டும் டெல்லியிலே பேச்சு வார்த்தைக்கு நான் ஏற்பாடு செய்கிறேன் என்று சொல்கிறார். நான் கேட்கிறேன், டெல்லியிலே பேச்சு வார்த்தை ஏற்பாடு செய்வதற்கு ஒரு மத்திய அமைச்சர் மெட்ராசுக்கு வந்துதான் டெல்லியிலே போய் ஏற்பாடு பண்ண வேண்டுமா? ஆகவே, நான் சொல்ல விரும்புவது என்னவென்றால், மைய அரசு வேண்டுமென்றே காலந்தாழ்த்தி வந்திருக்கிறது என்று நான் குற்றம் சாட்டுகிறேன். இப்படி இருக்க, நமது மாநில அரசு, பி. அண்ட் சி. மில்லை, மைய அரசு உடனே எடுத்து நடத்த வேண்டுமென்று இன்றைக்கும் போர்த்தரைட்டாக, பகிரங்கமாகச் சொல்லவில்லை, வற்புறுத்தவில்லையென்பதை இந்த அவையின் கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன். பி. அண்ட் சி. முதலாளிகளுடைய தேவை என்ன? வருஷத்திற்கு ரூ. 3½ கோடி மிச்சப்படுத்த வேண்டுமாம். அப்பொழுதுதான் மில்லை ஓட்டுவாராம். இன்றைக்கு 3,000 தொழிலாளிகளைத் தெருவில் நிறுத்த வேண்டுமாம். மீதம் உள்ளவர்கள் மீது, வேலைப் பளுவைச் சுமத்த வேண்டுமென்று அந்த முதலாளி சொல்கிறார்

திரு. எல். இளையபெருமாள் : பாயின் ஆப் ஆர்டர் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மிகவும் முக்கியமான தொழிலாளர் பிரச்சினை பற்றி பேசுகின்றபோது, தொழிலாளர் அமைச்சரும் இல்லை, முதல்வரும் இல்லை, அவை முன்னவரும் இல்லை. அவர்கள் இதைக் கேட்கவேண்டுமென்று நான் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தொழிலாளர் அமைச்சர் வந்துவிட்டார்.



[1981 பிப்ரவரி 9]

திரு. ரா. உமாநாத் : ஆகவே, முதலாளிகளின் தேவையான 3½ கோடி ரூபாயை மிச்சப்படுத்திக் கொடுத்துவிட்டால், அந்த மில்லை ஓட்டுவோம் என்று சொல்கிறார்கள். இதற்காக 3,000 தொழிலாளர்கள் தெருவில் நிற்க வேண்டுமா? மீதம் உள்ளவர்கள் மீது வேலை பளுவை சுமத்த வேண்டுமா ? அவர்கள் பெற்று வந்த ஊதியங்களை அவர்கள் கைவிட வேண்டுமா ? இவையெல்லாம் அந்த பி. அண்ட் சி. முதலாளியினுடைய கண் டிஷன். மில்லை ஓட்ட வேண்டுமென்றால், முதலாளியினுடைய இந்த கட்டுக்கோப்பிற்குள் நின்றுதான் மத்திய அரசு தொழி லாளர்களை நிர்ப்பந்தம் படுத்துகிறது என்று நான் சொல்கிறேன். யாரையும் வீட்டிற்கு அனுப்புவதை நாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்று தமிழக அரசு ஏன் சொல்லக்கூடாது என்று நான் கேட்க விரும்புகிறேன். அந்த முதலாளிகள் '' கேரண் டார்ஸ் கமிஷன் '' என்ற ஒன்றை கொடுத்து வருகிறார்கள். அது ஒரு கோடி ரூபாய் ; விற்பனை ஏஜெண்ட்களுக்கு கேரண்டி நிற்கிற ஆட்கள் தான் கேரண்டார்ஸ். முன்பு ஒரு காலத்திலே பாங்கிங் சிஸ்டம் இல்லாதபோது, அதாவது ஈஸ்ட் இந்தியா கம்பெனி இருந்த காலத்திலே மில் முதலாளிகளுக்கு கிராண்டி யாக நிற்பதற்கு ஒரு முக்கியமான பெரிய ஆள் தேவைப்பட்டது. அதற்காக கமிஷனும் கொடுக்கப்பட்டது. இப்போது தான் பாங்கிங் சிஸ்டம் நம்முடைய நாட்டிலே வந்துவிட்டதே. நமக்கு எதற்காக கேரண்டார். அந்த சிஸ்டத்தை ஒழித்தால் அதன் மூலம் 1 கோடி ரூபாய் மிச்சம் ஆகும் அல்லவா? ஆகவே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அந்த கேரண்டார் சிஸ் டத்தை ஒழிப்பதற்கு வற்புறுத்தக் கூடாதா?

இன்னொன்றை நான் இங்கே சொன்னால், ஆச்சரியப்படு வீர்கள். மிலிடெரி ஆர்டர்ஸ்படி பி. அண்ட் சி. மில்லிலிருந்து அதன் மொத்த உற்பத்தியில் ஐந்திலொரு பங்கு இராணுவத்திற்குப் போகிறது. இங்கேயிருந்து நம்முடைய இராணுவத்திற்குப் போவதற்கு ஒரு கமிஷன் ஏஜெண்ட் தேவையா (why do you require commission Agent ?) இராணுவ இலாகா நேரடியாக ஆர்டர்ஸ் கொடுத்துவிட வேண்டியது தானே ? எதற்காக கமி ஷன் ஏஜெண்ட் ? அவர்களுக்கு எதற்காக 5 பெர்செண்ட் கமிஷன். அதுவே இரண்டரை கோடி ரூபாய் அளவிற்கு வரு கிறது. இந்த கமிஷன் ஏஜெண்டை அபாலிஷ் பண்ணிவிட்டால் அதன்மூலம் இரண்டரை கோடி ரூபாயை மிச்சப்படுத்தலாமே.

அடுத்து, இன்னொரு விஷயம். சர்க்காரிடத்திலிருந்து 38 பைசாவிற்கு மின்சாரத்தை வாங்கி பி. அண்ட் சி. மில் நிர்வாகம் அதன் அதிகாரிகளுக்கு யூனிட்டிற்கு 6 பைசா என்ற அளவிற்கு கொடுக்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் சொல்கிறார்கள், மூன் றாயிரம் தொழிலாளர்களைப் பார்த்து, '' தெருவில் நில் ; உன் மனைவி சாகட்டும் ; யாராக இருந்தாலும் கவலை இல்லை '' என்று. அரசிடம் 38 பைசாவிற்கு வாங்கி 6 பைசாவிற்கு தனது அதிகாரிகளுக்கு அந்த நிர்வாகம் கொடுக்கிறது. இவற்றையெல் லாம் சேர்த்தால் 3—1/2 கோடிக்கு மேலேயே மிச்சமாகுமே.

[திரு. ரா. உமாநாத்] [1981 பிப்ரவரி 9

காயலான் கடைக்கு செல்ல இருந்த மாருதி கார் நிர்வாகத்தையே தேசியமயமாக்கிய மத்திய அரசிடம் பி. அண்டு சி. மில்லை தேசியமயமாக்க வேண்டுமென்று சொல்லி, அதன் பின் இந்த கமிஷன்களையும் ஒழிக்கவேண்டும் என்று ஏன் நமது மாநில அரசு வற்புறுத்தக்கூடாது? அவ்வாறு வற்புறுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த விஷயத்தில் மாநில அரசு எச்சரிக்கையாக இருக்க வேண்டும். ஏனென்றால் இந்த விஷயத்திலே காலந்தாழ்த்தாமல் முடிவெடுக்கவேண்டும் என்கிற ஒரு வெஸ்டெட் இண்டரஸ்ட் மத்திய அரசுக்கு இருக்க வேண்டும். இந்தப் பிரச்சினை நீடிக்க, நீடிக்க தொழிலாளர்கள் பொறுமை இழப்பார்கள், தெருவில் இறங்குவார்கள். அப்போது மாநில அரசின் போலீஸ் தான் தொழிலாளர்களை தாக்கவேண்டிய நிலை ஏற்படும். மாநில அரசின் மீதுதான் தொழிலாளர்களுக்கு அதிருப்தி உண்டாகும். அப்படி உங்களை மக்களிடமிருந்து தனிமைப் படுத்திவிட்டு, அந்த நேரம் பார்த்து மாநில அரசு மத்திய அரசின் சொற்படி வளைய வேண்டுமென்று சொல்வார்கள். அப்படி வளைவதற்கு தயாராக இல்லையென்றால், மாநில அரசை அடித்து கலைப்பதற்கான முயற்சியை மத்திய அரசினர் எடுப்பார்கள். இது தான் எங்களது கணிப்பு. மத்திய அரசின் அமைச்சர் ஒருவர் சென்னைக்கு வந்திருந்த போது, ஒன்று கூறினார். பத்திரிகை நிருபர்கள் இந்த மில் பிரச்சினைப் பற்றி கேட்டபோது, இது என்னுடைய தலைவலி அல்ல என்று சொன்னார்கள். அப்போது ஒரு நிருபர் அப்படியானால் சட்டம், அமைதி பிரச்சினை வருமே என்று கேட்டதற்கு அது மாநில சர்க்கார் சந்திக்கவேண்டியது என்று சொல்கிறார்.

[முற்பகல் 11-00]

தமிழகத்தில் இருக்கக்கூடிய பி. அண்டு சி. தொழிலாளிக்கு ஒரு துன்பம் என்றால், அவர்களை நம்பியிருக்கும் 13,000 குடும்பங்களுக்கு ஒரு துன்பம் என்றால் மைய அரசுக்கு அது துன்பமாகத் தெரியவில்லை. நம்முடைய துன்பம், மைய அரசின் துன்பம் அல்லவா? நாமும் இந்திய நாட்டு மக்கள் அல்லவா? தமிழ்நாடு இந்தியாவின் பிரிக்க முடியாத ஒரு பகுதி அல்லவா?

Why do you take an attitudi as if Tamilians are aliens to the Indian Count y? இங்கே வாடுகின்ற பி. அண்டு சி. மில் தொழிலாளியின் வேதனை என்னுடைய தலைவலி அல்ல என்று சொன்னவர்கள் தான் இந்த நாட்டின் ஒற்றுமையைப் பற்றிப் பேசுகிறார்கள். மைய அரசின் இந்தப் பொறியில் தயவு செய்து மாநில அரசு விழக்கூடாது.

Don't pick the chestnu's out of the fi e for Mrs. Gandhi. அது ஆங்கிலத்தில் ஒரு பழமொழி. அதாவது, நெருப்பில் என்னுடைய பொருள் விழுந்து விட்டது. அதை எடுத்தால் என் கை சுடும். ஆகவே, நீங்கள் அதாவது நான் எடுப்பதற்கு பதிலா[illegible]



1981 பிப்ரவரி 9] [திரு. ரா. உமாநாத்]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் அவர்களை எடுக்கச் சொல்வது போல்— அதை எடுத்துத் தாருங்கள் என்று பொருளாகும். அந்தப் பொறியில் நீங்கள் விழக்கூடாது என்று சொல்லிக் கொள்கிறேன்.

THIRU T. VENKATA REDDY : Is it a censure motion against the Tamil Nadu Government or Central Government.

திரு. ரா. உமாநாத் : ஆகவே, அந்த பி. அண்டு சி. மில்லை தேசியமயமாக்கவேண்டும் என்று பகிரங்கமாக மாநில சர்க்கார் கோரவேண்டும். இந்த அவையில் ஒரு தீர்மானம் அந்த முறையில் கொண்டுவ வேண்டும். இந்தக் கோரிக்கைக்கு ஆதரவுபெற ஜனங்களைத் திரட்ட பி. அண்டு சி. தொழிலாளிகளுக்கு பூரண உரிமை கொடுங்கள், நீங்களும் மாநிலம் பூராவும் மற்ற கட்சிகளின் ஒத்துழைப்புடன் ஆதரவு திரட்டுங்கள் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, வேலை நிறுத்தங்களை உடைப்பது என்பது மீண்டும் ஒரு கொள்கையாக — தமிழக அரசின் கொள்கையாக மாறியிருக்கிறது என்று சொல்லிக் கொள்கிறேன். வேலை நிறுத்தங்களைத் தீர்ப்பதில் காலதாமதம் செய்வதால், அரசு தலையிடாமல் அதிக நாட்கள், இருப்பதால், அந்தத் தொழிலாளர்கள் மத்தியில் இருக்கிற ஒற்றுமை குலைந்து, வேலை நிறுத்தம் உடையும் நிலைமை ஏற்படுகிறது. நெய்வேலி செராமிக்ஸ் தொழிற்சாலையில் கிட்டத்திட்ட 110 நாட்கள் வேலை நிறுத்தம் செய்யப்பட்டது. அரசு அதில் தலையிடாமல், அந்த முதலாளிக்கு நிர்ப்பந்தம் கொடுக்காமல் இருந்ததால், வேலை நிறுத்தம் உடைந்துபோய்விட்டது. அது மட்டுமல்ல. ஓசூர் உமா மகேஸ்வரி மில்லில் 90 நாள் வேலைநிறுத்தம், பிரிமியர் மில்லில் 90 நாள் வேலை நிறுத்தம், எஸ். ஆர். பி. மில்ஸ் 90 நாள் வேலை நிறுத்தம், மது ஸ்பின்னிங் மில்ஸ் 60 நாள் வேலை நிறுத்தம், பால் வள யூனிட்டி மில்லில் 72 நாட்கள் வேலை நிறுத்தம்— இன்னும்— தொடர்கிறது— பாலு கார்மென்ட்ஸ் நிறுவனத்தில் 72 நாள் வேலை நிறுத்தம்— இதில் ஏராளமான பெண்கள் சம்பந்தப்பட்டு இருக்கிறார்கள், ஒருவருஷமாக நடக்கிறது— அண்ணாமலைப் பல்காடம்பாறை— 6 மாதமாக நடக்கிறது— இன்னும் நீடித்துக்கொண்டே போகிறது. அரசாங்கம் தான் இதற்குப் பொறுப்பு என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கலைக் கழகம்

நெய்வேலி செராமிக்ஸ் பொறுத்தவரையில் நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். மாநிலத்தில் பல்வேறு தொழிற்சாலைகளில் 20 சதவிகிதம் போனஸ் கொடுத்ததற்கும் மேல், எத்தனையோ பெயர்கள் சொல்லி, அதிகச் சலுகைகள் கொடுத்து [illegible]கிறார்கள். கொள்கை பேசுகிற மத்திய சர்க்கார், போனஸ்

[திரு. ரா. உமாநாத்] [1981 பிப்ரவரி 9

சட்டத்தைக் கொண்டு வந்த மத்திய சர்க்கார் 20 சத விகிதம் போனஸை அவர்கள் நடத்தும் என். டி. சி.-யில் கொடுத்து இருக்கிறார்கள். ஆனால், நெய்வேலி செராமிக்ஸ் நிறுவனம் மட்டும் கொடுக்கத்தயாராக இல்லை. 1976–77-ல் 19½ லட்சம் லாபம். 1977–78-ல் 37½ லட்சம் லாபம். 1978-79-ல் 55¾ லட்சம் லாபம். 1979–80-ல் 73 லட்சம் லாபம். இப்படியிருந்தும் அந்த மாட்டர் டிஸ்பியூட்டில் இருக்கிறது. அந்த நிர்வாகம் தருவதற்கு மறுக்கிறது.

இதிலே வேடிக்கை என்னவென்றால், அந்த பாக்டரியில் மூல தனத்தில் 52 சத விகிதம் சர்க்கார் பணம் இருக்கிறது. என். டி. சி–யில் 20 சதவிகிதத்துக்கு மேல் கொடுக்கவேண்டும் என்று சொன்ன மாநில அரசு ஏன் தங்கள் மூலதனத்தில் 52 சதவிகிதம் உள்ள அந்த நிறுவனத்தில் அதை வற்புறுத்தவில்லை? 110 நாட்களாக நடந்து வரும் அந்தப் போராட்டத்தை நிறுத்தவில்லை? உங்களுக்கு விஷயம் தெரியுமா? நான் சொல்கிறேன். ஏற்கெனவே சிம்கோ மீட்டரில் சேர்மனாக இருந்த விஸ்வநாதன் அவர்கள் தான் இங்கேயும் இருக்கிறார்கள். சிம்கோ மீட்டரில் என்ன நடந்தது? 4½ ரூபாயை 6 ரூபாயாக ஆக்கவேண்டும் என்று போராடினார்கள். அப்போதே ஒப்புக்கொண்டு இருந்தால் முடிந்து போய் இருக்கும். அதைப்போலவே மாநில அரசு இதிலேயும் காலம் கடத்திக்கொண்டு வருகிறார்கள். 52 சதவிகிதம் மூலதனம் அரசுப் பணம் இருப்பதால், அரசு இதில் தலையிட்டு, அந்தத் தொழிலாளர்களுக்கு போனஸ் வழங்க வழி வகை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பால்வள நிறுவனத்தைப் பொறுத்தவரையில் அங்கே 1 500 தொழிலாளர்கள் இருக்கிறார்கள். 16—12—1980 அன்று அமைச்சர் முன்னிலையில் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டு, அந்த வேலை நிறுத்தம் வாபஸ் வாங்குவதாக இருந்தது. நம்முடைய மதிப்பிற்குரிய அமைச்சர் திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் பேச்சு வார்த்தையில் கலந்து கொண்டு, ஒரு ஒப்பந்தம் கையெழுத்திடுவதாக இருந்தது. அதாவது, இரண்டு மூன்று விஷயங்களில் அக்ரிமென்ட் வந்து விட்டது. போராட்டத்தை வாபஸ் வாங்குவது, பழி வாங்குதல் இல்லை. உட்கார்ந்து பேசுவது என்று ஒப்பந்தம் ஏற்பாடாகி விட்டது. ஆனால் மாலையில் அமைச்சர் அவர்கள் டெலிபோன் செய்கிறார். முதலமைச்சர் அவர்களை ஒரு வார்த்தை கேட்ட பிறகு நாம் அந்த ஒப்பந்தம் மேற்கொள்ளலாம் என்று. ஆனால் இன்று வரையில் அவர்கள் தலையிடவில்லை. அங்கே போராட்டம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அமைச்சர் ஒப்புக்கொண்டு, சீப் மினிஸ்டரைக் கன்சல்ட் செய்கிறேன் என்று சொன்னபிறகு. இதுவரையில் தலையிடவில்லை என்றால், அந்த வேலை நிறுத்தம் தொடர்ந்தால், அது உடையும், கட்டுப்பாடு குலையும் என்கிற எண்ணத்தைத் தவிர வேறு என்ன சொல்வது என்று நான் கேட்கிறேன்.



1981 பிப்ரவரி 9] [திரு. ரா. உமாநாத்]

அந்தமாதிரிதான் அண்ணாமலைப் பல்கலைக் கழகம், வேலைக்கு திரும்புங்கள் என்று அடிக்கடி கேட்கிறார்கள். ஆனால் முடிவு செய்ய வேண்டிய அந்த ஸ்டாஃப் கிட்டத்திட்ட 800 பேர்கள் சிறையில் இருக்கிறார்கள். அவர்களை சிறையிலே வைத்துக்கொண்டு, எப்படி முடிவு செய்வார்கள். அதனால்தான் அவர்களை 'ரிலீஸ்' செய்யுங்கள், முடிவு செய்கிறோம் என்று பதில் சொல்லுகிறார்கள்.

எமதர்மராஜன் சத்தியவானை இழுத்துக்கொண்டு போகிறார். சாவித்திரி பின்னாலே போகிறாள் அழுதுகொண்டு. எமதர்ம ராஜன் சத்தியவானை விடமுடியாது என்று சொல்லி, நரக வாயில் பக்கத்தில் வந்து விட்டார்கள். அப்போது சாவித்திரி அம்மையாரைப் பார்த்து அந்த எமதர்ம ராஜன் சொல்கிறார், சத்தியவானை விடமுடியாது, உனக்கு என்ன வரம் தந்தால், போவாய் கேள், தருகிறேன், என்று சொல்கிறார். உடனே சாவித்திரி எனக்கு பிள்ளை வரம் வேண்டுமென்று கேட்கிறாள். பிள்ளை பிறக்க வேண்டுமென்று கேட்கிறாள். பிள்ளை பிறக்கட்டும் என்று வரம் கொடுத்துவிட்டார். உடனே சாவித்திரி அம்மையார் சிரித்துக்கொண்டே சொல்கிறார், ''சத்தியவான் இல்லாமல் எப்படி பிள்ளை பிறக்கும்'' என்று. இது கதையிலே வரக்கூடிய ஒரு ஹாஸ்யம். அந்த மாதிரிதான் இங்கேயும் இருக்கிறது. முடிவு செய்ய வேண்டியவர்கள் சிறையிலே இருக்கிறார்கள். அவர்களை சிறையிலே வைத்துவிட்டு, முடிவு செய்யுங்கள், முடிவு செய்யுங்கள் என்று சொன்னால் எப்படி முடியும்? அந்த மாதிரி சொல்லக்கூடாது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே மாண்புமிகு முதல்வர் அவர்கள் பெயரை சம்பந்தப்படுத்தியதால் நான் குறுக்கிடுகிறேன் ; இல்லை என்றால் இறுதியில் பேசுவதாகத்தான் இருந்தேன். முதலமைச்சர் அவர்களையும் கலந்து விட்ட பிறகு, ஒரு சுமூகமான முடிவுக்கு, பேசி வேலை நிறுத்தத்தை வாபஸ் வாங்கிக் கொள்ளுங்கள் என்று சொன்னோம். ஆனால் அவர்கள் அமைச்சர் எழுத்து மூலம் தர வேண்டுமென்று சொன்னார்கள். அதுதான் 'டெட் லாக்கிற்கு' காரணம் பால்பண்ணையைப் பொறுத்தவரையில்.

திரு. ரா. உமாநாத் : அதற்கு குழு போட்டார்கள் ; பேசினார்கள் ; முடிவு பெறவில்லை. நான் இப்போது அண்ணாமலைக் பல்கலைக் கழகத்தைப்பற்றிய விவகாரத்திற்கு வந்து விட்டேன். சிறையிலே இருப்பவர்களை விடுதலை செய்ய வேண்டுமென்று சொல்கிறார்கள் ; விடுதலை செய்ய மறுக்கிறார்கள், அதனால் மறுபடியும் என்ன வரும்? அவர்களுடைய போராட்டத்தை நடத்த விடாமல் உடைத்து, அந்த நிர்வாகத்திற்கு சாதகமாக நடந்து கொண்டு, போராட்டம் இனிமேல் தலை தூக்காமல், நடக்க விடாமல் செய்ய வேண்டும்

[திரு ரா. உமாநாத்] [1981 பிப்ரவரி 9

என்பதுதான் அரசாங்கத்தின் நோக்கமாக இருக்கிறது. அந்த நிர்வாகத்திற்குச் சாதகமாகப் போகும் எண்ணம் அரசாங்கத்திற்கு வந்து விட்டது. ஆகவே, கைதானவர்களை விடுதலை செய்யும் எண்ணம் உங்களுக்கு இல்லை.

The strike is spreading to all the colleges throughout the State. இது இப்படியே போகுப்போது மாநிலம் பூராவும் கல்லூரி ஆசிரியர்கள் வேலை நிறுத்தம் செய்யும் சூழ்நிலை ஆரம்பித்திருக்கிறது. இப்படிப்பட்ட போராட்டங்களை உடைக்க, நீங்கள் செய்யும் முயற்சியினால், போராட்டங்களை சுமுகமாக தீர்த்து வைக்க உங்களுடைய முயற்சி இல்லாததினால் இந்த நாட்டுக்கு எவ்வளவு நஷ்டம் என்று இந்த அரசாங்கம் உணர்ந்து இருக்கிறதா? நிச்சயமாக உணரவில்லை. அந்த உணர்வு வந்திருந்தால் தொழிற்சங்கங்களை உடைக்க வேண்டுமென்ற எண்ணம் உங்களுக்கு இருக்காது. ஆகவே நாட்டுக்கு என்ன நஷ்டம் என்று கேட்டால் கடந்த காலத்தை நீங்கள் திரும்பிப் பார்க்க வேண்டும். கடந்த காலத்தில் லட்சுமி மில்ஸ், சிம்கோ பள்ளிபாளையம், காவேரி ஸ்டக்சரல்ஸ், டி.ஐ. சைக்கிள்ஸ், டி.வி.எஸ். இவைகளில் நடைபெற்ற வேலை நிறுத்தம். அதன் விளைவு என்ன? உற்பத்தி 'லாஸ்' எவ்வளவு தெரியுமா? 1978 இல் இழந்த உற்பத்தி நாள் 21,55,000. 1979இல் இழந்த உற்பத்தி நாள் 82,73,000. 1978இல் நடைபெற்றதன் தொடர்ச்சிதான், நீங்கள் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முயலாததுதான் 1979-ல் அதிக இழப்புக்குக் காரணம். 21 இலட்சம் எங்கே, 82 இலட்சம் எங்கே. ஆகவே, இந்த நாட்டுக்கு ஏற்பட்ட இழப்பு சுமார் ஒரு கோடி உற்பத்தி நாள். இந்த அரசாங்கத்தின் போக்குதான் இதற்குக் காரணம் என்று சொல்ல விரும்புகிறேன். மீண்டும் அதே பாதையில் பயணம் ஆரம்பித்திருக்கிறீர்கள்.

என். ஜி.ஓ.க்கள் சில நியாயமான கோரிக்கைகளை எழுப்பியிருக்கிறார்கள். இரண்டு நாள் மாநாட்டில் சில கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள்; அரசாங்கத்திற்கு அந்த கோரிக்கைகளை முன்னாலே அனுப்பி இருக்கிறார்கள்; மீண்டும் அனுப்புவார்கள். அதுபற்றி அண்ணா பத்திரிக்கையில் அது அரசியல்

[முற்பகல் 11-10]

இந்திய நாட்டுப் பெரும் முதலாளி லால்சந்த், ஹிராச்சந்த் ஆகியோரின் சுரண்டல் தாகத்தைத் தணிக்க நமது மாண்புமிகு முதல்வர் ஒருநாள் என்ன செய்தார் என்பதை விளக்க ஹிந்து பத்திரிகை டேட்டட் 26-1-1981-ஐ கோட் பண்ணுகிறேன்



981 பிப்ரவரி 9] [திரு. ரா. உமாநாத்]

' ஒருநாள் நள்ளிரவில் காடம்பாறையில் போலீஸ் படை
திடீரென்று பாய்ந்து 76 ஆண்களையும், 33 பெண்களையும்,
6 குழந்தைகளையும் கவ்விக் கொண்டு போய் விட்டார்கள்.
கோவை சிறையில் அடைத்தனர். இன்னும் சிறையில்தான்
வைத்துள்ளனர். அவர்களை சிறையில் வைத்து விட்டு பஞ்சா
பிலிருந்தும், பிகாரிலிருந்தும் ஆட்களைக் கொண்டு வந்து
வேலையை நடத்துகிறார்கள். காடம்பாறை திட்டம் பூர்த்தி
பாகும்வரை அவர்களை சிறையில் வைக்க முடியுமா? அப்படி
பானால் எந்த அடிப்படையில் அத்தனை காலம் அவர்களை
சிறையில் வைக்க முடியும். இது ஹிந்து பத்திரிகையில்
வந்திருக்கின்றது. அச்சத்தோடே ஹிந்து பத்திரிகை நிருபர்
'எத்தனை ஆண்டுகளானாலும் இந்த பெண்களையும், குழந்தை
களையும் பூட்டி வைத்து மின் திட்டத்தை பூர்த்தி செய்வது
என்பதுதானா திட்டம்'' என்று கேட்கிறார், ஆனால் இதயம்
வெடிக்கும் காட்சி என்னவென்றால் சிறைப்படுத்தும்பொழுது
3 வயதிற்கு மேற்பட்ட குழந்தைகளைத் தாயிடமிருந்து
போலீஸ் இழுக்க அந்தக் குழந்தைகள் தாயிடம் மறுபடியும்
போகக் கதறி அழ, மறுபடியும் போலீஸ்காரர்கள் குழந்தை
களைப் பலாத்காரத்தை உபயோகித்து இழுத்து பிரித்து அவர்
களைக் கொண்டுபோய் சிறையில் தள்ளினார்கள். இன்று
நிலைமை என்ன? தகப்பன் ஒரு சிறையில், தாய் மற்றொரு
சிறையில், குழந்தைகள் இன்னொரு சிறையல் என்று தனித்
தனியாக வைக்கப்பட்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட ரத்தக்
கண்ணீர் வடிக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன். நமது முதல்வர் அவர்கள் தாய்ப்பாசம்
உடையவர். ஒத்துக் கொள்கிறேன். He has got human feelings—a
humanitarian. குழந்தை பாசம் உடையவர். He has got those
feelings. மனதார ஒத்துக் கொள்கிறேன். ஆனால் லால்சந்த், ஹிரா
சந்தின் சுரண்டல் பசிக்கு முன்னால் தாய்ப்பாசத்திற்கும்,
குழந்தைப் பாசத்திற்கும் மேல் வர்க்க பாசம்தான் நடனமாடும்
என்பதைத்தான் பார்க்க முடிகிறது. ஆனால் மாண்புமிகு
முதல்வர் அவர்கள் கேட்கலாம். நாட்டுக்காக மின் திட்டம்
கட்ட வேண்டாமா என்று. நான் அவர்களைக் கேட்கிறேன்;
கான்ட்ராக்ட் தொழிலாளியின் ஒட்டிய வயிற்றின் மீதுதான்
மின் திட்டம் கட்டுவதா? அவர்களின் பிணங்களைக் கொண்ட
அஸ்திவாரத்தின் மீதா கட்டுவது? தாய்க்குலத்தின், குழந்தைக்
கூட்டத்தின் ரத்தக் கண்ணீர் கலந்த சிமெண்டிலா மின்
திட்டத்தைக் கட்டுவது?

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

** ** **

THIRU K. S. G. HAJA SHAREEF : It is not relevant to the question. I hope the Hon. Member will observe the sentiments.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் பேசியதில் தாஜ்மஹால் பற்றிக் குறிப்பிட்ட அனைத்தையும் நீக்கும்படி உத்தர விடுகிறேன்.

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, தாஜ்மஹால் பற்றிச் சொன்னதை வேண்டுமானால் நீக்கி விடுங்கள். காடம்பாறை பற்றிக் குறிப்பிடுவது இருக்கட்டும்.

அடுத்ததாக டிஸ்மிஸ் செய்யப்பட்ட தொழிலாளிகளின் கேஸை கோர்ட்டிற்கு விடும் அதிகாரம், ஒர வஞ்சனையுடன் துஷ்பிரயோகம் செய்யப்படுகிறது. இதிலே தொழிலாளர் நல அமைச்சரவர்களையும் நான் குற்றம் சாட்டுவேன். இதுதான் தங்களுடைய கொள்கையின் அம்சம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். After all dismissed. சர்க்கார் கோர்ட்டுக்கு டிஸ்மிஸ் செய்யப்பட்ட தொழிலாளர்களுடைய கேஸை விடுவது என்பது வேலைக்கு எடுத்துக்கொள்ள சொல்லி உத்தரவு போடுவதாகாது. டிஸ்மிஸ் செய்யப்பட்ட தொழிலாளிகள் அவ்வாறு தங்களை டிஸ்மிஸ் செய்தது தப்பு என்று வாதிடுவதற்குரிய உரிமையைத் தான் கேட்கிறான்.

தப்பு சரி என்று சொல்ல வேண்டியது கோர்ட்தான். அப்படி சரியா தவறா என்று வாதிக்கக் கூட உரிமை கொடுப்பதில் ஏன் தகராறு செய்ய வேண்டும். அதிலே ஏன் ஒர வஞ்சனை காட்டப் படுகிறது. வேண்டியவர்களுக்கு அனுமதிக்கிறீர்கள், மற்றவர்களை பழி வாங்குகிறீர்கள். அதிலே ஏன் ஒரவஞ்சனை காட்டுகிறீர்கள்? ஏன் சிலரை மட்டும் பழி வாங்குகிறீர்கள் என்று கேட்கிறேன்.

சென்ற சட்டமன்றக் கூட்டத்திலே நமது தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் ஒரு அறிவிப்புச் செய்தார். "நல்ல காலம் வருகிறது. நல்ல காலம் வருகிறது. டிஸ்மிஸ் செய்யப்பெற்ற தொழிலாளர்கள் அந்தப் பிரச்னையை அப்படியே நேரிடையாக கோர்ட்டுக்குக் கொண்டு போகலாம். எங்களிடத்திலே வர வேண்டிய அவசியம் இல்லை. தமிழ் நாட்டிலே அப்படிப்பட்ட சட்டம் ஒன்றுதயார் செய்து கொண்டிருக்கிறோம். மத்திய அரசிற்கு ஒப்புதலுக்காக அனுப்பவிருக்கிறோம். நல்ல காலம் வருகிறது. "நல்ல காலம் வருகிறது" என்று உடுக்கடித்தார்கள்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.





நான் கேட்க விரும்புவது நேரிடையாக கோர்ட்டுக்குப் போகலாம் என்ற கோட்பாட்டை அரசு ஏற்றுக் கொண்ட பிறகு, அப்படி ஏற்றுக் கொண்டதினால்தானே சட்டம் வரவிருக்கிறது என்று சொன்னார்கள். அப்படி அதை அரசாங்கம் ஏற்றுக் கொண்ட பிறகு, மத்திய அரசின் ஒப்புதலுக்காக காத்துக் கொண்டிருக்காமல், அப்படி டிஸ்மிஸ் ஆன கேஸ்களை இதுவரை முடிவு செய்யாமல் வைத்திருக்கும் கேஸ்களை கோர்ட்டுக்கு அனுப்ப வேண்டியதுதானே? அனுப்பினார்களா? இல்லை. ஏராளமான கேஸ்கள் அப்படி பெண்டிங்காக இருக்கின்றன. டி. வி. எஸ். நிறுவனத்திலிருந்து அப்படி அனுப்பப்பெற்றவை இன்னும் கோர்ட்டுக்கு அனுப்பப்பெறவில்லை. ரொம்ப நெருக்கினால் சிலதை அனுப்புகிறார்கள். ஆனால் இன்னும் 72 கேஸ்கள் பாக்கியிருக்கின்றன. அவைகளை காமதாமதம் செய்து, தொழிலாளர்களை சோர்வு கொள்ளச் செய்து, ஒரு நிலையில் அவர்களின் கணக்கை தீர்த்து அனுப்பி, டி.வி.எஸ். முதலாளிகளுடன் கொல்யூட் செய்துக் கொண்டு, தொழிலாளர்களின் மீது பழி வாங்கும் நடவடிக்கையை அரசு செய்துக் கொண்டிருக்கிறது என்று நான் கூற விரும்புகிறேன்.

அதேபோல் சங்ககிரி சிமெண்ட் நிர்வாகத்தில் அதன் காரியதரிசி பழிவாங்கப் பெற்றார். அந்த கேஸை கோர்ட்டுக்குக் கொண்டுபோக வேண்டும் என்று கேட்டபோது, அன்றைக்கு இருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு கோர்ட்டுக்கு இந்த கேஸ்களை விட மாட்டோம் என்றார்கள். பிறகு இந்த அரசு ஆட்சிக்கு வந்த பிறகு, உயர்நீதி மன்றத்தில் இந்த கேஸை விடலாம் என்று நாங்கள் இந்த அரசை கேட்டோம். ஏற்றுக் கொண்டார்களா? இல்லையே. பிறகு நாங்கள் சுப்ரீம் கோர்ட் சென்றோம். சுப்ரீம் கோர்ட்டில் கேஸை கொண்டு போன போது, சுப்ரீம் கோர்ட் நீதிபதி ஓபன் கோர்ட்டிலேயே, அரசாங்கத்தினுடைய வழக்கறிஞருக்கு ஒரு யோசனை கூறினார். என்னவென்று, "இதை கோர்ட்டுக்கு விடலாமே, தமிழக அரசுக்கு நீங்கள் எடுத்துச் சொல்லுங்கள். கோர்ட்டுக்கு விடலாம் என்று நான் சொன்னதாக சொல்லுங்கள்" என்று ஓபன் கோர்ட்டிலேயே ஆலோசனை கூறினார்கள். ஆனால் அதை இந்த அரசு ஏற்றுக் கொண்டதா? இல்லை. நம்முடைய மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் அதை மதிக்காமல், "நோ— முடியாது. இப்படிப்பட்ட எந்த கேஸையும் கோர்ட்டுக்கு விட முடியாது", என்று சுப்ரீம் கோர்ட் நீதிபதியின் கோரிக்கையை மறுத்து விட்டார்கள். ஆனால் பின்னர் தீர்ப்பு வந்தபோது என்னவாயிற்று? இந்தக் கேஸை கோர்ட்டுக்கு விட்டுத்தான் ஆக வேண்டும் என்று தீர்ப்பு வந்து விட்டது. மாநில சர்க்காருடைய மதிப்பு சுப்ரீம் கோர்ட் முன்னால் என்ன ஆயிற்று? இப்படி மாநில சர்க்காரின் கொள்கையை தூக்கி எறிந்து 2 ஆம் தேதியன்று 4, 5 நாட்களுக்கு முன்னால் தீர்ப்பு வந்து விட்டது.

[திரு. ரா. உமாநாத்] [1981 பிப்ரவரி 9

அதேபோல் மாயாண்டி என்னும் டிரைவர் கேஸ். அவர் டிரான்ஸ்போர்ட் டிரைவர். டிஸ்மிஸ் செய்யப் பெற்றார். சுப்ரீம் கோர்ட்டில் அதுவும் வந்தது. அதற்கு முன்னாலேயே அரசாங்கத்திற்கு நாங்கள் எடுத்துச் சொன்னோம். அதை தீர்த்துக் கொடுங்கள். சமரசம் காண நாங்கள் வழி செய்கி றோம் என்று கேட்டோம். ஆனால் இவர்கள் ஏற்றுக் கொள்ள வில்லை. விளைவு, சுப்ரீம் கோர்ட்டிலிருந்து தீர்ப்பு வந்து விட்டது. அந்த டிரைவருக்கு 10 ஆண்டுகளுக்கான ஈட்டுத் தொகை முழுவதையும் கிட்டத்தட்ட ரூ. 40,000 கொடுத்து, திரும்பவும் ரி-இன்ஸ்டேட் செய்ய வேண்டும் என்று தீர்ப்பாகி விட்டது. சமரசம் பண்ணியிருந்தால் நியாயமாக போயிருக்கும் அல்லவா? ஒரு பக்கத்தில் சுப்ரீம் கோர்ட் முன்னிலையில் தமிழக அரசின் கௌரவம் பழுதடைகிறது. மறு பக்கத்தில் 40,000 ரூபாய் அளவில் மக்கள் வரிப் பணத்திலிருந்து அந்த டிரைவருக்கு கொடுக்க வேண்டிய இழப்பும் ஏற்பட்டிருக்கிறது. இது ஏன்? அரசாங்கத்தினுடைய தவறான தொழிலாளர் கொள்கையின் விளைவுதான் இது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அதன் விளைவாகத்தான் மக்கள் வரிப்பணம் இப்படியெல்லாம் போகிறது என்பதை உங்கள் அனைவரின் கவனத்திற்கும் கொண்டுவர விரும்புகிறேன். இது போல் எங்கள் கேஸ்களுக்கு விவாதிப்பதற்கான உரிமையை வழங்குவதில் கூட அரசாங்கம் மறுப்புத் தெரிவிக்கக் கூடாது. அத்தகைய கொள்கை தவறானது என்றும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அதேபோல் நெல்லிக்குப்பத்தில் ஒரே ஒரு சங்கம் இருந்தது. மிக வலுவான சங்கம். பழைய சட்டமன்ற உறுப்பினர் தோழர் கோவிந்தராஜன் அவர்கள் தலைவராக இருக்கக் கூடிய சங்கம் சி.ஐ.டி.யூ.-வின் சங்கம் அது. அந்த பலமான சங்கத்தை உடைப்பதற்கு ஒரு ஐவர் குழு அமைக்கப் பெற்றது. இப்படி ஒரு அமைப்பு தொழிலாளர்களின் ஒற்றுமையைக் குலைக்க என்று இப்போதெல்லாம் ஏற்படுத்தப்படுகிறது. அந்த ஐவர் குழு சங்கத்தை தொழிலாளர்கள் சங்கம் என்றே ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. அதற்கு எந்தவித ஆதரவும் கொடுக்கவும் இல்லை. ஆனால் இப்படிப்பட்ட நிலையில் அதற்கு உயிர் கொடுக்க எதிர்காலத்தில் ஒரு போட்டிச் சங்கமாக்க நமது தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள், ஒரு பேட்டரணைச் செய்தார்கள். அது கிளப்பிய ஒரு கோரிக்கையை அமைச்சர் அவர்கள் கோர்ட்டிற்கு விட்டார்கள். அதாவது கோர்ட்டில் அந்த கோரிக்கையை ஜெயிக்க வைத்து, அதன் மூலம் சி.ஐ.டி.யூ. சங்கத்தை உடைக்கலாம் என்று ஆசை. ஆனால் நாங்கள் அதை இந்த அவையிலே எடுத்து வைத்து சட்ட விரோதம் என்றும் அதிகார துஷ்பிரயோகம் என்றும் எடுத்துக் காட்டினோம். தொழி லாளி வர்க்க விரோத நடவடிக்கை என்றோம். (குறுக்கீடு)



1981 பிப்ரவரி 9]

[முற்பகல் 11-20]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தொழிலாளர்
களுக்குக் கிடைக்க வேண்டிய தொகை, பல இலட்சக்கணக்கான
தொகை கொடுக்கப்படாமல் தலைவரும், தொழிற்சங்கமும்,
சி.ஐ.டி.யு. சங்கமும் எடுத்துக் கொண்டது என்று புகார் செய்
தது ஒரு தொழிற்சங்கம். அந்தத் தொழிற்சங்கம் கொடுத்ததை
வழக்கு மன்றத்திற்கு அனுப்பியிருக்கிறோம்.

திரு. ரா. உமாநாத்: அந்த வார்த்தையை இங்கே சொல்லக்
கூடாது என்பதால் சொல்லவில்லை. உண்மைக்குப் புறம்
பானதைச் சொல்கிறார். அது தனிப் பிரச்னை. இது ஒரு
பாக்டரி சம்பந்தமாக, இன்டஸ்ட்ரியல் டிஸ்ப்யூட் எழுப்பப்பட்டு
கோர்ட்டுக்கு விடப்பட்டது. சட்ட விரோதமாக, அதிகார
துஷ்பிரயோகம், தொழிலாளர் விரோத நடவடிக்கை, இப்படித்
தான் செய்தது சரி என்று இந்த அவையில் சாதித்தார். பெரிய
புத்தகத்தைப் படித்தார். முதல் அமைச்சரும் அவர்
அட்வைஸை நம்பினார். இப்போது தொழில் கோர்ட், சென்னை
தொழில் கோர்ட் தீர்ப்பு கொடுத்தது. அமைச்சர் யாருக்கு
ரெபரன்ஸ் கொடுத்தாரோ, எங்களுக்கு எதிரான அவரைப்பற்றி
கோர்ட் கூறுவது, " சாட்சிக் கூண்டில் அவர் நடந்து கொண்ட
முறை அவர் உண்மை சொல்வதாக எனக்குப்படவில்லை".
ஐவர் குழு அதிகாரம் அளித்து தொழிலாளர்கள் கூட்டங்கள்
நடந்ததாக கூறப்படுவது குறித்து கோர்ட் கூறுகிறது. " அப்படி
ஒரு கூட்டம் நடந்ததாகக் கூறுவது வெறும் போலித்தனமாகும்,
ஐவர் குழு கண்வினர் கற்பனையால் உண்டாக்கப்பட்ட புனைச்
சுருட்டாகும்". சி.ஐ.டி.யு. சங்கத்தைப் பற்றி கோர்ட் தீர்ப்பு,
பெரும், கணிசமான பெரும்பான்மை சி.ஐ.டி.யு. சங்கத்திற்குப்
பின்னால் கெட்டியாக, உறுதியாக திரண்டு நிற்கிறார்கள் என்ப
தாகும். நமது அமைச்சர் அவர்கள் இதை கோர்ட்டுக்கு விட்டது
பற்றி என்ன தீர்ப்பு தெரியுமா? கடைசியாக தீர்ப்பு, அரசாங்
கம் இதை கோர்ட்டுக்கு விட்டது சட்டப்படி தகுதியற்றது
இது செல்லாது என்று தீர்ப்பு அளித்துவிட்டு கடைசியில் கோர்ட்
கூறுகிற தீர்ப்பு இந்த இடைக்கால செயற்குழு என்று அமைக்கப்
படும் குழு வெறும் மாயையாக இருப்பதால் அந்த ஐவர் குழு
உறுப்பினர்கள் ரூ. 200 செலவுத் தொகை கொடுக்க உத்தர
விடுகிறேன் என்பதாகும். இது சென்னை தொழில் கோர்ட்
தீர்ப்பு. இந்தத் தீர்ப்பு, தொழிலாளர் கொள்கை மீதான
கண்டனமாகும். அமைச்சர் மீது இழைக்கப்பட்ட ஒரு கோர்ட்
கண்டனமாகும். அமைச்சரின் அந்தரங்க சுத்தியை கேள்வி
கேட்கும் ஒரு கண்டனமாகும். அரசாங்கம் இத் தீர்ப்பை ஒத்துக்
கொண்டு கெஸட்டில் பிரசுரித்திருப்பதை இந்த அவை சிந்தித்துப்
பார்க்க வேண்டும். டிஸ்மிஸ் ஆன டி.வி.எஸ். தொழிலாளர்
களுக்கு அமைச்சர் ரெபரன்ஸ் தராமல், கூண்டோடு கைலாசம்
அனுப்பப்பட்ட 293 ஈரோடு ஸ்ரீ கிருஷ்ணா ஆயில் மில் தொழி

லாளர்களுக்கு ரெபரன்ஸ் தராமல், டிஸ்மிஸ் ஆன தொழிலாளர்களுக்கு ரெபரன்ஸ் தராமல், டிஸ்மிஸ் ஆன சங்க ஊழியர்களுக்கு ரெபரன்ஸ் தராமல் சுப்ரீம் கோர்ட் நீதிபதி அட்வைஸ் செய்தவருக்கு ரெபரன்ஸ் தராமல், ஆனால் தொழில் கோர்ட்டு, '' பொய், புனைச்சுருட்டு, நம்பத்தகாதவர் '' என்று தீர்ப்பு கொடுத்த ஒரு நபருக்கு ரெபரன்ஸ் கொடுப்பதற்கு இந்த அரசாங்கம் தயங்கவில்லை. நான் கேட்க விரும்புகிறேன். சி.ஐ.டி.யு.-வை ஒழிக்க இது அதிகார துஷ்பிரயோகம் என்பதைத் தவிர வேறு என்ன பெயர் இதற்கு நான் சொல்வது ?

அடுத்தபடியாக, தொழிற் சங்க இயக்கத்தில் ஈடுபட்டால் பழி வாங்குவது என்பது இந்த அரசின் கொள்கையாக மாறிவிட்டது. இதில் மோஸ்ட் க்ருஷியல் பாயிண்ட் என்ன வென்றால், தொழிலாளர்கள் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டிய இலாகாவின் கீழ் உள்ள வாரியமே பழி வாங்குகிறது. குடிநீர் வடிகால் வாரியம். அதில் செயல்படும் ஊழியர்கள் உண்ணாவிரதம் இருந்ததற்காக குற்றஞ்சாட்டி ஆறு காஷுவல் வொர்க்கோர்ஸ் டிஸ்மிஸ் செய்யப்பட்டார்கள். 14 நிரந்தர தொழிலாளர்களை ஸஸ்பென்ஷனில் வைத்துள்ளார்கள். அந்த வாரியம் கொடுத்துள்ள குற்றச்சாட்டை பாருங்கள். ப்ரகாசம் என்ற டிரைவர் பேரிலுள்ள குற்றச்சாட்டு, '' இந்திய தொழிற்சங்க 1926 ஆம் வருட சட்டத்தின்படி நிறுவப்பட்டுள்ள தொழிற்சங்கம் ஒன்றின் செலவுக்கு சந்தா செலுத்தி வரும் சங்கத்தில் இருப்பது, வாரிய நடத்தை விதிகளை மீறிய செயலாகும். ஆகவே உங்களை ஏன் டிஸ்மிஸ் செய்யக்கூடாது '' என்கிறார்கள். இந்த அரசின்கீழ் உழைப்பாளி மகன் சங்கம் சேருவது குற்றமாம். ஐயா, விடுமுறை நாள் அன்று நான் சாப்பிடாமல் இருந்தால் சர்க்காருக்கு என்ன ? ஆனால் விடுமுறை நாளன்று சாப்பிடாமல் இருந்தால் அதுவும் குற்றமாம். கூறுவது யார்? மின்சார இலாகா. இதை மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும். மெமோ டேட்டட் 25—11—1980, டி.என்.இ.பி. ''ஞாயிற்றுக்கிழமையோ அல்லது மற்ற விடுமுறை நாளன்றோ ஊழியர்கள் உண்ணாவிரதம் இருந்தால் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கலாமா'' என்று சூப்பிரன்டெண்டிங் என்ஜினியர் (பி. வி.) ஸவுத் கேட்கிறார். அவருக்கு தெரிவிப்பது என்னவென்றால் விடுமுறை நாளன்று கூட உண்ணா நோன்பு போன்ற கிளர்ச்சிகளில் ஈடுபட்டாலும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். (ஸைன்ட்) ஏ. வி. ராமகிருஷ்ணன், வி.ஈ.

விடுமுறை நாட்களிலே கூட உண்ணா நோன்பு, கிளர்ச்சி ஆகியவைகளிலே ஈடுபட்டாலும் கூட நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்லப்படுகிறது. கையொப்பம்— ஏ.வி. ராமகிருஷ்ணன், சீப் என்ஜினியர் (ஹைட்ரோ) என்றிருக்கிறது.





நான் முதலமைச்சர் அவர்களை கேட்க விரும்புகிறேன். இந்தியா விடுதலை பெற்று, சுதந்திரமடைந்து 33 ஆண்டுகளாகியும், தமிழகத்திலே இருக்கக்கூடியவர்கள் சாதாரண கிளர்ச்சியிலே ஈடுபடக்கூடிய உரிமைகூட இல்லையா ? அதுவும் விடுமுறை நாட்களிலே கூட கிளர்ச்சி செய்யும் உரிமை கிடையாதா ? நான் முதல்வர் அவர்களை மீண்டும் கேட்க விரும்புகிறேன். கணவன் சட்டப்படியான தொழிற் சங்க வேலையில் ஈடுபட்டதற்காக, அப்பாவி மனைவியை வஞ்சம் தீர்க்கலாமா? கைக்குழந்தையை கண்ணீர்விடச் செய்யலாமா? மூபர பாட்சா, என்.ஜி.ஓ. மாவட்ட மையக் குழு உறுப்பினர், கலப்புத் திருமணம் நடத்தியவர். அவர் மனைவியும் ஒரு என்.ஜி.ஓ. அவருக்கு 16 மாத கைக்குழந்தை. கலப்புத் திருமணமாதலால், அவருக்கு கணவரைத் தவிர உதவிக்கு வேறு யாருமில்லை. இரு சாரார் சார்பிலும் யாரும் உதவிக்கு முன் வருவதில்லை. அப்படியிருக்க இந்த மனைவியையும், கைக்குழந்தையையும் அம்போ என்று சென்னையில் விட்டுவிட்டு, கணவனை டிரான்ஸ்பர் செய்திருக்கிறார்கள். இதேபோல் வைஸ் பிரசிடென்ட் சீனிவாசனையும் டிரான்ஸ்பர் செய்திருக்கிறார்கள். அவர் மனைவியும் ஒரு என்.ஜி.ஓ. அவருக்கு 12 மாதக் கைக்குழந்தை. அவரிடமிருந்து கணவனைப் பிரித்து நீலகிரிக்கு மாற்றிவிட்டார்கள். அதேபோல், என்.ஜி.ஓ. யூனியன் சென்னை ஆர்கனைசிங் செகரடரி பாண்டியன். அவருடைய மனைவி சென்னை மெண்டல் ஆஸ்பத்திரியிலே ஒரு நர்சாக பணியாற்றுகிறார். அவரையும் பிரித்து, கணவனை ஸ்ரீவில்லிபுத்தூருக்கு மாற்றி விட்டார்கள். ஆனால், அப்படி பிரிக்கக்கூடாது என்று ஜி.ஓ. இருக்கிறது. அப்படி இருவரும் சேர்ந்து பணியாற்ற வேண்டுமென்று ஜி.ஓ. இருந்தாலும், இவர்கள் பழி வாங்கப்படுகிறார்கள். ஜி.ஓ. வாவது, சட்டமாவது என்று இப்படி நீங்களே பழிவாங்கும்போது, தனியார் துறையில் நடக்கும் பழிவாங்குதலைப் பற்றி நீங்கள் எப்படித் தடுக்க முடியும் ? என்றுதான் நான் கேட்க விரும்புகிறேன்.

வேலைக்குத் திரும்பினால், பிரச்சினையைத் தீர்ப்போம் என்று நம்பிக்கை கொடுத்து, வேலை நிறுத்தத்தை கைவிட வைத்து, பிறகு நட்டாற்றில் விடுவது, இன்னொரு கொள்கை. இதற்கு ஏராளமான காரணங்கள் என்னிடத்திலே இருந்தாலும் கூட, ஒன்றை மட்டும் என்னால் இங்கே கூறாமல் இருக்க முடியாது. இந்த விஷயத்தில். அரசு செய்த மன்னிக்க முடியாத பெரும் குற்றம் என்னவென்றால், மதுரை—காமராஜ் பல்கலைக் கழகப் போராட்டத்தில், கல்வித் துறை அமைச்சர் முன்னிலையில் செய்த ஒப்பந்தத்தில் ஒரு ஷரத்து 'இன்திபிரசன்ஸ் அப் தி எஜுகேஷன் மினிஸ்டர்'' முடிவுகள் எடுக்கப்பட்டு அதிலே, அந்த அக்ரிமெண்டிலே வைஸ் சான்சலர் கையொப்பமிட்டுள்ளார். அதிலே, 3வது ஷரத்திலே, ''தற்போது சிறையிலிருக்கும் எல்லா ஊழியர்களும், ஆராய்ச்சி நிபுணர்களும் நிபந்தனையின்றி நிச்சயமாக விடுதலை செய்யப்படுவார்கள் ;

அவர்கள் பெயரில் உள்ள கேஸ்கள் வாபஸ் பெறப்படும். அவர்களுக்கு வேலைக்குச் சேர போதிய அவகாசமும் கொடுக்கப்படும்'' என்பது ஒரு ''சைன்ட் அக்ரிமென்ட்.'' அரசு சார்பிலே கல்வி அமைச்சர் முன்னிலையில் ஒப்பந்தமாகி, வைஸ் சேன்சலர் கையெழுத்திடுகிறார். ஆனால், அரசை நம்பி, புருஷனை அல்ல, வேலை நிறுத்தத்தை, போராட்டத்தைக் கைவிட்டனர் ஆனால், போராட்டத்தை கைவிட்ட உடனே, அவர்களை நிபந்தனையின்றி விடுதலை செய்ய முடியாது; கேஸ் வாபஸ் பெற முடியாது என்று சர்க்கார் கூறிவிட்டது. நான் கேட்கிறேன். முதல் அமைச்சர் அவர்களுக்கு இதிலே கருத்து வேற்றுமை இருக்கலாம். ஆனால், இந்த ஒப்பந்தத்தை உங்களுடைய சர்க்கார் அனுமதித்து, கல்வி அமைச்சர் ஒத்துக்கொண்டு அவர்கள் சார்பிலே வைஸ் சான்சலர் அந்த அக்ரிமென்டிலே கையெழுத்திட்டார். அப்போது கல்வி அமைச்சருக்கு அதிலே கமிட்மென்ட உண்டு. அப்படி கல்வி அமைச்சருக்கு கமிட்மென்ட் ஏற்படுகின்றபோது, அதிலே முதலமைச்சருக்கும் கலெக்டிவ் ரெஸ்பான்சிபிலிடி, கூட்டுப் பொறுப்பு ஏற்படுகின்றது. அப்போது கொடுத்த வார்த்தையை காப்பாற்றவேண்டாமா? அது தப்பு என்றாலும், ஏற்றுக்கொள்ள முடியாது என்றாலும், கமிட்மெண்ட் பண்ணிய பிறகு அதை அனுமதிக்க வேண்டியதுதானே? அதை மறுக்கலாமா? அதை மறுத்தால், நம்முடைய சர்க்காருடைய இமேஜ் என்னவாகும். தமிழக அரசு தங்களை வஞ்சித்து விட்டார்கள் என்று அவர்கள் கூறுகிறார்கள். எனவே, அவர்கள் 14 அம்ச கோரிக்கைகளை இன்றைக்கு இந்த அரசாங்கம் ஒப்பந்தப்படி அமுல்நடத்தவில்லை என்று இன்றைக்கு மாநிலம் பூராவும் எல்லோரும் வேலை நிறுத்தத்தை ஆரம்பித்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட தகாத முறைகளைக் கையாண்டால், உங்களால் தொழில் உறவை எப்படி நிலைநாட்ட முடியும் என்று கேட்க விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, தொழிலாளர்கள் ஒற்றுமையைக் குலைக்க, தொழிலாளர்களுக்கு லஞ்சம் கொடுத்து, அவர்களை கருங்காலியாக்குவது உங்கள் கொள்கை, அரசாங்கத்தின் வடிவமாக இன்றைக்கு இருக்கிறது. வேலை நிறுத்தத்தின் போது, கருங்காலித்தனம் செய்பவர்களுக்கு இனாம் தொகை, விசேட இங்கிரிமென்ட், எவர்சில்வர் பாத்திரம் போன்றவைகளை லஞ்சமாகக் கொடுக்கிறீர்கள். குறிப்பாக, இதை அரசு போக்குவரத்துக் கழகங்களிலே தற்போது செய்து கொண்டிருக்கிறீர்கள். இது பிளவுபடுத்தும் வேலை, பாகுபடுத்தும் வேலை, இது தவறு என்று நீங்களே ஏற்கனவே ஒத்துக்கொண்டது.

காவலர்களின் வேலைநிறுத்தத்தின்போது. கருங்காலித்தனம் செய்த காவலர்களுக்கு ஒரு விசேஷ இன்கிரிமென்ட் கொடுத்தீர்கள். பிறகு அதை ஸ்டிரைக் பண்ணிய காவலர்களுக்கும் கொடுத்தீர்கள்? ஏன்? அவர்கள் மன்னிப்பு கேட்டினாலா? இல்லை

1981 பிப்ரவரி 9] [திரு. ரா. உமாநாத்]
[முற்பகல் 11-30]

1980 மார்ச் மாதம் 28ஆம் தேதியில் திருச்சியில் நடந்த
பிரம்மாண்டமான பேரணியில் விளக்கம் கூறினார்கள். 'அண்ணா
—28—3 1980'—''போராட்ட காலத்தில் வேலை நிறுத்தத்தில்
கலந்துகொள்ளாத சில காவலர்களுக்கு அளிக்கப்பட்ட முன்
ஊதிய உயர்வு எல்லாக் காவலர்களுக்கும் வழங்க வேண்டும்
என்றும் கோரினார்கள்.

எங்களுக்குள் பாகுபாடு காட்டாதீர்கள்; எங்களுக்குள்
சமூக நிலையைக் கெடுக்கவேண்டாமென்றும், பிரிட்டோ தலை
மையில் இன்று என்னைச் சந்தித்த காவலர்கள் கோரினர்.
அதையும் நான் ஏற்றுக் கொண்டேன்'' என்று கூறினார்கள்.

ஆகவே, எல்லோருக்கும் அந்த இன்க்ரிமென்ட் கொடுத்
தீர்கள். மன்னிப்புக் கேட்டதால் அல்ல; ஒரு கொள்கை
அடிப்படையில். பாகுபாடு படுத்துவது தப்பு என்று ஒன் லேக்
டே லேக்ஸ் பீப்பிள் முன்னால் கொடுத்தீர்கள். தப்பு என்று
வாக்குக் கொடுத்தீர்களே, அதே தப்பைச் செய்யலாமா? அந்த
மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதியில் இருந்து மாறுவதாக
இருக்கிறதே.

தாய் எட்டடி பாய்ந்தால் குட்டி பத்தடி பாயும் என்று
சொல்வார்கள். சர்க்காரே இப்படி என்றால், இதைப் பார்த்த
தனியார் துறை முதலாளி சும்மா இருப்பாரா? ஒசூர் உமா
மகேசுவரன் மில்லில் ஒரே வேலைக்கு இரண்டு கூலி விகிதம்—
ஒரு சாராருக்கு 3 ரூபாய்; அதே வேலை செய்யும் இன்னொரு
சாராருக்கு 5 ரூபாய்; ஸ்ட்ரைக் பண்ணியவருக்கு 3 ரூபாய்;
ஸ்ட்ரைக் பண்ணாதவருக்கு 5 ரூபாய். வேலைத் தரத்தை
வைத்து கூலி நிர்ணயம் இல்லை. ஸ்ட்ரைக்கா, ஸ்ட்ரைக்
இல்லையா என்பதை வைத்துத்தான் கூலி நிர்ணயம் செய்யப்
படுகிறது. சர்க்கார் கொள்கை இன்றைக்கு இந்த வகையில்
போய்க் கொண்டிருக்கிறது.

அடுத்து ஒரு முக்கியமான விஷயத்திற்கு வருகிறேன்.
தொழிலாளர் விரோத நடவடிக்கைகளுக்கு பல சட்ட வடி
வங்கள் கொடுக்கப்படுகின்றன. சமீபத்தில் வெளியிடப்பட்
டுள்ள வேலை நிறுத்தத் தடைச் சட்டமும், தொழிலாளர்
சட்டக் குழுவில் வைக்கப்பட்டுள்ள இரண்டு மசோதாக்களும்
தான் அந்த வடிவங்கள். இவற்றுடன், இந்த மாதம் நான்காம்
தேதி அண்ணா பத்திரிகையில் என்று கருதுகிறேன்—ப.உ.ச.
கடிதத்தைப் படித்துப் பார்த்தபோது, அ.தி.மு.க. அரசு பிரதமர்
காந்தியின் பிற்போக்கான தொழிலாளர் கொள்கையை அப்
படியே தங்களதாக ஆக்கிக் கொண்டதாகத் தெரிகிறது. பிரதமர்

[திரு. ரா. உமாநாத்] [1981 பிப்ரவரி 9

இந்திரா காந்தி அவர்கள் தொழிலாளி வர்க்கத்திற்கு எதிராக என்னென்ன அவதூறுகள் பரப்பி வருகிறாரோ அதே அப்படியே ஈயடிச்சான் காப்பி அடித்துள்ளார்கள் அவருடைய கட்டுரையில்.

வேலை நிறுத்தத் தடை அவசரச் சட்டத்தை எடுத்துக் கொள்வோம். இன்று ஒரு தொழிலாளி அவசரமாக மலஜலம் கழிக்க, தனது மிஷினை, அடுத்த தொழிலாளியிடம் பார்க்கச் சொல்லி போய்வந்தால் மேலதிகாரியிடம் கேட்கவில்லை என்பதற்காக எச்சரிக்கலாம், அல்லது சில பைசாக்கள் அபராதம் போடலாம்—ஆனால் முதல்வரின் அவசரச் சட்டப்படி அப்படி ஒரு தொழிலாளி அதிகாரியின் அனுமதியின்றி மலஜலம் கழிக்கப் போனால் ஒரு வருட கடுங்காவல்; 2,000 ரூபாய் அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படும். அதுபோல் பல ஷரத்துக்கள் இருக்கின்றன. இந்த அவசரச் சட்டம்—'Seeks to convert our factories into prison houses' பணிக்கூடங்களை சிறைக்கூடங்களாக மாற்ற இந்த அவசரச் சட்டம் முற்படுகிறது.

இன்னொரு ஷரத்து என்ன கூறுகிறது என்றால்—மேலதிகாரிகள் கொடுத்த வேலையைச் செய்யத் தவறினால் ஓராண்டு கடுங்காவல், 2,000 ரூபாய் அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படும். இந்த ஷரத்தின் விளைவு என்ன. முதலாளிகள் எவ்வளவு அதிக வேலைப்பளு சுமத்தினாலும் முணுமுணுக்காமல் செய்யவேண்டும் அல்லது சிறை செல்லவேண்டும். இது கொத்தடிமை முறையல்ல என்றால் இதற்கு வேறு என்னதான் பெயர்? எமர்ஜன்சி காலத்தில் கூட திருமதி இந்திரா காந்தி செய்யத் துணியாத காரியத்தைச் செய்ய நமது முதல்வர் துணிகிறார். இது நல்ல துணிச்சல் அல்ல என்றுதான் கூறுவேன்.

இதைக் கூறினால்—முதல்வர் அடிக்கடி கூறுவார் "நான் இந்த அவசரச் சட்டத்தை உபயோகப்படுத்தினேனா? இல்லையே! பின் ஏன் ஆட்சேபிக்கிறீர்கள்?" என்று கூறுவார்கள். அந்தச் சட்டத்தை என்றைக்கும் உபயோகப்படுத்த மாட்டேன் என்று உறுதி கூறப் போகிறார்களா? அப்படி என்றால் பிரயோசனம் இல்லாத சட்டத்தை ஏன் வெளியிட்டார்கள்? அப்படி என்றால் ஏன் இன்னும் ரத்து செய்யாமல் வாபஸ் வாங்காமல் வைத்திருக்கிறார்கள்? அதை வைத்திருக்கும் காரணம் என்ன? அதன் அர்த்தம் என்ன? ஆகவே, தங்களுக்குத் தேவையானபொழுது அதை உபயோகப்படுத்தும் உத்தேசமுண்டு. மற்ற நேரத்தில் அதைக் காட்டி தொழிற்சங்க இயக்கத்தை மிரட்டுவதற்கான ரிவால்வராக வேலை நிறுத்தத்தை உடைக்க இன்டிமிடேஷன் செய்து மிரட்ட வைக்கப்பட்டிருக்கிறது. This Ordinance is a declcaration of a Mini Emergency in Industrial Relations என்று நாங்கள் கூறுவோம். இந்த அவசரச் சட்டம் தொழில் உறவுத் துறையில் ஒரு எமெர்ஜன்சி என்று கூறுவேன்.



1981 பிப்ரவரி 9] [திரு. ரா. உமாநாத்]

தொழில் தகராறு சட்டத் திருத்த மசோதா என்று இன்னொரு சட்டத்தைத் தமிழக அரசு தயார் செய்து தொழிலாளர் சட்டக் குழுவின் பரிசீலனைக்கு வைத்துள்ளது. அதுவும் இந்த அரசின் தொழிலாளி வர்க்க விரோதத்தை அம்பலப்படுத்துகின்றது. இந்த மசோதாவின்படி ஒரு வேலை நிறுத்தம் செய்வதற்கு முன் சட்டப்படி ஆறு வார நோட்டீஸ் மட்டும் கொடுத்தால் போதாது. முதலில் வேலை நிறுத்தம் வேண்டுமா, வேண்டாமா என்று ஓட்டெடுப்பு நடத்த வேண்டும். அதில் 60 சதவிகிதம் ஆதரவு ஓட்டும் பெற வேண்டும். அதற்கு சில நாட்கள் போகும். அதற்குப் பிறகு 6 வார வேலை நிறுத்த நோட்டீஸ் கொடுக்க வேண்டும். ஸ்ட்ரைக் நோட்டீஸ் கொடுத்த உடனே கன்சிலியேஷன் ஆரம்பமானதாக அர்த்தம் என்று சட்டம் கூறுகிறது. அதே நேரத்திலே இன்னொன்றும் சொல்லப்படுகிறது. கன்சிலியேஷன் நடைபெறுகிறபோது வேலை நிறுத்தம் செய்வது சட்ட விரோதம் என்றும் சட்டம் கூறுகிறது. கன்சிலியேஷனை 6 வாரத்திற்கு மேல் முதலாளிகள் அல்லது அதிகாரிகள் இழுத்தடிப்பார்கள். இந்த நிலைமையிலே ஸ்ட்ரைக் நோட்டீஸ் கொடுத்து, 6 வாரத்திற்குள்ளாக வேலை நிறுத்தம் செய்யவில்லை என்றால் ஸ்ட்ரைக் நோட்டீஸ் காலாவதியாகி விடும் என்று வேறு சட்டம் கூறுகிறது. ஆகவே என்ன நிலைமை என்றால், மீண்டும் நோட்டீஸ், மீண்டும் கன்சிலியேஷன், மீண்டும் இழுவை, மீண்டும் காலாவதி. இதுதான் நடக்குமென்றால் இது போகாத ஊருக்கு வழி காட்டுகிற ஏற்பாடுதானே?

[மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை]

வேலை நிறுத்த வாக்கெடுப்பை சட்டக் கட்டமாக்குவதன் விளைவு என்ன ஆகும்? முதலாளிகள் ஒரு தலைப்பட்சமாக நடந்து கொள்வார்கள், வேலைப் பளுவை உயர்த்துவார்கள், ஆள் குறைப்புச் செய்வார்கள், சங்க ஊழியர்களை திடீரென்று டிஸ்மிஸ் செய்வார்கள். சூப்ரவைசர் அல்லது மேனேஜர் சில சந்தர்ப்பங்களிலே முதலாளி தொழிலாளர்களை அடித்துக் கொல்வார்கள். அப்போது முதல்வரின் மசோதாபடி நாம் பிணத்திற்கு முன்னால் ஓட்டுப் பெட்டி வைத்து ஓட்டுப் போட்டுக் கொண்டிருக்க வேண்டும். பிறகு எண்ண வேண்டும். 60 சதவீதம் வந்தால் அப்புறம் ஸ்ட்ரைக் பண்ணி பிணத்தை தூக்கி மயானத்திற்குத்தான் போக வேண்டும். இது யதார்த்தத்திற்கு எவ்வளவு புறம்பானது என்பதை எடுத்துக் காட்டவே இதைக் கூறினேன். இதுதான் விளைவு என்று முதல்வருக்கு தெரியாதா? தெரியும். தெரிந்துதான் கொண்டுவரப்பட்டிருக்கிறது. பின் ஏன் ஸ்ட்ரைக் ஓட்டெடுப்பை சட்டக் கட்டாயமாக்குகிறார்? வேலை நிறுத்தம் ஆரம்பிப்பதற்கு முன்னதாக போதிய அளவுக்கு அதை உடைப்பதற்காக முழு தயாரிப்புகளுக்கு முதலாளிகளுக்கு நேரம் கொடுக்கப்பட வேண்டும். அவர்கள் ஆட்களைக் கொண்டு வர வேண்டும், கருங்காலிகளை அழைத்துக் கொண்டு வர வேண்டும், சமைத்துப் போட வேண்டும், அரிசி பருப்பு வர வேண்டும், சமைத்துப் போடுவதற்கு ஆட்கள் கொண்டு வர வேண்டும்,

[திரு ரா. உமாநாத்] [1981 பிப்ரவரி 9

அதற்கெல்லாம் முதலாளிகளுக்குச் சந்தர்ப்பம் கொடுக்க வேண்டும், முதலாளிகளுக்கு நீண்ட அவகாசம் கொடுக்க வேண்டும் அதற்குத்தான் இந்த ஏற்பாடு.

நாங்கள் ஸ்ட்ரைக் வாக்கெடுப்பதற்கு எதிரல்ல. சி.ஐ.டி.யு. யூனியன்களிலே சில சந்தர்ப்பங்களிலே ஓட்டெடுப்பு நடத்தியிருக்கிறோம். ஆனால் அதற்கு சட்டக் கட்டாயம் இருக்கக் கூடாது. பேலட் வைத்தால் ஒற்றுமையை குலைக்க போராட்டத்தை உடைக்க முதலாளிக்கு உதவுமா அல்லது ஒற்றுமையை வலுப்படுத்த தொழிலாளர்களுக்கு உதவுமா என்று சங்கம் நிர்ணயிக்கும் அந்த உரிமை சங்கத்தினுடையதுதான். அந்த உரிமையை சர்க்காருக்கோ அல்லது முதலாளிக்கோ அடகு வைக்க முடியாது.

இதைப் பாருங்கள். இந்த அவையை நான் கேட்டுக் கொள்கிறேன். வேலை நிறுத்தத்திற்கு ஓட்டெடுப்பு என்ற ஏற்பாடு தம்முடைய முதல்வர் சொன்னது அல்ல, அது மற்றவர்களுடைய சரக்கு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அது எங்கேயிருந்து எடுக்கப்பட்டது என்று சொன்னால் நான் கோட் பண்ணுகிறேன்.

'Every decision to go on strike shall be supported by not less than sixty per cent of the employees in a strike ballot conducted in such manner as may be prescribed prior to the giving of the notice referred to in clause (a) of sub-section (2) and the notice shall be given by the negotiating agent in such form as may be prescribed.' என்று சொல்லப்பட்டிருக்கிறது. எதிலேயிருந்து படித்து இருக்கிறேன் தெரியுமா? ஜனதா அரசாங்கம் கொண்டு வந்த கறுப்பு மசோதாதான். அதிலேயிருந்துதான் இது எடுக்கப்பட்டிருக்கிறது. ஐ.என்.டி.யூ.சி., ஜனதா கட்சி சங்கங்கள் உட்பட அண்ணா தி.மு.க. தவிர தமது நாட்டின் அனைத்து சங்கங்களும் குப்பைத் தொட்டியில் தூக்கி எறிந்த மசோதா அது நாடாளுமன்றத்திலே கொண்டு வந்தபோது அதை ஜனதா எம்.பி.க்களே எதிர்த்த மசோதா. அந்தக் கட்சியே தூக்கியெறியக் கூடிய மசோதாவாக இருந்தது. அப்படி பிணமாகி விட்ட மசோதாவை மீண்டும் நம்முடைய முதல்வர் கொண்டு வந்து அதற்கு உயிர் கொடுக்க முன் வரலாமா? நான் மீண்டும் கேட்கிறேன். அண்ணா தி.மு.க. விற்கு என்று ஒரு இன்டிபென்டன்ட் பாலிசி வேண்டாமா? இந்திரா காங்கிரஸிடம் கொஞ்சம் ஜனதாவிடமிருந்து கொஞ்சம் என்று அங்கேயிருந்து கொஞ்சம் இங்கேயிருந்து கொஞ்சம் என்று எடுத்துக்கொள்வது உங்களுடைய சொந்த பாலிசியாகுமா? இதைச் சொல்கிறபோது எனக்கு ஒன்று ஞாபகம் வருகிறது. ஒரு தமிழன் கன்னடப் பெண்ணை காதல் கல்யாணம் செய்தார். அவர் மாமியார் வீட்டுக்கு சாப்பிடுவதற்காக மங்களூரோ, பெங்களூரோ போனார். அங்கே



1981 பிப்ரவரி 9] [திரு. ரா. உமாநாத்]

உணவு பரிமாறுகிறவர்கள் ஒரு தரம் பரிமாறி ஆகி விட்டது. அதற்குப் பிறகு பரிமாறுகிறபோது அந்த வீட்டிலே உள்ளவர்கள் கன்னடத்திலே சாக்கா, பேக்கா என்று கேட்டார்கள். அதற்கு கன்னடத்திலே அர்த்தம் போதுமா இன்னும் வேண்டுமா என்பது தான். ஆனால் அவருக்கு ஒன்றும் புரியவில்லை. சாக்கிலே கொஞ்சம் போடுங்கள், பேக்கிலே கொஞ்சம் போடுங்கள் என்று சொன்னாராம். அதைப்போல இந்திரா காங்கிரஸில் இருந்து கொஞ்சம், ஜனதாவிலிருந்து கொஞ்சம் என்று சொன்னால் அது விபரீதமாகப் போய் எங்கே போய் நிற்கும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

இந்த மசோதாவிலே சங்க அங்கீகாரம் சம்பந்தமான ஷரத்துக்கள் பிற்போக்குத்தனமானது. அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் தான் ஒப்பந்தங்கள் செய்ய வேண்டும் என்று இருக்கிறது. கரக்ட். ஆனால் அங்கீகாரம் எப்படி முடிவு செய்யப்படுவது? 60 சதவீத தொழிலாளர்கள் அங்கத்தினர்களாக இருக்கிற சங்கம் தான் அங்கீகரிக்கப்படும்.

[முற்பகல் 11-40]

60 சதம் அங்கத்தினர்கள் எந்தச்சங்கத்திற்கு இருக்கிறார்கள். என்பது எப்படி முடிவு செய்யப்படுகிறது? ஓட்டு மூலமா? இல்லையாம். லேபர் இலாக்கா அதிகாரி, தொழிற் சங்கப் பிரதிநிதிகள், முதலாளிகளின் பிரதிநிதிகள் கொண்ட ஒரு குழுதான் சந்தா பதிவேட்டைப் பார்த்து முடிவு செய்வார்களாம். இதற்கு ஓட்டு முறை சட்டக் கட்டாயமில்லையாம். அதையும் அந்தக் கமிட்டியின் மெஜாரிட்டி தான் முடிவு செய்யுமாம். கமிட்டி மெஜாரிட்டி என்றால் என்ன? லேபர் அதிகாரியும், முதலாளிகளும் சேர்ந்தால் மெஜாரிட்டியாகி விட்டது. ஆகவே, நான் கேட்கிறேன், ஸ்ட்ரைக் செய்ய ஓட்டெடுப்பைக் கட்டாயப்படுத்தும் நம்முடைய முதல்வரவர்கள் தொழிலாளர்களின் பிரதிநிதிகள் யார் என்று சங்கம் தேர்ந்தெடுப்பதற்கு மட்டும் ஓட்டு கட்டாயமாகத் தேவை என்று சொல்ல மாட்டேன் என்று சொல்கிறாரே, அதற்கு மறுக்கிறார்களே, இது என்ன ஜனநாயக முறை? முதலாளிக்கு பிரதிநிதி யார் என்பதை, முதலாளிதான் முடிவு செய்வாராம். ஆனால் தொழிலாளிக்குப் பிரதிநிதி யார் என்பதை முடிவு செய்யும் அதிகாரம் தொழிலாளர் பிரதிநிதிகளுக்கு இல்லை; அதற்குத் தொழிலாளர் பிரதிநிதிகளுக்கு முழுக்க முழுக்க அதிகாரம் இல்லை. தொழிலாளிக்குப் பிரதிநிதி யார் என்று தேர்ந்தெடுக்க லேபர் அதிகாரிக்கும், முதலாளிக்கும் பங்கு உண்டு என்று சொல்கிறார்கள். ஜனநாயகத்தில் ஒரு புதிய கண்டு பிடிப்பு இது!

அதோடு, அங்கீகாரம் கோரும் சங்கம் 6 மாதங்களுக்கு முன் சட்ட விரோதமான வேலை நிறுத்தத்தை ஆதரித்திருந்தால், அது மெஜாரிட்டியாக இருந்தாலும் மனுச் செய்யக் கூடாதாம்.

கிறார். அவர் முதலமைச்சராக இருக்கக்கூடிய அந்தச் சர்க்கார், கிராமப்புற விவசாயத் தொழிலாளர்களுக்கு, வெறும் காகிதத்தில் இருந்த ரூ. 8 கூலியைக் கைக்குக் கிடைக்கச் செய்தது. அவர் செய்தார். பெரும்பான்மையான தொழிலாளிகளுக்கு. தொழிற்சங்கவாதிதானே, கிராமப்புற விவசாயிகளுக்கு ரூ. 8 கூலி கையிலே கிடைக்கச் செய்தார். இப்பொழுது, விவசாயத் தொழிலாளிகளுக்குப் பரிந்து பேசக்கூடிய எங்கள் பேரில் பாயும் இந்த அரசாங்க மந்திரிகளை நான் கேட்கிறேன், நீங்கள் அறிவித்த சட்டக் கூலி தமிழகத்தில், பெரும்பான்மையான. விவசாயத் தொழிலாளிகளுக்குக் கிடைக்கச் செய்தார்களா? இல்லையே. நேர் மாறாக, சட்டக் கூலி கேட்கும் விவசாயத் தொழிலாளிகளைத் தடிப்பது, உங்களுடைய ரெவின்யூ அதிகாரிகள் சட்டக்கூலி கேட்கும் விவசாயிகளை, தொழிலாளிகளை, நிலப்பிரபுக்கள் வெளியேற்றி, சட்டக் கூலிக்கும் குறைந்த கூலிக்கு வேலை செய்ய வெளியாட்களைக் கொண்டு வர, நிலப்பிரபுக்களுக்கு ஆதரவளிப்பது, இப்பொழுதுக்கும் அரசாங்கத்திலுடைய போலீஸ் இலாகா, சட்டக் கூலி கேட்கும், விவசாயத் தொழிலாளிகளை பலவந்தமாக வெளியேற்றாமல், அவர்களுக்குத் தான் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று இன்னமும் போலீசுக்கு முதல்வர் உத்தரவிடவில்லையே. நீங்கள்தான் எங்களைப் பார்த்து கேட்கிறீர்கள். வாயல்லா பூச்சிகளைக் கவனித்தீர்களா என்று. இன்னும் நடக்கிறது.

சட்டக் கூலிக்குத் தொழிற்சங்கவாதிகள், விவசாயத் தொழிலாளிகளை, அரியலூர் தாலூகா செங்கியக்குடி கிராமத்தில் திரட்டினோம். மாண்புமிகு அமைச்சர் திரு. எஸ்.டி. சோமசுந்தரம் அவர்களிடம் அதுபற்றிக் கூறி, அவர் சமரசம் செய்விக்க, டி.ஆர். ஓவுக்கு போன் பண்ணினார். ஆனால், நேற்று வரை தாசில்தார், டி.ஆர்.ஓ. தலையிடவில்லை. அங்கே என்ன நடக்கிறது. தாசில்தார் சட்டக் கூலி கிடைக்காது என்று சொல்லி, போராட கூடிய அந்தக் கிராமப்புற ஏழைகளை, அவர் ப்ரஸ்ட்ரேட் பண்ணுகிறார். ஒரு உண்மையைக் கூறினால்— அறையிலே உட்கார்ந்து கேட்பார் முதல்வர் என்று நினைக்கிறேன். அவரே அதிர்ச்சி அடைந்தாலும் அடையலாம். இந்தச் சட்டக் கூலி வேண்டுமென்று அந்தக் கிராமத்தில் விவசாயிகள், தொழிற்சங்க வாதிகள் நாங்கள் தலைமை தாங்கி.......

மாண்புமிகு திரு. கூ. முத்துசாமி : தலைவர் அவர்களே, முதல்வர் அவர்கள் மேலவையிலே இருக்கிறார்.

திரு. ரா. உமாநாத் : நான் பேசுவதை அவர் கேட்கவில்லை. இன்னும் ஒர்ஸ்ட் பொசிஷன், பரவாயில்லை.

சட்டக்கூலி கேட்கக் கூடிய அந்தத் தொழிலாளிகள், தொழிற் சங்கவாதிகள், நாங்கள் கவனிக்கவில்லையென்று சொல்கிறார்களே, நாங்கள் தலைமை தாங்கும்போது, ஆரம்பத்தில்

ஒரு பேச்சு வார்த்தை நடந்தபொழுது, அ.இ.அ.தி.மு.க. ஸ்தலப் பிரமுகர், நிலப் பிரபுக்களுக்காகப் பேச வந்த அவர் என்ன சொன்னார் தெரியுமா, எல்லோரையும் வைத்து. நீங்கள் யோசிக்கவேண்டும், அப்படிப்பட்டவர்களை, கட்சிக்குள்ளே வைத்தால், கட்சி என்ன ஆவது, என்று.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் :** (திரு. வி. வி. சுவாமிநாதன்) : மாண்புமிகு உறுப்பினர் பேச ஆரம்பித்து 1 மணி நேரம் ஆகிவிட்டது. தயவுசெய்து முடித்து விடுங்கள்.

**திரு. ரா. உமாநாத் :** அந்த வட்டாரத்திலே இருக்கிற அ.இ.அ.தி.மு.க. பிரமுகர் என்ன சொன்னார் தெரியுமா? சட்டக் கூலியா கேட்கிறீர்கள். அரை படி, படி என்று அளிக்கும் என்று கிண்டல் செய்தார். அவர் அதோடு நிற்கவில்லை. நாங்கள் முதல்வர் சொன்ன வாயில்லா பூச்சிகளுக்கு சட்டக்கூலி பெற்றுத்தர, ஜனங்களைத் திரட்டி, ஊர்வலம் ஏற்பாடு செய்தால், மேற்படி அ.இ.அ.தி.மு.க. பிரமுகர் அவருடைய ஊரில் கூட்டம் கூட்டி ..................

**திரு. கே. சௌந்திரராசன் :** மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் பேசுகிறபொழுது, அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர் என்று யாரைக் குறிப்பிட்டுப் பேசுகிறார் என்று தெரியவில்லை. யார் சம்பந்தமும் இல்லாமல், அனைத்திந்திய அண்ணா தி.மு.க. உறுப்பினர் பேசியதாக, கற்பனையாகக் கருதிக் கொண்டு, அனைத்திந்திய அண்ணா தி.மு.க. உறுப்பினர்மீது களங்கத்தை உருவாக்குவது சரியல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ரா. உமாநாத் :** தலைவர் அவர்களே, களங்கத்தை உருவாக்குவது அல்ல. நான் பெயர் சொல்லவில்லை. இங்கே பெயர் சொல்லக்கூடாது என்று ரூலிங் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதனால்தான் ஸ்தலப் பிரமுகர் என்று நான் சொன்னேன். பெயர் வேண்டுமென்று நீங்கள் உத்தரவிட்டால் நான் பெயர் சொல்லத் தயார். பெயர் வேண்டுமா, சொல்லுங்கள்

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் :** (திரு. வி. வி. சுவாமிநாதன்) பெயர் வேண்டாம், விரைவில் முடியுங்கள்.

[முற்பகல் 11-50]

**திரு. ரா. உமாநாத் :** இன்று ஊர்வலத்தின் மீது டீசல் ஸ்ப்ரே பண்ணி தீப்பந்தம் எறியலாமென்று முடிவெடுக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் நண்பர் சௌந்தரராஜன் அவர்களுக்கு நான் ஒன்று சொல்லிக்கொள்கிறேன். இப்படிப்பட்ட ஒரு நபர் உங்களுடைய கட்சியிலேயிருந்தால், உங்கள் கட்சியின்

[திரு. ரா. உமாநாத்] [1981 பிப்ரவரி 9

இமேஜ் கெட்டு விடும். திருச்சி எஸ்.பி. யிடம் மார்க்கிஸ்ட் கட்சி யின் சார்பாக நாங்கள் சொன்னோம். ''ஐயா, சட்டப்படி கூலி கேட்பதற்காக, பேச்சு வார்த்தை நடத்துவதற்கு போகின்ற தொழிலாளர்களை கைது செய்து போகிறார்கள'' என்றும் அப்படி நடந்தால் அதன் விளைவாக தவறான விளைவுகள் ஏற்படும் என்றும் சொன்னோம். உடனே எஸ்.பி. க்கு கோபம் வந்தது. எங்களை மிரட்டுகிறாயா, நாங்கள் மிரட்டலுக்கு பணிய மாட்டோம் என்று கூறினார். இந்த அரசாங்கத்தின் சட்டத்தை அமல் படுத்தவேண்டிய பொறுப்பிலே இருக்கின்ற ஒரு அதிகாரியான எஸ்.பி. அவர்கள் இந்த கடமையை செய்யாதிருக்கிற போது, அதை நாங்கள் சுட்டிக்காட்டியபோது அதை உதவியாக எடுத்துக்கொள்வதற்கு பதிலாக அவருக்கு ஆத்திரம் வருகிறது. இங்கே நான் அரசாங்கத்தை ஒன்று கேட்க விரும்புகிறேன் திருச்சி எஸ்.பி. அவர்களுக்கும் அங்கே இருக்கக்கூடிய நிலப்பிரபுக்களுக்கும் ஏதாவது உறவு இருக்கிறதா என்று. இது குறித்து விசாரணை நடத்தவேண்டும் ........ (குறுக்கீடு)

கைத்தறி நெசவாளர்களைப் பொறுத்தவரையில் பாதுகாப்புச் சட்டம் கொண்டு வா, கொண்டு வா என்று நாங்கள் தான் கத்திக்கொண்டிருக்கிறோம். ஆனால் கொண்டு வரவேண்டிய நமது அரசு இனனும் கொண்டு வராமல் நம்மையே திருப்பி கேட்கிறார்கள்.

ஆகவே இந்தக் கண்டனத் தீர்மானத்தை கொண்டு வந்துள்ள எங்களுக்கு முதல் அமைச்சர் அவர்கள் பதில் கூறுகிற போது, நாங்கள் விரும்புவது ''தொழிலாளர் விரோத பாதையை கைவிடுவதாகவும் ; உழைப்பாளிகள் போராட்டத்தை எதிர்க்கும் பாதையை கைவிடுவதாகவும், வேலை நிறுத்தச் சட்டத்தை வாபஸ் பெறுவதாகவும்— முற்றிலும் வாபஸ் பெறுவதாக— முன்பு வாபஸ் பெற்றார்கள். மீண்டும் கொண்டு வந்தார்கள். அந்த மாதிரி வேண்டாம்— முற்றிலும் வாபஸ் பெறுவதாகவும், தொழிலாளர் சட்டக்குழுவில் வைத்துள்ள இரண்டு மசோதாக்களை கைவிடுவதாகவும் கூறவேண்டும்.

பி. அண்ட் சி. மில்லை மைய அரசு தேசியயமாக்க வேண்டுமென்று பகிரங்கமாக பிரகடனம் செய்து, தொடர்ந்து அதற்கான நடவடிக்கையை எடுக்கவேண்டும். இன்னும் தீர்க்கப்படாத டிஸ்பியூட்களை சீக்கிரமாக தலையிட்டு தீர்த்துக் கொடுக்கவேண்டும். தொழிலாளர் கோர்ட்டுக்கு அனுப்பப் பெறாத டிஸ்மிஸ் ஆன கேஸ்களையும் கோர்ட்டுக்கு விட வேண்டும். பழி வாங்குதல், மன்னிப்புக்கோருதல் போன்ற முறைகளை கைவிட வேண்டும். தாவா சம்பந்தப்பட்டவர்கள் அனைவரையும் விடுதலை செய்து கேஸ்களையும் வாபஸ் பெறவேண்டும். தொழிற் சங்க உரிமைகளைப் பாதுகாக்கும் ஒரு புது மசோதாவைக் கொண்டு வருவதற்கு, தொழிற்சங்கப் பிரதிநிதிகளைக் கூட்

விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்னும்
தீர்க்கப்படாத நெய்வேலி, செராமிக்ஸ், பால்வளம், காடம்
பாறை, அண்ணாமலை பல்கலை கழகம், மாநில கல்லூரி
பிரச்சினைகளை தீர்த்து வைக்கக் கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தீர்மானத்தை நான் முன்மொழிகின்ற போதே
உங்களிடம் மெஜாரிட்டி இருக்கிற காரணத்தால், இது தோற்று
விடும் என்பது எனக்குத் தெரியும், ஆனாலும்
We will have the satisfaction that we stood by the working class

* திரு. கே. சௌந்தரராசன் : தலைவர் அவர்களே,
மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி இயக்கத்தினுடைய துணைத்
தலைவர் மாண்புமிகு திரு. உமாநாத் அவர்கள் கண்
டனத் தீர்மானம் கொண்டு வந்து இந்த அரசினுடைய கொள்
கையை கண்டித்து அவர்கள் ஆற்றிய உரையின் மீது என்னுடைய
எதிர்ப்பை தெரிவித்துக் கொள்வதற்கும், இந்த அரசு தொழி
லாளர்களுக்கு விரோதமாக செயல்படுகிறது என்று அவர்கள்
கூறுவதை மறுப்பதற்கும், நான் உங்கள் முன்னாலே நிற்கிறேன்.
மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் பேசி முடிக்கிற
போது ஒன்றைத் தெளிவாகச் சொன்னார்கள். நாங்கள் லேபர்
கிளாசிற்கு பின்னாலே நிற்கிறோம் என்பதை காட்டுவதற்காகத்
தான் இந்த தீர்மானத்தை இங்கே கொண்டு வருகிறோம், இதை
நீங்கள் தோற்கடிப்பீர்கள் என்பதும் எங்களுக்குத் தெரியும்,
இருந்தாலும் தொழிலாளர்களுக்கு ஒரு நம்பிக்கையை ஊட்டு
வதற்காகத்தான் இந்த தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கி
றோம் என்று அவர்கள் பேசி முடித்ததில் இருந்தே தொழிலாளர்
களுக்கு இவர்கள் மீது ஒரு நல்லெண்ணம் ஏற்பட வேண்டும்
என்பதற்காகத் தான் கொண்டு வரப்பட்டிருக்கிறது. தங்கள்
மீது தொழிலாளர்களுக்கு ஏற்பட்ட குறைபாடுகளை போக்கிக்
கொள்ள வேண்டுமென்பதற்காக இப்படிப்பட்ட ஒரு
தீர்மானத்தை இங்கே முன் மொழிந்திருக்கிறார்கள். இதன்
விளைவாக இவர்கள், அவர்களுடைய நம்பிக்கையை பெறலாம்.
இங்கே ஒரு புறத்திலே அரசாங்கத்தை கண்டிக்கிறோம் என்று
சொல்லிக் கொண்டு மறு புறத்திலே அரசாங்கத்தின் கொள்
கையை நாங்கள் கண்டிக்கிறோம் என்று தொழிலாளர்களிடத்
திலே கூறி ஒரு புதிய செல்வாக்கைப் பெறலாம் என்று கருதித்
தான் இந்த தீர்மானத்தை கொண்டு வந்திருக்கிறார்கள் என்று
நான் கருதுகிறேன்.

இன்றைய தினம் அவர்கள் குறிப்பிட்ட பல்வேறு நிகழ்ச்சி
களை நான் பார்த்தேன். நான் அவர்களுக்கு ஒன்றைச் சுட்டிக்
காட்ட விரும்புகிறேன். இந்த அரசாங்கம் அமைந்ததற்குப்
பின்னாலே தான் தமிழ்நாட்டில் தொழிலாளர்கள் போராட்டங்
கள் வெகுவாகக் குறைந்து இருக்கிறது. தொழிற்சாலைகளும்
வேலை நிறுத்தங்கள் இல்லாமல் பெருமளவில் இயங்கும் அள

விற்கு சூழ்நிலை உருவாக்கப்பட்டு இருக்கிறது. கடந்த காலத்தில் இருந்த நிலைமைகளோடு ஒப்பிட்டுப் பார்த்தால் குறிப்பாக இந்தியா விடுதலை பெற்ற நாள் முதல் இருந்த நிலைமைகளோடு ஒப்பிட்டுப் பார்த்தால் ஒவ்வொரு ஆண்டு எந்த அளவிற்குப் போராட்டங்கள் நடைபெற்று இருக்கின்றன, எந்த அளவிற்கு தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள் என்கிற கணக்கை எடுத்து ஒப்பிட்டுப் பார்த்தால், இந்த அரசாங்கம் வந்த பின்னர் தான், புரட்சித் தலைவர் தலைமையில் இயங்குகின்ற இந்த அரசு வந்த பின்னர் தான் தொழிலாளர்களின பக்கம் துணை நின்று அவர்களுக்குப் பல்வேறு சலுகைகள், வசதிகள் பெற்றுத் தந்து இருக்கிறது என்பதைத் தெரிவிக்க வேண்டியது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்..

பி அண்ட் சி மில் தொழிலாளர்கள் நிலைமையைப் பற்றிச் சொன்னார்கள். அந்தத் தொழிலாளர்கள் தங்கள் பிரச்னைகளை முதலமைச்சர் அவர்களிடத்தில் எடுத்துச் சொல்ல வேண்டும் என்று ஊர்வலமாக வந்த நேரத்தில், அவர்கள் கோட்டை வரை வந்து சொல்லட்டும் என்று காத்து இருக்காமல், சட்ட மன்றம் நடந்து கொண்டு இருந்த அதே நேரத்தில், பூக்கடை காவல் நிலையம் அருகில் சென்று அவர்களுடைய கோரிக்கைகளை நேரடியாகக் கேட்டு, அதற்கான நடவடிக்கைகளை எடுப்பேன் என்று அவர்களுக்கு ஆறுதல் கூறி, அதற்கான நடவடிக்கைகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். கடந்த காலத்தில் நாம் பார்த்து இருக்கிறோம் தொழிலாளர்களைச் சந்திக்கமாட்டேன், அவர்கள் கோரிக்கைகளைக் கேட்க நான் தயாராக இல்லை என்று இருந்த அமைச்சர்களை நாம் பார்த்து இருக்கிறோம் அத்தகைய நிலைமைகளை மதிப்பிற்குரிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் மறந்து இருக்க மாட்டார்கள் என்று நம்புகிறேன்.

விவசாயிகள் போராட்டம், தொழிலாளர்கள் போராட்டம் என்று சொன்னால், அதில் போலீஸ் தலையிடுகிறது என்று சொன்னார்கள் நான் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். புரட்சித் தலைவர் அவர்கள் தான் தொழிலாளர்கள் தங்கள் பிரச்னைகளில் வெற்றி பெற போராடுகின்ற உரிமை உண்டு, அதிலே காவல் துறை தலையிடக் கூடாது என்று சொன்னார்கள். அந்த வகையில் நடைமுறையில் செய்தும் காட்டி இருக்கிறார்கள். ஆனால் நான ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். போராட்டம் என்கிற பெயரால் வன்முறையில் ஈடுபடுகிற போதும் காவல் துறை தலையீடு இருக்கக் கூடாது என்று எதிர்க் கட்சித் தலைவர்கள், உறுப்பினர்கள் விரும்புகிறார்களா என் பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. தெளிவான தீர்மானங்களுடன், தெளிவான நடவடிக்கைகளுடன் நடக்கும் எந்தப் போராட்டத்திலும் காவல் துறை தலையிடாது. நிர்வாகமும், அரசும் தொழிலாளர்களும் சேர்ந்து. அமர்ந்து நல்ல முறையிலே சுமுகமான முறையிலே அவற்றுக்கு தீர்வு கண்டு இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஆனால், உங்களுடைய கொள்கை தான் அடிக்கடி மாற்றம் பெறுவதாக இருக்கிறது. தேர்தலுக்கு முன்னால் தொழிலாளர் விரோதக் கொள்கை வைத்து இருக்கிறோம் என்று சொன்னீர்கள். தேர்தல் காலத்தில் திடீரென்று அந்தக் கருத்தை மாற்றிக் கொண்டீர்கள். ஆகவே, உங்களுக்குத் தேவையானபோது, தாங்கள் விரும்புகிற வகையில் கருத்துக்களைச் சொல்லிக் கொண்டு இருக்கிறீர்களா? தொழிலாளர்கள் போராடுகிறார்கள் என்று சொன்னால், அந்தப் போராட்டத்தில் என்ன நியாயம் இருக்கிறது, அந்த நியாயத்தை எந்த அளவிற்கு முதலாளிகளிடத்தில் எடுத்துக் கூறி வற்புறுத்தலாம் என்கிற அடிப்படையில் தான் அரசாங்கம் செயல்பட முடியும். அதை விட்டு விட்டு, தொழிலாளர்கள் நடத்தும் எந்தப் போராட்டமாக இருந்தாலும் அதில் இணைத்துக் கொள்ள வேண்டும் என்று சொன்னால், அது தொழிலாளர் முதலாளிகளிடையே நல்லுறவு ஏற்படுத்தாது என்பது மட்டுமல்ல, அரசாங்கமும் முதலாளிகளை வற்புறுத்துகிற காரணத்தால், அவர்கள் தொழிற்சாலைகளை மூடிவிட்டுப் போக நேரிடும். அதன் பிறகு, எங்களைக் குற்றம் சாட்டுவீர்கள், உங்களுடைய தொழில் கொள்கை சரியல்ல என்று. ஆகவே, அத்தகைய ஒரு நெருக்கடியை உருவாக்குகின்ற வகையில் அரசு நடந்து கொள்ள விரும்பவில்லை. தொழிலாளர்கள் போராட்டம் எந்த அளவிற்கு நியாயம் என்பதை அனுசரித்துத்தான் புரட்சித் தலைவர் அரசு நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு வருகிறது என்று சொல்லிக்கொள்கிறேன்.

இங்கே ஒன்றை நினைவுபடுத்த விரும்புகிறேன். 1975 என்று கருதுகிறேன். பேருந்துத் தொழிலாளர்கள் போராட்டம் நடத்திய போது, ஒரு புறத்தில் காவல் துறையை வைத்துக் கொண்டு தொழிலாளர்களை நசுக்கிய காட்சிகளை நாம் பார்த்து இருக்கிறோம். ஆனால் இன்றைக்கு அப்படிப்பட்ட போராட்டங்கள் வந்த நேரத்திலும் கூட, அந்த எந்த அளவிற்குத் திறமையான முறையில் அணுகி, தொழிலாளர்களுக்கு நன்மை செய்து இருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஆகவே, தொழிலாளர் பிரச்னை என்று சொன்னால், அதன் தன்மையைப் பொறுத்து நடவடிக்கை எடுப்பது தான் சரியானதாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

[நண்பகல் 12-00]

அவைகளைத் தீர்ப்பதிலே ஒரு நல்ல முடிவை எடுப்பதுதான் ஒரு நல்ல அரசு. அந்த வகையிலே, பிரச்னைகள் எத்தனையோ உருவாக்கப்பட்டாலும், அவைகளை எல்லாம் நல்ல முறையிலே தீர்த்து வைக்கின்ற முயற்சிகளை இந்த அரசு எடுத்திருக்கிறது. அப்படி நல்ல முடிவுகளை எடுக்கும் போது யாருக்கும் கடினம் இல்லாமல், யாருக்கும் தொல்லை இல்லாமல் முடிவுகளை எடுக்கும் வகையில் இந்த அரசின் கொள்கைகள் அமைந்திருக்கின்றன.

இங்கே காம்பராறை திட்டம் தொழிலாளர்களின் பிணத்தின் மீதுதான் கட்டப்பட்டது என்றும், லால்சந்த், ஹீராச்சந்துகளுக்கு துணை போனார்கள்என்றும் சொன்னார்கள். சில சந்தர்ப்பங்களில் இப்படிப்பட்ட தொல்லைகள் வந்து விடுகின்றன தவிர்க்க முடியாத காரணங்களால். கம்யூனிஸ்ட் கட்சி அரசாக இருந்தாலும் சரி, காங்கிரஸ் கட்சி அரசாக இருந்தாலும் சரி, ஜனதா அரசாக இருந்தாலும் சரி, தி.மு.க. அரசாக இருந்தாலும சரி, அண்ணா தி.மு.க. அரசாக இருந்தாலும் சரி, எந்த அரசாங்கமாக இருந்தாலும் இப்படிப்பட்ட சம்பவங்கள் எப்போதாவது வந்து விடும். அது தவிர்க்க முடியாதது. அப்படிப்பட்ட நடவடிக்கை எடுக்கும் போது எந்த அளவுக்கு கடமை இருக்கிறது, எந்த அளவுக்கு அவர்களுடைய கோரிக்கைகள், கொள்கைகள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்பதைப் பார்க்க வேண்டுமே தவிர, அவைகளுக்கு ஒரு உள்நோக்கம் கற்பிக்கக் கூடாது. எதற்கு எடுத்தாலும் உள் நோக்கம் கற்பிப்பதாக இருந்தால் எந்தப் பிரச்சனைக்கும் தீர்வு காண முடியாது. அது இன்று நாட்டிலே இருக்கும் பிரச்சனையை மேலும் மோசமாக்கிவிடும்.

இன்றைய தினம் இந்த அரசு தொழிலாளர்களுக்குப் பின்னால் இருக்கிறது ; மாணவர்களுக்குப் பின்னால் இருக்கிறது ; ஆசிரியர்களுக்குப் பின்னால் இருக்கிறது. இன்றைக்கு அத்தனை பேர்களுடைய நல்ல எண்ணங்களையும் இந்த புரட்சித் தலைவர் அரசு தன்னுடைய பக்கத்திலே இழுத்துக் கொண்டிருக்கிறது. எந்தப் பிரச்சனையானாலும் அதிலே தீவிர கவனம் செலுத்தி, நல்ல முறையிலே அணுகி, தீர்வு காண்பது இந்த அரசு. சமுதாயத்தின் எல்லாத் தரப்பினரும் நலம் பெறும் வகையிலே நல்ல பல கொள்கைகளை வகுத்து, திட்டங்களைப் போட்டு வருகிற இந்த அரசின் மீது இன்றைக்கு கண்டனத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் துணைத் தலைவர் அவர்கள். அவர்களை நான் கேட்டுக்கொள்வது எல்லாம், கடந்த அரசுகள் எப்படி நடந்து கொண்டன ; இந்த புரட்சித் தலைவர் அரசு எந்த வகையிலே நடந்து கொண்டிருக்கிறது என்பதை நீங்கள் சற்று எண்ணிப் பாருங்கள். சிம்கோ போராட்டத்தில் 12 (3) செட்டில்மென்டைப் பற்றி கவலைப்பட மாட்டேன் என்று இருந்த அந்த நிர்வாகத்தினரை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எப்படி பணிய வைத்தார்கள் என்பது உங்களுக்குத் தெரியும். அந்த பெருமைக்குரிய இந்த பரட்சித் தலைவர் அரசை இன்றைக்கு நீங்கள் குற்றம சாட்டுகிறீர்கள்.

இன்றையதினம் தொழிலாளர் பிரச்னையானாலும், மாணவர் பிரச்னையானாலும், வேறு எந்த பிரச்னையானாலும் அவைகளை நல்ல முறையிலே தீர்த்து வைக்கின்ற, தீர்த்து வைக்க பாடுபடுகின்ற இந்த அரசை தொழிலாளர் விரோத அரசு என்று சொல்வது கம்யூனிஸ்ட் கட்சியினரின் நிலையாக இருக்கிறது. நல்ல முறையிலே, சுமுகமாகப் பிரச்சனைகளைத் தீர்ப்பதிலே





இந்த அரசு நல்ல பாதையிலே, நேர்மையான பாதையிலே சென்று கொண்டிருக்கிறது ; இதை திசை திருப்ப வேண்டாம் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் துணைத் தலைவரைக் கேட்டுக் கொண்டு, இந்த தீர்மானத்தை வாபஸ் பெறுவதுதான் உங்களுக்கு இருக்கிற நிலை என்று தெரிவித்து, அமர்கிறேன். நன்றி. வணக்கம்.

*திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, இந்த மாமன்றத்தில் ஆளுகிற அண்ணா தி.மு.க. அரசினுடைய தொழிலாளர் விரோத கொள்கையைக் கண்டித்து எதிர்க்கட்சிகளினுடைய சார்பிலே கொண்டுவரப்பட்டிருக்கிற கண்டனத் தீர்மானத்தை ஆதரித்து என்னுடைய கட்சியின் சார்பில் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

எல்லாக் கட்சிகளும் கண்டத் தீர்மானத்தைக் கொடுத்தார்கள் என்றாலும் மாண்புமிகு உமாநாத் அவர்கள் இந்த கண்டனத் தீர்மானத்தை முன்மொழிந்து பேசியிருக்கிறார்கள். நாங்கள், திராவிட முன்னேற்றக் கழகம் மட்டும் கொடுத்திருந்தால் அண்ணா தி.மு.க. வுக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் விரோதம், அதனால் கொடுத்திருக்கிறார்கள் என்று சொல்வார்கள். ஆனால் தேர்தல் காலத்தில் தோழமை பூண்டிருந்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும், மார்க்கிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் அவர்களோடு தோழமை கொண்டிருந்த மற்ற கட்சியினரும் இந்த அரசினுடைய போக்கை, தொழிலாளர் விரோத கொள்கையை கண்டித்திருக்கிறார்கள். இந்தத் தீர்மானத்தை இங்கே கொடுத்திருக்கிறார்கள் என்றால் உள்ளபடியே நான் பெருமைப் படுகிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒருமுறை சொன்னார்கள். Political adjustment is one thing. Electoral alliance is another thing. And idealogy is different. என்று அவர்கள் சொன்னார்கள். அந்த கருத்திற்கு ஏற்ப இங்கே திரு. உமாநாத் அவர்கள் தோழமை பூண்டிருந்தார்கள். தேர்தல் நேரத்தில் என்றாலும் தொழிலாளர்களுக்கு விரோதமாக இந்த சர்க்கார் சென்றுவிட்டது என்றவுடன் இன்று அதற்காக குரல் கொடுக்கிறார்கள் என்பதைப் பார்க்கும்போது இந்த அரசு எவ்வளவுதூரம் தனனுடைய கொள்கையிலிருந்து விலகிபோய் இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

வானவில் வாக்குறுதிகளைக் கொடுத்துவிட்டு, வாக்குகளைப் பெற்று இன்றைக்கு ஆட்சிக்கு வந்தபிறகு சமுதாயத்தில் இருக்கிற எந்த தரப்பிலுள்ளவர்கள் கோரிக்கையையும் நிறைவேற்றவில்லை ; நிறைவேற்றாமல் இந்த அரசு புறக்கணித்திருக்கிறது என்பதற்காக மட்டுமல்ல இந்தக் கண்டனத் தீர்மானம் ; இன்றைக்கு எல்லாத் தரப்பு மக்களின் அதிருப்தியையும் இந்த அரசு பெற்றிருக்கிறது என்று நான் குற்றஞ்சாட்டுகிறேன்.

[திரு. துரைமுருகன்] [1981 பிப்ரவரி 9

நேற்று முன்தினம் சமுதாயத்திலே பெரும்பகுதியாக இருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்கள் உரிமைக் குரல் எழுப்பக் கூடாது என்று அந்த குரல்வளையை நெரிக்கக்கூடிய அளவுக்கு தடை சட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றி, மாறாத களங்கத்தை இந்த அரசு ஏற்படுத்தியிருக்கிறது.

இன்னொரு புறத்திலே ஒரு பெரும் பிரிவாக இருக்கின்ற என்.ஜி.ஓ. வின் தீர்மானம் பெரியார் திடலிலே ஒலித்துக்கொண்டிருக்கின்றது. மீதி இருக்கின்ற சமுதாயத்தின் பெரும் பிரிவாக, முதுகெலும்பாக இருக்கின்ற பாட்டாளி வர்க்கத்தை அவர்கள் குரல் எழுப்பா வண்ணம் தடை செய்கின்ற தடை சட்டத்தை இந்த மாமன்றத்திலே கொண்டு வந்து நிறைவேற்றுவதற்கும் தைரியம் இல்லாமல் ஆளுநருடைய ஆர்டினன்ஸ் மூலமாகக் கொண்டு வந்தீர்கள். இப்படி ஆர்டினன்ஸ் கொண்டு வருவதன் மூலமாகவே காலத்தைக் கழித்துக் கொண்டிருக்கின்றது இந்த அரசு என்று நான் சுட்டிக்காட்டுகிறேன். எங்களுடைய கட்சியைப் பொறுத்தவரையில் இந்த அரசு தொழிலாளருக்கு விரோதமான சர்க்கார், பாசிச கொள்கையைக் கையாண்டு வருகின்ற சர்க்கார், முதலாளிகளுடைய மகிழ்ச்சியிலேதான் இறைவனைக் காணுவேன் என்று துடித்துக்கொண்டிருக்கின்ற அரசு என்று பலமாகக் குற்றஞ்சாட்டுகிறேன். எப்படி எப்படி தொழிலாளருக்கு விரோதமாக நடந்திருக்கின்றது இந்த அரசு என்பதற்கு அடுக்கடுக்கான ஆதாரங்களை எல்லாம் மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் அடுக்கிக் காட்டி இருக்கிறார்கள். ஆனால் ஒன்றை மட்டும் நான் உங்களுக்கு உதாரணத்திற்காச் சுட்டிக் காட்டுகிறேன். தொழிலாளர் வர்க்கம் வேலை செய்கிறது. வேலைக்கு ஏற்ற ஊதியம் தேவை, வசதி தேவை அதைத் தராவிட்டால், தருவதற்கு நிர்வாகம் மறுக்குமேயானால் எங்களுக்கு கிடைக்கின்ற ஒரே ஒரு ஆயுதம் வேலை நிறுத்தம் செய்வதுதான் என்று அவர்கள் கூக்குரல் எழுப்ப முடியும். 'ஆனால் அந்த வேலை நிறுத்தம் செய்வதையும் தடை செய்கிறோம், வேலை நிறுத்தம் செய்தால் ஓர் ஆண்டு தண்டனை, அதற்குமேலே யாராவது உங்களுக்கு தொழிற்சங்கத் தலைவர் என்று இருந்தால் அவருக்கு தண்டனை, யாராவது வேலை நிறுத்தம் செய்தால் 'அப்படிப் பட்ட வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறீர்களே, உங்களுக்கு நிதி தேவையா' என்று பத்து காசு உண்டியலிலே போட்டால் அவருக்கு சிறைதண்டனை', என்று சொல்கிறீர்கள். வாரண்ட் இல்லாமலே போலீஸ் ஆபீஸர் யாரை வேண்டுமானாலும் கைது செய்யலாம் என்கிற காட்டுமிராண்டித்தனமான ஒரு செக்ஷன், இவ்வளவும் அடுக்கிப் போட்டிருக்கிறீர்கள், இது ஒன்றே போதும். இது ஒரு பாசிச சர்க்கார் என்பதற்கு எடுத்துக்காட்டாக இந்த தடை உத்தரவு ஏதோ அசாதாரணமான நேரத்திலே கொண்டுவரப்பட்டது என்று கருத வேண்டுமானால் அப்படியல்ல. மூன்று முறை கொண்டு வந்திருக்கிறீர்கள். இந்த ஆட்சி மூன்றாண்டுக்காலம் நடைபெற்றிருக்கிறது. இந்த மூன்றாண்டு காலத்திலே மூன்று முறை தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்

வதைத் தடை செய்கின்ற சட்டத்தைக் கவர்னர் மூலமாகப் பிறப்பித்திருக்கிறீர்கள். 1978-ல் போக்குவரத்துத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்திலே ஈடுபடுகிறார்கள் என்று தெரிந்தவுடன் இந்தத் தடை உத்தரவைக் கவர்னர் மூலமாக பிறப்பித்தீர்கள். 1979 ஆம் ஆண்டு என்.ஜி.ஓ.வினர் வேலை நிறுத்தத்திலே ஈடுபடுகிறார்கள் என்று தெரிந்தவுடன் மறுபடியும் கொண்டு வந்தீர்கள். மீண்டும் எப்போது கொண்டு வந்தீர்கள் இப்போது 1980 ஆம் ஆண்டு ஜனவரியிலே கொண்டு வந்தீர்கள். பி.என்.சி. மில் தொழிலாளர்களுடைய பிரச்சினை இன்றைக்கு சென்னையிலே தீ பற்றி எரிகிற பிரச்சினை. அந்தத் தொழிலாளர்கள் தங்களுடைய கோரிக்கைகளை இந்த நாட்டுக்கும் ஆட்சிக்கும் தெரிவிக்கவேண்டும் என்பதற்காக ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தத்தைச் சென்னையிலே செய்ய முற்பட்டார்கள். ஆனால் இந்த சர்க்கார் திடீரென்று அவசரச் சட்டத்தைப் பிறப்பித்தது. அரசாங்க ஊழியர்கள் உலகத் தமிழ் மாநாட்டுக்கு லீவு கேட்டார்கள். ஆனால் மறுத்து விட்டு 8 ஆம் தேதி இரவு இந்த அவசரச் சட்டத்தை கவர்னர் மூலமாகப் பிறப்பித்துவிட்டு 9 ஆம் தேதி அரசு அலுவலர்களுக்கு விடுமுறை என்று சொல்லி 10 ஆம் தேதி மாநாடு முடிகிறது, வா மதுரைக்கு என்று அழைத்துக்கொண்டிருக்கிறீர்கள். பட்டினியால் நொந்துகொண்டிருக்கிறான். பி.என்.சி. மில் தொழிலாளி. ஆனால் குறுந்தொகையினுடைய இலக்கிய ரசனையை ரசித்துக்கொண்டிருந்தார் மதுரைமூதூரிலே நம்முடைய முதலமைச்சர். அழகாகச் சொல்வார்கள் எரிமலையின் மீது உட்கார்ந்து கொண்டு புல்லாங்குழல் வாசிக்கின்றார்கள், என்று. அந்தக் காரியத்தை இந்தச் சர்க்கார் நடத்திக்கொண்டிருக்கிறது என்பதற்காகத்தான் இதை நான் எடுத்துக் காட்டுகிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள், கண்ணியம், கடமை, கட்டுப்பாடு, என்று. ஆனால் அந்தத் தாரக மந்திரத்தை விட்டுவிட்டு அண்ணாவின் பெயரைப் பெயரளவிலே உச்சரித்துக்கொண்டுவிட்டு வேலை நிறுத்த தடைச் சட்டம், போலீஸ், சிறைச்சாலை என்றெல்லாம் சொல்கிறீர்கள். எதற்கெடுத்தாலும் சிறைச்சாலைதானா விவசாயத் தொழிலாளி கிளர்ந்தெழுந்தாலும் அவனுக்கு சிறைச்சாலை, ஆசிரியர்கள் கோரிக்கை கொடுத்தால் சிறைச்சாலை, மாணவர்கள் கோரிக்கை வைத்தால் சிறைச்சாலை, தொழிலாளர்கள் கிளர்ந்தெழுந்தால் சிறைச்சாலை, என்று சிறைச்சாலையையும் சட்டத்தையும் போலீசையும் வைத்துக்கொண்டு ஒருவன் ஆட்சி நடத்திவிட முடியும் என்று சொன்னால் ஜார் மன்னனுடைய பரம்பரைதான் இன்றைக்கு ஆட்சி செய்ய முடியும். ........ (குறுக்கீடு).... போலீசையும், சட்டத்தையும், சிறைச்சாலையையும் வைத்துக் கொண்டு ஆட்சி நடத்திவிட முடியும் என்று சொன்னால் ஜார் மன்னனுடைய பரம்பரைதான் இன்றைக்கு ஆட்சியை நடத்திக்கொண்டிருக்க முடியும்.

நான் ஒன்று கேட்கிறேன், என்ன பெரிய சிறைச்சாலை நாங்கள் பார்க்காத சிறைச்சாலையா பூச்சாண்டி காட்டுகிறார்கள் சிறைச்சாலை என்று. முதலமைச்சருக்கு

[திரு. துரைமுருகன்] [1981 பிப்ரவரி 9

வேண்டுமானால் சிறைச்சாலை புதியதாக தென்படலாம். ஆனால் எங்களுக்கு மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை சிறைச்சாலை.

[பிற்பகல் 12-10].

சிறை எங்களுக்கு மலர் மஞ்சம். அதை நீங்கள் நினைத்துப் பார்க்க வேண்டும். பி. அண்டு சி. மில மூடப்பட்டதினால் அந் நிறுவனத் தொழிலாளர்கள் பிரச்சினை எவ்வளவு கொழுந்து விட்டு எரிகிறது? இந்த சர்க்கார் அந்த நெருப்பை அணைக்க என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் என்ன செய்துகொண்டிருக்கிறார்? அவர் தொழிற்சங்கங்களிலிருந்து வந்தவர் தான். அவர் அன்றையதினம் தொழிலாளர்களின் கோரிக்கைகள், அவர்களின் நியாய வாதங்கள், அரசு தரப்பில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் ஆகியவற்றைப் பற்றி அழகிய தமிழில் அடுக்கடுக்காக எழுதியவற்றை நானும் படித்திருக்கிறேன். முரசொலி ஏட்டில் எழுதியிருந்தார். படித்து மகிழ்ந்திருக்கிறேன். அவர் வந்ததே இந்த பி. அண்டு சி. மில்லின் தொழிற்சங்கத்திலிருந்து தான். தாய் வீடு பற்றி எரிகிறது. ஆனால் இன்றைக்கு அவர் சுகவாசியாக தன் அதிகார போகங்களை அனுபவித்துக் கொண்டிருக்கிறார். என்ன நடவடிக்கையை இந்த அரசு எடுத்திருக்கிறது? சர்க்கார் தூங்கலாமா, தொழிலாளர் நல அமைச்சர் தூங்கலாமா? மத்திய சர்க்காரைக் கேட்கிறோம், நாங்கள் மத்திய சர்க்காருக்கு டெலக்ஸ் அனுப்பியிருக்கிறோம், இது பற்றி மத்திய சர்க்காருக்கு நாங்கள் பரிந்துரை செய்து அனுப்பிவிட்டோம் என்றெல்லாம் சொல்கிறார்களே, தவிர, என்ன பரிந்துரை அது என்ன உண்மையிலே நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதை தெரிவிக்கவே இல்லை. இந்த அரசாங்கம் என்ன பரிந்துரையை செய்திருக்கிறது என்று மக்களும் நாங்களும் தெரிந்துக்கொள்ள வேண்டாமா ?

இது என்ன திடீர் என்று எழுந்த பிரச்சினையா ஏற்கலவே ஒரு முறை அந்த மில் நஷ்டப்பட்டு நசுங்கிப்போய், அரசு இலாகா செயலாளர் பத்மநாபன் அவர்கள் ஸ்பெஷல் ஆபிசராக சென்று கவனம் செலுத்தி ஓரளவு நிமிர்ந்து நிற்க வைத்தார். இம்ப்ருவ் செய்தார். ஆனால் இப்போது இரண்டு மாதங்களுக்கு முன்னாலேயே மூடுவதற்கான நோட்டீஸ் கொடுத்து விட்டார்கள். கொடுத்த உடனேயே ஏன் இப்படிப்பட்ட நிலைமை வருகிறது எப்படி வருகிறது? இதனால் எத்தனை தொழிலாளர்களின் குடும்பங்கள் பாதிக்கப்படபோகின்றனவோ ? என்று பதறி துடித்து அரசு என்ன செய்திருக்க வேண்டும் ? தொழிலாளர்களையும் நிர்வாகத்தினரையும் அழைத்து பல முறை பேசி இதற்கு ஒரு முடிவு கட்டியிருக்க வேண்டாமா? அப்படி நிர்வாகத்தினரால் முடியவில்லை என்றால், இந்த அரசே இதை ஏற்று நடத்துவதற்கு ஏதாவது வழி செய்திருக்கக் கூடாதா !



1981 பிப்ரவரி 9] [திரு. துரைமுருகன்]

ஆனால் அழைத்தாவது பேசினார்களா என்று கேட்டால், ஒரே ஒரு முறை தொழிலாளர்களையும், நிர்வாகத்ினரையும் அழைத்து தொழிலாளர்களின் கோரிக்கை என்ன ? நிர்வாகத்தினர் என்ன சொல்கிறார்கள் என்று கேட்டார்கள். நிர்வாகத்தினர் கூறியதை திரும்பவும் தொழிலாளர்களுக்கு எடுத்துச் சொன்னார்கள். ஆனால் அரசு தரப்பிலிருந்து இன்னது செய்யலாம் என்று ஏதாவது ஒரு முடிவு திட்டவட்டமாக எடுக்கப் பெற்றதா? அரசு இப்படி தூங்கலாமா? தொழிலாளர் நல அமைச்சர் இப்படித் தூங்கலாமா? 13,000 தொழிலாளர்களின் குடும்பங்கள் பாதிக்கப் பெற்றிருக்கின்றனவே என்று நினைத்தால் தூக்கம் கூட வருமா ?

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒரு முறை கூறினார்கள். தொழிலாளியை மட்டும் ஒன்று என்று கணக்கில் எடுத்துக் கொள்ளாதே, ஒரு தொழிலாளி என்றால் அவன் பின்னே 10 வயிறு காய்ந்துக் கொண்டிருக்கும் என்று சொன்னார்கள். இப்படி 13,000 தொழிலாளர்கள் என்று பார்க்கும்போது அந்தக் கணக்கில் லட்சக் கணக்கானவர்கள் வருவார்களே. அப்படி லட்சக் கணக்கானவர்கள் தெருவில் நின்று அனாதையாக திரிகிற நிலைமைக்கு இந்த மாநில சர்க்கார் அவர்களை கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறது என்று நான் பகிரங்கமாக குற்றம் சாட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தாய்மார்கள் என்றாலே நம்முடைய முதலமைச்சர் அவர்களின் பரிவும் பாதுகாப்பும் கூடுதலாகவே கிடைக்கும். அவர்கள் துயர் என்றால் உடனே விரைந்து செயல்படுவார் நம்முடைய முதலமைச்சர். இப்படி ஒரு பெயர் பெற்றுவிட்டார் அவர். அவர் வழியில் போய்க் கொண்டிருந்த போது இந்த பி. அண்டு சி. மில்லின் தொழிலாளக் குடும்பங்களின் தாய்மார்கள் ஊர்வலம் வந்து கொண்டிருக்கிறார்கள். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சட்டசபைக் கூட்டத்திற்கு அப்போது வந்து கொண்டிருக்கவில்லை—வேறு ஏதோ குழு கூட்டம் காரணமாக சென்றுக் கொண்டிருந்தார் என்று நினைக்கிறேன். சட்ட சபைதான் வருடத்திற்கு ஒரு முறைதானே கூடும்— உங்கள் கட்சியில் வேறு ஏதோ கூட்டத்திற்கு அவர் செல்கையில் இந்த தாய்மார்களின் ஊர்வலக் கூட்டத்தைப் பார்த்துவிட்டார். தாய்மார்களின் பாதங்கள் பூமியிலே நடந்து கஷ்டப்படுவதை காண சகிப்பாரா நமது முதலமைச்சர் ? உடனே ஓடோடிச் சென்று என்ன வேண்டும் எதற்காக ஊர்வலம் என்று கேட்டிருக்கிறார். தாய்மார்கள் தங்கள் கோரிக்கைகளைச் சொல்லியிருக்கிறார்கள். அவற்றை நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். 'நிறை வேற்றுகிறோம் கவலையற்க' செல்க வீட்டிற்கு திரும்பி' என்று அபயம் அளித்திருக்கிறார்கள். பக்கத்திலே டி. வி. காரர்கள் எப்படியோ வந்துவிட்டார்கள். படம் எடுத்துக் கொண்டார்கள். ஆனால் பரிகாரம் ஏற்படவில்லை ஆனால் என்ன நடவடிக்கை அரசு தரப்பில் உண்மையாக எடுக்கப்

பெற்றது? நாங்கள் மத்திய அரசிற்கு எழுதியிருக்கிறோம்.
பரிந்துரை செய்திருக்கிறோம் என்று எத்தனை நாட்களுக்கு
கதை விட்டுக் கொண்டிருக்கப் போகிறார்கள்.

அந்தத் தொழிற்சாலையை ஏன் நீங்களே எடுக்கக் கூடாது?
எடுப்பதற்கா உங்களுக்கு தைரியம் இல்லை. பாங்க் காரண்டி
இருக்கிறது? I.D.P. பணம் தர தயாராக இருக்கிறது? ஏன்
அரசு எடுத்துக் கொண்டிருக்கக் கூடாது? தொழிலாளர்கள்
எங்களின் ஒரு அங்கம். அவர்கள் பாதிக்கப்படக் கூடாது.
லாபம் வந்தாலும் நஷ்டம் வந்தாலும் இந்த அரசு அதை ஏற்கும்
என்று அந்த நிறுவனத்தை ஏன் அரசு ஏற்றுக் கொண்டிருக்கக்
கூடாது? அதற்கான தைரியம் இல்லை. அது போகட்டும்,
இதற்கான ஒரு முடிவு வருவதற்குள், முதல் அமைச்சர் நிதியி
லிருந்து மாதம் ஆளுக்கு 500 ரூபாய் ஒரு நிவாரணமாக கொடுக்
கிறோம், பிரச்சினை பின்பு தீரட்டும் முதலில் நிவாரணம்
ஆகட்டும் என்று சொல்லக் கூடாதா? வெள்ளந்தாடும் வைஜெயந்தி
மாலா, சுழன்றாடும் சுவர்ணமுகி, ஆடி முடித்த பானுமதி, பாடி
முடித்த சோமு, எடு எடுத்து எழுதும் கண்ணதாசன் ஆகியோருக்கு
பறக்கிறது ஆயிரக்கணக்கில். என் சொல்லவில்லை? தொழிலாளி
களின் வாழ்க்கையில், வளத்தில், அவர்களுடைய வளர்ச்சியில்
நாட்டம் இருந்தால் எண்ணமும் வந்திருக்குமானால் கொடுத்து
இருப்பார்கள் அரசுக்கு நாட்டம் இல்லை. தொழிலாளர்கள்
வாடுகிறார்கள்.

இப்படிப்பட்ட நிலைமை கோவையிலே பஞ்சாலைகளிலே
ஏற்பட்டபோது திராவிட முன்னேற்றக் கழக அரசு என்ன செய்
தது? பாங்க் போன்ற காரண்டி வாங்கி அதனை ஏற்று நடத்தியது
தமிழக அரசு? அப்போது காளிங்கராய், சோமசுந்தரம் மில்ஸ்
18 மில்களை ஏற்று நடத்தவில்லையா? தமிழ்நாடு டெக்ஸ்டைல்ஸ்
கார்ப்பரேஷன் உருவாகவில்லையா? இன்றைக்கு 30 சதவீதம்
போனஸ வாங்கிக் கொண்டு அந்தத் தொழிலாளர்கள் நிம்மதி
யாக இருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலைமைகள் உருவாக
வேண்டாமா? அப்படி நிலைமைகள் உருவாக வேண்டும் என்
றால் மாநில சர்க்காருக்கு தைரியம் வேண்டும். எப்பொழுது
அந்த தைரியம் வரும்? தொழிலாளர்களின் வளர்ச்சியிலே
வாழ்விலே நாட்டம் இருந்தால் தானே வரும். அன்றைக்குக்
கலைஞருடைய ஆட்சிக் காலத்திலே, இத்தகைய நிலைமை
கோயம்புத்தூர் பஞ்சாலைகளிலே ஏற்பட்டபோது, அந்தப் பஞ்
சாலைகளை எடுப்பதற்கு 51 சதவீதம் மத்திய சர்க்காரும் 49 சத
வீதம் மாநில சர்க்காரும் போட வேண்டும் என்ற ஒரு ஒப்பந்தம்
முதலிலே நடைபெற்றது.

மத்திய அரசு சொன்ன தொகையைப் போடவில்லை.
மாநில அரசு மேலும் இரண்டு கோடி ரூபாய் போட்டு அந்த
மில்களை ஓட்டவில்லையா? பஞ்சப்படி 26 பைசாவை 30 பைசா
வாக உயர்த்திக் காட்டவில்லையா கலைஞர் அவர்கள்.



இன்னும் கூடச் சொல்கிறேன். போனஸ் பிரச்சினை அன்று
நடக்கிறது. கோவையில் சர்க்யூட் ஹௌஸில் கொடுக்க மாட்
டேன் ரூ. 15க்கு மேல் என்று சொல்கிறார்கள். போனஸ் 25
சதவீதம் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள்.
கலைஞர் அவர்கள் சொல்கிறார்கள், பேச்சுவார்த்தையில் கனிவு
துணிவு எல்லாம் வேண்டும் ஆட்சியாளருக்கு— மரியாதையாக
போனஸ் தராவிட்டால் நான் இதை நாட்டுடைமையாக்குவேன்
என்று எச்சரித்தார் கலைஞர் அவர்கள். அன்று அந்தப் பஞ்
சாலை முதலாளிகள் கண்ணீர் விட்டு அழுதார்கள். இங்கே
உட்கார்ந்திருக்கிறார் மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்
அன்று சொன்னார், என்வாழ்நாளிலேயே முதலாளிகள் அழுவதை
நான் பார்த்ததில்லை என்று. அற்றைத் திங்கள் அவ்வெண்
ணிலவில் இங்கே உட்கார்ந்திருக்கிற நமது பேரவைத் தலைவர்
அவர்கள்தான் தொழிலாளர் நலத்துறை அமைச்சர். 25 சதவீதம்
போனஸ் அந்தளவிற்கு 30 சதவிகிதம் ஆக உயர்த்தப்பட்டது
முதலாளிகளை எதிர்த்துக் கேட்கிற தைரியம் வேண்டும். உங்
களுக்கு அந்தத் தைரியம் வருமா? முதலாளிகளின முகமலர்ச்சியி
லும் சிரிப்பிலும் அவர்களின் டி. வி. எஸ், காரர்கள் விசுவநாதன்
அவர்களின் விரல் அசைப்பில், சிதம்பர இரகசியத்தில் லயித்துக்
கிடக்கிற உங்களுக்கு தொழிலாளர்களைப் பற்றிய எண்ணம்
தோன்றுமா? அதேபோல் மத்திய அரசு ஏன் எடுத்து நடத்தக்
கூடாது? அப்படி கேட்கிறோம், முடியவில்லை என்று சொன்னால்
நாமே நடத்துவது என்ற முறையை இந்த அரசு ஏற்றுக் கொண்
டிருக்கிறதா? எந்தப் பிரச்சினையானாலும் தள்ளிப்போடுவது,
கவனிக்காமல் இருப்பது, அதில் சிறிதுகூட சிரத்தை காட்டாமல்
இருப்பது, கொடுத்த வாக்குறுதிகளை என்ன காப்பாற்றுகிறீர்கள்?

சிம்ஸனை எடுத்துக் கொள்வோம். சிம்ஸனில் என்ன
நடந்தது? காட்டூர் கோபால் ஒரு ஒப்பந்தம் போட்டார்.
ஒப்பந்தத்தை பெரும்பாலான தொழிலாளர்கள் ஏற்றுக் கொள்ள
வில்லை, புதிய தேர்தல்கள் வேண்டுமென்று கேட்டார்கள்,
அதற்காக போராட்டம் துவங்கிற்று. நெடுமரம்போல் சாய்ந்து
விட்டார் பிரதாப் சந்திரன் அவர்கள். அமெரிக்காவிற்கு கண்
ஆப்பரேஷனுக்காகச் சென்றிருந்த கலைஞர் அவர்கள் செய்தி
கேட்டு ஓடோடி வந்தார்கள். இரவும் பகலுமாக தொழிலாளர்
களோடும் முதலாளிகளோடும் பேசுகிறார். கடைசியில் எங்க
ளுடைய பேரவைத் தலைவர் காட்டூர் கோபால் என்பதைக் கூட
மறந்துவிட்டு இராஜிநாமா செய்ய வைத்தார். இதற்காக ஒரு
கமிட்டி போடப்படுகிறது. புதிதாக வாக்காளர் பட்டியல்
தயாரிக்கப்படுகிறது. லேபர் கமிஷனர் முன்பு தேர்தல் நடத்தப்
படுகிறது. புதிதாக தலைவர்கள், சிந்தன் போன்றவர்கள் வந்து
சேருகிறார்கள். 168 தொழிலாளர்களை வேலையிலிருந்து
எடுத்துவிடுகிறார்கள், பிரதாப் சந்திரனை கொலை செய்தவர்கள்
உட்பட. அவர்களை திரும்ப எடுக்க மாட்டேன் என்று
சொல்கிறது நிர்வாகம். எடுக்க வேண்டுமென்று சொல்கிறது

[திரு. துரைமுருகன்] [1981 பிப்ரவரி 9

தொழிலாளர் வர்க்கம், இடையில் முதல் அமைச்சர் அவர்கள் என்ன செய்தார். நிர்வாகமே, இவர்கள் மீது விசாரணை நடத்துங்கள், விசாரணை நடத்தி அந்த அறிக்கையை என்னிடம் தந்துவிடு. தந்துவிட்ட பிறகு தொழிலாளர்கள் பாதிக்கா வண்ணம் நான் தீர்ப்புரைப்பேன். அந்தத் தீர்ப்பை நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று முதல் அமைச்சர் வாங்கி கையில் வைத்துக் கொள்கிறார். பிறகு விசாரணை நடத்தி அந்த 16 தொழிலாளர்களையும் வேலையிலிருந்து நீக்கிவிட்டோம் என்று அறிக்கை சமர்ப்பிக்கப்படுகிறது. ஆனால் அன்று தொழிற் சங்கத்தைச் சேர்ந்த தலைவர்கள் என் மதிப்பிற்குரிய மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த திரு சிந்தன் அவர்கள் கலைஞரைச் சந்திக்கிறார். கேட்கிறார், இந்த 168 தொழிலாளர்களையும் வேலைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று. எங்கள் பிரதாப் சந்திரனை கொன்றவர்கள என்று குற்றஞ்சாட்டப்பட்டவர்களையும் சேர்த்தா என்று கேட்கிறார். உங்கள் பேரில் கருணை இருக்கிறது, நீங்கள் கருணை காட்ட வேண்டும் என்று சொல்கிறார்கள். யாரை இழந்துவிட்டு கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தோமோ யார் மீது குற்றஞ்சாட்டப் பட்டது என்பதை மறந்துவிட்டு இது தொழிலாளர்கள் பற்றிய பிரச்சினை என்று குறித்து அவர்கள் அனைவரையும் வேலைக்கு எடுத்துக் கொள்ளும்படி சொன்னார்கள். அந்த 168 பேர்களையும் வேலைக்கு சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று உத்தர விட்டார்கள்.

ஆனால்.டி. வி. எஸ்.-ல் என்ன நடந்தது ஒரு ஒப்பந்தம் போடுகிறது ஒரு தொழிற் சங்கம் அதை பெரும் பாலான தொழிலாளர்கள் ஒத்துக் கொள்ளவில்லை. கிளர்ச்சி நடத்தினார்கள். 250 பேர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டார்கள். தொழிலாளர்கள் உள்ளிருப்பு போராட்டம் நடத்தினார்கள். மதுரையிலிருந்து குண்டர்களை இம்போர்ட் செய்து அடிக்க வைத்தார்கள் அந்த 250 தொழிலாளர்கள் மீது விசாரணை நடத்தி அவர்களை வேலையிலிருந்து நீக்கிவிட்டார்கள். சிம்ப்ஸனில் நடந்ததுபோல் நடக்கிறது. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களுக்கு அந்த 250 தொழிலாளர்களை மரியாதையாக வேலைக்கு எடுத்துக் கொள் என்று சொல்கிற தைரியம் இருந்ததா. அரசுக்கு இருந்ததா? அப்படிச் சொல்வதற்கான தைரியம் இந்த அரசுக்கு இருந்ததா?

[பிற்பகல் 12-20]

எல்லோரும் வேலையை ராஜிநாமா செய்துவிட்டு, ஏற்கனவே இருந்த 68 பேர்களும் இன்றைக்கு வீதியிலே நிற்கின்ற நிலையைத் தான் நீங்கள் உருவாக்கிக் கொண்டிருக்கிறீர்களே தவிர, வேறு என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்? வார்த்தை ஜாலத்தைத் தான் சொல்லுகிறீர்கள். இதைத் தான் திரு. உமாநாத் அவர்கள் இங்கே சுட்டிக் காட்டினார்கள்.



1981 பிப்ரவரி 9] [திரு. துரைமுருகன்]

பாலு கார்மெண்ட்ஸ் என்ற ஒரு நிறுவனம், மயிலாப்பூரிலே பெண்களைக் கொண்டு நடத்தப்படுகின்றது. அதிலே வேலை நிறுத்தம், அந்த தொழிற்சாலையிலே பணியாற்றும் பெண்கள் கோட்டைக்குள்ளே மிக ராஜதந்திரமாக, தனித் தனியாக ஒவ்வொருவராக நுழைந்து, திடீரென்று முதலமைச்சர் அவர்களை முற்றுகையிடுகிறார்கள். அப்படி சூழ்ந்துக் கொண்டு முற்றுகை யிட்டதாக பத்திரிக்கைச் செய்தி வருகிறது. ஆனால், நம் முதலமைச்சர் சொல்கிறார், கண்ணீரைத் துடைத்து கொள்ளுங்கள், தாய்க்குலமே, நாங்களே அதை ஏற்று நடத்துகிறோம் என்று வாக்குறுதி கொடுத்தார்கள். நான் கேட்கிறேன்; ஆனால் என்ன நடந்தது? முதலமைச்சர் கொடுத்த வாக்குறுதி இதுவரை நிறைவேற்றப்பட்டதா? இல்லை. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் துடிக்கிறார்கள். கூட்டுறவுத் துறையிலே இதை ஏற்று நடத்த அரசாங்கம் முயற்சித்துக் கொண்டிருக்கின்றது என்று சொன்னாலும், நீண்டகாலமாக அது கவனிக்கப் படாமல் இருக்கிறது. இதுவரை அதற்குப் பரிகாரம் காணப் பட்டதா? தாய்க்குலத்தின் கண்ணீர் துடைக்கப்பட்டதா? அதை ஏற்று நடத்தக் கூடிய யோக்கியதை உங்களுக்கு இருக்கிறதா? ஏன் நடத்தவில்லை? ஏன் அதைச் செய்யவில்லை? அக்கறை யில்லை. வேண்டாம், நிவாரணமாவது தரக்கூடாதா? முதலமைச்சர் நிதியிலிருந்து. இம்மாதிரி, அம்பத்தூரில் பிரேக்ஸ் இந்தியா நிறுவனத்தில் வேலை நிறுத்தம் ஏற்பட்டபோது, தொழிலாளர்கள் பட்டினியால் சாகக்கூடாது என்பதற்காக, கலைஞர் அவர்கள் முதலமைச்சர் நிதியிலிருந்து நிவாரணம் அளித்தார்கள். அப்படி நிவாரணம் அளிக்கக்கூடிய தகுதி உங்களுக்கு இருக்கிறதா? அப்படி யெல்லாம் உதவி செய்ய நீங்கள் முன்வர மாட்டீர்கள். ஏன்? நீங்கள் முதலாளிகள் பக்கம். அவர்கள் மஞ்சத்திலே தஞ்சம் புகுந்து கொஞ்சிக் கொண்டிருப்பவர்கள். ஏழைத் தொழிலாளர்களைப் பற்றி, அவர்கள் கண்ணீரைத் துடைப்பதுபற்றி உங்களுக்கு கவலை இல்லை. இதுவரை நீங்கள் எந்தப் பிரச்சினைகளைத் தீர்த்திருக்கிறீர்கள்?

சேஷசாயியில் என்ன நடந்தது? கோயம்புத்தூரிலே பேச்சு வார்த்தைகள் நடந்தது. 7 மணிக்கு பேச்சுவார்த்தை முடிகின்றது. என்ன அறிவிக்கிறார்கள்? தொழிற்சங்கத் தலைவர்களைப் பார்த்து நீங்கள் வீட்டுக்குப் போங்கள், தந்தி வரும் என்கிறார்கள். ஆனால், அன்றைக்கு இரவே போன் மூலம் ஒரு செய்தி வருகிறது. நான் எங்கள் பார்டி அலுவலகத்தில் இருக்கிறேன். தி.மு.க. தொழிற்சங்கத் தலைவர் குப்புசாமி, லேபர் கமிஷனர், மற்றவர்களோடு தொடர்புகொண்டு பேசுகின்றார். என்ன நிலைமை? 7 மணிக்கு பேச்சுவார்த்தை நடந்து முடிந்து விட்டது. ஆனால், இரவு 2 மணிக்கு முதலாளிகளுக்கு வேண்டிய தொழிற் சங்கத் தலைவர்களை வரவழைக்க அவர்களுக்கு கார்கள் அனுப்பப்பட்டு, அவர்களிடம் கையெழுத்து வாங்கிக்கொண்டு 12(3) ஒப்பந்தம் முடிந்து விட்டது; அதை அவர்கள் ஏற்றுக்

கொண்டார்கள் என்று சொல்லப்படுகிறது. ஆனால், பெரும்பாலான தொழிற்சங்க உறுப்பினர்களைக் கொண்ட ஐ.என்.டி.யு.சி., தி.மு.க. போன்ற இப்படிப்பட்ட தொழிற்சங்கங்கள் இதை எதிர்க்கிறார்கள். 125 நாட்களுக்கு மேல் போராட்டம், உண்ணாவிரதம் வளர்ந்து கொண்டிருந்தது. நான் கேட்கிறேன்? எந்தப் பிரச்சினையை உங்களால் தீர்க்க முடிந்தது? ஆனால் 12(3) ஒப்பந்தம் புனிதத்தன்மை வாய்ந்தது என்று மட்டும் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். தொழிலாளர்களை பாதுகாக்கக்கூடிய இந்த 12(3) ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்கு இந்த சர்க்கார் துணிந்து நிற்க வேண்டாமா? பிளான்டேஷன் தொழிலாளர் பிரச்னை கலைஞர் அவர்கள் காலத்திலே வந்தது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் இங்கே உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். அப்போது இந்த பிளான்டேஷன் தொழிலாளர்கள் விஷயத்தில் இந்த 12(3) ஒப்பந்தம் மறுக்கப்படுகிறது. என்ன நடக்கிறது? ரமணி அவர்கள் கலைஞர் அவர்களைச் சந்தித்து, அங்கே இந்த போராட்டம் நீடிக்கின்றது என்று சொல்கிறார். உடனே, கலைஞர் அவர்கள், உங்கள் கோரிக்கை என்னவென்று கேட்கிறார். எங்கள் கோரிக்கை, கேரளா பேட்டர்ன் போல் செய்துகொடுக்க வேண்டுமென்று கேட்கிறார். உடனே, கலைஞர் அவர்கள் முதலாளிகளை அழைக்கிறார். முதலிலே முதலாளிகள் மறுக்கிறார்கள். இது இந்த அரசாங்கத்தின் ஆணை. முதலமைச்சரின் ஆணை என்று சொல்கிறார். முதலாளிகளிடம், தொழிலாளர்களுக்கு வாழ்வளிக்க வேண்டுமென்று சொல்கிறார். அப்படி 12(3) சட்டம் முறிந்த பிறகு, அதை மாற்றி அமைத்து, கேரளா பேட்டர்னிலே கலைஞர் அவர்கள் வாங்கித் தரவில்லையா? என் அப்படி உங்களால் முடியவில்லை.

சேஷசாயியிலே விஸ்வநாதன் என்ற ஒரு விஸ்வாமித்திரன் இந்த ராஜ்ய சர்க்காருக்கு இருக்கிறார். நான் கேட்கிறேன். 153 கோடி ரூபாய் செலவிலே சர்க்கார் சார்பிலே ஒரு நியூஸ்பிரிண்ட் காகித ஆலையைத் துவக்கியிருக்கிறார்கள். அதற்கு யார் சேர்மேன் என்று கேட்டால், இந்த விஸ்வநாதன் தான். இந்த விஸ்வநாதன் சேஷசாயி பேப்பருக்கு மானேஜிங் டைரக்டராக இருக்கிறார்; சிம்கோ மீட்டர்சின் அதிபராகவும் இருக்கிறார். இப்படி சர்க்கார் சார்பிலே 153 கோடி ரூபாய் அளவிலே துவக்கப்பட இருக்கின்ற காகித ஆலைக்கு இப்படி தனிப்பட்ட ஒருவரை ஏன் சேர்மனாகப் போட வேண்டுமென்று கேட்டால், அதற்கு அவர் இந்த காகித உற்பத்தியிலே கரை கண்டவர் என்று சொல்லப்படுகிறது.

அவரைப் போட்டால்தான் நுணுக்கம் தெரியும் என்று சொன்னால் நான் திருப்பிக் கேட்கிறேன்—55 கோடி ரூபாய் நஷ்டத்தில் போக்குவரத்துக் கழகங்கள் ஓடுகின்றனவே,—சேரன் போக்குவரத்துக் கழகத்திற்குப் பொள்ளாச்சி மாகலிங்கத்தைத் தலைவ

ராக்கிவிடுங்கள், ரொம்ப நன்றாக டெக்னிகல் நுணுக்கம் தெரிந்
தவர். சோழன் போக்குவரத்துக் கழகத்திற்கு காசிராமனைப்
போடுங்கள், பெரியார் போக்குவரத்துக் கழகத்திற்கு பாரதிவேலு
வைப் போடுங்கள், பூம்புகார் ஷிப்பிங் கார்ப்பரேஷனுக்கு நம்
முடைய ஹாஜாஷெரீபைப் போடுங்கள். பூரண சோஷலிசம்:
ஏனென்றால் தொழில் நுணுக்கம் தெரிந்தவர்தானே தலைவராக
வரவேண்டும்? எப்படி வரும்? சேஷசாயி விஸ்வநாதன் உங்
கள் பக்கத்தில். அவர்கள் தொழிலாளிக்கு விரோதமாக 12(3) ஐ
மீறினாலும் தொழிலாளி பக்கத்தில் நிற்க எப்படி உங்களுக்கு
மனம் வரும்? எப்போது பார்த்தாலும் முதலாளிக்குப் பக்கத்
தில்.

ஆனால், பத்திரிகையில் விளம்பரம்—எஞ்சின் வால்வ்ஸ் என்ற
கம்பெனி. முதலமைச்சர் ஒரு நாள் வேகமாகப் போகிறார்.
அங்கே இவரே போய் கேட்டில் நிற்கிறார். வாச்மேனைக் கூப்
பிடுகிறார். எங்கே முதலாளி?—இன்றைக்கு வீட்டில் இருக்கி
றார். ஏன் வீட்டில் இருக்கிறார்?—இன்றைக்கு ஞாயிற்றுக்
கிழமை. ஞாயிற்றுக்கிழமை என்று சொன்னவுடன் முதலமைச்
சர் திரும்பி வந்துவிடுகிறார். நான் கேட்கிறேன்—மாண்புமிகு
முதலமைச்சர் எஞ்சின் வால்வ்ஸ் கதவு வரை போய்த் திரும்பி
விட்டாரே, அந்தப் பிரச்சினை தீர்க்கப்பட்டிருக்கிறதா? பத்திரி
கையில் விளம்பரம். கேட்டால் நாங்கள் தொழிலாளர் வர்க்கத்
திடம் தோழமை கொண்டவர்கள் என்று சொல்கிறார்கள்.

ஒரு தொழிற்சாலையில் தகராறு வரும். தகராறு வராமல்
இருக்காது. நிர்வாகம்—தொழிலாளி என்றால் பிரச்சினை
வரும். அந்தப் பிரச்சினையைத் தீர்க்கிற உணர்வு உங்களிடத்
தில் இருக்கிறதா? படித்துக் காட்டினார்களே நம்முடைய
உமாநாத் அவர்கள். கோவையில் எஸ்.ஆர்.பி. மில்சில் 72 நாட்
கள் உண்ணாவிரதம். ஏறெடுத்துப் பார்த்தாரா தொழிலமைச்
சர்? பிரீமியர் மில்ஸ், உடுமலைப்பேட்டையில் 90 நாட்கள்
உண்ணாவிரதம். துடித்ததா உங்கள் உதிரம்? எஞ்சின் வால்வ்ஸ்
13 மாதம் மூடிக்கிடக்கிறது, ஞாயிற்றுக்கிழமை என்று கூடத்
தெரியாமல் கதவு வரையில் சென்று திரும்புகிறார் முதலமைச்சர்,
டி.வி.எஸ்.-ல் 11 மாதம்; சேஷசாயியில் 125 நாட்கள்; பால்
வள நிறுவனத்தில் நான்கு மாதங்கள் தொழிலாளி சிறையில்;
பஞ்சாலையில் 56 நாட்கள்; வடலூர் சிராமிக்கில் 110 நாட்
கள் மூடியே கிடக்கிறது. உங்களுக்கு இதிலே எங்கே நாட்டம்
இருக்கிறது. உங்களுக்குத் தெரியுமா இப்படிப்பட்ட பிரச்சினை
கள் இருக்கின்றன என்று. அமைச்சர் என்ற பதவியில் மந்தகாசத்
தில் சொக்கி இருக்கிறார் நம்முடைய தொழிலாளர் நல அமைச்
சர். தொழிலாளர் வர்க்கத்தில் வளர்ந்தவர்தானே. உங்களுக்கு
இதில் நாவாட, தசையாட, இரத்தமாட இதயம் துடிக்க
வில்லையா? கேவலம், அமைச்சர் பதவியில் உட்கார்ந்துவிட்
டோம் என்பதற்காக தொழிலாளர் வர்க்கத்தை நசுக்குவது முறை
தானா?

[திரு. துரை முருகன்] [1981 பிப்ரவரி 9

இன்னொன்றும் கேட்க விரும்புகிறேன். தலைவர் அவர்களே, பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் போனஸ் கொடுத்தார்கள், 8 1/3 கொடுத்தார்கள். அமைச்சர் பார்த்தார்— இருநூறு ரூபாய் எக்ஸ்கிரேஷியா என்று தூக்கி கொடுக்கிறார். வாங்கிக் கொண்டார்கள், தொழிலாளர்கள் வாழ்த்தினார்கள். ஆனால், முதல்வர் அவர்கள் ஒரு சட்டத்தைக் கொண்டு வருகிறார்கள். என்ன சட்டம் தெரியுமா? 8 1/3 போனஸ் கொடுத்தோமா? —கொடுத்தீர்கள். 200 ரூபாய் எக்ஸ்கிரேஷியா கொடுத்தோமா? —கொடுத்தீர்கள். ஆனால் ஒரே ஒரு நாள் வேலை நிறுத்தம் செய்தாலும் அந்த 200 ரூபாயை பிடித்து விடுவோம்; இரண்டு மணி நேரம் வேலை நிறுத்தம் செய்தால் 25 ரூபாய் பிடித்து விடுவோம், 3 மணி நேரம் வேலை நிறுத்தம் செய்தால் 50 ரூபாய் பிடித்து விடுவோம்—இப்படி கடைந்தெடுத்த ஒரு பாசிச சட்டத்தை வேறு எந்த சர்க்காராவது கொண்டு வருகிறதா? தலைவர் அவர்களே, இவர்களைக் கண்டிக்காமல் என்ன வாழ்த்தவா செய்வது? வாழ்த்த வார்த்தைகள் வருமா? எந்தப் பிரிவினரை நீங்கள் விட்டிருக்கிறீர்கள்?

இங்கே கூட உமாநாத் அவர்கள் சுட்டிக் காட்டினார்கள். கோர்ட்டுக்குப் போகக் கூடாது என்று தடை விதிக்கிறீர்கள். இண்டஸ்ட்ரியல் டிஸ்ப்யூட்ஸ் ஆக்டில் 11-ஏ அமெண்ட்மெண்ட் பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டதே, எதன் அடிப்படையில் கொண்டுவரப்பட்டது? குவாண்டம் ஆப் பனிஷ்மெண்ட் குறைப்பதற்காக, கொடுக்கப்பட்ட தண்டனையைக் குறைப்பதற்காக—கேட்டால் சொல்வார்கள், நாங்கள் இரண்டொன்றுதான் அனுப்பியிருக்கிறோம் என்று.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, ஏதோ அமெண்ட்மென்ட் என்று மாண்புமிகு உறுப்பினர் சொன்னார். அது என்ன என்று சரியாகக் கேட்கவில்லை.............

திரு. துரை முருகன்: 11-ஏ அமெண்ட்மென்ட், அதுமட்டுமல்ல. தொழிற்சாலைக்குள்ளே புகுந்து தாக்குகின்ற ஒரு செயல் வேறு எந்த சர்க்காரிலும் இருந்தது கிடையாது. தொழிற்சாலைக்குள்ளே போலீஸ் புகுவது—பொள்ளாச்சி குவாலியரில் 100 போலீசார் புகுந்து தொழிலாளர்களைக் கைது செய்து வந்திருக்கிறார்கள். டெக்ஸ்மோ தொழிற்சாலையிலே புகுந்தார்கள். மதுரையில் நடந்த போராட்டத்தில் தலைவர்களை அடித்திருக்கிறார்கள்.

இன்னும் கூடச் சொல்லுகிறேன். ஒரு சர்க்கார், தொழிற்சங்க விவகாரங்களை தீர்வகிக்கிறபோது சிறு தவறுகள் ஏற்பட



1981 பிப்ரவரி 9] [திரு. துரை முருகன்]

லாம். நான் அதைக்கூடப் பொருட்படுத்தவில்லை. பழம்பெரும் தொழிற்சங்கவாதி, பார்-அட்-லா படித்த தங்கமணியை நீங்கள் புரட்டிப் புரட்டி அடிக்க வைத்தீர்களே—இதுதான் தொழிலாளர்களுக்குக் காட்டுகிற பரிவா? உண்ணாவிரதம் இருந்த அரிபட்டின் பந்தலைக் கொளுத்தினார்களே, அது நியாயமா? கேட்டால் சொல்லுகிறீர்கள்—இதற்கும் தடை உத்தரவு. ஒன்றுதான் பாக்கி வைத்திருக்கிறீர்கள். இப்படி சட்டமன்றத்தில் பேசக் கூடாது என்று அதற்கு ஒரு தடை உத்தரவு கொண்டு வருகிற நிலையைச் செய்யப் போகிறீர்களா? முதலமைச்சரை நான் ஒன்று கேட்கிறேன். பஞ்சாலைத் தொழிலாளர்கள் உங்கள் காலத்தில், 1979-இல் ஸ்டிரைக் நடத்துகிறார்கள், வேலை நிறுத்தம் செய்கிறார்கள். ஒரு முதலமைச்சர் முதலாளிகள் கொடுக்கிற புள்ளி விவரத்தை வெளியிட்டு, அறிக்கை வெளியிட்டு அதைக் கொண்டு வந்து நிறுத்துகிறார்கள்.

[பிற்பகல் 12–30]

இப்படியெல்லாம் தொழிற்சங்கத் தலைவர்கள் பேசலாமா, எவ்வளவு கூலி வாங்குகிறார்கள். இது நியாயமா என்று சொல்கிறார். கூலியை உயர்த்திக் கேட்கிறான் தொழிலாளி, ஆனால் முதலமைச்சர் என்ன சொல்கிறார் என்றால் முதலாளிகள் இவ்வளவு கொடுக்கிறார்களே மேலும் கேட்கலாமா என்று பொது மக்களிடத்திலே தொழிலாளர் தலைவர்களைக் காட்டிக்கொடுக்கிற வேலையிலே இந்த சர்க்கார் இறங்கலாமா? சிந்தன் பேசிவிட்டார். சிந்தன் பேசிவிட்டார், நான் பஞ்சாலைத் தொழிலாளர் பிரச்னையிலே ஈடுபட மாட்டேன் என்று முதலமைச்சர் அறிக்கைவிடுகிறார். செவி மடுக்கக் கேட்கக் கூடாத அளவுக்கு இருக்கிற கடுமையான சொற்களைச் சொன்னாலும் கூட அதைப் பொறுத்துக் கொள்கிறவன் மீதே தான் இந்த உலகம் தங்கும் என்று சொன்னாரே வள்ளுவர். முதலமைச்சர் அவர்களே, உங்கள் மீது நம்பிக்கை இல்லை என்று சிந்தன் சொல்லிவிட்டார் என்பதற்காக அதற்காக பயந்துபோய், அதற்காக வெகுண்டு எழுந்து, அதற்காக அதிருப்திபட்டு பஞ்சாலை விவகாரத்திலே நான் ஈடுபட மாட்டேன் என்று சொன்னார்கள். அந்த முதலாளிகள் எங்கே போய் கையெழுத்துப்போடுவார்கள்? (மணியடிக்கப்பட்டது) முடித்துவிடுகிறேன். சௌத் இண்டியன் டெக்ஸ்டைல் மில் ஓனர்ஸ் அசோசியேஷனில் (மணியடிக்கப்பட்டது) எனவே, ஒட்டுமொத்தமாகப் பார்த்தால் இந்த சர்க்கார் தொழிலாளர் விரோத தடைச் சட்டம்போட்டு, அடிப்பது போலீசை விட்டு அடிப்பது, சிறைச்சாலைக்கு அனுப்புவது என்ற ஒரே ஒரு தத்துவத்திலே தான் மிதந்து கொண்டிருக்கிற ஒரு சர்க்கார். சடசடவெனச் சரிந்தது ஜாரின் ஆட்சி தொழிலாளரை எதிர்த்த காரணத்தினாலே, அதே நிலை இந்த சர்க்காருக்கும் விரைவிலே வந்தே தீரும் என்று இந்த சர்க்காரைக் கண்டித்து அமர்கிறேன். வணக்கம்.

[1981 பிப்ரவரி 9

*திரு. ஏ. சி. சண்முகம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அரசு தொழிலாளர் விரோத அரசாக இருக்கிறது என்று இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்களும், திரு. துரை முருகன் அவர்களும் ஒரு சில கருத்துக்களைச் சுட்டிக் காட்டினார்கள். அவர்கள் பேசும்போது இந்த அரசை நாங்கள் வாழ்த்தவா வந்தோம் என்று கேட்டார்கள். எதிர்க்கட்சிகள் எங்களை வாழ்த்துவார்கள் என்று எதிர்பார்ப்பது அவ்வளவு பொருத்தமானது அல்ல, மக்கள் எங்களை அப்படி வாழ்த்த வேண்டும், தொழிலாளர்கள் எங்களை வாழ்த்த வேண்டும் என்பதற்காகத்தான் நாங்கள் இந்த அரசை நடத்திக் கொண்டிருக்கிறோம் என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். திரு. துரை முருகன் அவர்கள் பேசும்போது ஒன்றைச் சுட்டிக் காட்டினார்கள். எங்களுடைய அரசிலே முதல்வராக இருந்தவருடைய பெயரிலே கருணை இருந்தது. தொழிலாளர்களின் பிரச்சினையை அணுகுகிற நேரத்திலே கருணையோடு அதை அணுகினார்கள் என்று சுட்டிக் காட்டினார்கள். அவர் மறந்ததை நான் இன்னொன்றைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அவர்கள் தொழிலாளர்களோடு பேசுகிறபோது கருணை இருந்தது என்று சொன்னார்கள், ஆனால் முதலாளிகளோடு பேசும்பொழுது அவர்களுடைய பெயரிலே நிதி இருந்தது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். தொழிலாளர்களின் மீது அடக்குமுறை ஏவப்படுகிறது என்றெல்லாம் அவர்கள் சொன்னார்கள். கழக அரசு பதவியேற்றதற்குப் பின்னர், எந்த எந்த தொழிற்சாலைகள் மூடப்பட்டன. எந்த எந்தத் தொழிற்சாலைகளில் தூண்டுதல் மூலமாக போராட்டங்கள் நடந்தன, அந்தப் போராட்டங்களின் போது எல்லாம் பேச்சு வார்த்தைகள் மூலமாக தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களும், தொழிலாளர் நல அமைச்சரும் எவ்வாறு அணுகினார்கள் என்று பார்க்கும்போது இரவு பகல் என்று பாராது பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டு பல்வேறு தொழிற்சாலைகளின் பிரச்சினைகளைத் தீர்த்து வைத்திருக்கிறார்கள் என்பதை எல்லாம் ஒரு சில உதாரணங்களின் மூலமாக நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். 1978ஆம் ஆண்டு மூடப்பட்ட தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 329, அதிலே பாதிக்கப்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை 1,45,680 பேர்கள். அரசின் தீவிர முயற்சியால் பேச்சுவார்த்தைகளை சரியான நேரத்திலே நடத்தியதற்குப் பின்னால் 253 தொழிற்சாலைகள் திறக்கப்பட்டு 1,28,614 பேர்கள் பலன் அடைந்திருக்கிறார்கள் என்பதை நான் பெருமையோடு இந்த மாமன்றத்திற்குச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். 1979 ஆம் ஆண்டிலே மூடப்பட்ட தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 295, பலரது தூண்டுதலினால், வெளியாரது, தொழிற் சங்கங்களுக்கு அப்பாற்பட்டவர்கள் தூண்டுதலினால் மூடப்பட்டவை 295, அதிலே பாதிக்கப்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை 2,58,892. அரசின் தீவிர முயற்சியால் பேச்சுவார்த்தைகளின் மூலமாகத் தீர்க்கப்



1981 பிப்ரவரி 9] [திரு. ஏ. சி. சண்முகம்]

பட்ட தொழிற்சாலைகளின் பிரச்சினைகள் 254. அதனால் பலன் அடைந்து வரும் தொழிலாளர்கள் எத்தனை பேர் தெரியுமா ? 2,35,422 தொழிலாளர்கள் [illegible] ஆண்டு பலன் அடைந்திருக்கிறார்கள். அவர்கள் துன்பங்களிலே [illegible] தடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை இந்த மன்றத்திற்குச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இந்த அரசின் தீவிர முயற்சியால் குறைந்த [illegible] ஊதிய நிர்ணயத்தால் பலன் அடைந்த தொழிலாளர்களின் பட்டியலை ஒரு சிலவற்றை சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஆட்டோமொபைல் தொழிலாளர்கள், அச்சுக் கோர்க்கும் தொழிலாளர்கள் ஆகியவர்களின் விஷயத்தில் குறைந்த அளவு ஊதியத்தை நிர்ணயம் செய்தது புரட்சித் தலைவரவர்களுடைய அரசுதான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தீப்பெட்டி, வாணம், மத்தாப்பு, ஜவ்வரிசி, செங்கல், புகையிலை, பீடி, சலவை போன்ற தொழில்களில் ஈடுபட்டிருக்கின்ற தொழிலாளர்களுக்குக் குறைந்த பட்ச ஊதியத்தை மாற்றியமைத்துக் கட்டளையிட்டது இந்தப் புரட்சித் தலைவரவர்களுடைய அரசுதான் என்பதை இங்கே நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அரசு பதவியேற்ற ஐந்து மாதங்களில், தொழிற்சாலைகள் மூடப்பட்டதால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் 7,50,000 பேர்களில் பெரும்பாலான தொழிலாளர்களின் பிரச்சினைகள் முடிக்கப்பட்டு அவர்களுடைய நல்வாழ்க்கைக்கு ஒளியேற்றப் பட்டிருக்கிறது என்பதைப் பெருமையோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

பி அண்ட் சி மில்லைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை முருகன் அவர்களும் எடுத்துச் சொன்னார்கள். மாண்புமிகு திரு. உமாநாத் அவர்கள் நல்ல, சிறந்த அரசியல்வாதி ; பெருமைப் படத் தக்க வகையில் அரசியல் ஞானம் பெற்றவர். அவர் மத்திய அரசாங்கத்தைக் கண்டித்துக் கொண்டிருக்கிறார். ஆனால், மாண்புமிகு திரு. துரை முருகன் அவர்கள் பேசும்பொழுது, இதை மத்திய அரசு ஏற்று நடத்த வேண்டுமென்று வலியுறுத்தவில்லையே என்ற வருத்தம்தான் எங்களுக்கு. ஏன், இலட்சிய உறவு என்று சொல்லிக் கொண்டிருப்பவர்கள், 16 பாராளுமன்ற உறுப்பினர்களை வைத்துக் கொண்டு ஏன் பேச வைக்கவில்லை ? ஏன் பி அண்ட் சி மில்லைப் பற்றி மைய அரசிடம் எடுத்துக் காட்டவில்லை ? 15,000 குடும்பங்களுக்காக பாராளுமன்றத்தில் வாய்கூட திறக்கப்படவில்லையே என்பதைத்தான் திரு. துரை முருகன் அவர்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

[திரு. ஏ. சி. சண்முகம்] [1981 பிப்ரவரி 9

பல நலிந்து போன ஆலைகளை, மகாராட்டிரம், கல்கத்தா போன்ற மாநிலங்களிலே மைய அரசு ஏற்று நடத்திக் கொண்டிருக்கிறது. அகமதாபாத் போன்ற இடங்களிலே உள்ள நூற்பாலைகளை மைய அரசு ஏற்று நடத்திக் கொண்டிருக்கிறது. அப்படியிருக்கும்பொழுது நலிந்து போன பி அண்ட் சி ஆலை, ஒரு நாளைக்கு ஒரு இலட்சம் ரூபாய் என்ற அளவிற்கு நஷ்டத்திலே ஓடிக் கொண்டிருந்த அந்த ஆலையை, ஆண்டொன்றுக்கு 3 கோடியே 65 இலட்சம் ரூபாய் நஷ்டத்தில் ஓடிக் கொண்டிருந்த அந்த நிறுவனத்தை மைய அரசு ஏற்று நடத்த வேண்டுமென்று இந்த மாமன்றத்தின் வாயிலாகவும், அரசின் சார்பாகவும் வலியுறுத்திக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

பி. அண்ட் சி. நிறுவனத்தைப் பற்றி திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களும், இந்திரா காங்கிரஸ் கட்சித் தோழர்களும் கூக்குரலிட வேண்டிய இடம் இந்த மாமன்றம் அல்ல; அது டெல்லியில் உள்ள பாராளுமன்றம் ஆகும். இதைப்பற்றி வலியுறுத்தப்பட வேண்டிய தலைவர் தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அல்ல; வலியுறுத்தப்பட வேண்டிய இடம் பாரதப் பிரதமர் இந்திராகாந்தி அவர்களிடத்தில் என்பதை இந்த நேரத்திலே நினைவுபடுத்த விரும்புகிறேன்.

தொழிலாளர்களைப் பற்றி இங்கே மாண்புமிகு திரு. உமாநாத் அவர்கள் வீரமாகவும், ஆவேசமாகவும் பலவற்றை எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். தொழிலாளர்கள் என்றாலே பிரச்சினைகள் என்றுதான் பொருள்படும். ஒருசில பிரச்சினைகள் இருக்கலாம்; அதை நான் மறுக்கவில்லை. அந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அரசு விரைவிலே நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால், தொழிலாளர்களைப்பற்றி நாம் பேச மறந்தால் எங்கே தம்மை மறந்து விடுவார்களோ என்பதற்காக இங்கே ஒரு சிலர் தொழிலாளர்களுக்காகக் கூக்குரலிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

பி. அண்ட் சி மில் தொழிலாளர்களை வீட்டிற்கு அனுப்ப மாட்டோம் என்று இந்த அரசு உத்தரவாதம் அளிக்கவில்லை என்று சொன்னார்கள். பி அண்ட் சி மில்லை மைய அரசு ஏற்று நடத்த வேண்டுமென்று இந்த மாமன்றத்தில் வலியுறுத்திக் கொண்டிருக்கும்பொழுது, தமிழக முதல்வர் அவர்கள் இப்படியொரு உறுதி மொழியினை, அத்தாட்சியினை அளித்தால், மத்திய அரசு வாளாவிருந்துவிடும். இதனை மறந்துவிடும் என்பதனை மனதிலே வைத்திருக்கிறார் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. உமாநாத் அவர்கள் இன்னொன்றையும் சொன்னார்கள். இந்த ஆட்சியைக் கலைத்து விடுவதைப் பற்றியெல்லாம் சுட்டிக் காட்டினார்கள். எதிர்க்கட்சித் தலைவரவர்களுக்கும்.



981 பிப்ரவரி 9] [திரு. ஏ. சி. சண்முகம்]

றுப்பினர்களுக்கும், மைய அரசுக்கும், இந்த மாமன்றத்தின்
ாயிலாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். 126 உறுப்பினர்
ளைக் கொண்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்
ழக ஆட்சியைக் கலைத்த பிறகு 130 உறுப்பினர்களாக இங்கே
ுழைந்திருக்கிறோம் என்பதை யாரும் மறந்து விடக்கூடாது.

[பிற்பகல் 12—40]

இந்த ஆட்சியை அப்படி மீண்டும் கலைக்க, அந்த எண்ணம்
அவர்களுக்கு கனவிலே கூட வருமானால், 131 ஆக இருப்பவர்
கள் 170 ஆக மாறி, இந்த மாமன்றத்திற்கு வருவார்கள் என்பதை
இந்த நேரத்திலே நினைவு படுத்த விரும்புகிறேன்.

மாண்புமிகு உமாநாத் அவர்கள் பேசிய ஒரு சில கருத்துக்கள்
வரவேற்கத் தகுந்ததாகவும், ஒரு சில கருத்துக்கள் அவருடைய
மனசாட்சியே ஏற்றுக் கொள்ளக் கூடாதவையாகவும் இருந்தன.
மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆளும் மாநிலமான மேற்கு
வங்காளத்திலே அவர்கள் பேசிய கருத்துக்கள், அவர்கள் பேசிய
பல பிரச்சினைகள், அங்கேயும் இருந்து கொண்டிருக்கின்றன
என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்
பட்டிருக்கிறேன்.

இங்கே எதிர்க்கட்சியாக இருக்கிற திராவிட முன்னேற்றக்
கழகம், இந்தத் தொழிலாளர்களைப் பற்றிக் கூக்குரலிட்டுக்
கொண்டிருக்கிற இந்த நேரத்திலே, இந்த மாநிலத்திலே இருக்கிற
பெரிய, பெரிய அதிகாரங்கள் எல்லாம், சினிமாத் துறை, வனத்
துறை, விற்பனை வரி, மீன் துறை போன்ற மாநில அரசு பட்டிய
லிலே இருப்பவைகளை மாநில அரசு அதிகாரத்தின் கீழ் இருப்ப
வைகளையெல்லாம் மத்திய அரசு பறிக்கத் துடித்துக் கொண்டி
ருக்கிறது. இன்றைக்கு ஏன் அவர்கள் மவுனமாக இருந்துக்
கொண்டிருக்கிறார்கள். மாநில சுயாட்சி கேட்கிறவர்கள், மவுன
மாக இருப்பது ஏன்? அதிக அதிகாரம் கேட்பவர்கள் அமைதி
யாக இருப்பது ஏன்? இலட்சிய உறவு முறிந்து விடும் என்பதற்
காகவா? சர்க்காரியா கமிஷன் கனவிலே வந்துக் கொண்டிருக்
கிறதா? அதற்காகக் கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறார்களா
என்று நான் கேட்க விரும்புகிறேன். கூக்குரலிட வேண்டியவர்
கள், இருக்கிற அதிகாரங்களை மத்திய அரசு பறிக்கத் துடித்துக்
கொண்டிருக்கும்போது, தோழமை உணர்வாக இருப்பவர்
களுக்கு ஏன் சுட்டிக் காட்ட மனம் வரவில்லை. ஏன் உங்கள்
பேனா எழுதவில்லையே என்பதைக் கேட்க விரும்புகிறேன்.
கிராமப்புற முன்னேற்றத்திற்குத் தேவையானது, நிலச் சீர்
திருத்தச் சட்டம். அந்த நிலச் சீர்திருத்தச் சட்டத்திலிருக்கக்
கூடிய ஓட்டைகளை அடைக்கக் கூடிய தன்மையிலே இருக்கிற
நாம் இயற்றிய பினாமி நில ஒழிப்பு சட்டத்திற்கு மைய அரசு
இதுவரை அனுமதி அளிக்கவில்லை. ஏன் மாண்புமிகு எதிர்க்கட்சி

நண்பர்கள், எதிர்க்கட்சித் தோழர்கள், அதைக் கண்டித்து இந்த மன்றத்திலே குரல் எழுப்பவில்லையென்பதைத்தான் நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் கொள்கை, மிகச் சிறந்த கொள்கையிலே ஒன்றான, தொழிற்சங்கத் தலைவராக இருப்பவர்கள் அந்தந்தத் தொழிற்சாலைகளிலே இருப்பவர்கள் தான். அத்தொழிலிலே இருப்பவர்கள்தான் அதற்குத் தலைமை தாங்கி நடத்த வேண்டும், வெளியார் தலைவராக இருக்கக் கூடாது என்கிற பொன் மொழி, தொழிலாளர்களுடைய வாழ்க்கையிலே ஒரு புத்துணர்ச்சியை, ஒரு புதிய தெம்பை ஏற்படுத்தியிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நினைவு படுத்த விரும்புகிறேன்.

ஜனதாவிலே கொஞ்சம், இந்திரா காங்கிரசிலே கொஞ்சம், அங்கங்கே இருக்கிற கொள்கைகளை எல்லாம் கொண்டுவந்து சேர்க்கிறார்களே, உங்களுக்காக, இன்டிபென்டன்ட் பாலிசி இல்லையே என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் கேட்டார்கள். நானும் பெருமையோடு ஒன்றைச் சொல்லிக் கொள்வேன். எங்களுக்கு என்று தனித்தன்மை உண்டு, அதே நேரத்தில் எதிரியிடம் ஒரு நல்ல திட்டம் இருக்கிறது என்று சொன்னால், எதிரியிடம் ஒரு நல்ல கருத்து இருக்கிறது என்று சொன்னால், அதை வரவேற்க, அந்தத் திட்டத்தை ஏற்று நடத்த, இந்த அரசு என்றைக்கும் தயங்காது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

சிறைச்சாலைகளைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை முருகன் அவர்கள் இங்கே ஒன்றைச் சுட்டிக் காட்டினார்கள். சிறைச்சாலைகளைப் பற்றி நாங்கள் அஞ்சுவது கிடையாது. சிறைச்சாலைகள் எங்களுக்கு மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை என்றெல்லாம் வர்ணித்துப் பேசினார்கள். அந்த மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன், சர்க்காரியா இருக்கிறது, வீராணம் இருக்கிறது, கோதுமை இருக்கிறது, பூச்சி மருந்து இருக்கிறது, மாங்குயில் கூவிடும் பூஞ்சோலைகள் உங்களுக்கு விரைவிலே காத்து இருக்கின்றன. மைய அரசு அதைப் பார்த்துக் கொண்டிருக்கிறது என்பதை நீங்கள் மறந்து விட வேண்டாம் என்பதை இந்த நேரத்திலே அவர்களுக்கு நினைவு படுத்திக் கொண்டு, உலகத் தமிழ் மாநாடு சென்னையிலே, மாண்புமிகு பேரறிஞர், இதய தெய்வம், அண்ணா அவர்கள் நடத்திய பொழுது, .. .. ..

திரு. அ. ரகுமான்கான் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வீராணம் பற்றி உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். சர்க்காரியா கமிஷனிலோ அல்லது மத்திய சர்க்காருடைய அட்மினிஸ்ட்ரேடிவ் குழுவிலோ, அது பற்றி ஏதாவது கருத்து





தெரிவிக்கப்பட்டிருக்கிறதா? ஊழல் நடைபெற்றதாகச் சொல்லப்
பட்டிருக்கிறதா? எந்த அடிப்படையில் வீராணம் என்று
குறிப்பிடுகிறார் என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

திரு. ஏ. சி. சண்முகம் : பிரம்மாண்டமான முறையிலே நடத்திய
பிறகு அவருக்கு டாக்டர் பட்டம் கொடுக்கப்பட்டது—தமிழக
முதல்வருக்கு டாக்டர் பட்டம் கிடைத்தது. உலகத் தமிழ் மாநாடு
நடக்கின்றபோதே எதற்காகக் கொடுத்தார்கள் (குறுக்கீடு).
சர்க்காரியா கமிஷன் தெளிவாகத் தன்னுடைய அறிக்கையை
வெளியிட்டிருக்கிறது. குற்றவாளிகள் யார் யார் என்பதை
வெளிப்படையாக அறிவித்திருக்கிறார்கள். மைய அரசு அதைப்
பற்றி ஆலோசித்துக் கொண்டிருக்கிறது என்பதை ஞாபகப்படுத்
தத்தான், சுட்டிக்காட்டத்தான் நான் இதைச் சொன்னேன்.

திரு. அ. ரகுமான்கான் : He is misleading the House.
நான் கொண்டு வருவது முக்கியமான பிரச்சினை. இப்பொழுது
உறுப்பினர் மீது உரிமைப் பிரச்சினை கூட எழுப்பலாம். காரணம்
சபைக்குத் தவறான தகவல் தரப்பட்டிருக்கிறது. எப்படியென்
றால், சர்க்காரியா கமிஷன் ரிப்போர்ட்டை நான் படித்திருக்
கிறேன். வீராணத்திலே எந்தவிதமான ஊழலும் நடைபெற
வில்லையென்று நான் ரிப்போர்ட் அடிப்படையில் சொல்கிறேன்.
ஆனால், உறுப்பினர் எப்படிச் சொல்கிறார் என்று தெரியவில்லை.

வீராணத்திலே எந்த விதமான ஊழலும் நடைபெற
வில்லையென்று நான் சொல்லுகிறேன். ரிப்போர்ட்டின் அடிப்
படையிலே சொல்லுகிறேன். ஆனால் அதிலே ஊழல் நடை
பெற்றிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது என்று
மாண்புமிகு உறுப்பினர் சொல்கிறார்.

திரு. ஏ. சி. சண்முகம் : மாண்புமிகு துணைத் தலைவர்
அவர்களே, கமிட்டி நடந்து கொண்டிருக்கிறது. மக்கள் மன்றத்
திலே அதற்கான தீர்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. மைய அரசும்
தீர்ப்பினை அளிக்க இருக்கிறது என்பதை நான் இங்கே நினைவு
படுத்த விரும்புகிறேன் (மணியடிக்கப்பட்டது).

அமெரிக்காவில் உள்ள அரிசோனா பல்கலைக் கழகம் மாண்பு
மிகு முதலமைச்சர் அவர்கள் மக்கள் மீது அன்பு காட்டுகிறார்:
மக்களுக்காக வாழ்கிறார் என்ற காரணத்திற்காகத்தான் தொழி
லாளர்களின் தலைவராக, மக்களின் தலைவராக ஆட்சி நடத்து
கிறார் தமிழகத்தில் என்பதற்காகத்தான் அந்த டாக்டர்
பட்டத்தைக் கொடுத்திருக்கிறது. இவரை விடத் தொழிலாளர்
களின் நலனிலே அக்கறை கொண்டுள்ள ஒரு முதல்வரை, மக்கள்
மீது நம்பிக்கை வைத்திருக்கின்ற புரட்சித் தலைவரை வேறு
எந்த மாநிலமும் பெற்றிருக்கவில்லை என்றும், இதற்கு முன்னர்

[திரு. ஏ. சி. சண்முகம்] [1981 பிப்ரவரி 9

இப்படிப்பட்ட ஒருவர் இந்த மாநிலத்தை ஆளவில்லை என்றும் தெரிவித்துக் கொள்கிறேன். அண்ணாவிற்குப் பிறகு, அவரது வழித் தோன்றலாகப் புரட்சித் தலைவர் அவர்கள்தான் தமிழகத்திலே நல்ல ஆட்சியை, நல ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கிறார் என்பதைச் சுட்டிக் காட்டி விடை பெறுகிறேன், நன்றி, வணக்கம்.

திரு. பி. முகமது இஸ்மாயில் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, எதிர்பாராத ஒரு முகாமிலேயிருந்து இக்கண்டனத் தீர்மானத்திற்கு ஆதரவு வருகிறது என்பதை அறிந்தால், நிச்சயமாக திரு. உமாநாத் அவர்கள் வியப்படைவார்கள். இத்தீர்மானத்திற்கு ஆதரவாக வலுவான ஆதாரங்கள் எடுத்து வைக்கப்பட்டு இருக்கின்ற காரணத்தால் ஜனதாக் கட்சி இந்த தீர்மானத்திற்கு தன்னுடைய ஆதரவைத் தர முன் வந்திருக்கிறது.

பக்கிங்காம் அண்ட் கர்னாட்டிக் மில் தொழிலாளர்களின் பரிதாபமான நிலைமையைப் பற்றி எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் சுட்டிக் காட்டினார்கள். அந்த மில் நஷ்டத்தில் ஓடுகின்ற காரணத்தால் தொடர்ந்து நடத்த முடியாதென்று நிர்வாகத்தினர் சொல்லியிருக்கிறார்கள். இந்த வாதத்தை மத்திய அரசும், மாநில அரசும் ஓரளவிற்கும் ஏற்றுக் கொண்டிருக்கிறதோ என்ற ஐயப்பாடு எங்களுக்கு ஏற்படுகிறது. இதுபற்றி மத்திய அரசின் நிலை என்ன என்பது எங்களுக்குத் தெரியும். ஆனால் அதேபோல் மாநில சர்க்காரும், மத்திய அரசிடம் வற்புறுத்துவதற்கு சில எல்லைகள் உண்டு என்பதும் எங்களுக்குத் தெரியும். மத்திய அரசு இந்த விவகாரத்தில் நிர்வாகத்தோடு கை கோர்த்துக் கொண்டு நின்று கொண்டிருக்கிறதோ என்ற சந்தேகம் எங்களுக்கு ஏற்படுகிறது.

இந்தப் பிரச்சினையை மாநில அரசு அணுகுகின்ற முறையிலும் சில குறைபாடுகள் இருக்கின்றதோ என்ற சந்தேகமும் எங்களுக்கு ஏற்படுகிறது. தமிழகத்தின் ஆளும் கட்சியான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், மத்திய அரசை ஆளுகின்ற கட்சிக்கும் இப்போது புதிதாக அரும்பி வருகின்ற நட்பினைப் பயன்படுத்திக் கொண்டாவது, இந்த பதின்மூன்றாயிரம் தொழிலாளர்களினுடைய வாழ்க்கை வளம்பெறக் கூடிய திட்டங்களைத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதை ஏற்று நடத்த மத்திய அரசு பக்கம் காட்டுகின்றபோது மாநில அரசாவது இதை ஏற்று நடத்த முடியுமா என்று ஆராய வேண்டும். நஷ்டம் வருகிறது, எனவே இந்த மில்லை நடத்த முடியாது என்ற வாதத்தை நாம் ஏற்றுக் கொள்வதாக இருந்தால் சில மாதங்களுக்கு முன் [illegible] மாவட்டத்தில் உள்ள பல நூற்பாலைகள் நஷ்டத்தில் நடைபெறுகின்றன, எனவே, மூடிவிட வேண்டுமென்ற நிலை வந்தபோது நேஷனல் டெக்ஸ்டைல் கார்ப்பரேஷன் என்ற நிறுவனத்தை ஏற்படுத்தி அந்த நூற்பாலைகளின் நிர்



1981 பிப்ரவரி 9] [திரு. பி. முகமது இஸ்மாயில்]

வாகப் பொறுப்பை அந்தக் கார்ப்பரேஷன் ஏற்றுக் கொண்டது. அதன்பின் இலாபம் என்பது மட்டுமல்ல, அபரிமிதமான இலாபத்தை ஈட்டுவதின் காரணமாகத்தான் இன்றைய தினம் வேறு எந்த மில்களிலும் வேலை பார்க்கின்ற தொழிலாளர்கள் வாங்குவதைவிட மிக அதிகமான அளவில் அதாவது 32 சதவீதம் போனசாகப் பெறுகிறார்கள் என்ற புதிய நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இவ்வளவு மிகப் பிரசித்திப் பெற்ற பிஅண்டு சி மில் நிறுவனத்தையும் அரசாங்கத்தால் நேஷனல் டெக்ஸ்டைல் கார்ப்பரேஷன் நிர்வாகத்தின் கீழ் ஏற்று நடத்துவதற்குரிய வழிமுறைகளை ஆராய வேண்டுமென்று கேட்டு கொள்கிறேன்.

[பிற்பகல் 12—50]

அந்த பி அண்டு சி மில்லில் வேலை பார்க்கும் தொழிலாளர்களே அந்த நிறுவனத்தை ஏற்று நடத்துகிறோம் என்று கோரிக்கை தந்து இருக்கிறார்கள் என்று கேள்விப்படுகிறேன். வேலை செய்கிறவர்களே அந்த நிறுவனத்தை ஏற்று நடத்துகிறேன் என்று வந்து இருக்கிற காரணத்தால், அவர்களுக்கு நிதி உதவி தேவைப்படும். நிதி உதவியை நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளிடமிருந்து பெறுவதற்கு அரசு உத்தரவாதம் தரும் என்று நாங்கள் நம்புகிறோம்.

இந்த மில்லைப் பொறுத்தவரையில் மத்திய சர்க்கார் ஏனோதானோ என்று இருந்து விட முடியும். நேரடியாக இதிலே அவர்களுக்குப் பிரச்சினை இல்லை. மத்திய சர்க்காரின் அமைச்சரும் இதில் எங்களுக்குப் பொறுப்பு இல்லை என்று பேசியிருப்பதாக நாம் பத்திரிகைகளின் மூலம் படித்து இருக்கிறோம். இங்கே தமிழ் நாட்டில் உள்ள 13,000 தொழிலாளர்களின் பிரச்சினை இதில் அடங்கி இருப்பதால், இந்த மாநிலத்தில் உள்ள அந்த மக்களின் கண்ணீரைப் பார்க்கும் நேரடி நிலைமையில் இந்த அரசாங்கம் இருப்பதால், இந்தப் பிரச்சினையில் நம்முடைய அணுகுமுறை சற்று விரைவானதாக இருக்க வேண்டும் என்று நாங்கள் ஆசைப்படுகிறோம். எனவே, இந்தச் சர்க்காரை நான் கேட்டுக் கொள்வது எல்லாம், மத்திய சர்க்கார் எந்த நிலையில் இருந்தாலும், நம்முடைய சர்க்கார் இதிலே பொறுப்பேற்றுக் கொள்ளத் தயாராக இருக்க வேண்டும் என்பதாகும்.

அந்த மில்லில் வேலை பார்க்கும் தொழிலாளர்கள் எந்தத் தியாகத்தையும் செய்வதற்கு ஆயத்தமாக இருக்கிறார்கள். அங்கேயுள்ள தொழிலாளர்களில் கிட்டத்தட்ட 1,300 தொழிலாளர்களைக் குறைத்துக்கொண்டு, அவர்களின் வேலையையும் சேர்த்துப் பகிர்ந்துகொண்டு பணி செய்வதாகச் சொல்கிறார்கள். அந்த வேலைகளை எந்தெந்த வகையில் பகிர்ந்து கொள்ள முடியும் என்கின்ற கணக்குகளைப் போட்டு, முடிவு காண்பதற்காகச் சிறிது அவகாசம் தேவை—3 மாதம் அல்லது 6 மாதம்

அவகாசம் தேவை என்று கேட்கிறார்கள். இந்தக் கோரிக்கையில் உள்ள நியாயத்தை உணர்ந்து அரசாங்கம் அதனை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாதவரத்தில் உள்ள பால்வள நிறுவனத்தில் வேலை பார்க்கும் தொழிலாளர்கள் ஏதோ ஒரு சில கோரிக்கைகளை முன் வைத்துப் போராடி வருகின்றார்கள். அவர்களுக்குக் கொடுக்கப்படும் ரூ. 155 ஊதியத்தை ரூ. 245 என்று உயர்த்தித் தர வேண்டும் என்று கோரிக்கை விடுத்து இருக்கிறார்கள். அந்தக் கோரிக்கையை வலியுறுத்தித்தான் அவர்கள் வேலை நிறுத்தம் செய்வதாகத் தெரிகிறது. தற்போது வேலை நிறுத்தம் செய்கிற அந்தத் தொழிலாளர்களுக்குப் பதிலாக வேறு ஆட்களை அரசாங்கம் நியமித்து இருப்பதாகத் தெரிகிறது. அப்படி மாற்றாக நியமிக்கப்பட்டவர்களுக்கு ரூ. 245 தருவதாகவும் தெரிகிறது. புதியதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு அரசாங்கம் இந்த ரூ. 245 கொடுக்கிறபோது, ஏற்கனவே வேலை செய்கின்ற தொழிலாளர்களுக்கும் இந்தச் சம்பளம் கொடுப்பதில் நியாயம் இருக்கிறது. ஆகவே, தொழிலாளர்கள் நலன் காக்கும் இந்த சர்க்கார் அவர்களின் நியாயத்தைப் புரிந்து கொண்டு, அவர்களுக்கும் இந்தச் சம்பளம் அளிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே என்.ஜி.ஓ. சங்கத்தினர் கோரிக்கை பற்றி எனக்கு முன்னாலே பேசியவர்கள் சொன்னார்கள். என்.ஜி.ஓ.வினர் டி.ஏ. கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள். மத்திய அரசில் வேலை பார்க்கும் ஊழியர்களுக்கு நான்கு முறை ஏற்கெனவே டி.ஏ. அறிவித்தாகிவிட்டது. 5வது முறை இந்த டிசம்பர்த் திங்களில் அறிவித்தாகிவிட்டது என்கிற செய்தி வந்துகொண்டு இருக்கிறது. விலைவாசி உயர்வைப் பொறுத்தவரையில், மத்திய அரசாங்கத்தில் வேலை பார்ப்பவர்களுக்கு ஒரு விலை, மாநில அரசாங்கத்தில் வேலை பார்ப்பவர்களுக்கு ஒரு விலை என்று சொல்ல முடியாது. இது ஒரே நிலையில் தொட்டு நிற்கும் பிரச்சனை. எனவே, இந்த விஷயத்தில் மத்திய அரசாங்கம் எப்பொழுதெல்லாம் பஞ்சப்படி அறிவிப்பு செய்கிறதோ அப்போதெல்லாம் மாநில அரசும் ஊழியர்களுக்குப் பஞ்சப்படி அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்படிச் செய்கிற காரணத்தால், ஏற்கனவே ஏறியுள்ள விலைவாசி மேலும் உயரும் என்று அரசு கருதுமானால், எப்படிப் போலீஸ் இலாகாவில் பணிபுரிகின்றவர்களுக்கு அத்தியாவசியப் பொருள்களை அரசே வாங்கிச் சப்ளை செய்கிறதோ அதைப்போலவே அரசாங்கத்தில் வேலை பார்க்கும் அரசாங்க ஊழியர்களுக்கும் மலிவான விலையில் தேவையான பொருள்களைச் சப்ளை செய்வதற்கு இந்த அரசாங்கம் முன் வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



எங்கள் மாவட்டமான—கன்னியாகுமரி மாவட்டத்தைத் தொட்டு நிற்கும் பிரச்சனை ரப்பர் பிளான்டேஷனில் பணியாற்றும் தொழிலாளர்களுடையதாகும். தமிழ்நாட்டில் இருக்கும் படியான ரப்பர் எஸ்டேட்டுகளில் அதிகப்படியான இடம்— அரசாங்கம் நடத்துகின்ற ரப்பர் எஸ்டேட்— கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கிறது. அதிலே ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை பார்த்துக்கொண்டு இருக்கிறார்கள். அவர்களுக்கும் போனஸ் அனுமதிக்கப்பட வேண்டும் என்று பல காலமாகப் போராடிக்கொண்டு வருகிறார்கள். அது ஒரு அரசாங்க நிறுவனம் என்கிற ஒரே காரணத்தைச் சொல்லி— அரசு நிறுவனத்தில் போனஸ் தருவது இல்லை என்கிற கொள்கையையே திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள்.

அதே நேரத்தில் தனியார் துறையில் வேலை பார்க்கும் ரப்பர் தோட்டத் தொழிலாளர்களுக்குப் போனஸ் கோரிக்கை தருவதற்கு மட்டுமல்ல; அவர்களுடைய கோரிக்கையை ஏற்றுக் கொண்டு, அவர்களுக்குப் போனஸ் வாங்கித் தர முன்வருகிறது இந்த அரசு. அதே மாதிரி கவர்ன்மெண்ட் ரப்பர் எஸ்டேட்டில் வேலை பார்க்கும் தொழிலாளர்களுக்கும் போனஸ் கொடுக்க அரசு முன் வர வேண்டுமென்று நாங்கள் கேட்டுக் கொள்கிறோம்.

முந்திரித் தொழிற்சாலையைப் பொறுத்தவரையில், எங்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் ஏறக்குறைய 150-க்கு மேற்பட்ட தொழிற்சாலைகள் இருக்கின்றன. மொத்தமுள்ள 200 தொழிற்சாலைகளில் 150-க்கு மேல் கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கின்றன. அந்த முந்திரித் தொழிற்சாலைகளை வளப்படுத்துவதற்கும் அதிக வேலை வாய்ப்பை ஏற்படுத்துவதற்கும் ஆக்கம் தருகின்ற ரீதியில் முந்திரி மரங்களை நட்டு வளர்க்கும் ஒரு திட்டத்தை மத்திய அரசு கொண்டுவந்திருப்பதாகச் செய்திகள் வருகின்றன. இதற்கு 38,36,00,000 ரூபாய் மத்திய அரசு நிதி ஒதுக்கியிருப்பதாகக்கூட செய்தி வருகிறது. அதுமட்டுமல்ல. 60,275 ஹெக்டேர் நிலத்தில் இந்த 'காஷ்நட்' மரங்களை நடுவதற்கான திட்டத்தையும் அரசாங்கம் மேற்கொண்டிருக்கிறது. 150-க்கும் மேற்பட்ட முந்திரித் தொழிற்சாலைகள் இருக்கிற இந்த மாநிலத்தில் அத்தகைய ஒரு திட்டம் இடம் பெற்றிருப்பதாகத் தெரியவில்லை. எனவே முந்திரித் தொழிலாளர்கள் நலன் கருதி இந்தத் திட்டத்தில் ஒரு பகுதி தமிழ்நாட்டிலே நடைபெறுவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை இந்த சர்க்கார் மேற்கொள்ள வேண்டுமென்று நாங்கள் வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புகிறோம்.

நெசவாளர்கள் பிரச்சனைபற்றித் தீர்மானத்தின் சொந்தக்காரர் சுருக்கமாகத் தொட்டுப் பேசினார். நெசவாளர் நலன் கருதி ஒரு மசோதா கொண்டுவரப்பட்டு, இந்த அரசு சில

[திரு. பி. முகமது இஸ்மாயில்] [1981 பிப்ரவரி 9

காலத்திற்கு முன்பு உறுதிமொழி தந்திருக்கிறது. அந்த மசோதா இன்றுவரை வடிவம் பெறவில்லை. எனவே அந்த மசோதாவை உருவாக்கவும், அதன் நிழலில் அங்கே வேலை பார்த்துக் கொண்டிருக்கும் நெசவாளர் பெருமக்கள் நலம் பெறுவதற்கும் அந்தத் திட்டத்தை உடனடியாகக் கொண்டுவந்து அமுல்படுத்துமாறு வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறோம்.

இன்றைக்கு வில்லேஜ் ஆபீசர்ஸ் வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். பல முறைகளில் வேலைகளுக்கு அவர்கள் ஈடுபட்டது நமக்குத் தெரியும். குடும்பப் பாரம்பரியம் வாயிலாக வேலை பார்த்தவர்களுக்காக, அவர்களுடைய பிரச்சனைகளுக்காக நாங்கள் வாதாட விரும்பவில்லை. ஆனால் அவர்களுக்கு ஏதாவது நஷ்டயீடு வழங்க வேண்டும் என்பதிலே நாங்கள் உறுதியாக இருக்கிறோம். 1970 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட சில விதிகளின் அடிப்படையில் தேர்வு பெற்று, தகுதி படைத்தவர்கள் ஒழுங்கான முறையில் இந்த வேலைக்குச் சேர்ந்துகொள்ளப்பட்டவர்களும் இதிலே இருக்கிறார்கள். அவர்களும் இந்த அரசு கொண்டு வந்த அவசரச் சட்டத்தினால் வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். அதை மாற்றி, தேர்வு முறையில் தேர்ச்சி பெற்று வேலை பார்த்தவர்களுக்கு மீண்டும் வேலை வாய்ப்பளிக்க வேண்டுமென்று நாங்கள் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். இதோடு, சில கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அடுத்து திரு. இரா. கருப்பையா அவர்கள்.

**திரு. எல். இளையபெருமாள் :** தலைவரவர்களே, எங்கள் கட்சியின் சார்பில் கொடுக்கப்பட்ட பெயர்கள் விடப்பட்டிருக்கின்றன. என்ன காரணம் என்று தெரியவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** தீர்மானம் கொடுத்தவர்களுக்கு முதலில் வாய்ப்புக் கொடுக்க வேண்டும்.

**திரு. எல். இளையபெருமாள் :** தீர்மானத்தை முன்மொழியாதவர்கள் அரசு தரப்பிலே பேசும்போது எதிர்த்தரப்பிலே இருக்கின்ற எங்களுக்கும் சந்தர்ப்பம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* **திரு. இரா. கருப்பையா :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு திரு. எம். ஜி. ஆர். அவர்களைத் தலைவராகக் கொண்டிருக்கிற தமிழக அரசின் தொழிலாளர் விரோதக் கொள்கையை கண்டிக்கக் கூடிய இந்த தீர்மானத்திற்கு ஆதரவு தெரிவித்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.



1981 பிப்ரவரி 9] [திரு. இரா. கருப்பையா]

இந்தத் தீர்மானத்தின்மீது கருத்தைக் கூறுகிற அதே நேரத்திலே நம்முடைய ஆளுநர் உரையிலே சுட்டிக் காட்டப்பட்டிருக்கிற பிரதான பகுதி இவ்வரசு பின்பற்றும் முன்னேற்றமான, தொழிலாளர் கொள்கை கனிந்த பயனை நல்கி வந்துள்ளது; இம்மாநிலத்தில் தொழிலாளர் நலன் 1980 ஆம் ஆண்டில் மொத்தத்தில் திருப்திகரமாகவே இருந்து வந்திருக்கிறது என்ற முறையில் சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது.

[பிற்பகல் 1—00]

தலைவரவர்களே, நான் அவ்வுறைக்கும் கூறுகிறேன், இன்றைக்கும் கூற விரும்புகிறேன், அமைச்சரவர்களும் தெளிவுபடுத்துவார்கள் என்று எதிர்பார்க்கிறேன். யாருக்கு இந்தக் கொள்கை கனிந்த பலனைக் கொடுத்திருக்கின்றது? தொழிலாளர்களுக்குக் கொடுத்திருக்கிறதா அல்லது முதலாளிக்குக் கொடுத்திருக்கிறதா? நம்முடைய தமிழகத்திலே இருக்கின்ற பெருமுதலாளிகள் தான் இந்தக் கொள்கையின் விளைவாகக் கனிந்த பலனைப் பெற்றிருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து இந்த அரசு பின்பற்றக் கூடிய கொள்கை தொழிற்சங்கமே கூடாது, ஸ்ட்ரைக்கே நடைபெறக் கூடாது என்பது. இந்தக் கொள்கையின் அடிப்படையிலேதான் இந்த அரசாங்கம் செயல்படுகின்றது. ஸ்ட்ரைக்கைக் கண்டாலே அது அரசாங்கத்தைக் கவிழ்க்கக் கூடிய ஒரு நடவடிக்கை என்று இந்த அரசாங்கம் கருதி அதைத் தடை செய்வதற்கான சட்டங்களைக் கொண்டு வருவது போன்ற நடவடிக்கைகளில் இறங்கி இருக்கின்றது. 1926 ஆம் ஆண்டிலேயே தொழிலாளர்கள் சங்கம் அமைத்துப் போராடக் கூடிய உரிமை வழங்கப்பட்டிருக்கின்றது. ஆனால் இன்றைய தினம் நம்முடைய தமிழகத்திலே இருக்கின்ற அதிலும் குறிப்பாக அரசின் பொறுப்பிலே இருக்கக் கூடிய பல்வேறு நிறுவனங்களில் தொழிலாளர்கள் சங்கம் வைத்தாலே அது கூடாது என்றும், அவர்கள் கோரிக்கை வைக்கக் கூடாது என்கின்ற முறையிலேயும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. உதாரணத்திற்கு ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். தமிழ்நாடு அரசின் பொறுப்பிலே இருக்கக் கூடிய சுற்றுலா வளர்ச்சித் துறையினைச் சார்ந்த தொழிலாளர்கள் சங்கம் வைத்தார்கள். கோரிக்கை வைத்தார்கள். ஆனால் அதைச் சகித்துக் கொள்கின்ற பொறுமைகூட அந்த நிர்வாகத்தின் பொறுப்பிலே இருப்பவர்களுக்கு இல்லை. சட்டபூர்வமாக அமைக்கப்பட்ட அந்தச் சங்கத்தினரை அழைத்து அவர்களோடு பேச்சு வார்த்தை நடத்துவது கூட ஒரு தவறான, பாதகமான செயல் என்று அமைச்சரவையிலே இருப்பவர்களும், அந்த அரசாங்க நிறுவனத்தின் பொறுப்பிலே இருப்பவர்களும் எண்ணிக் கொள்கின்றார்கள்.

அது மட்டுமல்ல, இன்னொரு விஷயத்தை இது சம்பந்தமாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அந்த நிறுவனத்தில் செயலாற்றுகின்ற தொழிலாளர்களைப் பிரதிநிதியாகக்

கொண்ட ஒரே சங்கம் இருக்கின்றது. அரசாங்கத்தால் ஏற்படுத்தப்பட்டுள்ள எவாலுவேஷன் அண்ட் இம்ப்ளிமென்டேஷன் கமிட்டி என்ற ஒரு கமிட்டி இருக்கின்றது. தொழிலாளர் சங்கத்தை அங்கீகாரம் செய்வது சம்பந்தமாக, இந்தக் கமிட்டி ஆய்வு செய்து இந்தத் தொழிலாளர் சங்கம் பிரதிநிதித்துவம் வாய்ந்த சங்கம் எனக் கூறி அதை அங்கீகாரம் செய்ய வேண்டும் என்று அந்தக் கமிட்டியே அறிவித்திருக்கின்றது. அந்தக் கமிட்டியிலே அண்ணா தொழிற் சங்கத்தின் பிரிவைச் சேர்ந்த செயலாளர் நண்பர் திரு. பெருமாள் அவர்கள் இருக்கிறார்கள். அவர்களும் சேர்ந்து ஏகோபித்து எடுக்கப்பட்டிருக்கக் கூடிய முடிவு இன்றைக்கும் அங்கீகாரம் செய்யப்படவில்லை. அந்தச் சங்கத்தை ஏன் தீண்டத் தகாத சங்கமாகப் பாவிக்கிறார்கள். அந்தத் தொழிலாளர்களின் கஷ்டங்களை ஏன் நீங்கள் கவனித்து ஆவன செய்வதில்லை என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

அடுத்து, பால்வள நிறுவனத்திலே பணி புரியும் தொழிலாளர்கள் பிரச்சினைபற்றிப் பலரும் பேசி விட்டார்கள். ஆனால் அந்தக் கோரிக்கைகள் குறித்து அவர்களை அழைத்துப் பேச உங்களுக்கு நேரம் இல்லை. மதுரையிலே இருக்கின்ற பால்வள நிறுவனத்தின் தொழிலாளர்கள் சென்னையிலே இருப்பதுபோல் சங்கம் வைத்தார்கள். தங்களுடைய கோரிக்கைகளைத் தெரிவிக்க வேண்டும் என்ற ஆவலைத் தெரிவித்தார்கள். ஆனால் அதற்கு அவர்கள் அனுமதிக்கப்படவில்லை. அது மட்டுமல்ல, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் தங்களது கோரிக்கையினைச் சமர்ப்பிக்கச் சென்றார்கள். ஆனால் அந்தத் தொழிலாளர்கள் மீண்டும் வேலைக்குத் திரும்பும்போது 'நீங்கள் வேலைக்கு வர வேண்டாம்' என்று அன்றைய தினத்திலே இருந்து அவர்கள் வெளியே நிறுத்தப்பட்டிருக்கிறார்கள். இது என்ன நியாயம்? என்ன கொள்கை ?

அதே மாதிரி சென்னையிலே இருப்பவர்கள் கோரிக்கை வைத்தார்கள். அது ஒன்றும் பெரிய கோரிக்கை அல்ல. அதாவது ஷாப்ஸ் அண்ட் எஸ்டாபிளிஷ்மெண்ட் ஆக்ட் இவர்களுக்குப் பொருந்தும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அரசு அறிவித்துள்ள 245 ரூபாய் குறைந்த பட்ச சம்பளம் கொடுக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தார்கள். ஆனால் அந்தக் கோரிக்கை குறித்து அவர்களை அழைத்துப் பேசுவதற்கான நடவடிக்கையைக் கூட இந்த அரசாங்கம் எடுக்கவில்லை. அந்தத் தொழிலாளர்கள் 1,500 பேர் வெளியே நிற்கிறார்கள்.

அவர்களில் பலர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்; சிறையிலே தள்ளப்பட்டிருக்கிறார்கள். இறுதியாக ஏற்பட்ட முடிவைப் பற்றிக்கூட நண்பர்—மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள்கூட அதில் குறுக்கிட்டார்கள். இறுதியாக அந்தப் பிரச்சனையிலே, நம்முடைய ஊரகத்

தொழில் அமைச்சர் அவர்களும், தொழிலாளர் நல இலாகா அதிகாரிகளும், தொழிற் சங்கத் தலைவர்களும் உட்கார்ந்து பேசி, தொழிலாளர் நல ஆணையர் மூலம் ஒரு ஆலோசனை வழங்கி வேலை நிறுத்தத்தை முடிக்கக் கூடிய வகையிலே முடிவெடுத்தார்கள். அது இன்னும் அமுலாக்கப்படவில்லை. ஆனால் தொழிலாளர் தலைவர்கள் தற்போது அதைப்பற்றி அமைச்சரிடத்திலே கேட்கிறபோது, அது முதலமைச்சரிடத்திலே இருந்து இன்னும் ஒப்புதல் பெறவில்லை என்று ஒரு சமாதானம் தான் சொல்லப்படுகிறதே தவிர, வேறு வழிகள் எதுவும் பிறக்கவில்லை.

உங்கள் அனைவருக்கும் தெரியும், இன்றைய தினம் சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனம் ஏற்படுத்தப் பெற்று, உலகம் முழுவதிலும் உள்ள தொழிலாளர்கள் சம்பந்தப்பட்டமட்டில் அனைவரும் ஏற்றுக் கொள்ளும் வகையில் சில கொள்கை கோட்பாடுகள் ஏற்படுத்தப் பெற்றுள்ளன. ஆனால் நம்முடைய நாட்டில் சுதந்திரம் பெற்றதற்குப் பிறகும் சரி, அதற்கு முன்பிருந்தும் சரி, தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்கிற காலத்திலே, வெளியிலே இருந்து புதிய தொழிலாளர்களை வேலைக்கு எடுத்துக் கொள்ளக் கூடாது என்ற சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனம் வகுத்துள்ள நியதி—கோட்பாடு கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. ஆனால் அந்த நியதி—கோட்பாடு இன்றைய தினம் முழுமையாகக் காற்றிலே பறக்க விடப்பெற்றுள்ளது. ஏதாவது ஒரு இடத்தில் வேலை நிறுத்தம் செய்கிறார்களா? வெளியிலே இருக்கக் கூடிய புதிய ஆட்களை அவர்களிடத்தில் நியமித்து, அவர்கள் கோருகிற சம்பளத்தைவிட அதிகமாக வெளியிலே இருந்து வருபவர்களுக்குக் கொடுத்து வேலை நிறுத்தத்தை முறியடிக்கின்ற கருங்காலித் திட்டம் ஒன்று கடைப்பிடிக்கப்படுகிறது.

இன்றைய தினம் அந்தப் பால்வள நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் 240 பேர்கள் கைது செய்யப்பெற்று சிறையில் அடைக்கப் பெற்றிருக்கிறார்கள். அவர்கள்மீது பல கேஸ்கள் போடப்பட்டிருக்கின்றன. வெள்ளையன் ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்ட கிரிமினல் குற்றச் சட்டப் பிரிவுப்படி எல்லாம் இவர்கள்மீது போடப்பட்டிருக்கிறது. கிரிமினல் லா அமெண்மெண்ட் ஆக்ட் செக்ஷன் 7 (1) என்று சொல்வார்கள். அத்தகைய கிரிமினல் சட்டப் பிரிவுகளின்கீழ் அதையும் சேர்த்து வேலை நிறுத்தம் செய்த இந்தத் தொழிலாளர்களின்மேல் வழக்குப் போடப் பெற்றிருக்கிறது. அவர்கள் நிபந்தனையோடு கூடிய ஜாமீனில் வெளியே விடப்பட்டுள்ளவர்கள். சொந்த ஊரில் தங்கக் கூடாது. செங்கல்பட்டு இருந்தால் மதுராந்தகத்தில்தான் தங்க வேண்டும் என்று நிபந்தனை. இப்படி அவர்கள் தங்கள் இடத்தை விட்டு வெளி இடங்களில்—வெளி மாவட்டங்களில் தங்கியிருக்க வேண்டும் என்கிற நிபந்தனை ஏழைத் தொழிலாளிகளின்மீது, அன்றாடம்

வாழ்க்கை நடத்துவதற்கே கஷ்டப்படுகிற அந்த ஏழைத் தொழிலாளிகளின் மீது, வேலை நிறுத்தம் செய்தார்கள் என்ற காரணத்திற்காக இம்மாதிரியான நடவடிக்கைகள்.

இதேபோன்று பல்வேறு இடங்களில் எடுத்திருக்கக் கூடிய நடவடிக்கைகளை, நிகழ்ச்சிகள் சிலவற்றை நான்இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இதே போன்று அண்ணா போக்குவரத்துக் கழகத்தினர் தொழிற் சங்கம் அமைத்தார்கள், அமைத்த உடனேயே அந்தச் சங்கத்தைச சேர்ந்த முக்கிய ஊழியர்கள் அனைவரையும் அந்த இடத்திலிருந்து மாற்றி விட்டார்கள். ரன்னிங் ஸ்டாட் என்று சொல்வார்களே, அந்த ரன்னிங் ஸ்டாப் அத்தனை பேர்களும் இடம் மாற்றப்பட்டார்கள். கூடம் பாறையில் நடைபெற்ற நிகழ்ச்சியைப்பற்றி நண்பர் உமாநாத் அவர்கள்கூட இங்கே குறிப்பிட்டார்கள். பாலு கார்மெண்ட்ஸ், பைன்-ஆர்ட்ஸ் கார்மெண்ட்ஸ் போன்ற நிறுவனங்கள் அதிலுள்ள தொழிலாளர்கள் சங்கம் அமைத்தார்கள் என்ற ஒரே காரணத் திற்காக நாங்கள் நிறுவனத்தை மூடி விட்டோம் என்று அறிவித்து விட்டார்கள். அதுபோன்ற பட்டேல் கார்மெண்ட்ஸ்—அதில் 100 தொழிலாளர்களை லே—ஆப் செய்திருக்கிறார்கள். இப்படி ரெடிமேட் ஆடைகள் செய்கிற அத்தனை நிறுவனங்களும் மூடப் பட்டிருக்கின்றன சங்கம் அமைத்த காரணத்தினால்.

பாலு கார்மெண்ட்ஸ் நிறுவனம் சம்பந்தப்பட்ட வரையில் அத்தனை பேர்களும் பெண்கள். இன்றைய தினம் அவர்கள் தெருவிலே நிற்கிறார்கள். தாய் குலத்தைப்பற்றி நமது முதலமைச்சர் அவர்கள் பரிவான உள்ளத்தோடு, இரக்க சிந்தனை யோடு இருக்கிறார்கள் என்பதில் ஐயமில்லை. ஆனால் இந்த பாலு கார்மெண்ட்ஸ் நிறுவனப் பெண்கள், முதல்வர் அவர்களைச் சந்தித்து தங்கள் கோரிக்கைகளை வைத்தபோது, அவர்களுக்கு கூட்டுறவுத் துறையிலே தொழிற்சாலை அமைத்துக் கொடுத்து அவர்கள் நலன் பாதுகாக்கப்படும் என்று அன்றைய தினம் முதல்வர் அவர்கள் வாக்களித்ததாகச் சொல்லப் பெறுகிறது ஆனால் இன்று வரையில் எந்தவித நடவடிக்கையும் இல்லை.... (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தப் பெண்கள் தெருவிலே நிற்கிறார்கள். நாங்கள் கொடுத்த உத்தர வாதத்தை நிறைவேற்றவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள் அவருக்கு நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன். நாங்கள் சொன்ன யோசனையை அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. லாபம் வருகிற வரையில் இப்பொழுது இருக்கிற ஊதியத்தையே பெற்றுக் கொள்ள வேண்டு மென்று சொன்னபோது லாபம் வருகிறதோ இல்லையோ, இரண்டு ஆண்டுகளுக்குள், மேலும் அதை பரிசீலித்து உயர்த்தித்

தர வேண்டும் என்ற நிர்ப்பந்தம் ஏற்பட்டதன் பிறகுதான். அந்தபேச்சு வார்த்தை முறிவடைந்ததே தவிர, அரசு அதில் பின் வாங்கவில்லை என்பதையும் அவர்கள் ஒத்துக் கொள்ளாததால் ஏற்பட்ட விளைவுதான் இது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்

[பிற்பகல் 1-10]

திரு. இரா. கருப்பையா : முதலாளிகள் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. முதலாளிகள் ஊதியத்தை உயர்த்திக் கொடுக்க மறுக்கிறார்கள். இலாபம் வந்தால் கொடுக்கலாம் என்றால்.............

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஒன்றைச் சொல்ல விரும்பு கிறேன். அரசு எடுத்துக் கொள்வதற்கு முடிவு செய்து இப்படி அதை அரசு ஏற்று நடத்தும்போது மக்களின் வரிப் பணத்தைக் கொடுத்துத்தான் அதை நடத்த வேண்டும். இலாபம் வருவ தற்கு முன்னால் எப்படியாவது இருக்கிற வேலை காப்பாற்றப் பட வேண்டும், தற்போது கொடுத்துக் கொண்டிருக்கக்கூடிய ஊதியம் தொடர்ந்து கிடைக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு அரசு அதற்கு உத்தரவாதம் தர முன்வந்தபோது நண்பர் அவர்கள் சொல்வதுபோல் ஒத்துழைக்கவில்லை என்பதை நான் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இரா. கருப்பையா : எந்த இடத்திலும் முதலாளிகள் கூறுவது, நிறுவனத்தில் லாபம் கிடையாது, ஆகவே ஊதிய உயர்வு கொடுக்க முடியாது என்றுதான் சொல்வது வழக்கம்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : நானேதான் பேசினேன், வேறு யாரும் அல்ல. நானேதான் சொல்கிறேன். இப்போதும் சொல்கிறேன். அரசு எடுத்துக்கொண்டால் அரசு நடத்தி இலாபம் வருகிற வரையில் அதில் அதிகமாக நஷ்டம் ஏற்படுகிற வகையில் சம்பள உயர்வுகள் போன்றவை கேட்கக் கூடாது என்று ஒரு உத்தரவாதம் தந்தால் அரசாங்கம் எடுத்துக் கொள்ளலாம் என்றேன். அது முடியாது என்று சொல்லிவிட் டார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன் அரசாங்கத்தை ஒரு தனியார் நிறுவனம் போல் நினைக்கக் கூடாது என்பதும் அரசாங்கம் செலவழிக்கிற பணம் மக்கள் வரிப்பணம் என்ப தையும் அதுவும் இலாபம் இதில் தனியார் யாருக்கும் கிடையாது என்பதையும் உறுப்பினர் புரிந்துகொள்ள வேண்டும்.

திரு. இரா. கருப்பையா : அரசாங்கம் கூறக்கூடிய இந்த வாதம், அதுவும் குறைந்தபட்சம் ரூ. 75, ரூ. 100-ல் வாழ்க்கை நடத்த வேண்டிய நிலையையிலுள்ள தொழிலாளர்கள் அ...

ஏற்றுக்கொள்ள முடியாத நிலையில் இருக்கிறார்கள், ஆகவே, குறைந்தபட்ச வாழ்க்கை சம்பளத்திற்கு உத்தரவாதம் செய்ய வேண்டியது அரசின் கடமை.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : நான் குறுக்கிடுவது, பின்னால் பேசுவதைக் குறைத்துக்கொள்ளலாம் என்பதற்காகத்தான். நான் மீண்டும் சொல்கிறேன். அந்தப் பணியில் ஈடுபட்டிருந்தவர்கள் வந்து பேசவில்லை. சில தாய்மார்கள் ஒத்துக்கொண்டார்கள். ஆனால் சங்கங்களுடைய தலைவர்கள் ஒத்துக்கொள்ளவில்லை.

திரு. ரா. உமாநாத் : குறுக்கிடுவதற்கு மன்னிக்கவும். தொழிலாளர்கள் ஒத்துக்கொண்டதாகவும் தலைவர்கள் ஒத்துக்கொள்ளவில்லை என்று சொன்னார்கள். நாங்கள்தான் அங்கே இருக்கிறோம், ஸி.ஐ.டி.யு. லாபம் அதிகமாகக் கிடைக்கிறவரையில் ஊதிய உயர்வே கேட்கக்கூடாது என்ற நிபந்தனையை மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் வைத்து அதை ஏற்றுக்கொள்ளவில்லை என்பதுதான் முதலமைச்சர் அவர்கள் நிலை. குறைந்த சம்பளம் இருக்கிற இடத்தில் கூடுதல் வேண்டுமென்று சங்கம் வைத்திருக்கிற இடத்தில் அவர்களை வெளியேற்றுகிற போது முதல் அமைச்சர் அவர்களும் நீங்கள் கூலி உயர்வு இலாபம் வருகிறவரையில் கேட்கக்கூடாது என்று சொன்னால் சங்கமே தேவையில்லையே. அதைச் சுட்டிக்காட்டி, அதை ஏற்றுக்கொண்டால் அதைச் சுட்டிக்காட்டி லாபம் வருகிற வரையில் யாருக்கும் ஊதிய உயர்வு இல்லை என்று பல்லாயிரக்கணக்கான, சென்னையில் இருக்கிற கார்மென்ட் முதலாளிகள் பூராவும் ஊதிய உயர்வு கொடுக்க மறுப்பார்கள்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : வேலை இல்லை, வறுமையில் வாடுகிறார்கள். அவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டும். அந்த வகையில் இதுவரை எடுத்து நடத்தாத ஒரு தொழிலை அரசாங்கம் எடுத்துக் கொள்ள வேண்டும் என்பது நிலைமை. அதை அரசு ஒத்துக்கொண்டது. அதை அரசு ஒத்துக்கொண்ட பிறகும் அங்கே வந்து பேசிய தாய்மார்கள் அதைச் சொன்னார்களா இல்லையா என்பதை அங்கே வராத மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் கொஞ்சம் கேட்டுத் தெரிந்து கொண்டால் நல்லது என்று கருதுகிறேன்.

திரு. இரா. கருப்பையா : எங்களுடைய கோரிக்கை வாழ்க்கை நடத்துவதற்கு தேவையான குறைந்தபட்ச ஊதியம் அரசாங்கம் நிர்ணயித்து இருக்கக்கூடிய நிலையில் எந்த இடத்திலும் அதை உத்தரவாதமாக கொடுக்க வேண்டிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுதான்.



அடுத்து, பல்வேறிடங்களில் தொழிற்சாலைகளில் நடைபெறக்கூடிய வேலைநிறுத்தங்கள் பற்றியும் அதில் அரசாங்கம் கையாளக்கூடிய நடவடிக்கைகள் பற்றியும் திரு. உமாநாத் அவர்கள் குறிப்பிட்டார்கள். வடலூர் சிராமிக் தொழிற்சாலை 1980 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 17 ஆம் தேதியிலிருந்து மூடப்பட்டிருக்கிறது. கோவை எஸ்.ஆர்.பி. மில், பயனியர் போன்ற மில்களில் மாதக்கணக்கில் வேலைநிறுத்தம் நடைபெற்று—இன்றையதினம் அரசு கையாளக்கூடிய கொள்கை தொழிலாளர்களை வேலை நிறுத்தத்தை நீடித்து நடத்தி, சக்தியற்ற நிலையில் அவர்கள் வேலைநிறுத்தத்தை முடித்துக் கொண்டு வேலைக்கு வரவேண்டும். இது என்ன கொள்கை என்பதை நம்மால் புரிந்துகொள்ள முடியவில்லை. தொழிலாளர்கள் தங்கள் வாழ்க்கைக்கான சம்பளம் வேண்டும், விலைவாசிகள் உயர்ந்துவிட்டது, அதனால் ஊதிய உயர்வு வேண்டும், தங்களுடைய சர்வீஸ் கண்டிஷன்கள் மாற்றப்பட வேண்டுமென்ற முறையிலே இயக்கத்தை நடத்தக்கூடிய நேரத்திலே, அதைக் கொடுக்க மறுக்கின்ற நிர்வாகங்களை எதிர்த்து, அதை உணர்த்தக்கூடிய அளவிலே செயல்பட்டு, அதை அமுல் செய்வதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகளுக்குப் பதிலாக, முதலாளிகள் சொல்லிவிட்டார்கள், ஆகவே, நாங்கள் என்ன செய்வது நீங்கள் கடைசியாக வேலைக்கு செல்லக்கூடிய நிலைமை எப்போது வருகிறதோ, அந்த நிலைமையிலே செல்லுங்கள் என்று அந்த முறையிலே இன்றையதினம் நடவடிக்கைகள் இருக்கின்றது என்பதை நான் வருத்தத்தோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதே மாதிரி, இன்றையதினம் தொழிலாளர்கள் போராட்டங்கள் நடத்துகின்றபோது போலீசார் பல்வேறு முறைகளிலே அதிலே தலையிடுகின்ற நிலைமை இருக்கிறது. இன்றையதினம் தொழிலாளர்கள் போராட்டம் என்ற நிலைமை வருகின்றபோது, அதற்கு தடை உத்தரவு விதிக்கப்படுகிறது. அவர்கள் கூட்டம் நடத்த வேண்டுமென்றால், அதற்கு அனுமதி வேண்டும்; அதுவும் சில நேரங்களிலே அதற்கு அனுமதி மறுக்கப்படுகிறது. அதேபோல், ஊர்வலங்கள் நடத்தக்கூடாது என்றும் சொல்லப்படுகிறது. ஆலை வாயிலிலே தொழிலாளர்கள் கும்பலாக நின்றவுடனே, கைது செய்யப்படுகின்ற இப்படிப்பட்ட நிலைமைகள் எல்லாம் இன்றைய தினம் இருக்கின்றது. இப்படி பல்வேறு சம்பவங்கள் இன்றையதினம் நடைபெறுவது அனைவருக்கும் தெரியும். ஆகவே, தொழிலாளர்களிடையே போலீஸ் நிர்வாகம் இம்மாதிரியான நடவடிக்கைகளை எடுக்கின்றபோது, இந்த மாநிலத்திலே இதுவரையிலே கதவடைப்பு செய்து தொழிலாளர்களை தெருவிலே நிறுத்தக்கூடிய ஏதாவது ஒரு முதலாளியை கைது செய்துள்ளதாகக் கூற முடியுமா? தொழிலாளர்களுக்கு ஆதரவாக நிற்கக்கூடிய அரசாங்கம், துணிந்து இம்மாதிரியான நடவடிக்கைகள் எடுப்பதன் மூலமாக, இந்த

[திரு. இரா. கருப்பையா] [1981 பிப்ரவரி 9

மாநிலத்திலே இருக்கக்கூடிய பல இலட்சக்கணக்கான, கோடிக் கணக்கான தொழிலாளர்களின் ஆதரவை பெற முடியும். இந்த நம்பிக்கையில் இந்த மாநிலத்திலே இருக்கக்கூடிய உழைக் கக்கூடிய மக்களுக்காக இந்த அரசு, முதலாளிகளை எதிர்த்து நிற்க முன்வரவேண்டுமென்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, கருங்காலிகளைப் பற்றிக் கூறினார்கள். ஐ.எல்.ஓ. நியதிக்கு விரோதமாக, வேலை நிறுத்தம் நேரங் களில், இப்படிப்பட்ட கருங்காலிகளுக்கு பரிசுகள் கொடுக்கப்படு கின்றன. வேலை நிறுத்தத்தை உடைப்பதற்காக இத்தகைய கருங்காலிகள் ரெக்ரூட் செய்யப்பட்டு, அவர்களுக்கு பரிசுகள் கொடுக்கப்படுகின்றன. மதுரை கார்ப்பரேஷனிலே, மின்சாரப் பிரிவிலே, அங்குள்ள ஊழியர்கள் வேலைநிறுத்தம் செய்த நேரத்திலே, அந்த வேலை நிறுத்தத்தை உடைப்பதற்காக இத்தகைய வகையிலே செயல்பட்டார்கள். ஒரே நாளிலே தீர்மானம் போட்டு, அதற்கு அடுத்த நாளே 400 ரூபாய் பரிசாக பட்டுவாடா செய்தார்கள். அதேபோல், இந்த மாநிலத்திலே போக்குவரத்துத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்த போது, இத்தகைய கருங்காலி வேலை செய்தவர்களுக்கு 200 ரூபாய் பட்டுவாடா செய்தார்கள். இவைகள் அனைத்தும் இந்த அரசாங்கத்தின் கொள்கையாக, வேலைநிறுத்த காலங் களிலே அதை உடைப்பதற்காக, கடைப்பிடிக்கப்படுகின்றது. அப்படியென்றால், எப்படி தொழிலாளர்கள் போராட முடியும்? தங்கள் நியாயத்தைப் பெற முடியும்? என்பது கேள்வியாக இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, இது சரியான கொள்கை அல்ல. இந்தக் கொள்கையில் மாற்றம் தேவை. இந்தக் கொள்கையை தொழிலாளர் வர்க்கம் ஏற்றுக் கொள்ளாது என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதோடு, இன்றையதினம் தொழிலாளர்கள் வேலைநிறுத் தத்தில் ஈடுபடுகின்றபோது, அவர்களுடைய உரிமைகளைப் பறிப்பதற்காக அவசரச் சட்டம் இயற்றப்படுகிறது. இந்த அவசரச் சட்டத்தைப் பற்றியும், அதன் விளைவுகளைப்பற்றி யும் முழுமையாக விளக்குவதற்கு அதிக நேரம் எனக்கில்லை. தவிர, இது அனைவருக்கும் தெரிந்த விஷயம். எனவே, தொழிலாளர்களின் வேலைநிறுத்த உரிமையைப் பறிக்கக்கூடிய இந்தச் சட்டத்தை, இந்த நாட்டிலே உள்ள தொழிலாளர் வர்க் கம் ஏற்றுக்கொள்ள முடியாது என்பதைப் பணிவோடு தெரி வித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, தொழில் தகராறு சட்டத்தை திருத்துவது என்று நம்முடைய பாராளுமன்றத்திலே இதற்கான சட்டத் திருத்த [illegible] கொண்டுவர உத்தேசித்திருப்பதாக அறிவித்திருக்



1981 பிப்ரவரி 9] [திரு. இரா. கருப்பையா]

கிறார்கள். வேலைநிறுத்தம் செய்வது சம்பந்தமாக, இந்த 12 (3) சம்பந்தமான அனைத்தையும் ஏற்கனவே ஜனதா ஆட்சிக் காலத்திலே மத்திய தொழிலாளர் நல அமைச்சராக இருந்து ரவீந்திர வர்மா அவர்கள் தொழில் தகராறு சட்டத் தைக் கடுமையாக உருவாக்குவதற்கு முயற்சிகள் எடுத்து, அது கைவிடப்பட்ட விஷயமாகும். இந்தியா முழுவதிலுமுள்ள தொழிலாளர்களும் தொழிற்சங்கத் தலைவர்களும், டில்லியிலே நடைபெற்ற மாநாட்டிற்குச் சென்று, அங்கே பேசி, இந்தச் சட்டத்தை நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது, கைவிட வேண்டு மென்று சொன்னார்கள். தி.மு.க. பிரதிநிதி மறைந்த காட்டூர் கோபால் அவர்கள்கூட அந்த மாநாட்டிலே கலந்து கொண்டிருக் கிறார்கள். ஆகவே, தொழிலாளர்களுடைய உரிமைகளைப் பறிக்கக்கூடிய அந்தச் சட்டங்களை மத்திய அரசாங்கமே கைவிட்டபிறகு, இன்றைய தினம் அதை மீண்டும் கொண்டு வருகின்ற முறையிலே இங்கு முயற்சிகள் நடைபெறுகின்றன. ஆகவே, இம்மாதிரியான முயற்சிகளை அனுமதிக்க முடியாது, அதைக் கைவிட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, குறிப்பிட வேண்டிய விஷயம் தொழிலாளர் மீதான வழக்குகள் பற்றியதாகும். நம் நாடு சுதந்திரம் பெற்ற காலத்திலே இருந்து, தொழிலாளர்களுடைய போராட்டம் முடி வுற்றால், அந்தப் போராட்டம் முடிவடைந்ததற்குப் பிறகு அந்தத் தொழிலாளர்களின்மீது போடப்பட்ட வழக்குகள் அனைத்தும் வாபஸ் பெறப்படும்.

[பிற்பகல் 1-20]

அது காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலும் நடந்திருக்கிறது. திரா விட முன்னேற்றக் கழக ஆட்சிக்காலத்திலும் நடந்திருக்கிறது. காரணம், போராட்டம் முடிந்த பிறகு சுமூகமான உறவு ஏற்பட வேண்டும், சுமூகமான முறையில் உற்பத்தி நடக்க வேண்டும் என்ற காரணத்தால் அம்மாதிரியான நடவடிக்கை எடுக்கப்படு கிறது. அது சாதாரண நியதியாக இருந்து வந்திருக்கிறது. டி.ஐ. சைக்கிளில் 1978 இல் வேலை நிறுத்தம் நடந்த போது தொடுக்கப்பட்ட வழக்குகள் இன்றையதினம் வரை வாபஸ் பெறப்படவில்லை. இந்தியா போர்ஜ நிர்வாகியே தொழிலாளி மீது இருக்கக்கூடிய வழக்குகளை வாபஸ் பெறலாமென்று கடி தத்தைக் கொடுத்தும் இன்றைக்கும் வழக்கு வாபஸ் பெறப்பட வில்லை. மாண்புமிகு முதல்வர் அவர்களேகூட பல்வேறு சந்தர்ப் பங்களில், ஏன் பகிங்கரமாக சட்டமன்றத்தில் கூட கூறியிருக்கி றார்கள். தொழிலாளிகளின் மீது போடப்பட்ட வழக்குகள் வாபஸ் பெறப்படும் என்று கூறியிருக்கிறார்கள். ஆனால், இன் றைக்கும் வாபஸ் பெறப்படாத நிலைமை இருந்துகொண்டிருக் கிறது. தூத்துக்குடியில் 30 தொழிலாளிகள் மீது வழக்கு ஒரு வருக்கொருவர் அடித்துக் கொண்டார்கள் என்று வழக்கு.

அங்கிருக்கும் நிர்வாகிகள் முடித்துவிட வேண்டுமென்று நினைத்தாலும் கூட தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. மதுரை பஞ்சாலை தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தின்போது போடப்பட்டுள்ள வழக்குகள் வாபஸ் பெறப்படவில்லை.

மதுரை காமராஜ் பல்கலைக் கழக ஆசிரியர் போராட்டம் சென்ற சட்டமன்றக் கூட்டம் நடைபெற்ற காலத்தில் நடந்து முடிந்து விட்டது. இன்றைக்கும் வழக்குகள் வாபஸ் பெறப்படாத நிலைமைகள் இருந்து கொண்டிருக்கின்றன. என். ஜி. ஓ. கருவூல ஊழியர்கள் போராடியிருக்கிறார்கள். அவர்கள் மீது போடப்பட்டுள்ள வழக்குகள் அப்படியே இருக்கின்றன. ஆகவே, இந்தக் கொள்கையை மாற்றவேண்டுமென்ற கருத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தொழிலாளர் நல இலாகா சமரச நடவடிக்கை மேற்கொள்கிற போது முதலாளிகள் என்குயரிக்கு வரமாட்டார்கள். கன்சிலியேஷனுக்கு வரமாட்டார்கள். இவர்களைக் கேட்டால் நாங்கள் என்ன செய்வது என்று சொல்லுகிறார்கள். நோட்டீஸ் அனுப்பினாலும் வரமாட்டேன் என்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே அறிவித்தார்கள்—கட்டாயமாக முதலாளிகள் விசாரணையில் கலந்து கொள்ள வேண்டுமென்ற ஒரு சட்டத்தைக் கொண்டு வருவோம் என்று. மத்தியில் நடைபெற்ற மந்திரிகள் மாநாட்டிலும் ஆணித்தரமாக வாதாடினார்கள். ஆனால், என்ன காரணத்தாலோ தெரியவில்லை அம்மாதிரி சட்டத்தை, முதலாளிகளை நிர்ப்பந்திக்கும் சட்டத்தைக் கொண்டுவரவில்லை. பல இடங்களில் அமைச்சரிடத்தில் பேசுவதுண்டு—வரமாட்டேன் என்று சொன்னால் போலீசை முடுக்கிவிட்டு லாரியில் கொண்டு வாருங்கள் என்று. இந்த மாதிரி நிர்ப்பந்த நடவடிக்கை எடுத்தால்தான் முதலாளிகள் வருவார்கள் என்ற நிலைமை இருக்கிறது. இதன் காரணமாக போராட்டம் நீடிக்க வேண்டிய அவசியம், ஏற்படுகிறது.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** ஓட்டல் தொழிலாளர்களைப் பொறுத்தவரை இப்படி அழைத்தால் வர வேண்டும் சம்மன் அனுப்பினால் ஆவணங்களைக் கொண்டு வர வேண்டும் என்று சம்மன் கொடுக்க மேலதிகாரிக்கு அதிகாரம் கொடுத்து சட்டம் கொண்டு வரப்பட்டுஇங்கே நிறைவேற்றப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் பற்றி மத்திய அரசு நாங்களே கொண்டு வருகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். இருவரில் ஒருவர் நிச்சயமாகக் கொண்டு வருவோம் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. இரா. கருப்பையா :** நிச்சயமாக சீக்கிரம் வரவேண்டுமென்பது எங்களுடைய கோரிக்கை. வேலை நீக்கம் செய்யப்படும் தொழிலாளர்களின் வழக்குகளைத் தொழில் கோர்ட்டுக்கு

அனுப்புவதில் என்ன கஷ்டம்? குற்றமற்றவர் என்று நிரூபித்து வேலைக்கு வருவதற்கான வாய்ப்பை தொழில் நீதிமன்றங்கள் தருகின்றன. அந்த வாய்ப்பைத் தொழிலாளர்களுக்குக்கொடுக்க வேண்டும். அரசு என்ன கொள்கையைக் கடைப்பிடிக்கிறது? டி.ஐ. சைக்கிள்ஸ்—நாங்கள் அனுப்பமாட்டோம்; டி.வி.எஸ்.—நாங்கள் அனுப்பமாட்டோம்; அரசாங்கத் துறையில் டூரிசம் போன்றவற்றில் நாங்கள் அனுப்பமாட்டோம் என்று சொல்லுகிறார்கள். என்ன நீதி? குற்றம் செய்தார்கள் என்று சொல்லும்போது குற்றம் செய்யவில்லை என்று நீதிமன்றத்திற்குச் சென்று வாதிட்டு வேலைக்குத் திரும்பி வருவதற்கான வாய்ப்பைக் கொடுப்பதில் என்ன கஷ்டம்.? அமைச்சர் அவர்கள் சட்டத் திருத்தம் கொண்டு வருவேன் என்றார். இன்றையதினம் வரையில் அம்மாதிரி பாரபட்சமான முறையில் நடந்து வருகிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அரசுத் துறையில் எடுத்துக்கொண்டால் ஏற்கெனவே ஒரு ஸ்கிரீனிங் கமிட்டி என்று வைத்திருக்கிறார். அந்தத் தொழிலாளி மீது அதிகாரி நடவடிக்கை எடுக்கிறார்கள். அவரேபோய் ஸ்கிரீனிங் கமிட்டியில் உட்காருவாரானால் எப்படி இதைதொழில் போர்ட்டுக்கு அனுப்ப வேண்டுமென்று சிபாரிசு செய்வார்? ஆகவே, பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் தொழில் கோர்ட்டுக்கு நேரடியாகச் சென்று குற்றமற்றவர்கள் என்று நிரூபித்து வேலைக்கு வருவதற்கான வாய்ப்பு அனைத்துத் தொழிலாளர்களுக்கும் நடைமுறையில் வேண்டும். ஆகவே, ஸ்கிரீனிங் கமிட்டி ஒழிக்கப்பட வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மூடப்பட்ட தொழிற்சாலைகளைப் பொறுத்தவரையில், குரோம் லெதர் பேக்டரி மூடப்பட்டு 2 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது. என்ன நடவடிக்கை? சக்தி பைப்ஸ் மூடப்பட்டு இரண்டாண்டுகளுக்கு மேலாகிவிட்டது, என்ன நடவடிக்கை? கடைசியாக பி. அண்ட் சி. மில் மூடப்பட்டு இருக்கிறது, எல்லோரும் பி. அண்டு சி. ஆலையை எடுக்க வேண்டும் என்கிறோம். ஆனால், மாநில அரசின் முயற்சிகள் அந்த ஆலை திறக்கப்பட்டாக வேண்டுமென்று மத்திய அரசை நிர்பந்திக்கின்ற வரையிலும் அதற்கு தீர்வு காணமுடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மற்ற விவரங்களைச் சொல்ல வேண்டுமென்றால் எனக்கு நேரம் கிடையாது. அனைத்துக் கட்சிகளும், எல்லோரும் திறக்கப்பட்டாக வேண்டுமென்றுதான் சொல்கிறோம், ஆனால், அதற்கு இடையூறாக இருப்பது என்ன? இன்றைக்கு 13 ஆயிரம் தொழிலாளர்கள், அவர்களுடைய குடும்பங்களுடைய நிலைமையை எண்ணிப்பார்க்க வேண்டும். தமிழ் நாட்டிலே ஒரு பெரிய தொழிற்சாலை மூடப்பட்டிருப்பது தமிழகத்திற்கே அவமானமாக இருக்கிறது என்று கருதப்பட வேண்டும், என்பது மட்டுமல்ல, தமிழ்நாட்டினுடைய தொழில் பாதுகாக்கப்பட வேண்டுமென்ற உணர்வோடு நான் அதைச் சொல்கிறேன்.

[திரு. இரா. கருப்பையா] [1981 பிப்ரவரி 9

தொழிலாளர் நலன் குறித்து தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் பட்ஜெட் கூட்டத்திலே பல்வேறு சட்டத் திருத்தங்களைக் கொண்டு வருவோம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஒப்பந்தத் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு, இரண்டு ஆண்டுப் பணிக்காலத்திற்குப் பின்னர் நிரந்தரமாக்குதல், சமரசப் பேச்சு வார்த்தைக்கு வர மறுக்கிறவர்களை நிர்ப்பந்தப்படுத்துதல், தொழிலாளர்களுக்கு நிர்வாகத்திலே பங்கு இவைகளுக்காக சட்டங்கள் கொண்டுவரப்படும் என்று வாக்குறுதிகள் அளிக்கப்பட்டன. இன்றைய தினம் வரையிலே அந்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவேயில்லை.

அரசு போடக்கூடிய உத்தரவுகள் எந்த அளவுக்கு நிறைவேற்றப்படுகின்றன என்பதைப் பார்க்கும்போது, முனிசிபல் தொழிலாளிகள் சம்பந்தப்பட்ட வரையில் அவர்கள் அனைவரும் அரிசனங்கள் தாழ்த்தப்பட்டவர்கள். அவர்களுக்கு இன்றைக்கு பென்ஷன் கிடையாது, பிராவிடன்ட் பண்ட் கிடையாது. கிராஜுவட்டி கிடையாது, 1973ஆம் ஆண்டிலே உத்தரவு போடப்பட்டது, அவர்களுக்கு, ரிடையர் ஆகிறபோது பென்ஷன் கொடுப்பது என்று அரசாங்கம் ஆணை எண். 1809. 1973 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 28-ஆம் நாள் அன்று போடப்பட்டு இருக்கிறது. ஆனால், அந்த உத்தரவின்படி இதுவரைக்கும் அவர்களுக்கு பென்ஷன் கிடைக்கவில்லை என்ற நிலைமைதான் இருக்கிறது. சமீபத்திலே மதுரை கார்ப்பரேஷன் ஊழியர்கள், பென்ஷன் கொடுக்கப்படாத நிலையிலே வேலை நிறுத்தம் அறிவிப்பைக் கொடுத்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். முனிசிபல் தொழிலாளர்களுக்கு ஓய்வு பெறுவது 55 வயதிலிருந்து 60 வரையில் அமைதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், 56 வது வயதில் வேலை செய்தால் இன்கிரிமென்ட் கிடையாது. சலுகைகளை அரசு அறிவிக்கும் அவர்கள் பெற முடியாத நிலைமை இருந்து வருகிறது. இறந்தவர்கள் குடும்பத்திற்கு 10 ஆயிரம் ரூபாய் அளிக்கப்படுகிறது. ஆனால், அங்கே 55 வயதிலிருந்து 60 அறுபது வயது வரையிலுள்ள தொழிலாளர் ஒருவர் இறந்து விட்டால் அவரைச் சார்ந்தவர்களுக்கு அந்த 10 ஆயிரம் கொடுக்கப்பட மாட்டாது என்ற நிலைமை இருக்கிறது. இந்த அனாமலி எப்படி ஏற்பட்டது என்பதைப் புரிந்துகொள்ள முடியவில்லை.

முதல்வர் அவர்கள் முனிசிபல் தொழிலாளர்களுக்கு 1 மாதம் மெடிக்கல் லீவ் கொடுப்பதற்கு உத்தரவு போட்டுள்ளார். மதுரையிலே கார்ப்பரேஷனில் உள்ள தொழிலாளர்களுக்கு கிடையாது என்று வியாக்கியானம் செய்யப்படுகிறது. இதையும் எண்ணிப்பார்க்க வேண்டும்.

இம்பிளிமெண்டேஷன் கமிட்டி சம்பந்தமாகக் குறிப்பிட்டேன். தொழிற் சங்கங்களின் அங்கீகாரம் பற்றிக் குறிப்பிடுகிறோம். ஐ.டி.பி.எல்.—இல் ஒரே ஒரு சங்கம், அந்தச் சங்கத்தை அங்கீகரிக்க



1981 பிப்ரவரி 9] [திரு. இரா. கருப்பையா]

வேண்டுமென்று இம்பிளிமெண்டேஷன் கமிட்டி 1980-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 4-ஆம் நாள் அன்று தீர்மானம் போட்டு 6 ஆம் தேதி கடிதம் எழுதினார்கள்.

[பிற்பகல் 1·30]

8ஆம் தேதி உதவி லேபர் கமிஷனர் கன்சிலியேஷன் இருக்கும் பொழுது சங்கத்தினுடைய ரிக்கார்டுகளைக் கொண்டு வா என்று எழுதினால் அது என்ன நடைமுறை? ஒரு கமிட்டி பரிசீலனை செய்த பிறகு அதை ரீ-ஓபன் செய்யச் சொல்வது என்ன நியாயம்? (மணியடிக்கப்பெற்றது) முக்கியமான விஷயங்கள் இருக்கின்றன. இன்னும் பத்து நிமிடங்கள் வேண்டும்.

அடுத்து, முறைப்படுத்தப்பட்ட தொழில்களில் பணிபுரியும்
தொழிலாளர்களின் மேம்பாட்டிற்காகப் பல்வேறு சட்டங்களைத்
கொண்டு வருவோம் என்று அறிவித்திருக்கிறார்கள்; கவர்னர்
உரையில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அவைகள் வரும் என்று
எதிர்பார்த்தோம். ஆனால், இப்பொழுது என்னவென்
றால் "அமைப்பு ரீதியாகச் செயல்படும் சிறுபான்மையினர்
பெறும் ஊதியம் அவர்களுக்கு எதிர்பார்த்த பலனை அளிக்காதது
மட்டுமல்ல, அதனால் ஏறும் விலைவாசி" என்று கூறப்படு
கிறது. இந்த ஆறுமாதக் காலத்தில் ஏற்பட்ட மாற்றம் என்ன?
இதைப்பற்றி எங்களைப் போன்றவர்கள் புரிந்து கொள்ள
முடியவில்லை. ஆறு மாதங்களுக்கு முன் அப்படிச் சொன்னவர்
கள். இப்பொழுது இதுதான் விலைவாசி உயர்வுக்குக் காரணம்
என்று ஏன் சொல்ல வேண்டும்? அரசாங்கமே விலையை
உயர்த்துகிறது, அரிசியின் விலை நியாய விலைக் கடைகளில்
உயர்த்தப்படுகிறது. பால் விலை உயர்த்தப்படுகிறது, பஸ் கட்ட
ணங்கள் உயர்த்தப்படுகின்றன., சீமெண்ணெய் விலை உயர்த்தப்
படுகிறது, இதுபோன்ற அத்தியாவசியப் பொருட்களின்
விலைகள் உயர்த்தப்படுகின்றன. அப்படியிருக்கும்பொழுது
உயர்கின்ற விலைவாசிக்கேற்ப அவர்களுக்கு ஊதியம் கொடுத்
தால் அது மற்றவர்களைப் பாதிக்கும் என்று சொன்னால் என்ன
அர்த்தம்?

சென்ற மாதத்தில் வாங்கிய சம்பளத்தை அப்படியே கடையில் கொண்டுபோய்க் கொடுத்து, போன மாதம் கொடுத்த பொருட்களை அப்படியே கொடு என்று கேட்டால் அந்தக் கடைக்காரர் கொடுக்க மறுக்கிறார். சென்ற மாதம் வாங்கிய விலைக்குத் துணி கேட்டால் கொடுக்க மறுக்கிறார்; அரிசி கேட்டால் அதே விலைக்குக் கொடுக்க மறுக்கிறார். ஆனால், எனக்குக் கிடைத்து வந்த சாமான்களின் அளவு குறைகிறது. அதனால் தொழிலாளி பட்டினி கிடக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. அப்படிப் பட்டினியோடு அந்தத் தொழிலாளி மீண்டும் ஆலைக்குச் சென்று வேலை செய்ய வேண்டுமென்று சொன்னால் அவனால் எப்படி வேலை பார்க்க முடியும்? குறிப்பிட்ட சம்

யைப் பெறுவதற்கு குறிப்பிட்ட அளவு உணவு தேவை அல்லவா? குறைந்த பட்சம் 2,800 கலோரி உஷ்ணம் தேவை அல்லவா? அதற்குத் தகுந்த உணவுப் பதார்த்தங்கள் தேவை அல்லவா? இந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாத அளவிற்குத் தான் ஊதியம் கிடைக்கிறது. ஒரு மாதம் வாங்கிய அளவிற்குச் சாமான்களை அடுத்த மாதத்தில் அதே தொகைக்கு வாங்க முடியவில்லை என்றால் அவன் எப்படி வாழ்க்கை நடத்த முடியும்? விலைவாசியை உயர்த்துபவர்கள்மீது நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக, அவ்வாறு எடுத்து விலைவாசியைக் கட்டுப்படுத்துவதற்குப் பதிலாக தொழிலாளர்களுக்குச் சம்பளத்தை உயர்த்திக் கொடுப்பதால் விலைவாசி உயரும் என்று சொல்வது சரியல்ல.

பொருட்களின் விலையை உயர்த்துவதைப் பொறுத்தவரையில் இன்றைக்கு இந்த நாட்டிலே மட்டுமல்ல, உலகம் பூராவுமே இருக்கின்ற முதலாளிகள், தங்கள் கைகளிலே இருக்கின்ற பொருள்களுக்கு, தாங்கள் உற்பத்தி செய்கின்ற பொருட்களுக்கு விலை நிர்ணயிப்பதும், அதை விநியோகம் செய்வதும் அவர்கள்தான். துணி விலையானாலும் சரி, சர்க்கரை விலையானாலும் சரி, சிமெண்ட் விலையானாலும் சரி அந்த விலையை நிர்ணயிப்பது யார்? பெரும் முதலாளிகள் அந்த விலையை நிர்ணயிக்கிறார்கள். ஆகவே, விலை உயர்வைத் தடுக்க, கொள்ளை இலாபம் அடிப்பவர்களை எதிர்த்து மக்கள் ஒன்று திரண்டு விடக்கூடாதே என்பதற்காக அவர்கள் வைக்கின்ற அந்த வாதத்தை, இன்றையதினம் நம்முடைய மாநிலத்தில் ஆட்சியிலே இருப்பவர்களும் அந்தக் கருத்தைச் சொல்வது சரியல்ல. போராடும் தொழிலாளர்களுக்கு எதிராக யுத்தத்தைத் தொடுப்பது போன்றிருக்கிறது இந்த வாதம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

விலைவாசி உயர்வை கட்டுப்படுத்துவதற்கான அகற்சான முறையில் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். 3,000 கோடி ரூபாய் டெஃபிசிட் என்று சொல்கிறார்கள். 25 000 கோடி ரூபாய் கறுப்புப்பணம் இருக்கிறது என்று சொல்கிறார்கள் இதனால் தான் விலைவாசி உயர்கிறது என்று சொல்லி, இதற்கு எதிராக மக்களைத் திரட்டி, விலைவாசியைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

விலைவாசி எந்த அளவிற்கு உயர்ந்திருக்கிறது என்பதற்கு ஒரு குறிப்பைச் சொல்கிறேன். மொத்த விலைவாசிக் குறியீட்டெண் 1979 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் 204 புள்ளி. இன்றைக்கு 1980 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் 249·9 என்றிருக்கிறது. இந்த அளவிற்கு சுமார் 49 புள்ளி உயர்ந்திருக்கிறது. கன்ஸ்யூமர் பிரைஸ் இன்டெக்ஸைப் பொறுத்தவரையில்.

தொழிலாளர்களின் வாழ்க்கைக் குறியீட்டெண் 1979 ஆம் ஆண்டு அக்டோபரில் 351 புள்ளி ; ஆனால் இன்றைக்கு 431 புள்ளியாக உயர்ந்திருக்கிறது. ஆகவே, உயர்வு கேட்பதைத் தவிர்க்க முடியாமல் தொழிலாளர்களும், என்.ஜி.ஓ.-வினரும், மற்றவர்களும் ஊதிய உயர்வு கேட்கிறார்கள். தவிர்க்க முடி யாத நிலையில், தங்களது தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ள வேண்டியதற்காக ஊதிய உயர்வு கேட்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. தவிர்க்க முடியாது போராடுகிறார்கள். ஆகவே, இம்மாதிரி ஊதிய உயர்வு கேட்டு போராடும் தொழி லாளர்களின் அந்தப் போராட்டங்களைப் பார்த்து, இந்தப் போராட்டங்கள் அரசுக்கு எதிரான போராட்டங்கள் ; அவர்கள் அரசுக்கு எதிராகப் போராடுகிறார்கள் என்று எந்தப் போராட் டத்தையும் அரசாங்கம் எடுத்துக்கொள்ளக் கூடாது.

அன்-ஆர்கனைஸ்ட் செக்டாருக்குப் பாதுகாப்பு கொடுப் பதை அனைவரும் விரும்புகிறோம். ஆனால், இன்றைக்குள்ள நிலைமை என்ன ? மீனவர்களுக்கு இன்றையதினம் என்ன பாது காப்பு இருக்கிறது ? சங்கு குளிக்கின்ற தொழிலாளர்களுக்கு என்ன பாதுகாப்பு இருக்கிறது ? சங்கு குளிக்கும் தொழிலாளர் களைப் பொறுத்தவரையில் ஏற்கனவே இருந்த முறைப்படி அவர்கள் கடலில் மூழ்கி சங்கு எடுத்து அதை விற்பதற்கான உரிமை இருந்தது. ஆனால் இன்றைக்கு அவர்கள் லைசென்ஸ் வாங்கிக்கொண்டு குளிக்க வேண்டும். அப்படிக் குளித்தாலும் அவர்கள் எடுக்கின்ற முத்தை அரசாங்கத்திற்குத்தான் விற்பனை செய்ய வேண்டும் ; தனியாரிடத்தில் விற்பனை செய்தால் கள்ளக் கடத்தல் என்று அவர் மீது வழக்கு போடும் நிலைமைகள் இருக் கின்றன. அவர்களை பாதுகாப்பதற்காகச் சட்டம் உண்டா ?

அதேமாதிரி எடுத்துக்கொண்டால், இன்றைக்குத் திருப்பூ ரிலே பனியன் தொழிலாளர்கள் போராடுகிறார்கள்—கைத்தறித் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். 7 இலட்சம் கைத்தறித் தொழிலாளிகள் இருக்கிறார்கள். சட்டம் வரும் என்று கூறப் படுகிறது. இன்றையதினம் வரையிலே அந்தச் சட்டம் எங் கிருக்கிறது என்று நமக்குத் தெரியவில்லை. அமைச்சர் அவர்கள் அடுத்த கூட்டத்திலே நான் கொண்டு வருவேன் என்று கூறு வார்கள். ஆகவே, அந்தச் சட்டம் இல்லாததால், கைத்தறித் தொழிலாளிகள் பாதிக்கப்படுகிறார்கள். கைத்தறி துணியை மக்கள் வாங்க முடியவில்லை. ஏனென்றால், அந்தத் துணியின் விலை உயர்ந்திருக்கிறது. ஏனென்றால், நூல் விலை உயர்ந் திருக்கிறது. கைத்தறித் துணியை வாங்குவதிலே அதிகச் சிரமம் இருக்கிறது. துணியின் விலை உயர்ந்திருப்பதற்குக் காரணம், நூலின் விலை உயர்வு. நூற்பாலை முதலாளிகள் அவர்கள் வைத்த விலைக்கு நூலை விற்கிறார்கள். அதனால் விலை உயர்ந்திருக்கிறது. தொழிலாளிகளுடைய வாழ்க்கைத்தரம் கெடுகிறது. ஆகவே பாதிக்கப்படுகிறார்கள்.

அதே மாதிரிதான் இன்றையதினம் விசைத்தறி தொழிலாளர்கள். காலையிலே, நம்முடைய மதிப்பிற்குரிய மாண்புமிகு உறுப்பினர் மணிமாறன் அவர்கள் விசைத்தறி தொழிலாளர்களைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். 15,000 தொழிலாளர்கள் இன்றைய தினம் தெருவிலே நிற்கிறார்கள். அமைச்சர் சொல்லிவிட்டார், அவர்களுக்குச் சட்டப் பாதுகாப்பு இல்லையென்று 15,000 தொழிலாளிகள் விசைத்தறி தொழிலாளிகள். தோல் பதனிடும் தொழிலாளிகள் இருக்கிறார்கள். அவர்களுடைய நிலை என்ன? டாடாவும், பிர்லாவும் இன்றைக்கு இந்தத் தொழிலிலே புகுந்து, ஹாஃப் டான்ட் தோல் ஏற்றுமதி செய்கின்ற நிலை, அது இன்றைக்கு இல்லையென்ற காரணத்தினாலே,—மத்திய அரசாங்கத்திலுடைய கொள்கை முழுமையாகப் பதப்படுத்தப்பட்டதைத்தான் ஏற்றுமதி செய்ய வேண்டுமென்பது. முன்பெல்லாம் சிறுசிறு தோல் ஷாப் வைத்திருந்தவர்கள் ஹாஃப் டான்ட் தோலை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்தார்கள். இப்பொழுது தொழிலை மூடியாகி விட்டது. ஆகவே, 20,000 தொழிலாளிகள் இன்றைய தினம் தமிழகத்திலே வாழ்விழந்து நிற்கிறார்கள். அவர்களுடைய நிலை என்ன ?

பீடித் தொழிலாளிகள் இருக்கிறார்கள். அவர்களுடைய நிலை என்ன? 1 கிலோ பீடி இலை ரூ. 8-க்கு, ரூ. 9-க்கு உயர்ந்துவிட்டது. பீடித் தொழிலாளிக்கு 625 கிராம் இலை கொடுத்தால், 1,000 பீடிச் சுற்றிக் கொண்டு வந்து கொடுக்க வேண்டும். இப்பொழுது, 500 கிராம் தான் கொடுப்பேன் என்கிறான் முதலாளி. விலை அதிகப்பட்டதற்குப் பிறகு, ஆயிரம் பீடிகளுக்கு 125 கிராம் இலையை பீடி தொழிலாளி விலைக்கு வாங்கி சுற்றிக் கொண்டு வந்து கொடுக்க வேண்டும். தொழிலாளி போராடினால், அடக்குகிறார்கள். திருச்சியிலே தொழிலாளி போராடினான்; இந்த இலையைக் கேட்டு, போராடுகிறான், என்று முதலாளி போலீசுக்கு ஃபோன் பண்ணினால், திருச்சியிலே உறையூர் ஸ்டேஷனிலே, திருச்சி கோட்டையிலே, அவர்களை அழைத்துக் கொண்டு போய் போலிஸ் ஸ்டேஷனிலே வைத்துக் கொண்டார்கள். தொழிலாளி இலை போதவில்லை என கேட்கிறான், நீங்களே வந்து சமாதானம் செய்யுங்கள் என்று தலைவர்கள் கூறிய பிறகு ஆளை வெளியே விடுகிறார்கள். வழக்குகள் பதிவு செய்யப்படுகிறது. பீடித் தொழிலாளிகள் நிலைமை அந்தமாதிரி இருக்கிறது

கடைச் சிப்பந்திகளுக்குக் குறைந்த பட்சக் கூலிச் சட்டம் கொண்டு வந்திருக்கிறோம். 2½ இலட்சம் கடைச் சிப்பந்திகள் இருக்கிறார்கள். ரூ. 200, ரூ. 245 குறைந்த பட்சக் கூலி சட்டப்படி நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இன்றைக்கு அவர்களுக்குக் கிடைக்கிறதா ?





தொழிலாளர்களுக்கு சட்டம் உள்ளது. சட்டப் ஹோட்டல் தொழிலாளர்களுக்கு சட்டம் உள்ளது. சட்டப்படி வேலை நேரம், சம்பளம் கேட்டால், உடனே, வெளியே போக வேண்டியிருக்கும். பாதுகாப்பு இல்லை. அப்படிப்பட்ட நிலைமை இன்றைய தினம் இருந்துக் கொண்டிருக்கிறது.

சுருட்டுத் தொழிலாளிகளுக்குச் சட்டம் இருக்கிறது. ஏதாவது ஒரு தொழிலாளிக்கு, இந்தச் சட்டத்திலே ஒரு ஷரத்து, ஒரு சின்ன வார்த்தையின் பலன் கிடைத்திருக்கிறதா? என்பதை அமைச்சர் அவர்கள் கூற வேண்டும். அவர்களுக்கு சட்டம் அமுலாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். சட்டம் அமுல் செய்யக் கோரி போராடிய அந்தத் தொழிலாளிகள் அலுத்துப் போய், பல தொழிலாளிகள் சுடுகாட்டுக்கே போய்விட்டார்கள். அந்தச் சட்டத்தைக் கேட்டார்கள் என்பதற்காக, கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டார்கள் என்பதை நான் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

போக்குவரத்துப் பணியிலே இருக்கக்கூடிய தொழிலாளிகள், அரசு போக்குவரத்துத் துறையிலே கொடுக்கக்கூடிய சம்பளத்தைத் தனியார் துறையிலே இருக்கக் கூடிய தொழிலாளிகளுக்கு அந்தச் சம்பளம் இன்றைக்குக் கொடுக்கப்பட்டு வருகிறதா ? பெற்றுத் தர வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு இல்லையா? ஆகவே, அந்த அளவுக்கு, அந்த அடிப்படையிலே, இன்றைய தினம் இருக்கக்கூடிய நிலைமைகள் அன்னார்கனைஸ்ட் செக்டார், அந்தத் தொழிலாளிகள் சம்பந்தமாக இருக்கக்கூடிய நிலைமைகளை நான் மன்றத்திலுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அடுத்து, விவசாயத் தொழிலாளிகளுடைய பிரச்சினை. வட ஆற்காடு மாவட்டத்திலே, செங்கத்திலே இருக்கக்கூடிய, அரசுப் பண்ணையிலே இருக்கக்கூடிய விவசாயத் தொழிலாளிகள் போராடினார்கள் என்பதற்காக, 100 பேர்கள் கைது செய்யப்பட்டு இன்றைய தினம் சிறையிலே இருக்கிறார்கள்.

அதே மாதிரி, இன்றையதினம் விவசாயத் தொழிலாளிகளைப் பற்றி பேசுகிறார்கள். கேரளாவிலே இருக்கக்கூடிய விவசாயத் தொழிலாளிகளுக்கு 60 வயது ஆனவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 50 பென்ஷன் கொடுக்க வேண்டுமென்ற சட்டம் அங்கே இயற்றப்பட்டிருக்கிறது. இங்கு அம்மாதிரி சட்டம் இயற்றுவதில் என்ன தடை உள்ளது? ஆர்கனைஸ்ட் செக்டாரில் இருக்கக்கூடிய தொழிலாளிகளுக்கு எதிராக இவர்களைக் குறிப்பிட்டு பேசுவது மட்டும்தான் நம்முடைய பொறுப்பும், கடமையுமா ? என்று நாம் சிந்திக்க வேண்டும். அந்தத் தொழிலாளிக்குக் கிடைக்க வேண்டிய நியாயத்தைக் கொடுக்க வேண்டும்.

அதே நேரத்தில் இந்தத் தொழிலாளிகளுக்கான நியாயத்தைப் பெற்றுத் தரவேண்டிய பொறுப்பு இருக்கிறது என்ற அந்த உணர்வோடு நான் பேசுகிறேன்.

[திரு. இரா கருப்பையா] [1981 பிப்ரவரி 9

கடைசியாக, நான் குறிப்பிட விரும்புவது, இந்த அரசாங்கத்தினுடைய கொள்கையிலே, இன்று மாற்றங்கள் ஏற்பட்டு இருக்கின்றன. பாராளுமன்றத் தேர்தல் முடிவுகள் எல்லோருக்கும் தெரியும். அப்பொழுதிருந்த நிலையிலே நம்முடைய அணியைச் சேர்ந்தவர்கள் இரண்டு பேர்தான் வெற்றி பெறக்கூடிய நிலைமை ஏற்பட்டது. அதற்குப் பிறகு, நம்முடைய கொள்கையிலே சில மாற்றங்கள், நண்பர் உமாநாத் அவர்கள், குறிப்பிட்டது போல், தொழிலாளர்கள், மற்ற பல்வேறு பிரச்சினைகளிலே, சில மாற்றங்கள் தேவை என்ற அடிப்படையிலே பகிரங்கமாக அறிவிக்கப்பட்டு அந்தக் கொள்கைகள் அடிப்படையிலே மக்களிடத்திலே வாக்குகளைப் பெற்று பெரும்பான்மை பெற்று இங்கு வந்திருக்கிறோம். அந்த வாக்குகளை நிறைவேற்ற வேண்டுமென்று மக்கள் விரும்புகிறார்கள். அதற்குப் பிறகு நாட்டிலே ஏற்பட்டிருக்கக்கூடிய மாற்றங்கள் என்ன? என்ன நிலைமை மாறியிருக்கிறது என்பது நமக்குப் புரியவில்லை..........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை 10–2–1981 ஆம் தேதி காலை 9–00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1–40 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

## 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

198. தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு ஓட்டல் நிறுவனங்கள் சட்டத்தின் எல்லா விதித் துறைகளையும் சில பேரூராட்சிகளுக்கு செயல்படுத்துவது குறித்து. தொழிலாளர் நல—வேலை வாய்ப்புத் துறையின் 1980 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 22 ஆம் தேதியிடப்பெற்ற 2877 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு ஓட்டல் நிறுவனங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1958) 29 (4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

199. தமிழ்நாடு 1962 ஆம் ஆண்டு வேளாண்மை விளை பொருள் அங்காடிகள் விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து, வேளாண்மைத் துறையின் 1980 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 25 ஆம் தேதியிடப்பெற்ற 2268 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு



தமிழ் வேளாண்மை விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

200. தமிழ்நாடு 1962 ஆம் ஆண்டு வேளாண்மை விளை பொருள்கள் விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து, வேளாண்மைத் துறையின் 1980 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 25 ஆம் தேதியிடப் பெற்ற 2269-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு தமிழ் வேளாண்மை விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்

### , அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

எதுவுமில்லை.

| இறந்தவர்/காயமடைந்தவர் விவரம். | எண்ணிக்கை. | ஒவ்வொரு வருக்கும் வழங்கப்பட்ட தொகை. | மொத்தத் தொகை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | ரூ. | ரூ. |
| (ஆ) காயமுற்றோருக்கு. | | | |
| 1 நிரந்தர ஊனமுற்றோர் .. .. .. .. | 1 | 1,000 | 1,000 |
| 2 பலத்த காயமுற்றோர் (15 நாட்களுக்கு மேல் சிகிச்சை பெற்றோர்). | 37 | 500 | 18,500 |
| 3 சாதாரண காயமுற்றோர் (15 நாட்களுக்குள் சிகிச்சை பெற்றோர்.) | 18 | 250 | 4,500 |
| 4 [illegible]க்கும் குறைவாக சிகிச்சை பெற்று குணமடைந்தவர்கள். | 4 | நிதி வழங்கப்படவில்லை. | |
| மொத்தம் .. | 60 | | 24,000 |
| ஆக மொத்தம் .. | .. | | 86,000 |

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

---

செவ்வாய்க்கிழமை, 1981 பிப்ரவரி 10.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** —

கருமம் செய ஒருவன் கைதூவேன் என்னும்
பெருமையின் பீடுடையது இல்.

கடமையைச் செய்வதற்கு சோர்வு அடையமாட்டேன் என்று ஒருவன் ஆராய்ந்து முயலும்போது, பெருமை அவனைத் தானே வந்து அடையும். இப்பெருமையைவிட மேம்பாடு உடையது வேறு ஒன்றும் இல்லை.

### 1. வினாக்கள்–விடைகள்.

#### உடுக்குறியிட்ட வினாக்கள்

#### ஓட்டல்களில் விற்கப்படும் உணவுப் பண்டங்களின் விலைகள்

***வினா எண் 261 —திரு. இரா. தாமரைக்கனி, திரு. ரா. கிருஷ்ணன்:** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழ்நாட்டிலுள்ள ஹோட்டல்களில் விற்கப்படும் உணவுப் பண்டங்களின் விலையைக் குறைக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** உணவு விடுதி அதிபர்களிடம் உணவுத்துறையைச் சார்ந்த அதிகாரிகள் பேச்சு வார்த்தை நடத்தினர். பேச்சின் பலனாக உணவுப் பண்டங்களின் விலைகளை நியாயமான விலைக்குக் குறைப்பார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது. எதிர்பார்த்த பலன் கிட்டவில்லை என்று தெரிய வருகிறது. உணவுப் பண்டங்களின் விலைகளைத் திட்டவட்டமாக நிர்ணயிப்பது பற்றி அரசு ஆராய்ந்து வருகிறது.

**திரு. இரா. தாமரைக்கனி :** பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு முன்னால் ஒரு ரூபாய்க்கு ஒரு வேளை சாப்பாடு, 'ஜனதா சாப்பாடு' என்கிற பெயரில் ஓட்டல்களில் போடப்பட்டு வந்தது. பேச்சுவார்த்தை நடத்தியபோது, அப்படிப்பட்ட சாப்பாடு போடுவது குறித்துப் பேசப்பட்டதா ? பெரிய நகரங்களில் மத்திய அரசு

உதவியால் நடத்தப்படுகிற '' அன்னபூர்ணா '' ஓட்டல்களில் குறைவான விலையில் தரமான உணவுப்பண்டங்கள் கிடைக்கின்றன. அதைப்போலவே, குறைந்த விலையில் உணவுப் பண்டங்களை விற்பதற்கு வழி செய்யும் முறையில், ஓட்டல்களை நடத்த அரசு முன் வருமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** பேரவைத் தலைவர் அவர்களே, உணவு விடுதி அதிபர்களை எல்லாம் அழைத்து இப்போது விற்கப்படுகின்ற விலைவாசிகளின் அடிப்படையில் நியாயமான விலைக்கு உணவுப் பண்டங்கள் விற்கப்படாததால், அதைக் குறைத்துக்கொண்டு, நியாயமான விலைக்கு விற்க வேண்டும் என்று கூறுவதற்கான ஒரு முயற்சி செய்யப்பட்டது. அந்த முயற்சியின் அடிப்படையில் அவர்கள் உடனடியாகத் தாங்களே விலைகளைக் குறைப்பதாக ஒப்புக் கொண்டார்கள். அந்த உடன்பாட்டின் அடிப்படையில் 1980 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 15 ஆம் நாள் முதல் 1980 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 30 ஆம் நாள் வரையில் கீழ்க்கண்ட விலையில் பொருள்களை விற்பதாக அறிவித்தார்கள். மேலும், ஓட்டல்கள் நடத்தப்படுகின்ற சூழ்நிலைகளுக்கு ஏற்ப, அவற்றை 'ஏ' பிரிவு, 'பி' பிரிவு, 'சி' பிரிவு என்று தரம் பிரித்து, அந்த மூன்று பிரிவு ஓட்டல்களில் தரப்படுகின்ற உணவுப் பொருள்களுக்கு மூன்று விதமான விலைகள் நிர்ணயித்தார்கள் :—

| | | | ''ஏ'' பிரிவு ஓட்டல். | ''பி'' பிரிவு ஓட்டல். | ''சி'' பிரிவு ஓட்டல். |
|---|---|---|---|---|---|
| (1) | | | (2) | (3) | (4) |
| | | | | (காசுகள்.) | |
| இட்லி 2 | .. | .. | 35 | 30 | 30 |
| தேநீர் | .. | .. | 35 | 30 | 25 |
| காப்பி | .. | .. | 50 | 45 | 40 |

இந்த விலைகளுக்கு மேல் 10 காசு திடீரென்று 1980 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 1 ஆம் நாள் முதல் அவர்களே ஏற்றிக்கொண்டு விட்டார்கள். மறுபடியும் பேச்சுவார்த்தை நடத்தியதன் காரணமாக 5 காசு குறைக்க ஒப்புக்கொண்டார்கள். இன்னும் விலைகள் குறைக்கப்படவேண்டும் என்று சொல்லியும், அவர்கள் கேட்கவில்லை. அவர்களாகவே குறைத்துக்கொள்வார்கள் என்று நாம் எதிர்பார்த்த அளவிற்கு அவர்கள் செய்யாததால், ஏதாவது சட்டம் கொண்டு வந்து, அந்த விலைகளை நிர்ணயிக்கலாமா என்பது



பற்றி அரசு ஆராய்ந்து வருகிறது. இது சம்பந்தமாக மீண்டும் உணவு விடுதிகளில் உணவுப் பண்டங்களின் விலைகளைக் கட்டுப்படுத்துதல், விலைப்பட்டியல் வைத்தல் போன்ற நடவடிக்கைகளை மத்திய அரசின் ஒப்புதல் பெற்று சில திருத்தங்களுடன் வெளியிடலாமா என்பதைப் பற்றி அரசு ஆராய்ந்து கொண்டு இருக்கிறது.

**திரு. இரா. தாமரைக்கனி :** பேரவைத் தலைவர் அவர்களே, ஆட்டுக்கறி ஒரு கிலோ விலை அதிகம். மாட்டுக்கறி ஒரு கிலோ விலை குறைவு. ஆகவே, மாட்டுக்கறியை ஆட்டுக்கறியோடு கலந்து, ஆட்டுக்கறி என்று சொல்லி அதிக விலைக்கு உணவு விடுதிகளில் விற்கிறார்கள். இது அரசுக்குத் தெரியுமா ? அதைப் போலவே, கொத்தவால்சாவடி போன்ற பெரிய சாவடிகளில் கழிவு செய்யப்படுகின்ற காய்கறிகளைக் குறைந்த விலையில் வாங்கி அதையும் ஓட்டல்களில் பயன்படுத்துகிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா ? அதைத் தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, உணவு விடுதிகளிலும், ஓட்டல்களிலும் விற்கப்படுகின்ற உணவுப் பண்டங்களை எந்த அளவுக்கு நியாய விலைக்கு விற்க ஏற்பாடு செய்வது? அதற்கு என்ன நடவடிக்கை என்பது பற்றிதான் மூலக்கேள்வி அமைந்திருக்கிறது. ஆகவே, அதுபற்றி எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைப்பற்றிச் சொன்னேன். ஆங்காங்கே ஏற்படுகிற குறைபாடுகளைப்பற்றித் தனியாக அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் அதுபற்றித் தனியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. து. புருஷோத்தமன் :** தலைவரவர்களே, ஓட்டல்களில் உணவுப் பண்டங்களின் விலையைக் குறைக்க, ஏ, பி, சி என்ற மூன்று பிரிவுகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள். சில சிறிய ஓட்டல்களைக்கூட '' ஏ '' பிரிவு என்று போட்டு, அவர்கள் அதிகமான விலையில் உணவுப் பண்டங்களை விற்பனை செய்வது அரசுக்குத் தெரியுமா ? உணவுப் பண்டங்களின் விலையைக் குறைப்பதற்காக திராவிட முன்னேற்றக் கழக அரசு இருந்த போது ஓட்டல் உரிமையாளர் சங்கத்தில் இணைந்தவர்களுக்கு அரசாங்கத்தின் சார்பில் நியாய விலையில் அரிசி, கோதுமை, போன்ற அத்தியாவசியப் பொருட்களை வழங்கி உணவுப்பண்டங்களின் விலையைக் குறைப்பதற்கு, குறிப்பாக இட்லி, தோசை விலையைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அந்த மாதிரி இப்போது நியாயவிலையில் அவர்களுக்கு உணவுப்பொருட்கள் வழங்கப்படாததால்தான் அவர்களால் விலையைக் குறைக்க முடியவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா ?

[1981 பிப்ரவரி 10

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இன்றியமையாத உணவுப்பொருட்களை நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் நியாயவிலையில் விற்க ஏற்பாடுகள் இருக்கின்றன. அரிசி, மைதா, போன்றவைகளைக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். சில இடங்களில் கிடைக்கவில்லை என்றால், அரசின் கவனத்திற்கு வந்தால் கொடுக்க ஏற்பாடு செய்யலாம். ஆனால், ரேஷன் கார்டுதாரர்களுக்குக் கொடுப்பதுபோல அவர்களுக்கு எல்லாம் கட்டாயமாகக் கொடுக்க வேண்டுமென்ற அவசியம் இல்லை. நாம் யார் யாருக்கு நியாயவிலையில் உணவுப் பொருட்களைக் கொடுக்கிறோமோ அவர்கள் கட்டாயமாக நியாயவிலையில்தான் உணவுப் பண்டங்களை விற்க வேண்டும் என்பது ஒப்பந்தம். அவர்கள் அப்படி விற்கவில்லை என்றால் நடவடிக்கை எடுக்க வேண்டும். வெளி விலையில் உணவுப் பொருட்களை வாங்கினால் அதிக விலை கொடுக்க வேண்டியிருக்கிறது ; கட்டுப்படி ஆகவில்லை என்று அவர்கள் கேட்டுக்கொண்டதன் பேரில் நியாயவிலைக்குக் கொடுக்க நாம் ஏற்பாடு செய்திருக்கிறோம். மேலும், பிரச்சனைகள் இருந்தால் அவர்கள் நம்மிடம் வந்து பேசலாம். அதிக இலாபத்தை வைத்தே அவர்கள் பேசுவதாக இருப்பதால் நாம் வேறுபல நடவடிக்கைகளை எடுக்க வேண்டியிருக்கிறது

திரு. செ. செம்மலை : தலைவரவர்களே, ஓட்டல் நடத்துகிறவர்கள் பேச்சுவார்த்தையின்போது விலைகளைக் குறைப்போம் என்று சொன்னதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். அப்படி விலைகளைக் குறைக்கும்போது உணவுப் பண்டங்களின் எடை அளவு குறையாமல் இருக்க அரசு கண்காணிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அவர்கள் எடையைக் குறைக்கக் கூடாது என்ற நிபந்தனையின் பேரில்தான் நாம் நியாயவிலையில் கொடுக்கின்ற பொருட்களை ஏற்றுக்கொள்கிறார்கள். சட்டம் வரும்போதுதான் எடை குறைந்தால் உரிய நடவடிக்கை எடுக்க ஏதுவாக இருக்கும். ஓட்டல் உணவுப் பண்டங்களின் விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம் 1976-லிருந்து 1977 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 26 ஆம் நாள் வரையில் அமுலில் இருந்தது. அப்போது நடுத்தர மக்கள் அன்றாடம் உபயோகிக்கும் 9 உணவுப் பண்டங்களின் விலையும் எடையும் நிர்ணயித்த அளவுக்கு இல்லாமல் இருந்தால் அந்தச் சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க வாய்ப்பு இருந்தது. அந்தச் சட்டம் காலாவதியான பிறகு 1978-ல் இட்லி, தோசை, காப்பி, தேநீர் உட்பட 5 பண்டங்களை மட்டும் குறிப்பிட்ட விலையிலும் எடையிலும் விற்கும்படி செய்ய ஒரு ஆணை வெளியிட்டு, மத்திய அரசின் ஒப்புதல் பெற்று அமுல்படுத்த இருந்தோம். ஆனால், ஓட்டல் அதிபர்கள் தாங்கள் சுயக்கட்டுப்பாடு செய்து கொள்கிறோம் என்று சொன்ன காரணத்தால் அதை நடைமுறைக்குக்



1981 பிப்ரவரி 10]

கொண்டுவரவில்லை. இப்போதும் அவர்கள் சுயக் கட்டுப்பாடு விதித்துக் கொண்டால் இதிலே ஏற்படுகிற வேறு பல சங்கடங்கள் வராது. நாம் சட்டம் இயற்றும்போது சில பல சங்கடங்கள் ஓட்டல் உரிமையாளர்களுக்கும் ஏற்படும் ; பயன்படுத்துகிறவர்களுக்கும் ஏற்படும். ஆகவே, நாங்கள் சுயக் கட்டுப்பாடு முறையை இன்னும் வரவேற்கிறோம். அது இல்லாத நிலையில் நாம் மீண்டும் சட்டம் கொண்டுவந்து, மத்திய அரசின் ஒப்புதல் பெற்று, செயல்படுத்த வேண்டும்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கூறும்போது ஓட்டல்களை ஏ, பி, சி என்று மூன்று பிரிவுகளாகப் பிரித்து ஒவ்வொன்றுக்கும் இன்னின்ன பொருள் இன்னின்ன விலை என்று நிர்ணயம் செய்து, அந்த விலைக்கு விற்க வேண்டும் என்றும், சுயக்கட்டுப்பாடு இருப்பதாகவும் சொன்னார்கள். " ஏ " பிரிவில் இல்லாத ஓட்டல்களில் கூட 2 இட்லி 35 காசு என்றால் அவர்கள் ஒரு இட்லியை 35 காசுக்கும், அதைப்போல காப்பி 50 பைசாவுக்கு விற்க வேண்டுமென்றால் 70 பைசாவுக்கும் விற்கிறார்கள். ஆகவே, அங்கே சுயக்கட்டுப்பாடு நடைமுறையில் இல்லை. அதனால், அரசு உடனடியாக மத்திய அரசைக் கேட்டோ அல்லது மத்திய அரசைக் கேட்காமல் நீங்களோ ஏன் உணவுப் பண்டங்களின் விலையைக் கட்டுப்படுத்தக் கூடாது? உடனடியாக அவசர நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, சில பல ஓட்டல்களில் ஆங்காங்கே தவறு நடக்கிறது. ஆகவே, அவர்கள் ஒப்பந்தத்தை மீறி நடக்கிறார்கள். பொது மக்களுக்கு அதனால் தொல்லைகள் ஏற்படுகின்ற காரணத்தால் இனிமேல் சட்டம் கொண்டுவந்து, அதன் மூலம் விலைக் கட்டுப்பாடு செய்ய முயற்சி செய்ய இருக்கிறோம். அது பற்றி விரைவில் முடிவு செய்வோம்.

[முற்பகல் 9·10]

திரு. சேலம் மு. ஆறுமுகம் : பேரவைத் தலைவரவர்களே, ஓட்டல்களில் அன்றாடம் சாப்பிடுகின்ற உணவுப் பண்டங்களின் விலை நாளுக்கு நாள் ஏறிக் கொண்டிருக்கின்றது என்பதோடு அதன் எடையும் குறைந்துகொண்டு வருவது பற்றி இங்கே உறுப்பினர்கள் கேட்டார்கள். ஆனால் அதனுடைய தரமும் குறைந்து கொண்டே வருகிறதே. ஆகவே தரம் குறையாத வகையில் அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1981 பிப்ரவரி 10

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, எடை குறையக்கூடாது என்றும், விலை கூடக்கூடாது என்றும்தான் சொல்லலாமே தவிர தரத்தைக் கட்டுப்படுத்துவது இயலாது. தரமான ஓட்டல்களைச் சாப்பிடுகின்றவர்கள் தான் தேர்ந்தெடுத்துக்கொள்ளவேண்டும். மேலும் எடை குறையக் கூடாது என்றும், விலை ஏறக்கூடாது என்றும் கேட்டுக்கொள்கின்ற நிலையில்தான் நாம் இருக்கிறோம். சட்டப்படி நடவடிக்கை எடுக்க இயலாது. ஆகவே சட்டப்படி நடவடிக்கை எடுப்பதற்குரிய வழியைத்தான் இப்போது ஆராய்ந்துகொண்டிருக்கிறோம்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் இரண்டு இட்லிக்கு 35 பைசா என்று நிர்ணயம் செய்திருப்பதாகச் சொன்னார்கள். ஆனால் எம்.எல்.ஏ. ஹாஸ்டலில் இருக்கின்ற உணவு விடுதியில் ஒரு இட்லிக்கு 20 காசு வசூல் செய்கிறார்கள். ஒரு காப்பி 50 பைசா என்றும் ஏதோ விஜிடேரியன் ஸ்பெஷல் சாப்பாடு என்பதற்கு—நான் இப்போது விஜிடேரியன் சாப்பாடுதான் சாப்பிடுகிறேன்—4 ரூபாய் என்றும் வசூல் செய்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சரவர்கள் ஒருநாள் திடீரென்று அங்கே வந்து சாப்பிட்டு அந்த உணவின் தரத்தைப் பற்றி அறிந்து கொள்கின்ற அளவில் ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, எந்தெந்த விடுதிகளின் நிலைமை எப்படி எப்படி இருக்கின்றது என்ற விவரம் தெரியாது. பொதுவாகவே சுயக் கட்டுப்பாடு என்று இருந்ததில் அவர்கள் சரியாக ஓட்டல்களை நடத்தாத காரணத்தால்தான் சட்டப்படி நடவடிக்கை எடுக்கக் கூடிய அளவிலே ஏதாவது முயற்சிகள் செய்யலாமா என்று ஆராய்ந்து கொண்டிருக்கிறோம். மேலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்வி கேட்கின்றபோது ஸ்பெஷல் சாப்பாடு என்றுதான் சொன்னார்கள். ஆகவே ஸ்பெஷல் சாப்பாடு என்பதிலே என்னென்ன வகைகள் இருக்கின்றன என்பது நமக்குத் தெரியாது. ஸ்பெஷல் சாப்பாடு என்பதற்கேற்றபடி கட்டணம் வசூலித்திருப்பார்கள். ஆகவே அதைக் கட்டுப்படுத்துவதற்காகத்தான் ஒரு சட்டத்தைக் கொண்டு வரலாமா என்ற முறையில் ஆராய்ச்சி செய்துகொண்டிருக்கிறோம்.

### அரசு குடியிருப்புகளுக்கு வாடகை

*வினா எண். 262—திரு. ஜே. எஸ். இராசு, திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அரசாங்கக் குடியிருப்புகளுக்கு வாடகை நிர்ணயிப்பது குறித்து ஒரு குழுவை அரசாங்கம் நியமித்ததா ?

(ஆ) ஆம் எனில் அதன் பரிந்துரைகள் என்ன ?



1981 பிப்ரவரி 10]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்

(ஆ) இக்குழுவின் பரிந்துரைகள்* பேரவையின் முன்வைக்கப் படுகின்றன.

திரு. ஜே. எஸ். இராசு : தலைவரவர்களே, அரசாங்கமே முன் வந்து அமைத்த பூர்ணலிங்கம் கமிட்டி தனது அறிக்கையை இரண்டாண்டுகளுக்கு முன்னே அரசுக்கு அளித்திருந்தும் இப் போதுதான் அந்த அறிக்கை அவையிலே வைக்கப்பட்டிருப்பதாக அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். அப்படியானால் அந்தக் குழுவின் பரிந்துரைகளை அரசு உடனடியாகச் செயல்படுத்து வதற்கு ஆணையிடுமா என்பது பற்றி அமைச்சரவர்கள் அறிவிப் பார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவ ரவர்களே, ஏற்கனவே ஒரு ஆணை பிறப்பிக்கப்பட்டது. ஆனால் விண்ணப்பத்தின் பேரில் தற்காலிகமாக அந்த ஆணை நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றது. அதற்குப் பிறகு தமிழ்நாடு அரசு தலைமைச் செயலக ஊழியர்கள் சங்கம், தமிழ்நாடு அரசு அதி காரிகள் சங்கம், அடிப்படைப் பணியாளர்கள் ஒன்றியம், அரசுத் துறை வண்டி ஓட்டுநர்கள் சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் அரசாங்க அதிகாரிகளோடும், தலைமைச் செயலாளரோடும் கலந்து பேசினார்கள். அந்த வீடுகளின் வாடகை ஸ்டான்டர்டு வாடகைக்குச் சமமாக இருக்க வேண்டும் என்று அந்தக் குழு பரிந்துரை செய்திருக்கின்றது. ஆகவே அந்தக் குழு சொன்ன கருத்துக்களையும், சங்கங்கள் சொன்ன கருத்துக்களையும் அரசு ஆராய்ந்து வருகிறது. இந்த அரசு அதுபற்றிய நடவடிக்கையை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. து. புருஷோத்தமன் : தலைவரவர்களே, அரசாங்கக் குடியிருப்புகளில் சட்டப்பேரவை உறுப்பினர்களும், மேலவை உறுப்பினர்களும் குடியிருந்து வருகிறார்கள். அவர்களுக்கு அங்கே எந்த அடிப்படையில் குடியிருப்பை ஒதுக்கி இருக்கிறார் கள் என்பதை அறிய விரும்புகிறேன். அவர்கள் தற்போது வாடகை கொடுத்து வருகிறார்கள். ஆகவே ஹையர் பர்சேஸ் என்ற முறையில் அந்தக் குடியிருப்புக்களை அவர்களுக்கே சொந்த மாக்குகின்ற வகையில் ஏதேனும் திட்டம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

*[267-ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பெற்றுள்ளது.]

[1981 பிப்ரவரி 10

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : வீட்டு வசதி வாரியம் அரசு பொதுப் பணித் துறை ஆகியவை பின் பற்றுகிற சில பல ஏற்பாடுகள் பற்றி அரசுப் பணியாளர்கள் கேட்டிருக்கிற கோரிக்கைகளையும் வைத்து ஆராய்ந்து அறிக்கை கொடுப்பதற்காகத்தான் இந்தக் குழு நியமிக்கப்பெற்றதே தவிர மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கும் வீட்டு வசதி வாடகைகளைப் பற்றி அல்ல. அதில் வீட்டு வசதி வாரியமும், தமிழ்நாடு பொதுப்பணித் துறையும் விதித்திருக்கும் வாடகை விகிதம் அவர்களால் கொடுக்க முடியாத ஒன்று— மிக அதிகமான வாடகையை அவர்கள் நிர்ணயம் செய்கிறார்கள் என்றும் இந்தக் குழு பரிந்துரை செய்திருக்கிறது. பொதுப்பணித் துறையின் தலைமைப் பொறியாளர் திரு. கந்தசாமி அவர்கள் தலைமையில்தான் இந்தக் குழுவிற்கு ஆலோசனைகள் கூறப்பெற்றன. அந்தக் குழுவின் பரிந்துரைகளைப் பற்றித்தான். இப்போது பேசிக்கொண்டிருக்கிறோம். வீட்டுவசதி வாரியமும் பொதுப்பணித்துறையும் நிர்ணயிக்கும் வாடகை விகிதத்தில் அரசுப் பணியாளர்களுக்குக் கொடுக்க கூடாது, அவர்களைத் தனியாகக் கவனிக்க வேண்டும் என்று திருப்பித் திருப்பி பரிந்துரைகளை அந்தக் குழுவினர் செய்திருக்கிறார்கள். அந்தப் பரிந்துரைகளைத்தான் அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. அரசுப் பணியாளர்கள் சங்கத்தைச் சேர்ந்தவர்களும் தங்களது கஷ்டங்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இவைகளையெல்லாம் ஆராய்ந்து பார்த்து விரைவில் அரசு ஒரு முடிவிற்கு வரும்.

திரு. ஜே. எஸ். இராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏதோ அரசுத் தரப்பில் காலம் கடத்தினாலும், இந்தக் குழுவினுடைய அறிக்கையையாவது அரசு அப்படியே ஏற்றுக் கொள்கிறதா? ஏற்றுக் கொண்டு உடனடியாக அதை நடைமுறைப்படுத்துவதற்கு அரசு ஆணை இடுமா என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படியே ஏற்றுக் கொள்ளும் என்று சொல்வதற்கு இல்லை. குழு அறிக்கையைக் கொடுத்து இருக்கிறது. சங்கங்களும் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்து இருக்கிறார்கள். அதை எல்லாம் ஆராய்ந்து பார்த்து அரசு முடிவிற்கு வரும். அந்த முடிவு அறிவிக்கப்பெறும்.



[981 பிப்ரவரி 10]

திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுப் பணியாளர்களுக்கு அரசு வீட்டு வாடகைப்படி கொடுத்து வருகிறது. தமிழ்நாட்டில் வெவ்வேறு குடியிருப்புகளில் வசிக்கும் அரசுப் பணியாளர்களுக்கு, அரசு கொடுத்து வரும் வீட்டு வாடகைப் படிக்கு அதிகமாகப் போகாமல் அதே அளவில் வீட்டு வாடகை கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : குடியிருப்புகளில் இருக்கும் அதே அளவுக்கு வீட்டு வாடகைப்படி என்ற அளவிற்குத் தந்தால் அந்த வாடகைகள் இடத்திற்கு இடம், வசதிகள் பொறுத்து மாறுபட்டிருக்குமே, எல்லோருக்கும் ஒரே விதமான வீட்டு வாடகைப்படியைத் தர முடியாத நிலை ஏற்படுமே என்றுதான் அரசு அந்த முறையைக் கையாளுவதில்லை. அதற்கு ஒரு நிர்ணயம் செய்ய வேண்டும் என்று தான் இந்தக் குழு அமைக்கப் பெற்றது. அந்தக் குழு, பொதுப்பணித்துறை விதிக்கும் வீட்டு வாடகை நிர்ணயமும், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் வீட்டு வாடகை நிர்ணயமும் அதிகமாக இருப்பதினால், அதை அரசுப் பணியாளர்களுக்குக் கட்டுப்படியாகும் அளவில் பாதியாகக் குறைத்துக்கொடுக்க வேண்டும் என்று பரிந்துரை செய்திருக்கிறார்கள். வேறு பல நிலைமைகளையும் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அவைகளையெல்லாம் அரசு ஆராய்ந்து வருகிறது. ஆராய்ந்து நல்ல ஒரு முடிவினை ஏற்படுத்துவதற்கு அரசு முயலும்.

## பழனியில் பல்கலைக்கழகம்

வினா எண். 263—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு செய்தி— அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பழனி ஸ்ரீ தண்டாயுதபாணி தேவஸ்தானத்தின் மூலம் பழனியில் பல்கலைக் கழகம் ஏற்படுத்தும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : இல்லை.

[1981 பிப்ரவரி 10

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு பழனி தேவஸ்தானத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு சுமார் 1½ கோடி ரூபாய் வருமானம் வருகிறது என்று சொல்லுகிறார்கள். இவ்வளவு வருமானம் வரக்கூடிய நிதியிலிருந்து ஒரு பல்கலைக் கழகம் ஏற்படுத்தும் யோசனையை அரசு மறுபரிசீலனை செய்ய முன் வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழனி தேவஸ்தான ஆலயத்திற்கு வருமானம் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போல் அவ்வளவு துல்லியமாக இங்கே கொடுக்கப் பெறவில்லை என்றாலும், தமிழ்நாட்டில் அதிக வருமானம் வரக்கூடிய கோவில்களில் முதல் இடத்தை அது வகிக்கிறது என்பது உண்மைதான். ஆனால் வருமானத்திற்குத் தக்க செலவும் இருந்து கொண்டிருக்கிற காரணத்தினாலும், பல்கலைக் கழகம் அமைப்பதற்குக் கோடிக் கணக்கில் பணம் தேவைப்படும் என்பதாலும்தான் அதனைச் செயல்படுத்த இயலாத நிலைமையில் இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். பழனிவேல் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு ஆந்திராவில் இருக்கக் கூடிய திருப்பதி தேவஸ்தானத்தினால் வெங்கடேஸ்வரா யூனிவர்சிட்டி என்று ஆரம்பித்து நடத்தப்படவில்லையா? அதுபோல் பழனி தண்டாயுதபாணி கோவில் அதிக வருமானம் வரக் கூடிய கோவிலாகத் தமிழகத்தில் இருப்பதினால் அதை வைத்துக் கொண்டு இந்த முறையிலே அப்படி ஒரு பல்கலைக் கழகத்தை நாம் ஏன் ஆரம்பிக்கக் கூடாது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் ; திருப்பதி வெங்கடேஸ்வரா பல்கலைக் கழகம் திருப்பதி திருமலை தேவஸ்தானத்தினால் மட்டும் நடத்தப்படுவது அல்ல. அந்தக் கோவில் நிதியிலிருந்து ஆண்டு தோறும் ஒரு குறிப்பிட்ட தொகை மட்டும் மானியமாக வழங்கப் பெறுகிறது என்பதுதான் உண்மையே தவிர, அந்தப் பல்கலைக் கழகம் பல்கலைக் கழக மானியக் குழுவின் பரிந்துரையின்படி அரசு நடத்துகிற பல்கலைக் கழகம் தான் அது என்று கருதுகிறேன். தவிரவும் திருப்பதி ஆலயத்தின் வருமானம் 30 கோடி என்பதும் நம்முடைய பழனி கோவில் வருமானம் உறுப்பினர் கூறியது போல் 1½ கோடிக்கும் மேல்தான் என்பதும் கவனிக்கத்தக்கது.



1981 பிப்ரவரி 10]

[முற்பகல் 9-20.]

திரு. ப. நெடுமாறன் : பழனியில் பல்கலைக் கழகம் அமைக்கும் உத்தேசம் இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் ஏற்கனவே பழனி தேவஸ்தானம் இந்தியப் பண்பாட்டுக் கல்லூரி, செந்தமிழ்க் கல்லூரி மற்றும் இரண்டு ஆர்ட்ஸ் காலேஜஸ் நடத்திக் கொண்டிருக்கிறது. இதிலே இந்தியப் பண்பாட்டுக் கல்லூரி, செந்தமிழ்க் கல்லூரி ஆகியவற்றிற்கு அரசு மான்யம் வேண்டியதில்லை என்று எழுதிக் கொடுத்து அவர்கள் அங்கே அவற்றை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இதன் விளைவாக அந்த இரண்டு கல்லூரிகளிலும் வேலை பார்க்கக் கூடிய ஆசிரியர்களுக்கு யு.ஜி.ஸி. அடிப்படையில் ஊதியம் அதே போல் நேரடிச் சம்பளம், பென்ஷன் முறை மற்றுமுள்ள உரிமைகள் அங்கிருக்கக் கூடிய நிர்வாகத்தால் இதுவரை மறுக்கப்பட்டு வந்திருக்கிறது. ஆக, அங்கே, வேலை பார்க்கக் கூடிய ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் ஆண்டுக்கு ஆயிரக்கணக்கான ரூபாய் இழப்பிற்கு ஆளாகியிருக்கிறார்கள். அவர்களுக்குப் பணிப் பாதுகாப்பும் இல்லை, இந்தச் சூழ்நிலையில் அரசு மானியம் வேண்டாம் என்று தேவஸ்தானம் எழுதிக் கொடுத்திருக்கிற காரணத்தால் இந்த இரண்டு கல்லூரிகளிலும் உள்ள ஆசிரியர்களுக்கு மற்றக் கல்லூரிகளில் வழங்கப்படுவதைப் போன்று ஊதியம் மற்றும் உள்ள உரிமைகள் அளிக்க அரசாங்கம் உத்தரவிடுமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : இந்தியப் பண்பாட்டுக் கல்லூரி, செந்தமிழ்க் கல்லூரி இவை துவங்குகிற போது அன்றிருந்த அந்த தேவஸ்தான நிர்வாகிகள் எந்த அடிப்படையில் அரசாங்கத்தினுடைய கல்வித் துறை மானியம் வேண்டாம் என்று எழுதிக் கொடுத்தார்கள் என்று தெரியவில்லை. இப்போது ஆண்டு ஒன்றுக்கு இந்தியப் பண்பாட்டுக் கல்லூரிக்கு மூன்றரை லட்சம் ரூபாயும், செந்தமிழ்க் கல்லூரிக்கு ஒரு லட்சம் ரூபாயும் செலவிடப்பட்டு வருகிறது. இந்த நிலையில்தான் பல்கலைக் கழக மானியக் குழுவின் பரிந்துரைப்படி ஆசிரியர்களுக்குச் சம்பள விகிதங்கள் தரப்படவில்லை என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. கல்வித் துறையில் இருந்து மானியம் தர வேண்டும் என்று தேவஸ்தானம் கேட்டுக் கொண்டிருக்கிறது. அது பற்றிக் கல்வித் துறையின் முடிவு இன்னும் கிடைக்கவில்லை. அது தெரிந்ததற்குப் பிறகு தக்க நடவடிக்கைகளைத் தேவஸ்தானம் மேற்கொள்ள வேண்டும் என்று அரசாங்கம் கேட்டுக் கொள்ளும்.

திரு. ராஜ்குமார் விஜய ரெகுநாத தொண்டமான் : பழனி ஊரில் உள்ளவர்கள் அங்கு ஒரு என்ஜினியரிங் கல்லூரியோ அல்லது பாலிடெக்னிக்கோ வேண்டுமென்று அரசுக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள் என்று நான் கேள்விப் படுகிறேன். அதை ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

[1981 பிப்ரவரி 10

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : இப்போது நான் இங்கே கேள்வி பதில் அளித்துக் கொண்டிருக்கிற குறிப்புகளிலிருந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிற கல்லூரிகளை நடத்துவதற்கு முடியாமல் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிற நிலைமையை மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிந்து கொண்டிருப்பார்கள். ஆகவே இந்தச் சிக்கலைத் தீர்த்ததற்குப் பிறகு மேலும் இது போன்ற தொழில் நுட்பப் பள்ளிகள் ஆரம்பிப்பது பற்றிப் பரிசீலிக்க இயலும்.

திரு. ஏ. பி. சண்முகம் : பழனி தண்டாயுதபாணி தேவஸ்தானத்திற்கு ஆண்டு வருமானம் எவ்வளவு? கல்விக்காக எவ்வளவு தொகை செலவழிக்கப்படுகிறது?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : 1980 ஜூன் முடிய எதிர்பார்க்கப்பட்ட வருமானம் ரூ. 1,30,85,000. எவ்வளவு வந்தது என்ற கணக்கு விவரங்கள் இல்லை. இந்தளவில் பொதுக் காரியங்களுக்காகக் கல்லூரிகள், மருத்துவமனை போன்ற பல்வேறு விஷயங்களுக்காக சுமார் 14 லட்சம் ரூபாய் தேவஸ்தானம் செலவிட்டு வருகிறது.

**திருவண்ணாமலை வனக் கோட்டத்தில் உள்ள கண்ணன் மேடை வனப்பகுதி.**

*வினா எண். 264 — திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருவண்ணாமலை வனக் கோட்டம் கண்ணன் மேடை காட்டில் 1977 ஆம் ஆண்டில் இருந்து 1980 ஆம் ஆண்டு வரை எத்தனை ஏக்கர் காடுகள் அரசாங்கத்தால் அழிக்கப்பட்டுள்ளது?

(ஆ) அழிக்கப்பட்டுள்ள காட்டில் அரசாங்கத்தால் என்ன செய்யப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) மற்றும் (ஆ)

கண்ணன் மேடை ஒதுக்கக் காடு முட்புதர் நிறைந்த காடாகும். மறு வளர்ப்புப் பணிகளுக்காக இவ்விடத்தில் வெட்டி திருத்திய ஒதுக்கக் காட்டுப் பகுதியின் விவரம் கீழ் வருமாறு :

1977 — 42.6 எக்டேர்

1978 — 40.0 எக்டேர்

1979 — 40.0 எக்டேர்

1980 — 80.0 எக்டேர்

மொத்தம் 202.6 எக்டேர்



1981 பிப்ரவரி 10]

வெட்டி திருத்திய மேற்படி ஒதுக்கக் காட்டுப் பகுதியில் இது வரை 104.6 எக்டேர் பரப்பில் அச்சன் (Achan) புளி மற்றும் கருவேல செம்மரம் (Red Sanders) கன்றுகள் நடப்பட்டுள்ளன. மீதமுள்ள பரப்பும் 1980-81-ல் அதே மர வகையினை நடும் பொருட்டு எடுத்துக் கொள்ளப் படுகிறது.

திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்ணன் மேடை காட்டில் முட்புதர்கள் வெட்டப்பட்டு, பல ஏக்கர்கள் பரப்பளவிலே புளியங் கன்றுகளும், மற்றும் பல மரங்களும் தற்போது நடப்பட்டுள்ளதாக அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இப்படிப் பராமரிக்கப்படும் அந்த மரங்களினால் என்ன வருமானம் அரசுக்கு வருகின்றது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதுதான் அங்கே கன்றுகள் நடப்பட்டிருக்கின்றன என்று பதில் சொல்லியிருக்கிறேன். கன்றுகளில் இருந்து எப்படி வருமானம் வரும் என்பதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிந்திருப்பார்கள்.

திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே அந்தப் பகுதியில் உள்ள காட்டில் இயற்கையாகவே புளிய மரங்கள் இருந்திருக்கின்றன. இப்போது அவைகள் வெட்டப்பட்டு, அழித்து புதிதாகக் கன்றுகள் நடப்பட்டிருப்பதால், இத்தகைய நிலைமை ஏற்பட்டிருக்கின்றது என்பது அரசுக்குத் தெரியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே அங்கே மரங்கள் இருந்து அவைகள் அழிக்கப்பட்டதாகத் தகவல் இல்லை. முட்புதர்களாக இருந்த பகுதிகள் ஆகியவற்றை அழித்து விட்டு, மரங்கள் வளர்க்கும் காடுகளாக மாற்றப்படுகிறது என்ற தகவல் தான் இங்கே இருக்கிறது.

**கீரிப்பாறை இரப்பர் தோட்டத்தில் ஷெல்ஸ்கிராப்ஸ் விற்பனை.**

*வினா எண். 265 — திரு. பு. மணி : மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) குமரி மாவட்டத்தில் அரசு ரப்பர் தோட்டத்தில் கீரிப் பாறையில் இருக்கும் பாக்டரியில் ஷெல்லும் ஸ்கிராப்ஸூம் (Shells and Scraps) உலர வைக்காமல் ஏலம் போடுவதால் அரசுக்கு ஏற்படும் நஷ்டம் குறித்துப் புகார்கள் ஏதேனும் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

[1981 பிப்ரவரி 10

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** (அ) அவ்விதம் புகார்கள் ஏதும் வரவில்லை. அத்தகைய புகார்கள் வருவதற்கு வழியில்லை. ஏனெனில், ஷெல்ஸ்கிராப்ஸ் மீது நீர் தெளிக்கப்பட்டு அவை உலர வைக்கப்படாமல் ஈரமாகத்தான் விற்கப்பட வேண்டும். இல்லையெனில், ஸ்கிராப்ஸ் உலர்ந்து நிறம் மாறி, நிலை கெட்டு க்ரிப் அரைவைக்கு (Crepe Milling) பயனற்றதாகிவிடும்.

(ஆ) கேள்வி எழவில்லை.

**திரு. டி. மணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் ஷெல் உலர வைக்காமல் கொடுப்பது தான் சரியென்று பதில் கூறினார்கள். ஆனால், நடந்த 2 மாதங்களுக்கு முன்னால் அந்த பாக்டரியில் பச்சை ஷெல்லும், ஸ்கிராப்புமாக ஆக்ஷன் பண்ணியிருக்கிறார்கள். குமரி மாவட்டத்தில் அந்த பாக்டரியிலே ஷெல்லும், ஸ்கிராப்பும், அங்கே உலர வைத்து, காய வைத்து கிறீப் ஆக விற்பதால் கிலோ ஒன்று ரூ. 9 முதல் 12 வரைக்கும் விற்பனையாகிறது. ஆனால், அதை பச்சையாகவே விற்றால், ரூ. 5 முதல் 6 தான் கிடைக்கின்றது. ஆகவே, க்றீப் ஆக ஆக்கி விற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட நிலைமை சமீபத்திலே 2 மாதங்களுக்கு முன்னால் என்று தெரிவித்திருக்கிறார்கள். ஆனால், இந்தக் கேள்வி கடந்த ஆண்டில் போடப்பட்டு, விடை தயாரிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, சமீபத்தில் அப்படி நடைபெற்றதா என்பதைப் பற்றி விபரம் அறிந்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்த கேள்வி, நாமே இப்படி இந்த ரப்பரை மாற்றி விற்கலாமா என்று கேட்டிருக்கிறார்கள். அதைப் பற்றி இந்த ரப்பர் பிளான்டேஷன் அதிகாரிகளோடு கலந்து பேசி, இயலுமானால் அந்த முயற்சியை இந்த அரசு மேற்கொள்ளும்.

**திரு. டி. மணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பாக்டரியிலே ஏற்கனவே உலர வைப்பதால், காய வைப்பதால் அதன் நிறம் மாறுகின்றது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால், தண்ணீர் தெளிக்கப்பட்டு விற்கப்படுவதாகச் சொல்லியிருக்கிறார்கள். தனியாருக்குச் சொந்தமான, அரசுக்குச் சொந்தமான பாக்டரிகளிலே எல்லாம், அதைக் காய வைத்தால்தான் நல்ல நிறமாக இருக்கும் என்று சொல்லப்படு



1981 பிப்ரவரி 10]

இறது. தனியார் துறையிலே கூடுதல் விலைக்கு விற்கப்படுகிறது, அதே போல் காய வைப்பதற்கு, உலர வைப்பதற்குப் போதுமான இடங்கள் இருந்தும், போதுமான தொழிலாளர்கள் இருந்தும், கிறீப்பாக மாற்றுவதற்கு எந்திரங்கள் இருந்தும்கூட அப்படிச் செய்யப்படாததால் பல இலட்சக்கணக்கான ரூபாய் இழப்பு ஏற்பட்டிருந்த காரணத்தினால், அதற்குக் காரணமாக இருந் தவர்கள்மேல் இது பற்றி விசாரணை நடத்தி, இனியாகிலும், ஷெல் ஸ்கிராப்பை அரைத்து கிறீப்பாக மாற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர் கள் உலர வைக்காமல் விற்பதால் அரசுக்கு ஏற்படும் நஷ்டம் பற்றிக் கேட்டார்கள். அப்படி உலர வைக்காமல் விற்பதில்லை என்கின்ற பதில் இங்கே தரப்பட்டிருக்கின்றது. இப்போது புதிய கருத்து ஒன்றினை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தரு கிறார்கள். அது உலர வைத்து விற்கப்படுமா என்று கேட்டிருக்கிறார்கள். ஆகவே, அவர்கள் முன்னால் கேட்ட கேள்விக்கும், இப்போது தெரிவிக்கின்ற கருத்துக்கும் மாறுபாடு இருக்கின்றது. எனவே, உலர வைப்பது சிறந்ததா அல்லது உலர வைக்காமல் விற்பது சிறந்ததா என்பதைப் பற்றித் தொழில் நுட்ப அடிப்படையிலே இது இருக்கின்ற காரணத்தினாலே, இந்தத் துறை அதிகாரிகளோடு அரசு பரிசீலித்து தக்க நடவடிக்கை எடுக்கும்.

[முற்பகல் 9-30]

**திரு. ஜே. ஹேமச்சந்திரன் :** இந்த மாதிரி ஏலம் போட்டு விற்பதன் காரணமாக வியாபாரிகளுக்குள்ளே கூட்டுச் சேர்ந்து, அதிகமான விலை கிடைக்காமல் செய்து விடுகிறார்கள். தனியார் துறையில் இருக்கக் கூடியவர்கள் மார்க்கெட்டில் அந்தந்த நேரத்தில் அதிகமான விலை கிடைக்கக் கூடிய முறையில் விற்கிறார்கள். அரசினுடைய துறை இதைப் பராமரிக்கும் காரணத்தால் இந்தக் குறைபாடு ஏற்படுகிறது என்பதால் அதை ஒரு கார்ப்பரேஷனாக அமைத்து அரசு ரப்பர் தோட்டங்களை கார்ப்பரேஷன் கீழ் கொண்டு வந்து அந்தந்த நேரத்தில் மார்க்கட் விலை அடிப்படையில் முடிவுகளை எடுத்து அதிகமான விலை அந்தப் பொருள்களுக்குக் கிடைக்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் ;** தனியாருடைய நிறுவனங்களின் விற்பனை முறைகளுக்கும் அரசினுடைய விற்பனை முறைகளுக்கும் வேறுபாடு உண்டு. தனியார் அவர்கள் விரும்புகிறபடி எந்த நேரத்திலும் எந்த முறையைக் கையாண்டும் விற்பனை செய்யலாம். அவர்களைக் கேட்க மேலே யாரும் கிடையாது. அரசுத் துறையில் பொதுவான சில நிர்ணயங்கள்.

முறைகள் வகுக்கப்படுகின்றன. அதையொட்டித்தான் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. பொது ஏலம் என்று சொல்லி விற்கும் போது இதிலே குறைகள் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன என்று சொல்லி ஏன் இதிலே டெண்டர் கொடுக்கக் கூடாது என்பார்கள். டெண்டர் கேட்டு விலை குறைந்து விட்டால் ஏன் பொது ஏலம் வைக்கக் கூடாது என்பார்கள். ஏதாவது ஒரு முறையைத்தான் அரசாங்கம் நடைமுறையாக வைத்துக் கொள்ள முடியும். அரசுத் துறையாக இருந்தாலும் அரசாங்கத்தின் விதி முறைகளைத்தான் கடைப்பிடிக்க வேண்டும். கார்ப்பரேஷனாக இருந்தாலும் அரசு விதிக்கின்ற விதிமுறைகளுக்கு உட்பட்டுத்தான் நடக்க வேண்டும். ஆகவே, நடைமுறையில் மாறுதல் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஒன்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அரசாங்கம் இப்படி பொது ஏலத்தில் விற்கக் கூடிய விலைக்கும் தனியார் விலைக்கும் அதிக வேறுபாடுகள் இருக்குமானால் அது பற்றி அரசு பரிசீலித்து தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

## பீடி இலை மரங்கள் உற்பத்தி

*வினா எண் 266—திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) பீடி இலை மரங்கள் தமிழகத்தில் எந்தெந்த பகுதிகளில் இருக்கிறது ?

(ஆ) பீடி இலை மரங்களை மலைப் பகுதிகளிலும் காட்டுப் பகுதிகளிலும் பெருக்குகிற திட்டம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள முண்டந்துறை குன்றுகள் மற்றும் ஆந்திரா எல்லை ஓரமாக செங்கல்பட்டு மாவட்டத்திலும் அங்குமிங்குமாக பீடி இலை மரங்கள் சில காணப்படுகின்றன.

(ஆ) இல்லை.

திரு. தி. அன்பழகன் : தமிழகத்தில் பல லட்சக் கணக்கான தொழிலாளர்கள் வேலை செய்யக் கூடிய அளவுக்கு குடிசைத் தொழிலாக அமைந்திருப்பது பீடித் தொழில். இதற்கு அடிப்படைத் தேவை பீடி இலைகள். இந்தத் தொழில் நசித்து விடாமல் இருக்கும் அளவுக்கும் ஊக்கப்படுத்தும் அளவுக்கும் தமிழகத்தின் மலைப் பகுதிகளில் அந்த மரங்களை சிறப்பாக அமைத்து செயல்படுத்த அரசு முன் வருமா ?



மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : 1968ஆம் ஆண்டு முதல் 1974ஆம் ஆண்டுவரை தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இந்த பீடி இலையைப் பயிர் செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு அது பலன் தராத நிலையில் மேலும் முயற்சிகளில் ஈடுபடாமல் வனத் துறை அதை விட்டு விட்டிருக்கிறது.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : தமிழ் நாட்டில் எட்டு லட்சம் தொழிலாளர்கள் ஈடுபட்டிருக்கக் கூடிய பீடித் தொழிலுக்குத் தேவையான இலைகள் மத்தியப் பிரதேசத்திலிருந்தும் ஒரிஸ்ஸா போன்ற மாநிலங்களில் இருந்தும் வந்து கொண்டிருக்கின்றன. தமிழகத்தின் காடுகளில் இப்படிப்பட்ட இலை மரங்களை வளர்ப்பதற்கு சாத்தியக் கூறுகளை ஆராய அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : அதை இப்போது தான் சொன்னேன். 1968 முதல் 1974வரை முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு பலன் அளிக்கவில்லை. மீண்டும் மீண்டும் கேள்வி கேட்டிருக்கிற காரணத்தால் மீண்டும் முயற்சி செய்ய முடியுமா என்பதைப் பற்றி வனத் துறைக்கு ஆலோசனை கூறலாம்.

திரு. என். ஏ. பூங்காவனம் : தமிழகத்தில் மூன்று லட்சம் பீடித் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். இவர்களுக்கு இலை போதிய அளவுக்குக் கிடைக்காததன் காரணமாக பல்வேறு மாவட்டங்களில் பீடித் தொழிலை மூடக்கூடிய நெருக்கடி வந்திருக்கிறது. இப்போது அமைச்சர் அவர்கள் மீண்டும் முயற்சிக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். மூன்று லட்சம் பேருக்கு வேலைக்கான உத்தரவாதம் இல்லை.......................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது கேள்வி அல்ல.

திரு. க. இரா. சின்னராசு : பீடி மரம் வளர்ப்பது, தமிழகத்திலே சரியான படி பலனளிக்கவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மத்திய பிரதேசம் போன்ற பகுதிகளிலே வளருகின்ற அந்த மரம் நம்முடைய தமிழ் நாட்டிலே வளருவதற்கு வாய்ப்பு இல்லை என்று சொல்லப்பட்டாலும் மண்வள ஆராய்ச்சியை மேற்கொண்டு எந்த எந்த இடங்களிலே வைத்தால் வளரும் என்று கண்டு பிடித்து அதை வளர்ப்பதற்கு அரசாங்கம் முயற்சி செய்யுமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலே நாகர்கோவில் பகுதி, தர்மபுரி மாவட்டத்திலே டெங்கனிக் கோட்டை பகுதி, வட ஆற்காடு மாவட்டத்திலே ஜம்னாமருதூர் பகுதி போன்ற பல்வேறு பகுதிகளிலே மரங்கள் பயிரிடப்பட்டு வளர்ச்சியைக் கணக்

[1981 பிப்ரவரி 10

கிட்டுப் பார்த்திருக்கிறார்கள். இந்த மண்ணில் இந்தச் சூழ்நிலையில் நல்ல வளர்ச்சியில்லை என்ற தகவலைத் தந்திருக்கிறார்கள். எல்லா மரங்களும் எல்லா இடங்களிலும், எல்லா சீதோஷ்ணங்களிலும் வந்து விடும் என்று சொல்ல முடியாது. அந்த அந்த இடங்களிலே அந்த அந்த சூழ்நிலைகளுக்கேற்ப வளருகின்றன, வளராமல் போகின்றன. மேலும் நாம் மேற்கொண்டு இருக்கின்ற காடு வளர்ப்புப் பணியிலே புதிய ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொண்டு பயிரிட முடியுமா என்பதைக் கண்டறியும்படி நாம் வனத் துறைக்கு ஆலோசனை வழங்கலாம்.

டாக்டர் கே. சமராஸ் : தலைவர் அவர்களே, தமிழகத்திலே தேவைப்படுகின்ற பீடிகள் எவ்வளவு? தமிழகத்திலே உற்பத்தி செய்யப்படுகின்ற அளவு எவ்வளவு? வெளி மாநிலங்களிலிருந்து எவ்வளவு பெறுகிறோம் என்று அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, அந்த விவரத்தை அறிவிக்க வேண்டிய பொறுப்பிலே உள்ள அமைச்சர் அவர்களிடத்திலேயே கேள்வி கேட்டால் தக்க பதில் கிடைக்கும்.

தஞ்சை மாவட்டத்தில் தென்னை ஆராய்ச்சி நிலையம்

*வினா எண் 367 : திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்தில் தென்னை ஆராய்ச்சி நிலையம் ஒன்றை ஏற்படுத்த அரசு எண்ணியுள்ளதா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : இல்லை.

திரு. து. புருஷோத்தமன் : பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம் பட்டுக்கோட்டையிலே ஆராய்ச்சி நிலையம் அமைக்கப்படுவதாக நான் ஒரு குறிப்பிலே பார்த்தேன். அங்கே தென்னை ஆராய்ச்சி நிலையம் அமைக்கப்படுமா? குறுகிய காலத்திலே தேங்காய் உற்பத்தியாகும் ஜாதி தென்னை மரங்கள். நெட்டை, குட்டை, வீரிய, ஒட்டு தென்னைக் கன்றுகளை தஞ்சை மாவட்டத்திலேயும், மற்ற வேறு இடங்களிலேயும் வளர்க்கின்ற முறையிலே மண்வளத்தைப் பார்த்து ஆராய்ச்சி செய்கின்ற ஆராய்ச்சி நிலையங்கள் அமைக்கப்பட்டால் ஆங்காங்கே கயிறை மூலப் பொருளாகக் கொண்டு செயல்படும் சிறு தொழில்கள் அதிகமாக வளருவதற்கு வாய்ப்பு ஏற்படும் என்பதால் இப்படிப்பட்ட ஆராய்ச்சி நிலையங்களை அமைப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?



1981 பிப்ரவரி 10]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தஞ்சை பட்டுக்கோட்டைக்குப் பக்கத்திலே ஏற்கெனவே ஒரு ஆராய்ச்சி நிலையம் இருக்கிறது. அது வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் கட்டுப்பாட்டிலே இருக்கிறது. புதிதாக ஆராய்ச்சி நிலையங்கள் அமைக்கின்ற செயற் குறிப்பு இல்லை.

திரு. து. புருஷோத்தமன் : தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம் பட்டுக்கோட்டை பகுதியிலே இருக்கின்றது என்று இப்போது சொன்னார்கள். மூலக் கேள்விக்குப் பதில் அளிக்கின்ற போது இல்லை என்று சொன்னார்கள். . . . . . . . . . . . . . . . . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்வி ஆராய்ச்சி நிலையம் ஏற்படுத்த உள்ளதா என்பது. அதற்கு பதில் சொன்னார்கள். இப்போது ஏற்கெனவே இருப்பதைச் சொல்லி இருக்கிறார்கள். ஆகவே அதிலே ஒன்றும் பிரச்சினை இல்லை.

திரு. து. புருஷோத்தமன் : பல்வேறு இடங்களிலே உள்ள மண்வளப் பாதுகாப்பைப் பார்த்து வீரிய தென்னங் கன்றுகளை நட்டு வளர்ப்பதற்கு ஏற்ற வகையிலே பல்வேறு இடங்களிலே ஆராய்ச்சி நிலையங்களை உருவாக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : இல்லை என்பதை ஏற்கெனவே குறிப்பிட்டேன். ஆராய்ச்சிக்கூடங்களை அமைக்கின்ற பொறுப்பு, அவைகளைப் பராமரிக்கின்ற பொறுப்பு பல்கலைக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் தான் அதைப்பற்றி முடிவு எடுக்க வேண்டும்.

திரு. பொ. உத்திராபதி : நம்முடைய வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் முன்னதாக இல்லை என்று சொன்னார்கள். வேறு ஒரு இடத்திற்கு மாற்றி விட்டதாகச் சொல்கிறார்கள். சென்ற புயல் காலத்திலே அநேகமாக தென்னை மரங்கள் எல்லாம் அழிந்து விட்டன. தஞ்சை மாவட்டத்திலே முத்துக்கோட்டை, பட்டுக்கோட்டை பகுதிகளிலே தென்னை கம்பிக்கோட்டை.

[முற்பகல் 9·40.]

மரங்கள் அதிகமாக உள்ளன. எனவே, அந்தந்தப் பகுதிகளில் எதிர் காலத்தில் ஏற்படுத்து அரசாங்கம் ஆராய்ச்சி நிலையத்தை வதற்குப் பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, நான் ஏற்கனவே தெரிவித்ததைப்போல இதற்கும் அரசாங்கத்திற்கும் தொடர்பு இல்லை; வேளாண்மைத் துறைக்கும் தொடர்பு

இல்லை. பல்கலைக் கழகம்தான் இதுபோன்ற ஆராய்ச்சிக் கூடங்களை இனிமேல் அமைக்க முடியும். ஏற்கனவே தஞ்சை மாவட்டம் மேலப்பங்குளத்தில் இருக்கிறது. அந்த ஆராய்ச்சிக் கூடமே, சொல்லக் கூடிய கருத்துக்களை ஏற்றுப் பணி புரியும்.

### செல்லம்பட்டி ஒன்றியத்தில் நெற்பயிர்களுக்குச் சேதம்

*வினா எண். 268 : திரு. எஸ். ஆண்டித்தேவர் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுரை மாவட்டம் செல்லம்பட்டி பஞ்சாயத்து யூனியன் பகுதியில் '' புகையான் '' நோய் நெல் பயிர்களில் பரவி இருக்கிறதா ?

(ஆ) ஆம் எனில் அதைத் தடுக்க உடனடி நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) ஆம்.

(ஆ) நடவடிக்கை ஏற்கனவே எடுக்கப்பட்டு இருக்கிறது. ஒட்டு மொத்த மருந்து தெளிப்பு மூலம் புகையான் பாதிப்பு பெருமளவு கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது.

திரு. எஸ். ஆண்டித்தேவர் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, செல்லம்பட்டி பஞ்சாயத்து யூனியனில் புகையான் நோய் பயிர்களைத் தாக்கி அதற்காக அரசாங்கத்திற்குத் தெரிவிக்கப்பட்டு, வேளாண்மைத் துறைக்கும் தெரிவிக்கப்பட்டு அதற்கு மேலும் நான்கைந்து நாட்கள் மருந்து அடிக்க முடியாத நிலை ஏற்பட்டது. பஞ்சாயத்து யூனியனில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டுமென்பதற்காக நான்கு நாட்கள் தாமதம் ஆகி விட்டது. அதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, இது போன்ற ஒட்டு மொத்த மருந்து தெளிப்புப் பணி, ஊராட்சி ஒன்றியத்தில் தீர்மானம் நிறைவேற்றிய பிறகு அதை வேளாண்மைத்துறை செய்கிறது. 1981 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 20 ஆம் நாள் அன்று தீர்மானத்தைப் பெற்று மறுநாளே மருந்து அடிக்கப்பட்டிருக்கிறது.





திரு. எஸ். ஆண்டித்தேவர் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியங்கள் கலைக்கப்பட்டதற்குப் பிறகு அதிகாரிகள் அதன் பொறுப்பில் இருப்பதால், ஊராட்சி ஒன்றியத் தீர்மானத்தைப் பெறுவதற்கு முன்னால் புகையான் போன்ற கொடிய நோய்கள் பயிர்களைத் தாக்குவதைக் கருத்திற் கொண்டு, வரும் ஆண்டுகளில் வேளாண்மைத்துறைக்கு அறிவிக்கப் பட்டவுடனே நடவடிக்கையெடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியத்தின் தீர்மானத்தைப் பெறுவது என்பது அவ்வளவு சிரமமான காரியமாக எனக்குத் தெரியவில்லை. அந்த விதிமுறைகளை மாற்ற உத்தேசமில்லை.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவரவர்களே, நெல் போன்ற பயிர்களுக்குப் புகையான் போன்ற வியாதிகள் அதிக அளவில் இப்பொழுது பரவிக் கொண்டிருக்கிறது. இதற்குக் காரணம் ஒரு வகையான புழுக்கள் என்று சொல்லப்படுகிறது. அந்தப் புழு 900 முட்டை இடுகிறது. இப்படிப்பட்ட புழுக்கள், பூச்சிகளை தவளைகள் சாப்பிட்டுக் கொண்டிருந்தன. ஆனால் இப்பொழுது வியாபாரிகள் போன்று இருப்பவர்கள் தவளைகளை பிடித்து வெளிநாடுகளுக்கு அனுப்பி விடுவதால் பூச்சிகள் புழுக்கள் அதிகமாகி விடுகிறது. எனவே, தவளைகளை வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்காகப் பிடிப்பதற்குத் தடை விதிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து தலைவரவர்களே, மூலக் கேள்விக்குத் தொடர்பு இல்லை.

### பூமிதான இயக்கத்தின் கீழ் எடுக்கப்பெற்ற நிலங்கள்

* வினா எண். 269 : திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூமிதான இயக்க திட்டத்தின்கீழ் 1977 முதல் 1979 முடிய கையகப்படுத்திய மொத்தம் நஞ்சை, புஞ்சை நிலங்கள் எத்தனை ஏக்கர் ?

(ஆ) விநியோகம் செய்யப்பட்டது எவ்வளவு ?

(இ) அதற்காக ஆன செலவு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) நஞ்சை நிலம் 4 ஏக்கர் 37 செண்ட். புஞ்சை நிலம்— 335 ஏக்கர் 95 செண்ட்.

(ஆ) 290 ஏக்கர் 32 செண்ட்.

(இ) ஒன்றுமில்லை.

திரு. க. இரா. சின்னராசு : பேரவைத்தலைவரவர்களே, இங்கே அமைச்சரவர்கள் கூறுகின்றபொழுது, நிலம் எடுத்திருப்பதாகச் சொன்னார்கள். பூமிதான இயக்கத் திட்டம் ஏற்படுத்தப்பட்டதிலிருந்து இதுவரைக்கும் ஆதிதிராவிட மக்கள் எவ்வளவு பேர்களுக்கு அதன்மூலமாக நிலம் கொடுக்கப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, 1—4—1980 வரையிலும் நன்கொடை பெறப்பட்ட நிலம் 23,599 ஏக்கர். அதிலே பலன் பெற்றவர்கள் 15,428 பேர். அந்த 15,428 பேர்களில் அரிசனங்கள் மட்டும் 9,693 பேர்; மற்றவர்கள் 5,736 பேர்.

திரு. கா. கோபாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே பூமிதான இயக்கத்திற்கு எழுதி வைத்து விட்டு, அவரவர்களே அனுபவித்து வருவதாகத் தெரிகிறது [illegible] அந்த மாதிரி நிலங்களைக் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, இப்படிப் பூமிதான இயக்கத்திற்காகக் கொடுக்கப்படும் நிலங்கள் அவர்களுடைய சுவாதீனத்தில் இருந்தால் அவைகள் கையகப்படுத்தப்பட்டு நிலமில்லாத ஏழை விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்வதைப்போல ஏதாவது ஓரிடத்தில் அப்படியிருந்தாலும் அவைகளை அரசுக்கு—பூமிதான இயக்கத்ினுடைய வாரியத்திற்குத் தெரிவித்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கும்.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கிட்டத்திட்ட 9,000 பேருக்குக் கொடுக்கப்பட்டதாகச் சொன்னார்கள். அந்த சர்வோதயாவின் மூலமாகக் கொடுக்கப்பட்டாலும், அரசாங்கம் கொடுத்தாலும், அவர்களுக்குப் பட்டா கொடுக்காததினால், அரசாங்கத்திடமிருந்து பெற வேண்டிய கடன் உதவி, இனாம் மானியம் போன்றவைகளைப் பெறமுடியாத அவல நிலை இருப்பதும், அது சம்பந்தமாக அரசுக்கு மனு



கொடுத்தும் இன்றுவரை ஒன்றும் நடைபெறாமல் இருக்கிறது என்பதும் அரசுக்குத் தெரியுமா, அதனைத் தீர்க்க அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த பூமிதான இயக்கத்தின் நோக்கமே, நிலங்களை, ஏழைகள், இல்லாதவர்களுக்குக் கொடுப்பது என்பது மட்டுமல்ல. அதே நேரத்திலே வங்கிகளிடமிருந்தும், சங்கங்களிடமிருந்தும் கடன் பெற்று, அந்த நிலத்தைச் சீர்படுத்த வேண்டும். அதன்மூலமாக விவசாயம் செய்ய ஏற்புடையதாக ஆக்கி, கடன் தொகை வாங்கிக் கொடுக்கப்படுகிறது. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப் போல அப்படிப்பட்ட நிலைமைகள் உருவாக்கப்படவில்லையென்றால், நிலைமைகள் சீர்திருத்தப்படும்.

திரு. சு. பாலன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, அரிசன மக்களுக்கு சுமார் 9,000 பேர்களுக்கு நிலம் கொடுத்ததாகச் சொல்கிறார்கள். ஆளுக்கு எவ்வளவு நிலம் கொடுத்தார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, ஒவ்வொருவருக்கும் ஆளுக்கு எவ்வளவு கொடுக்கப்பட்டிருக்கிறது என்று தனியாக 9,000 பேருக்கும் சொல்ல வேண்டுமென்றால், பட்டியல் பெரிதாக இருக்கும். சராசரியாக 1 ஏக்கர் 2 ஏக்கர் என்ற அளவில் கொடுக்கப்பட்டிருக்கிறது.

பாலாற்றின் குறுக்கே பாலம்

*வினா எண் 270—திரு. இல. பத்மநாபன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஆம்பூர் நகரிலிருந்து பேரணாம்பட்டு செல்லும் நெடுஞ்சாலையில் பாலாற்றின் குறுக்கே மேம்பாலம் கட்டும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இல்லை.

திரு. ந. குலசேகர பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மேம்பாலம் அந்தப் பகுதி மக்களுக்கு மிகவும் இன்றியமையாத தேவையாகும், அது நீண்ட நாள் கோரிக்கையாகவும் இருந்து வருகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதிக்கு வந்தபொழுது,

பொதுமக்கள் வரவேற்பிலே அந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டார்கள். அமைச்சர் அவர்களும் பரிசீலிப்பதாகச் சொன்னார்கள். இப்பொழுது அந்தத் திட்டத்தை உடனடியாக எடுத்துக்கொண்டு, இந்த நிதிநிலை அறிக்கையிலேயே இடம் பெறச்செய்து நிறைவேற்ற அரசு முன்வருமா என அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பாலம் மிக முக்கியமான பாலம் என்பதை ஒத்துக்கொள்கிறேன். இது அரசு மாவட்டப் பெருஞ்சாலையிலே அமைந்திருக்கக்கூடிய திட்டம். அதற்காக ஏறத்தாழ ரூ. 70 இலட்சம் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. இப்பொழுது நிதிநிலை சரியில்லாத காரணத்தால்தான் இந்தத் திட்டம் உடனடியாக எடுத்துக்கொள்ளப்படவில்லை. ஆனாலும், முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு உடனடியாக எடுக்க முடியுமா என்பது கண்டிப்பாகப் பரிசீலனை செய்யப்படும்.

அர்ஜுனா நதியின் குறுக்கே பாலம்

*வினா எண் 271—திரு. வி. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சிவகாசிக்கு அருகிலுள்ள அர்ஜுனா நதியின் குறுக்கே பாலம் கட்டும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

(ஆ) ஆம் எனில் அதன் மதிப்பீடு எவ்வளவு?

(இ) எப்பொழுது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) இல்லை.

(ஆ) & (இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. வி. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு ஏற்பட்ட பெருவெள்ளத்தில் இந்தப் பாலத்தில் ஒரு பஸ் அடித்துச் செல்லப்பட்டு 46 குழந்தைகள் மாண்டுவிட்டதும், மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அந்த இடத்தைப் பார்வையிட்டு நிவாரணத் தொகை வழங்க உத்தரவிட்டதும் தெரிந்ததே.

மீண்டும் இதுபோன்ற கோர சம்பவம் ஏற்படாமல் தடுக்கும் பொருட்டு, அந்த இடத்தில் உயரமான பாலம் அமைத்திட இந்த நிதி ஆண்டிலாவது அரசு உத்தரவிடுமா?



மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப் போல, எவ்வளவு வேகமாகக் கேள்வியைக் கேட்டார்களோ, அந்த வேகத்திலேயே, அங்கே ஒரு பாலம் கட்ட வேண்டுமென்ற எண்ணம் நமக்கு இருக்கிறது. ஆனால், அங்கே ஒரு உயர்மட்டப் பாலம் கட்ட வேண்டுமென்றால், ஏறத்தாழ ரூ. 15 இலட்சம் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற அந்த விபத்துக்கள் நடந்திருக்கிற காரணத்தினால் உடனடியாக பரிசீலனை செய்யப்படும்.

வளவன் ஆற்றின் குறுக்கே பாலம்

*வினா எண் 272— திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) முத்துப்பேட்டை ஒன்றியம் குன்னலூரிலிருந்து எக்கல் வழியாக மேலமருதூர் செல்லும் சாலையில் வளவன் ஆற்றின் குறுக்கே பாலம் அமைக்க அரசிடம் குறிப்பேதும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் திட்ட மதிப்பீடு என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வளவனாற்றுப்பாலம் பற்றி, 1978 ஆம் ஆண்டு என்று நினைக்கிறேன். அப்பொழுது கேள்வி கேட்டபோது, வளவனாற்றுத் திட்டத்திற்கு ஒன்றியத்திலிருந்து ரூ. 70,000 அளிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. மறுபடியும் அந்தக் கேள்வியைக் கேட்டால் இல்லையென்று அறிவிக்கி றார்கள். நான் மீண்டும் சொல்வது, அங்கு இரண்டு பக்கமும் போகும்போது 15 மைல் சுற்றித்தான் பிரிந்து செல்ல வேண்டிய நிலையிருக்கிறது. ஆகவே, மீண்டும் சம்பந்தப் பட்ட இலாகாவிற்குச் சொல்லி, அந்தப் பாலத்தைக் கட்ட பரிசீலனை செய்யப்படுமா என்று அறியவிரும்புகிறேன்.

[முற்பகல் 9.50.]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லக் கூடிய சாலை முத்துப் பேட்டை ஊராட்சி ஒன்றியத்தினால் பராமரிக்கப்படுகின்ற சாலை

ஆகவே அந்த சாலை அமைத்திருக்கின்ற ஒன்றியத்திற்கு ஏறக்குறைய 3,60,000 ரூபாய் செலவிட வேண்டுமென்ற மதிப்பீடு கொடுத்திருக்கிறார்கள். அந்த சாலையில் ஒரு பாலத்தைக் கட்ட வேண்டுமென்று சொன்னால் அதற்கு 4 லட்சரூபாய் செலவாகும் என்று மதிப்பீடும் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இவைகளையெல்லாம் கருத்திலே கொண்டு நிதிநிலை சரியான உடன் கண்டிப்பாக அது கவனிக்கப்படும்.

## கிருஷ்ணகிரியிலுள்ள அண்ணா—காந்தி மணி மண்டபம்

*வினா எண் 273 திரு.க. இரா. சின்னராசு: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

கிருட்டிணகிரி நகராட்சியில் அமைந்துள்ள அண்ணா—காந்தி மணி மண்டபத்தில் திரைப் படக் காட்சிகள் நடத்தும் வண்ணம் மாற்றி அமைக்கும் திட்டம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு.ப. குழந்தைவேலு: இல்லை.

திரு. க. இரா. சின்னராசு: தலைவர் அவர்களே, அண்ணா—காந்தி பேரால் கட்டப்பட்டுள்ள அந்த மணி மண்டபம் அங்கே சரிவர இயங்காமல் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே அதிலே நகராட்சியின் சார்பாக ஒரு திரையரங்கம் அமைக்க, அந்தப் பகுதியிலே இருக்கிற மக்களுக்கு காட்சியகம் நடத்துகின்ற அளவிலே அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, தர்மபுரி மாவட்ட வளர்ச்சிக் குழுவிற்கு அந்த மணி மண்டபம் 1976-ல் ஒப்படைக்கப்பட்டது. அதற்குப் பின்னிட்டு அந்த மண்டபத்தை மாவட்டத் தொழில் நிறுவன மையத்திற்கும், நூலக ஆணைக் குழுவிற்கும் விட வேண்டுமென்று கேட்கப்பட்டிருக்கிறது. ஆகவே அங்கே திரையரங்கு எதுவும் ஏற்படுத்தும் யோசனை அரசுக்கு இல்லை.

திரு. க. இரா. சின்னராசு: மாண்புமிகு தலைவர் அவர்களே, தர்மபுரியிலே கட்டப்பட்டிருக்கிற மண்டபம்தான் தொழில் நிறுவனத்திற்கு கேட்கப்பட்டிருக்கின்றது. ஆனால் கிருட்டிணகிரியிலே இருக்கிற மணி மண்டபம் சும்மாவே இருந்து கொண்டிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, கிருட்டிணகிரியில் இருக்கிற அந்த மணி மண்டபம் இப்போது விழாக்களுக்கு வாடகைக்கு விடப்படுவதாக என்னிடத்திலே செய்திகள் கொடுக்கப்பட்டு இருக்கிறது. அங்கே ஒரு திரையரங்கை ஏற்படுத்தலாமா என்று அரசு யோசனை செய்யும்.



டாக்டர் நே. சமரசம்: தலைவரவர்களே, லட்சக்கணக்கான ரூபாய்கள் செலவு செய்து அமைக்கப்பட்டுள்ள இந்த அண்ணா-காந்தி மணி மண்டபம் நல்லமுறையிலே இயங்கவில்லை என்பதை அரசு அறியுமா? அதை மாற்றியமைக்கக் கூடிய வகையில் நல்ல வருவாய் கிடைக்கக் கூடிய வகையில் இந்த மணி மண்டபத்தை தொழில் வளர்ச்சி நிறுவனத்திற்கோ, அரசு அலுவலகங்களுக்கோ வாடகைக்கு விட அரசு முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, அரசு இது குறித்துத் தேவையான முயற்சி எடுக்கும்.

## ஜோலார்பேட்டையிலுள்ள மருந்தகம்

*வினா எண் 274 திரு. ப. சுந்தரம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வட ஆற்காடு மாவட்டம் திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள ஜோலார்பேட்டையில் உள்ள மருந்தகத்தை மாற்றி மருத்துவமனை ஆக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. பாபு ஜனார்த்தனன்: தலைவரவர்களே, வட ஆற்காடு மாவட்டம் திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள ஜோலார்பேட்டையில் உள்ள சிறிய டிஸ்பென்சரியை அரசு மருத்துவமனையாக ஆக்கினால்தான் அந்தப் பகுதியிலே இருக்கிற மக்களுடைய தேவைகள் பூர்த்தியாகும் என்ற நிலையில் இருக்கிறது. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை மறுபரிசீலனை செய்து அந்த மருத்துவமனையை ஆரம்பிக்க ஆவன செய்வார்களா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவரவர்களே, இப்போது ஒரு மருத்துவமனையாக இந்த டிஸ்பென்சரியை ஆக்கக் கூடிய திட்டம் இல்லையென்றுதான் சொன்னேன். இந்த டிஸ்பென்சரிக்கு மானியமாக ஏதாவது கொடுக்கலாமா என்று கூடி கருதிக் கொண்டிருக்கிறோம். ஏனென்றால் ஒரு பஞ்சாயத்து

யூனியன் மருந்தகத்தை மருத்துவமனையாக மாற்றுவோமானால் இன்னும் பல்வேறு மருந்தகங்கள் அவ்வாறு கேட்கும் நிலைமை ஏற்படும். ஆகவே அப்படி செய்ய முடியாது. பக்கத்திலே அங்கிருந்து 3 மைல் தூரத்திலே திருப்பத்தூரில் 120 படுக்கைகள் கொண்ட ஒரு மருத்துவமனை இருக்கிறது. அந்த மருத்துவ மனைக்கு செல்லக் கூடிய வாய்ப்பு இருக்கிற காரணத்தினால், இந்த மருந்தகத்தை நாம் எடுத்துக் கொள்ளக் கூடிய திட்டம் எதுவும் இல்லாத காரணத்தால், இதற்கு வேறு என்ன செய்யலாம் என்று யோசித்துக் கொண்டிருக்கிறோம்.

புதுப்பாடி, திமிரி ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குச் சுற்றுச் சுவர்

*வினா எண் 275 — திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) ஆற்காடு தொகுதி புதுப்பாடி மற்றும் திமிரி ஆரம்ப சுகாதார நிலையக் கட்டிடங்களுக்கு சுற்றுச் சுவர்கள் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதற்கு ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு?

(இ) இத் திட்டம் எப்போது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :—

(அ) தற்போது இல்லை.

(ஆ) மற்றும் (இ) இவ் வினா எழாது.

திரு. ஏ. எம். சேதுராமன் : பேரவைத் தலைவரவர்களே, டாக்டர்கள், நர்ஸ்கள் தங்குவதற்கு வசதிகள் இருந்தும் அந்த இடங்களுக்கு காம்பவுண்ட் சுவர் இல்லாததால், பாதுகாப்பு குறைவாக உள்ளது. ஆகவே அவற்றிற்கு காம்பவுண்ட் சுவர் கட்டிக் கொடுக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அனேகமாக எல்லா ஆரம்பச் சுகாதார நிலையங்களிலும் இப்படிப்பட்ட காம்பவுண்ட் சுவர் இல்லாத குறை இருக்கிறது. அதைப் படிப்படியாகக் கட்டிக் கொண்டு வருகிறோம். இப்போது 47 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு காம்பவுண்ட் வசதி செய்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, வேலைகள் முடிந்து விட்டன. இந்த இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்கள் குறித்து நான் சில விவரங்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். புதுப்பாடியில் உள்ள ஆரம்பச் சுகாதார நிலையத்தைப் பொறுத்த வரைல் ஏற்கனவே உத்தரவு போடப்பட்டுள்ளது.



Further action will be pursued for Construction of Compound wall on receipt of proposals from the Director of Primary Health Centres.

அதற்கான புரோபசல் அனுப்ப வேண்டும் என்று கேட்டு எழுதி இருக்கிறோம். வந்தவுடன் அந்த வசதி செய்து முடிக்கப்படும் என்றுசொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இன்னொரு ஒன்றியத்தைப் பொறுத்த வரையில்-திமிரி ஒன்றியம்-நாம் 5 ஏக்கர் நிலம் கேட்டோம். ஆனால் அவர்கள் 1.5 எக்கர் நிலம் தான் கொடுத்து இருக்கிறார்கள். 5 எக்கர் நிலமும் பத்தாயிரம் பணமும் கட்ட வேண்டும் என்று சொல்லி யிருக்கிறோம். அதைக் கட்ட வேண்டும் என்று அடிக்கடி வற்புறுத்திக் கொண்டு வருகிறோம். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் போன்றவர்கள் அதிலே கொஞ்சம் கவனம் செலுத்தி சம்பந்தப்பட்டவர்களிடம் அணுகிப் பேசி, அந்த நிலத்தையும், பணத்தையும் அளிக்க உதவி செய்யும் நடவடிக்கை மேற்கொள் வார்களானால், உடனடியாக நம்முடைய திட்டத்தின் கீழ் வருகின்ற ஆண்டில் அந்த வேலையை முடித்து விடலாம் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. ஏ. எம். சேதுராமன் : தலைவர் அவர்களே, ஆற்காடு நகரத்தில் டிஸ்பென்செரி மட்டும் இருப்பதால், அங்கே உள்ள மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சென்ற வாரத்தில் குறிப்பிட்டார்கள். ஒவ்வொரு தாலுக்காவிலும் 100 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனைகள் அமைக்கப்படும் என்று. ஆகவே எந்த விதமான வசதியும் இல்லாத ஆற்காடு நகரத்தில் மருத்துவ மனை ஏற்படுத்த அமைச்சர் அவர்களும் அரசும் முயற்சிக்குமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, ஆற்காடு நகரத்தில் இருக்கும் டிஸ்பென்செரி மிகவும் சிறியதாக இருக்கிறது. நான் கூட சென்ற இரண்டு மாதங்களுக்கு முன்பு சென்று அந்த இடத்தைப் பார்த்தேன். அதை விரிவு படுத்தி நல்ல மருத்துவ மனையாக மாற்ற வேண்டும் என்ற எண்ணம் இருக்கிறது. அதற்கான புரபோசல்களை அனுப்புமாறு டைரக்டர் ஆப் மெடிக்கல் சர்வீஸஸ் அவர்களிடம் கேட்கப்பட்டுள்ளது. இவர்களிடமிருந்து பரிந்துரைகள் வந்ததும் அதற்கான நடவடிக் கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1981 பிப்ரவரி 10

சைதாபேட்டை தொகுதியில் மினி பஸ்கள் விடும் திட்டம்

* வினா எண் 276 திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

சென்னை சைதாப்பேட்டை தொகுதியில் மினி பஸ்கள் விடுவதற்கான உத்தேசம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : சைதாப்பேட்டையிலிருந்து அம்பத்தூர் தொழிற்பேட்டைக்கும், திருவொற்காட்டுக்கும், அத்திப்பேடு வழியாக ஒரு மினி பஸ் விடப்பட்டு வருகிறது.

திரு. து. புருஷோத்தமன் : தலைவர் அவர்களே, சைதாப்பேட்டை தொகுதியில் பல்வேறு சாலைகளில் பெரிய பஸ்கள் செல்வதற்கு ஏற்றதாக இல்லாததால், மினி பஸ்கள் விடுவதற்கு அரசு முன்வருமா? அடுத்து, மினி பஸ்களில் எந்த இடத்தில் ஏறினாலும் எந்த இடத்தில் இறங்கினாலும், செல்லுகிற தூரத்திற்கு ஏற்றவகையில் கட்டணம் இல்லாமல், ஒரே கட்டணத்தை வசூலிப்பதால், ஏழை எளிய மக்கள் கஷ்டப்படுகிறார்கள். என்பதால், செல்லுகின்ற தூரத்திற்கு ஏற்றவாறு கட்டணங்களை வசூலிக்க அரசு முன்வருமா? மினி பஸ்களில் கண்டக்டர்கள் இல்லாததால்தான் இந்த நிலைமை இருக்கிறது என்றும், மேலும் பல கஷ்டங்கள் இருக்கிறது என்றும் சொல்வதால் அந்த மினி பஸ்களுக்கும் கண்டக்டர்கள் போட அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, பேருந்துகள் அந்தப் பகுதியில் இல்லையென்பதை அரசின் கவனத்திற்கு தற்போது கொண்டு வந்திருப்பதால், அதற்கான நடவடிக்கைகள் எடுப்பதற்கு முயற்சி எடுக்கப்படும் என்று சொல்லிக் கொள்கிறேன். இந்தச் சந்தர்ப்பத்தை பயன் படுத்தி நான் ஒன்றில் தெரிவிக்க விரும்புகிறேன். இன்றைய தினம் உள்ள சூழ்நிலைகள் பேருந்துகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதில் சங்கடங்கள் இருக்கின்றன. அடிக்கடி ஏறி வரும் டீசல் விலை காரணமாகவும், மற்றவற்றின் காரணமாகவும் எவ்வளவு நஷ்டம் ஏற்படுகின்றன என்பதை நாம் அறிவோம். அவற்றைக் குறைப்பதற்கான வழிவகைகளை, நடவடிக்கைகளை, ஆலோசனைகளை அரசாங்கத்திற்கு அளித்தால் நலமாக இருக்கும் என்று சொல்லிக் கொள்ளுகிறேன். மினி பஸ்களில் கண்டக்டர்கள் இல்லை என்று சொன்னார்கள், நாம் குறைவான கட்டணத்தை வசூலித்து அந்த சிறிய பஸ்களைப் பயன்படுத்துவதால், ஒரு கண்டக்டர் போடுவதன் மூலம் அதற்கான செலவும் அதிகமாகும் என்பதால், கண்டக்டர் போடுவது என்பது இயலாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.



1981 பிப்ரவரி 10]

[முற்பகல் 10-00]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையின் அனுமதியுடன் கேள்விநேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. து. புருஷோத்தமன் : தலைவரவர்களே, பொதுவாக சென்னையில் பிற பகுதிகளிலிருந்
சைதாப்பேட்டையிலிருந்தும் காய்கறி வியாபாரிகள் கொத்துவால்
தும் சிறு வியாபாரிகள், அங்காடிகளுக்கு அதிகமாகச் சென்று
சாவடி போன்ற பெரிய கூடைகளை வைத்துக் கொண்டு செல்
வருகிறார்கள். அவர்கள் இருப்பதால் எப்படி ரயிலில் வெண்
வதில் பெரும் தொந்தரவு வைத்திருக்கிறார்களோ அதைப் போல
டர்ஸ் காரேஜ் தனியாக அளவுக்கு தனியாக மினி பஸ் விட
வெண்டார்லெ பஸ் என்கிற
ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, ஏற்கனவே எடுக்கப்பட்டி
அதற்கான நடவடிக்கை விடப்படாமல் இருந்தாலும்
ருக்கிறது. எல்லாப் பகுதிகளுக்கும் மாண்புமிகு உறுப்பினர்
அது நடைமுறையில் இருக்கிறது. அதற்கான நடவடிக்கை
அவர்களுடைய ஆலோசனையை ஏற்று, சொன்னதைப்பற்றி கட்டண
யும் எடுக்கப்படும். நான் முதலிலே கருத்து எதுவும் சொல்லா
உயர்வு பற்றி மாண்புமிகு உறுப்பினர்
தது வருத்தமாக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; இங்கே அமைச்சர் உறுப்பினரிடம் ஆலோசனை கேட்கக் கூடாது.

திரு. கே. உச்சி : தலைவரவர்களே, மினி பஸ்கள் எந்த
அடிப்படையில் விடப்படுகின்றன என்பதையும் முழுமையாக
தேசியமயமாக்கப்பட்ட மாவட்டங்களில் அதிகமாக மினி பஸ்களை
விட அரசு முன்வருமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே,
பெரிய பேருந்துகளை விட முடியாத இடங்களில் மினி பஸ்களை
விட நாங்கள் நடவடிக்கை எடுக்கிறோம். குறிப்பாக மாண்புமிகு
உறுப்பினர் அவர்கள் ஊட்டியை மனதில் வைத்துதான் சொல்லி
இருக்கிறார் என்று கருதுகிறேன். அது மலைப் பகுதியாக இருப்ப
தால் அதிக அளவில் மினி பஸ்களை விட அரசு ஏற்பாடு செய்யும்
என்பதையும் சேரன் போக்குவரத்துக் கழகத்தில் 30 மினி பஸ்
களை வாங்க ஏற்பாடு செய்திருக்கிறோம் என்பதையும்
தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ஜே. சி. டி. பிரபாகரன் : தலைவரவர்களே, பழைய பேருந்துகளை மாற்றியமைத்து அவை புதிய மீடியம் சைஸ் பேருந்துகளாக விடப்படும் என்ற செய்தி

பத்திரிகையில் வந்தது. அதுபற்றிய விவரம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன். அதோடு மினி பஸ்களை ஓட்ட பெண்கள் முன்வந்தால் அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : தலைவரவர்களே, இப்போது நம்முடைய போக்குவரத்துக் கழகங்களைப் பொறுத்த வரையில் பழைய பஸ்களை விற்றுவிடாமல் அதை மாற்றியமைத்து, மினி பஸ்களாக விட நடவடிக்கை எடுத்து, அது வெற்றிகரமாக முடிந்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் புருஷோத்தமன் அவர்கள் கேட்ட கேள்விக்குகூட இது பயனுள்ளதாக இருக்கும். அதைப் போன்று பெண்கள் ஓட்டுநர்களாக வேலை செய்ய முன்வந்தால் அவர்களை நியமிப்பீர்களா என்று கேட்டிருக்கிறார். இப்போது நான் நடத்துனர்களாக பெண்களை நியமிக்கும் ஒரு முயற்சியை எடுத்திருக்கிறோம். அது எப்படி வெற்றிகரமாக அமைகிறதோ அதைப் பொறுத்து மற்ற நடவடிக்கையும் இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் ஆலோசனை கூறுங்கள் என்று சொன்னார்கள். இங்கே உறுப்பினர்கள் ஆலோசனை சொன்னால் அது சரியாகாது, ஏற்கனவே சட்டமன்ற உறுப்பினர்கள், மேனேஜிங் டைரக்டர், அமைச்சர் ஆகியோர் அடங்கிய அமைச்சர் செயர்மென் என்ற முறையில் ஒரு "நேஷனல் டிரான்ஸ்போர்ட் கன்ஸல்டேட்டிவ் கமிட்டி" 1977-ல் அமைக்கப்பட்டது. பின்னர் இந்த அவை கலைக்கப்பட்டு, தேர்தல் நடைபெற்றதற்குப் பிறகு மீண்டும் அந்தக் கமிட்டி புதுப்பிக்கப்படவில்லை, அந்தக் கமிட்டியைப் புதுப்பித்தால் நாங்கள் அங்கே வந்து ஏராளமான ஆலோசனையைத் தருகிறோம். கமிட்டியைப் புதுப்பிக்க ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : தலைவரவர்களே, அந்தக் கமிட்டி புதுப்பிக்கப்படும். அந்தக் கமிட்டியின் மூலம் கேட்ட ஆலோசனைகளுக்கு நடவடிக்கையும் எடுத்து வருகிறோம். அந்தக் கமிட்டி இருப்பதால் இங்கே இருப்பவர்களுக்கு பொறுப்பு இல்லை என்று சொல்வார்களானால் அதை ஏற்றுக் கொள்ள முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் பொறுப்பு இல்லை என்று சொல்லவில்லை; அங்கே வந்து சொல்லுகிறோம் என்றுதான் சொன்னார்.



## Survey of traffic pattern in Madras City

* Q. No. 217.—THIRU S. RAJARAMAN : Will the Hon. the Minister for Transport be pleased to state :

(a) Whether the Pallavan Transport Corporation has undertaken any survey of traffic pattern in Madras City during August–September, 1980; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : (அ) ஆம்.

(ஆ) சென்னைப் பெருநகரில் பேருந்து போக்குவரத்து மேம்பாட்டிற்கான வழிகளைக் காணும் பொருட்டு கடந்த 1980 ஆகஸ்டு—செப்டம்பர் திங்களில் பல்லவன் போக்குவரத்துக் கழகம் (பெருநகர் பிரிவு) சென்னை நகரின் மையப் பகுதியில் பொது போக்குவரத்து கனபரிமாணம், போக்குவரத்துத் தன்மை பேருந்து நிறுத்தக் கணக்கெடுப்பு மற்றும் பயணிகளின் கணக்கெடுப்பு போன்ற கணக்கெடுப்புகளை நடத்தியது. பிரம்புக்கடை சாலை, சுபாஷ் சந்திரபோஷ் சாலை, எஸ்பிளனேட் சாலை வடக்கு துறைமுக சாலை, பிரேசர் பால சாலை ராஜாஜி சாலை, காமராஜ் சாலை, பிராட்வே மற்றும் முத்துசாமி சாலை ஆகிய சாலைகளிலும், சுபாஷ்சந்திரபோஷ் சாலையில் இணையும் கிளைச் சாலைகளிலும், இக்கணக்கெடுப்பு நடத்தப்பட்டது.

வரும் டிசம்பர் திங்களுக்குள் அக்கணக்கெடுப்பின் முடிவினையும் அது சம்பந்தப்பட்ட ஆலோசனைகளையும் வெளியிடும் நோக்கோடு அப்பணி இப்போது தொடர்ந்து நடைபெற்று வருகிறது. விரைவில் வெளியிடப்படும்.

திரு. க. பாலன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சென்னையிலே ஓடிய பல்லவன் போக்குவரத்துக் கழகப் பஸ்கள் சிவப்பு வர்ணத்திலே ஓடிக்கொண்டிருந்தன. தற்போது பல்லவன் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் பல ரகங்களாக மாற்றப்பட்டிருப்பது ஏன் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : தலைவரவர்களே, பல்லவன் போக்குவரத்துப் பேருந்துகள் இப்போது மூன்று வர்ணங்களாக மாற்றப்பட்டு ஓடிக்கொண்டிருக்கின்றன. இதற்கு என்ன காரணம் என்பதைச் சொல்கிறேன். புதிய வண்டிகள் அதாவது முதல் 5 ஆண்டு வரை பச்சையாகவும், 5 ஆண்டிலிருந்து 10 ஆண்டு

[1981 பிப்ரவரி 10

வரை ப்ளூ கலரிலும், 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பேருந்துகள் சிவப்பு நிறத்திலும் இருக்க வேண்டும் என்ற அடிப்படையிலே தான் அவ்வாறு செய்யப்பட்டிருக்கிறது. அதாவது அவற்றின் நிறங்களைப் பார்த்தவுடனே பழைய பஸ்களை மாற்ற வேண்டும் என்ற உணர்வு வரவேண்டும் என்ற காரணத்திற்காகத்தான் இவ்வாறு மூன்று நிறங்களில் பேருந்துகள் ஓடிக்கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## திருவில்லிபுத்தூரில் கைத்தறி வளர்ச்சி கழகத்தின் உற்பத்திக் கிளை

*வினா எண். 278.—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு கைத்தறி, கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம் திருவில்லிபுத்தூர் நகரில் கைத்தறி நிதி அண்டு வியாபார கார்ப்பரேஷனிலிருந்து கைத்தறி உற்பத்தி சென்டர் ஆரம்பிக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

(ஆ) ஆம் எனில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

(இ) கைத்தறி உற்பத்தி சென்டர் ஆரம்பிக்க எத்தனை மனு வந்துள்ளன?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : (அ) தமிழ்நாடு கைத்தறி நிதி மற்றும் வியாபார கார்ப்பரேஷன் தற்போது பெயர் மாற்றம் செய்யப்பட்டு 'தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம், என்று இயங்கி வருகிறது. இக்கழகம் தற்பொழுது கைத்தறித் துணி வியாபாரத்தை மேற்கொள்வதை நிறுத்திவிட்டது. ஆகையால் திருவில்லிபுத்தூரில் இக்கழகத்தின் உற்பத்திக் கிளை ஆரம்பிக்கும் செயற்குறிப்பு இல்லை.

(ஆ) மற்றும் (இ) இக்கேள்விகளுக்கு இடமில்லை.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, இந்த கைத்தறி உற்பத்தி சென்டரின் நோக்கம் என்ன? இதற்கு அரசு எவ்வளவு மதிப்பீடு செய்துள்ளது. இது மத்திய அரசின் திட்டமா அல்லது மாநில அரசின் திட்டமா? எவ்வளவு பேருக்கு இதனால் வேலை வாய்ப்பு கிடைக்கும்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : தலைவரவர்களே, கைத்தறி வளர்ச்சிக் கழகம் என்பது தமிழகத்திலே காஞ்சி, ஈரோடு, சேலம் கரூர், மதுரை மற்றும்



1981 பிப்ரவரி 10]

குறிஞ்சிப் பாடி ஆகிய இடங்களில் இயங்கி வருகின்றது. குறிஞ்சிப்பாடி, கரூர் ஆகிய இரண்டு இடங்களில் இயங்கி வருகின்றவை மத்திய அரசின் முழு நிதியுதவியோடு வெளி நாடுகளுக்கு ஏற்றுமதியாகின்ற துணி ரகங்களை உற்பத்தி செய்கின்றன. மற்ற நான்கு இடங்களில் இயங்கி வருபவை மாநில, மத்திய அரசுகளின் நிதியுதவியோடு கைத்தறி துணிகளை உற்பத்தி செய்து வருகிறது. இவை அனைத்தும் கைத்தறிக் கழகமாக மாற்றப்பட்டு கூட்டுறவு இயக்கமாகக் கொண்டு வரப்பட்டிருக்கின்றது. இக்கழகம் தயாரிக்கின்ற துணிகளை கோ-ஆப்டெக்ஸ் 50 சதவீதம் கொள்முதல் செய்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, இந்த அலுவலகத்தை சுமார் 6 மாதத்திற்கு முன்பே ஸ்ரீவில்லிபுத்தூரில் ஆரம்பிப்பதாக இருந்தது. ஆனால் இடம் கிடைக்கவில்லை என்று கூறி அதிகாரிகள் காலதாமதம் செய்கிறார்கள். ஆகவே விரைவில் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும் அதற்கு எவ்வளவு நிதி ஒதுக்கீடு என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : தலைவரவர்களே, இந்தக் கழகம் 1964-ல் ஆரம்பிக்கப்பட்ட பின்பு 19-1-78-ல் கைத்தறி வளர்ச்சிக் கழகமாக மாற்றியமைக்கப்பட்டிருக்கிறது. ஸ்ரீவில்லிப்புத்தூரில் எந்தவிதமான கிளைக் கழகமும் ஆரம்பிப்பதற்கான செயற் குறிப்பே இல்லை. ஆகவே, அதற்கான நிதி ஒதுக்கீடு பற்றியும் குறிப்பு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## கைத்தறி துணிகள் ஏற்றுமதி

*வினா எண். 279—திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு கைத்தறி கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலிருந்து 1979-80, 1980-81 ஆண்டுகளில் வெளிநாட்டிற்கு எத்தனை ரூபாய் பெறுமான துணிகளை அனுப்ப ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது ?

(ஆ) வெளிநாட்டிற்கு கைத்தறித் துணிகளை அனுப்புவதில் தேக்கம் ஏற்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : (அ) 1979-80 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டிலிருந்து ரூ. 56.35 கோடி மதிப்புள்ள கைத்தறித் துணிகள் வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

நடப்பு ஆண்டுக்கு (1980-81) குறிப்பிட்ட இலக்கு ஏதும் வைக்கப்படவில்லை. எனினும் இவ்வாண்டு துவக்க மாதங்களில் அகில இந்திய அளவில் ஏற்றுமதி போக்குநிலை ஊக்கமளிப்பதாக கைத்தறி ஏற்றுமதி முன்னேற்றக் கழகத்தின் ஏற்றுமதி ஆய்வுரையிலிருந்து தெரிய வருகிறது.

(ஆ) இல்லை.

(முற்பகல் 10-10)

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, நம்முடைய கைத்தறித் துணிகள் வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்பெறு வதில் தரம் குறைந்திருப்பதினாலேயே ஏற்றுமதியும் மிகப் பெரிய அளவில் பாதிக்கப்பட்டிருப்பதாகத் தகவல் வந்திருக் கிறது. ஆகவே இந்த ஏற்றுமதி டிசைன்களின் தரத்தை பாது காக்க அரசு ஏதாவது ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்பு கிறேன் ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தரம் குறைந்திருப்பதாக தகவல் ஏதும் இல்லை. இருப்பினும் நமது கைத்தறித் துணிகள் வெளி நாட்டினரின் விருப்பத்திற்கு ஏற்ப புது ரகங்களில் உற்பத்தி செய்யப் பெறுவதற்கான டிசைன் சென்டர்கள் கூட தமிழகத்தில் இயங்கி வருகிறது, ஆகவே அதிகப்பட்சமான அளவிற்கு தமிழக கைத்தறி துணிகளுக்கு வெளிநாட்டிலே வரவேற்பு இருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செ. சிவசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக கைத்தறித் துணிகளை அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதிலே சங்கடங்கள் ஏற்படுவதினால், பொதுவுடமை நாடுகளில் அவைகளை ஏற்றுமதி செய்ய ஏற் பாடு செய்யப்பெறுமா என்பதையும் அவைகள் அளவிற்கு அதிக மாகத் தேங்கி கிடப்பதினால் பலகோடி ரூபாய் பெறுமான துணிகள் அப்படியே வைக்கப்பெற்றிருப்பதாகத் தெரிகிறதே. அவைகளின் மீது ரிபேட் கொடுத்து விற்பனை செய்ய அரசு ஏற்பாடு செய்யுமா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய ரக துணிகள் தேங்கிக் கிடப்பதாக தகவலே இல்லை. ஆகவே, உற்பத்தி பண்ணியதற்கு ரிபேட் கொடுக்க வேண்டிய அவசியமும் இல்லை. ரிபேட் என்பது விசேஷ காலங்களில் மட்டும் கொடுக்கப்பெறுவதாக ஏற்பாடு செய்யப்பெற்றிருக்கிறது.





திரு. ஜெ. எஸ். இராஜு: மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே, மாநில கைத்தறி சங்கத்தினுடைய அமைப்புகள் எல்லாம் 3 மாதங்களுக்கு முன்பு ஒரு அறிக்கை வெளியிட்டார்கள். அதில் பல கோடி ரூபாய்க்கு கைத்தறித் துணிகள் விற்பனை ஆகாமல் தேங்கிக் கிடக்கின்றன என்று அந்த மாநில அமைப்பு வெளியிட்டிருந்தது. அது உண்மையா ? ஆம் என்றால், அந்தத் துணிகளை ஏன் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு அரசு முயற்சி எடுக்கக்கூடாது என்பதை அறிய விரும்புகிறேன்

திரு. எஸ். என். இராசேந்திரன் : வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பெறும் துணிகள் 3 மாதங்களாக தேக்கம் அதிகமாக ஆகியிருப்பதாகச் சொல்கிறார்கள். என்னிடத்தில் கொடுக்கப்பெற்றுள்ள குறிப்பில் அப்படி இல்லை. மாறாக கடந்த 3 மாதங்களில் மட்டும் 12,01,00,0 0 மதிப்புள்ள துணிகள் வெளிநாடுகளுக்கு விற்பனை செய்யப்பெற்றிருக் கிறது என்றும் இது வழக்கத்தை விட அதிகம் என்று கூறப் பட்டுள்ளது.

இலவசமாக அரிசி வழங்கல்

*வினா எண் 280— திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு உதவித்தொகை பெறும் வயோதிகர்கள், ஊனமுற்றோர்கள் கைம்பெண்கள் ஆகியவர்களுக்கு வாரத் திற்கு ஒரு கிலோ அரிசி அரசு இனாமாக வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறதா ?

(ஆ) ஆம் எனில், இது பற்றிய விவரம் என்ன ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) ஆம்.

(ஆ) அரசு உதவித் தொகை பெறும் மூதியோர், கைம் பெண்கள், உடல் ஊனமுற்றவர்கள் ஆகிய அனைவரும் இத்திட்டத்தின் கீழ் 1-11-1980 முதல் வாரம் ஒரு கிலோ உயர்ரக அரிசியை இலவசமாகப் பெறுகின்றனர் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களுக்கு கொடுக்கப்பெறும் உதவித் தொகை மிகவும் குறைவாக இருக்கிறது. அதனை கூடுதலாக ஆக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்

[1981 பிப்ரவரி 10

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலையைப் பார்த்துத் தான் அரசு அதனை ஆலோசனை செய்யும் என்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

**திரு. மு. அம்பிகாபதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே 25 ரூபாய் என்று அவர்களுக்கு உதவித் தொகை நிர்ணயம் செய்யப்பெற்றுள்ளது. அது ஒரு கிலோ அரிசி 1 ரூபாய் விற்ற காலத்தில் நிர்ணயம் செய்யப்பெற்ற தொகை, இன்றைக்கு 1 கிலோ அரிசியின் விலை 4 ரூபாயாக மாறிவிட்டது. நமது அண்டை மாநிலமான கேரளாவில் 50 ரூபாய் என்று உதவி கொடுக்கிறது. எனவே நம்முடைய தமிழக அரசு ஒரு முன் உதாரணமாக 100 ரூபாயாக அதை மாற்றி, குறைந்த பட்சம் வாரம் 10 கிலோ அரிசியாகவும் கொடுக்க ஆலோசனை செய்ய முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த புரட்சிகரமான திட் டத்தை மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் இந்த வருடம் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆகையினால் அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்க முடியுமோ அதைப் பார்த்து அரசின் நிதிநிலையையும் பொறுத்து, நல்ல முறையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

**மாண்புமிகு பேரவைத்தலைவர் :** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன

குறிப்பு. - ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.

## 2. ஒழுங்குப் பிரச்சினை.

### கண்டனத் தீர்மானத்தின் மீது கட்சித் தலைவர் களைப் பேச அனுமதிப்பது

**திரு. எல். இளையபெருமாள் :** தலைவர் அவர்களே, ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். அன்று அரசாங்கத்தின் தொழிலாளர் விரோதப் போக்கு குறித்து திரு. உமாநாத் அவர்கள் ஒரு பிரே ரணை கொண்டு வந்தார்கள். அந்த சமயத்தில் காங்கிரஸ் கட்சி சார்பில் யாரையும் கூப்பிடாதது மட்டும் அல்ல. நாங்கள்



 (திரு. எல். இளையப்பெருமாள்)

கேட்டபோது உதவி சபாநாயகர் அவர்கள், யார் பிரேரணை கொண்டுவந்தார்களோ அவரைத்தான் பேசுவதற்கு முதலில் அனுமதிக்க முடியும் என்றும் அதுதான் சபையில் மரபு என்றும் சொன்னார்கள். அதை ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் அந்த மரபுக்கு விரோதமாக ஜனதாக் கட்சித் தலைவருக்கு அனுமதி கொடுத்துவிட்டு மற்றவர்களுக்குக் கொடுக்காதது அவையின் மரபைமீறிய செயலாகும்.

**மாண்புமிகு பேரவைத்தலைவர் :** நேற்று ஜனதாக் கட்சித் தலைவர் அவர்கள் இன்று வரமுடியாது, ஊருக்கு போக வேண்டும் என்பதால் தம்மை முன்னால் பேச அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டதால் பேச அனுமதிக்கப் பட்டார்களே தவிர மற்றக் கட்சிகளின் உரிமைகளைப் பறிப்பது என்ற நிலை இல்லை.

## 3. உரிமைப் பிரச்சினை.

### ஊரகத் தொழில் அமைச்சர் மீது.

**மாண்புமிகு பேரவைத்தலைவர் :** அடுத்து, அவை உரிமை மீறல் குறித்த பிரச்சினை. 246 வது விதியின்கீழ் மாண்புமிகு அவை உறுப்பினர் திரு வே. இராஜசேகரன் அவர்கள் அவையில் எழுப்ப உரிமை மீறல் குறித்த ஒரு பிரச்சினையை அனுமதி கேட்டுள்ளார். அவருக்கு அனுமதி அளிக்கப் படுகிறது.

**திரு. வே. இராஜசேகரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக சட்டப் பேரவை விதி 246—ன் கீழ் கீழ்க்காணும் உரிமை மீறல் பிரச்சினையைக் கொண்டு வருகிறேன்.

கடந்த 29—1—1981 அன்று, சட்டப்பேரவை உறுப்பினர் மாண்புமிகு திரு. சுந்தரராஜன அவர்கள் என் சம்பந்தப் பட்ட உரிமை மீறல் பிரச்சினை ஒன்றைக் கொண்டுவந்தார். அன்று மாண்புமிகு அமைச்சர் கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்

[திரு. வே. இராஜசேகரன்] [1981 பிப்ரவரி 10

கள் அதற்கு பதில் அளித்தார். அவர் அளித்த பதிலா
னது உண்மைக்கு மாறானதாகவும் சபைக்கு தவறான தக
வலை தருவதாகவும், என்னுடைய கவுரவத்திற்கு களங்கம்
கற்பிப்பதாவும் உள்ளது. மேலும் இது அவையின்
உரிமையை மீறிய செயலாகவும் நான் கருதுகிறேன்.
உண்மை நிலையை விளக்குவதன் மூலம் உரிமை மீறப்
பட்டிருக்கின்றது என்பது நிரூபணமாகும் என்று நான்
நம்புகிறேன்.

14—10—1980 அன்று என் தொகுதியில் சீனிவாச நகர்,
பூங்காவன குப்பத்து மக்கள் கடலோரப் பகுதியில் கடந்த
பத்தாண்டுகளாக தொடர்ந்து குடிசையில் குடியிருந்து
வருகிறார்கள். பெரும்பாலும் அவர்கள் மீனவர்களும்
அரிஜனங்களும் ஆவார்கள். இவர்களுக்கு என்று கட்டப்
பட்ட குடிசைமாற்று வாரிய வீடுகள் முறையாக இவர்
களுக்குக் கொடுக்கப்படாததால், தொடர்ந்து அவர்கள் அந்தக்
கடலோரப்பகுதியில் குடிசைகளில் குடியிருக்கும் அவல
நிலைக்கு ஆளானார்கள். கடந்த அக்டோபர் திங்களில்
ஏற்பட்ட கடுமையான புயலாலும், மழையாலும், கடற்கரை
ஓரத்தில் இருந்த அந்த மக்கள் கடுமையான கடல் அரிப்பால்
பெரும் பாதிப்பிற்கு ஆளாக்கப்பட்டார்கள். இந்த நிலையை
எனக்கு எடுத்துச் சொல்லி அந்த இடங்களை நான் பார்க்க
வேண்டும் என்றும், உரிய முறையில் உரியவர்களுக்கு எடுத்துச்
சொல்லி தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும்
பாதிக்கப்பட்ட மக்கள் கேட்டுக்கொண்டார்கள்.

அவர்களின் இந்த வேண்டுகோளுக்கு இணங்க கடந்த
14—10—1980 அன்று மாலை 4-30 மணிக்கு பாதிக்கப்
பட்ட அந்த இடங்களுக்கு நான் சென்றேன். பாதிக்கப்
பட்ட மக்கள் என்னிடம் முறையிட்டுக்கொள்வதற்காக அந்த
இடத்தில் கூடினார்கள். நானும் அந்த இடங்களைப் பார்வை
யிட்டு விட்டு அவர்களுக்கு ஆறுதல் சொல்லிக்கொண்டு
இருந்தேன். முறையான நடவடிக்கை எடுக்க சம்பந்தப்
பட்டவர்களுடன் தொடர்பு கொள்வதாகவும் உறுதி அளித்துக்
கொண்டிருந்தேன். அந்த நேரத்தில் எச். 5, காவல் நிலை
யத்தைச் சேர்ந்த ஆய்வாளரும், துணை ஆய்வாளரும், அந்த
இடத்திற்கு வந்தார்கள். அவர்களும் என்னிடம் 'இரண்டு
தினங்களுக்கு முன்பு நாங்களும் பார்த்தோம்; 37 வீடு
களுக்கு அதிகமாக கடலரிப்பால் பாதிக்கப்பட்டு உள்ளன
என்றும், நான் அவர்களுக்கு மாற்று இடம் ஏற்பாடு
செய்யவேண்டும்' என்றும் அவர்கள் இருவரும் என்னிடம்
சொன்னார்கள். அந்த நேரத்தில் வடக்குப் பகுதி ஏ.சி.
திரு. முகம்மது அலி அவர்கள் அங்கு ஜீப்பில் வேகமாக வந்தார்.
வந்தவர், வந்ததும் வராததுமாக 'இந்த இடத்தை விட்டு
ஓடுங்கள் என்று உரத்த குரலில் கூறிக்கொண்டு



1981 பிப்ரவரி 10] [திரு. வே. இராஜசேகரன்]

பொது மக்களையும் என்னையும் நோக்கி தடிக்கொண்டு
தாக்க ஆரம்பித்தார். அந்தத் தாக்குதலில் என் வலது விலா
பலமாகப் பாதிக்கப்பட்டது. உடனே நான் '' என்னை
யுமா அடிக்கிறீர்கள்'' என்று ஏ.சி. யை நோக்கிக் கேட்
டேன். அதற்கு ஏ.சி. பதில் ஏதும் சொல்லாமல் போலீஸ்
வானில் என்னை ஏற்றினார். அப்போது மணி மாலை
சுமார் 5-30 இருக்கும். இரவு 9-00 மணி வரை அன்று
என்னை எச். 1 காவல் நிலையத்தில் வைத்திருந்தார்கள்.

(முற்பகல் 10-20)

அதன் பிறகு சென்னை ஸ்டான்லி மருத்துவமனைக்கு
என்னை காவல்துறையினரே அழைத்துச் சென்றார்கள். அது
போது மருத்துவமனையில் என்னைப் பரிசோதித்த மருத்து
வர்கள் அக நோயாளியாக இருப்பதற்குப் பதிவு செய்தார்கள்.
'' நான் புறநோயாளியாகவே இருந்த கொள்கிறேன்'' என்று
மருத்துவர்களுக்கு நான் வேண்டுகோள் விடுத்தேன். அந்த
நேரத்தில் எனது பக்கத்துத் தொகுதியான திருவொற்றியூர்
தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு குமரி அனந்தன்
அவர்கள் என் தொகுதியில் செய்தது போலவே அவர் தொகுதி
யிலும் காவல் துறையினரால் தாக்கப்பட்டு பாதிக்கப்பட்ட
மீனவர் அரிஜன மக்களை மருத்துவமனையில் சேர்ப்பதற்காக
வந்து இருந்தார். மருத்துவர்கள் அக நோயாளியாக நான்
இருக்கவேண்டும் என்பதை மறுத்த எனக்கு ''மருத்துவர்கள்
யோசனைப்படி நீங்கள் நடந்து கொள்ளுங்கள்'' என்று எனக்கு
அறிவுரை கூறினார். நானும் அதன் பின்பு அக நோயாளி
யாக அனுமதிக்கப்பட்டு ஐந்து நாட்கள் மருத்துவமனையில்
இருந்தேன். அங்கு எனக்கு பல்வேறு முறைகளில் சிகிச்சைகள்
அளிக்கப்பட்டன. உதாரணமாக எக்ஸ்ரேக்கள், பிளாஸ்த்திரின்
மருந்து வழங்குதல் போன்றவைகள் அந்த ஐந்து நாட்களாக
எனக்கு செய்யப்பட்டன. ஐந்து நாட்களுக்கு மேலும்
தொடர்ந்து இருக்கவேண்டும் என்று மருத்துவர்கள் எனக்கு
அறிவுரை கூறினார்கள். ஆனால், தவிர்க்கமுடியாத
வேலையின் காரணமாக (அகென்ஸ்ட் மெடிகல் அட்வைஸ்)
நானே எழுதிக் கொடுத்துவிட்டு மருத்துவமனையை விட்டு
வந்தேன். மேற்சொன்னவைகளே முற்றிலும் உண்மை
என்பதை தங்கள் மூலமாக இப்போ வைக்குத் தெரிவிக்கிறேன்.
உண்மை இவ்வாறு இருக்க (1) மாண்புமிகு அமைச்சருடைய
அறிக்கையில் கடந்த 14—10—1980 அன்று மாலை 4-30 மணி
யளவில் நான் சிவாஜிமன்ற அமைப்பாளர்களுடன் சென்றதாகவும்
அங்குள்ள மக்களைத் தூண்டி. போக்குவரத்திற்கு இடைஞ்
சலை உருவாக்குகின்ற முறைகேடான செயல்களில் ஈடுபட
வைத்ததாகவும் வேண்டுமென்றே திட்டமிட்டு திரித்துக் கூறப்
பட்டுள்ளது. நான் மட்டும்தான் சென்றேன் என்பதே
உண்மை.

[திரு. வே. இராஜசேகரன்] [1981 பிப்ரவரி 10

(2) புது வண்ணை காவல் துறை ஆய்வாளர் அங்கு கூடி இருந்தவர்களை கலைந்து செல்ல ஏற்பாடு செய்யுங்கள் என்று என்னைக் கேட்டுக் கொண்டதாகவும், அதற்கு நான் மறுத்த தாகவும், சென்னை நகர காவல் சட்டப் பிரிவு 41-ன் படி பிரகடனப்படுத்தப்பட்டுள்ள தடை உத்தரவுபற்றி எனக்கு காவல்துறை தெரிவித்தும் கூட அதனை நான் மறுத்து ''முதல் அமைச்சரும் இதர அமைச்சர்களும் அந்த இடத்திற்கு அப்போதே வரவேண்டும் என்றும், இந்தப் பிரச்சினையை இங்கேயே தீர்க்க வேண்டும்'' என்று நான் காவல்துறையைப் பார்த்துச் சொன்னதாகவும், ''இங்கேயே'' இப்போதே இவ்விவகாரம் தீர்க்கப்படவில்லை என்றால் இங்குள்ள யாவரும் நகர முடியாது. இங்கேயே இருப்போம்,' என்று வற்புறுத்தியதாக அமைச்சர் தந்த அறிக்கையில் கூறியுள்ளார். மேற்சொன்ன கூற்று உண்மைக்கு மாறானது மட்டுமல்ல, வேண்டுமென்றே திரித்துக் கூறப்பட்ட தவறான தகவலாகும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன் காரணம், போலீஸ் அறிக்கை 14—10—1980 அன்று நடந்த நிகழ்ச்சிக்கு, ஒரு மாதம் கழித்து 15—11—1980 அன்று அறிக்கை வந்தது. போலீஸ் அதிகாரி கூறினார் என்று அறிக்கையிலே வெளியிட்டிருக்கிறீர்கள். அந்த அறிக்கை யிலே கூட இதைப்போன்று முதல் அமைச்சர் அவர்களும், மற்ற அமைச்சர்களும் இந்தப் பிரச்சினையைத் தீர்க்கும் வரையில் நான் அங்கேயே இருப்பேன் என்று போலீஸ் அறிக்கையிலே கூட குறிப்பிடப்படவில்லை.

(3) மேலும் நான் ரோடின் குறுக்கே படுத்ததாகவும், போக்குவரத்திற்கு இடைஞ்சல் செய்ததாகவும், கூறப்பட்டு இருப்பவை உண்மைக்கு மாறான தகவலாகும். நான் கைது செய்யப்பட்டு எச்-1 காவல் நிலையத்திற்கு அனுப்பப்பட்ட பிறகே சம்பவம் நடந்த இடத்திற்கு ஏ.சி. அவர்கள் வந்தார் கள் என்பது தவறான தகவலாகும். காரணம் என்னைத் தடிகொண்டு தாக்கியதும் வண்டியில் ஏற்றியதும் ஏ.சி. முகமது அலி அவர்கள்தான். இதை 14—10—1980-லே நடந்த சம்பவத்தைப் பற்றி, 15—10—1980 அன்று அளித்த போலீஸ் அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். சுமார் மாலை 5-30 மணிக்கு வண்ணாரப்பேட்டை உதவி ஆணையாளர் முகம்மது அலி அந்த இடத்திற்குச் சென்று, இராஜ சேகரனைப் பார்த்து, சாலையைப் பயன்படுத்த இடையூறாக இருக்காதீர் கள் என்று சொன்னதாகத் தகவல் இருக்கிறது. ஆகவே, சம்பவம் நடைபெற்றதைப்பற்றி 15—11—1980 அறிக்கை யிலே....................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் என்னிடம் டைப் அடித்துக் கொடுத்துள்ளதை மட்டும் படியுங்கள். அதில் இல்லாத புதுப் பிரச்சினைகளை நான் அனுமதிக்க முடியாது.



1981 பிப்ரவரி 10]

திரு. வே. இராஜசேகரன் : உரிமை மீறல் பிரச்சினையை பற்றித்தான் நான் படிக்கிறேன். (4] மாண்புமிகு அமைச் சரின் அறிக்கையில் ''மருத்துவ அதிகாரி அனைவருக்கும் சிகிச்சை அளித்து அனுப்பினார். ஆனால் திரு. இராஜ சேகரன் மட்டும் அக நோயாளியாக தான் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டதன் பேரில் அவ்வாறே அவர் சேர்த்துக் கொள்ளப்பட்டார்''. என்று கூறப் பட்டுள்ளது. நான் ஏற்கனவே இது பற்றிய உண்மையை கோடிட்டுக் காட்டியுள்ளேன். நான் புற நோயாளி யாக இருக்கவே வற்புறுத்தியும், மருத்துவர்கள் அக நோயாளி யாக நான் இருக்கவேண்டும் என்று அறிவுறுத்தியதையும், மாண்புமிகு குமாரி அனந்தன் அவர்கள் ''மருத்துவர்கள் யோசனைப்படியே நடந்து கொள்'' என்று கூறியதை எல்லாம் கோடிட்டுக் காட்டியிருக்கிறேன். மருத்துவர்கள் அறிவுரைக்கு மாறாக (against medical advice) நான் வெளியே வந்தேன்.

உண்மை இவ்வாறு இருக்க அமைச்சர் அவர்கள் அறிக்கை என் கண்ணியத்தையும், கௌரவத்தையும் களங்கப்படுத்துவதாகவும களங்கப்படுத்துவதாகவும் அமைந்துள்ளது என்பதைப் பணி வோடு தெரிவித்துக் கொள்கிறேன். இது வேண்டுமென்றே உண்மையைத் திரித்துக் கூறவும் அவைக்குத் தவறான தக வலைத் தரும் வகையில் உள்நோக்கோடு மாண்புமிகு அமைச்சர் திரு கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் இந்த அவைக் குத் தந்திருக்கிறார்கள். எனவே, இது அவை உரிமை மீறிய செயலாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்தத் தவறான தகவலைக் கொடுத்த மாண்புமிகு அமைச் சர் அவர்கள் மேல் கொடுத்துள்ள இந்தத் தீர்மானத்தினை. உரிமைக் குழுவின் பரிசிலனைக்கு அனுப்பவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ராஜசேகரன் அவர்களைப் பொறுத்தவரை இந்த அவைக்கு வெளியிலே நடை பெற்ற ஒரு நிகழ்ச்சி பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தர ராஜன் அவர்கள் அன்று ஒரு உரிமைப் பிரச்சினையை எழுப்பி னார்கள். அதிலே பலப்பல கருத்துக்களை எடுத்துத் தெரி வித்தார்கள். ஆகவே, ஒரு சாராருடைய கருத்து வெளியி லிருந்து இங்கே எடுத்துத் தெரிவிக்கப்பட்டது.

இந்த அவையிலேயே உரிமைப் பிரச்சினை பற்றிய நிகழ்ச்சி களோ அது தொடர்பான பேச்சுக்களோ மற்றவைகளோ நடை பெற்றிருக்குமானால் இந்த அவையில் இருக்கும் அத்தனை பேரும் அது பற்றிய முழு விளக்கங்களை அறிந்திருக்க முடியும். ஆனால் வெளியே நடைபெற்ற நிகழ்ச்சிக்கு இங்கே உரிமைப் பிரச்சினை என்று எழுப்பியதன் காரணமாக அரசின் சார்பில் மற்றொரு

சாராரின் கருத்தைத் தெரிவிக்க வேண்டிய கடப்பாடு ஏற்பட்டிருக்கிறது. அந்த வகையில் மற்றொரு சாரார் காவல் துறையினர் தான். வெளியில் நடந்ததைப் பற்றி உரிமைப் பிரச்சினை என்று மாண்புமிகு உறுப்பினர் கருத்துத் தெரிவித்தார்கள். அங்கு என்ன நடந்தது என்று காவல் துறையினரைக் கேட்கிற போது காவல் துறையினர் தகவலைத் தருகிறார்கள். அந்தத் தகவலை மாண்புமிகு அமைச்சர் திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் இந்த அவையினருக்கு மற்றொரு கருத்தாகச் சொன்னார்கள். ஆகவே, காவல் துறையினர் தந்த தகவலை எடுத்துத் தெரிவிக்க வேண்டிய கடப்பாட்டின் அடிப்படையில் மாண்புமிகு அமைச்சர் திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் எடுத்துத் தெரிவித்தார்களே தவிர, மாண்புமிகு ராஜசேகரன் அவர்களைப் பற்றித் தவறான தகவலைத் தர வேண்டுமென்பது நோக்கமல்ல. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்களுக்கு வெளியிலே நடந்தது முழுவதும் தெரிந்திருக்கும் என்றோ அல்லது வேண்டுமென்றே திரித்து அவர் கூறினார் என்றோ, இந்த அவையை திசை திருப்ப வேண்டுமென்ற நோக்கத்தோடு கூறினார் என்றோ, அல்லது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குக் களங்கத்தை ஏற்படுத்த வேண்டுமென்ற எண்ணத்திலோ சொல்லப்படவில்லை. இந்தப் பிரச்சினையைப் பொறுத்த வரை அவையில் இருக்கும் யாருக்கும் எந்த நிகழ்ச்சியும் தெரியாது. ஒரு பகுதியின் தகவல் வருகிறது மற்றொரு பகுதியின் தகவல் என்ன என்பதை இந்த அவைக்குத் தெரிவிக்க வேண்டிய கடப்பாடு அரசுக்கு இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் இந்தத் தகவலை, காவல் துறையினரிடத்திலிருந்து கிடைத்த தகவலைப் படித்தார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தரக் கூடிய அந்தத் தகவலை அவர்களுக்குப் பதிலாக நான் தருகிறேன், நான் அன்று வராததால் அவரிடத்தில் கொடுக்கப்பட்டு அவர் எடுத்துச் சொல்லியிருக்கிறார். வருகிற இந்தத் தகவலைப் படிக்கிற பொறுப்புத்தான் எங்களுக்கு. தவறான தகவலைத் தரவேண்டுமென்றோ, திசை திருப்பிவிட வேண்டுமென்றோ, களங்கம் கற்பிக்க வேண்டுமென்றோ நோக்கம் இல்லை என்பதை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்போது மாண்புமிகு உறுப்பினர் ராஜசேகரன் அவர்கள் மாண்புமிகு அமைச்சர் திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் மீது உரிமைப் பிரச்சினை என்று கொண்டுவந்தார்கள். உரிமைப் பிரச்சினை என்று வருகிறபோது இப்போதும் தகவல் வருகிறது. ஒரு பகுதியின் தகவல் வருகிறபோது, உரிமைப் பிரச்சினை என்று சொல்லி இன்னின்ன தகவல்கள் என்று ராஜசேகரன் அவர்கள் கூறுகிறபோது, என்ன நடந்தது என்று மறுபடியும் தகவலைக் கேட்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது இப்போது நான் அதைத்தான் எடுத்துத் தெரிவிக்கப் போகிறேன்.





இதற்கான இன்னொரு உரிமைப் பிரச்சினை என் மீது வரக் கூடாது. நான் இங்கிருக்கும் தகவலை, என்னிடத்தில் கிடைத்த தகவலைக் கூறுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குக் களங்கம் கற்பிக்க வேண்டுமென்ற எண்ணத்திலோ, அவையை திசை திருப்ப வேண்டுமென்ற எண்ணத்திலோ, சொல்லவில்லை என்பதை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு பக்கத்தின் தகவல் வருகிறபோது மற்றொரு பக்கத்தின் தகவலை அவைக்கு வைக்கவேண்டிய கடப்பாட்டின் அடிப்படையில் எனக்குக் கிடைத்த தகவலைப் பேரவையின் முன் வைக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. இராஜசேகரன் அவர்கள் அவரது தொகுதியைச் சேர்ந்த சீனிவாச நகர், பூங்காவனம் குப்பம் பகுதியில் உள்ள குப்பத்து மக்களுடைய குறைகளைத் தான் கேட்டுக் கொண்டிருக்கும்போது, எச்-5 காவல் நிலையத்தைச் சேர்ந்த ஆய்வாளரும், துணை ஆய்வாளரும் சம்பவம் நடந்த இடத்திற்கு வந்து தாங்கள் இரண்டு தினங்களுக்கு முன்பு அந்த இடத்தைப் பார்த்ததாகவும், 37 வீடுகள் கடல் அரிப்பினால் பாதிக்கப்பட்டதாகவும், மாற்று இடம் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கூறியதாகவும் சொல்வது சரியல்ல. இந்தத் தருணத்தில் காவலர்கள் தங்கள் கடமையைச் செய்ய விடாமல், சாலையின் குறுக்கே படுத்து, தடைகளை அகற்ற முன்வந்த காவலர்களை நோக்கிக் கூட்டத்தினர் சோடா புட்டிகளையும், கற்களையும் வீச ஆரம்பித்தனர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் முன் வைக்க விரும்புகிறேன். சாலையின் குறுக்கே போட்ட கம்பங்கள், வந்து விழுந்த கற்கள் இவற்றை போட்டோ படமாக எடுத்து வைத்திருக்கிறார்கள்.

(முற்பகல் 10-30)

அதையும் மாண்புமிகு பேரவைத் தலைவருடைய தீர்ப்புக்கு வைக்க நான் விரும்புகிறேன். மேற்கொண்டு அசம்பாவிதம் நடக்காமலிருக்கும்பொருட்டு சாலையின் குறுக்கே படுத்திருந்த அவர் கைது செய்யப்பட்டு எச்-1 வண்ணாரப்பேட்டை காவல் நிலையத்திற்குக் கொண்டு செல்லப்பட்டார். இந்தச் சம்பவத்தை அங்கிருந்த பொதுமக்களில் சிலர் அறிவார்கள். மாண்புமிகு உறுப்பினர் எச்-1 காவல் நிலையத்திற்குக் கொண்டு செல்லப்பட்ட பின்னரே, உதவி காவல் துறை ஆணையர், திரு. முகம்மது அலி, சம்பவம் நடந்த இடத்திற்கு வந்து சேர்ந்தார். எனவே மாண்புமிகு உறுப்பினர் தான் சம்பவம் நடந்த இடத்தில் இருந்தபோதே உதவி ஆணையர் அங்கு வந்து அவரிடம் 'இந்த இடத்தை விட்டு ஓடி விடுங்கள்' என்று சொல்லிய

இரண்டு சாராரைப்பற்றியும் விசாரிக்கும் பொழுது எது உண்மை எது தவறு என்று நமக்குத் தெரியக்கூடும். வழக்கு விசாணைக்கு வரும்பொழுது முழு உண்மையும் விளங்கும். எனவே, இந்தப் பிரச்சினைக்கு இங்கே எந்த முடிவும் நாம் கட்ட முடியாது. அவர் சொல்லக் கூடிய கருத்துக்களை அது தான் உண்மை என்கிறார். காவல்துறையினர் எங்களுக்குத் தெரிவிக்கின்ற விவரங்களை அதுதான் உண்மை என்கிறார்கள். எது உண்மை என்று கண்டுபிடிக்கின்ற அளவிற்கு இந்தச் சட்ட மன்றத்திலே வாய்ப்பும் வசதியும், நேரமும் இருக்காது. விசாரணை இருப்பதன் காரணமாக இதிலே உண்மை நிலைமை கட்டாயமாகத் தெரியத்தான் வரும். அப்பொழுது உண்மையான நிலைமைகள் வரும். அந்த உண்மை நிலையைப் பொறுத்து இந்த அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் ஏற்படுமேயானால் அந்த வகையில் இந்த அரசு தக்க நடவடிக்கைகளை எடுக்கும் என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன். மேற் கண்ட நிலைமையில் மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறுவது போல் சபையில் ஏற்கனவே இந்தச் சம்பவம் குறித்து அளிக்கப் பட்ட அறிக்கையில் எந்தவிதமான தவறான நிலைமையும் இல்லை ; கொடுக்கப்பட்ட தகவல்தான் தரப்பட்டிருக்கிறதே தவிர உள்நோக்கத்தோடு தரப்படவில்லை என்பதையும், மாண்புமிகு உறுப்பினரவர்களுக்குக் களங்கம் ஏற்படுத்தப் பட வேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையில் அல்லது தவறான கருத்தினைக் கொடுத்துத் தீர வேண்டுமென்ற எண்ணத்திலேயோ மாண்புமிகு அமைச்சர் திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்களோ, நான் இன்று கொடுத்திருக்கின்ற தகவலோ இல்லை என்பதையும் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். எனவே, இந்தப் பிரச்னையைப் பொறுத்தவரையில் பேரவைத் தலைவரவர்கள் முடிவு செய்வார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU K. S. G. HAJA SHERIFF: One clarification, Sir. Just a minute.

MR. SPEAKER: No clarification is allowed, in this, under the rules. We can spend more time in our Chamber.

இதுபற்றிய தீர்ப்பை நான் பின்னர் அறிவிக்கிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜசேகரன் அவர்களுக்கு முழு நேரம் கொடுத்து விட்டேன். அமைச்சர் பேசியதற்குப் பிறகு உறுப்பினரும் பேச ஆரம்பித்தால் முடிவு இருக்காது.

## ஒத்திவைப்புத் தீர்மானம்

### கலவை காவல் நிலையத்தில் ஒருவருக்கு ஏற்பட்டுள்ள மரணம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வட ஆர்க்காடு மாவட்டம், ஆற்காடு வட்டம், கலவை காவல் நிலையத்தில், 3–2–1981 அன்று தியாகராஜன் என்கிற 11 வயது சிறுவன் லாக்கப்பில் இருந்தவன் அடிக்கப்பட்டதன் காரணமாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு இறந்ததனால் அப்பகுதி மக்களிடையே நிலவும் பதட்ட நிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் என்று கேட்டு திரு. கே. ஆர். சுந்தரம், திரு. என். வரதராஜன் ஆகியோர் தீர்மானம் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசர முக்கியமானது என்பது குறித்து சுருக்கமாகக் கூறும்படிக் கேட்டுக் கொள்கிறேன். திரு. கே. ஆர். சுந்தரம் அவர்கள்.

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடார்க்காடு மாவட்டம் ஆற்காடு தாலுக்காவைச் சேர்ந்த கலவை போலீஸ் நிலையத்தில் 12 வயது மதிக்கத்தக்க தியாகராஜன் என்னும் சிறுவன் விளையாடிக்கொண்டிருந்த நேரத்தில் அப்பொழுது சென்றுகொண்டிருந்த பஸ் மீது கல் போட்டதற்காக பஸ் ஊழியர்கள் போலீஸில் புகார் செய்து, போலீஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்று பலமாக அடிக்கப்பட்டிருக்கிறான். பிறகு வேலூர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சைப் பிறகு இறந்துவிட்டான் என்ற தகவல் பரவி கலவை கிராம மக்கள் பரபரப்படைந்து, போலீஸ் நிலையத்தைத் தாக்குகின்ற நிலைமை ஏற்பட்டது. இதனால் அந்தப் பகுதி மக்கள் பரபரப்பு அடைந்திருக்கிறார்கள். இந்த நிகழ்ச்சிகள் தமிழகத்தில் தொடர்கதையாக ஆகிவிட்டது. போலீஸ் காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று அங்கே அடித்துச் சாகடிப்பது போன்ற நிகழ்ச்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன. தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலே இப்படி நடக்கின்றன. இதற்கு முன்பு கூட இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடந்ததைப்பற்றிப் பேசப்பட்டிருக்கிறது. எனவே, இந்த நிலையைப்பற்றி விவாதிக்க அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[முற்பகல் 10–40]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக்குக் கிடைத்த தகவலின்படி 24 ஜனவரி 1981 பகல் 12-00 மணியளவில் குறம்பாடிக்

கரிகந்தங்கல் கிராமங்களுக்கிடையே ஆற்காடிலிருந்து கலவை நோக்கி சென்று கொண்டிருந்த நகர பஸ் T.M.N. 7227-ன் மீது கரிகந்தங்கல் கிராமத்தைச் சேர்ந்த தியாகராஜன், லோகநாதன் என்ற முறையே 10, 11 வயது சிறுவர்கள் கற்களை எறிந்தனர். இதனால் ஓட்டுநர் இருக்கைக்கு அருகில் இருந்த கண்ணாடி உடைந்தது. பஸ்ஸை நிறுத்தி ஓட்டுநர் சிறுவர்களைப் பிடித்து கலவை காவல் நிலையத்தில் அன்று பகல் 12-15 மணிக்கு ஆஜர் செய்து சேதத்திற்கு நட்ட ஈடு கோரி புகார் கொடுத்தார். நிலையத்திலிருந்த தலைமைக் காவலர் பஞ்சாட்சரம் தக்க நடவடிக்கைக்கு புகாரை, உதவி ஆய்வாளருக்கு வைத்தார். அன்று இரவு 8-20 மணிக்கு உதவி ஆய்வாளர் காவல் நிலையம் வந்தார். அவரிடம் இரவு 8-30 மணிக்கு அச்சிறுவர்களின் உறவினர்களிடமிருந்து ரூ. 25 நட்ட ஈடாகத் தான் வாங்கிக் கொண்டதாகவும், அச் சிறுவர்களை விடுவித்து விடலாம் என்றும் கூறி ஓட்டுநர் லோகநாதன் ஒரு மனுவைக் கொடுத்தார். அச்சிறுவர்களை உதவி ஆய்வாளர் 8-45 மணிக்கு விடுவித்து விட்டார்.

27— 1— 1981 அன்று தனக்கு ''டெட்டனஸ்'' வியாதி என்று தியாகராஜன் வேலூர் பென்ட்லான்ட் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். பிறகு மருத்துவ அறிவுரையை மீறி அங்கிருந்து 29— 1— 1981 அன்று விடுவிப்பு வாங்கிக் கொண்டு இரவு 10-30 மணிக்கு வேலூர் கிருத்துவ மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அவருடைய உறவினர்களால் சேர்க்கப்பட்டார்.

3—2—1981 அன்று சிறுவன் தியாகராஜனின் தந்தை கிருஷ்ணபண்டிதர் கொடுத்த புகாருடன், கிருத்துவ மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையிலிருந்து கிடைத்த தகவலின்மேல் கலவை காவல் நிலையக் குற்ற எண் 19/81-ல் இந்திய தண்டனைச் சட்டம் 325-வது பிரிவின்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. அரசு பென்ட்லான்ட் மருத்துவ மனையில் 27—1—1981 அன்று சேர்க்கப்பட்டபோது தியாகராஜனை யாரும் துன்புறுத்தியதாக புகார் கூறப்படவில்லையாதலால் இது சட்டம் சம்பந்தப்பட்ட மருத்துவ வழக்கு என்று கருதப்படவில்லை. மருத்துவ மனையிலிருந்து தியாகராஜனை 3—2—1981 அன்று இறந்து விட்டதாக கலவை காவல் நிலையத்திற்கு 4—2—1981 அன்று ''ரிப் போர்ட்'' கிடைத்தது. இதன் பிறகு வழக்கு இந்திய தண்டனை சட்டத்தின் 302-வது பிரிவின்படி மாற்றப்பட்டது. தியாகராஜனை காவல் நிலையத்தில் மூன்று முறை தூக்கித் தரையில் போட்டதாகப் புகார் கூறப்பட்டதால் இராணிப்பேட்டை வருவாய்த் துறை கோட்ட அலுவலருக்கு தகவல் அறிவிக்கப்பட்டது. அவர் 5— 2— 1981 காலை வேலூர் கிருத்துவ மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பிரேத விசாரணை செய்து சவப் பரிசோதனைக்கு அனுப்பி வைத்தார். அவரை இதுகுறித்து காவல் துறை நிலை ஆணை எண் 145-ன்படி விசாரணை செய்யும்படி





மாவட்ட ஆட்சித் தலைவர் பணித்துள்ளார். இவ்விசாரணை அறிக்கையும், சவப் பரிசோதனையின் முடிவும் இன்னமும் அரசுக்குக் கிடைக்கவில்லை. இவை கிடைத்த பின்பே முழு விவரமும் தெரியவரும்.

24 ஆம் தேதி அன்று விடுவிக்கப்பட்டார். ஆனால், மீண்டும் 27 ஆம் தேதி மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டார். ஆகவே, டெட்டனஸ் வியாதி அவருக்கு இருப்பதாகத் தெரிகிறது. ஆனால் ஒரு புகார் வந்தது. காவல் துறையிலே 3 முறை தூக்கிப் போட்டார்கள் என்று. அந்தப் புகார் வந்ததன்பேரில் கோட்ட ஆட்சித் தலைவர் சவப் பரிசோதனைக்கு அனுப்பியிருக்கிறார். ஆகவே, இந்த இரண்டு ரிப்போர்ட் வருமேயானால், அந்த ரிப்போர்ட்டுகளுடைய அடிப்படையிலே குற்றவாளிகள் யாராக இருந்தாலும் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கலாம். இந்த அரசு கட்டாயம் எடுக்கும். இப்பொழுது அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து, இதுபற்றிப் பேசுவதன்மூலமாக, மேற்கொண்டு தகவல்கள் கிடைக்க வாய்ப்பில்லை. ஆனால், இந்த இரண்டு அறிக்கைகளும் அரசுக்குக் கிடைத்தவுடனே தக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளும் இந்த அரசு என்பதை மட்டும் நான் உறுதியாகத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்நிலையில் இச்சம்பவம் குறித்து விவாதிக்க அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்கத் தேவையில்லையெனக் கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அவை முன்னவர் அவர்களின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத் தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை இல்லையென்பதால், இதற்கு இசைவு மறுக்கப் பெறுகிறது.

## 5. அறிக்கை அளித்தல்

### பல மாவட்டங்களில் வறட்சி நிலைமை - அரசு நடவடிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் 106-வது விதியின்கீழ் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் பேரவைக்கு அறிக்கை ஒன்றினை இப்பொழுது அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் பருவமழைப் பொய்த்து விட்டதன் காரணமாக பல மாவட்டங்களில் வறட்சி நிலவுவதாக மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே சொல்லியிருக்கிறார்கள். அதற்காக, விவரமான அறிக்கையை இங்கே வைத்திருக்கிறேன். அது முழுவதையும் நான் படிக்கத் தேவையில்லை யென்றாலும்

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1981 பிப்ரவரி 10

மொத்தமாக இந்த வறட்சியைப் போக்குவதற்காக, குடி தண்ணீர் வழங்குவதற்கும், கிணறுகளை ஆழப்படுத்துவதற்கும் புதிய கிணறுகளை வெட்டுவதற்கும், இந்த அரசு ரூ. 298·77 இலட்சம் மாவட்டங்களுக்கு ஒதுக்கியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வட ஆற்காடு மாவட்டம் ரூ. 115 இலட்சம், இராமநாதபுரம் மாவட்டம் ரூ. 50 இலட்சம், தர்மபுரி மாவட்டம் ரூ. 30 இலட்சம் திருச்சி மாவட்டம் ரூ. 50 இலட்சம் : தென் ஆற்காடு மாவட்டம் ரூ. 30 இலட்சம், தஞ்சாவூர் மாவட்டம் 6·23 லட்சம் புதுக்கோட்டை மாவட்டம் 17·54 லட்சம். இந்த வகையில் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

மதுரை, சேலம் மாவட்டம் பற்றி மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். அவைபற்றி அரசு ஆராய்ந்து முடிவெடுக்கும். இது குறித்து ஒரு விவரமான அறிக்கை இங்கே வைத்திருக்கிறேன்.

தமிழ்நாட்டில் 1980 ஆம் ஆண்டு பருவமழை பல இடங்களில் குறைவாகவே பெய்துள்ளது. இதனால் வட ஆற்காடு புதுக்கோட்டை, தென் ஆற்காடு, திருச்சிராப்பள்ளி, இராமநாதபுரம், தருமபுரி, தஞ்சாவூர், சேலம் ஆகிய மாவட்டங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. சில இடங்களில் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதுடன் புதிய கிணறுகளைத் தோண்டவும், கிணறுகளை ஆழப்படுத்துவதற்கும் அவசியம் ஏற்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவர்களின் அறிக்கைகளை ஆய்வு செய்து, உடனடியாக குடிதண்ணீர் தட்டுப்பாடின்றி கிடைப்பதற்காக புதிய கிணறுகள் தோண்டவும், கிணறுகளை ஆழப்படுத்தவும் கீழ்க்கண்டவாறு செலவினம் அனுமதிக்கப்பட்டுள்ளது.—

| | | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | வட ஆற்காடு .. .. .. .. | 1,15.00 |
| 2. | இராமநாதபுரம் .. .. .. .. | 50.00 |
| 3. | தருமபுரி .. .. .. .. | 30.00 |
| 4. | திருச்சிராப்பள்ளி .. .. .. .. | 50.00 |
| 5. | தென் ஆற்காடு .. .. .. .. | 30.00 |
| 6. | தஞ்சாவூர் .. .. .. .. | 6·23 |
| 7. | புதுக்கோட்டை .. .. .. .. | 17·54 |
| | மொத்தம் .. | 298.77 |



1981 பிப்ரவரி 10] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

2. நிவாரண வேலைகளை பாதிக்கப்பட்ட பகுதிகளில் தீவிரப்படுத்துவது பற்றியும், எந்தெந்த துறைகள், எந்தெந்த பணிகளை பொறுப்பேற்று செயல்படுத்துவது என்பது பற்றியும், 1981 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 2-ஆம் தேதியில தலைமைச் செயலாளர் நடத்திய உயர்மட்ட அலுவலர்களின் கூட்டத்தில் ஆய்வு செய்யப்பட்டது. இக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் குடிநீர் வடிகால் வாரியம், விவசாயப் பொறியியல் துறை மற்றும் பொதுப்பணித்துறை மூலமாக புதிய குழாய்க்கிணறுகளை அமைக்கவும், கிணறுகளை ஆழப்படுத்தவும் அதற்கான கருவிகளை மாவட்டங்களின் தேவையான இடங்களில் சேர்ப்பிக்கவும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. சுமார் 1,300 குழாய் கிணறுகள் புதிதாக அமைக்கப்படும். அவற்றில் 1,100 கிணறுகளை குடிநீர் வடிகால் வாரியம் அமைக்கும். ஏற்கனவே நிலத்தடி நீர்ப்பிரிவு அமைத்துள்ள ஆய்வு ஆழ்துளைக் கிணறுகளையும், குடிதண்ணீர் விநியோகத்திற்கு பயன்படும் வகையில் குடிநீர்—வடிகால் வாரியத்திடம் ஒப்படைப்பதற்கும், அவற்றில் கைப்பம்புகள் அல்லது தகுதியான இடங்களில் மோட்டார் பம்புகள் அமைப்பதற்கும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

3. கைப்பம்புகள் அடிக்கடி பழுதுபட்டுப் போவதாக புகார் கூறப்படுவதால் எல்லா கைப்பம்புகளையும் குடிநீர்வடிகால் வாரியம் பொறுப்பேற்று பழுது பார்ப்பதற்கும், அவ்விதம் செய்வதில் ஒரு கைப்பம்பு பழுதாகிவிட்டால் அதற்குப் பதிலாக மாற்று பம்பை உடனே பொருத்தி பழுதானவற்றை பின்னர் சீர் செய்து பயன்படுத்துவதற்குத் தயாராக வைத்துக் கொள்ளவும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

4. வேலைவாய்ப்புத் திட்டங்கள்.—வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் வகையில் தேசிய கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ள வேலைகளை துரிதப்படுத்தவும், புதிய பணிகளை மேற்கொள்ளவும் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ் அதிகப்படியா தேவையான அரிசியை அவ்வப்போது ஒதுக்குவதற்கும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. வறட்சிப் பணிகளை துரிதமாகவும், முனைப்புடனும் செய்து முடிப்பதற்கு நிர்வாக இயந்திரம் முழு அளவுக்கு தயார் நிலையில் உள்ளது.

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1981 பிப்ரவரி 10

5. ஒவ்வொரு மாவட்டங்கள் பற்றிய விவரமான தகவல்கள் பின்வருமாறு கொடுக்கப்பட்டுள்ளன :

6. வட ஆற்காடு மாவட்டம்.—வட ஆற்காடு மாவட்டத்தில் 1980 ஆம் ஆண்டு பெய்த மழையளவு சராசரி மழையளவை விட குறைவாக இருந்தது. காவிரிப்பாக்கம் ஏரி உட்பட 2,970 நீர்ப்பாசன நிலைகளும் வறண்டுவிட்டன எல்லா வட்டங்களிலும், நிலக்கடலை‘ சோளப்பயிர்கள் காய்ந்துவிட்டன. அரக்கோணம், வந்தவாசி, செய்யார், திருவண்ணாமலை மற்றும் செய்யார் வட்டங்களில் குடிதண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. விவசாய வேலைகள் பாதிக்கப்பட்டுள்ளதால் வேலை வாய்ப்புகளை அதிகரிக்கச் செய்யவேண்டிய நிலை உள்ளது. வருவாய் நிர்வாக ஆணையர் இம்மாவட்டத்தின் வறட்சி நிலை பற்றி மாவட்ட ஆட்சியாளர், குடிநீர் வடிகால் வாரியத் தலைவர் ஆகியோருடன் கலந்து ஆலோசித்து அரசுக்கு அனுப்பிய பரிந்துரைகளை அரசு ஆய்வு செய்து கீழ்க்கண்ட நிவாரணங்களுக்கு ஆணையிடப்பட்டுள்ளது :—

(அ) நகர மற்றும் ஊர்ப்புறங்களில் 700 குழாய் கிணறுகளை ரூ. 105 இலட்சம் செலவில் அமைக்கவும் ;

(ஆ) பாலாறு தண்ணீர் விநியோக திட்ட மேம்பாட்டு வேலைக்காக ரூ. 10 இலட்சம் செலவிடவும் ;

(இ) கிராமப்புற வேலைவாய்ப்பு திட்டத்தின்கீழ் வேலை வாய்ப்பு அளிக்கக்கூடிய வகையில் ஏற்கனவே நடைபெற்றுவரும் வேலைகளை முடிக்கவும், புதிய வேலைகளை மேற்கொள்ளவும் கூடுதலாக 1,750 டன் அரிசியை ஒதுக்கியும் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பயிர்களின் விளைச்சல் 37 பைசாவுக்கும் குறைவாக (5 . சதவீதம்) விளைந்த நிலங்களுக்கு நிலவரி, உள்ளூர் வரி, தண்ணீர்த் தீர்வை, தனித் தண்ணீர்த் தீர்வை, பணப்பயிர் தீர்வை தள்ளுபடி செய்தும், ஒருவருக்குச் சொந்தமான நிலங்களில் பாதிக்குமேல் (50 சதவீதம்) நிலவரி தள்ளுபடி செய்யத்தகுதி உள்ளதாக இருந்தால் அவர்களுக்கு அரசுக்கடன், நிலவரி, உள்ளூர் வரி, நிலுவைகள் வசூலை அடுத்த ஆண்டிற்கு ஒத்திவைத்தும் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

(7) தென்னாற்காடு மாவட்டம்:—இம்மாவட்டத்தில் 1980 ஆம் ஆண்டில் பருவ மழை சாதாரணமாக பெய்ய வேண்டிய அளவுக்கு, 59 சதவீதமே பெய்துள்ளது. காவிரி மேட்டூர் நீர்ப்பாசன பகுதிகளில் நிலவரம் திருப்தி



1981 பிப்ரவரி 10] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

கரமாக உள்ளது. விருத்தாசலம் அணைக்கட்டு, மேமாத்தூர் அணைக்கட்டு, எல்லிஸ் சத்திரம் அணைக்கட்டு, பேலான்துறை அணைக்கட்டு திருக்கோயிலூர் அணைக்கட்டு, சொர்ணாவூர் அணைக்கட்டு, மணிமுக்தா நதி, கோமுகி நதி, வீடூர் திட்டங்களிலும் போதுமான அளவு தண்ணீர் வரத்து இல்லாததால் விருத்தாசலம், கள்ளக்குறிச்சி, திருக்கோயிலூர், உளுந்தூர்பேட்டை, விழுப்புரம் வட்டங்களில் பயிர்கள் பாதிக்கப் பட்டுள்ளன. 2,093 மானாவாரி குளங்களிலும் தண்ணீர் [illegible] மல் வறண்டு விட்டன. ஆயினும் இம்மாவட்டத்தில் சுமார் 91,704 பாசன கிணறுகள் உள்ளதால் அவற்றை பயன்படுத்தி ஓரளவுக்கு பாசன ஆயக்கட்டுகளிலும் புன்செய் நிலங்களிலும் விவசாயம் செய்யப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தில் மொத்தம் உள்ள 2,285 கிராமங்களில் 744 கிராமங்கள் பருவமழை தவறியதால் பாதிக்கப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்ட 744 கிராமங்களிலும், விவசாயத்துக்கு [illegible] யுள்ள 1,29,745 ஏக்கரில் 66,430 ஏக்கர் தரிசாக [illegible] பட்டுள்ளது.

குடி தண்ணீரைப் பொறுத்தவரையில் தற்போது பரவலான தட்டுப்பாடு ஏதும் இல்லை. ஆனால் பிப்ரவரி மாதம் 1981 ஆம் ஆண்டுக்குப்பின் தட்டுப்பாடு ஏற்படும் நிலை உள்ளது.

நிவாரணப் பணிகள் :

பாதிக்கப்பட்ட பகுதிகளில் குடி தண்ணீர் வசதி செய்வதற்காக தற்போது ரூ. 30 இலட்சம் செலவில் புதிய குழாய்க் கிணறுகளை அமைக்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிலவரி தள்ளுபடி செய்வதற்கும், வட ஆற்காடு மாவட்டத்திற்கு ஆணையிட்டதை போலவே இம்மாவட்டத்திற்கும் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வேலைவாய்ப்பு திட்டங்கள் :

தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழும் தன்னிறைவு திட்டத்தின் கீழும், ஏற்கனவே எடுக்கப்பட்ட வேலைகளை துரிதப்படுத்துவதோடு பாதிக்கப்பட்ட பகுதிகளில் புதிய நிவாரணப் பணிகளை மேற்கொள்ளவும் ஆணையிடப்பட்டுள்ளது. இம்மாவட்டத்திற்கு தேசிய கிராமப்புற வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் 350 டன் அரிசி கூடுதலாக விடுவிக்கப்பட்டுள்ளது.

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1981 பிப்ரவரி 10

8. இராமநாதபுரம் மாவட்டம் :

இராமநாதபுரம் மாவட்டத்தில் பருவ மழை குறைவாக பெய்ததால் ராஜபாளையம், ஸ்ரீவில்லிப்புத்தூர் வட்டங்களில் சில ஏரி குளங்கள் தவிர மற்ற பகுதிகளில் பெரும்பாலும் குளங்களில் தண்ணீர் வரவில்லை. மொத்தம் 7,332 குளங்களில் 3,603 குளங்களில் தண்ணீரே வரவில்லை. மீதமுள்ள குளங்களிலும் 266 குளங்கள் தவிர மற்ற குளங்களில் விவசாயத்திற்கு போதுமான தண்ணீர் வரவில்லை. இதனால் விவசாய வேலைகள் மிகவும் பாதிக்கப்பட்டு பயிர்கள் காய்ந்துவிட்டன.

குடிதண்ணீர் :

குடிதண்ணீர் தட்டுப்பாடு இதுவரை இல்லை. ஆயினும், வரும் மாதங்களில் மழை இல்லை எனில் தட்டுப்பாடு ஏற்படும் நிலை உள்ளதால் புதிய கிணறுகளை தோண்டவும், கிணறுகளை ஆழப்படுத்தவும், அவசியம் ஏற்பட்டுள்ளது. எனவே, ரூ. 50 இலட்சம் செலவில் புதிய குழாய் கிணறுகளை அமைக்கவும், கிணறுகளை ஆழப்படுத்தவும் ஆணையிடப்பட்டுள்ளது.

வட ஆற்காடு மாவட்டத்திற்கு அளிக்கப்பட்ட நிலவரி சலுகைகள் போல் பாதிக்கப்பட்ட பகுதிகளில், நிலவரி தள்ளுபடி சலுகைகள் வழங்கப்பட்டுள்ளது.

தேசிய கிராமப்புற வேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ் நடக்கும் பணிகளை துரிதப்படுத்தியும், பருவமழை தவறியதால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் புதிய பணிகளை ஆரம்பித்தும் கிராமப்புற மக்களுக்கு வேலை வாய்ப்புகள் அளிப்பதற்கும் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

9. திருச்சிராப்பள்ளி மாவட்டம் :

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் காவிரி நீர்ப்பாசன வசதி உள்ள இடங்களில் பயிர்களின் நிலைமை நன்றாக உள்ளது. மானாவாரி குளங்களில் பெரும்பாலும் தண்ணீர் இல்லை. ஆகவே மானாவாரி குளங்களில் ஆயக்கட்டுகளில் 95 சதவீதம் நிலங்கள் தண்ணீர் இல்லாமல் பாதிக்கப்பட்டுள்ளது. கிணற்று பாசன நிலங்களில் ஆங்காங்கே சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

குடிதண்ணீர் :

குடிதண்ணீர் பொறுத்த வரையில் தற்போது இது ஒரு பெரும் பிரச்சனையாக இல்லை என்றாலும் கிணறுகளில் நீர் மட்டத்தின் நிலை குறைந்துக்கொண்டே போவதால் இம்மாதக் கடைசிக்குப்பின் குடிதண்ணீர் தட்டுப்பாடு ஏற்படும் நிலை உள்ளது.



1981 பிப்ரவரி 10] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

நிவாரணங்கள் :

50 இலட்சம் ரூபாய் செலவில் கிணறுகளை ஆழப்படுத்தவும் புதிய குழாய் கிணறுகளை அமைக்கவும் ஆணை பிறப்பிக்கப் பட்டுள்ளது.

நிலவரி தள்ளுபடி சம்பந்தமாக பொதுவான ஆணை பிறப்பிக்கப்படாவிட்டாலும், மானாவரி குளங்கள் ஆயக்கட்டு சம்பந்தப்பட்ட வரை ஆங்காங்கே பயிர்களின் விளைச்சலை பார்வையிட்டு தகுதிவாய்ந்த நிலங்களுக்கு மட்டும் நிலவரி தள்ளுபடி அளிக்க மாவட்ட ஆட்சித் தலைவரால் நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

10. தருமபுரி மாவட்டம்.

தருமபுரி மாவட்டத்தில் பருவமழை வழக்கமாக பெய்வதை விட பாதியளவுக்கும் குறைவாக பெய்துள்ளது. இதனால் இம் மாவட்டத்தில் மானாவாரி குளங்களில் தண்ணீர் போதுமான அளவு வரவில்லை. கிருஷ்ணகிரி நீர்த் தேக்கத்திலிருந்து தண்ணீர் விட முடியாததால் மேற்படி நீர்த்தேக்க ஆயக்கட்டு பகுதிகளில் முதல் போகம் சுமார் 9,000 ஏக்கர்களில் விளையவில்லை, அதேபோல் சுமார் 4,000 ஏக்கர் ஆயக்கட்டை கொண்ட பாரூர் ஏரியில் தண்ணீர் வராததால் அதில் இரண்டாம் போகம் விளையவில்லை. இந்நிலையில் பயிர்களின் விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது.

குடிதண்ணீர் பொறுத்தவரையில் 382 கிணறுகளில் தண்ணீர் வற்றிவருவதால் அவற்றை ரூ. 30 இலட்சம் செலவில் ஆழப் படுத்துவதற்கும் புதிய கிணறுகள் அமைக்கவும் ஆணை பிறப் பிக்கப்பட்டுள்ளன.

நிவாரணப்பணிகள்.

கிராமப்புற வேலை வாய்ப்புத்திட்டத்தின்கீழ் பாதிக்கப் பட்ட பகுதிகளில் வேலைகளை துரிதப்படுத்தவும் புதிய பணிகளை மேற்கொண்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு வேலை வாய்ப்பு கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் இம்மாவட்டத்திற்கு கூடுதலாக 1,450 டன் அரிசி அனுமதிக்கப்பட்டுள்ளது.

11. புதுக்கோட்டை மாவட்டம் :

புதுக்கோட்டை மாவட்டத்தில் பருவமழை குறைவாகவே பெய்துள்ளது. இதனால் மேட்டூர் நீர்ப்பாசன பகுதி நீங்கலாக மற்ற இடங்களில் பயிர்கள் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளது.

குடி தண்ணீர் பற்றாக்குறையும் ஏற்பட்டுள்ளது. குடி தண்ணீர் பற்றாக்குறையை போக்குவதற்காக 64 புதிய குழாய் கிணறுகளை தோண்டவும், 201 கிணறுகளில் ஆழ்குழாய்களை அமைக்கவும், 267 கிணறுகளை ஆழப்படுத்தவும் ரூ. 17.54 இலட்சம் செலவினத்துக்கு அரசு அனுமதி அளித்துள்ளது.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிலவரி தள்ளுபடி செய்வதற்கு வடாற்காடு மாவட்டத்திற்கு வழங்கப்பட்டது போலவே ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

12. தஞ்சாவூர் மாவட்டம்.

இவ்வாண்டில் மேட்டூர் நீர்த்தேக்கத்தில் போதுமான அளவு தண்ணீர் இருந்ததால், இம்மாவட்டத்தில் பகுதிகளிலும் நல்ல மகசூலுடன் சுமார் 4.11 இலட்சம் ஏக்கர் வில் குறுவை நெல் அறுவடை செய்யப்பட்டது. 1980 செப்டம்பர் முதல் வாரத்திலிருந்து சம்பா நடவு ஆரம்பமாயிற்று மேட்டூர் தேக்கத்தில் தண்ணீர் போதுமான அளவில் இருந்ததால் விவசாயிகள் சாகுபடியை முழு வேகத்தில் செய்வதற்கு உதவியது. விவசாயிகளுக்கு ஒத்தாசையாக இருக்கும் வடகிழக்குப் பருவ மழை சாதகமாகப் பொழியாததாலும், கடந்த ஆண்டைவிட பருவ மழை மிகக் குறைந்த அளவு இருந்ததாலும், சிறப்பாக பட்டுக்கோட்டை, பேராவூரணி, ஒரத்தநாடு மற்றும் தஞ்சாவூர் வட்டங்களில் காவிரி மேட்டூர் பாசனப் பகுதி நீங்கலான பிற நீர்ப்பாசனமில்லாத புன்செய் நிலங்களில் பயிரிடப்பட்ட உணவுப் பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

தஞ்சாவூர் மற்றும் ஒரத்தநாடு வட்டங்களில் குடி தண்ணீர் தட்டுப்பாட்டை நீக்குவதற்காக தற்போதுள்ள கிணறுகளை ஆழப்படுத்தவும், புதிய கிணறுகளை தோண்டுவதற்கும் ரூ. 6.23 இலட்சம் செலவினத்துக்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

13. செங்கற்பட்டு மாவட்டம்.

செங்கல்பட்டு மாவட்டத்தில் 1980 ஆம் ஆண்டு பருவ மழை குறைவாகவே பெய்தது. கடலோரப்பகுதியான செங்கல்பட்டு, மதுராந்தகம், பொன்னேரி வட்டங்களிலும் ஸ்ரீபெரும்புதூர் வட்டத்தில் ஒரு பகுதியிலும் பருவ மழை கால தாமதமாக நவம்பரில் தான் பெய்துள்ளது. இம் மாவட்டத்தின் மேற்கு பகுதியான தாம்பரம், திருவள்ளூர் கோட்டங்களில் பெய்த மழையளவு மிகவும் குறைவு ஆயினும் இம்மாவட்டத்தில் பயிர்கள் பரவலாக முழுவதும் தீய்ந்து போய்விட்டது அல்லது காய்ந்தது என்று சொல்வதற்கில்லை.



குடிக்கு தண்ணீர்:

குடி தண்ணீர் தட்டுப்பாடு ஒரு பிரச்சனையாக இல்லை. எல்லா இடங்களிலும் குடி தண்ணீர் தட்டுப்பாடின்றி கிடைப் பதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. திருத்தணி, பள்ளி பட்டு, ஸ்ரீபெரும்புதூர் வட்டங்களை பொறுத்தவரை குடி நீர் வடிகால் வாரியத்தின் மூலம் விரிவான குடிநீர் அபிவிருத்தி திட்டம் அனுசரித்து தண்ணீர் தட்டுப்பாட்டினைத் தவிர்க்க தேவையான எல்லா நடவடிக்கையும் மேற்கொள்ளப்படும்.

14. கன்னியாகுமரி மாவட்டம்:

கன்னியாகுமரி மாவட்டத்தில் இந்த ஆண்டு பருவமழை சற்றுக்குறைவாக பெய்திருந்தபோதிலும், பயிர்களின் நிலைமை திருப்திகரமாக உள்ளது. இம்மாவட்டத்தில் உள்ள நீர்த் தேக்கங்களில் நீர்மட்டம், தென்மேற்குப் பருவ மழைக்குப் பின்னும் குறைவாகவே இருந்தபோதிலும் வடகிழக்குப் பருவ மழைக்குப் பின்னர், நீர்மட்டம் ஓரளவு அதிகரித்தது. பயிர் களின் நிலைமை திருப்திகரமாகவே உள்ளது.

குடி தண்ணீர் தட்டுப்பாடு ஒரு பிரச்சனையாக இல்லை. ஆயினும் தண்ணீர் குறைவாக உள்ள 18 கிணறுகளை ஆழப் படுத்துவதற்கு மாவட்ட ஆட்சியர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

15. மதுரை மாவட்டம் :

மதுரை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மழைக் குறை வினால் பயிர்களின் விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது. மற்றபடி நிலைமை திருப்திகரமாக உள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவர் நிலைமையைக் கண்காணித்து வருகிறார். இம்மாவட்டத்திலும் தேவையான நிவாரணங்களுக்கு அரசு தக்க நடவடிக்கை எடுக்கும்.

16. சேலம் மாவட்டம் :

மழைக் குறைவினால் இம்மாவட்டத்திலும், பயிர்களின் விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது. குடி தண்ணீர் கிணறுகளில் தண்ணீர் மட்டம் இறங்கி வருவதால் வரும் மாதங்களில் ஏற் படக்கூடிய தண்ணீர்த் தட்டுப்பாட்டை சமாளிப்பதற்குப் புதிய கிணறுகளை அமைக்கவும், ஏற்கனவே உள்ள கிணறு களை ஆழப்படுத்தவும் வேண்டிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. வேலைவாய்ப்பு தரக்கூடிய பணிகளை தேசிய கிராமப் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ்த் தீவிரப்படுத்துவதற்கும்: மற்றும் நிவாரணங்களை வழங்குவதற்கும் அரசு தக்க நட வடிக்கை எடுக்கும்.

17. திருநெல்வேலி. கோவை, பெரியார், நீலகிரி :

இம்மாவட்டங்களில் பாதகமான நிலை நிலவுவதாக அறிக்கை கள் வரவில்லை.

1981 பிப்ரவரி 10

## 6. அறிவிப்பு

### நீர்ப்பாசனத் துறையின் அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீர்ப்பாசனத் துறை அமைச்சர் மேலவையில் இருப்பதால் நீர்ப்பாசனத் துறை குறித்த திருத்த அறிக்கை பின்னால் எடுத்துக் கொள்ளப்படும்.

## 7. கவன ஈர்ப்புகள்

### செங்கல்பட்டு மாவட்ட மீனவர்களுக்கு நிவாரணம்

திரு. ப. பொன்னுரங்கம் : தலைவர் அவர்களே, விதி 54 ன் கீழ் 'செங்கற்பட்டு மாவட்டம் கரிமணல் பஞ்சாயத்தைச் சேர்ந்த திருமலைநகரில் ஏற்பட்ட மோதலில் மன்பிடி சாதனங்களை இழந்து தவிக்கும் மீனவர்களுக்கு நிவாரண உதவி அளிக்க வேண்டிய அவசியம் குறித்து'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு தலைவரவர்களே பேரவை முன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :-

அறிக்கை

செங்கற்பட்டு மாவட்டம் கரிமணல் பஞ்சாயத்திலுள்ள திருமலை நகரில் அங்குள்ள மீனவர்களுக்கும் அதன் பக்கத்துக் கிராமங்களிலுள்ள மீனவர்களுக்கும் பழவேற்காடு ஏரியில் மீன் பிடிப்பது குறித்து 1980 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 12 ஆம் நாள் அன்று கலவரம் ஏற்பட்டது. அன்று பிற்பகல் காவல்துறையினரும் வருவாய்த் துறையினரும் அங்கு விரைந்து சென்று நிலைமையைக்கட்டுப்படுத்தினர். மறுநாளே வருவாய்த்துறை மூலம் ஊர் குடியினர் அனைவருக்கும் 10 மூட்டை அரிசி பகிர்ந்தளிக்கப்பட்டது. இதினால் பாதிக்கப்பட்ட நாற்பத்தேழு குடிசைகளுக்காக ஒவ்வொன்றுக்கும் ரூபாய் 200 வீதம் மொத்தம் ரூபாய் 9,400 வழங்கப்பட்டது.



1981 பிப்ரவரி 10] (டாக்டர் இரா. நெடுஞ்செழியன்)

2. திருமலை நகர் குப்பத்தில் வசிக்கும் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு மேலும் உணவும், உடையும் ரூபாய் 15,015 செலவில் அளிப்பதற்கான மீன்துறை இயக்குனரின் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையிலுள்ளது.

3. மீன்பிடி சாதனங்களுக்கு ஏற்பட்ட இழப்பு பற்றிய விவரங்களை மீன்துறை இயக்குநர் சேகரித்து வருகிறார், சாதாரணமாக இயற்கையின் சீற்றத்தாலும், விபத்துக்களாலும் மீனவர்களுக்கு ஏற்படும் சேதங்களுக்கு அரசு தக்க நிவாரணம் அளிக்கிறது. ஆனால் திருமலை மீனவர்களுக்கு உடனடியாக ஏற்பட்டுள்ளது. ஆதலால் முழு விவரங்கள் கலவரத்தால் சேதம் ஏற்பட்டுள்ளது. ஆதலால் முழு விவரங்கள் கிடைக்கப்பெற்றதும் மீனவர்களுக்கு நிவாரணம் அளிப்பதுபற்றி விரைவில் அரசு பரிசீலனை செய்து ஆவன செய்யும்.

திரு. ப. பொன்னுரங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பகுதி செங்கற்பட்டு மாவட்டத்தில் பொன்னேரி தொகுதியைச் சேர்ந்த திருமலைநகர் என்ற பகுதியாகும் அந்தப் பகுதிக்கு சுலபமாக யாரும் செல்ல முடியாது. என்னையும், அந்தத் தொகுதியிலிருந்து வரக்கூடிய யாராவது ஒரு உறுப்பினரையும் தவிர மற்றவர்கள் சுலபமாகப் போக முடியாது. அது தமிழகத்தைச் சேர்ந்ததாக இருந்தாலும், தமிழகப் பகுதியிலேயிருந்து நீராலே பிரிக்கப்பட்டு, 3, 4 மைல்களுக்கு பழவேற்காடு ஆற்று நீராலே பிரிக்கப்பட்டிருக்கிறது. தீவுபோல் இருக்கிறது. நான் கூட அங்கே எப்படிப் போனேன் என்றால்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் எப்படிப் போனீர்கள் என்றெல்லாம் சொல்லிக் கொண்டு போனால் நீண்டு கொண்டே போகும். உங்களுக்கு 2 கேள்வி கேட்க அனுமதியுண்டு. அதோடு நிறுத்திக் கொள்ளுங்கள்.

திரு. ப. பொன்னுரங்கம் : தலைவரவர்களே, இந்த இடத்திலே கலாமிட்டீஸ் ஏற்பட்டால் கூட கடன் வாங்க முடியாது. அப்படி ஒரு தீவு போன்ற இடம். இங்கே 50 மீனவர் குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அவர்களுக்கு நீங்கள் ரூ. 200 தந்து இருக்கிறீர்கள். ரெவின்யூ டிபார்ட்மென்ட் மூலமாக. அதுகூட வீடு கட்டத்தான் கொடுத்திருக்கிறீர்கள். தொழிற்கருவிகள் வாங்குவதற்கு எந்தவித உதவியும் செய்யப்படவில்லை. இரண்டு

மாதங்களாகியும் இன்னும் நீங்கள் எதுவும் செய்யவில்லை. கடந்த 12 ஆம் தேதி நடைபெற்றது, இயற்கையின் சீற்றத்தால் ஏற்பட்டதல்ல என்று சொல்லப்படுகிறது—இயற்கையின் சீற்றத்தால் ஏற்பட்டால்தான் தரவேண்டுமென்று கன்வென்ஷன் நமக்கு இல்லை.

முன்பே ஒருமுறை பழவேற்காடு பகுதியில் கொடுத்திருக்கிறோம். முந்திய அ.தி.மு.க. அரசாட்சி காலத்திலே கொடுக்கப்பட்டிருக்கிறது. முன்மாதிரி இருக்கிறது. எனவே அவர்களுக்கு தொழிற்கருவிகள் வாங்குவதற்கு உதவி செய்து, எவ்விதத் தொழிலும் செய்ய முடியாமல் இருக்கும் அந்தத் தொழிலாளிகளுக்கு இந்த அரசு உதவி செய்வதன் மூலம் அவர்கள் வறுமையை நீக்கி, கொடுமையில் இருந்து அவர்களைக் காப்பாற்ற ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, விவரக் குறிப்பு அறிக்கையிலே உடனடியாக செய்யப்பட்ட உதவிகளைப் பற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது. மீன்பிடி சாதனங்களுக்கு ஏற்பட்ட இழப்பு பற்றிய விவரங்களெல்லாம் மீன்துறை இயக்குநரை கேட்டிருக்கிறோம். அவர்களிடமிருந்து அறிக்கை வந்தவுடன் அரசு உரிய பரிசீலனை செய்யும். இயற்கையின் சீற்றத்தால் ஏற்பட்ட இழப்புகளுக்குத்தான் நிவாரணம் தரலாம் என்று கன்வென்ஷன் இருந்தாலும் கூட, கலவரத்தினால் பாதிக்கப்பட்டவர்கள், ஏழை மக்களின், ஏழை மீனவர்களின் துயர் துடைப்பதற்காக இந்த அறிக்கை வந்த பிறகு உரிய அனுதாபத்துடன் இந்தப் பிரச்சினை குறித்து கவனிக்கும். நிவாரணம், பரிசீலனை செய்த பிறகு முடிவு செய்யும்.

**திரு. ப. பொன்னுரங்கம் :** தலைவரவர்களே, நம்முடைய பிஷரீஸ் டைரக்டர் விவரங்களைக் கலெக்ட் பண்ணிக் கொண்டிருப்பதாக அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். கடந்த திங்களே, நானே அமைச்சரைப் பார்த்தேன். அது டைரக்டரிடம் இருந்து, கலெக்டர் ரிப்போர்ட்டாக வந்து, டைரக்டரிடம் வந்து, செக்ரட்டரியிடம் போன மாதமே வந்துவிட்டது. நான் தங்களையே பார்த்தேன். நீங்கள்தான் எனக்கு டைரக்ஷன் தந்து செக்ரட்டரியைப் பார் என்று சொன்னீர்கள். அவர் உடனே தன்னுடைய சபார்டினேட்டை பார்த்து, அவரை அழைத்துச் சொன்னார். ஒரு மாதம் ஆகிறது. இது வரையில் தரவில்லை.

(முற்பகல் 10-50)

மேலும் அவர்கள் குடிசை போட்டுக் கொண்டு வாழ்கிறார்கள். தமிழ்நாடு முழுவதும் மீனவர்களுக்காக வீடுகள் கட்டுகிறோம் என்று அரசாங்கம் சொல்கிறது. கட்டுகிறார்களா



இல்லையா என்பது எனக்குத் தெரியாது. ஆனால் இந்தப் பகுதியில் இருக்கிற மக்கள் கஷ்டப்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். இரண்டு கிராமத்தைச் சேர்ந்தவர்களை 22 கிராம மக்கள் எதிர்க்கிறார்கள் என்பதால் அந்தப் பகுதி மக்களின் குடிசைகள் தீக்கிரையாகாத வகையில் தமிழகத்தில் இராமநாதபுரம் பகுதியில் கட்டியிருப்பதாக சொல்லப்பட்டிருப்பதுபோல், அதற்காக ஒரு கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதாகச் சொல்வது போல், இந்தப் பகுதிக்கும் முன்னுரிமை கொடுத்து, நல்ல வீடுகள் கட்டிக் கொடுக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** பேரவைத் தலைவர் அவர்களே, யார் யாருக்கு எவ்வளவு இழப்பு ஏற்பட்டு இருக்கிறது என்பதை அறிந்து நான் நிவாரணம் அளிக்க முடியும். அதற்கான தகவல்களை இயக்குநரிடமிருந்து கேட்டு இருக்கிறோம். வந்தவுடன் விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும். அப்படி வருவதற்குக் காலதாமதம் ஆனால், அரசே வரவழைப்பதற்கு நடவடிக்கை எடுத்து, ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) காட்பாடி, குடியாத்தம் பகுதிகளில் கால்நடைகள் நோயினால் பாதிக்கப்பட்டிருப்பது

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** "வட ஆற்காடு மாவட்டம் காட்பாடி, குடியாத்தம் பகுதிகளில் கால்நடைகளுக்குத் திடீரென நோய் ஏற்பட்டிருப்பது குறித்து" திருவாளர்கள் சொரணம், கே. ஆர். சுந்தரம், பி. ஈஸ்வரமூர்த்தி, ரா. கிருஷ்ணன், என். ஏ. பூங்காவனம் ஆகியோர் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

**திரு. கே. ஆர். சுந்தரம் :** தலைவர் அவர்களே, "வட ஆற்காடு மாவட்டத்தில் காட்பாடி, குடியாத்தம் பகுதிகளில் கால்நடைகளுக்குத் திடீரென நோய் ஏற்பட்டு இருப்பது குறித்து" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

வடார்க்காடு மாவட்டம், காட்பாடி, குடியாத்தம் மற்றும் கள்ளியூர் பகுதிகளில் அடங்கிய 19 கிராமங்களில் கால்நடைகளுக்கு கோமாரி நோய் பரவி இருந்தது. அந்நோய் குடியாத்தம் பகுதியில் 1980 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 25 ஆம் நாள் முதல் 1981 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 31 ஆம் நாள் வரையிலும், காட்பாடி பகுதியில் 1981 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 10 ஆம் நாள் முதல் 1981 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 26 ஆம் நாள்வரையிலும், மற்றும் கள்ளியூர் பகுதியில் 1981 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 16 ஆம் நாள் முதல் 1981 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 31 ஆம் நாள் வரையிலும் பரவி இருந்தது.

2. காட்பாடி அருகாமையில் உள்ள பிரும்மபுரம், சேலூர் மற்றும் அரும்பருதி கிராமங்களில் 227 கால்நடைகள் கோமாரி நோயினால் பாதிக்கப்பட்டதில், 26 கன்றுகள் மற்றும் 3 பெரிய கால்நடைகள் இறந்துவிட்டன. குடியாத்தம் மற்றும் கள்ளியூர் பகுதிகளில் 350 கால்நடைகள் மேற்கூறிய நோயினால் பாதிக்கப்பட்டதில் 89 கன்றுகள் மற்றும் 34 பெரிய கால்நடைகள் இறந்துவிட்டன.

3. கோமாரி நோய் மேற்கூறிய பகுதிகளில் பரவி இருந்த விவரம் கால்நடைப் பராமரிப்புத்துறையின் கவனத்திற்கு 5-1-1981 அன்றுதான் கொண்டு வரப்பட்டது. உடனே சிறப்பறிஞர் (நோய் ஆய்வு) மற்றும் வேலூர் கால்நடைப் பராமரிப்பு உதவி இயக்குநர் (நோய் புலனாய்வுக் குழு) நோய் பரவியுள்ள பகுதிகளுக்கு சென்று காட்பாடி விரிவாக்க உதவி கால்நடை மருத்துவர்க்கு சிகிச்சை அளிக்கும் முறைகள் மற்றும் நோய் மேலும் பரவாமல் தடுப்பதற்குரிய நடவடிக்கைகளைப்பற்றி ஆலோசனைகளை கூறினார்கள். இராணிப்பேட்டை நோய்த் தடுப்பு மருந்து நிலையத்திலிருந்து இரண்டு ஆராய்ச்சி அலுவலர்கள் 5-1-1981 முதல் 3-2-81 முடிய பல நாட்களில் நோய் பரவிய இடங்களுக்கு சென்று நோய்வாய்ப்பட்ட கால்நடைகளினின்று நோய்க்கான காரணங்களை அறிவதற்காக தேவையான சோதனைப் பொருட்களை எடுத்து அவற்றை பரிசோதனைக்காக இராணிப்பேட்டை நோய்த் தடுப்பு மருந்து நிலையத்திற்கு அனுப்பினார்கள். நோய்ப் பற்றிய நுண்கிருமி எது என அறியும் ஆய்வு பரிசோதனையில் உள்ளது. ஆனால், நோயின் தோற்றம், அறிகுறி, கால் மற்றும் வாய்ப் பகுதிகளில் காணப்படும் புண்கள் இவற்றை கருத்திற்கொண்டு கோமாரி நோய் என அறியப்பட்டது.

4. தரப்படவேடு, பிரம்மாபுரம் மற்றும் சேலூர் கிராமங்களில் கோமாரி நோயினால் பாதிக்கப்பட்ட முறையே 56, 45 மற்றும் 88 கால்நடைகளுக்கு தடுப்பூசிகள் போடப்பட்டன. 22-1-1981 முதல் 2-2-1981 வரை காட்பாடி மருத்துவமனையில் 33 கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. தற்போது நோய் கட்டுப்





பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. இந்நோய் எளிதில் தாய் கால்நடைகளிலிருந்து இளங்கன்றுகளிக்கு பரவி விடுமாதலால் அவைகளை தாய்ப்பால் அருந்த அனுமதிக்க வேண்டாமென்று பொதுமக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

5. கோமாரி நோய்க்கான தடுப்பூசி சாதாரணமாக இந்நோய் வருவதற்கு முன்னே முன் எச்சரிக்கையாக போடப்பட வேண்டும். இல்லாவிடில் இந்நோய் விரைவாக பரவி உடனிருக்கும் மற்ற கால நடைகளையும் பாதிக்கும். இந்நோய்க்கான தடுப்பூசி ஆறு மாத காலத்திற்கு மட்டுமே நோய் எதிர்ப்பு சக்தியை கால்நடைகளுக்கு அளிக்கும். எனவே மீண்டும் மீண்டும் தடுப்பூசியை போட வேண்டியது அவசியமாகும்.

6. கோமாரி நோய் தடுப்பூசி கால்நடைப் பராமரிப்புத் துறையினால் உற்பத்தி செய்யப்படுவதில்லை. இவ்வூசி மருந்தின் விலை அதிகமாக உள்ளதால் அரசு இலவசமாகப் போடுவதில்லை. எனவே, விவசாயிகள் தங்கள் கால்நடைகளை இந்நோயிலிருந்து காப்பாற்றிக் கொள்வதற்கு தடுப்பூசிகளை போடுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். விருப்பமுள்ள விவசாயிகள் இத்தடுப்பூசி மருந்தினை வாங்கி தங்கள் கால்நடைகளுக்கு போடுகின்றனர். இவ்வூசி மருந்து டோஸ் ஒன்றின் விலை ரூபாய் 8 முதல் ரூபாய் 9 வரை வெளியில் விற்கப்படுகிறது. சிறு/குறுநில விவசாயிகள் மற்றும் வேளாண்மைத் தொழிலாளர்கள் முதலியோரின் நலன் கருதி மத்திய அரசு உதவியுடன் கோமாரி நோய்க்கான தடுப்பூசி திட்டத்தை மாநில அரசு செயல்படுத்தி வருகிறது. மேற்படி திட்டத்தின்படி தடுப்பூசி மருந்தின் விலையில் 50 சதவீதத்தை விவசாயிகளிடமும், வசூல் செய்து மீதி 50 சதவீதம் மாநில மற்றும் மத்திய அரசால் மானியமாகவும் வழங்கப்படுகின்றன. 1979-80 ஆம் ஆண்டு இந்நோய்க்கான தடுப்பூசி மருந்து 66,264 டோஸ் வாங்கப்பட்டு அவற்றில் 2,000 டோஸ்கள் வடார்க்காடு மாவட்டத்தில் உபயோகிக்கப்பட்டன.

திரு. கே. ஆர். சுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையிலே குறிப்பிட்டு இருக்கிற விஷயங்களைப் பார்த்ததில் அரசுக்கு முழுமையாகத் தகவல் வரவில்லை என்று அறிகிறேன். காட்பாடி வட்டாரத்தில் 3 பெரிய கால்நடைகள் இறந்து இருக்கின்றன. என்று அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. காட்பாடி என்னுடைய சொந்த ஊர். என்னுடைய வீதியிலும், பக்கத்து வீதியிலும் கிட்டத்தட்ட 10-க்கு மேற்பட்ட கால்நடைகள் இறந்து இருக்கின்றன. அவைகளில் பசுமாடுகள் 4,000 5,000 ரூபாய் பெறுமானவை இறந்து இருக்கின்றன. அதன் காரணமாக ஏழை எளிய மக்கள் பால் கறந்து விற்று ஜீவனம் செய்துகொண்டு இருந்தவர்கள் கஷ்டப்படுகின்றனர். அதைப்

போன்று, குடியாத்தம், கள்ளிக்குடி பகுதியிலும் 300-க்கும் மேற்பட்ட மாடுகள் இறந்து இருக்கின்றன. அப்படியிருந்தும் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. கடந்த 22-ஆம் தேதியே நான் அங்கேயுள்ள கால்நடை அதிகாரிகளைச் சந்தித்து இது குறித்து சொல்லியிருக்கிறேன். ஆகவே, இந்த நோயைத் தடுக்க உடனடியாக நடவடிக்கை எடுப்பதோடு மட்டுமல்லாமல், அந்த ஏழை எளிய மக்களுக்கு அந்த நோய் தடுப்பதற்கான மருந்தை ஏப்ரல், மே மாதங்களில் அளிப்பதுபோல் குறைந்த விலையில் விநியோகம் செய்வதற்கும் அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்குக் கிடைத்த விவரப்படி தரப்படவேடு, களஞ்சூர், பிரும்மபுரம், சேவூர் மற்றும் அரும்பருதி கிராமங்களில் 277 கால்நடைகள் கோமாரி நோயினால் பாதிக்கப்பட்டதில், 26 கன்றுகள் மற்றும் 3 பெரிய கால்நடைகள் இறந்துவிட்டன என்றும், குடியாத்தம் பகுதியில் நல்லூர்ப் பேட்டை, சந்தைப்பேட்டை, சாமுண்டீஸ்வரிப்பேட்டை, கொண்டசமுத்திரம், சேதுத்துறை போன்ற பகுதிகளில் 170 கால்நடைகள் பாதிக்கப்பட்டதில் 58 கன்றுகளும், 32 கால்நடைகளும் இறந்துபோய் விட்டன. அதேபோன்று, கள்ளியூர் பகுதியைச் சேர்ந்த ஆர். வெங்கடாபுரம், ஆர். கிருஷ்ணாபுரம், செட்டிக்குப்பம், சாராகுப்பம் போன்ற பகுதிகளில் 180 கால்நடைகள் பாதிக்கப்பட்டதில் 21 கன்றுகளும், 2 பெரிய கால்நடைகளும் இறந்துபோய் விட்டன என்று அரசுக்குத் தகவல் கிடைத்துள்ளது.

மேலும், உறுப்பினர் அவர்கள் தடுப்பு ஊசி மருந்துகளை குறைவான விலைக்குக் கொடுத்தால் நன்றாக இருக்கும் என்று கூறினார்கள். கோமாரி நோய்க்குத் தடுப்பு ஊசி மருந்து அரசால் தயாரிக்கப்படவில்லை. தமிழகத்திலே கூட தயாரிக்கப்படவில்லை. பம்பாய் ஹோசஸ்ட் கம்பெனியிலும், பெங்களூரில் உள்ள இந்திய கால்நடை ஆராய்ச்சி நிறுவனத்திலும், பூனாவில் உள்ள பாரத் ஆக்ரோ நிறுவனத்திலும் தயாரிக்கப்படுகிறது. அதனுடைய விலை மிக அதிகமாக இருப்பதால் எல்லோருக்கும் அறிவுரை வழங்க முடியுமே தவிர முன் ஏற்பாடாக தடுப்பு ஊசி போட இயலாது. இருந்தாலும், கால்நடைகளைக் கவனத்தில் கொண்டு சிறு விவசாயிகளுக்கு அந்த மருந்து விலையில் 50 சதவீதத்தை மத்திய அரசு உதவியுடன் மாநில அரசும், 50 சதவீதத்தை சிறு விவசாயிகளும் ஏற்றுக்கொள்ளச் செய்து, தடுப்பு ஊசி போடப்பட்டு வருகிறது. அதனுடைய விலை வெளியில் 8 ரூபாயிலிருந்து 9 ரூபாய் வரையில் இருக்கிறது.

**திரு. கே. ஆர். சுந்தரம் :** தலைவரவர்களே, இந்த மருந்து தமிழகத்தில் தயாரிக்கப்படவில்லை என்று சொன்னார்கள். கால்நடைகளின் முக்கியத்துவத்தைக் கருதி தமிழகத்தில் தயாரிக்க



ஏற்பாடு செய்யப்படுமா? கால்நடைகள் இறந்துவிட்ட காரணத்
தினால் பாதிக்கப்பட்ட ஏழை மக்களுக்கு அரசு ஏதாவது நிவா
ரணம் அளிக்க முன்வருமா?

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** தலைவரவர்களே
இந்த மருந்து தமிழ்நாட்டில் தயாரிக்கப்படுமா என்று கேட்கின்
றார்கள். அதுபற்றி அரசு ஆலோசித்துத்தான் முடிவு செய்ய
வேண்டும். மேலும், பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டயீடு
கொடுக்கப்படுமா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்
டார்கள். பாதிக்கப்பட்ட விவசாயிகள் "இன்ஷூர்" செய்
திருந்தால் கண்டிப்பாக அவர்களுக்கு நஷ்டயீடு கொடுக்கப்படும்
என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. என். ஏ. பூங்காவனம் :** தலைவரவர்களே, என்னுடைய
காட்பாடியில் 4 அல்லது 5 கிராமங்
தொகுதியாகிய ஏற்பட்டுள்ளதாக அமைச்சரவர்கள்
களில்தான் இந்த நோய் ஊராட்சி ஒன்றியத்தில் 28 பஞ்
சொன்னார்கள். காட்பாடி பஞ்சாயத்துக்களிலுமே
சாயத்துக்கள் இருக்கின்றன. அந்த 28 இருந்துவருகிறது. அதே மாதிரி, அதற்
இந்த நோய் பரவலாக ஊராட்சி ஒன்றியத்தில் 39 பஞ்சாயத்
குப் பக்கத்திலே இருக்கிற அங்கேயும் ஒன்றிரண்டு கிராமங்களில்
துக்கள் இருக்கின்றன. இடங்களிலும் இந்த நோய் இருக்கிறது.
தவிர, மற்ற எல்லா கட்டுப்படுத்தப்படவில்லை. கால்நடை பரா
இன்னும் சரியாக இந்த நோய்க்கு மருந்து கேட்டால்— இங்கே
மரிப்பு நிலையத்தில் 8 ரூபாய், 9 ரூபாய் என்று சொல்கிறார்கள்;
அமைச்சரவர்கள் கேட்டால் 100 ரூபாய் கேட்கிறார்கள். இந்த
அங்கே போய் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?
நோயை முழுவதுமாக இறந்து விட்டன. அந்த கால்நடைகளை வாங்க
கால்நடைகள் மக்கள் 5,000 ரூபாய், 6,000 ரூபாய் கடன் பெற்
ஏழை எளிய எத்தனையோ நல்ல காரியங்களைச் செய்கிற
றிருக்கிறார்கள். அந்த ஏழை மக்களுக்கு ஏதாவது மானியம் தர
இந்த அரசு இந்த தடுப்பு மருந்து எல்லோருக்
முன்வருமா? உடனடியாக ஏற்பாடு செய்யப்படுமா?
கும் கிடைக்க

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** தலைவரவர்களே
அது பற்றி என்னிடம் விளக்கம் இல்லை. ஆகையால் அதுபற்றி
அரசு பரிசீலிக்கும் என்று மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 8. அமைச்சரவையின் கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானம் — விவாதம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, அமைச்சரவை
யின் தொழிலாளர் விரோதக் கொள்கையைக் கண்டிக்கும் தீர்
மானத்தின் மீது விவாதம் தொடரும். இன்று எல்லாக் கட்சித்
தலைவர்களும் பேச இருக்கிறார்கள். பிறகு, அமைச்சர் பதில்

சொல்ல வேண்டும். அதன் பிறகு, இந்தத் தீர்மானத்தை முன்மொழிந்த திரு. உமாநாத் அவர்கள் பதிலுரை கூறவேண்டியிருக்கிறது. அதற்கு மீண்டும் அமைச்சர் பதில் சொல்ல வேண்டியிருந்தால் பதில் சொல்லி, ஓட்டெடுப்பு தேவைப்பட்டால் அதையும் செய்ய வேண்டியிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்கள் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கின்ற வகையில் 15 நிமிடங்களுக்கு மேல் எடுத்துக்கொள்ளாமல் பேச வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். முதலில் திரு. எல். இளையபெருமாள் அவர்கள் பேசுவார்கள்.

[முற்பகல் 11-00]

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதில் சொல்ல வேண்டி இருக்கின்றது என்று தாங்கள் சொன்னீர்கள். சீப் மினிஸ்டரின் தலைமையின் கீழ் இயங்கி வருகின்ற கேபினட் இது. அமைச்சரவர்கள் வேண்டுமானால் இன்டர்வீன் பண்ணலாமே தவிர, பதில் கொடுக்க வேண்டியது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்தான். இல்லாவிட்டால் அது இந்த அவைக்கு மரியாதை கொடுப்பதாகாது. அது முறையும் ஆகாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தந்த இலாக்கா சம்பந்தப்பட்ட அமைச்சர்களே பதில் சொல்லலாம். முதலமைச்சர் தான் பதில் சொல்ல வேண்டும் என்பதல்ல.

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, ஒரு குறிப்பிட்ட மினிஸ்டர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் என்று கொண்டு வந்திருந்தால் அவர்கள் பதில் சொல்லலாம். அவ்வாறு பதில் சொல்வதில் பொருள் உண்டு. ஆனால், மாண்புமிகு முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களின் தலைமையின் கீழ் இயங்குகின்ற அரசாங்கத்தினுடைய கொள்கைக்கு கண்டனம் தெரிவிக்கின்ற முறையிலே இங்கே தீர்மானம் கொண்டு வந்திருப்பதன் காரணத்தால் கேபினட்டின் தலைமைப் பொறுப்பிலே இருக்கின்ற முதலமைச்சர் தான் பதில் சொல்ல வேண்டும்.

The Hon. Minister can intervene. I do not object to it..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சரவைக்கு கலக்டிவ் ரெஸ்பான்சிபிலிடி இருக்கின்றது. ஆகவே, இத் தீர்மானத்திற்கு சம்பந்தப்பட்ட அமைச்சர் பதில் சொல்ல இருக்கின்றபோது முதலமைச்சர்தான் பதில் சொல்ல வேண்டும் என்பது ஒரு பிரச்சினை அல்ல.





திரு. ரா. உமாநாத் : நான் ஒன்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன். முன்பொருமுறை சென்ஷூர் மோஷன் கொண்டுவரப்பட்டபோது, அதாவது தொழிலாளர் விரோதக் கொள்கை சம்பந்தமாக சென்ஷூர் மோஷன் கொண்டுவரப்பட்டபோது இப் மினிஸ்டர்தான் ரிப்ளை பண்ணினார்கள். ஆனால், இப்பொழுது ரிப்ளை பண்ண மாட்டேன் என்று சொல்வதன் காரணம் என்ன ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதலமைச்சர் பதில் சொல்கிறாரா, இல்லையா என்பதொன்றும் பெரிய பிரச்சினை அல்ல. மேலும், அவர்களை, தான் பதில் சொல்லியாக வேண்டும் என்று வற்புறுத்த இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்

திரு. எல். இளையபெருமாள் : பேரவைத் தலைவரவர்களே, தொழிலாளர் விரோதக் கொள்கை சம்பந்தமாக இங்கே எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்ற விவாதத்தின் மீது நமது அரசின்..... (குறுக்கீடு) நாம் எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் தமிழக அரசு என்ற முறையில் நம்முடைய அரசுதானே— ஆகவே இங்கே கொண்டு வரப்பட்டிருக்கின்ற தீர்மானத்தின்படி தொழிலாளர்களை மட்டுமல்ல, பொதுமக்களுடைய கருத்துக்களையும் இந்த அரசு அலட்சியப்படுத்துகிறது என்று நான் இங்கே சொல்லித்தான் ஆகவேண்டி இருக்கிறது.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. வி. வி. சுவாமிநாதன் தலைமை

பொதுமக்கள் கூறுகின்ற கருத்துக்கள் மட்டுமல்ல, எதிர்க் கட்சித் தலைவர்கள் கூறுவதில் உள்ள நல்ல கருத்துக்களையும் எடுத்துக் கொள்வதிலே இந்த அரசு காலதாமதம் செய்வதால் இந்த அரசுக்கும், அதிகாரிகளுக்கும் கெட்ட பெயர் ஏற்படுகின்றது. இந்த அரசு பொதுமக்களின் நம்பிக்கையை இழக்க வேண்டிய நிலையிலே நிறுத்தப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன். தென் கிழக்கு ஆசியாவிலே தோற்றுவிக்கப்பட்ட பி. அண்ட். சி. மில் 104 ஆண்டுகளாக நடந்து கொண்டிருக்கிறது. ஆனால் இந்த மில் தொழிலாளர்கள் 13 ஆயிரம் பேர் அவதிப்படுகின்றார்கள். என்ற அவல நிலையை அரசாங்கமும் ஒத்துக் கொண்டிருக்கிறது. மத்திய அரசும் ஒத்துக் கொண்டிருக்கிறது. தொழிலாளர் தலைவர்கள் எல்லாம் இதற்காக பல முறை நம்முடைய தமிழக அரசை நாடி இருக்கிறார்கள். அப்படி நாடுகிறபோது எல்லாம் ஆவன செய்வோம் என்று சொல்லிவிட்டு இதுவரை எந்தவிதமான முடிவுக்கும் வராததுதான் மிகவும் வருந்தத்தக்க செயல். அந்த மில் 3 ஆண்டுகளுக்கு முன்பு தமிழக அரசால் நியமிக்கப்

[திரு. எல். இளையபெருமாள்] [1981 பிப்ரவரி 10

பட்ட ஒரு அதிகாரியின் நிர்வாகப் பொறுப்பிலே இருக்கின்ற அளவுக்கு கட்டளையிடப்பட்டிருந்தது. ஆகவே அப்போது அரசின் சார்பிலே அரசு அதிகாரியால் நடத்தப்பட்டபோது அந்த மில் லாபகரமாக நடத்தப்பட்டது என்று அறிக்கையிலே இருக்கின்றது. அப்படியானால் இன்றைக்கு ஏன் இந்த அவல நிலை ஏற்பட்டது என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆனால் இந்த விஷயத்தில் மாநில அரசு மத்திய அரசைச் சுட்டிக் காட்டினாலும், எங்களுக்குத் தகவல் இல்லை என்று அவர்களது அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாக பத்திரிகையில் வருகின்றது. நாம் பத்திரிகைச் செய்திகளை முழுவதும் நம்பவில்லை என்று சொன்னாலும் ஓரளவுக்கு அதை நம்ப வேண்டி இருக்கின்றது. ஆகவே இந்தத் தமிழக அரசு என்ன நிலை எடுத்தது, எந்த நிலையில் மத்திய அரசை என்ன வகையிலே அணுகியது, அதற்கு மத்திய அரசின் பதில் என்ன என்பதை எல்லாம் அறிய விரும்புகிறேன்.

நிச்சயமாக நம்முடைய தொழில் அமைச்சர் மட்டும் இவைகளுக்கான விடைகளைச் சொல்ல முன் வருவதோடல்லாமல், நமது முதலமைச்சர் அவர்களும் சேர்ந்து பங்கெடுத்தால் உறுதுணையாக இருக்கும், ஆகவே நமது முதலமைச்சர் அவர்கள் இவைகளுக்கு விடை கூற முன் வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நான் தொழில் அமைச்சர் அவர்களை நன்றாக அறிந்தவன். அவர் மீது எந்தவித குறையும் கூறவேண்டும் என்பதற்காக இதை நான் சொல்லவில்லை. அதை அவரும் அறிவார் என்று நம்புகிறேன். நாட்டில் இன்றைக்கு இருக்கக்கூடிய அவல நிலைமைகளில், முதலமைச்சர் அவர்கள் பங்கேற்கிறார். அவைகளுக்கு பதில் சொல்லத் தயாராக இருக்கிறார் என்கிற முறையில், முதலமைச்சர் அவர்களும், தமிழக அரசும் இதனை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தொழிலாளர் நலச் சட்டங்கள் எவ்வளவோ இருக்கின்றன. இல்லையென்று சொல்லவில்லை. ஆனால், சட்டங்கள் தாம் இருக்கின்றனவே தவிர அவற்றை அமுல் நடத்துவதில் அரசும், அரசு சார்பாக அதிகாரிகளும் சரியாக நடவடிக்கை எடுக்கிறார்களா என்று பார்த்தால், இல்லை என்று தான் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது. குறிப்பாக சில்ட்ரன்ஸ் ஆக்ட் என்று ஒரு சட்டம்—விவசாயக் குழந்தைகளுக்காகவே கொண்டு வரப்பட்ட சட்டம் ஒன்று இருக்கிறது. அது 1951 ஆம் ஆண்டு கொண்டு வரப்பெற்ற சட்டம். அந்தக் குழந்தைகள் சட்டம் அமுல் நடத்த பெறவே இல்லை என்று நான் நிச்சயமாகக் குற்றம் சாட்டுவேன் ஏனென்றால் விவசாயத் தொழிலாளர்களின் குழந்தைகள், 10, 12 வயதிற்கு உட்பட்டவர்கள் வயலுக்கு வேலைக்கு வரக் கூடாது என்று அந்தச் சட்டத்தில் இருக்கிறது. ஆனால் இன்று



1981 பிப்ரவரி 10] [திரு. எல். இளையபெருமாள்]

அரசு பண்ணைகளிலும் சரி, தனியார் பண்ணைகளிலும் சரி அத்தகைய விவசாயிகளின் குழந்தைகள் கடுமையான வேலைகளுக்கு அனுமதிக்கப் பெறுகிறார்கள். அந்தச் சட்டம் இயற்றப் பெற்றிருந்தும் 1951 ஆம் ஆண்டு முதல் இன்று வரையிலும், அது அமுல் நடத்தப் பெறவில்லை. அதை அமுல் நடத்தாதவர்களின் மீது அரசாங்கம் எந்த வித நடவடிக்கையையும் எடுக்கவில்லை என்பதையும் குறிப்பிட்டுச் சுட்டிக் காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அதேபோல் குறைந்த பட்சக் கூலி நிர்ணயச் சட்டம் 1948 ஆம் ஆண்டு கொண்டு வரப்பெற்றது. மூன்றுமுறைகள் அமெண்ட் செய்யப் பெற்றது. ஆனால் இதற்குக்கூடச் சொல்கிறேன். இந்த வகையான தொழிலாளர் நலச் சட்டம் இயற்றப் பெற்றிருக்கிறது என்று சொல்லிக் கொள்கிறோமே தவிர, அந்தச் சட்டத்தில் உள்ளவாறு எந்த இடத்திலும் அந்த விவசாய கூலிகளுக்கு கூலி கொடுக்கப் பெறுவதில்லை. அது அரசுப் பண்ணையானாலும் சரி, பெரிய நிலச் சுவான்தார்களின் விவசாயப் பண்ணையானாலும் சரி—அந்தச் சட்டத்தில் நிர்ணயித்தவாறு அவர்களுக்குக் கூலி கொடுக்கப் பெறுவது இல்லை என்பதோடு மட்டுமல்லாமல், அப்படிக் கொடுக்காமல் சட்டத்தை ஏய்ப்பவர்கள் மீது ஏதாவது நடவடிக்கை எடுத்தார்களா என்று கேட்டால் இல்லை என்பதுதான் விடையாக வருகிறது. அப்படி அவர்கள் கூலி உயர்வு கேட்டாலும் அவர்களை விட, குறைந்த கூலிக்கு வருகின்றவர்களை வேலைக்கு வைத்துக் கொண்டு, அந்த உண்மையான விவசாயிகளை, அரசு இயற்றிய சட்டத்தின்படி வேலைக்கு சேர்க்கப் பெற்ற அந்த விவசாயிகளை நடுத்தெருவில் அலைய விட்டு விடுகிறார்கள் என்பது தான் இன்று நிலவும் அவல நிலைமை என்பதையும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

தென்னாற்காடு மாவட்டத்தில் காட்டுமன்னார் கோவில் தாலுக்காவில் காவலங்குடி என்ற கிராமத்திலே இருக்கிற விவசாயக் கூலிகள் அந்தச் சட்டத்தில் குறிப்பிடப் பெற்றிருக்கும் அளவிற்கு தங்கள் கூலியை உயர்த்த வேண்டும் என்று அப்போதிருந்த டெபுடி தாசில்தார் அலுவலகத்தில் மனு கொடுத்தார்கள். இப்போது அது தாசில்தார் அலுவலகமாக மாற்றப் பெற்று விட்டது. ஆனால் அப்போது அங்கிருந்த டெபுடி தாசில்தார் அவர்கள் பண்ணை முதலாளிகளையும், இவர்களையும் கூப்பிட்டு விசாரணை செய்து, சட்டப்படியான கூலியை இவர்களுக்குக் கொடுத்தாக, வேண்டும். பண்ணை முதலாளிகள் செய்வது கொடுமையிலும் கொடுமை. அது தடுக்கப்பட வேண்டும் என்று கேட்டு உத்தரவிற்காக தாசில்தார் அலுவலகத்திற்கு அனுப்பினார். தாசில்தார் சப்-கலெக்டருக்கு அனுப்பி வைத்தார். சப்-கலெக்டர், கலெக்டருக்கு அனுப்பி வைத்தார். அதற்குள் அந்த நிலச் சுவான்தார்கள் உயர்நீதி மன்றத்தில் ஸ்டே வாங்கி விட்டார்கள்.

1977 ஆம் ஆண்டிலிருந்து 1980 ஆம் ஆண்டு வரை அரசு அதிகாரிகளும், சம்பந்தப்பட்ட இலாகாக்களும் இதில் தங்கள் கடமையைச் செய்தார்களா? இல்லையே. ஆகவே அரசு தொழிலாளர் வர்க்கத்தினரை சட்டம் இயற்றியிருக்கிறோம் என்று சொல்லி ஏமாற்றிக் கொண்டும், அந்த நேரத்தில அந்தச் சட்டங்களை அமுல் நடத்தாமல் முதலாளிகளுக்கு துணை போய்க் கொண்டிருக்கிற கடுமையான நெஞ்சத்தையும் கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் சுட்டிக் காட்ட வேண்டிய நிலைமையிலே நான் இருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அது போலவே, விவசாய சாகுபடியாளர்களுக்கு 75 சதவீதம் பங்கு கொடுக்க வேண்டும் என்று சட்டத்தை செய்தார்கள். அந்த 75 பங்கை முதலாளிகளிடமிருந்து பெற்றுத் தருவதற்கு தகுந்த உத்தியோகஸ்தர்கள் யாரும் அவர்களுக்குக் கிடையாது. கேட்டால் சொல்வது, தாசில்தார் அலுவலகங்களில் பார்த்துக் கொள்வார்கள் என்று. தாசில்தார் அலுவலகங்களில் இன்று போய் பார்த்தால், அங்கு எத்தனை எத்தனை பிரச்சினைகள் இருக்கின்றன என்பது உங்களுக்கே தெரியும். ஆனால் அவற்றை எல்லாம் விட அதிகமாக, அமைச்சர்கள் வருவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதற்கும், அரசு விழாக்களுக்கு ஏற்பாடு செய்து அதனை மேற்பார்வை செய்வதற்குமே அவர்களுடைய நேரம் முழுவதும் அங்கே செலவழிக்கப் பெறுகிறதே தவிர, உண்மையான தொழிலாளர்களின் பிரச்சினைகளிலே விசாரணை செய்து தக்க நடவடிக்கை எடுப்பதற்கு அவர்களுக்குப் போதிய அவகாசம் இல்லை. அதனை அரசே அறிந்திருக்கும் என்றும் நம்புகிறேன். ஆகவே இந்தச் சட்டத்தை அமுல் படுத்துவதற்கு தனியான அலுவலர்களை நியமிக்க வேண்டும். அப்படி நியமிக்கா விட்டால் இந்தச் சட்டத்தினால் எந்தவித உபயோகமும் இல்லை. இப்படி சட்டத்தை இயற்றிவிட்டோம் என்று சொல்லிக் கொண்டு மறைமுகமாக முதலாளிகளுக்கு ஆதரவு அளித்துக் கொண்டிருக்கும் ஒரு மாபெரும் பாவத்தை இந்த அரசு செய்து கொண்டிருக்கிறது என்கிற கருத்தினைதான் நாம் கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம்.

(முற்பகல் 11–10)

அந்த நிலையை இன்னும் நீட்டிக்க விட்டால் அரசினுடைய நிலைக்கு அது நல்லதல்ல என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, நகரசுத்தித் தொழிலாளர்கள். சென்னையிலும் சரி, பல்வேறு நகரங்களிலும் சரி, தொழிலாளர்களுக்காக பலவிதச் சட்டங்கள் போட்டிருந்தும்கூட அந்தத் தொழிலாளர்களுக்கு



கிடைக்க வேண்டிய பங்கு ஊதியத் தொகைகள் கொடுக்கப்படவில்லை. பலவிதமான சட்டங்கள் உள்ளன தொழிலாளர்களுக்காக. தொழில் தகராறு சட்டம், நிறுவனங்கள் சட்டம், எடை அளவுச் சட்டம், என்றெல்லாம் இருக்கின்றனவே தவிர, அவை எத்தளவிற்கு அமல்படுத்தப்படுகின்றன என்று கேட்டால் அவை தொழிலாளர்களுக்கு சாதகமான முறையில் அமுல்படுத்தப்படவில்லை. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், நகரசுத்தித் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்கள் வாழ்வதற்கு வீடுகள் கட்டிக் கொள்ள மத்திய அரசால் பணம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவர்கள் மிகவும் கஷ்டமானத் தொழிலைச் செய்கிறார்கள். அவர்களுக்கு இந்த வீடுகள் சொந்தமாக்கப்பட வேண்டும் என்று சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் அந்தத் தொழிலாளர்கள் வேலையிலிருந்து நீக்கம் செய்யப்பட்டிருந்தால் அல்லது அவர்கள் வேலையிலிருந்து ஓய்வு பெற்று விட்டால் அந்த வீடுகளில் அவர்கள் இருக்க அனுமதிக்கப்படுவதில்லை. அந்த வீடுகளுக்குச் சொந்தக்காரர்கள் மாநில அரசு அல்லது கார்ப்பரேஷன் அல்லது முனிசிபாலிடி அல்லது பஞ்சாயத்துக்கள் என்ற நிலையில்தான் இருக்கிறது. சட்டப்படி அவர்களுக்கு என்று தனியாக கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகள். அவை அந்தப் பணம் முழுவதும் மத்திய அரசின் பணம். எதை எடுத்தாலும் மத்திய அரசை சொல்லிக் கொண்டிருக்கும் நீங்கள் உங்களிடம் கொடுக்கப்பட்ட பணத்தை வைத்துக் கொண்டு கட்டிய வீடுகளில் அந்த நகரசுத்தித் தொழிலாளர்கள் ஓய்வு பெற்ற பின் ஏன் அந்த வீடுகளில் இருக்க அனுமதிக்கப்படுவதில்லை என்பதை இந்த அரசு கவனத்தில் எடுத்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, 1978 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 3-ம் நாள் உண்ணா விரதம் இருந்தார்கள். தொழிலாளர் நல ஆணையாளரை வைத்து அவர்களை சமாதானம் செய்து அவர்களுக்கு வேண்டியது கொடுக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் 1978 ஆம் ஆண்டிலிருந்து 1980 வரை கொடுக்காத தினால்—அதிகாரிகளால் சமாதானப்படுத்தப்பட்டும் அதிகாரிகளால் கொடுக்கப்படாததைக் கண்டித்து—கடந்த வாரம் லாரி டிரைவர்கள், அங்குள்ள தொழிலாளர் பகுதியைச் சேர்ந்தவர்கள் மீண்டும் ஒரு உண்ணா விரதம் இருந்து இரண்டு தினங்களுக்கு முன்பு அந்த இலாகா காரியதரிசி அவர்கள் அவர்களைக் கூப்பிட்டு சமாதானம் செய்து அவர்கள் உண்ணா விரதத்தை நிறுத்திக்கொள்ளவேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். இப்படி அவர்களை கூப்பிட்டு அதிகாரிகள் சமாதானம் செய்வதும் உத்தரவுகள் போடுவதும், அந்த உத்தரவுகளை அமல் நடத்தாமல் இருப்பதும் என்ற ஒரு பாணியில் ஒரு அவல நிலையை இன்னும் நீட்டிக்க விடக்கூடாது என்று அரசைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

[திரு. எல். இளையபெருமாள்] [1981 பிப் வரி 1]

அடுத்து, மாதவரம் பால்பண்ணை, அங்கே கிட்டத்தட்ட 1,300 தொழிலாளர்கள் அவதிப்படுகிறார்கள். அவர்கள் என்ன கூலி கேட்டார்களோ அந்தக் கூலியை விட—தொழிலாளர்களை அழைத்து சமாதானப்படுத்துவதற்கு பதிலாக, அவர்கள் கேட்டதைக் கொடுப்பதற்குப் பதிலாக—அதிகமாகக் கொடுத்து இன்று வேலை செய்கிறார்கள். தொழிலாளர்களை அவதிப்படுத்த வேண்டும் அல்லது தொழிற் சங்கத்தை உடைக்க வேண்டும் என்பதற்காக நாம் மெத்தனமான போக்கில் செல்வது பாதகமான ஒரு செயலாகும். அமைச்சர் அவர்களை சந்தித்திருக்கிறார்கள் தொழிற் சங்கத் தலைவர்கள். அமைச்சர் சொல்லியிருக்கிறார், முதல் அமைச்சர் அவர்களை கலந்து முடிவு செய்கிறோம் என்று. தொழிலாளர் நல ஆணையாளர் திரு. நரசிம்மன் அவர்கள் வரவழைக்கப்பட்டிருக்கிறார். ஸ்பெஷல் டெப்டி கமிஷனர் திரு. லட்சமணன் வரவழைக்கப்பட்டிருக்கிறார். தொழிலாளர்களிடம், நீங்கள் உங்கள் ஸ்ட்ரைக்கை வாபஸ் செய்துகொள்ளுங்கள் ஆவன செய்கிறோம் என்று சொல்கிறார்கள். எந்தவிதமான அட்வைஸும் கொடுத்ததாகத் தெரியவில்லை. உண்மை விவரங்களை அறிய விரும்புகிறேன்.

அடுத்து வட ஆற்காடு அரசுப் பண்ணை. அரசுப் பண்ணைத் தொழிலாளர்களுக்கு கொடுக்க வேண்டியதை அரசாங்கமே கொடுக்கவில்லை என்றால் யார் கொடுப்பார்கள் ?

அடுத்து, இங்கிருக்கிற, வாச் அன்ட் வார்ட், ப்யூன்ஸ் இவர்களுக்கு நாம் நான்கு ரூபாய் கொடுப்பதாக உறுதியளித்தோம். அரசாங்கம் நல்லெண்ணத்தோடு அதைக்கொண்டு வந்தது. ஆனால் இன்றுவரை அவர்களுக்கு அதைக் கொடுக்கவில்லை. சட்டசபையில் வேலை செய்கிற தொழிலாளர்களிடமே அரசாங்கம் மெத்தனமாக இருக்கிறது. அலட்சியமாக இருக்கிறது. கொடுத்த வாக்குறுதியைக் காப்பது இல்லை என்றால் அப்படிப்பட்ட ஒரு எண்ணம் நாம் தொழிலாளர்களிடம் ஏற்பட இடம் கொடுக்கக்கூடாது என்று தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களிடமும், அரசாங்கத்தையும் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோலவே, தொழிலாளர்களாக பணி செய்கின்றவர்கள் வாட்ச்மேன்களாக, அட்டெண்டர்களாக, பியூன்களாக குறிப்பாக கல்லூரிகளிலே பணியாற்றுவதற்கு வேலை வாய்ப்பு கொடுத்திருக்கிறீர்கள். அதற்கு அரசாங்கம் உதவி செய்வதாகவும் சொல்லியிருக்கிறீர்கள். அப்படி சொல்லியிருந்தும்கூட, மைனாரிடி என்ற பேரால் கிறித்துவக் கல்லூரிகளிலே பணிபுரிகின்றவர்களை இந்த அரசு சட்டத்தை மீறி பழி வாங்கி வருகிறார்கள். அவர்கள் அப்படி தப்பித்துக் கொள்வதற்கு ஒரு வாய்ப்பு அது ஒரு மைனாரிடி இன்ஸ்டிடியூஷன் என்று சொல்லி விடுகிறார்கள்.



1981 பிப்ரவரி 1] [திரு. எல். இளையபெருமாள்]

அதற்காக நாம் அவர்களை விட்டுவிடக் கூடாது. அரசு இதைப்
பரிசீலனை செய்ய வேண்டும். குறிப்பாக சொல்ல வேண்டு
மானால், ஸ்டெல்லா மேரிக் கல்லூரியில் 14 வருடங்களாக
வேலை செய்பவர் லேபர் கோர்ட்டுக்கு சென்று, அவருக்குச்
சாதகமாக சம்பளம் கொடுக்க வேண்டுமென்று சொல்லியும்கூட,
இன்றைக்கு வரைக்கும் அவருக்குக் கொடுக்கப்படாமல், கடந்த
2½ ஆண்டுகளாக அவர் சஸ்பென்ட் செய்யப்பட்டிருக்கிறார்.
அப்படியிருந்தால், தொழிலாளர் நிலைமை என்னவாகும் என்
பதை இந்த அரசு சற்று யோசித்துப் பார்க்கவேண்டும். அவர்
அரசுக்கு மனு செய்திருக்கிறார் ; அதிகாரிகளையும் பார்த்
திருக்கிறார்; மற்றும் லேபர் துறையிலே உள்ள அதிகாரி
களையும் பார்த்திருக்கிறார். அவர்கள் அவர் கோரிக்
கையிலே நியாயம் இருக்கிறது என்று சொல்லியும்கூட, இந்த
நிலைமை இருக்கின்றது; அரசும் இதுபற்றி கவனிக்கவில்லை.
அரசின் இத்தகைய அலட்சியப் போக்கு அரசுக்கு நன்மை
பயக்காதுஎன்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

1979 நவம்பர் 7 ஆம் தேதி கொடுக்கப்பட்ட அபிஷியல்
ரிப்போர்டில் 1977 ஜூன் முதல் 1978 மே மாதம் வரை,
அதாவது ஒரு ஆண்டு காலத்திலே நிரந்தரமாக மூடப்பட்ட
நிறுவனங்கள் 31 ; பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் 911 ;
தற்காலிகமாக மூடப்பட்ட நிறுவனங்கள் 42 ; பாதிக்கப்பட்ட
தொழிலாளர்கள் 21,785 என்று கொடுக்கப்பட்டிருக்கிறது.
இப்படிப்பட்ட நிலைமையில் அரசாங்கம் என்ன செய்கிறது ?
போலீசை வைத்து எல்லாவற்றையும் செய்து கொள்ளலாம் என்ற
எண்ணம்தான இருக்கின்றது என்பதை நான் வருத்தத்தோடு
தெரிவித்துக்கொள்கிறேன்.

காட்டுமன்னார்குடியில், ஒரு அரிசன கிராமத்தில் குறைந்த
பட்ச கூலி கேட்டதற்கு அங்குள்ள தொழிலாளர்கள் மீது
அடக்குமுறை உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது. அவர்க
ளுடைய குடிசைகள் எல்லாம் பிரித்தெறியப்பட்டிருக்கின்றன.
சிதம்பரம் டெபுடி சூபரின்டெண்டெண்ட் அவர்கள் சட்டத்தை
மீறி, ரெவின்யூ அதிகாரிகள் அவர்கள் குறைந்த பட்ச கூலி
உயர்வுதான் கேட்கிறார்கள் என்று சொல்லியும்கூட, முதலாளி
களுக்கு அனுசரணையாக இத்தகைய காரியத்தைச் செய்திருக்
கிறார்கள். இது சம்பந்தமாக முதல்வர் அவர்களுக்கும் மனு
அனுப்பியிருக்கிறார்கள். தொழிலாளர் நலத் துறை அமைச்சர்
அவர்களுக்கும் மனு அனுப்பியிருக்கிறார்கள். ஆனால், என்ன
நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என்பதை புரிந்துகொள்ள
முடியாத நிலைமையிலே இருக்கிறோம்.

[திரு. எல். இளையபெருமாள்] [1981 பிப்ரவரி 10

அதைப்போலவே, சென்னை கார்ப்பரேஷனிலே தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். அவர்கள் அதாவது பாரதிநகர், ஐயனாவரம், சென்னை-23 என்ற இடதநிலே இருப்பவர்கள். முன்னாள் இராணுவத் தொழிலாளர்கள் வீட்டுவசதி செய்து கொள்வதற்காக அவர்கள் இடமெடுத்திருக்கிறார்கள். அந்த இடத்திற்கு 21,000 ரூபாயை பெட்டர்மென்ட் டாக்சாகக் கட்டியிருக்கிறார்கள். அதுபற்றி அதிகாரிகளிடம் போய்க் கேட்டால் ரெக்கார்டிலே இதுபற்றி என்ட்ரி இல்லை, நாங்கள் என்ன பண்ணுவது' என்று சொல்கிறார்கள், அவ்வாறு தபால் எழுதியும் இருக்கிறார்கள். இது அரசினுடைய மெத்தனப் போக்கா? அல்லது அதிகாரிகளுடைய மெத்தனப் போக்கா? இப்படி 21,000 ரூபாய் கொடுக்கப்படவில்லை என்று சொல்வது மிகவும் வருத்தத்திற்குரிய விஷயமாகும். மேலும் நம்முடைய தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள தொழிலாளர் நன்மை பற்றி, நிலைமைபற்றி நன்கு புரிந்தவர்கள். சேத்துப்பட்டு, மற்ற இடங்களில் தொழிலாளர்கள் கடந்த 50, 60 ஆண்டுகளாக வீட்டு வசதி வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பகுதிகளிலே எல்லாம் பின்தங்கியவர்கள், மலைவாழ் மக்கள், ஆதி திராவிட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் வசிக்கின்றார்கள். அவர்கள் குடியிருப்பதற்கு, பட்டா போட்டு கொடுப்பதற்கு இந்த அரசு அந்த தொழிலாளர்கள் வர்க்கத்திற்கு இடையூறான கொள்கையை வைத்திருக்கின்றதா என்பதை நான் அறிய விரும்புகிறேன். (மணியடிக்கப்பட்டது.)

உதவி சபாநாயகர் அவர்களே, உங்கள் தீர்ப்புக்கு நான் நிச்சயமாக மீறி நடந்துகொள்ள மாட்டேன். விதிக்குப் புறம்பாக நான் நடந்துகொள்ள மாட்டேன். நடக்கவும் மாட்டேன். இந்தச் சமயத்திலே நான் சொல்லிக் கொள்ள விரும்புவது, இந்த அரசு தொழிலாளர் கொள்கைக்கு விரோதமாக நடந்து கொள்கிறது; எனவே, அவர்கள் நிலைமைகளை இந்த அரசு கவனிக்க வேண்டும். ஆனால், அப்படி கவனிக்கவில்லை; அவர்களுக்கு விரோதமாக நடந்துகொண்டு வருகின்றது என்பதைச் சொல்லிக்கொண்டு, முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

[முற்பகல் 11–20]

* டாக்டர் கே. சௌரிராஜன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உமாநாத் அவர்கள் இங்கே கொண்டு வந்த தீர்மானத்தை ஆதரித்துப் பேச வாய்ப்பளித்தமைக்காக நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1981 பிப்ரவரி 10] [டாக்டர் கே. சௌரிராஜன்]

இந்தத் தீர்மானத்தைத் தோழர் உமாநாத் அவர்கள் கொண்டு வந்தபோது நான் மிகவும் ஆச்சரியத்தில் ஆழ்ந்தேன். ஏனென்றால் ஓரிரண்டு மாதங்களுக்கு முன்பாக தமிழ் மாநிலத்திலேயே ஒரு மிகப் பெரிய முதலாளி, என்னுடைய நெருங்கிய நண்பர் என்னிடத்தில் குறை பட்டுக்கொண்டார்கள்.

'The Tamil Nadu Government is playing too much into the hands of the Marxists'

என்று என்னிடத்தில் குறைபட்டுக் கொண்டார்கள்.

ஆனால் தோழர் உமாநாத் அவர்கள் கொண்டு வந்திருக்கிற தீர்மானத்தில், இந்த அரசு தொழிலாளர்களுக்கு விரோதமாகச் செயல்பட்டுக் கொண்டு வருகிறது என்று கொண்டு வந்தவுடன் உள்ளபடியே நான் ஆச்சரியத்தில் ஆழ்ந்தேன். ஆனாலும் இங்கே பல அரசியல் கட்சிகள் அவரவர்கள் அவரவர்கள் கோணத்தில் பார்க்கிற நேரத்தில் இந்தத் தீர்மானத்தை ஆதரிக்க வேண்டிய ஒரு நிர்ப்பந்தமான சூழ்நிலையில் இருக்கிறார்கள்.

நேற்று உணர்ச்சி வசமான பிரசங்கத்தைத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நம்முடைய சகோதரர் துரைமுருகன் அவர்கள் ஆற்றியதை நான் கேட்டேன். அதே நேரத்தில் தோழர் உமாநாத் அவர்களும் தன்னுடைய வாதத்தை வெகு அழகாக எடுத்து வைத்தார்கள். அவருடைய அதிருஷ்டவசமாக, அவருடைய கட்சி ஆட்சிப் பொறுப்பில் இருக்கும் கேரள மாநிலத்தையும் மேற்கு வங்கத்தையும் எடுத்துக் காட்டி அழகாகப் பேசினார்கள். ஏதோ கேரள மாநிலத்தில் இதுவரை ஒரு இழங்கையும், ஒரு நேத்திரம் பழத்தையும் சாப்பிட்டுவிட்டு, ஒரு டீ குடித்துவிட்டு எட்டு மணி நேரம் வேலை செய்து கொண்டிருந்தது விவசாயப் பெருங்குடி மக்கள் தற்போது 60 வயது ஆனவுடன் ஈசி சேரில் சாய்ந்து கொண்டு மூன்று வேளை சாப்பிடுவது போலவும் சித்தரித்தார்கள். ஆனால் எனக்கு விவரம் எதுவும் தெரியாது. அதே நேரத்தில் ஒரு யூனிடரி பார்ம் ஆப் கவர்ன்மென்ட் மனதில் வைத்துக் கொண்டு அதற்கும் இதற்கும் ஒப்பிட்டு தோழர் கருப்பையா அவர்கள் நம்முடைய சேத்தில் மல்டிபிளிசிடி ஆப் பொலிடிகல் பார்ட்டிஸ் இருக்கும்போது தொழிலாளர்களைப் பொறுத்து, இது நியாயமா, தர்மமா, ஜனநாயகமா என்று வெகு அழகாக வாதம் செய்தார்கள்.

ஆனால் எங்களைப் பொறுத்தவரை நாங்கள் எங்களுடைய கட்சியினுடைய கண்ணோட்டத்துடன்தான் இந்தப் பிரச்சனையை அணுகுகிறோம். எங்களுடைய இயக்கம் ஆரம்பித்து முழுமையாக மூன்று ஆண்டுகள்கூட நிறைவேறவில்லை. ஆனாலும்

கட்சியில் இருப்பவர்கள் இந்தத் தீர்மானத்தை எதிர்த்துப் பேசினார்கள். மாண்புமிகு சௌந்திரராஜன அவர்கள் மெகு வேகமாக எதிர்த்துப் பேசினார்கள், பத்திரிகையில் பார்த்தால ஆளும் கட்சிக்குச் சாதகமான ஒரு அழகான கேலிச் சித்திரத் தைப் போட்டிருந்தார்கள். ஆளுகின்ற அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் யானை; இரண்டு கம்யூனிஸ்டு கட்சிகள் இரண்டு ஈக்கள்; யானையின் முதுகில் உட்கார்ந்துகொண்டு இனி மேல் இந்த பாரத்தைச் சுமக்க மாட்டேன் என்கின்றன என்று கம்யூனிஸ்டு கட்சிப் பற்றிக் கேலியாகச் சித்திரம் போட்டிருந்தார்கள். ஆனால் அந்தக் கார்ட்டூன் போட்டவர் ஒன்றை நினைத்துப் பார்க்கவில்லை. இந்த இரண்டு ஈக்களும் யானை காதுக்குள் போய்க் குடையுமானால் நிச்சயமாக யானை செத்து விடும் என்பது அவருக்குத் தெரியவில்லையே என்பதை வருத் தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சௌந்திரராஜன் அவர்கள் பேசுகிறபோது கம்யூனிஸ்டு கட்சியைச் சார்ந்தவர்கள் தங்கள் கட்சிக்கு தொழிலாளர் களிடத்தில் செல்வாக்கை உருவாக்க இந்தத் தீர்மானத்தை கொண்டு வந்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். கம்யூனிஸ்டு கட்சிக்குச் செல்வாக்கு தொழிலாளர்களிடம் மட்டுந்தான். வேறு எங்கும் இல்லை என்பது அவர்களுக்குத் தெரியாத ஒன்றல்ல. தொழிலாளர் வர்க்கம் நிச்சயமாக இந்த கம்யூனிஸ்டுகளை நம்பிக் கொண்டிருக்கின்றன. எனவே போது புதிதாக ஆதாயம் தேட வேண்டிய அவசியம் இல்லை. இதற்கு வரலாறே சான்று. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி கடைசித் தொண்டன் வரை இதுவரை கட்சி மாறியதே கிடையாது. கட்சி மாற்றத்திற்கு ஊக்கம் அளிப்பதில் தலைமை வகிக்கும் முன்னாள் முதல்வர் அவர்கள் கூட கம்யூனிஸ்டு கட்சியை இரண்டாகத்தான் உடைக்க முடிந்ததே தவிர, புதிதாக தமிழ்நாடு கம்யூனிஸ்டு கட்சியை உருவாக்க முடிந்ததே தவிர, கம்யூனிஸ்டு கட்சியிலிருந்து திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு யாரும் வரவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எங்களைப் பொறுத்தவரை, காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் இயக்கத்தில் எங்களுடைய தொழிலாளர்கள் கொள்கை எங்களுக்கு வழிகாட்டியாகவும், யாருடைய பெயரை தாங்கி நாங்கள் இந்த இயக்கத்தை ஆரம்பித்திருக்கிறோமோ அந்த அமரர் காமராஜர் அவர்கள் காலத்தில் எந்த முறையில் இந்த அரசு செயல்பட்டதோ அந்த முறையில் மீண்டும் செயல்பட வேண்டுமென்பதைத்தான் நாங்கள் விரும்புகிறோம். ஆயிரம் கால் மண்டபத்தைப் பார்த்திருப்பீர்கள். அரசு என்பது இயற்கையின் சீற்றத்தாலும் இயற்கை பொய்க்கின்றநேரத்திலும் சமுதாயத் தைப் பாதுகாப்பதற்காக ஏற்படுத்திய ஒரு கோடிக்கால் மண்டபம்.





தொழிலாளர்கள் எல்லாம் அதிலே கால்களாக இருக்கிறார்கள். கால்கள் உறுதியாகவும் நன்றாகவும் இருக்கவேண்டும். வரி கொடுக்கிறவர்கள் எல்லோரும் அந்த மண்டபத்தினுடைய உத்திரங்களாக இருக்கவேண்டும். அந்தக் கால்களும் உறுதியாக இருக்கவேண்டும், அந்த உத்திரங்களும் வலுவுள்ளவையாகவும், உறுதியுள்ளவையாகவும் இருக்கவேண்டும். பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் எந்த எந்த முறைகளிலே தொழிலாளர் களுடைய பிரச்சனைகளை கையாண்டார்களோ அந்த முறை களைக் கையாண்டு தமிழகத்திலே தொழில் வளம் பெருக வேண்டும் அதேநேரத்தில்......

**திரு. கோவைத் தம்பி :** மாண்புமிகு உறுப்பினர் பேசும் பொழுது கம்யூனிஸ்டு கட்சியை முன்னாள் முதல்வர் பிரித்ததாகச் சொன்னார்கள். அப்படி அதைப் பிளக்கத்தான் முயற்சி நடந்ததே தவிர, கட்சித் தாவல் கம்யூனிஸ்ட் கட்சியிலே ஏற்படவில்லை என்று சொன்னார்கள். திரு. கப்பு திராவிட முன்னேற்றக் கழகத்திலே இணைந்தார். அவர் காந்தி-காமராஜ் கட்சியைச் சேர்ந்தவரா என்று அறிய விரும்புகிறேன்.

**டாக்டர் கே. சௌரிராஜன் :** எங்களைப் பொறுத்த வரையில் பெருந்தலைவர் காமராஜ் கண்ட கனவுகளை நனவாக்க வேண்டும் என்ற கொள்கையோடு இருக்கிறோம். ஆறாத சோறும், கிழியாத ஆடையும் ஒழுகாத வீடும் இந்த நாட்டிலே ஒவ்வொரு தொழிலாளிக்கும் தமிழகம் பூராவும் உள்ள மக்களுக்கு கிடைக்கவேண்டும் என்று சொன்னார்கள், அந்த அடிப்படையிலேதான் நாங்கள் இயங்கிக் கொண்டு இருக்கிறோம்.

இந்த அரசின் மீது எங்களுக்கும் மனத்தாங்கல்கள் பல உண்டு. ஒவ்வொரு கட்சியினரும் ஒரு கோணத்திலே பார்க்கிற போது மனத் தாங்கல்களைக் கொண்டிருக்கிறார்கள். நாங்களும் மனத்தாங்கலோடு சிந்தித்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே தான் இந்தத் தீர்மானத்தை ஆதரிக்கிறோம்.

தொழிற்சங்க இயக்கம் தமிழகத்தைப் பொறுத்தவரையிலே வெகுகாலமாக இருந்தபோதிலும் படித்தவர்களும் பட்டதாரி களும் இந்த இயக்கத்திலே ஈடுபடுத்திக் கொண்டிருக்கின்ற நிலைமை இருந்திருக்கிறது. தொழிற்சங்க முன்னோடியாக இருந்த பல தலைவர்கள் தமிழகத்திலே உருவாகியிருக்கிறார்கள். அவர்கள் அரசியல் சம்பந்தம் இல்லாமல் எந்த வகையிலேயும் முன்னுக்கு வரவில்லை. மறைந்த பக்கிரிசாமி பிள்ளையையும் எஸ். சி. சி. அந்தோணி பிள்ளையையும் சட்டமன்றத்திலோ பாராளுமன்றத்திலோ பார்க்க முடியவில்லை. பதவி காரணத்திற் காக ஏதாவது அரசியல் கட்சியில் சேர்ந்தால் தான் சட்ட மன்றத்திற்கோ பாராளுமன்றத்திற்கோ வரமுடியும். இது

[டாக்டர் கே. சௌரிராஜன்] [1981 பிப்ரவரி 10

தொழிற்சங்கத்தினுடைய அடிப்படையையே உருக்குலைத்துவிட்டது என்று சொன்னால் மிகையாகாது. ஏ.ஐ.ஏ.டி.எம்.கே.யில் தொழிற்சங்க வாதியாக இருந்த தொழிற்சங்க அனுபவம் பெற்றவர் அமைச்சர் மாண்புமிகு இராகவானந்தம் அவர்கள். ஆனால் அவர் இன்று அமைச்சராக ஆகிவிட்டதால்.

'The Prosecutor himself has become the Judge'

அதாவது தொழிலாளர்களுக்காக வாதாடவேண்டியவர் இன்று முடிவுகளை எடுக்கவேண்டிய நிலையில் உள்ளார்கள். ஆகவே அவருக்கு இருக்கின்ற சங்கடங்களையும் கஷ்டங்களையும் எங்களால் உணரமுடிகிறது. இந்த அரசு இருக்கின்ற அதிகாரங்களையும் சட்டங்களையும் வைத்துக்கொண்டு தொழிலாளர்களின் பிரச்சனைகளைத் தீர்க்காமல் காலந்தாழ்த்திக்கொண்டே இருக்கிறது என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. எம். குருசாமி என்கிற அண்ணாதாசன் : பேரவைத் தலைவர் அவர்களே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே தொழிலாளர் கொள்கையின்மீது பேசுகின்றபோது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திலே தொழிலாளர் கொள்கை போய்விட்டது என்று சொன்னார்கள். அவர்கள் சார்ந்திருக்கிற இயக்கத்திலே பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் இருந்தபோது........................

மாண்புமுகு பேரவை துணைத் தலைவர் : அவர்கள் சொல்லவில்லை. நீங்கள் முடித்துவிடுங்கள்.

டாக்டர் கே. சௌரிராசன் : உங்களுக்கு நேரம் வரும் பொழுது பதில் சொல்லுங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நேரமாகிவிட்டது முடியுங்கள்.

டாக்டர் கே. சௌரிராசன் : * * * * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அப்படியெல்லாம் சொல்ல வேண்டாம்.

டாக்டர் கே. சௌரிராசன் : * * * * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அது எல்லாம் வேண்டாம் அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கவேண்டுமென்று உத்தரவிடுகிறேன்.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1981 பிப்ரவரி 10] [மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்]

[முற்பகல் 11-30]

இங்குள்ள விஷயத்தைப் பற்றிப் பேசவேண்டும்; பொதுவாக வெளியிலே நடப்பதைப்பற்றியெல்லாம் பேச வேண்டியதில்லை.

டாக்டர் கே. சௌரிராசன் : பொதுவாகச் சொல்லிவிட்டுத்தான், குறிப்பாகப் பேச வேண்டும். எப்பொழுது பார்த்தாலும் நம்முடைய மாநிலத்தினுடைய முதல்வரவர்கள் தொழில் தகராறுகள் ஏற்படுகின்ற நேரத்தில் எல்லாம், தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்கின்ற நேரத்தில் எல்லாம் அடிக்கடி சொல்கிறார்கள், மக்கள் பார்த்துக் கொள்வார்கள், மக்கள் பார்த்துக் கொள்வார்கள் என்று சொல்வதைப் பத்திரிகைகளில் பலமுறை பார்த்திருக்கிறேன். நேற்றுகூடச் சொல்லியிருக்கிறார்கள், இந்த ஊதியத்திற்கு ஒத்துக்கொள்ள வேண்டுமென்று சொன்னோம், அவர்களுக்குள் மூன்று கோஷ்டிகள் இருக்கின்றன, யாரும் ஒத்து வரவில்லை என்று சொல்லிவிட்டுப் போய் விட்டார். இது பொறுப்பைத் தட்டிக் கழிப்பதைத் தவிர வேறொன்றுமில்லை. அவர்கள் தமிழ்நாட்டின் முதல்வர், தமிழக மக்களின் தலைவிதியை நிர்ணயிக்க வேண்டியவர், அவர்கள் தெளிவாக இதுதான் எங்கள் கொள்கை என்று சொல்ல வேண்டும்; பதவியைப் பற்றிக் கவலைப்படக்கூடாது; பதவி கிடைத்தவுடன் பதவியைக் கொடுத்தவர்களுக்குக் கடமையை ஆற்ற வேண்டும்; வருங்காலத்தைப் பற்றிய எண்ணத்தைக்கொண்டு, யாரையும் திருப்திப் படுத்த வேண்டும் என்ற எண்ணத்தையும் கொண்டு செயல்படக்கூடாது என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது.) எனக்கு 15 நிமிடங்கள் சபாநாயகரவர்கள் கொடுப்பதாகத் தெரிவித்தார்கள். இவ்வாறு 10 நிமிடத்திற்குள் முடித்துக்கொள்ளச் சொல்வது எங்கள் கட்சியை அவமதிப்பதாக இருக்கிறது என்று சொல்லி வெளிநடப்புச் செய்ய வேண்டிய நிலைமை ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் துணைத் தலைவரவர்களே ஒவ்வொரு கட்சித் தலைவருக்கும் 15 நிமிடங்களுக்கு மேல் போகக் கூடாது என்று தெரிவித்துவிட்டுப் போய் இருக்கிறார்கள். எனவே, அவர்களுக்கு 15 நிமிடங்கள் வரையில் அனுமதிக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. குமரி அனந்தன் அவர்கள் பேசினால் 15 நிமிடங்கள் கொடுத்திருக்கலாம் அவர் கட்சித் தலைவர், எனவே, கட்சித் தலைவர் வேறு; கட்சி சார்பிலே பேசுவது என்பது வேறு.

Dr. K. SOURIRAJAN : I must be allowed to speak for 3 more minutes. I have not finished my speech. It is an insult to me and you are insulting me and my party. I am the Deputy Leader of my party and I am asserting myself as the Leader of my Party, since my Leader is not here. I think it is a disgrace, if you threaten me. The Deputy Leader has got every right to speak * * * * * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : * * * * என்று சொன்னதை நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

திரு. என். சங்கரய்யா : கட்சியின் துணைத் தலைவர் என்கிற முறையில் பேசுகிறார். எனவே அதிலே வித்தியாசம் காட்ட வேண்டிய அவசியமில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உறுப்பினரவர்கள் இரண்டு நிமிடங்களில் முடித்துக் கொள்ள வேண்டும்.

Dr. K. SOURIRAJAN : I repeat, I am the Deputy Leader of a party Deputy Leader has got every right.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கையை நீட்டிப் பேசக் கூடாது.

டாக்டர் கே. சௌரிராசன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட கோரிக்கைகள் தீர்க்கப்படவில்லை என்பதை நான் தாழ்மையுடன் தெரிந்துக் கொள்ள விரும்புகிறேன். எம். ஆர். எப். தொழிலாளர் மீது நிர்வாகத்தினர் வன்முறை, குசேலர் (தொழிற்சங்கத்தலைவர்) மற்றும் 14 நபர்கள் மீது தாக்குதல், 1981 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 29 ஆம் நாளில் காவல் துறையில் புகார் செய்யப்பட்டுள்ளது; இன்னும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

*மாண்புமிகு பேரவை துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க நீக்கப்பெற்றது.



ஆர். கே. கே. ஆர். ஸ்டீல்ஸ் என்ற கம்பெனி அடிக்கடி அதாவது மூன்று மாதங்களுக்கு ஒரு முறை தனது பெயரை மாற்றுவது அதில் வேலை செய்து வந்த 10 வருடங்களுக்கும் மேலான சர்வீஸ் உள்ள ஊழியர்களைப் பெர்மனென்ட் செய்யாதிருந்து, திடீரென அவர்களையும் உள்ளிட்டு சுமார் 100 தொழிலாளர்கள் பாதிக்கப்படும்படியாக தனது தொழிற்சாலையின் ஒரு பகுதியை மூடியது.

மாதவரம் பால்பண்ணை ஊழியர்கள் தங்களுடைய கோரிக்கைகளுக்காக—சம்பள உயர்வு—70 நாட்களுக்கும் மேலாக வேலை நிறுத்தம் செய்து வருகின்றனர். கோரிக்கை தீர்க்கப்படவில்லை. 1981 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 2 ஆம் நாள் முதல் உண்ணாவிரதம் ஆரம்பித்துள்ளனர்.

ஈசன் என்ஜினியரிங் கம்பெனி ஆட்குறைப்பு செய்யும் நோக்கத்துடன் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட 2 ஆவது யூனிட்டுக்கு, அங்கு வேலைக்கு அமர்த்தப்பட்ட ஊழியர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டும் என்று காரணங்காட்டி தனது 1 ஆவது யூனிட்டிலிருந்து 83 தொழிலாளர்களை அனுப்பிவைத்து சுமார் 2 ஆண்டுக் காலத்தில் அவர்களையும் உள்ளிட்டு 100 பேர்களை 1976 ஆம் ஆண்டு வேலை நீக்கம் செய்தது. அத்துடன் மேற்படி கம்பெனியில் தொழிலாளர்கள் அமைத்துள்ள கூட்டுறவு நாணயச் சங்கத்திற்கு வேலை செய்யும் தொழிலாளர்களிடமிருந்து முறையாகப் பிடித்தம் செய்து தரவில்லை.

கடைசியாக அரக்கோணத்தில் சதர்ன் ஆஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் கம்பெனியிலே 300 தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். 43 தொழிலாளர்கள் சட்ட விரோதமாக வேலை நீக்கம் செய்யப்பட்டு, 6 பேர் மீதுதான் வழக்கு மன்றத்திலே வழக்குகள் இருந்த பொழுதும் 37 தொழிலாளர்கள் பட்டினியாகக் கிடக்கிறார்கள். எந்தவிதமான தொழில் தகராறையும் இந்த அரசு தீர்க்கத் தவறி விட்டது.

This Government has lapses and failures on its part and these definitely constitute the anti-labour policy of the Government. This Government by virtue of its incapacity, inefficiency, immaturity and inbecility is anti-labour, and I charge this Government for its anti labour attitude.

திரு. எஸ். ஆண்டித்தேவர் : மாண்புமிகு உமாநாத் அவர்கள் தமிழக அரசுத் தொழிலாளர் விரோதப் போக்கினைக் கண்டித்து கொண்டுவந்திருக்கிற இந்தத் தீர்மானத்தை நானும் வழிமொழிந்து அகில இந்திய பார்வார்ட் பிளாக் கட்சியின் சார்பாக எங்களது கருத்தினையும் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பேற்றதற்குப் பின்னால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அண்ணா திராவிட முன்னேற்றக்கழகத்தினுடைய தொழிற்சங்கத் தலைவராக இருந்தவர் என்ற முறையில், அந்தப் பணியினை ஏற்றிருக்கிறார்கள், தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு கிடைக்கும் என்று அந்த நல்லெண்ணத்திலே இருந்தவர்கள் நாங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தொழிலாளர் தகராறு இருக்கின்ற நேரங்களில், அவர்கள் அண்ணா திராவிட முன்னேற்றக்கழகத்தினுடைய, தொழிற்சங்கங்களுக்காகப் போராடுகின்ற போராட்டங்களில் ஈடுபடுகின்ற பொழுதெல்லாம், எங்களைப் போன்ற தொழிற்சங்கத்தைச் சேர்ந்தவர்கள், அவர்களுக்கெல்லாம் உறுதுணையாக இருந்திருக்கிறோம். இப்பொழுதும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தொழிற்சங்கங்களை வைத்திருக்கிறது. இருந்தாலும், தொழிற்சங்கங்களை நசுக்குகின்ற விதத்தில், தொழிலாளர்களை நசுக்குகின்ற அளவுக்கு, இப்பொழுது, ஒரு சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அது எந்த அளவிலே இருக்கிறது என்று பார்த்தால், கவர்னர் உரையின்போதே குறிப்பிட்டிருக்கிறார்கள். தொழிலாளர்கள் ஊதிய உயர்வு கேட்பதே பணவீக்கத்திற்கு அது ஒரு காரணமாகும் என்ற அளவுக்கு இந்த அரசு போயிருக்கிறது. தொழிலாளர்கள் ஊதிய உயர்வு கேட்பது பணவீக்கத்தை ஏற்படுத்தும் என்ற கொள்கைக்கு வந்துவிட்டார்கள் என்று சொன்னால், அது சரியல்ல. எந்தப் பொருளாதாரம் நாட்டில் வீக்கம் ஏற்படுத்தும் என்றால், ஏகபோக முதலாளிகள் தான் அதற்குக் காரணம். அந்தப் பணக்கார வர்க்கம்தான் நாட்டிலுள்ள பண வீக்கத்திற்குக் காரணமாக இருக்கிறது என்பதை விட்டுவிட்டு, ஊதிய உயர்வு கேட்பதுதான் பண வீக்கத்திற்குக் காரணம் என்ற அளவுக்கு ஆளுநர் உரையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. விலைவாசி ஏற்றத்திற்கும், பணவீக்கத்திற்கும் காரணம், மத்தியிலே இருக்கிற அரசு சரியான கொள்கைகளை வகுக்காததுதான் என்பதையெல்லாம் உணரவில்லையென்று தெரிகிறது.





மத்திய அரசினுடைய தவறான கொள்கைகளின் காரணமாக, விலைவாசிகள் ஏறியிருக்கின்றன. வேலையில்லாத் திண்டாட்டம் பெருகி இருக்கிறது. அதைத் தடுக்க தகுந்த நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக, மத்திய அரசு இந்தியப் பாதுகாப்புச் சட்டம் என்ற பெயரால் சட்டத்தைக் கொண்டு வந்து அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களையும், தொழிலாளர்களையும் நசுக்குவதற்கு, அவர்களுடைய போராட்டங்களை ஒடுக்குவதற்கு, அந்தச் சட்டங்களையெல்லாம் பயன்படுத்துகிறார்கள். குறிப்பாக எடுத்துக்கொண்டால், இந்தப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் இந்தியாவிலே இருக்கிற, அண்டை மாநிலங்களிலே இருக்கிற விவசாயிகள் போராடும்போது, நடவடிக்கை எடுத்து, அவர்கள் அச்சட்டத்தை உபயோகப்படுத்தியிருக்கிறார்கள். அது போல், தமிழ் மாநில அரசும் விவசாயிகள் போராட்டத்தின் பொழுது இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தை, போரில் வெளிநாட்டிலிருந்து படையெடுத்து வந்திருப்பதைப் போல், வெளிநாட்டவர்களை நசுக்குவது போல், தமிழகத்திலே இருக்கிற விவசாயச் சங்கத்தினர் மீது, அந்தப் பாதுகாப்புச் சட்டம் உபயோகப்படுத்தப்பட்டது.

இந்திய அரசு ரெயில்வே தொழிலாளர்கள், லோகோ தொழிலாளர்கள் போராடுகின்றபொழுது, இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தி, அந்தப் போராட்டங்களை, ஜனநாயக முறையில் அவர்களுக்கென்று இருக்கிற உரிமைப்படி, இந்திய அரசியல் சட்டத்தின்கீழ் தொழிற்ச்சங்கங்கள் வைத்து போராடுகின்ற அந்தத் தொழிலாளர்கள் மீது, அந்தச் சட்டங்கள் எல்லாம் பயன்படுத்தப்பட்டன. அது போன்று மற்ற மாநிலங்களிலே இந்தச் சட்டத்தை இந்திய பாதுகாப்புச் சட்டத்தை அவர்கள் உபயோகப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

தொழிலாளர் விரோதக் கொள்கைளை, இந்திரா காங்கிரஸ் ஆளுகின்ற, அவர்கள் பொறுப்பிலே இருக்கின்ற மற்ற மாநிலங்களிலே, நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், தமிழகத்திலே அந்த இயக்கத்தை எதிர்த்து, இடதுசாரி ஜனநாயக முன்னணி என்று வைத்து, அவர்களது அந்தக் கொள்கைளை எல்லாம் எதிர்த்துத்தான், தேர்தல் காலத்திலே அகில இந்திய பார்வார்ட் பிளாக் கட்சி, அண்ணா திராவிட முன்னேற்றக்

[திரு. எஸ். ஆண்டித்தேவர்] [1981 பிப்ரவரி 10

கழகம், இதுபோன்ற இடதுசாரிக் கட்சிகள் ஒன்றாகப் போராடினோம். இன்று மத்தியிலே இருக்கிற அந்தச் சட்டங்களை இந்த அரசும் நிறைவேற்ற ஆரம்பித்து விட்டது. தமிழ்நாடு அரசுப்பணி ஒழுங்குச் சட்டம் என்ற அந்தச் சட்டத்தை இப்பொழுது நமது தமிழக அரசு அவசர அவசரமாகக் கொண்டு வந்திருக்கிறது. எங்களைப் போன்ற தோழமைக் கட்சிகளை எல்லாம் கலந்தாலோசித்திருக்கலாம், அல்லது சட்டமன்றத்திலே அதை விவாதித்து முடிவு எடுத்திருக்கலாம். திடீரென்று ஆளுநர் மூலமாக இப்படிப்பட்ட ஒரு அவசரச் சட்டத்தைக் கொண்டுவந்து, அதுவும் குறிப்பாக, போராடுகின்ற வர்க்கத்தை, ஊதிய உயர்வு கேட்டால், ஸ்டிரைக் செய்தால் தவறு, தடை என்பதோடு மட்டுமல்லாமல், அதற்குத் தண்டனைகள் என்ற அளவுக்கு தொழிலாளர்கள் வர்க்கத்தையும், என். ஜி. ஓ. க்கள் போன்ற அரசுப் பணியில் இருப்பவர்களையும் போராடக் கூடாது, சங்கங்கள் வைத்திப்பதே தவறு என்கிற அளவுக்கு இந்திய அரசியல் சட்டத்திலே கொடுக்கப்பட்டிருக்கிற Right to trade, Right to profess, Right to assemble என்று சொல்கின்ற அந்த இந்திய அரசியல் சட்டத்திலே கொடுக்கப்பட்டிருக்கின்ற உரிமைகளைப் பறிக்கின்ற அளவுக்கு இப்பொழுது ஒரு கடுமையான சட்டத்தைத் தமிழக அரசு கொண்டு வந்திருக்கிறது. அது உண்மையிலே மிக வருந்தத்தக்கது.

[முற்பகல் 11-40]

அப்படிப்பட்ட போக்கினை தமிழக அரசு, போராடுகின்ற ஏழை எளிய பாட்டாளி வர்க்கத்திற்கு எதிராகக் கொண்டு வருகின்ற சட்டத்தை மாற்றிக் கொள்ள வேண்டுமென்று கேட்பதுதான் அகில இந்திய பார்வேர்ட்பிளாக் கட்சியின் சார்பிலே நான் சொல்ல விரும்புவது.

அதுமட்டுமல்ல, தொழிலாளர்கள் எந்த அளவிற்கு பாதிக்கப்படுகிறார்கள். லாக் அவுட் மூலமாக, மூடப்படுகின்ற தொழிற்சாலைகள் மூலமாக அந்த ஏழை எளிய பாட்டாளி வர்க்கம்



1981 பிப்ரவரி 10] [திரு. எஸ். ஆண்டித்தேவர்]

உணவுக்கே வழியின்றி தெருவில் நிற்கின்ற நேரத்தில் [illegible] இப்படிப்பட்ட ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து அந்த முதலாளி வர்க்கத்திற்குப் பாதுகாப்புக் கொடுக்கிறது. முதலாளி வர்க்கம், அரசு ஒன்றிணைப் பேசி தொழிற்சங்கங்களும், தொழிலாளர்களும், அரசும் ஏற்றுக்கொண்டு, அதை அந்த நிறுவனம் [illegible] நடத்த வேண்டுமென்று சொன்னால்கூட, அவர்கள் [illegible] யாது என்று மறுக்கின்ற நிலையில், இந்த அரசு முதலாளி வர்க்கத்தைப் பார்த்து தொழிலாளர்களும், தொழிற்சங்கங்களும், அரசும் ஏற்றுக் கொண்ட கொள்கையை நடத்தாவிட்டால் அவர்களுக்கு தண்டனை உண்டு என்று ஒரு சட்டத்தைக் கொண்டுவந்திருக்குமேயானால் வரவேற்று இருக்கலாம். ஆனால், போராடுகின்ற, ஊதிய உயர்வு கேட்கின்ற நியாயமான கோரிக்கைகளை, தங்களது சங்கத்தின் மூலமாக கேட்கின்றவர்களை, தடைவிதித்து விட்டது மட்டும் அல்லாமல், அதற்கு தண்டனை கொடுக்கிறேன் என்கிறீர்கள். என்ன தண்டனை (1 ஆண்டு கால சிறை தண்டனை, அல்லது ரூ. 2,000 அபராதம் அல்லது இரண்டும் சேர்த்து என்று ஒரு கடுமையான தண்டனையை கொலைக் குற்றம் செய்தவர்களைப் போன்று இந்த நாட்டிலே அவர்களுக்கு இருக்கின்ற உரிமைக்கு மீறி இந்த அரசைக் கவிழ்க்க முயற்சிக்கின்றவர்கள் மீது போடுகின்ற அளவிற்கு ஒரு சட்டத்தை போட்டிருப்பது மிகத் தவறானது. இந்த சட்டத்தை நீங்கள் வாபஸ் வாங்கவேண்டுமென்பதுதான் அகில இந்திய பார்வேர்ட் பிளாக் கட்சியின் சார்பாக நான் சொல்லக்கடமைப்பட்டிருக்கிறேன்.

உதாரணத்திற்கு நம்முடைய பி. அண்டு சி. மில் தொழிலாளர்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். 13,000 பேர் அவர்களுடைய குடும்பங்கள் தெருவிலே நிற்கின்றன. அவர்களுக்கு தமிழக அரசு என்ன ஆறுதல் நடவடிக்கை எடுத்திருக்கிறது, என்று கேட்டால் மத்திய அரசிடம் பேசிக் கொண்டிருக்கிறோம். பேசிக்கொண்டிருக்கிறோம் என்றுதான் சொல்லப்படுகிறது.

அப்படி அந்தப் போராடுகின்ற வர்க்கத்திற்கு ஆதரவாக யாராவது பேசினால் அவர்கள் இன்டர்ன்மென்ட் என்று அந்த [illegible] தண்டனைக்குள்ளாவார்கள் என்று சட்டத்தை நிறைவேற்றியிருக்கிறீர்கள். அப்படியென்றால் எந்தவொரு அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களும், எந்தவொரு [illegible] சேர்ந்தவர்களும் அவர்களுக்கு ஆதரவாக ஏதும் சொன்னாலும் தவறு என்கின்ற அளவிற்கு இங்கே சட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

[illegible] மட்டுமல்ல. அப்படி போராடுகின்றவர்களுக்கு [illegible] காரணமாக [illegible] அவர்களுக்கு வேலையில்லாமல் [illegible]

திண்டாடுகின்ற ஒரு இளைஞனுக்கு உணவு கொடுத்தால்கூட இந்த சட்டம் தடுக்கின்ற அளவிற்கு ஒரு கொடிய சட்டமாக, நீங்கள் இங்கு கொண்டுவந்திருப்பது, அரசியல் இயக்கங்களைச் சேர்ந்தவர்களையும், அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களையும், டிரேட் யூனியன் மூலம் போராடுகின்ற உழைக்கின்ற வர்க்கத்திற்கு இருக்கின்ற அந்த பாதுகாப்பை, பாதுகாப்பாக இருக்கின்ற சங்கங்களை தடைசெய்கின்ற அளவிற்கு இருக்கிறது.

மத்திய அரசோடு பி. அண்டு சி. மில் பற்றி பேசி அவர்கள் பி. அண்ட் சி. மில்லை எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற கோரிக்கையை இந்த அரசு, இந்த சட்டமன்றத்திலே ஒரு தீர்மானத்தின் மூலமாகக் கொண்டு வந்து, நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கவேண்டும்.

மத்திய அரசு மாருதி கம்பெனியை தேசிய மயம் ஆக்கி இருக்கிறது. அதற்கு என்ன அவசரம் வந்துவிட்டது இப்போது? எத்தனை கோடி பேர் அங்கே உணவு இல்லாமல் இருந்தார்கள்? அதை எல்லாம் தேசியமயமாக்கி, இவர்கள் குடும்ப சொத்தை எடுத்து, இந்த நாட்டு சொத்தைக் கொடுப்பதற்கு முன்வருகின்ற மத்திய அரசு 13,000 தொழிலாளர்கள் இங்கே நடுத்தெருவிலே நிற்கின்றார்களே, இவர்களுக்கு ஒரு நிவாரணம் கொடுக்கின்ற அளவிற்கு ஏன் எதுவும் செய்யக்கூடாது? அதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு மத்திய அரசைக் கேட்டுக்கொள்ள முன்வராத இந்த அரசு அந்த ஆலை முதலாளிகளுக்கு பாதுகாப்பு கொடுக்கின்ற அளவிற்கு இப்போது சட்டத்தை நிறைவேற்றியிருக்கிறார்கள்.

இந்த சட்டம் தொழிலாளர் இயக்கத்தை மட்டும் அல்லாது, எந்த அரசியல் இயக்கத்தைச் சேர்ந்தவர்களையும், அரசியல் ரீதியாக, இந்திய அரசியல் சட்டத்திலே கொடுக்கப்பட்டிருக்கிற "Rig t to Projects, Right tc Assemble" கூட்டம் கூடுவதற்கும், சங்கங்கள் நிறுவுவதற்கும் இருக்கிற அடிப்படை உரிமைகளை பறிக்கின்ற அளவிற்கு இந்த சட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. ஆகவேதான் நாங்கள் சொல்கிறோம், இப்படிப்பட்ட சட்டங்கள் இந்த அரசு ஆட்சியில் இருக்கிறபோது, அ.இ.அ.தி.மு.க. கொண்டு வந்தது என்று சொன்னால் இந்த அ.இ.அ.தி.மு.க.-வும் தொழிற் சங்கம் வைத்திருக்கிறது. அந்த தொழிற் சங்கமும் பேசமுடியாத அளவிற்குத் தடையாக இது இருக்கும். அவர்களே சிறைச்சாலைகளுக்குச் செல்லுகின்ற அளவிற்கு இந்த சட்டம் அமைந்து இருக்கின்றது என்பதனை இந்த அரசு உற்று நோக்கி அந்தப் போக்கினை, தொழிலாளர் விரோதப் போக்கினை, பொது வாழ்க்கையில் இருக்கிறவர்கள் யாராவது நியாயமான கோரிக்கைகளை சொல்வதற்குக்கூட இன்சைட்மென்ட், வயலன்ஸ் என்று



சொல்கிற அளவிலே ஒரு கிளாஸை இந்த சட்டத்திலே போட்டிருக்கிற அந்தப் போக்கினை மாற்றிக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தொழிலாளர் தகராறுகள் என்று வருகிறபோது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பல தொழிற் தகராறுகளைத் தீர்த்து வைத்திருப்பார்கள்—அங்கேயுள்ள தொழிலாளர்கள் நியாயமான கோரிக்கைகளை வைத்துப் போராடினாலும்கூட, அந்தத் தகராறுகளைத் தீர்த்துவைக்கும் அதிகாரிகள் முதலாளிகள் பக்கம் நின்று பரிந்துரைகளைச் செய்வதைப் பார்க்கிறோம். இன்னும் சொல்லப் போனால், கோர்ட் தீர்ப்பு தொழிலாளர்களுக்குச் சாதகமாக இருந்தால் கூட அதை நிறைவேற்றுவதற்கு ஏற்றுக்கொள்ளாத நிறுவனங்கள் இருக்கின்றன. அவற்றின் மீது நடவடிக்கை எடுப்பதற்குக் கூட ஸ்ட்ரைக் போன்றவற்றில் ஈடுபடக்கூடாது என்று தடை செய்கின்ற வகையில் இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டு இருக்கிறது.

போராட்டம் செய்கின்ற தொழிலாளர்கள் மீது குறிப்பாக காவல் துறை என்ன செய்கிறார்கள் என்றால் — அது உள்ளிருப்பு வேலைநிறுத்தமாக இருந்தாலும் சரி, அல்லது லாக்-அவுட்டாக இருந்தாலும் சரி — தொழிலாளர்கள் அமைதியாகப் போராடினால் கூட அவர்களை கிரிமினல் அமென்ட்மென்ட் ஆக்டு 7(1)(ஏ) படி கைது செய்து ஜாமீனில் விட மறுத்து சிறையில் அடைக்கிறார்கள். உதாரணமாக காடம்பாறை நீரேற்று மின்விசை நிலையத்தில் — இந்துஸ்தான் கம்பெனி கான்ட்ராக்ட் எடுத்து இருக்கிறார்கள். அவர்களிடத்தில் வேலை செய்யும் 300 தொழிலாளர்கள் தங்களுக்கு 8 மணி நேரம் வேலை வேண்டும் என்று கேட்டதற்கு அந்த நிறுவனம் ஒப்புக்கொள்ளாத காரணத்தால், அந்தத் தொழிலாளர்கள் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டார்கள். அந்த உண்ணாவிரதப் போராட்டம் இருந்தவர்களைக் கைது செய்து சிறையில் அடைத்து வைத்து இருக்கிறார்கள். சிறு குழந்தைகளையும், பெண்களையும் சேர்த்து கிட்டத்தட்ட 300 பேர்களை சிறையில் அடைத்து வைத்து இருக்கிறார்கள். இதைத்தான் நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

சில ஆலைகளில் தொழில் தகராறுகள் எழுப்பப்பட்டு, லேபர் இலாகாவும், தொழிற்சங்கங்களும், நிர்வாகமும் சேர்ந்து பேசி ஒரு முடிவுக்குக் கட்டுப்படுகிறோம் என்று தொழிலாளர் ஆலோசனைக் குழுக்கள்முன் ஒப்பந்தம் கையெழுத்தான பின்பும் நடைமுறைப்படுத்துவது இல்லை. அப்படிப்பட்ட நேரங்களில் இந்த அரசு என்ன நடவடிக்கை எடுக்க முன் வந்து இருக்கிறது என்பதைத்தான் நாங்கள் இங்கே கேட்க விரும்புகிறோம்.

போக்குவரத்துக்கழகத் தொழிலாளர்கள் அத்தியாவசிய சர்வீஸில் இருப்பவர்கள்---அவர்கள் போராடுவது தவறு என்று சொல்லிவிட்டீர்கள். தலைமைச் செயலகத்தில், அரசுத் துறை

[திரு. எஸ். ஆண்டித்தேவர்] [1981 பிப்ரவரி 10

யில் இருக்கின்ற என்.ஜி.ஓ.க்கள் அத்தியாவசியச் சர்விசில் இருப்பவர்கள்—அவர்களும் வேலை நிறுத்தத்திலோ அல்லது வேறு போராட்டங்களிலோ ஈடுபடக்கூடாது என்று தடை விதித்து இருக்கிறார்கள். ஆகவே, எல்லாப் போராட்டங்களையும் தடை செய்கிற அளவிற்கு இந்தச் சட்டத்தில் விதிகள் உள்ளடங்கி இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மதுரை மாநகரத்தில் மின் துறை ஊழியர்கள் ஊதியம் அதிகம் வேண்டும் என்று போராடினார்கள். ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு, ஒப்பந்தம் செய்யப்பட்டது. ஆனால் அவர்கள் வேலைக்குச் சென்ற சில மாதங்களுக்குள், போராட்டத்தின்போது காட்டிக் கொடுத்த தொழிலாளர்களுக்கு 400 ரூபாய் போனஸ் கொடுக்கிறேன் என்று அறிவித்தார்கள். இது எதைக் காட்டுகிறது என்றால் இந்த அரசு தொழிலாளர் விரோதக் கொள்கையைக் கொண்டு இருக்கிறது என்பதைத்தான் என்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

தொழிலாளர்கள் உரிமையைப் பெறுவதற்காகப் போராடுகிறார்கள். அதன் மூலம் ஒரு ஒப்பந்தம் பெறுகிறார்கள், ஆனால் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடாமல், கருங்காலிகளாக இருந்தார்கள் என்பதற்காக அவர்களுக்கு ரூபாய் 400 அளிக்கிறது என்று சொன்னால், இந்த அரசு எந்த அளவிற்குத் தொழிலாளர் விரோதக் கொள்கையைக் கொண்டு இருக்கிறது என்பதை என்னால் உணராமல் இருக்க முடியவில்லை.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் போராடிக்கொண்டு இருக்கின்ற ஆசிரியர்கள், ஆராய்ச்சியாளர்கள் ஆகியோர் அனைவரும் இப்போது சிறையில் இருக்கிறார்கள். இங்கே நாங்கள் ஒத்தி வைப்புத் தீர்மானம் கொண்டு வந்து பேசிய நேரத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அரசின் சார்பில் நின்று அளித்த பதில், அவர்கள் வேலைக்குத் திரும்பட்டும். அதைப் பற்றிப் பேசுவோம் என்று சொன்னார்கள்.

[முற்பகல் 11–50]

20 ஆண்டுகளாக ஊதிய உயர்வு கிடைக்காமல் பேராசிரியர்கள், ஆராய்ச்சியாளர்கள் போராட்டம் நடத்தி, இன்றைக்கு அவர்கள் எல்லாம் சிறை பிடிக்கப்பட்டிருக்கிறார்கள். இதனால் மாணவர்கள் மத்தியில் இருக்கிற நல்ல எண்ணம் கெட்டுவிடும். அந்த நன்மையைக் கருதியாவது, பொது மக்கள் நலன் கருதியாவது சிறையிலே இருக்கிற ஆசிரியர்களை விடுதலை செய்ய வேண்டுமென்று கேட்ட நேரத்தில் 'வேலைக்கு திரும்பட்டும்; நாங்கள் பார்க்கிறோம்; கவனிக்கிறோம்' என்று இங்கே சொன்னார்கள். சிறையிலே இருப்பவர்கள் எப்படி வேலைக்குப் போவார்கள். சிறையிலே 750 பேர்களுக்கு மேல் இருக்கிறார்கள்.



1981 பிப்ரவரி 10] [திரு. எஸ். ஆண்டித்தேவர்]

இங்கே கேட்டதற்கு சொல்லப்பட்ட பதில், அவர்கள் வேலைக்குத் திரும்பட்டும், நாங்கள் கவனிக்கிறோம் என்பது. இதெல்லாம் எந்த அளவிற்கு பணியாளர்களுக்கு, தொழிலாளர்களுக்கு விரோதமாக இருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்டுவது எங்களுடைய கடமை என்பதால் இந்தத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறோம்.

அதுமட்டுமல்ல. அரசுப்பணியிலிருந்து விடுவிக்கப்பட்டவர்கள் எல்லாம் தங்கள் வேலைக்குப் போய்விட்டார்களா என்பதும் தெரியவில்லை. இன்றைக்கு அவர்கள் சிறையிலே வாடிக் கொண்டிருக்கிறார்கள். சில ஆலைகளிலுள்ள தொழிலாளர்கள் மட்டுமல்ல; அரசுப் பணியிலே இருக்கக்கூடியவர்கள் கூட சிறையிலே இருக்கின்றார்கள். (மணியடிக்கப்பட்டது) இன்னும் 5 நிமிடங்கள் கொடுங்கள்; அதற்குள் முடித்துவிடுகிறேன்.

இன்றைக்கு இந்த அரசாங்கமும், ஆலைகளிலே செய்வதைப் போல ஏன் செய்ய வேண்டும் என்பது எங்களுக்குப் புரியவில்லை. ஒரு தொழிலாளர் 240 நாட்கள் தொடர்ந்து பணியிலிருந்தால், அரசுப் பணியில் இருந்தாலும் சரி, ஆலைப் பணியில் இருந்தாலும் சரி, அவர் நிரந்தரமாக்கப்பட வேண்டும் என்பது விதி. ஆனால் என்ன நடக்கிறது? ஒரு தொழிற்சாலையில் ஒருவர் தொடர்ந்து வேலை பார்க்கிறார் என்றால் அவரை 239-ஆவது நாளில் வெளியே அனுப்பிவிட்டு, இரண்டு நாட்கள் கழித்து மீண்டும் எடுத்துக் கொள்கிறார்கள்; இப்படி 10 ஆண்டுக் காலத்திற்கு மேல் இருக்கிறார்கள். அதே மாதிரி அரசுப் பணியிலே ஒருவர் தொடர்ந்து பணியில் இருந்தாலும் 239 ஆவது நாள் வந்தவுடன் அவரை வெளியே அனுப்பிவிட்டு, 10 அல்லது 15 நாட்கள் கழித்து மீண்டும் எடுத்துக் கொள்கிறார்கள். இங்கே இருக்கிற செக்ரெட்டேரியேட்டில் கூட அப்படி நடக்கிறது. 10 ஆண்டுக் காலத்திற்கு மேல் அவர்கள் பணி செய்திருந்தாலும் நிரந்தரமாக்கப்படாமல் இருக்கிறார்கள். ஆகவேதான் அவர்களுடைய உரிமையைப் பெறுவதற்கு, நியாயத்திற்காக போராட்டம் நடத்துகிறார்கள். 'கலெக்டிவ் பார்கெயின்' என்ற முறையில் போராடினால்தான் தங்களுடைய உரிமையைப் பெற முடியும் என்று கருதி போராடுகிறார்கள். அந்த உரிமையைக் கூட பறிக்கிறது இந்த அரசு. அதற்காகக் கொண்டு வந்திருக்கிற சட்டத்தைப் பார்த்தால் அது மிகவும் கொடுமையானது. ஒரு தொழிலாளர் இரண்டு ரூபாய்க்காக போராடினால் அவனுக்கு ஓராண்டு ஜெயில் அல்லது 2,000 ரூபாய் அபராதம் அல்லது இந்த இரண்டும் சேர்த்து தண்டனை வழங்கப்படுகிறது. ஆகவே இந்த அரசு தொழிலாளர் விரோத போக்கிலிருந்து தன்னுடைய போக்கை மாற்றிக் கொள்ள வேண்டும் என்பதற்காக மட்டுமல்ல; இப்போது இருக்கிற இந்தச் சட்டத்தையும் வாபஸ் பெற வேண்டும்

என்பதற்காகவும் நாங்கள் இந்தத் தீர்மானத்தை ஆதரித்து, உங்களுடைய போக்குக்கு கண்டனம் தெரிவித்து, விடை பெறுகிறேன்.

*திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இன்றைக்கு ஆளும் கட்சிக்குத் தோழமைக் கட்சிகளாக இருக்கின்ற நாங்கள் இந்தக்கண்டனத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருப்பதைக் கண்டு ஆளும் கட்சியிலே இருக்கிற அருமை நண்பர்கள் விழிகள் வியப்பினால் விரிவடைந்துள்ளன. எதனால் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்தோம் என்பதை எனக்கு முன்னால் பேசிய தோழமைக் கட்சித் தலைவர்கள் விரிவாகச் சொல்லியிருக்கிறார்கள். ஒரே வரியில் சொல்வதானால்,

" இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பா ரிலானுங் கெடும்."

என்று வள்ளுவர் சொன்னதற்கு ஒப்ப, இன்றைக்கு இந்த அரசு தவறான பாதையிலே செல்வதைத் தடுத்து நிறுத்தி, சரியான பாதையிலே இந்த அரசை நடத்திச் செல்ல வேண்டிய ஒரு பொறுப்பும் கடமையும் எங்களைப் போன்ற தோழமைக் கட்சியினருக்கு உண்டு என்பதை ஆளும் கட்சியினர் ஏற்றுக் கொள்வார்கள் என்று நம்புகிறேன். அதிலும் ஏழை எளிய மக்கள் ஆதரவைப் பெற்று, தொழிலாளர் மக்களின் ஆதரவைப் பெற்று நீங்கள் ஆட்சிப் பீடத்திற்கு வந்திருக்கிறீர்கள் என்பதை நீங்கள் தயவு செய்து மறந்துவிடக் கூடாது.

சென்ற தேர்தலிலே இந்தத் தமிழகத்தில் இருக்கக்கூடிய ஏழை எளிய மக்கள், பெரும்பாலோர் இந்த ஆட்சி அமைய வேண்டும், நம்முடைய அணி வெற்றி பெற வேண்டும் என்ற எண்ணத்தை மனதிலே கொண்டு, மிகப் பெரிய எதிர்ப்புக் இடையே நம்மை வெற்றிபெற வைத்தார்கள் ; உங்கள் கரத்திலே ஆளும் பொறுப்பை ஒப்படைத்தார்கள்.

ஆனால், இன்றைக்கு ஏழை எளிய மக்களுக்கு விரோதமான பாதையிலே இந்த அரசு கொஞ்சம் கொஞ்சமாக திரும்புவதைப் பார்க்கின்றபோது என் போன்றவர்களின் மனம் மிக்க வேதனைப் படுகின்றது. அதிலும் தொழிலாளர் விரோதக் கொள்கைகளை இந்த அரசு ஒன்றன் பின் ஒன்றாக அமல் நடத்தி வருவது பற்றி எனக்கு முன்னாலே பேசிய மற்ற நண்பர்கள், மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் சுட்டிக்காட்டி இருக்கிறார்கள்.

மேலும், இந்த அரசின் தொழிலாளர் நலப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கின்ற நம்முடைய மாண்புமிகு அமைச்சர் திரு. இராகவானந்தம் அவர்கள் சிறந்த ஒரு தொழிற்சங்க



வாதியாக தன்னுடைய பொது வாழ்வைத் தொடங்கியவர். பெரியார் அவர்களின் சீடனாகத் தன்னுடைய வாழ்வைத் தொடங்கி அண்ணாவின் அருமைத் தம்பியாக மலர்ந்து, அன்றைய ஒன்றுபட்ட திராவிட இயக்கத்தின் ஒரு தலையாய தொழிற்சங்கவாதியாக, முதல் தொழிற்சங்க வாதியாக திகழ்ந்தவர். எங்களுடைய பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் இவர்கள் மீது எந்த அளவுக்கு மதிப்பும் மரியாதையும் வைத்திருந்தார் என்பதை இந்த அவையிலே சொல்ல வேண்டிய கடமை எனக்குண்டு. இவரைப்போன்ற ஒரு நல்ல தொழிற்சங்கத்தலைவர் நம்முடைய கட்சியிலே இருப்பாரேயானால் அவரை வைத்துக்கொண்டு தொழிற்சங்கத்தைப் பெரிதாக வளர்க்கலாம் என்று பெருந்தலைவர் அவர்கள் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் செயற்குழு கூட்டத்திலே ஒரு தடவை சொன்னார். இத்தகைய சிறந்த ஒரு தொழிற்ச்சங்கவாதியாக இயங்கியர், கொஞ்சம் கொஞ்சமாக தொழிலாளர் விரோதக் கொள்கையிலே செல்லும்போது என்னைப் போன்றவர்கள் மிக்க வருத்தப்படுகிறோம். இது அவர்கள் இதுவரை ஏற்றுக்கொண்டிருந்த அந்த அடிப்படைக் கொள்கைக்கே முரணானது. அருமை நண்பர் திரு. உமாநாத் அவர்கள் ஒன்றன் பின் ஒன்றாக இங்கே பலவற்றைச் சுட்டிக் காட்டினார்கள். இன்றைக்கு தொழிலாளர் நலத் துறையிலே சிறந்த அதிகாரிகள் இல்லையா என்றால் இருக்கிறார்கள். நல்ல தொழிற்ச்சங்க வாதியாக இருந்த அமைச்சரவர்களும் இருக்கிறார்கள். இப்படியெல்லாம் இருந்தும் உங்களை எல்லாம் மீறி இன்றைக்கு தொழிற்ச்சங்கங்களை ஒடுக்குகின்ற வகையிலே சட்டங்கள் ஒன்றன் பின் ஒன்றாக வருவதும் அந்த சட்டங்களை நீங்களே ஆதரித்துப் பேசுவதும் ஆன ஒரு நிலைமை என்ன காரணத்தால் ஏற்பட்டது என்பதை என் போன்றவர்கள்அறிய விரும்புகிறோம்.

நேற்றைய தினம் இங்கே ஆளுங்கட்சியின் கொரடாவாக இருக்கின்ற நம்முடைய மாண்புமிகு திரு. மணிமாறன் அவர்களும், அருமை நண்பர் திரு. தாமரைக்கனி அவர்களும் ஈரோட்டிலே நெசவாளர்களின் பேராட்டத்தைப் பற்றிய ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்தார்கள். அந்தத் தீர்மானத்திலே பேசுகின்றபோது அவர்கள் சொன்ன கருத்து என்ன ? எதனாலே நெசவுத் தொழிலாளர்கள் ஈரோட்டிலே போராடிக்கொண்டிருக்கிறார்கள், அங்கே இருக்கக் கூடிய மாஸ்டர் வீவர்கள் தொழிலாளர்களை எப்படியெல்லாம் சுரண்டி வருகிறார்கள் என்பதைப் பற்றி எல்லாம் இங்கே சொன்னார்கள்.

ஆனால், அங்கே மட்டுமல்ல. ஒவ்வொரு தொகுதியிலும் அப்படிப்பட்ட நிலமைகள்தான் இருக்கின்றன. மதுரை, ஈரோடு, சின்னாளப்பட்டி போன்ற இடங்களிலுள்ள நெசவாளர்கள் பெரிய போராட்டங்களிலே ஈடுபட்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் சொந்தத் தொகுதியான மதுரை மேற்கு

தொகுதியிலே 20,000 நெசவாளர் குடும்பங்கள் ஒரு வேளை உணவுக்குக் கூட வழி இல்லாமல் ஒரு மாதமாகப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். பாஸ்டர் அவர்கள் தங்களுடைய தொழிற்சாலைகளை எல்லாம் மூடிவிட்டனர். ஆனால் 20,000 தொழிலாளர் குடும்பங்கள் நடுத்தெருவிலே மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் தொகுதியிலே நிற்கிறார்கள். என்னுடைய தொகுதியிலேயும், நண்பர் சங்கரய்யாவின் தொகுதியிலும் ஆயிரக் கணக்கான நெசவுத் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இதற்கெல்லாம் என்ன காரணம் என்று கேட்டால் மாஸ்டர் வீவர்கள் சொல்கிறார்கள் ''மில்களிலிருந்து அளிக்கப்படுகின்ற நூலின் விலை உயர்ந்துவிட்டது. ஆகவே, தொழில் நடத்த எங்களுக்குக் குறைந்த விலையில் நூல் கிடைக்க வேண்டும். இல்லாவிட்டால் தொழில் நடத்த மாட்டோம்'' என்று சொல்லி விட்டார்கள். ஆனால், இந்த நூல் விலையேற்றத்திற்கு என்ன காரணம் என்று மில் அதிபர்களைக் கேட்டால் ''மின்சார வெட்டு வந்ததால் நூல்விலையை உயர்த்த வேண்டியதாகிவிட்டது'' என்று சொல்கிறார்கள். மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் அவர்கள் டிசம்பர் மாதம் ஒன்றாம் தேதி முதல் மின்சார வெட்டு வருகின்றது என்று அறிவித்தார்கள். அதிலும், எவ்வளவு என்று அறிவிக்கின்றபோது 30 சதவீதம் என்றும் அதுவும் இரண்டு ஷிப்டுகள் ஓடக்கூடிய பஞ்சாலைகளில் மூன்றாவது ஷிப்டு ஓடினால் அதற்கு 30 சதவீதம் மின்வெட்டு என்றும் தெளிவாகச் சொல்லி இருக்கிறார்கள். ஆனாலும், இன்றைக்கு பஞ்சாலை முதலாளிகள் என்ன செய்திருக்கிறார்கள். இரண்டே ஷிப்டு ஓடக்கூடிய பஞ்சாலைகளின் முதலாளிகளும் அதாவது மின்வெட்டு அமலுக்கு வராத பஞ்சாலைகளின் முதலாளிகளும் நூலின் விலையை ஒரு பேலுக்கு 600 ரூபாய் முதல் 800 ரூபாய் வரை உயர்த்தி இருக்கிறார்கள்.

[நண்பகல் 12–00]

5 கிலோ கொண்ட பண்டில் ஒன்றுக்கு 10 ரூபாய் முதல் 15 ரூபாய் வரை விலை உயர்த்தப்பெற்றிருக்கிறது. தமிழ்நாடு பூராவும் இப்படி ஒரேயடியாக விலையை உயர்த்தியிருக்கிறார்கள். மின் வெட்டைக் காரணமாகக் கொண்டு இப்படிப்பட்ட மில்கள் நூல் விலையை உயர்த்தியதின் விளைவாக நெசவாளக் குடும்பங்கள் வேலை இல்லாமல் தெருவிலே நின்று திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். அதைத் தடுப்பதற்கு அரசாங்கம் இதுவரை என்ன செய்தது என்பதைத்தான் நான் அறிய விரும்புகிறேன். எந்த நடவடிக்கையும் இதுவரை எடுக்கவில்லை. அதனால், இன்றைக்கு தமிழ்நாட்டில் உள்ள பல்லாயிரக்கணக்கான நெசவாளக் குடும்பங்கள் பாதிக்கப்பெற்றிருக்கிறார்கள். தனிப்பட்ட முதலாளிகள் உயர்த்தியிருந்தால் கொள்ளை அடிக்கிறார்கள் என்று கூற்றம் சொல்லலாம். ஆனால், அரசாங்கம் ஏற்று நடத்துகிற

1981 பிப்ரவரி 10] [திரு. ப. நெடுமாறன்]

அரசாங்கத்தின் பொறுப்பிலே இருக்கிற கூட்டுறவு நூற்பு ஆலைகளும், மத்திய அரசின் கண்காணிப்பிலே இருக்கக் கூடிய நேஷனல் டெக்ஸ்டைல்ஸ் கார்ப்பரேஷன் நடத்துகின்ற ஆலைகளும் கூட இந்த அளவு நூல் விலையை உயர்த்தியிருக்கிறார்கள். கொஞ்சம் கூட குறையாமல், அப்படி உயர்த்தியிருப்பது எப்படி சரியாகும் என்று கேட்கிறேன். சாதாரண ஏழை நெசவாளிகளுக்குக் குறைந்த விலையில் நூல் கிடைக்க வேண்டும் என்பதற்காகவே தான் கூட்டுறவு நூற்பு ஆலைகள் அமைக்கப்பெற்றது. ஆனால், அந்த நூற்பு ஆலைகளும் இன்றைக்கு ஒரு பேலுக்கு 800 ரூபாய் வரை உயர்த்தியிருக்கிறது என்றால் அதை எப்படி இந்த அரசாங்கம் அனுமதித்துக்கொண்டிருக்கிறது என்பதைத்தான் என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.

அதே போல் இங்கே கைத்தறி நெசவாளர்களுக்கு அவர்களுடைய வேலைக்கு பாதுகாப்பு இல்லை. அவர்களுடைய வேலைக்கு பாதுகாப்பு அளிக்கிற சட்டத்தைக் கொண்டு வருவதாகச் சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே இந்த அரசு அறிவித்தது. ஆனால், அது இன்னமும் செயல்படுத்தப் பெறவில்லை. அந்தச் சட்டத்தை உடனடியாகக் கொண்டு வந்து நெசவாளர்களுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்று இந்த அரசை நான் வேண்டிக் கொள்கிறேன்.

அதைப்போலவே இங்கே பக்கிங்காம் கர்நாடிக் ஆலையைப் பற்றி விரிவாக எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. நிறையபேர்கள் இங்கே அதைப்பற்றி பேசியிருக்கிறார்கள். ஆகையினால் நான் அதிக நேரத்தை எடுத்துக்கொள்ள விரும்பவில்லை. ஆனால், இந்த பக்கிங்காம் கர்நாடிக் ஆலையில் பணி செய்த 13,000 தொழிலாளர்களும் அவர்களுடைய குடும்பங்களும் இன்றைக்குத் தெருவிலே நிர்க்கதியாக நிற்கக் கூடிய நிலையிலே மாநில அரசும் மத்திய அரசும் விட்டு வைத்திருக்கிறதே. அதை எடுத்துச்சொல்லித்தான் ஆக வேண்டும். அந்த ஆலை மூடப்பட்டு விடும் அந்த நிலையில் இருக்கிறது என்று சொல்லப்பெற்ற நேரத்திலே, மத்திய அரசாங்கத்திலிருந்து இங்கு வந்த அமைச்சர் ஒருவர் என்ன சொன்னார்கள்? அந்த பக்கிங்காம் கர்நாடிக் ஆலை காயலாங் கடைக்கு போக வேண்டிய சரக்கு. அதை ஏற்றுக் கொள்வதற்கு நாங்கள் ஒருபோதும் முன் வர மாட்டோம் என்பதைப்போலவே மத்திய அமைச்சர் அவர்கள் பேசினார்கள்.

இந்தியாவிலேயே சிறந்த ஆலை என்று பெயர் பெற்ற ஒரு ஆலை. இந்த ஆண்டு மூடப்படுவதற்கு முன் தினம் வரை வேலை செய்துக்கொண்டிருந்த ஒரு ஆலை. நூற்பாலைகளிலேயே மிகச் சிறந்த ஆலையாக கருதப் பெற்ற அந்த ஆலையை காயலாங் கடைச் சரக்கு என்று மத்திய அமைச்சர் ஒருவர் வர்ணித்துச் சொல்லியிருக்கிறார். ஆனால், தொழிலே எதுவும் நடைபெறாமல், ஒரு கார் கூட உற்பத்தி செய்யப்பெறாமல் இருந்த மாருதி

தொழிற்சாலையை மாத்திரம் 5½ கோடி ரூபாய்க்கு நஷ்ட ஈடு கொடுத்து மத்திய அரசே ஏற்றதே. அதையும் ஆளும் கட்சியான அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும், எதிர்க்கட்சியான திராவிட முன்னேற்றக் கழகமும் அங்கே நாடாளுமன்றத்திலே வரவேற்று ஓட்டு போட்டார்களே, ஏன் இங்கே நம்முடைய பக்கிங்காம் கர்நாடிக் ஆலையை மத்திய அரசு எடுத்துக்கொள்ளத்தான் வேண்டும் என்று ஒரு தீர்மானத்தை இந்த சட்ட மன்றத்தில் போட்டு நிறைவேற்றி அனுப்பி வைத்தால் என்ன? அதற்கு திராவிட முன்னேற்றக் கழகமும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் தயாரா என்றுதான் நான் கேட்க விரும்புகிறேன். இங்கேகூட நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் கருப்பையா அவர்கள் அத்தகைய தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதை நிறைவேற்றி அனுப்ப நீங்கள் தயாராக இருக்கிறீர்களா என்பதை அறிய விரும்புகிறேன். (குறுக்கீடு).

திரு. ஆர். சுந்தரமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மாநில அரசின் தொழிற் கொள்கையை எதிர்த்துக் கொண்டு வந்த தீர்மானத்தின் மீது பேசுகிறாரா? அல்லது மத்திய அரசின் தொழிலாளர் விரோத போக்கை எதிர்த்துப் பேசுகிறாரா என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன்

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்கு அவருடைய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த நண்பர்களே விடை கொடுத்திருக்கிறார்கள். அதையும் நான் இங்கே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். நேற்றையதினம் மத்திய வர்த்தகத் துறை அமைச்சர் பிரணாப் குமார் முகர்ஜி அவர்கள், சென்னை வந்தபோது அவரை இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மதிப்பிற்குரிய திண்டிவனம் இராமமூர்த்தி அவர்களும், திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களும் சென்று சந்தித்திருக்கிறார்கள். அவரிடம் இவர்கள் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால், இந்தப் பிரச்சினையில் தீர்வு காண்பதில் மாநில சர்க்காருக்கு அக்கறை இல்லை, ஆகவே, மத்திய அரசுதான் இதில் அக்கறை காட்ட வேண்டும் என்று எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

இதை ஆளும் கட்சியைச் சார்ந்த நண்பர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். பி அண்ட் சி ஆலைத் தொழிலாளர்கள் மத்தியில் போய் இந்த மாநில அரசுக்கு-உங்களிடம் அக்கறை இல்லை என்று சொல்வதை நோக்கமாகக் கொண்டிருக்கிறார்கள், அவர்கள். ஆனால் நீங்கள் இன்னும் மத்திய அரசை எதிர்த்துக் கேட்பதற்கு யோசிக்கிறீர்கள். அதற்கு நல்ல நேரம் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். இது தவறு. மாறாக இந்த அவையில்





பி. அண்ட் சி. ஆலையை மத்திய அரசு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று ஒரு தீர்மானத்தை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் அவர்கள் கொண்டுவந்திருக்கிறார்கள். அதை ஆளும் கட்சி ஆதரித்து இந்த அவையில் நிறைவேற்றுவதன் மூலம்தான் நீங்கள் இந்தப் பிரச்னையில் உண்மையான அக்கறை கொண்டிருக்கிறீர்கள் என்பதை நிலைநாட்டுவதற்கு வழி ஏற்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேநேரத்தில் மாநில அரசு இதை எடுத்துக்கொள்வதற்கான அதிகாரம் இல்லை; மத்திய அரசு இதை எடுத்துக்கொள்வதற்கான அதிகாரத்தை வைத்திருக்கிறது. நேஷனல் டெக்ஸ்டைல் கார்ப்பரேஷன் நிறுவனம் மூலம் மத்திய அரசு எடுத்துக்கொள்கிற அதிகாரத்தை வைத்திருப்பதால் மத்திய அரசை நோக்கி இந்தப் பிரச்னையை எழுப்புவதற்கு என் போன்றவர்கள் முன்வந்திருக்கிறோம். அதற்கு ஆளும் கட்சியும் ஒத்துழைக்கவேண்டும் என்று வலியுறுத்த விரும்புகிறேன். மத்திய அமைச்சர் முன்னாலும், நம்முடைய மாநில முதலமைச்சர் அவர்களிடமும், தொழிற் சங்கத் தலைவர்களிடமும் ஆலை நிர்வாகிகள் கொடுத்த உறுதிமொழி என்ன? இந்தப் பிரசனை தீருகிற வரையில் எந்தச் சொத்துக்களையும் விற்கமாட்டோம் என்று உறுதிமொழி கொடுத்தார்கள் ஆனால் என்ன நடந்திருக்கிறது சென்ற ஜூன் 16-ஆம் தேதி அவர்கள் திருப்பூரில் ஒரு காட்டன் ஜின்னிங் பிரஸ், ஆந்திராவில தாட்பத்ரியில் இந்த ஆலை நிர்வாகிகளுக்குச் சொந்தமான காட்டன் பிரஸ்க்கு பகிரங்கமாக விற்பதற்கான விளம்பரத்தை தினத்தந்தி பத்திரிகையில் கொடுத்திருக்கிறார்கள். இதை எதிர்த்து தொழிலாளர்கள் உயர்நீதிமன்றத்திற்கு போனார்கள். உயர்நீதி மன்றம், இந்தத் தொழிற்சாலையை விற்காமல் தடுக்க வேண்டும் என்று கேட்கிற உரிமை தொழிலாளர்களுக்குக் கிடையாது, அங்கே இருக்கக்கூடிய பங்குதாரர்களுக்குத்தான் அந்த உரிமை உண்டு என்று சொல்லி தொழிலாளர்களின் மனுவை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்துவிட்டது. இந்த நிலைமையில் அந்த நிர்வாகத்திற்கு நல்ல வருமானம் கொடுத்துக்கொண்டிருக்கக்கூடிய நல்ல சொத்துக்களை ஒன்றன்பின் ஒன்றாக அவசர அவசரமாக விற்பதற்கான நடவடிக்கைகளில் அந்த ஆலை நிர்வாகம் ஈடுபடுகிறது என்றால் அதைத் தடுப்பதற்கு இது வரையில் இந்த அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று நான் குற்றஞ்சாட்டுகிறேன். அதற்கான நடவடிக்கைகளை நீங்கள் நிச்சயமாக எடுக்கவேண்டும். நடவடிக்கை எடுத்து அதைத் தடுப்பதற்கு முன்வரவேண்டுமென்று வலியுறுத்த விரும்புகிறேன்.

அடுத்து, இங்கே நம்முடைய விவசாயத் தொழிலாளர்களைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு இளையபெருமாள் அவர்கள் சொன்னார்கள். விவசாயத் தொழிலாளர்களுக்கு குறைந்த

பட்சக் கூலி கொடுக்க மறுக்கிற நிலப்பிரபுக்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுப்பதற்கு இந்த அரசு முன்வரவில்லை. ஏழை விவசாயத் தொழிலாளர்களை ஒடுக்கி வருகிற நிலப் பிரபுக்களின் மீது எந்த நடவடிக்கையும் இந்த அரசு இதுவரையில் எடுக்க வில்லை. திரு இளைய பெருமாள் அவர்கள் சொன்ன ஒரு குற்றச்சாட்டு 12 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களை பண்ணைகளில் கட்டாயமாக வேலை பார்க்கவேண்டுமென்று நிலப்பிரபுக்கள் கொடுமைப்படுத்துகிறார்கள் என்று சொன்னார்கள். தஞ்சை மாவட்டத்தில் கொடுமைப்படுத்தப்படுகிறார்கள் என்று சொன்னார்கள். அந்த நிலப்பிரபுக்கள் யார் என்று பெயர் சொல்ல முடியாதபொரு அரசியல் கட்டாயத்தில் இருக்கிறார். அதனால் அவர் பெயர்களைச் சொல்லவில்லை. அந்த நிலப் பிரபுக்கள் எங்கே இருந்தாலும் அவர்கள் எவ்வளவு பெரிய பதவியில் இருந்தாலும் எந்தக் கட்சியில் இருந்தாலும் அந்த நிலப்பிரபுக்கள் மீது நடவடிக்கை எடுக்க அரசு முன்வரவேண்டும்.

திரு. எல். இளையபெருமாள் : நான் ஏதோ கட்டாயம் காரணமாக பெயர்களைச் சொல்ல முடியாத ஒரு அவல நிலையில் இருக்கிறேன் என்று சொன்னார்கள். அப்படி தயவுசெய்து நினைக்கவேண்டாம். அது தஞ்சை மாவட்டமாக இருந்தாலும் சரி அல்லது தென் ஆற்காடு மாவட்டமாக இருந்தாலும் சரி அல்லது மதுரை மாவட்டமாக இருந்தாலும் சரி நான் சொல்வது குழந்தைகள் சட்டம் இருந்தும் அந்தச் சட்டத்தை தாலுகா தாசில்தார்களிடம் தள்ளிவிட்டு விட்டதால் இந்த ஆபத்து என்பது தான். அதற்காக லேபர் இலாகாவில் ஒரு தனி அதிகாரியை நியமித்து நடவடிக்கை எடுக்கவேண்டும். இதை நான் 1952 ல் இருந்து சொல்லி வருகிறேன். இந்து சமயத்தில் பெரும் நம் பிக்கை உள்ள அரசாங்கம் கன்ஸர்வேட்டிவ் டைப்பாக இருப்ப தால் இதைக் கொண்டுவரவில்லை என்று சொல்லி இந்த அரசு நிச்சயமாக அதைச் செய்யவேண்டுமென்றுதான் சொன்னேன். யாருக்கும் நான் பயப்படவில்லை.

(பிற்பகல் 12.10)

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு உறுப்பினர் இளையபெரு மாள் அவர்கள் யாருக்கும் அஞ்சமாட்டேன் என்று சொல்லி யிருக்கிறார்கள். அதற்காக நான் ரொம்ப மகிழ்ச்சி யடைகி றேன். அப்படியிருந்ததால்தான், அந்தக் கட்சியிலே அவர் பல சவுடங்களுக்கு ஆளானார்கள் என்பது மிகப் பெரிய உண்மை. . . .

திரு. எல். இளையபெருமாள்: இது இன்னும் மோசமான விஷயம். தயவுசெய்து நான் சொல்கிறேன். தஞ்சை மாவட் டத்திலே உள்ள கருப்பையா மூப்பனாராக இருந்தாலும் சரி அல்லது நெடுமாறனுடைய பண்ணையாக இருந்தாலும் சரி இரண்டு பேர்களும் ஒன்றுதான். 1948 ஆம் ஆண்டு சட்டத்திற்கு மதிப்பு கொடுக்காமல், 1951 ஆம் ஆண்டு குழந்தைகள் சட்டத்



திற்கு மதிப்பு கொடுக்காமல் யார் தவறு செய்தாலும், அவர்கள் மீது இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : குழந்தைகள் வேலைக்கு அமர்த்தப்படுகின்றார்கள், அதை தடை செய்ய வில்லை என்று சொன்னார்கள். தொழிற் சட்டத்தை மீறி அவ்வாறு குழந்தைகளை அமர்த்திய குற்றத்திற்காக 1980 ஆம் ஆண்டில் 1,308 பேர்கள் மீது வழக்குகள் தொடரப்பட்டிருக்கின் றது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எல். இளையபெருமாள் : விவசாயத் தொழிலாளர்கள் சட்டத்தின் மீது அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று நான் சொன்னேன். அந்த மாதிரி நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கின்றதா என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார் களா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இது பற்றியப் புகார்கள் இராமநாதபுரம் மாவட்டத்திலே இருந்து நிறைய வந்ததால், அந்த இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவரின் கீழ் ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. கருப்பையா : துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொன்ன ரெபரன்சிலே இருந்து ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு தீப்பெட்டித் தொழிற் சாலைகளிலே 6 வயது, 8 வயதுக் குழந்தைகளை வேலைக்கு அமர்த்தப்பட்டிருக்கின்றார்கள் என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதற்காகத் தான் இராமநாதபுரம் மாவட்டத்திலே கலெக்டர் அவர்கள் தலைமையிலே ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கின்றது என்று நான் சொன்னேன்.

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அதேபோல் இன்றைக்கு ஆசிரியர்கள் நிலை என்ன? எந்தப் பல்கலைக் கழகமாக இருந்தாலும், அங்கேயெல்லாம் அவர்கள் பல அவதிகளுக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் பெயரால் அமைக்கப்பட்டிருக்கின்ற தொழில் நுட்பப் பல்கலைக் கழகத்தில் இன்றைக்கு என்ன நிலைமை ? தொழிற்சங்கத்தின் தலைவராக ஒரு ஆசிரியர்

[திரு. ப. நெடுமாறன்] [1981 பிப்ரவரி 10

அங்கே இருக்கின்றார் என்ற காரணத்திற்காக, அந்தத் தலைவர் கணேசன் அவர்கள் மீது நிர்வாகம் நடவடிக்கை எடுத்து, 1980 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 23 ஆம் தேதியிலே சஸ்பெண்ட் செய்திருக்கிறது. அவருக்கு இதுவரை $\frac{1}{4}$ சம்பளம் கொடுக்கப்பட்டு வருகின்றது. இதைப்பற்றி நிர்வாகத்தினரிடம் போய் முறையிட முயன்ற அந்தச் சங்கத்தின் துணைத் தலைவர் செயலாளர் உட்பட 5 பேர்கள் மீது டிரெஸ்பாஸ் வழக்கு தொடரப்பட்டு அதன் பின் உங்கள் மீது கிரிமினல் வழக்குகள் இருக்கின்றன என்று குற்றம் சாட்டப்பட்டு, அவர்களும் சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கிறார்கள். இது தொழிற்சங்க உரிமையைப் பறிப்பதாகாதா? என்று நான் அமைச்சர் அவர்களைப் பார்த்து கேட்க விரும்புகிறேன். தொழிற்சங்கத் தலைவர் ஒரு நிர்வாகத்தைச் சந்திக்கச் செல்வதே டிரஸ்பாஸ் என்று சொல்லி குற்றம் சாட்டப்படுவாரானால், எந்தத் தொழிற்சங்க நிர்வாகியும் யாரையும் சந்தித்துப் பேச முடியாத ஒரு நிலைமை ஏற்படும். அப்படிப்பட்ட ஒரு அவல நிலைமை அண்ணா பல்கலைக் கழகத்திலே உருவாக்கப்பட்டிருக்கிறது. அங்கே இருக்கின்ற தொழிற் சங்க நிர்வாகிகள் அத்தனை பேர்கள் மீதும் இன்றைக்கு பல சிவில், கிரிமினல் வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன.

அதைப்போலவே, பச்சையப்பன் டிரஸ்டை இந்த அரசாங்கம் எடுத்திருக்கிறது. அதை நான் பாராட்டுகிறேன். பச்சையப்பன் டிரஸ்டை அரசாங்கம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று ஆசிரியர்களும், மாணவர்களும் ஒன்றுபட்டு போராடினார்கள். அப்படி ஒரு பெரிய போராட்டத்தை நடத்தியது, அரசாங்கத்தின் கோரிக்கைக்கு உதவியாக இருந்தது. அதற்குப்பின்னால் அரசாங்கம் அதை எடுத்துக்கொண்டது.

அரசாங்கத்திற்கு உதவிகரமாகப் போராடியதற்காக அந்த ஆசிரியர்களுக்கு இன்றைக்கு என்ன பரிசு அளிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால் நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள். வேலை நிறுத்த காலத்திற்கு அவர்களுக்குச் சம்பளம் பிடிக்கப்பட்டிருக்கிறது. இதற்கு முன்னால் இப்படி பழக்கம் இல்லை. வேலை நிறுத்த காலமாக இருந்தாலும் வேறு எதுவாக இருந்தாலும் கன்டோன் பண்ணுவதுதான் வழக்கம். வேண்டுமென்றே முந்தி இருந்த நிர்வாகம் அதைச் செய்தது. புதிய நிர்வாகம் அதை ரத்து செய்ய இந்த அரசாங்கம் ஆவன செய்யவேண்டுமென்று வற்புறுத்த விரும்புகிறேன்.

மதுரைப் பல்கலைக் கழகத்தில் என்ன நடக்கிறது? அமைச்சர் முன்னிலையிலே ஆசிரியர்களும் அலுவலர்களும் ஆராய்ச்சியாளர்களும் கலந்து கொண்டு முத்தரப்பு ஒப்பந்தம் ஏற்பட்டது. கல்வியமைச்சர் அவர்கள் இருந்தார்கள். என்னைப் போன்ற



1981 பிப்ரவரி 10] [திரு. ப. நெடுமாறன்]

சட்டமன்ற உறுப்பினர்களும் அதற்கு உதவிகரமாக இருந்தோம், ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. அந்த ஒப்பந்தத்தை இன்றளவும் அமல் நடத்த நிர்வாகம் மறுக்கிறது. ஆசிரியர்களை நிபந்தனை இல்லாமல் விடுதலை செய்யவேண்டுமென்பது அந்த ஒப்பந்தத்தில் முக்கியமான ஷரத்து. அரசாங்கம் அதை மறுத்து அந்த ஆசிரியர்கள் மன்னிப்புக் கடிதம் எழுதிக் கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்துகிறது. எந்த ஒப்பந்தமானாலும் நான் மதிக்கவேண்டிய அவசியமில்லை என்று இன்றளவும் ஆணவமாகப் பேசுகிறார் ரிஜிஸ்ட்ரார். ஆசிரியர்களையும் அலுவலர்களையும் கொஞ்சம் கூட மதிப்பதில்லை. ஆசிரியர்களும் அலுவலர்களும் வஞ்சம் தீர்க்கப்படுகிறார்கள், ரிஜிஸ்ட்ராரால்.

அதே போன்று அண்ணாமலைப் பல்கலைக் கழக ரிஜிஸ்ட்ரார் போக்கினாலும் பல மோசமான விளைவுகள் ஏற்படுகின்றன. உலகத் தமிழ் மாநாடு என்று சொல்லுகிறார்கள். நாம் பெருமைப்படுகிறோம். உலகத் தமிழ் மாநாட்டைப் பொறுத்து மதுரைப் பல்கலைக் கழக ரிஜிஸ்ட்ரார் செய்ததைச் சொன்னால் அதிர்ச்சி அடைவீர்கள். ஆனால் அவருக்கு ஆதரவாக இந்த அரசாங்கம் இருந்து கொண்டிருக்கிறது. தவறான காரியங்களை இந்த அரசாங்கம் தட்டிக் கேட்க முடியவில்லை. மதுரைப் பல்கலைக் கழகத்தில் ஆராய்ச்சி மாணவர்கள் தங்கியிருந்த விடுதியினை வெளிநாட்டுத் தமிழறிஞர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று அரசாங்கம் பல்கலைக் கழகத்திற்குச் சொன்னது. அதை மாணவர்கள் ஏற்றுக்கொண்டு 'எங்களுக்குப் பத்து அறைகளை ஒதுக்குங்கள், எல்லோரும் அதிலே இருந்து கொள்கிறோம், வெளியே படுத்துக் கொள்கிறோம், நாங்கள் வெளிநாட்டுத் தமிழறிஞர்களுக்கு உதவ முன்வருகிறோம்' என்று சொன்னார்கள். ஆனால் அந்த ரிஜிஸ்ட்ரார் 'ஒரு அறை கூடக் கொடுக்கமாட்டோம், வேண்டுமானால் மந்திரியிடம் சொல்லுங்கள், வெளியே போங்கள்' என்றார். ஆராய்ச்சி மாணவர்களை அரசாங்கத்திற்கு எதிராகத் தூண்டிவிட்டார். உலகத் தமிழ் மாநாடு நடைபெறுகிற நேரத்தில் மாணவர் போராட்டம் வெடிக்கவேண்டுமென்று திட்டமிட்டு அந்த ரிஜிஸ்ட்ரார் செய்தார். இன்றைக்கு நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன்—ஆளும் கட்சியில் இருக்கக்கூடிய முக்கியமான சிலர் கூட அந்த ரிஜிஸ்ட்ராரை ஊக்கப்படுத்துகிறார்கள். உங்களுக்கு விரோதமாக, மக்களுக்கு விரோதமாக, செயல்படுகிற ஒருவர், ஆசிரியர்கள் உரிமைகளை நசுக்குகிற ஒருவருக்கு ஆதரவாக ஆளும் தரப்பில் உள்ள முக்கியமானவர்கள் இருப்பது இந்த நாட்டுக்கும் நல்லதல்ல, உங்களுக்கும் நல்லதல்ல என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மணி அடிக்கப்பட்டது).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரத்தைவிட அதிகமாகக் கொடுத்தாகி விட்டது. பேராசிரியர் பேசிய பிறகு மாண்புமிகு அமைச்சர் பதிலுரைக்க வேண்டும்.

திரு. ப. நெடுமாறன் : கண்டனத் தீர்மானத்தை நானும் கொடுத்தவன் என்ற முறையில் சிறிது நேரம் கொடுக்க வேண்டும். எங்களுடைய கட்சியைச் சேர்ந்த யாரும் பேசவில்லை. நான் மட்டுந்தான் பேசுகிறேன்.

இதிலே இந்த அரசு எங்கே தவறு செய்கிறது என்பதையும் நான் இறுதியாகச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். முதலமைச்சர் அவர்களும், தொழிலாளர் நல அமைச்சர் அவர்களும் பாலிசி லெவலில் கொள்கை லெவலில் முடிவுகள் செய்யலாம். தொழிற்சாலையில் வேலை நிறுத்தம் நடக்கிறது, தகராறு ஏற்படுகிறது என்றால் எல்லாவற்றையும் இவர்களே நேரடியாகப் பார்த்து தீர்த்து வைப்பது என்பது இந்த ஜன்மத்தில் நடக்க முடியாது. அதை அரசாங்கம் முறைப்படி எப்படிச் செய்ய வேண்டுமோ அப்படிச் செய்ய வேண்டும். உங்களுக்குப் அவகாசம் இல்லை. தீர விசாரிக்கவும் முடியவில்லை. தொழிலாளர்கள் தெருவில் நிற்க வேண்டி வருகிறது.

(பிற்பகல் 12–20.)

ஆகவே தொழிலாளர் தகராறுகளில் வேடிக்கை பார்க்காமல் உடனுக்குடன் தலையிட்டு தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்துக்கொள்ள வேண்டும். 3, 4 மாத காலத்திற்குத் தொடர்ந்து தொழில் தகராறுகள் நடப்பதாலே தொழிலாளர்களுக்கு நட்டம் ஏற்படுகிறது. தேசிய நட்டம் ஏற்படுகிறது, உற்பத்தி குறைகிறது. இவைகளையெல்லாம் கணக்கிலே எடுத்துக்கொண்டு ஆர்பிட்ரேஷன் செய்து தீர்ப்பு வருகிற வரையிலே தொழில்களை அமைதியாக இயங்க வைக்கின்ற நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்தாக வேண்டும். ஆர்ப்பிட்ரேஷன் என்று வருகிறபோது ஹைகோர்ட் நீதிபதி நியமிக்க ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். ஆர்பிட்ரேஷனுடைய தீர்ப்பு 3 மாதம் அல்லது 4 மாத காலத்திலே அளிக்கப்பட வேண்டுமென்ற முடிவையும் அரசாங்கம் சொல்ல வேண்டும். அப்போதுதான் இப்படிப்பட்ட தகராறுகளுக்கு முடிவு காணமுடியும்.

தொழிற் சங்கங்களிலே ஏற்படுகிற போட்டாபோட்டிகளின் காரணமாக பல்வேறு சிக்கல்கள் ஏற்படுகின்றன. அரசியல் கண்ணோட்டத்துடன் பிரச்சினைகளை ஆராயாமல் தொழிலாளர் பிரச்சினையாகவே கருதி அதற்குரிய பரிகாரத்தைக் காண்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்துக்கொள்ளாதி

தவறிவிட்டது என்ற காரணத்தினாலே இந்தக் கண்டனத் தீர்மானத்தை ஆதரித்து என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

**திரு. க. அன்பழகன்** : மாண்புமிகு பேரவையின் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய முதலமைச்சர் மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்களுடைய அரசின் தொழிலாளர் விரோதக் கொள்கையையும் நடைமுறையையும் கண்டித்து இங்கே உள்ள எதிர்க்கட்சிகள் பலவும் தீர்மானம் தந்து திராவிட முன்னேற்றக் கழகமும் இந்தத் தீர்மானத்தைத் தந்து மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய துணைத் தலைவர் திரு. உமாநாத் அவர்கள் கொடுத்த தீர்மானத்தின் முன்னுரிமை காரணமாக இந்தத் தீர்மானத்தை ஆதரித்து திராவிட முன்னேற்றக் கழகம் இந்த அவையிலே தன்னுடைய கருத்துக்களை எடுத்து வைக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆளுங்கட்சியின் தொழிலாளர் நலனுக்கு மாறுபாடான கொள்கை திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த வரையிலே—மற்றக் கட்சிகளுக்கு ஒரு மடங்கு வருத்தம் என்றால்—திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இரண்டு மடங்கு வருத்தத்தைத் தரும் என்பதையும் தெரிவிக்க விரும்புகிறேன். திராவிடர் இயக்கம் தோன்றியதே கூட பிற்படுத்தப்பட்ட மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், ஒடுக்கப்பட்ட மக்களுடைய உரிமைகளை சலுகைகளைக் காப்பதற்காக என்ற அடிப்படையை நீதிக் கட்சி வரலாறு நாட்டுக்கு எடுத்துச் சொல்லும். அதைத் தொடர்ந்து தந்தை பெரியார் அவர்கள் சுயமரியாதை இயக்கத்தை தொடங்கினார்கள்.

வருமானத்தாலே பெறுகிற வாழ்வைப் போல தன்மானத்தாலே பெறுகிற வாழ்வும் உயர்ந்தது இரண்டும் சேர்ந்துநிலை நாட்டப்பட வேண்டும் என்ற கருத்தை தந்தை பெரியார் அவர்கள் எடுத்து வைத்தார்கள். எடுத்து வைத்தது மட்டுமல்ல, ஏறத்தாழ 40 ஆண்டுக்காலத்திற்கு முன்னாலே இந்தியாவிலே உள்ள பல்வேறு அரசியல்வாதிகளும் தலைவர்களும் ருஷ்ய நாட்டை, சோவியத் பூமியை மதிப்பதற்கு முற்படாத காலத்தில் தந்தை பெரியார் சோவியத் நாட்டிற்கு சென்று திரும்பிவந்து முதன்முதலாக பொதுவுடைமைக் கொள்கையால் ஏற்படக்கூடிய சமுதாய சமத்துவத்தைப் பற்றி நாட்டுமக்களுக்கு எடுத்துச் சொன்னார்கள். பெரியார் அவர்கள் எடுத்துச் சொன்னது மட்டுமல்ல, அதைத் தொடர்ந்து சிங்காரவேலனார் போன்ற பொதுவுடைமைவாதிகள் தமிழ்நாட்டிலே அந்தக் கொள்கையைப் பரப்பினார்கள். அந்த அடிப்படை உணர்வு திராவிட இன உணர்வோடு கலந்தது ஒன்று என்பதை வலியுறுத்திக் காட்ட விரும்புகிறேன். அரசியலில் ஏற்படுகிற கருத்து வேறுபாடுகளுக்

காக அடிப்படைகளை மறந்து விடுவது என்பது எதிர்காலத்தை இழந்துவிடுவது என்பதை நான் நினைவூட்ட விரும்புகிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் தந்தை பெரியார் அவர்களோடு துணை நின்ற காலத்திலே வேறு பல அரசியல் கட்சிகள் தொழிலாளர்களுக்காக போராட்டங்கள் நடத்திய நேரத்திலேயெல்லாம் அறிஞர் அண்ணா அவர்கள் அந்தப் போராட்டங்களுக்கு ஆதரவு அளித்தார்கள். அரசுக்கு அறிவுரை சொன்னார்கள். பொன்மலையிலே நடைபெற்ற இரயில்வே தொழிலாளர்கள் போராட்டத்திற்கு ஆதரவான கருத்தைத் தீட்டினார்கள். இன்னொரு கருத்தையும் வெளியிட்டார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தைப்பற்றிச் சொல்கிறபோது திராவிட முன்னேற்றக் கழகம் தொழிலாளர் நலனுக்காக வாதாடுகிறவர்களுடைய, போராடுகிறவர்களுடைய தோழர்கள், எந்த முகாமிலே இருப்பவர்களாக இருந்தாலும் அவர்களுக்கு துணையாக செயல்படும், தானே நேரடியாக போராட்டத்திலே குதிக்க நேரிடாவிட்டாலும் தன்னுடைய இயக்கத்திற்கு அல்லது கட்சிக்கு மாறுபட்ட உணர்வு உடையவர்கள் அந்தப் போராட்டத்தை நடத்தினாலும் தொழிலாளர்கள் போராட்டம், அவர்கள் பெறுகிற உரிமைகள், சலுகைகள் ஒரு நீண்டகால சமுதாய முன்னேற்றத்திற்குத் தேவையானது என்ற காரணத்தால் அதற்கு ஆதரவாக செயல்படவேண்டும், செயல்படுவோம் எங்களுடைய ஒத்துழைப்பு உண்டு என்று அவர்கள் பல முறை எடுத்துச் சொன்னார்கள். ஒரு வகையிலே இன்னும் நீங்கள் ஆழ்ந்து எண்ணிப் பார்ப்பீர்களேயானால், அறிஞர் அண்ணா அவர்கள் கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்களோடு வாதாடிச் சொல்லும் பொழுது தெரிவித்தார்கள். அகில உலக கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் யாராக இருந்தாலும், அவர்களோடு வாதாடுகின்ற வாய்ப்பு எனக்குக் கிடைக்குமேயானால், தென்னாட்டில் திராவிட முன்னேற்றக் கழகம் உண்மையான கம்யூனிஸ்ட் கட்சி என்பதை நான் வாதாடி நிலைநாட்டுவேன் என்று சொன்னார்கள். ஆனால், அந்த வாய்ப்பு கிடைக்கவில்லை. அறிஞர் அண்ணா அவர்கள் இருந்தால் அம்மாதிரி நிலைமை உருவாகியிருக்கும். வேண்டுமானல் இன்றைக்குத் தமிழ் நாட்டிலே திராவிட முன்னேற்றக் கழகத்திலே சில பிளவுகள் ஏற்பட்டு விட்ட காரணத்தாலே குழம்புகிற சிந்தனைக்கு இடம் ஏற்பட்டுவிட்டது என்று சொன்னாலும்கூட அறிஞர் அண்ணா அவர்கள் இருந்து இந்த இயக்கத்தை இன்றைக்கு நடத்தும் நிலை இருந்திருக்குமானால் என்னுடைய அருமை மார்க்சிஸ்டு கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்களுக்கும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்களுக்கும் நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நீங்கள் நடத்த வேண்டிய போராட்டங்களைப் போராட்டம் இல்லாமலேயே வெற்றி பெறக்கூடிய வாய்ப்பைத் திராவிட முன்னேற்றக் கழகம் பெற்றிருக்கும் என்பதை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.



எனவே, அந்த நிலையில் இருந்திருக்க வேண்டிய ஆளுங் கட்சி
யைச்சார்ந்த தலைவரும், அவர்களைச் சார்ந்த நண்பர்களும்
எப்படியோ அந்த அழுத்தமான உணர்வுகளிலிருந்து தங்களை
விலக்கிக் கொண்டு விட்டார்கள். காலத்தின் போக்கு என்று
சொன்னாலும் சரி, இடையிலே ஏற்பட்ட கருத்து மாற்றங்கள்
என்று சொன்னாலும் சரி அல்லது இவைகளெல்லாம் நிலைமையின்
விளைவு என்று வாதிட்டாலும் சரி, அந்த அடிப்படையிலிருந்து
விலகிச் செல்ல வேண்டிய நிலைமைக்கு ஆளாகிவிட்டார்கள் என்
பதை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்கள் எந்தவகையிலே
அந்தக் கருத்துக்களிலேயிருந்து விலகினார்கள் என்றால், பொது
மக்களைக் காண்கின்றபொழுது அவர்களுடைய மனத்தில் ஏதாவ
தொரு பிரச்னையை எடுத்து வைக்கும்பொழுது, ஒன்றுக்கு இன்
னொரு பிரச்னையைப் பரிகாரமாக வைக்கின்ற முறையை அவர்
கள் மேற்கொண்டார்கள். 1977-சட்டமன்றத் தேர்தல் நேரத்
திலேகூட முதலமைச்சரவர்கள் பேசினார்கள், அன்றைக்குக்
காங்கிரஸ் கட்சியோடு சேர்ந்து ஒரே மேடையிலே இருந்த நிலை
என்று கருதுகிறேன். நினைவு அவ்வளவு சரியாக உள்ளவன்
அல்ல நான். பேசுகிறபோது ஒரு கருத்தை அவர்கள் சொன்
னார்கள். இந்த நாட்டிலே உள்ள நடுத்தர நிலையிலே வாழ்
கின்ற அரசாங்க ஊழியர்கள், வேறு பல அமைப்பு முறையிலே
போராடுகின்ற ஆற்றல் பெற்ற தொழிலாளர்கள் தங்களுடைய
ஊதியம் 500 ரூபாயாக இருப்பது 600 ரூபாய் ஆக வேண்டும்,
700 ரூபாய் ஆகவேண்டும் என்று அவ்வப்போது போராடுகிறார்
கள். 1,000 ரூபாய் வரையிலே உள்ளவர்களெல்லாம் சேர்ந்து
சேர்ந்து போராடுகிறார்கள். ஆனால், அவர்கள்தான் இந்த நாட்
டிலே நிம்மதியாக வாழ்கிறார்கள். ஆனால், 5,000 ரூபாய்,
10,000 ரூபாய் சம்பாதிப்பவர்களும், அதற்குமேல் சம்பாதிப்
பவர்களும் அரசாங்கத்திற்கு வருமான வரி காட்டுவதற்குக் கணக்
குக்கூட வைக்க முடியாமல் திண்டாடுகின்ற ஒரு நிலை இந்த
நாட்டிலே இருக்கிறது. ஆனால், அரசு ஊழியர்களும், மற்ற
வர்களும் எண்ணிப் பார்க்க வேண்டும். அலுவல் கிடைக்காத
வர்கள், மிக குறைந்த வருமானத்திலே அமைப்பு முறையிலே
இடம் பெறாதவர்கள், அன்-ஆர்கனைஸ்ட் லேபர் என்ற நிலை
யிலே உள்ளவர்கள் தங்களுக்கு யார் பரிகாரம் சொல்வது என்று
கேட்பார்களேயானால் அப்பொழுது இந்த அரசு ஊழியர்களும்,
மற்றவர்களும் என்ன செய்வார்கள் என்ற ஒரு கருத்தைப் பொது
வாக கேட்டார்கள்.

அந்தக் கேள்வி ஒருவருக்கொருவர் வாதம் என்ற முறையிலே
ஒருவேளை கேட்க கூடிய கேள்வியாகக் கூட இருக்கலாம்.
ஆனால், கொள்கை என்ற அடிப்படையிலே எழுப்பப்பட முடியாத
கேள்வி என்பதை நான் பணிவோடு தெரிவிக்க கடமைப்பட்
டிருக்கிறேன்.

ஒரு பிரச்னைக்கு இன்னொரு பிரச்னை பரிகாரம் அல்ல. என்னுடைய கை விரலிலே கத்திபட்டு இரத்தம் ஒழுகுமானால் அவ்வாறு கத்தி பட்டது அந்த கை விரலிலே என்பதற்காக மருத்துவரிடத்திலே காட்டினால் அவர், காலை ஒடித்துக்கொண்டு வந்திருக்கிறானே அவனுக்கு என்ன பிரச்னை, உனக்கு இப்பொழுது கட்டுப்போட முடியாது என்று சொன்னால் அவ்விதம் சொல்கிறபொழுது அந்தப் பிரச்னையைத் தீர்க்க அது பரிகாரம் அல்ல என்பதை நாம் உணர வேண்டும்.

மற்றொன்று, அமைப்பு முறையிலே தொழிலாளர்கள் போராடுவதன் வாயிலாக வெற்றிகளைப் பெறுவது என்பதுதான் பொதுவுடைமை அடிப்படை உணர்வுள்ளவர்கள், இரத்தம் சிந்துகிற புரட்சி நடத்தியாவது-இன்னும் சொல்லப்போனால் அதை விட கடுமையாக வர்க்கப் போராட்டத்தை நடத்துவது, ஒரு சாராரை அழித்தாவது ஒரு கொள்கையை நிலைநாட்ட வேண்டும் என்று எண்ணுகின்ற எண்ணத்திலே உள்ள தவறை நாட்டுக்கு உணர்த்துவதற்கும், அதற்குப் போராட்டம், இரத்தம் சிந்துகின்ற புரட்சி, பலாத்காரத்தினுடைய வழி, இவை இல்லாமலேயேகூட ஜனநாயக முறையிலே மக்களின் குறைகளை தீர்ப்பதிலே அடித்தட்டு, நடுத்தர மக்களுடைய குறைகளை எந்தெந்த வகையிலே அவ்வப்பொழுது தீர்ப்பதற்கு வாய்ப்பு கிடைக்கிறதோ அப்படித் தீர்ப்பதிலேதான் எதிர்கால சமுதாயத்தை வாழ்விக்க முடியும்.

மொத்தமாக ஒரு பொதுவுடைமைப் பூமியை மெல்லமெல்ல காலத்தின் போக்கிலேகூட, அரசாங்கத்தினுடைய முற்போக்குக் கொள்கை காரணமாகப் படிப்படியாக நிறைவேற்ற முடியும் என்ற உணர்வையும், நம்பிக்கையையும், பல்வேறு வர்க்கத்தைச் சேர்ந்த எளிய, பாட்டாளி மக்களிடையே உருவாக்க முடியும். அந்த அடிப்படையிலே இன்றைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

முதலாளிகள் சம்பாதிக்கின்ற கோடிக்கணக்கான ரூபாய் இலாபத்தைப் பற்றி மாநில அரசாங்கம் நேரடியாக கை வைக்க முடியாது. கை வைக்கக் கூடிய மத்திய அரசாங்கம் கை வைக்குமானால் அதை வரவேற்கக் கூடிய கட்டத்திலே நாம் இருக்கிறோம். ஆனால், நடுத்தர வர்க்கத்திலோ அல்லது அதற்கும் கீழே உள்ள தொழிலாளர்கள் அல்லது அதற்கும் கீழே உள்ள அமைப்பு முறை பெறாத தொழிலாளர்களும், அந்த அமைப்பு முறை பெறாத தொழிலாளர்களுக்கும் கீழே இருக்கின்ற வேலை கிடைக்காத மக்கள் ஆகிய இவர்களுடைய வாழ்விலே உள்ள பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் ஒவ்வொரு கட்டத்திலேயும் அவரவர்களுக்கு உரிய முறையிலே பிரச்னைகளுக்குப் பரிகாரம் தேடுவதுதான் ஜனநாயக அரசாங்கம்.





(பிற்பகல் 12–30.)

அந்த முறையிலே இந்த அரசாங்கம், இந்த ஆட்சியை நடத்துகிற ஆளுங்கட்சியை சேர்ந்த தலைவர்களும் மற்றவர்களும் அந்த எண்ணத்தில் இல்லையென்பதை 3 ஆண்டுகளுக்கு முன்னாலே நடைபெற்றத் தேர்தலிலே மட்டும் அல்ல, அதற்குப் பின்னாலே பலமுறை எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். இந்த முறை ஆளுநர் உரையிலே, அரசாங்கத்தினுடைய கொள்கை தரப்பட்டிருப்பதை நான் படித்துப் பார்க்கிறபொழுது என்னுடைய வேதனை அதிகம் ஆகிறது. முடியவில்லை என்பது வேறு. இது முடியாது என்று சொல்வது வேறு. இது கூடாது என்று வாதாடுவது அதை விட மோசமானது. எனவே, அதைப்போல, இங்கே பேசப்படுகிறது. பக்கம் 5 : ''......ஊதிய உயர்வு பண வீக்கம் என்கிற தீயை மேலும் வளர்ப்பதாக அமைந்துவிடுகிறது'' என்று சொல்கிறார்கள். பணவீக்கத்தைப்பற்றி நான் அறிந்த வரையில் எத்தனையோ காரணங்களிலே ஒரு காரணம் ஊதிய உயர்வு. 10 காரணங்களிலே ஒரு காரணமாக இருக்கிற ஊதிய உயர்வு மட்டும் பணவீக்கத்திற்குக் காரணம் அல்ல. நாடு முழுவதும் ஏற்படுகிற பண மதிப்பினுடைய வீழ்ச்சி என்பது போன்ற பல்வேறு காரணங்களாலே ஏற்படுவதனுடைய விளைவுதான் ஊதிய உயர்வை வலியுறுத்த வேண்டிய நிலைமை. விலைவாசி ஏற்றம் என்பது பண வீக்கத்தினுடைய முதல் விளைவு. விலைவாசி ஏற்றத்தினுடைய மறு விளைவு பல்வேறுதரமான அமைப்புகளிலே உள்ள தொழிலாளர்களுக்குக் கிடைக்க வேண்டிய ஊதிய உயர்வு. எனவே, அந்த ஊதிய உயர்வு என்பது பண வீக்கத்தை ஏற்படுத்துகிறது என்று சொல்வதைவிட, நான் திட்டவட்டமாகச் சொல்ல விரும்புகிறேன், 100 மடங்கு பண வீக்கம் வேறு காரணங்களாலே ஏற்படுமானால், 10 மடங்கு பண வீக்கம் திரும்ப வருகிற ஊதிய உயர்வாலே ஏற்படும். இந்த 10 மடங்கு பண வீக்கம், 100-க்கு 10-ஆக ஏற்படுகிற பணம் ஊதிய உயர்வாலே ஏற்படுகிறது என்று சொன்னாலும்கூட, அந்த ஊதிய உயர்வு தவிர்க்கப்பட முடியாத ஒன்று. விலைவாசி ஏற்றம் முன்னாலேயே அமைந்துவிட்ட காரணத்தால், விலைவாசி ஏற்றம் பணத்தினுடைய மதிப்பினுடைய வீழ்ச்சியோடு கலந்து ஏற்படுகிறபொழுது, அதற்கு ஈடுகொடுக்கக் கூடிய ஆற்றலை, ஆர்கனைஸ்ட் செக்டாராக இருக்கிற தொழிலாளர்களுக்குக் கூடக் கிடைக்கவில்லையென்று சொன்னால், நடுத்தர வர்க்கத்தாருக்கே கூட அதைச் சமாளிப்பதற்கான வாய்ப்பில்லையென்று சொன்னால், அடித்தட்டு மக்களுக்கு மிச்சம், மீதி வாய்ப்பு கூடக் கிடைக்காது.

நான் இன்றைக்குச் சொல்கிறேன், ஒரு கோடீசுவரனை நம்பி 10 பேர் பிழைப்பு நடத்தலாம். ஒரு இலட்சாதிபதியை நம்பி 10 பேர் பிழைப்பு நடத்தலாம். ஒரு தொழிலாளியை நம்பிக்கூட 4 பேர், 3 பேர் பிழைப்பு நடத்தலாம். அந்தத் தொழிலாளியை

[திரு. க. அன்பழகன்] [1981 பிப்ரவரி 10

நம்பி, அவனோடு சேர்ந்து வாழ்கிற 4 பேர், 3 பேர் அடித்தட்டு மக்கள் இருக்கிறார்களே, அவர்களைக் காப்பாற்று வதிலேதான் ஜனநாயகம் மூலமாகக் கொண்டு வரக்கூடிய ஒரு சமதர்மத்திற்கு வாய்ப்பளிக்க முடியுமே தவிர, அந்தத் தொழி லாளியைக் காப்பாற்ற நம்மாலே முடியவில்லையென்று சொன் னால், ஜனநாயகத்தை நம்மாலே காப்பாற்ற முடியாது என்பதை நான் பணிவன்போடு தெரிவிக்க விரும்புகிறேன். ஜனநாயகம் நிலைக்காமல் போகக்கூடிய ஒரு சூழ்நிலையை, மக்களுடைய உணர்விலே ஏற்படுத்துவதற்கு, எவ்வளவுக்கெவ்வளவு கீழே இருக் கிற மக்களை, நாம் காப்பாற்றத் தவறி விடுகிறோமோ, அவ்வளவுக் கவ்வளவு ஜனநாயகத்திலே வைத்த நம்பிக்கைகளை அது ஏற் படுத்தும். அது மறைமுகமாக, பலாத்காரத்திற்கோ, அல்லது வன்செயலுக்கோ, வேறு விதமான நாகரீகத்திற்கோ வழிவகுத்து விடும் என்பதை நான் நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டுமல்ல, இன்னுங்கூடச் சொல்லப்படுகிறது. .... அமைப்பு ரீதியான சிறுபான்மையினரிடம் உள்ள கூடுதல் ஊதியம் பெறும் சக்தி, மிகப் பெரும்பான்மை உழைக்கும் மக்களிடம் இல்லை.' மிகப் பெரும்பான்மை உழைக்கும் மக்களிடத்திலே இல்லையென்றால், அவர்களுக்குப் பாதுகாப்புத் தரவேண்டியது அரசாங்கமே தவிர, வேறு யாரும் அல்ல. அரசாங்கம் அதற்காக என்ன என்ன, வழிமுறைகளைச் செய்தது என்று நான் கேட்க விரும்புகிறேன். எறத்தாழ சுதந்திரம் கிடைத்த காலத்திலேயே. குறைந்த பட்ச ஊதியம் என்ற ஊதியமும், நியாய அளவு ஊதியம் என்ற ஊதியமும், வாழ்க்கைத்தர ஊதியம் என்ற இந்த 3 வித மான ஊதியங்களும் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றன. அதிலே, அமைப்பு முறை பெறாத தொழிலாளர்களுக்கு, அல்லது, ஊழியர் களுக்கு, உழைப்பாளிகளுக்கு, குறைந்த பட்ச ஊதியத்தை பாது காத்து தருவது அரசாங்கத்தினுடைய கொள்கை என்று தெரிவிக் கப்பட்டிருக்கிறது. (Minimum Wages Act) என்ற அந்தச் சட்டத் தின் மூலமாக. அந்தக் குறைந்த பட்ச ஊதியத்தை நாம் பெற்றுத் தரவேண்டுமானால், அரசாங்க இயந்திரத்தைத் தவிர வேறு இயந்திரம் அதிலே பயன்பட முடியாது. ஏனென்றால், அவர்கள் எல்லாம் அமைப்பு முறை பெறாதவர்கள். அவர்களுக் காக சில சட்டங்கள் வந்துள்ளன. ஆனால், அவையெல்லாம் நல்ல முறையிலே செயல்படுத்தப்படவில்லையென்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

மோட்டார் ஒர்க்கர்ஸ்களுக்காக, அதாவது, போக்குவரத்து ஊழியர்களுக்காக, அரசாங்கப் போக்குவரத்துச் சங்கத்திலே உள்ள ஊழியர்களை, இங்கே குறிப்பிடவில்லை. தனியார் போக்குவரத்து அமைப்புகளிலே உள்ள ஊழியர்களுக்காகக் கொண்டு வரப்பட்டச் சட்டம் 1979 ஆம் ஆண்டு ஜனவரித்



1981 பிப்ரவரி 10] [திரு. க. அன்பழகன்]

திங்கள் 19 ஆம் நாளிலே கொண்டு வரப்பட்டது. டிரைவர் களுக்கு ரூபாய் 250, கிளீனர்களுக்கு ரூபாய் 130, குறைந்த பட்ச ஊதியம் என்று தெரிவிக்கப்பட்டது. இன்னும் அது செயல் முறையிலே, நடைமுறையிலே கொண்டு வரப்படவில்லை. யாரு டைய குறை. யார் செய்ய முடியும்? எதிர்க்கட்சிக் கேட்க முடியும், சத்தம் போட முடியும். தோழமைக் கட்சிக்கூட, அவ் வப்பொழுது, விழித்துக்கொள்கிறபொழுது, இந்தப் பிரச்சினையை எழுப்ப முடியும். ஆனால், உள்ளபடியே, அப்படி ஏற்படுகிற பிரச்சினைகளை அரசாங்க இயந்திரம் அல்லவா கவனிக்க வேண் டும். தமிழ்நாடு உணவு விடுதியிலே பணியாற்றுகிறவர்களுக்கான சட்டம், கேடரிங் எஷ்டாபிளிஷ்மெண்ட் ஆக்ட், இன்னும் நடை முறைப்படுத்தப்படவில்லை. குறிப்பு இருக்கலாம். ஆனால், அது நடைமுறைப்படுத்தப்படவில்லை.

பீடித் தொழிலாளர்களுக்குக் கொண்டுவரப்பட்ட சட்டம் இன்னும் பீடித்தொழிற்சாலைகளிலே நுழைந்ததாகவே எனக்குத் தெரியவில்லை.

அதே போல் தமிழ்நாடு ஷாப்ஸ் அண்ட் எஷ்டாபிளிஷ்மெண்ட் ஆக்ட், மினிமம் வேஜஸ் ஆக்ட் அந்தத் தொழிலாளர்களுக்கு குறைந்த கூலியைப் பெற்றுத் தருகிற அந்தச் சட்டம் நடை முறைக்கு வரவில்லை.

அதேபோல, ஹேண்ட் லூம் வவர்ஸ், கைத்தறி நெசவாளர் களுக்குக் குறைந்த பட்ச ஊதியம் குறித்த சட்டம் இன்னும் கொண்டுவரப்படவில்லை. சமுதாயத்தினுடைய முதுகெலும்பாக விவசாயிகள் இருக்கிறார்கள் என்று சொன்னால், விலா எலும் பாக இருப்பவர்கள் இந்தக் கைத்தறி நெசவாளர்கள்தான். அவர் களுக்கு அந்தச் சட்டம் கொண்டு வருவதாக ஏற்கெனவே அறி விக்கப்பட்டு அதற்குப் பின்னால் அந்தச் சட்டம் கூட இன்னும் நிறைவேற்றப்படாத நிலையிலே துர்ப்பாக்கியமான நிலையிலே தான் இந்த அரசு அவர்களை விட்டுவைத்திருக்கிறது என்பதை நான் நினைவூட்ட விரும்புகிறேன்.

இதுமட்டும் அல்ல, ஏறக்குறைய இப்படி அமைப்புமுறையற்ற ஊழியர்களுக்கு, தொழிலாளர்களுக்கு, 1974–75 ஆம் ஆண்டில் அவர்களுக்கு எல்லாம் பாதுகாப்பளிக்க குறைந்த பட்ச வாழ்க்கை கடைசி நிலையில் வாழ, அரசாங்கம் அவர்களையெல்லாம் நிம்மதி யாக வாழவைத்துவிட முடியும் என்று நான் நம்பவில்லை. நான் அரசாங்கத்தை அதற்காகக் குற்றம் சொல்லவில்லை, கடைசி நிலையில் வாழ, கஞ்சி கிடைப்பதற்கான வாழ்க்கை, அந்த வாழ்க்கை கிடைப்பதற்கு, ''அன்ஆர்கனைஸ்ட் லேபர்'' அவர் களுடைய நிலைமைகளை பரிசீலித்து, தகுந்த பரிகாரம் காண் பதற்கு, 1974–75 ஆம் ஆண்டில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் ஒரு குழு போடப்பட்டது. அவர்கள் தங்கள் பரிந்

துரைகளை வழங்கினார்கள். அந்தப் பரிந்துரைகள் இதுவரையில் இந்த அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு முறையாகக் கொண்டு வரவில்லை, சொல்லப்படவும் இல்லை என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னொரு வகையில், தொழிலாளர்கள் போராட்டம் என்று அறிவிப்பதை, அதிலும் வேலை நிறுத்தப் போராட்டம் என்று அறிவிப்பதை என்னைப் பொறுத்த வரையில் என்னுடைய மனப்பான்மையில் நான் கடைசியாகத்தான் அறிவிக்க வேண்டுமென்று கடந்த 25 ஆண்டு காலமாக எனக்குக் கிடைத்த வாய்ப்புகளை நான் பயன்படுத்தி, வேலை நிறுத்தமோ, அது உடனடியாகத் தெரிவிக்கப்படக்கூடியதல்ல. மற்ற வாய்ப்புக்களை எல்லாம் பயன்படுத்துங்கள் என்றுதான் நான் தொழிலாளர்களிடத்திலே, தொழிற் சங்கங்களிலே ஒன்றிரண்டிலே நான் தலைவராக இருந்த காலத்திலேயும், தொழிற்சங்க இயக்கத்தின் சார்பாக அறிஞர் அண்ணா அவர்கள் என்னை தன்னுடைய தொழிற்சங்க செயலாளராக நியமித்த காலத்திலேயும் அதற்குப் பின்னால் எனக்குக் கிடைத்த ஒரு சில வாய்ப்புக்களிலேயும் தொழிற் சங்கங்களுக்கும், தொழிலாளர்களுக்கும் அந்த ஆலோசனையை நான் வழங்கியிருக்கிறேன். ஆனால், போராட்டம் நடத்துவது என்பது தொழிலாளர்களுடைய ஒரு அடிப்படையான உரிமை என்பதை யாரும் மறுக்கமுடியாது. அதை மறுப்பவர்கள் தொழிற் சங்கத்தை மதிப்பவர்கள் அல்ல. அந்த உரிமையை கடைசியாக பயன்படுத்த வேண்டும். "தி லாஸ்ட் வெப்பன், தி லாஸ்ட் ரிசார்ட்" என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். அதைப் பயன் படுத்துவதைத் தவிர, தொழிலாளர்களுக்கு உண்மையான குறை இருக்குமானால், வேறு வழி இல்லை. இன்றைக்குப் பரிகாரம் காண்பதைப் பார்க்கிறோம். 100-க்கு 20, 30 பிரச்சனை களில் கன்சிலியேசன் மூலமாக பிரச்சனைகள் தீர்க்கப்படுகின்றன. இன்னும் 20, 30 பிரச்சனைகள் தொழிற் சங்கங்கள் பேராட்டம் நடத்துவதற்கான சூழ்நிலை வருகிறபோது அது அட் ஜூடிகேஷன் மூலமாக தீர்ப்பதற்கான வாய்ப்பு ஏற்கெனவே இருந்தது. அண்மைக்காலத்திலே அட்ஜூடிகேஷன் என்பது நம்முடைய தொழிலாளர் நலத்துறை அமைச்சர் பேசிக்கொண்டே இருப்பதற்குப் பெயர்தான் அட்ஜூடிகேஷனே தவிர வேறு அட்ஜூடிகேஷன் நடைபெற்றதாக எனக்குத் தெரியவில்லை. ஒன்றிரண்டு இருக்கலாம், பொதுவாக இல்லை.

ஆர்பிட்ரேஷன் என்பதன் மூலமாக, அதாவது நிர்வாகமும் தொழிலாளர்களும் ஏற்றுக்கொண்டிருக்கிற நடுநிலையாளரிடத்திலே பேசித் தீர்ப்பது என்பது முறையாகச் செய்யப்படவில்லை. நான் உள்ளபடியே முதலமைச்சருக்கு இதுபற்றி, தொழிலாளர் நலத்துறை அமைச்சர் முழு விவரங்களை, நியாயமான கண்ணோட்டத்தோடு எடுத்து வைக்கிறாரா என்று சந்தேகப்ப





கிறேன். முதலமைச்சரிடத்திலே இருக்கிற அளவுகடந்த மரியாதை, பற்று, பாசம் காரணமாக சொல்லவேண்டிய கருத்துக்களை தொழிலாளர்கள் சார்பாக தொழிலாளர் நலத்துறை அமைச்சர் எடுத்து வைத்து வாதாடவில்லை. அவரை வேண்டுமானால் எதிர்க்கட்சியிலே உட்கார வைத்துப் பாருங்கள். அப்பொழுது முதலமைச்சர், இராகவானந்தம் அவர்கள் என்ன என்ன பேசுகிறார் என்று பார்த்துக்கொள்ளலாம். ஆளும் கட்சியிலே இருக்கிற காரணத்தாலேயே தொழிலாளர் நலனையெல்லாம் கைவிட்டுத்தான் தீரவேண்டுமா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

இன்னொரு வகையிலே சொல்ல விரும்புகிறேன். பி. அண்ட். சி. மில் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் என்று ஆரம்பித்து இன்றையதினம் ஆலை மூடப்பட்டு 13 ஆயிரம் பேர் நிர்க்கதியாக நிற்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் கண்துடைப்பாகவார்த்தைகள் சொல்லப்படுவதாகக் கருதுகிறேன். இங்கே உள்ள ஆளும் கட்சியினருடைய தோழமைக் கட்சியைச் சார்ந்தவர்கள் அவ்வப் போது கேட்கிறார்கள், ஏன் மத்திய சர்க்காரை வற்புறுத்தக்கூடாது என்று, நான் வற்புறுத்துவதை வரவேற்கிறேன். நான் வேண்டாமென்று சொல்லவில்லை. ஆனால் யாருடைய வயிற்று வலிக்கு யாரை வற்புறுத்துகிறார்கள். மத்திய சர்க்காரை வலியுறுத்த நமக்கு உரிமை இருக்கிறது. கடமை இருக்கிறது. ஏற்றுக்கொள்கிறேன். வயிற்று வலி தமிழக அரசினுடையது. மத்திய அரசினுடைய வயிற்று வலி அல்ல. ஏனென்றால் மத்திய சர்க்கார் பி. அண்ட் சி. ஆலையை ஏற்றுக்கொள்ளலாமா வேண்டாமா என்பதை அவர்களுடைய பொருளாதார கண்ணோட்டத்தில் எண்ணிப் பார்த்து வேண்டுமானால் எடுத்துக்கொள்வார்கள். இல்லையானால் விட்டுவிடுவார்கள். நாம் வற்புறுத்தலாம். ஆனால், தொழிற்சாலையை நடத்தாமல் இருக்கக்கூடிய நிலைமை தமிழகத்திலே இந்த ஆட்சியிலே ஏற்படுமானால் இந்த ஆட்சி எந்த அளவு பலகீனமான ஆட்சி என்று கருதப்படும் என்பதை ஒருகணம் எண்ணிப்பார்க்க வேண்டும்.

[பிற்பகல் 12-40]

13,000 தொழிலாளர்கள், அவர்களைச் சார்ந்து பிழைப்பு நடத்தும் மக்கள் ஏறத்தாழ 1 இலட்சம் பேர் இருக்கிறார்கள். அந்த 1 இலட்சம் மக்களின் வாழ்வு பாதிக்கும் வகையில் அந்த ஆலை கடந்த 3— 4 மாதங்களாக மூடி வைக்கப்பட்டு இருக்கிறது என்று சொன்னால், அதுவும் இந்தச் சென்னை மாநகரத்தில், தமிழ்நாட்டின் தலைநகரத்தில் மூடிவைக்கப்பட்டு இருக்கிறது என்று சொன்னால், அதற்கு தமிழக அரசு தான் பொறுப்பு என்று நான் குறிப்பிட விரும்புகிறேன். அந்த ஆலையில் போடக்கூடிய மூலதனம், அல்லது முதலீடு நாட்டுமக்களுக்குத்தான், தமிழ் மக்களுக்குத்தான் பயன்படப்போகிறது. அந்த முதலீடு இந்த 13,000 தொழிலாளர்களையும் வேலையில் நீடிக்கச் செய்ய

வதற்கு உதவும். புதிதாக வேலை தேடித்தரும் ஆற்றல் நமக்குக் குறைவாக இருக்கும் இந்த நேரத்தில் அந்த 13,000 தொழிலாளர்களையும் காப்பாற்றுவது உண்மையிலேயே ஒரு மிகப்பெரிய முக்கியமான பணி என்பதை நான் இங்கே நினைவூட்ட விரும்புகிறேன்.

இதனுடைய அவசியத்தை வலியுறுத்த நான் விரும்புகிற போது ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். கடந்த காலத்தில் கோவை மாவட்டத்தில் 6—7 பஞ்சாலைகள் வேலை நிறுத்தம் காரணமாக நடத்த முடியாத நிலையில் மூடப்பட்டு இருந்த நேரத்தில், மத்திய அரசு அதற்கு நிதி ஒதுக்க தயங்கிய காரணத்தால், அன்றைய முதலமைச்சர், இன்றைய எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர் கருணாநிதி அவர்கள் உடனடியாக அந்த ஆலைகளை தமிழக அரசு எடுத்துக்கொள்ளும் என்று அறிவிப்பு விடுத்தார்கள். இந்த உண்மையை நான் பெருமைக்காகச் சொல்லவில்லை, ஒரு நிலைமையைச் சுட்டிக்காட்டச் சொல்கிறேன். இன்றைக்கு பி. அண்ட் சி. மில் மூடப்பட்டால் அதனால் ஏற்படக்கூடிய முதல் பாதகம் தமிழக அரசுக்கும், தமிழக மக்களுக்கும் தான். இரண்டாவதாகத்தான் மத்திய அரசுக்கு பாதகம் ஏற்படும். அந்த மில்லை மத்திய அரசு ஏற்க வேண்டும் என்று கேட்பதில் தவறு இல்லை. நானும் சேர்ந்து அதற்குக் குரல் கொடுக்கத் தயார். மத்திய அரசு அந்தத் தொழிற்சாலையை ஒரு பெரிய முதலீடு போட்டு எடுத்துக்கொள்வது வேறு. ஆனால் மத்திய அரசு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லி, நாம் கைக்காட்டி மரமாக இருப்போமானால் ஏமாற்றம் மாநில அரசுக்குத் தானே தவிர மத்திய அரசுக்கு அல்ல என்பதை நான் சொல்லிக்கொள்கிறேன்.

இந்த நேரத்தில் நான் ஒன்றை நினைவுக்குக் கொண்டு வர விரும்புகிறேன். நம்முடைய மாநில முதலமைச்சர் அவர்கள் ஒரு நேரத்தில் சொன்னார்கள். கிட்டத்தட்ட 22 லட்சத்து 70 ஆயிரம் பேருக்கு நாங்கள் புதிதாக வேலை பெற்றுத் தந்து இருக்கிறோம் என்று சொன்னார்கள், எனக்கு ஒரு அச்சம் ஏற்பட்டது. அப்படியானால், மாவட்டத்திற்கு ஒரு லட்சம் மக்களாவது வேலை பெற்று இருப்பார்கள் என்று எண்ணினேன். அப்போது தான் விளக்கம் அளிக்கிற வகையில் சொன்னார்கள். 22 இலட்சத்து 70 ஆயிரம் (மேன்-டேஸ்) மனித நாட்கள் இங்கே தொழிலாளர்கள் வேலை பெற்று இருக்கிறார்கள் ஒரு ஆண்டில் என்ற விபரம் அந்தத்துறையைச் சேர்ந்தவர்களால் அளிக்கப்பட்டது.

அந்த வேலைவாய்ப்பு அலுவலகத்தில் கிட்டத்தட்ட 10 லட்சத்து 40 ஆயிரம் பேர் பதிவு செய்து இருக்கிறார்கள் என்று அறிகிறேன். பதிவு செய்யாதவர்கள் ஏறத்தாழ 10 இலட்சம்



பேர் இருக்கலாம். பதிவு செய்கிற அளவிற்குத் தெளிவு இல்லாதவர்கள், கிராமப்புறங்களில் இருக்கிற மக்கள் கிட்டத்தட்ட 20 இலட்சம் பேர் இருக்கலாம். ஆகவே, 40 இலட்சம் பேர் வேலை இன்றி இருக்கிறார்கள். உதாரணமாகச் சொல்ல வேண்டுமானால், முழு வேலை இல்லாதவர்கள் 20 இலட்சம் பேர். வேலையே இல்லாதவர்கள் 20 இலட்சம் பேர் இருக்கலாம். இந்தச் சூழ்நிலை தமிழ் நாட்டை எந்தப் பாதையிலே கொண்டு செல்லும் என்று நாம் எண்ணிப் பார்க்கிறபோது, இவ்வளவு பெரிய பிரச்னை இருக்கிறபோது, அவர்களுக்கு எல்லாம் வேலை தர வேண்டுமானால், ஒரு 10 ஆண்டு காலத் திட்டம், 20 ஆண்டுக்காலத் திட்டம் என்கிற வகையில் திட்டங்களைத் தீட்டி அந்தக் காரியத்தைச் செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம்.

கடந்த 5 ஆண்டு காலத்தில் இந்த அரசாங்கத்தின் வேலை தேடித் தரும் அலுவலகங்கள் சரியான முறையில் இயங்கவில்லை, கிடைத்த வாய்ப்பை சரியாக பயன்படுத்திக்கொள்ளவில்லை என்று நான் சொல்லிக்கொள்கிறேன். இங்கே ஏற்கனவே நிதி அமைச்சராக இருந்த நாஞ்சில் மனோகரன் அவர்கள் சொன்னார்கள். இத்தனை தொழிற்சாலைகள் திறக்க இருக்கிறோம், இவ்வளவு வேலைகள் என்று சொன்னபோது நான் அப்போது சொன்னேன், அது முடியாது என்று மறுத்து இருக்கிறேன். அதுவும் இந்த ஓராண்டு காலத்தில் புதிய தொழிற்சாலைகள் எதுவும் திறக்கப்படாத நேரத்தில், அந்த எண்ணிக்கையை எட்டமுடியாது என்று சொல்லியிருக்கிறேன்.

ஒரு பக்கம் தொழில் வளர்ச்சியில் பின் தங்கிக் கொண்டு இருக்கிறோம். அதை யாரும் மறுக்க முடியாது. நான்காவது இடத்தில் இருந்த நாம் இப்போது 13ஆவது இடத்திற்குச் சென்று விட்டோம். 13ஆவது இடம் என்று இல்லையென்றாலும், 10ஆவது இடத்திற்குச் சென்றுவிட்டது. இந்த விவரத்தைத் தெளிவுபடுத்த வேண்டுமானால், இன்னொரு புள்ளி விவரத்தின் மூலம் அதை அறிந்து கொள்ளலாம். வறுமைக்கோட்டின் கீழே 52 சதவீத மக்கள் வாழ்வதாக முன்பு புள்ளிவிவரம் கொடுத்தார்கள். தற்போது நிலைமை மாறிவிட்டது. இன்றைய தினம் தமிழகத்தில் வறுமைக்கோட்டின் கீழே இருப்பவர்கள் 62 சதவீதம் ஆக இருக்கிறது என்று கேள்விப்படுகிறபோது, வறுமைக் கோட்டிற்குக் கீழே இருப்பவர்களுக்கு அக்கறை காட்டுகிற உணர்வு இருந்தாலுங்கூட, நடைமுறையிலே அந்த எண்ணிக்கையைப் பெருகத்தான் இந்த ஆட்சி துணை செய்து இருக்கிறதே தவிர அதைக் குறைக்க ஒன்றும் செய்யவில்லை என்பதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். அதற்குப் பின்னால் 1979 ஆம் ஆண்டு ஜூலை மாதம் அவசரச்சட்டம் வந்தது. முதலாவதாக போக்குவரத்துத் தொழிலாளர்கள் போராட்டத்தை ஒடுக்கக் கொண்டுவரப்பட்டது. 1979 ஆம் ஆண்டில் என்.ஜி.ஓ.

போராட்டம் வந்தது; அதை ஒடுக்க அவசரச் சட்டம் கொண்டு வரப்பட்டது. மறுபடியும் இப்போது அதே அவசரச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

இங்கே பெரிய மாண்புமிகு உமாநாத் அவர்கள் பல்வேறு அரசியல் கருத்துக்களை, அதற்கான காரணங்களை எல்லாம் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அதோடு கூடவே இன்னொன்றையும் குறிப்பிட்டார்கள். நெருக்கடி நிலை போராட்டத்தின் போது, அந்தக் காலத்தில் கூட பிரதமராக இருந்த திருமதி இந்திராகாந்தி கூட தொழிலாளர் உரிமையை நசுக்குகிற இப்படிப்பட்ட ஒரு சட்டத்தை நடைமுறைப்படுத்தவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். நீங்கள் கொண்டு வந்திருக்கிற அவசரச் சட்டம் எப்படிப்பட்ட கொடுமையானது என்பதற்கு திரு. உமாநாத் அவர்களைவிட வேறு எந்த சாட்சியை நான் காட்ட முடியும்? பிரதமர் இந்திரா காந்தி ஆட்சியில் கூட, நெருக்கடி நிலை இருந்த போது கூட இப்படிப்பட்ட ஒரு நடைமுறை இல்லை என்று அவர் சொன்ன பிறகு அதை யாரும் மறுக்க முடியாது. நெருக்கடி நிலை காலத்தில் அதற்கு முற்றிலும் மாற்றுக் கருத்து கொண்டிருந்தவர் உமாநாத் அவர்கள். அவர் சொல்கிறார், இப்படிப்பட்ட சட்டம் அப்போது கூட வரவில்லை என்று. இன்று இந்த மாநில அரசால் நெருக்கடி நிலை என்று சொல்ல முடியாது. அமைதி நிலவ வேண்டும் என்பதில் எங்களுக்கு அக்கறை உண்டு. வேலை நிறுத்தம் வரக்கூடாது. ஆனால் இப்படிப்பட்ட பிரச்சனைகள் உருவாக என்ன காரணம்? யார் அதை மாற்றுவது?

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அதுமட்டுமல்ல. இன்றைக்கு இந்த அவசரச் சட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றுவதினால் ஒரு ஒழுங்கினத்தைத் தான் அது ஏற்படுத்தும் என்பதிலே யாருக்கும் எந்தவிதமான கருத்து வேறுபாடும் இல்லை. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர் கருணாநிதி முதல் திரு. நெடுமாறன் வரையில் உள்ள அத்தனை பேர்களும் ஏறத்தாழ ஒரே கருத்தைச் சொல்லக் கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதால் ஆளும் கட்சியிலே உள்ள தோழமைக் கட்சிகள் எல்லாம் எங்களோடு சேர்ந்துவிட்டார்கள் என்று பொருள் அல்ல. தோழமைக் கட்சியில் இருப்பவர்களே இந்தக் கண்டனத் தீர்மானத்தைக் கொண்டு வந்து கண்டித்துவிட்டால் மக்கள் இந்த அரசை கண்டிப்பார்கள். ஏனென்றால் அவர்களை சிறையில் தள்ளுகிற சட்டம் இது. ஆகவேதான், நெடுமாறனாக இருந்தாலும் சரி, ஆண்டித்தேவராக இருந்தாலும் சரி, கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்களாக இருந்தாலும் சரி, அத்தனை பேர்களும் ஒன்று சேர்ந்து. [illegible] தோழமைக் கட்சிகளும் ஒன்றாகச் சேர்ந்து பேச வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது.



இந்த அவரசரச் சட்டம் எதனால் வந்தது? தொழிலாளர் நலத்துறையிலே உள்ளவர்கள் வேலை நிறுத்தத்தை முறைப்படி அணுகி, வேலை நிறுத்தத்திற்கு தீர்வு காண முயற்சி செய்யாதது தான் இதற்கெல்லாம் காரணம். வேலை நிறுத்தம் என்றால் 'கன்சிலியேஷன்' வரும். கன்சிலியேஷன் கேட்கிறபோது கன்சிலியேஷன் நடக்கும் போது, அது நடந்து முடிந்த பிறகு 7 நாள் அல்லது 14 நாள் என்று நினைக்கிறேன் தவணை கொடுத்து, அதிலே கையெழுத்து போடுவார்கள். அந்த தவணைக்குள் கையெழுத்து போடவில்லை என்றால் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவார்கள். அதன் பிறகு 'அட்ஜுடிகேஷன்' வரும். இப்படிப்பட்ட விவகாரங்களுக்கெல்லாம் பின்னால் நிலைமை சீரடையவில்லை என்றால் ஒரு மாதம் தண்டனை அல்லது 50 ரூபாய் அபராதம் என்று விதித்து, ஏற்கெனவே உள்ள தொழில் தகராறு சட்டத்தில் எல்லா விதிகளும் இருக்கின்றன. விதிகளை விதிப்படி பயன்படுத்தினால் என்ன? அதற்கு முறைப்படி அணுகினால் அல்லவா முடியும்? முறைப்படி அணுகி, தொழிலாளர் வேலை நிறுத்தத்தை தடுக்க இந்த அரசு முன்வந்தால் ஏற்கெனவே இருக்கிற சட்டத்தையே பயன்படுத்திக்கொள்ளலாமே. இந்த ஒரு மாதம் தண்டனை பெற்று, சிறையில் இருந்து, அதற்குள் தொழிலாளர் பிரச்சினை முடிந்து, வீட்டுக்குப் போகக்கூடிய சூழ்நிலை ஏற்படும்.

ஆனால், 2,000 ரூபாய் அபராதம், ஓராண்டு ஜெயில் என்று சொன்னால் இந்த பிரச்சனை எங்கேபோய் முடியும்? அதைப் பற்றி நீங்கள் யோசித்தீர்களா? ஏற்கெனவே நாங்கள் சொன்னோம். மதுவிலக்குச் சட்டத்திலே தீவிரம் காட்டி, கடுமையான நடவடிக்கை எடுக்கும் சட்டத்தை நீங்கள் கொண்டு வந்தபோது நாங்கள் எல்லாம் அதை வன்மையாக எதிர்த்தோம். நீங்கள் பிடிவாதமாக இருந்தீர்கள். இன்றைச்கு அதன் நிலைமை என்ன? இன்றையதினம் மதுவிலக்கும் இல்லை தண்டனையும் இல்லை என்ற அளவிலே தான் இருக்கிறது.

அதைப்போல இன்றைக்கு இன்னொரு கடுமையான சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறீர்கள். நீங்கள் முறைப்படி பிரச்சினைகளை அணுகவில்லை; பிரச்சனைகள் தீர வழியில்லை என்பதால், ஏற்கெனவே மூன்று சட்டங்களைக் கொண்டுவந்த பிறகு, இன்றைக்கு தொழிலாளர்களை நசுக்குகிற இந்த அவசரச் சட்டத்தைக் கொண்டுவந்து, இதை அமுல்படுத்துகிற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்றால் போராட்டம் தான் வரும். நான் எதிர்க்கட்சியில் இருக்கிறேன் என்பதால் போராட்டம் நடக்க வேண்டுமென்ற மனப்பான்மையில் பேசவில்லை. எனக்கு முன்னாலே பேசியவர்கள் இந்தத் தீர்மானத்தை ஆதரித்து பல்வேறு கருத்துக்களைச் சொல்லியிருந்தாலும், வேறு பல செய்திகளை எடுத்துச் சொல்ல வேண்டியிருந்தாலும் இந்த அரசானது தொழிலாளர்

[திரு. க. அன்பழகன்] [1981 பிப்ரவரி 10

நலனுக்கு அடிப்படையான நோக்கம் எது என்பதை இழந்திருக்கிற காரணத்தால், மறந்திருக்கிற காரணத்தால், விரோதமனப்பான்மையான காரணத்தால் இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

அது மட்டுமல்ல. திரு. உமாநாத் அவர்கள் கூறினார்கள். திருமதி இந்திராகாந்தி மத்திய அரசு பிரதமராக இருக்கிறார். அவர்களுடைய செல்வாக்குக்கு ஆட்பட்டு, மாநில அரசு இப்படி நடக்கிறது என்று சொன்னார்கள். அது உண்மை என்றால், மத்திய அரசு தான் இதற்கு காரணம் என்றால் நான் கூட கண்டிக்கிறேன். ஆனால், அது உண்மையல்ல. ஏனென்றால், கேரள முதலமைச்சர் திருமதி இந்திராகாந்தியின் செல்வாக்கிற்காக தன்னுடைய கொள்கையை மாற்றிக்கொண்டாரா? அல்லது மேற்கு வங்க முதலமைச்சர் தன்னுடைய கொள்கையை மாற்றிக் கொண்டாரா? இல்லையே.

[பிற்பகல் 12-50]

இன்னொன்று. மாநில அரசு இப்போது கொண்டுவந்திருக்கிற அவசரச் சட்டம் மத்திய அரசு சொல்லி வந்த சட்டமா? மத்திய சர்க்கார் அந்தந்த மாநிலத்து தொழில் பிரச்சினைகளை அவரவர்களே தீர்த்துக்கொள்ளட்டும் என்றுதான் இருப்பார்களே தவிர, அவர்கள் ஏன் தலையிடப்போகிறார்கள். அவர்களுடைய கட்சியைச் சேர்ந்த தொழிற்சங்கவாதிகளே கூட கேரளத்திலே மாபெரும் கிளர்ச்சி நடத்த முற்பட்டிருக்கிறார்கள். எனவே, நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்தப் பிரச்சினையை அரசியல் கட்சிகளுக்கு அப்பாற்பட்டு நாட்டினுடைய பொதுப் பிரச்சினை என்ற கண்ணோட்டத்தோடு அணுகி இதிலே இருக்கின்ற கொஞ்சமும் தெளிவற்ற, முறைதவறான, தொழிலாளர்களுக்கு மாறுபாடாக சிந்திக்கின்ற அந்த மனப்பான்மையை மாற்றிக்கொண்டால் தவிர தொழிலாளர்கள் பிரச்சினை தீராது. எத்தனையோ பிரச்சினைகள் இன்றைக்கு வளர்ந்து கொண்டிருக்கின்றன. அந்தகைய பிரச்சினைகளை எல்லாம் அரசாங்கம் முறைப்படி அணுகவில்லை. தொழிலாளர் நலத்துறை அமைச்சரவர்களும், முதலமைச்சரவர்களும் கூட சரியாக அணுகவில்லை. பி. அண்ட் சி. ஆலைத் தொழிலாளர்களுடைய பிரச்சினையிலே எத்தனை முறை அழைத்துப் பேசியிருக்கிறார்கள். நான் என்னென்ன பேசினார் என்ற விவரத்திற்குப் போகவில்லை அழைத்துப்பேசவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அழைத்து அவர்களிடத்திலே அவர்கள் எதுவும் பேசவில்லை. இதுதான் நல்ல முடிவு என்று அவர்களுக்கு வழிகாட்டவில்லை. பிரச்சினைக்குப் பொறுப்பு எடுத்துக்கொள்ள வேண்டிய நிலைமையில் இருப்பவர்கள் பொறுப்பு எடுத்துக்கொள்ளவில்லை. மத்திய சர்க்காரிடத்திலே இப்படிச் செய்ய வேண்டும் என்று நாங்கள் சொல்கிறோம். நீங்கள் ஒத்துக்கொள்ளுங்கள் என்று கேட்கவில்லை



1981 பிப்ரவரி 10] [திரு. க. அன்பழகன்]

கன்சிலியேட் பண்ணுவது என்றால் அவர்களுக்கிடையிலே ஒரு நல்ல முடிவை எடுத்துச் சொல்லி அரசாங்கத்தினுடைய கருத்து இன்னது என்று தெரிவிக்க கடமைப்பட்டிருந்தும்கூட தெரிவிக்கவில்லை. இப்படி எத்தனையோ குழப்பங்கள் இருக்கின்றன. இவையெல்லாம் தொழிலாளர் நலனுக்கு மாறுபட்டது என்பதை எடுத்துச் சொல்லி, இந்தக்கண்டனத் தீர்மானத்தை ஆதரித்து என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. ஏ. சாகுல் ஹமீது:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஒரு பாயிண்ட் ஆப் ஆர்டர். எல்லாக் கட்சிகளுக்கும் வாய்ப்பளித்து விட்டீர்கள். ஆனால், எங்களுடைய கட்சிக்கு வாய்ப்பளிக்கவில்லையே.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேற்றைய தினம் எல்லாக் கட்சிகளுக்கும் வாய்ப்பளிக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே, நேற்றே பேசியிருக்க வேண்டும். இப்போது மணி 12.50 ஆகிவிட்டது. இனிமேல் நேரம் இல்லை.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** பேரவைத் தலைவரவர்களே, இன்றையதினம் பேசியவர்களையும், நேற்றையதினம் பேசியவர்களையும் சேர்த்து மொத்தம் 10 மாண்புமிகு உறுப்பினர்கள் விவாதத்தில் கலந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால், முதலிலே எனக்கு மகிழ்ச்சி தரக்கூடிய ஒன்றைத் தெரிவித்துக் கொள்கிறேன். புரட்சித் தலைவர் அவர்களின் தலைமையின் கீழ் இயங்குகின்ற அரசின் தொழிலாளர் துரோகக் கொள்கையைக் கண்டித்து என்றார்கள். ஆனால், இதுவரையில் பேசியவர்களில் யாரும் இந்த தொழிலாளிக்கு அல்லது இந்த தொழில் நிறுவனத்திற்கு இந்த அரசு இன்ன துரோகத்தைச் செய்திருக்கின்றது என்று சொல்லவில்லை என்பதைக் கண்டு நான் மெத்த மகிழ்ச்சியடைகிறேன். ஆனால், அவர்கள் இங்கே பேசியது எல்லாம் லேப்ஸஸ் அதாவது இங்கே இன்ன குறைபாடு இருக்கின்றது என்று அவர்களது கண்ணோட்டத்திலே தெரிந்ததைப் பற்றி சொன்னார்களே தவிர, குறிப்பாக இப்படி இப்படி துரோகம் செய்திருக்கின்றது இந்த அரசு என்று யாரும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்பதை நான் மகிழ்ச்சியோடு இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து, இங்கே பேசிய கருத்துக்களை எல்லாம் ஒன்றாகச் சேர்த்து பிறகு பிரித்துப் பார்த்தால் அவை எல்லாம் 6 தலைப்புகளிலே அடங்குகின்றன. ஒன்று பி. அண்ட் சி. மில் பிரச்சினை இரண்டாவது வேலை நிறுத்தத்தை நீடிக்க விட்டு தொழிற்சங்கத்தை உடைப்பது, மூன்றாவது காடம்பாறை பிரச்சினை, நான்காவது தொழிலாளர் பிரச்சினைகளைக் கோர்ட்டுக்கு விடா

தது. ஐந்தாவது கொண்டுவரப்பட இருக்கின்ற புதிய சட்டங்கள் பற்றிய விமர்சனம், ஆறாவது தொழிலாளர்களின் ஒற்றுமையைக் குலைக்க தொழிலாளர்களுக்கு லஞ்சம் கொடுப்பது அதாவது போனஸ் கொடுத்தது இப்படி 6 தலைப்புக்களின் கீழ் அவை அடங்கிவிடுகின்றன. எனவே, முதலில் பி. அண்ட். சி. மில் பிரச்சினையை எடுத்துக்கொள்ள விரும்புகிறேன்.

பி. அண்ட். சி. மில்லில் ஏற்பட்ட நிலைமை குறித்து தொழிலாளர் நல அமைச்சராகிய நான் பல முறை பேச்சுவார்த்தை நடத்தி இருக்கிறேன். அதிகார பூர்வமாகவும் அழைத்துப் பேசி இருக்கிறேன். என்னிடம் வந்து என்னைப் பார்க்க வேண்டும் என்று சொன்னபோது எல்லாம் ஒரு நாளைக்கு இரண்டுமுறை, மூன்று முறை என்றும் சொல்லப்போனால் 9 அல்லது 10 முறைகள் கூட இருக்கலாம், தொழிலாளர் பிரதிநிதிகளை அழைத்துப் பேசி இருக்கிறேன். மில் நிறுவனத்தை அழைத்துப் பேசி இருக்கிறேன். அவையெல்லாம் முடிந்ததற்குப் பிறகு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் இரண்டு முறை அழைத்துப் பேசி இருக்கிறார்கள், 1980 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 30 ஆம் நாள் அன்று தொழிலாளர் தலைவர்களை அழைத்துப் பேசினார்கள். அதற்குப் பிறகு 1980 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 1 ஆம் நாள் அன்று தொழிலாளர் தலைவர்களையும் மேனேஜ்மென்டையும் அதாவது மேனேஜ்மெண்ட், அஸ் வெல் ஆஸ் லேபர் ரெப்ரசன்டேடிவ்ஸ், அழைத்து பேசினார்கள். அவ்வாறு பேசியதற்குப் பின்னால் மத்திய அரசுக்குக் கடிதம் எழுதினார்கள், நான் அந்தக் கடிதத்தைப் பூராவையும் படிக்க வில்லை அந்த 1980 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 5 ஆம் தேதிய கடிதத்தைச் சுருக்கமாகப் படிக்கிறேன்.

It is seen that the Mill requires a minimum of about Rs. 50 lakhs to restore the operation to the normal level for the next few days.

ஆக தொழிற்சாலையை மூடக் கூடாது. அது ஓடிக்கொண்டே இருக்க வேண்டும் என்று எழுதியதோடு வருகிற சில நாட்களுக்குள் அதை ஓட்டுவதற்காக 50 இலட்சம் ரூபாய் தேவைப்படுகிறது அதைக் கொடுக்க வேண்டும் என்றும் எழுதியிருக்கிறார்.

I am also told that this amount has to be released with immediate effect. (குறுக்கீடு) I am not yielding.





திரு. அ. இரகுமான்கான் : * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பொழுது இன்டரப்ஷேன் என்று குறுக்கிடுவதை அனுமதிப்பதற்கு நேரம் இல்லை. திரு. இரகுமான்கான் அவர்கள் பேசியது அவைக் குறிப்பில் இடம் பெற வேண்டாம் என்று ஆணையிடுகிறேன்.

*மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 50 இலட்சம் ரூபாய் தேவை என்று கடிதம் எழுதியிருந்தார்கள்.

"I am also told that this amount has to be released with immediate effect if we have to avoid the situation of the Mill coming to a grinding halt."

அந்தத் தொழிற்சாலையை நின்று விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று சொன்னால் அந்தத் தொகையை உடனடியாக கொடுத்துவிட வேண்டும் என்று அவர்கள் எழுதியிருந்தார்கள் என்றால், அவர்கள் இதில் எவ்வளவு அக்கறை கொண்டிருந் தார்கள் என்பது தெரியும். நான் விளக்க வேண்டிய அவசியம் இல்லை. நான் இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். இந்த பக்கிங்காம் கர்நாடிக் ஆலையைப் பற்றிப் பேசிய எல்லா மாண்புமிகு உறுப்பினர்களும் மத்திய அரசு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று ஏன் மாநில அரசு — அதாவது இந்த அரசு — வற்புறுத்தவில்லை என்பதைத்தான் பெரிய குற்றச்சாட்டாக எடுத்துச் சொன்னார்கள். ஆனால் மத்திய அரசை இந்த ஆலையை எடுத்து கொள்ள வேண்டும் என்று நாங்கள் ஸ்டிராங்காக வற்புறுத்தியிருக்கிறோம். அவர்களுக்கு எழுதிய கடிதத்தையும் படிக்கிறேன்.

Having regard to the facts set out hereunder I strongly feel that as the first step the Management must be changed into an efficient and dynamic one.

இருக்கக்கூடிய நிர்வாகம் சரியான நிர்வாகம் அல்ல. அந்த உடனடியாக மாற்றியாக வேண்டும். இதை ஏன் சொல்கிறேன் என்றால், இவைகளையெல்லாம் நாங்கள் சொல்லவே இல்லை என்று பேசினார்களே — நாங்கள் சொல்லியிருக்கிறோம் என்று எடுத்துக்காட்டத்தான் சொல்கிறேன். அப்படி நிர்வாகத்தை மாற்றி வேறு நிர்வாகம் போட வேண்டும் என்று சாதாரணமாகக் கூட சொல்லவில்லை. டைனமிக்கான நிர்வாகத்தைப் போட வேண்டும் என்று எழுதியிருக்கிறோம்.

* * * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. எஸ். இராகவானந்தம்] [1981 பிப்ரவரி 10

This can be accomplished either through the financial institutions holding major share or under the provisions of the Industries Development Regulation Act or if necessary under a separate legislation as enacted in the case of Burn and Company, etc. In any case it is necessary to take over the Management of the B. and C. Mills by the Government of India. Let me repeat the sentence "In any case it is necessary to take over the Management of the B. and C. Mills by the Government of India."

எது எப்படி இருந்தாலும் மத்திய அரசு இந்த நிர்வாகத்தை எடுத்தேயாக வேண்டும் என்றும் எழுதியிருக்கிறோம். மாண்புமிகு உமாநாத் அவர்கள் மிகக் கடுமையாக, அழுத்தம் திருத்தமாக ஆணித்தரமாக இதை எடுத்துச் சொன்னீர்களா என்று ஆவேசமாகக் கேட்டார்கள்?

He has said in unmistakable terms with all the emphasis that it deserves.

அது மட்டும் அல்ல,

As the Trade Unions are agreeable for negotiations on other things, such dialogue can be initiated as the next step and the work load agreements finalised.

பேச்சு வார்த்தைக்கு தொழிற் சங்கத் தலைவர்கள் தயாராக இருக்கிற காரணத்தினால் பேச்சு வார்த்தையை தொடர்ந்து நடத்தலாம், அதற்குப் பிறகு வொர்க் லோடைப் பற்றி நிர்ணயம் செய்யலாம் என்றும் சொல்லியிருக்கிறோம். இந்த அரசு எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொல் சொன்னார்களே, அதில் எந்தவிதமான உண்மையும் இல்லை என்பதைச் சொல்லத்தான் இவைகளை எடுத்துச் சொல்கிறேன்.

[பிற்பகல் 1-00]

மத்திய அரசின் மாண்புமிகு அமைச்சர் பிரணாப் முகர்ஜி அவர்கள்கூட இதைப்பற்றி பேசியிருக்கிறார்கள். அவர்களும் சொல்லியிருக்கிறார்கள். நாங்கள் அழைத்துப் பேச தயாராக இருக்கிறோம் என்று. 3 தினங்களுக்கு முன்னால் அவருடைய பேச்சு இந்துவிலே வந்திருக்கிறது. அதில்,

He told that the Government would not close the doors for resumption of talks, but the talks would be meaningful only if the workers agree to certain productivity norms.

என்று சொல்லியிருக்கிறார்கள். இது 'இந்து' வில் 1981 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 31-ம் தேதியில் வந்திருக்கிறது. பேச்சு வார்த்தை தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது. மாண்புமிகு



1981 பிப்ரவரி 10] [திரு. எஸ். இராகவானந்தம்]

உறுப்பினர்கள் விரும்பியதுபோல் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களும் இந்திய அரசு இதை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லிவிட்டார்கள். எனவே அந்தக் குற்றச்சாட்டு சரியில்லை என்பதை மிகத் தாழ்மையோடு இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து வேலைநிறுத்தத்தை நீடிக்க விட்டு சங்கங்களை உடைப்பது. வேலை நிறுத்தம் ஆரம்பித்தால் இந்த அரசாங்கமே அதை நீடிக்க விடுகிறது, அப்படியே நீடிக்க விட்ட பிறகு அது தானாகவே உடைந்துவிடுகிறது என்றார்கள். அரசாங்கம் உடனடியாக பேச்சுவார்த்தைகள் நடத்தி இருசாராரையும் ஒரு நிலைக்கு கொண்டுவந்து ஒப்பந்தம் செய்து விரைவிலே முடிவு எடுத்து செய்திருக்க வேண்டும். இதுதான் குற்றச்சாட்டு. இதைப் பேசுவது சுலபம்; சொல்லி விடலாம். ஆனால் உங்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இரண்டு பேரையும் அழைத்துப் பேசி ஒரு ஒப்பந்தத்திற்குக் கொண்டு வருவது சமரசப் பேச்சுவார்த்தை மூலமாகத்தான் செய்யமுடியுமே தவிர சட்டபூர்வமாக எதையும் செய்துவிட முடியாது. இரண்டு பேர்களும் ஒத்துக்கொண்டால் விரைவில் செய்துவிடலாம்.

1¼ இலட்சம் தோட்டத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டார்கள். ஆறு நாட்கள் வேலை நிறுத்தம் நடைபெற்றது. வேறு வேலைக்காக நான் கோவை சென்றிருந்தேன். என்னுடன் பல அதிகாரிகளும் வந்திருந்தார்கள். அவர்களை அழைத்துப் பேசினேன். தொழிற்சங்கத் தலைவர்கள் நிலைமையை உணர்ந்து இந்த அளவிற்கு வாங்கிக் கொடுத்தால்போதும் என்று எழுதிக் கொடுத்துவிட்டார்கள். நான் ஒருமுறை அல்ல இரண்டு முறை கலந்துபேசி எது நியாயமாகப் பெற வேண்டும் என்று சொல்கிறீர்கள் என்று கேட்டேன். சொன்னார்கள். அதை வைத்துக்கொண்டு முதலாளிகளை அழைத்து தொழிற் சங்கத் தலைவர்களையும் அழைத்துப் பேசி—நானும் தொழிற்சங்கத் தலைவனாக இருந்த அனுபவம் உடையவன்—இறுதியாக எந்தத் தொகையைத் தொழிற்சங்கத் தலைவர்கள் வேண்டுமென்று கூறினார்களோ that reasonable amount அதை வாங்கித்தந்து வேலைநிறுத்தம் கைவிடப்பட்டது. இந்தப் பெருமை அரசாங்கத்திற்கு என்று சொல்லமாட்டேன், அந்தப் பெருமையை எடுத்துக் கொள்ளத் தயாராயில்லை. யதார்த்த நிலையை உணர்ந்து இப்படிச் செய்தால்தான், இந்தக் கூலி கேட்டகூலி கிடைக்கும் இல்லையென்றால் 1¼ இலட்சம் தொழிலாளர்கள் தொடர்ந்து வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவது என்றால் நிச்சயமாக அது ஆபத்தில் வந்துமுடியும், எனவே இந்த அளவிற்குக் கேட்போம் என்று நிலையான இடத்தில் நின்று

[திரு எஸ். இராகவானந்தம்] [1981 பிப்ரவரி 10

அந்தக் கருத்தை வழங்கிய தொழிற்சங்கத் தலைவர்களை இந்த
நேரத்தில் நான் பாராட்டுகிறேன். போராட்டம் நீடிக்க
வேண்டுமென்று சொன்னால் நாங்கள் என்ன செய்ய முடியும்?
எங்கள் ஆட்சி வந்த பிறகுதான் போராட்டங்கள் நீடித்துக்
கொண்டே போயிருக்கிறதா? நாங்கள் முயற்சி செய்கிறோம்.
சொல்லிப் பார்க்கிறோம். கடைசியாக அவர்கள் ஒரு ஒப்பந்தத்
திற்கு வரவில்லை. தொழிலாளர்களும் ஒத்துக்கொள்வதில்லை
முதலாளிகளும் ஒத்துக்கொள்வதில்லை என்றால் என்ன செய்
வது? ஒன்று கோர்ட்டுக்கு விட வேண்டும். இல்லையென்றால்
ஸ்ட்ரைக்கை 'பான்' செய்ய வேண்டும். இரண்டையும்
நாங்கள் செய்வதில்லை. யோசிக்கிறோம். கோர்ட்டுக்கு விடு
வதில் சிலவற்றை கோர்ட்டுக்கு விடுகிறோம். சிலவற்றை விடுவ
தில்லை என்பது உண்மைதான். ஆனால் தடை செய்வது
என்பது கிடையாது. ஏதோ அவசரச் சட்டம் கொண்டுவந்ததைப்
பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் கவலைப்பட்டார்கள், கண்
டித்துப் பேசினார்கள். இரண்டு, மூன்று, நான்கு தடவை
சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறதே தவிர ஆனால், அந்தச்
சட்டத்தை இதுவரையில் உபயோகப்படுத்தியதில்லை. அப்படி
உபயோகப்படுத்த வேண்டும் என்ற எண்ணமும் புரட்சித்
தலைவர் அவர்களுக்கு இல்லை. ஒரு பாதுகாப்பாக இருக்க
வேண்டும் என்பதற்காகத்தான் கொண்டு வந்தார்களே தவிர
வேறு அல்ல.

ஆனால் இதற்கு முன்னால் இருந்த அரசாங்கம் — நான்
புள்ளி விவரங்களை அடிப்படையாகக் கொண்டு சொல்ல விரும்பு
கிறேன். வேலை நிறுத்தத்தைத் தடை செய்வதற்காக 1971 ஆம்
ஆண்டில் டி.ஐ.ஆர்.-யை உபயோகப்படுத்தினார்கள் திராவிட
முன்னேற்றக் கழக ஆட்சியில். டி.ஐ.ஆர். ரூல் 118-யை உபயோ
கப்படுத்தி 1971 ஆம் ஆண்டில் இருமுறையும், 1973-ல் ஒரு
முறையும், மீண்டும் ரூல் 119-யை உபயோகப்படுத்தி 1972 ஆம்
ஆண்டு சனவரித் திங்கள் 4-ந் தேதியில் ஒரு முறையும்
ஆக நான்குமுறை டி.ஐ.ஆர்.-யை உபயோகப்படுத்தி வேலை
நிறுத்தத்தை தடை செய்தது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி.
இதுவரையில் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்
கழக ஆட்சி நடந்து கொண்டிருந்த வேலை நிறுத்தங்களில்
ஒன்றைக்கூட இந்த மூன்று ஆண்டுக் காலத்தில் புரட்சித்
தலைவர் அவர்கள் ஆட்சியில் தடை செய்யவில்லை.

not even on a single occasion. Underline the words "not even on a single occasion".

நடந்துகொண்டிருந்த வேலைநிறுத்தத்தை, ஒரு தடவை கூட
இந்த ஆட்சியில் தடை செய்ததே இல்லை. (மேஜையைத்
தட்டும் ஒலி)



1981 பிப்ரவரி 10] [திரு. எஸ். இராகவானந்தம்]

ஒரு தடவை கூட செய்ததில்லை. ஆனால் திராவிட முன்னேற்
றக் கழக ஆட்சியில் 1969–ஆம் ஆண்டில் இருந்து 1975
ஆம் ஆண்டு வரை 20 முறை வேலைநிறுத்தங்களை
தடை செய்திருக்கிறார்கள். நாங்கள் அப்படி
ஒருமுறை கூட செய்யவில்லை. ஆனால், இங்கே உள்ள சில
உறுப்பினர்கள் சொன்னார்கள். வேலை நிறுத்தம் என்பது
நீடித்துக்கொண்டே போகின்றதே என்றார்கள். அப்படி நீடித்
துக்கொண்டே போகின்றதே என்பதைப் பற்றி பேசும்போது,
குறிப்பாக, மிகவும் வெகிமெண்டாக, ஆத்திரமாகப் பேசியவர்
மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள். அப்படி நாங்கள்
தொழிற்சங்கத்தை உடைக்கிறோம் என்று சொன்னால், அவர்
களை நான் ஒன்று கேட்க விரும்புகிறேன். வெஸட் பெங்கால்
இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் 6 வாரம். எஸ். ராம் மில்ஸ் 144
நாட்கள். லிப்டன் இண்டியா 152 நாட்கள். ஏ.சி.சி. லிக்
கேர்ஸ் 3 மாதங்கள். ஓர்க்மென் ஜூட் இண்டியா 2 மாதங்கள்.
வாட்ச்மென் இன் தி போர்ட் 2 மாதங்கள். ஓர்க்கென் இன் தி
பிரிண்டிங் பிரஸ் 2 மாதங்கள். எக்னாமிக்ஸ் டைம்ஸ் 152
நாட்கள், இண்டியா டூப்ளிகேட்டர்ஸ 8 மாதங்கள். 1—2—81
லே தான் ஒப்பந்தம் ஆயிற்று. இது மேற்கு வங்காளத்திலே
வேலை நிறுத்தத்தை வேண்டுமென்றே மேற்கு வங்காள அரசு
நீடித்தது என கூறலாமா? அப்படி என்று சொன்னால்,
அதை ஏற்றுக்கொள்ள நான் தயாராக இல்லை. அங்கிருப்பவர்
உள்ளபடியே மதிப்பிற்குரிய முதல்வர், பாராட்டுக்குரியவர்.
திரு. உமாநாத் அவர்களின் வாதத்தின்படிப் பார்த்தால், அதை
என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது. இந்தப் போராட்டம்
8 மாதங்களாக நீடித்துக்கொண்டிருக்கிறது. உடனே, தொழிற்
சங்கங்களைப் பிளந்து முதலாளிகளுக்குச் சாதகமாக அனுமதிக்
கிறார் என்று சொல்லிவிடுவதா? மிக நல்லவராகிய ஜோதிபாசு
அவர்கள் மீது அருள்கூர்ந்து அப்படி பேச ஆரம்பித்து விட வேண்
டாம். இண்டியா டூப்ளிகேட்டர்ஸில் எட்டு மாதங்களாக அப்படி
வேலை நிறுத்தம் நடைபெறுகின்றது என்ற சொன்னால், அதி
லிருந்து என்ன தெரிகின்றது என்று சொன்னால், வேலை
நிறுத்தத்தை கன்சிலியேஷன் செய்யும்போது இரண்டு பேர்களை
யும் அருகிலே கொண்டு வருவதற்கு முயற்சிகள் செய்கிறோம்.
ஒத்து வருகின்ற நேரத்திலே அது முடிகின்றது. ஒத்து வர
வில்லை என்று சொன்னால், அது முடியவில்லை, எனவே,
அரசைக் குற்றம் சொல்வதில் பிரயோஜனமில்லை. எனவே
தொழிற்சங்கத் தலைவர்கள் கையிலேதான் அது இருக்கின்றது
என்பதுதான் என்னுடைய வாதமாகும். ஆகவேதான், ஒரு
போராட்டம் நடந்து கொண்டிருக்கும்போது, அந்தப் போராட்
டம் அதிக நாள் நீடிக்காமல் இருக்க வேண்டுமென்றால், அதைத்
தடுத்து நிறுத்துவதற்கு நமக்குச் சட்டம் வேண்டும் என்று நாங்கள்
சொன்னோம். அந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தோம்.
வேலை நிறுத்தம் நடந்து கொண்டிருக்கும்போது, இடைக்கால
நிவாரணம் தந்து அந்தப் போராட்டத்தை நிறுத்துவதற்கு

[திரு. எஸ். இராகவானந்தம்] [1981 பிப்ரவரி 10

ஒரு சட்டம் வேண்டுமென்றால், அதற்கான அதிகாரம் நமக்கு வேண்டுமென்று நாங்கள் சொன்னோம். அதற்காகத் தான் ஒரு சட்டப். ஒரு சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப்பட்டது. அப்போது அதை எல்லோரும் ஒப்புக்கொண்டார்கள். ஆனால் சி.ஐ.டி.யு.வைப் பொறுத்த மட்டில் அதை ஒத்துக்கொள்ளவில்லை. அப்படி ஒத்துக் கொள்ளாத ஒரே காரணத்திற்காக அவர்கள் புரட்சித் தலைவர் அவர்களைச் சந்தித்துப் பேசியிருக்கிறார்கள். புரட்சித் தலைவர் அவர்கள் என்னைக் கூப்பிட்டு இண்டஸ்ட்ரியல் டிஸ்பியூட் ஆக்டில் 16 (B) -ஐப் புகுத்த வேண்டுமென்று சொன்னார்கள். அப்படி அந்தச் சட்டத்தைப் புகுத்துவதினால், வேலை நிறுத்தம் நடந்து கொண்டிருக்கும் போது இண்டரிம் ரிலிப் கொடுக்கின்ற அதிகாரம் அரசாங்கத்திற்கு இருக்கிறது. அப்படி ஒரு அதிகாரம் அரசாங்கத்திற்கு இருக்குமானால், அதைக் கொடுத்து விட்டு, ஸ்ட்ரைக்கைத் தடை செய்யலாம். சர்வீஸ் கண்டிஷன் பற்றி பிறகு நாம் ஸடிபுலேட் செய்து சொல்ல முடியும். அந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தபோது, அதை எதிர்க்கிறோம் என்று சொன்னபோது, புரட்சித் தலைவர் அவர்கள் அதைப் பின்வாங்கிக் கொள்ள வேண்டுமென்று சொல்லிவிட்டார்கள். உடனே, அதை நான் பின்வாங்கிக் கொண்டேன். அதன் காரணமாகத் தான் வேலை நிறுத்த நாட்களை குறைக்க முடியவில்லை. இதை உணர்ந்து திரு. ஜோதிபாசு அவர்களே இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். தோழர்களே சிரிப்பு. Old habits die hard. என்று சொல்வார்கள். அந்தச் சட்டத்தின் நகலை நான் எடுத்து வைத்திருக்கிறேன். 9 (சி) சட்டத்தைக் கொண்டு வந்து, 10 (ஏ) சட்டப் பிரிவை கொண்டு வந்து வேலை நிறுத்தத்தைத் தடை செய்வதற்கும், இண்டரிம் ரிலிப் கொடுப்பதற்கும் மேற்கு வங்காள சட்டமன்றத்திலே அந்தச் சட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றி, அதை டெல்லி அரசாங்கத்திற்கும் அதன் கன்கரென்சைப் பெறுவதற்காக அனுப்பியிருக்கிறார்கள்.

நான் சொன்ன இந்த 10 (பி) சட்ட பிரிவின் மூலம் வேலை நிறுத்தத்தைத் தடை செய்வதற்கும், அதே நேரத்திலே இண்டரிம் ரிலீப் கொடுப்பதற்கும் வழிவகை இருப்பதால், இதற்கான ஒரு ஆர்டினென்சை அதாவது ஒரு அவசரச் சட்டத்தைக் கேரளாவிலே கொண்டு வந்து, அது சட்டமாக அமுலாக்கப் பட்டிருக்கிறது.

[பிற்பகல் 1·10]

எனவே, திரு. கருப்பையா அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்களும் நாங்கள் ஏதோ சட்டம் கொண்டு வந்து விட்டோம் என்று சொன்னார்கள், அதையும் நிறுத்த விடுகிறோம்.



1981 பிப்ரவரி 10] [திரு. எஸ். இராகவானந்தம்]

என்று சொன்னார்கள். மேற்கு வங்காளத்தில் எட்டு மாதம் நடந்தது என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, காட்டுப்பள்ளை, காடம்பாறையில் காண்டிராக்ட் லேபர்தான், வேலை செய்கிறார்கள். அதிலும் குறிப்பாக டரில் லர்ஸ் எத்தனை மணி நேரம் வேலை செய்வது என்பதுதான் பிரச்சினை. அந்தப் பிரச்சினை பற்றிப் பேச்சு வார்த்தை நடந்தது கூலிஉயர்வும் ஒரு ரூபாய் வாங்கினார்கள். அதற்குப் பிறகு வேலை நேரம் நிர்ணயம் ஆகவில்லை. ஜே. சி. எல். எடுத்துக் கொண்டார் அவர் சில ஆலோசனைகளைச் சொன்னார். நிர்வாகத் தரப்பில் அதை ஏற்கவில்லை. அதிலே ஒன்றும் தவறு இல்லை. கன்ஸிலி யேஷனில் தொழிலாளர்களை அழைத்து ஒரு யோசனை, முதலாளிகளை அழைத்து ஒரு யோசனை சொல்வார்கள். இருவரும் ஏற்றுக்கொண்டால் ஒப்பந்தம் வரும். இல்லையென் றால் ஒப்பந்தம் வராது. இன்றைக்கு ஒப்பந்தம் வரவில்லை. அங்கே இருப்பவர்கள் வேலைக்குப் போகவேண்டுமென்ற எண் ணத்தை முக்கியமாகக் கருதவேண்டும். மின்சாரம் உற்பத்தி செய்யப்பட வேண்டியது முக்கியமான இடம். அந்த இடத்தில் வேலை நிறுத்தம் இல்லாமல் பிரச்சினையைத் தீர்க்க அட்ஜூடி கேஷன் அல்லது ஆர்பிட்ரேஷன் மூலம் முயற்சிக்க வேண்டும். நாட்டுக்கு மின்சாரம் தேவை என்ற காரணத்தால் அந்த அமைப்பை உருவாக்குகிற ஆவலில் பாதுகாப்பு கொடுத்து வேலை இப்போது அமைதியாக நடந்து கொண்டிருக்கிறது. மின் சாரம் உற்பத்தி செய்கின்ற இடங்களை நிறைவேற்றும்போது வேலை நிறுத்தங்கள் செய்யாமல் அந்த இடங்களில் ஏற்படக் கூடிய பிரச்சினைகளைப் பேச்சு வார்த்தைகள் மூலமாகத் தீர்த் துவிடுவது நல்லது. இதைப் பற்றி மாண்புமிகு ஜோதி பாசு அவர்கள் என்ன கூறியிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே படிக்கிறேன்.—

December 29. Mr. Jyothi Basu has asked the West Bengal State Electricity Authorities to take stern action against the reported attempts to slow down the normal work at Sandaldih by some employees owing allegience to some unions or groups. A Spokesman of the Power Department made a statement in Calcutta on Saturday that because of negligenc of duty by some employees the generation of power at Sandaldih had been severely affected during the past two days. He said that the overhauling of one unit and the commissioning of the 4th unit had been delayed because of go slow agitation at the power station. The employees, according to the Power Department spokesman there, demand over-time payment for those workers who were not covered by the Factories Act and absorption of all contract labourers as the State Electricity Board employees.

[திரு. எஸ். இராகவானந்தம்] [1981 பிப்ரவரி 19

இதைக் கவனிக்கும்படியாகக் கேட்டுக் கொள்கிறேன்.—

The Government had announced its policy to fill the vacancies through the Employment Exchange and the overtimepayment would be made only to those workers covered by the Factories Act. The Governme t had taken a serious view of the pressure tactics and d ereliction of duty and had asked the Power Authorities to take firm action.

ஓவர்டைம் கொடுப்பது, எல்லோருக்கும் எலக்ட்ரிசிடி தொழிலாளர்களாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமென்ற கோரிக்கை அது நடந்ததா? வெறும் ஆக்ஷன் மட்டுமல்ல, பர்ம் ஆக்ஷன், கடுமையாக நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

Firm action againt those responsible for the go-slow agitation என்றுசொல்லியிருக்கிறார்கள். அது மேற்கு வங்காளம், மாண்புமிகு உமாநாத் அவர்கள் அங்கே சீப் மினிஷ்டராக இருந்தாலும் அதைத்தான் செய்திருப்பார்கள். அங்கே இருக்கிற நிலைமை என்னவென்றால் மின்சாரம் உற்பத்தியாகிற இடத்திலே அந்த நிலைமை வந்துவிடுமானால் ஆபத்தானது என்று உணர்ந்து ஜோதிபாசு அவர்களே சொல்லியிருக்கிறார்கள். ஸ்டர்ன் ஆக்ஷன் எடுக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள்.

அடுத்து கேரோ செய்கிறார்கள் என்றால்---வழக்குகளைப் பின்வாங்கவில்லை என்று கோபம் வருகிறது, போலீசாரை அனுப்புகிறோம் என்று சொல்கிறார்கள்—ஆனால், நான் படிப்பதைக் கூர்ந்து கவனிக்க வேண்டுகிறேன்.

In Trivandrum, December 1931, the Marxist led left Democrat c Fro t. Kerala Government to-day announced in the State Assembly a new Police Policy which among other things, describes Gherao as an offe ce punishable as an unlawful act.

அது மட்டுமல்ல, போலீஸ் பாலிசியைப் பார்க்கவேண்டும், கேரளாவில் விவசாயத் தொழிலாளர்கள் ரிடையரானால் ரூ. 50 .கொடுக்கவில்லையா என்று கேட்டார்கள். நாங்கள் அதைப் பரிசீலிக்கிறோம்., ஆனால் இதைப் பாருங்கள்.

According to the new Police Policy, the Police will not interfere in labour disputes, but will take action if there is violence in the name strike--I mean — " if there is violence in the name of stirke."

தொழிலாளர்கள் பிரச்சினையில் போலீஸ் தலையிடாது.

But will take action if there is violence in the name of strike.



1981 பிப்ரவரி 101

Mr. Speaker sir, I want raise a point of order with vour kind permission.

திரு. துரை முருகன் :

மாண்புமிகு அமைச்சர் அவர்கள், ஒரு பத்திரிகையிலே வந்த செய்தியை இங்கே படிக்கிறார்கள். பத்திரிகையிலே வந்த செய்திகளை இங்கே படிக்கக் கூடாது என்றும் பல பத்திரிகைகளிலே பலவிதமான செய்திகள் வரும், அதை வைத்துக்கொண்டு இங்கே படிக்கக்கூடாது என்றும் ஏற்கனவே இங்கே தெரிவித்து இருக்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; அவர்கள் படிக்கிற பத்திரிகையிலே அந்த மாநிலத்திலே அப்படி நடந்ததாகச் செய்தி வந்திருக்கிறது. குற்றச்சாட்டுகள் அல்ல.

திரு. துரை முருகன் : பத்திரிகையிலே வந்த .செய்தியைக் கலைஞர் அவர்கள் அன்றைக்கு இங்கே படித்தபோது பத்திரிகைகளிலே என்ன என்னமோ வரும் என்று சொல்லி அதை எடுத்துவிடச் சொல்லிவிட்டீர்கள். அதைப்போல் பத்திரிகை செய்தியை இப்போது அவர்கள் மட்டும் படிக்கலாமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குற்றச்சாட்டுகள் படிக்கக்கூடாது என்றுதான் சொல்லப்பட்டது. பத்திரிகைகளிலே வருவதை ஆதாரமாக வைத்து குற்றச்சாட்டுகளைப் படிக்கக் கூடாது, அமருங்கள்.

திரு. துரை முருகன் : அதேமாதிரி அவர்கள் படிக்கிற பத்திரிகையிலே வெஸ்ட் பெங்கால் கவர்ன்மெண்ட் பற்றி எழுதப்பட்டிருக்கிறது. குற்றச்சாட்டாகவோ அல்லது வேறுவிதமாகவோ பலவிதமாக பத்திரிகையில் செய்திகள் வரும், பத்திரிகை செய்தியை ஆதாரமாக வைத்துக்கொண்டு பேசக்கூடாது என்று அன்றைக்கு தீர்ப்பு அளித்தீர்கள்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : படித்துக் கொண்டிருப்பது வெறும் செய்திகள்.

திரு. துரைமுருகன் : அதே மாதிரி செய்தியை நாங்கள் படிக்கிறபோது வேண்டாமென்று சொன்னீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்.: உங்களுக்கு உபயோகரமாக இருக்க வேண்டுமென்பதற்காகத்தான் சொல்கிறேன். செய்திகளைச் .சொல்வதற்கும் குற்றச்சாட்டுகளைச் சொல்வதற்கும் வித்தியாசம் இருக்கிறது.

The HON. THIRU. S. RAGHAVANANDAM : If there is Violence in the name of Strike.

வேலை நிறுத்தம் என்ற பெயரால் வயலன்ஸ நடந்தால் போலீசை அனுப்புவோம். வேலை நிறுத்தம் நடந்தால் அனுப்புவதற்கு வாய்ப்பு இருக்கிறது. நான் குற்றம் சொல்ல வில்லை. யதார்த்தமான நிலைமை அது தான். கூட்டணிய நிலைமையிலே அதுதான் நிலை. Marhist C.P.I. Oalition Government. இரண்டு இடங்களிலே ஒருவருக்கொருவர் நிறைமையாக இருந்து நடத்தக்கூடிய இடத்திலே உள்ளத்தைப் பற்றிச் சொன்னேன்.

மதிப்பிற்குரிய அருமைச் சகோதரர் திரு. துரை முருகன் நேற்றைய தினம் சொன்னார்கள். மஞ்சம், மாயை என்று சொன்னார்கள். எனக்கு 65 வயதாகிறது. மஞ்சமாவது, மாயையாவது. நான்-ஏதோ மாயையிலே இருக்கிறேன் என்று சொன்னார்கள். நான் 65 வயது கிழவன் List chapte of my life is being written ஏதோ போகிற அன்றைக்கு போவோம் என்று இருக்கிறேன். கல்யாணம் பண்ணியாகிவிட்டது, பேரன் ஆயிற்று, கொள்ளுப்பேரன் ஆயிற்று, போகலாம் என்று நான் நினைத்துக் கொண்டிருக்கிறேன். நாளை எண்ணிக்கொண்டிருக்கிறேன். Already counting days.

[பிற்பகல் 1-20]

என்னால் பண்ண முடிந்த அளவிற்கு பண்ணியாகி முடிந்து விட்டது. 65 வயதுத் தள்ளாத கிழவனைப்பார்த்து இம்மாதிரி சொல்கிறார்கள், நியாயமா ?

சிம்சனைப்பற்றிச் சொன்னார்கள். சிம்சனிலே மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் எப்படியெல்லாம் செய்தார்கள், வேலை இல்லாதவர்களுக்கு எப்படி வேலை வாங்கித் தந்தார்கள் என்றெல்லாம் சொன்னார்கள்.

நான் ஒன்றைப் படிக்க விரும்புகிறேன். நான் படிப்பது சற்றுக் கசப்பாக இருந்தாலும், மகாத்மா காந்தி அவர்கள் சொன்னார்கள், மனம் புண்படும்போல இருந்தாலும் உண்மை பேசு, ஏனென்றால் புண்படுத்தக் கூடியது உண்மைதான், எனவே பேசு என்று மகாத்மா காந்தி அவர்கள் சொன்னதற்கேற்ப நான் இதைப் படிக்கலாம் என்று கருதுகிறேன்.

"Speak the truth even if it hurts, because the truth that hurts.

"Dr. H. V. Hande, then M.L.A.. in the Tamil Nadu Legislative Assemlby on 9th August 1972, in his speech said " It is the responsiblity of the Government for the present chaotic conditions of Simpson and Company affairs. The Government is responsible for the debacle. The Government should not have entered into the Trade Union affairs of Simpson and Company. Even at the very beginning, the Government should have prevented the destructive activities of the party workers and the free use of cycle chains and burning of cycle tyres and tubes against the workers of Simpson and Company. The Chief Minister did not show equal interest or sympathy in the death of Thiru Kannan another victim of Simpson and Company dispute, as be evidenced in the case of Thiru Pratapchandran. The Government are wholly responsible for the present labour unrest in Tamil Nadu and the Chief Minister and the entire Cabinet are wholly responsible for the labour unrest in the State."





[மேலும் சொல்கிறார் சர்க்காரியா :—

The material brought on the record shows that thure was much substance in this indictment of the D.M.K. Government by Dr. Hande on the floor of the House.

That this campaign of violence against the non-D.M.K. workers was covertly or overtly encouraged by the D.M.K. Party and the D.MK. Government headed by Shri Karunanidhi, is evident from the following circumstances. which appear to have been firmly established :—

(1) Soon after the establishment of a separate labour wing of the D.M.K. Party known as "Thozhilalar Munnetra Sangha Peravai" (Progressive Labour Federation). in May 1970, the Chief Minister Shri Karunanidhi, intervened in the dispute which was going on between the Labour Union headed by Gurumurthy and the Management of the Simpson Group of Companies. The workers were demanding Rs. 110 lakhs as bonus while the Management was prepared to pay only Rs. 70 lakhs. The Chief Minister told Gurumurthy to accept Rs. 50 lakhs as interim bonus pending a final settlement of the bonus issue. Gurumurthy and the workers of his group spurned the offer. This fact has not been denied by Shri Karunanidh in his affidaviti.

(2) The District Secretary of the D.M.K. Party purporting to act after consultation with Shri Karunanidhi, advised workers of D.M.K affiliation to retaliate, if they were assaulted by the rival group of workers belonging to the non-D.M.K. union. D.M.K. workers led by Pratapchandran on 22nd April 1971 assaulted several non-D.M.K. workers. As a consequence, 18 cases of assault etc.. were registered on that day, out of which 16 were againt t D.M.K. workers. When Gurumurthy and other Office-bearers of the Union complained to Shri Karunanidhi about the acts of violence indulged in by the D.N.K Group they were humilated and snubbed and accused by Shri Karunanidhi If aggreson aginst D.M.K. workers. Shri Gurumurthy was forced to resign by the acts of violence intimidation and indulged in by D.M.K. workers.

[திரு. எஸ். இராகவானந்தம்] [1981 பிப்ரவரி 10

(3) On 9th May 1971, Shri Karunanidhi addressing a meeting of the workers of the Simpson Group of Companies publicly announced and felicitated Kattur Gopal that he had been unanimously elected as the President of the Simpson Group of Companies Workers an' Staff Union.

(4) Thereafter, Kattur Gopal purporting to be the President of the Union entered into a settlement with the Management with regard to the dispute over bonus on the same terms which were suggested by Shri Karunanidhi to Gurumurthy and his associates and were spurned by them. (This suggests intimate concert between Shri Karunanidhi and Kattur Gopal).

Although there is no 'irect evidence that Shri Karunanidhi or his Cabinet collegautes or his agents planned an' engineered the n m rous assaults and acts of voilence against non-D.M.K. work rs yet the above circumstances frunish s fficient in'ication in the State ag ncies responsible for the main en nce of law-an'-order, that h D·M K. Gov rnment was on his side of the pro-D.M.K. work rs and this induced the Police to adopt an in ff c ive and passive attitued and to ignore, overlook and even con lone the viol nt ac ivities of the pro-D.M.K. workers, which in consequence, fosters an impression hat a worker affiliated to Pro-D.M.K. Labour Union coul d commit viol nce against the non-D.M.K workers, with imp nty.

(5) Further, even in the few cases in which the accused were arrested or charge-sheeted in Court , the investig ion or th pros cutions w re dropped or withdrawn under the orders of the D.M.K. Gov rnment which means the orders of Shri Karunanihdi, Chief Minister who was in charge of the portfoli o of law and order.

(6) After the murders of Pratapchandran and Kannan as a result of its castigation in the Assembly and in the Press, the State Governent did wake up to their responsibllity and took eff c ive steps to put down the endemic lawlessness by the workers of the Simpson Group of Companies As a result of this, the Simpson Group of Companis reopened on 23rd August 1972 and uninterrupted peace prevailed here after. This only shows that if such prompt and eff c ive steps had been taken earlier the trouble would have been nipped in the bud, and these unfortunate incidents covering a period of two years, were really not due to the in-efficiency of the Police but b cause of the unwillingness of D.M.K Government to use the Police efficiently against the pro-D.M.K workers who were mainly responsibly to this lawlessness.



1981 பிப்ரவரி 10] [திரு. எஸ். இராகவானந்தம்]

The withdrawal of the few cases which were started against miscreants by the State Government amounted to an undue interference in the course of justice. There was absolutely no public interest involved to justify the withdrawal of these cases, rather, the continuance of these prosecutions to their logical consequence could have indicated the law and deterred the miscreants from pursuing thers lawl ss activities in future.

Ironical as it may seem, it was the failure of the D.M.K. Government to use its Police machinery effectively against the militant D.M.K. workers that resulted in the murder of the alleged fire-brand D.M.K worker, Pratapchandran ..............

எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் (குறுக்கீடு) சர்க்காரியா கமிஷன் சொல்லியிருக்கிறது.

டாக்டர். மு. கருணாநிதி . தலைவர் அவர்களே, சர்க்காரியா கமிஷனுடைய அறிக்கையை இங்கே படித்து, அது நிருபிக்கப்பட்ட குற்றச்சாட்டு என்பதைப் போல், முன்பிருந்த திராவிட முன் னேற்றக் கழக அரசு மீது அல்லது என் மீது குற்றம் நிருபிக்கப் பட்டதாகப் பாவித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே பேசினார்கள். சர்க்காரியா கமிஷன் அறிக்கையில் நம்முடைய நிதியமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் மீது சாட்டப் பட்ட குற்றச்சாட்டுகளும் நிருபிக்கப்பட்டதாகச் சொல்லப்பட் டிருக்கிறது. பாட புத்தகத்தைப் பற்றி. இன்றைய அண்ணா தி.மு.க. பொதுச் செயலாளராக இருக்கிற ப.உ.ச. மீதும் குற்றம் நிருபிக்கப்பட்டிருப்பதாக சொல்லப்பட்டிருக்கிறது. அவைகளை எல்லாம் நமது அமைச்சர் அவர்கள் ஏற்றுக் கொள் கிறாரா? அல்லது, அவைகளை எல்லாம் விட்டு விட்டு, இதை மட்டும் ஏற்றுக் கொள்கிறாரா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் Golden days, Golden era என்பதற்காகச் சொன்னார்கள். அதற்காக, ஒரு நீதிபதி அவர்கள் கொடுத்த அறிக்கையைப் படித்துக் காண்பித்தேன். இதோடு இந்த நிறுத் திக் கொள்கிறேன்.

டாக்டர் மு. கருணாநிதி : நான் கேட்டதற்கு அமைச்சர் பதில் அளிக்கவில்லை. மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் குறிப்பிட்டது இது அல்ல. சிம்சனிலே அமளிகள் ஏற் பட்டு, அதற்குப் பிறகு 186 தொழிலாளர்கள் வேலையில்லா திருக்கிற சூழ்நிலை ஏற்படக் கூடிய நிலையில், முதலமைச்சர் முன்னாலே ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. அதன்படி நிர்வாகத் தினர் அந்த 186 தொழிலாளர்களை விசாரிப்பது என்றும் விசாரித்து எடுக்கின்ற முடிவு எத்தகையதாயினும் முதலமைச்சர்

[டாக்டர். மு. கருணாநிதி] ['1981 பிப்ரவரி 10

தீர்ப்பே இறுதியான தீர்ப்பு என்றும் ஒப்பந்தம் ஆகியது. ஆனால், நிர்வாகத்தினர் 186 பேரையும் வேலைக்கு எடுத்துக் கொள்ள வில்லையென்றுதான் அன்றைக்கிருந்த..........

(பிற்பகல் 1·30)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையின் அனுமதியுடன் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. என். சங்கரய்யா : மாண்புமிகு அமைச்சர் அவர்களே, இன்னும் பதில் சொல்லி முடிக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எவ்வளவு நேரம் ஆனாலும். இன்றைக்கே முடித்து விடலாம்.

டாக்டர் மு. கருணாநிதி : அந்த 186 பேரையும் வேலையிலிருந்து நீக்குவதாகத்தான் அப்பொழுது நிர்வாகம் அறிவித்தது. ஆனால், ஏற்கனவே ஆன ஒப்பந்தத்தின்படி, முதலமைச்சருடைய தீர்ப்பே இறுதியானது என்பதை வைத்துக் கொண்டு, அன்றைய தினம் பலாத்காரமான நடவடிக்கைகளிலே ஈடுபட்டார்கள் என்று குற்றஞ் சாட்டப்பட்ட தொழிலாளர்கள் உட்பட 186 தொழிலாளர்களையும் நிர்வாகத்தினுடைய முடிவுக்கு மாறாக, திராவிட முன்னேற்றக் கழக அரசு வேலைக்கு எடுத்துக் கொண்டது என்பதைத்தான் தலைவர் ராமமுருகன் இங்கே குறிப்பிட்டார். அதை வைத்துக் கொண்டு சர்க்காரியா கமிஷனுக்கு அமைச்சர் செல்வதும், நான் கேட்ட கேள்விக்குப் பதில் அளிக்காமல் இருப்பதும் முறை அல்ல.

திரு. என். சங்கரய்யா : பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பாயிண்ட் ஆப் ஆர்டர். ஏதோ ஒரு சில நிமிடங்களில் இந்த சபை முடிந்துவிடக் கூடுமானால் சில நிமிடங்கள் நீட்டிப்பது என்பதில் ஒரு பொருள் உண்டு. மணி 1½ ஆகிறது. அமைச்சர் அவர்கள் பாதியிலே நிற்கிறார்கள்.........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் 5 நிமிடத்திலே முடித்துவிடுவார். உமாநாத் அவர்கள் 5 நிமிடத்திலே மறுப்புச் சொல்வார். திருப்பி, 5 நிமிடத்திலே முதல்வர் அவர்கள் பதில் சொல்வார்கள்.

திரு. என் சங்கரய்யா : தலைவரவர்களே, உமாநாத் இந்தத் தீர்மானத்தை முன் மொழிந்தவர். அவருக்கு 5 நிமிடம் போதாது. ஆகவே நாளைக்கு காலையிலே இதனை வைத்துக் கொண்டால் பொருத்தமாக இருக்கும்.

1981 பிப்ரவரி 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அலுவல் ஆய்வுக் குழுவிலே நாம் ஏற்கனவே பேசி இதற்கு 2 நாட்கள் ஒதுக்கியிருக்கிறோம். நேற்று 1[illegible] மணி வரை பேச அனுமதித்தோம். இப்போதும் மணி ஏறக்குறைய 1[illegible] இப்போதே இதை முடித்து விடலாம்.

டாக்டர் மு. கருணாநிதி : : தலைவரவர்களே, இந்தக் கூட்டத் தொடரை விரைவிலே முடிக்க வேண்டுமென்பதிலே உள்ள இன்றியமையாமையை நானும் உணர்கிறேன். இது நாளைக்கும் நீடிக்கும் என்ற காரணத்தால் காலையிலே கேள்வி நேரத்தை ஒத்தி வைத்து விட்டு காலை 9 மணிக்கு அமைச்சருடைய பதிலை அவர் முடித்துவிட்டு பிறகு உமாநாத் அவர்கள் பேசி, விவாதத்தை அப்படி வைத்துக் கொள்வது நல்லதென்று கருதுகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராகவானந்தம் : : தலைவரவர்களே' நான் இன்னும் ஒரு 15 நிமிடங்களில் முடித்து விடுகிறேன், (குறுக்கீடு).

மாண்புமிகு திரு க. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் இப்பொழுது தன்னுடைய உரையை முடித்து விடட்டும். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே சொன்னது போலவும், மற்ற கட்சித் தலைவர்களும் குறிப்பிட்டது போலவும், நாளைக்கு வேண்டுமானால் கேள்வி நேரத்தைத் தள்ளி வைத்து விட்டு அந்தக் கேள்வி நேரத்திலே, 9 மணிக்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் பேசட்டும்.

திரு. என். சங்கரய்யா : தலைவரவர்களே, இப்போது அமைச்சர் அவர்கள் பேசி முடிக்கட்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பிறகு உமாநாத் பேச வேண்டும். திரு. உமாநாத்துக்குப் பிறகு மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்ல வேண்டும். (குறுக்கீடு) சென்சர் மோஷனுக்கு முறைகள் அப்படித்தான் இருக்கிறது. ஏது என்று கேட்டால் நான் என்ன பண்ணுவது. இருக்கிற முறைகளை மாற்ற முடியாது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது பதில் என்ற முறையில் சொல்லிக் கொண்டிருக்கிறேன். 3 ஆண்டுகளாக இந்த அரசு செய்த சாதனைகளைச் சொல்லியாக வேண்டும். '' ஐ வான்ட் எ பிட் டைம் பார் தட் '' (குறுக்கீடு) நாங்கள் என்ன செய்திருக்கிறோமா ? சும்மாவா இருந்தோம் ?

## 5 அறிக்கை அளித்தல்

### (அ) கைலாசம் சமிஷன் நியமனம்

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மாமன்றத்திற்கு ஒரு அறிவிப்பைத் தரவேண்டிய கட்டாயத்தில் இருப்பதால் நான் இங்கே இந்த அறிக்கையைப் படிக்க விரும்புகிறேன்.

தமிழ்நாட்டிலிருந்து கேரளாவுக்கு எரி சாராயம் கொண்டு போக ஏற்றுமதி பெர்மிட் வழங்கியது பற்றி நீதி விசாரணை வைப்பதற்கு இந்த அரசு முன் வந்திருக்கிறது. ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி திரு. பி. எஸ். கைலாசம் அவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**டாக்டர் மு. கருணாநிதி :** நாங்கள் அதை வன்மையாக மறுக்கிறோம். ஏனென்றால் ஓய்வு பெற்ற திரு. கைலாசம் நீதிபதியாக நியமிக்கப்பட்டால் அது நல்ல தீர்ப்புக் கொடுக்காது என்று எங்களுக்குத் தெரியும். ஆகவே நாங்கள் வன்மையாக மறுக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அமைச்சரவையின் தொழிலாளர் விரோதக் கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம் நாளை தொடரும். நாளைக் காலை வினா விடை நேரம் இருக்காது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று நாளை (11.2.1981) காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1·35 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

### பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

#### அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்

(201) பெரியகுளம், உத்தமபாளையம் வட்டங்களில் உள்ள சில வழித்தடங்களில்—திருவாளர்கள் பாண்டியன் போக்குவரத்துக் கழகம் இயக்கும் சிறிய பயணியர் பேருந்துகளைப் பொறுத்த வரையில் வரிவீதத்தைக் குறைத்து, செலுத்தத்தக்க வரிமீது மேல் வரியை விதிப்பது குறித்த, உள்துறையின் (போக்குவரத்து -1) 1980 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 17 ஆம் தேதியிடப்பெற்ற 3310 ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு. [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

#### ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

ஏதுமில்லை.





## இணைப்பு I.

(139 ஆம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண். 262-க்கான விடையைக் காண்க.)

வாடகை நிர்ணயிப்புக்குழு, வீட்டுவசதி வாரியமும் அரசுப் பொதுப்பணித்துறையும் பின்பற்றி வருகிற நடைமுறைகளைக் கருதிப் பார்த்து, வீட்டுவசதி வாரியம் கணக்கிடும் கட்டுபடி வாடகை பொதுப்பணித்துறை கணக்கிட்ட (ஸ்டாண்டர்டு) வாடகையை விட மிகவும் அதிகமாகும். கட்டுப்படி வாடகையை அரசுப் பணியாளர்களால் செலுத்த இயலாது என்று இக்குழு கருதியது. எனவே, இக் குழு அரசுக் குடியிருப்புகளைப் பொறுத்தவரை கட்டுபடி வாடகைக் கொள்கையைச் செயலுக்குக் கொண்டு வருவது அவசியமில்லை என்று கருதியது.

2. இக்குழுவின் பரிந்துரைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

(அ) இருந்த கட்டிடத்தை இடித்துவிட்டு அந்த இடத்தில் புதிய கட்டிடத்தைக் கட்டுவதற்கான செலவின் அடிப்படையில், கட்டிடத் தலைமைப் பொறியாளரால் அவ்வப்போது நிர்ணயிக்கப்படும் கட்டிடப் பரப்பு வீதங்களிலிருந்தும், அதிலிருந்து ஸ்டாண்டர்டு தேய்மானச் செலவைக் கழித்துக் கொண்ட பிறகும், கணக்கிடப்பட்ட ஸ்டாண்டர்டு வாடகையை நிர்ணயிக்கும் பழக்கம் தொடர்ந்து இருந்து வரலாம் என்று இக்குழு முடிவு செய்தது.

(இ) தற்போதுள்ள ஏற்பாடு, மூலதன முதலீட்டில் 7½ சதவீதம் ஆதாயம் எதிர்பார்க்கிறது. குடியிருப்புகள் கட்டுவதற்கான அரசு நிதிகள் சுமார் 7½ சதவீதத்திலேயே பெறப்படுகின்றன. ஆகவே, 7 சதவீதம் ஆதாயம் நிர்ணயிப்பதில் நியாயம் உள்ளது. ஆயினும், இக்குழு அரசுப் பணியாளர்களுக்கு ஓரளவு சலுகை காட்ட வேண்டியது அவசியம் என்று கருதியது. இக்குழு பரிந்துரைக்கிற அதிக அளவு பராமரிப்புச் செலவின் அவசியத்தைக் கருத்திற்கொண்டு, 5 சதவீதம் ஆதாயம் கொள்வது போதுமானதென்று குழு கருதியது. ஆதாயம் இவ்வாறு குறைவதை முன்னிட்டு அரசு உதவி கணிசமான அளவுக்கு இருக்கும். மேலும், பணியாளர்களுக்கு செய்யும் சேமநல ஏற்பாடாக இதனைக் கருதி இந்நிதிப்பொறுப்பை அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று இக்குழு கருதியது.

(உ) இப்போதுள்ள ஏற்பாடு ஸ்டாண்டர்டு வாடகையைக் கணக்கிடுவதற்கு நிலத்தின் விலை கணக்கில் கொள்ளப்பட வேண்டுமென்று கூறுகிறது. நிலத்தின் விலை கருத்தில் எடுத்துக் கொள்ளப்படுமாயின், அரசுப் பணியாளர்கள் தாங்க இயலாத அளவுக்கு வாடகை அதிகமாகி விடும் என்று இக்குழு கண்டது.

அரசுப்பணியாளர்களுக்கு மேலும் அளிக்கப்படும் ஒரு சலுகையாகக் கொண்டு வாடகையை நிர்ணயிக்கையில், நிலத்தின் விலையைச் சேர்க்கவேண்டியதில்லை என்று இக்குழு முடிவு செய்தது.

(எ) குடியிருப்புக்கள் பராமரிப்பைப் பொறுத்தமட்டில், செய்து கொடுக்கப்படும் வசதிகள் போதியளவுக்கு இல்லை என்றே இக்குழு கருதுகின்றது. மின் இணைப்புக்கும் குடிநீர் வழங்கலுக்கும் தனியே பராமரிப்புச் செலவுக்கு வகை செய்ய வேண்டிய அவசியமில்லை. கட்டிடத்தின் தேய்மான மதிப்பின் அடிப்படையில் ஒரே சீரான பராமரிப்புச் செலவு போதுமானதாகும். பராமரிப்புச் செலவு என்பது கட்டிடத்தின் வயதைப் பொறுத்ததாகும்; பழைய கட்டிடங்களுக்கு அதிக அளவு பராமரிப்புச் செலவுக்கு வகை செய்வது அவசியமாகிறது. சென்னையிலும், உதகமண்டலத்திலும் கட்டிடப் பராமரிப்புக்கு தனி நிதி ஒதுக்கங்கள் செய்வது மிகவும் அவசியமாகிறது. ஆயினும், வாடகையைக் குறைந்தளவில் வைத்து வரவேண்டியதன் அவசியத்தை முன்னிட்டு, இதற்காகக் கூடுதலாக நிதி ஒதுக்கங்கள் செய்ய வேண்டுமென்று இக்குழு கருத்து தெரிவிக்கவில்லை.

(ஐ) தற்போது ஸ்டாண்டர்டு வாடகையைக் கணக்கிடுகையில் சொத்து வரியும் கருத்தில் கொள்ளப்படுகிறது. ஒரு சலுகை ஏற்பாடாக ஸ்டாண்டர்டு வாடகையில் இதனைச் சேர்ப்பது அவசியமில்லை என்று இக்குழு கருதியது. குடியிருப்புகளுக்குச் சொந்தக்காரர் என்ற முறையில் அரசே சொத்து வரியைச் செலுத்தலாம்.

3. ஸ்டாண்டர்டு வாடகையை எல்லாக் குடியிருப்புகளுக்கும் நிர்ணயிக்கலாம். இப்போது நிர்ணயித்துள்ள ஸ்டாண்டர்டு வாடகைகளை 1990-ல் திருத்தியமைக்கலாம். புதிய கட்டுமானங்களுக்கும்கூட ஒருமுறை நிர்ணயித்த ஸ்டாண்டர்டு வாடகையை எல்லாக் குடியிருப்புகளுக்கும் குறிப்பிட்ட ஆண்டுகளில் பொதுவாக வாடகையைத் திருத்தியமைக்கும்போது திருத்தி அமைத்தாலே போதுமானதாகும்.

4. அரசுப் பணியாளர்கள் ஸ்டாண்டர்டு வாடகையைச் செலுத்த இயலும் வகையில் அவர்களுக்கு வீட்டுவாடகைப்படிக் கொடுக்கப்பட வேண்டும் என்று அவர்கள் செய்து கொண்டுள்ள வேண்டுகோளையும் இக்குழு பரிசீலித்தது. மேலே கணக்கிடப்பட்ட வாடகை, கட்டுபடி வாடகையோ அன்றி அங்காடி நிலவர வாடகையோ அன்று என்பதையும் அது ஒரு ஸ்டாண்டர்டு வாடகை நியாய வாடகை என்பதையும் தெளிவாக உணர்ந்து கொள்ள வேண்டும். இதில் அரசுக்கு எந்தவித இலாபமும் கிடையாது. உண்மையில் சொல்லப்போனால், இதில் கணிசமான அளவு அரசு கொடுக்கும் உதவித் தொகை உள்ளது.



மூலதனத்துக்காகும்செலவைக்கூட அரசு வசூலிப்பதில்லை. இத்துடன் அரசு சொத்து வரி செலுத்துவதோடு நிலத்தின் விலையையும் முற்றிலும் ஏற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. வீட்டு வாடகைப்படி என்பது அரசுக் குடியிருப்பு கொடுக்கப்படாத அரசுப் பணியாளர்களுக்கு கொடுக்கப்படுகிற ஓர் ஈட்டுப்படியே ஆகும். வேறு வகையில் கூறுவதாயின், இது அரசுக் குடியிருப்புக்கு வகை செய்யப்படாத போது அதற்குப் பதிலாக அல்லது ஓரளவுக்கு ஈடாக கொடுக்கப்படுகிற ஈட்டுப்படியே ஆகும். ஆகவே, அரசுக் குடியிருப்பு கொடுக்கப்பட்டுள்ள அரசுப் பணியாளர்களுக்கு வீட்டு வாடகைப்படி கொடுப்பதாயின் அது எந்த நோக்கத்திற்காக வீட்டு வாடகைப்படி கொடுக்கப்படுகிறதோ அந்த நோக்கத்திற்கு விரோதமானது; மேற்சொன்ன காரணங்களை முன்னிட்டு, அரசுக் குடியிருப்புகளில் குடியிருந்துவருவோருக்கு வீட்டு வாடகைப்படி கொடுக்க வேண்டிய அவசியமில்லை. ஆகவே, இக்குழு, அரசுப் பணியாளர்களுக்கு அடிப்படைச் சம்பளத்தில் பத்து சதவீதம், ஸ்டாண்டர்டு வாடகை இவற்றுள் எது குறைவானதோ அதைக் கொடுக்கும் விருப்புரிமையை பணியாளர்களிடம் விடலாம் என்று பரிந்துரைக்கிறது.

5. சம்பளக்குழு, அகவிலைப்படியையும் இடைக்கால உதவித் தொகையையும் சம்பளத்தோடு இணைத்துவிட்டது என்பதைப் பார்த்தோம். அரசுப் பணியாளரின் சம்பள வீதத்தைப் பொறுத்து இத்தொகை 105-லிருந்து 165 ரூபாய் வரை உள்ளது. இது அரசுப்பணியாளர்களுக்கும் பல வழிகளில் பயனளித்துள்ளது. அரசுக் குடியிருப்பு கொடுக்கப்படாதவர்களுக்குக் கூடுதலாக வீட்டு வாடகைப்படி கொடுத்திருக்கிறது. உயர்ந்த நகர ஈட்டுப்படி ஓய்வூதிய நன்மைகள் ஆகியவற்றாலும் அரசுப்பணியாளர்கள் நன்மை பெற்றுள்ளனர். ஆனால், அரசுக் குடியிருப்புகளில் குடியிருந்துவரும் அரசுப் பணியாளர்கள் (சென்னையிலும் மாவட்டத் தலைமையிடங்களிலும்) தங்களது சம்பளத்தில் உடனடியாக அதிகரிப்பு எதுவுமின்றியே, 10 ரூபாய் முதல் 16.50 வரையில் அதிக வாடகை செலுத்த வேண்டியவர்களாய் உள்ளனர். எந்த ஒரு சம்பளக் குழு அறிக்கைக்குப் பிறகும், இதனைத் தவிர்க்க இயலாது. இத்தகைய அரசுப் பணியாளர்களுக்கு அளிக்கப்படும் நிகர ஊதிய உயர்வு 5 ரூபாய்க்கும் குறையக்கூடாது என்று அரசு ஏற்கெனவே ஆணை பிறப்பித்துள்ளது. இக்குழு இப்பிரச்சினையைக் கருதிப்பார்த்து இவ்வகை அரசுப் பணியாளர்களுக்கு ஓரளவு பரிகாரம் அளிப்பது பொறுத்தமானது என்று முடிவுக்கு வந்தது. அடிப்படைச் சம்பளத்தில் இணைக்கப்பட்டுள்ள அகவிலைப்படி பகுதியை சென்னை மாநகரிலும் மாவட்டத் தலைமையிடங்களிலுமுள்ள குடியிருப்புகளைப் பொறுத்தவரையில், அடிப்படைச் சம்பளத்தில் 10 சதவீதத்தைக் கணக்கிடுகையில் சேர்க்காதிருக்க வேண்டும் என்பதுதான் இக்குழுவின் கருத்தாகும். இதனால் அரசுப் பணியாளர்களுக்கு 10 ரூபாய்முதல் 16.50 ரூபாய் வரை பரிகாரம் கிடைக்கும். இதனையே தொடர்ந்து செயல்படுத்துவதும் விரும்பத்தக்கதுமல்ல; அன்றியும் அது

இயலாது. ஆகவே, ஐந்தாண்டுக் கால அளவில் இந்தத் தொகையைச் சரிக்கட்டிக் கொள்ளலாம் என்று இக்குழு பரிந்துரைத்தது.

6. கட்டிடங்களைச் சரிவர பராமரித்து வரவேண்டியதன் அவசியத்தைப் பற்றி இச்சந்தர்ப்பத்தில் வலியுறுத்த இக்குழு விரும்புகிறது. பராமரிப்புக்காக கூடுதலாக நிதி ஒதுக்க வேண்டும் என்பதிலும் நியாயம் உள்ளது. பராமரிப்புப் பணிகளின் தரத்தை உயர்த்த வேண்டிய அவசியமும் உள்ளது. இத்தகைய குடியிருப்புகளைக் குறிப்பாக, சென்னை மாநகரிலும், உதகமண்டலத்திலும் உள்ள குடியிருப்புகளைச் சரிவர பராமரித்து வருவதை உறுதி செய்யும் வகையில், இவற்றின் பராமரிப்புக்குத் தேவையான நிதி ஒதுக்க வேண்டுமென இக்குழு பரிந்துரைத்தது.

---

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

### புதன்கிழமை, 1981 பிப்ரவரி 11.

சென்னை செயிண்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

*நகையுள்ளும் இன்னாது இகழ்ச்சி பகையுள்ளும்*
*பண்புள பாடறிவார் மாட்டு.*

ஒருவனை விளையாட்டாக இகழ்ந்து பேசுவதும் துன்பம் தரும். பிறருடைய இயல்பை அறிந்து நடப்பவர்கள் பகைவரிடத்தில் உள்ள நல்ல பண்புகளை அறிந்து போற்றுவர்.

### 1. இரங்கல் குறிப்பு

#### வாணியம்பாடி அருகே ஏற்பட்ட இரயில் விபத்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நேற்று இரவு சென்னையில் இருந்து சென்ற ஏற்காடு விரைவு இரயில் வண்டி வாணியம்பாடிக்கு அருகே விபத்துக்குள்ளாகி, அதனால் பல பேர் உயிர் இழக்க நேரிட்டது என்றும், பலர் காயமுற்று உள்ளனர் என்றும் தகவல் கிடைத்துள்ளது என்பதை இப்பேரவைக்கு மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். விபத்திலே காயமுற்றவர்கள் விரைவிலே குணம் அடைய இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் நல்லெண்ணத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். விபத்திலே உயிரிழந்தவர்கள் குடும்பத்தாருக்கு இப்பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். விபத்தில் இறந்தவர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில் இப்பேரவையின் உறுப்பினர்கள் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

*(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றனர்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மறைந்தவர்களுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில், அரை மணி நேரம் பேரவையின் நிகழ்ச்சிகள் ஒத்திவைக்கப்படுகின்றன. காலை 9–36 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர், பேரவை காலை 9-03 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

காலை 9-30 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

மாண்புமிகு திரு. சு. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சற்றும் எதிர்பாராத வகையிலும் அதிர்ச்சி தரக் கூடிய வகையிலேயும் வாணியம்பாடிக்கு அருகில் இரயில் வண்டிகள் விபத்துக் காரணமாக ஏற்பட்டுள்ள நிலைமையைக் கருத்திலே கொள்ளுகிறபோது, அங்குள்ள முழு விவரங்களும் தெரியாத இந்த அளவில் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் பலர் அது சம்பந்தமாக செல்லவேண்டி இருக்கிற சூழ்நிலையின் காரணத்தால் பேரவையை இன்றைக்கு முழுமையாக ஒத்தி வைத்து, நாளைக் காலை 11-00 மணிக்கு மீண்டும் பேரவையைக் கூட்டுவதற்கு தாங்கள் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையின் விருப்பத்திற்கிணங்க அவையை இன்றைக்கு ஒத்திவைக்கிறேன். நாளைக் காலை 11-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும். நாளைக் காலை 'வினாக்கள்—விடைகள்' நேரம் இல்லை.

பின்னர் பேரவை காலை 9—32 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 2. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

எதுவுமில்லை

### ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

38. 1974-75 மற்றும் 1975-76 ஆம் ஆண்டுகளுக்கான தமிழக அரசின் கணக்குகள் மற்றும் அவ்வாண்டுகளுக்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் சிவில் துறைகள் பற்றிய அறிக்கைகள் இவற்றில் சில துறைகள் தொடர்பான குறிப்புகளின் மீதான பொதுக் கணக்குக் குழுவின் மூன்றாவது அறிக்கை பகுதி I (தமிழ்).

39. தமிழ்நாடு அரசின் 1960-61 முதல் 1971-72 ஆண்டு வரையிலான கணக்குகள் மீதான குழுவின் அறிக்கைகளில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்த பொதுக் கணக்குக் குழுவின் நான்காவது அறிக்கை (தமிழ்).



40. 1975-76 ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் துணை அறிக்கையின் (சிவில்) மீதான பொதுக் கணக்குக் குழுவின் ஐந்தாவது அறிக்கை (தமிழ்).

41. 1974-75 மற்றும் 1975-76 ஆம் ஆண்டுகளுக்கான தமிழக அரசின் கணக்குகள் மற்றும் அவ்வாண்டுகளுக்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் சிவில் துறைகள் பற்றிய அறிக்கைகளில் சில துறைகள் தொடர்பான குறிப்புகள் மீதான பொதுக் கணக்குக் குழுவின் ஆறாவது அறிக்கை, பகுதி II (தமிழ்).

*42. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு வீட்டு வசதி வாரிய (திருத்த) சட்ட முன்வடிவின் நகலும், இணைப்பும் (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 15/1981).

*43. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு கால்நடை மருத்துவர்கள் பதிவு (திருத்த) சட்ட முன்வடிவின் நகலும், இணைப்பும் (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 16/1981).

* 9—2—1981 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெற்றன.

## தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை

### வியாழக் கிழமை 1981 பிப்ரவரி 12

சென்னை, செயிண்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 11—00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் —**

*'' கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை*
*சொல்லா நலத்தது சால்பு.''*

ஓர் உயிரையும் கொலை செய்யாத அறிவை அடிப்படையாகக் கொண்டது தவம். இதைப்போல் பிறருடைய தீமையை எடுத்துச் சொல்லாத நற்பண்பை அடிப்படையாகக் கொண்டது சால்பு.

### 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிடாத வினாக்கள்

117 முதல் 194-ம் பக்கங்களில் பார்க்க

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

### 2. அறிக்கை அளித்தல்

........வினாக்களையும், அவற்றுக்கான விடைகளையும் இணைப்பில் பார்க்க.

### (அ) பொதுக் கணக்குக் குழு

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பொதுக் கணக்குக் குழுவின் கீழ்க்கண்ட அறிக்கைகளை நான் பேரவைக்கு அளிக்கிறேன் :

1974—75 மற்றும் 1975—76 ஆம் ஆண்டுகளுக்கான தமிழக அரசின் கணக்குகள் மற்றும் அவ்வாண்டுகளுக்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் சிவில் துறைகள் பற்றிய அறிக்கைகள் இவற்றில் சில துறைகள் தொடர்பான குறிப்புகளின் மீதான மேற்படி குழுவின் அறிக்கை (பகுதி 1) மூன்றாவது அறிக்கை ;

தமிழ்நாடு அரசின் 1960—61 முதல் 1971—72 ஆண்டு வரையிலான கணக்குகள் மீதான குழுவின் அறிக்கைகளில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்த அறிக்கை (நான்காவது அறிக்கை) ;

1975—76 ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் துணை அறிக்கையின் (சிவில்) மீதான மேற்படி குழுவின் (ஐந்தாவது அறிக்கை);

[1981 பிப்ரவரி 12

1974–75 மற்றும் 1975–76 ஆம் ஆண்டுகளுக்கான தமிழக அரசின் கணக்குகள் மற்றும் அவ்வாண்டுகளுக்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் சிவில் துறைகள் பற்றிய அறிக்கைகளில் சில துறைகள் தொடர்பான குறிப்புகள் மீதான மேற்படி குழுவின் அறிக்கை (பகுதி-2) (ஆறாவது அறிக்கை) ;

1975–76 ஆம் ஆண்டிற்கான வாக்களிக்கப்பெற்ற மானியக் கோரிக்கைகளுக்கும் சாட்டப்பெற்ற நிதி ஒதுக்கீடுகளுக்கும் கூடுதலாகச் செலவழித்த தொகைகள் பற்றிய மேற்படி குழுவின் அறிக்கை (ஏழாவது அறிக்கை).

### (ஆ) பொது நிறுவனங்கள் குழு

**திரு. தி. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் கீழ்க்கண்ட அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கிறேன் :—

இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1974–75, 1975–1976 ஆம் ஆண்டுகளுக்கான (வணிகத் துறைகள் பற்றிய) அறிக்கைகளின் மீதான மேற்படி குழுவின் அறிக்கை (இரண்டாவது அறிக்கை) ;

தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் மீதான மேற்படி குழுவின் அறிக்கை (மூன்றாவது அறிக்கை) ;

1972–73 முதல் 1975–76 வரையிலான ஆண்டுகளுக்கான தமிழ்நாடு மின்வாரியத்தின் கணக்குகளின் மீதான தணிக்கை அறிக்கைகள் பற்றிய மேற்படி குழுவின் அறிக்கை (நான்காவது அறிக்கை) ;

இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1970–71 ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் கண்டுள்ள தமிழ்நாடு மின்வாரியம் தொடர்பான குறிப்புகள் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் (1974–75) இரண்டாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய மேற்படி குழுவின் அறிக்கை (ஐந்தாவது அறிக்கை).

## 3. அரசினர் சட்ட முன் வடிவுகள்

### (அ) தனிக் குடியிருப்புப் பகுதி உடைமை உரிமைச் சட்ட முன்வடிவு, 1981

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு தனிக்குடியிருப்புப் பகுதி உடைமை உரிமைச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.



1981 பிப்ரவரி 12]

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** தலைவரவர்களே, இச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

## 4. அமைச்சரவையின் கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானம், விவாதம்— தொடர்ச்சி.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** பேரவைத் தலைவரவர்களே, நேற்றைய தினம் பேசியதை ஒட்டி அரசின் சார்பாக மேலும் சில கருத்துக்களை அவைமுன் வைக்க விரும்புகிறேன்.

வேலை நிறுத்த காலங்களை இந்த அரசு நீட்டிக்கிறது, விரைவிலே ஒப்பந்தம் செய்வதில்லை, அதனால் தொழிற்சங்க இயக்கமே பாழ்பட்டு விடுகிறது, அதனால் பலர் வேலையிழந்து விடுகின்றனர் என்றெல்லாம் குற்றச்சாட்டுக்கள் சொல்லியதற்காக அதன் நிலைமையை எடுத்துச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தொழிலாளர் பிரதிநிதிகளும், தொழில் அதிபர்களும் ஆக இரு சாராரும் ஏற்றுக்கொள்ளும் வகையில் எடுக்கின்ற முயற்சியில் வெற்றி பெறுவோமேயானால் அது விரைவிலே முடிந்துவிடுகின்றது. இல்லை என்றால் நாட்கள் ஆகின்றன. அது சில நேரங்களில் ஒத்துழைப்பு இல்லாத காரணத்தால் தவிர்க்க முடியாததாக ஆகிவிடுகிறது என்பதையும் எடுத்துச் சொன்னேன். அது மட்டும் அல்ல, மேற்கு வங்காளத்தைச் சிறந்த அரசு என்றும், அந்த அரசு செய்திருக்கும் சில காரியங்களைப் பார்த்து நாங்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்கிற முறையிலே அந்த முதல்வர் செய்த சில செயல்களை எடுத்து மாண்புமிகு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் சொன்னதற்குப் பதிலாக அவர்கள் மீது நாங்கள் வைத்திருக்கும் மதிப்பை எந்த வகையிலும் குறைக்க விடாமல், குறைபட்டு விடாமல், அந்த மாநிலத்திலேயே எப்படி அதிக நாட்கள் வேலை நிறுத்தம் நடைபெற்றிருக்கிறது என்பதையும், 8 மாதங்கள் வரையில் கூடத் தொடர்ந்து நடைபெற்றிருக்கிறது என்பதையும் எடுத்துச் சொன்னேன்.

இந்தக் கண்டனத் தீர்மானத்திலே திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்களும் கலந்துகொண்டு பேசினார்கள். அதே குற்றச்சாட்டை— ஆனால், அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கே உரிய பாணியில் எடுத்துச் சொன்

னார்கள். நான் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன்—திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அதே பாணியிலே.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலேயும் இப்படி அதிக நாட்கள் வேலை நிறுத்தம் நடைபெற்றிருக்கிறது.

| | நாட்கள். |
|---|---|
| கார்ப்பொரேண்டம் யூனிவர்சல் லிமிடெட்,.. மெட்ராஸ். | 77 |
| தஞ்சாவூர் டெக்ஸ்டைல்ஸ், தஞ்சாவூர் .. .. | 39 |
| மஜூரா மில்ஸ் லிமிடெட், மதுரை .. .. | 70 |
| ஸ்ரீ ராஜேந்திரா மில்ஸ், சேலம் .. .. .. | 37 |
| சேலம் டெக்ஸ்டைல்ஸ், ஆத்தூர் .. .. .. | 48 |
| சுந்தரம் டெக்ஸ்டைல்ஸ், நாங்குநேரி .. .. | 66 |
| ஸ்ரீ கணேசர் அலுமினியம் வொர்க்ஸ், மெட்ராஸ் (செஞ்சுரி போட்டிருக்கிறார்கள்—கிரிக்கெட்டில் போடுவது போல்). | 100 |
| மைசூர் பிரீமியர் மெட்டல் பேக்டரி, மெட்ராஸ்.. | 52 |
| சிம்சன் குரூப்ஸ் கம்பெனி .. .. .. .. | 9 |
| | (நீண்ட மாதங்கள்.) |
| சதர்ன் ஆஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் லிமிடெட், அரக்கோணம். | 59 |
| டியூப் பிராடக்ட்ஸ் ஆப் இந்தியா லிமிடெட், ஆவடி. | 63 |
| இந்தியா மீட்டர்ஸ் லிமிடெட், மெட்ராஸ்.. .. | 118 |
| ராயலா கார்ப்பரேஷன் பிரைவேட் லிமிடெட் .. | 63 |
| சவுத் ஆர்காட் டிஸ்டிரிக்ட் கோவாப்பரேடிவ் ஸ்பின்னிங் மில்ஸ் லிமிடெட், சாரம். .. | 80 |
| வெஸ்டார்ன் இந்தியா மேச் கம்பெனி, மெட்ராஸ் | 251 |
| ஆட்கோ இந்தியா லிமிடெட், மணப்பாக்கம், மெட்ராஸ். | 80 |
| கார்ப்பொரேண்டம் யூனிவர்சல் லிமிடெட், மெட்ராஸ் | 62 |
| சேஷசாயி பேப்பர் அண்ட் போர்டு லிமிடெட், ஈரோடு | 81 |
| சுகர் பேக்டரிஸ் இன் திஸ் ஸ்டேட் .. .. | 56 |
| பாமி கன்பெக்ஷனரி லிமிடெட், தெய்வனாகுப்பக்க | 181 |





இப்படி திராவிட முன்னேற்றக் கழக காலத்திலேயே நடந்திருக்கிறது என்பதையும் எடுத்துச் சொல்லிக் கொள்கிறேன். எங்களுடைய தமிழக அரசைப் பொறுத்தவரையில், நம்மிடம் உள்ள சமரச அதிகாரிகள் மிக திறமைசாலிகள். இப்பொழுது இருக்கக் கூடியவர்களும் மிகமிக திறமைசாலிகள். அவர்களை இந்த நேரத்திலே பாராட்ட வேண்டும். அப்படிப்பட்டவர்கள் இருந்தும் கூட, இந்த சமரச முயற்சிகள் ஏன் விரைவில் முடிவடைவதில்லை என்று கேட்டால், அது இன்றையதினம் சட்டத்திலே இருக்கக்கூடிய ஒரு கோளாறு என்பதைத்தான் எடுத்துச் சொல்ல வேண்டியவனாக இருக்கிறேன். ஏனென்றால், சமரச அதிகாரிகள் இரு சாராரையும் பேச்சு வார்த்தை மூலமாக ஒரு ஒப்பந்தத்திற்கு கொண்டுவர முயற்சி செய்வார்கள். அவ்வளவுதான் அவர்களால் செய்ய முடியும். அதைத்தவிர, வேறு எந்த ஒரு அதிகாரமும் அவர்களுக்கு கிடையாது. They are only Conciliation Officers. அவர்கள் வெறும் சமரச அதிகாரிகள்தான். ஆனால், அரசினால் ஏதோ ஒரு தொகையை கொடுத்து இடைக்கால நிவாரணம் அளித்து, அல்லது வேறு உதவியை இடைக்கால நிவாரணமாக கொடுக்கக்கூடிய அதிகாரம் அவர்களுக்கு இருக்குமேயானால், இந்த வேலை நிறுத்தங்களைக் குறைத்து விடலாம். ஆனால், அரசுக்கே அந்த அதிகாரம் இல்லை. இல்லையென்றால் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே எல்லாப் பிரச்சினைகளையும், அல்லது சில பிரச்சினைகளை கோர்ட்டுக்கு அனுப்பி வேலை நிறுத்தங்களைத் தடை செய்ய செய்தது போலச் செய்யலாம். அப்படி 20 முறை செய்திருக்கிறார்கள், அப்போது. ஆனால், அது அவ்வளவு சரியானது அல்ல என்று புரட்சித் தலைவரின் அரசு கருதுகிறது. ஏனென்றால் ஸ்டிரைக் செய்வதைத் தடை செய்து கோர்ட்டுக்கு அனுப்பியதற்குப் பின்னால், வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கிற தொழிலாளர்கள் என்ன நினைக்கிறார்கள்? நமக்கு இடைக்காலத்திலும் ஒன்றும் கிடைக்கவில்லை—கோர்ட்டுக்கு அனுப்பி ஸ்டிரைக்கையும் தடை செய்து விட்டார்களே என்று வேதனைப்படுகிறார்கள். எனவேதான் பிரதமராக இருந்தாலும், முதலமைச்சராக இருந்தாலும், யாராக இருந்தாலும் ஒரு இடைக்கால நிவாரணம் கொடுப்பதற்கு இன்றையதினம் அதிகாரம் இல்லை. அது வேண்டும்.

[முற்பகல் 11–10]

அந்த அதிகாரம் தேவை என்பதுதான் இன்றைக்கு எல்லோருடைய கருத்துமாகும். எனவே, அந்த அதிகாரம் இல்லாத நிலையில் ஒரு சட்டம் தி. மு. க. காலத்தில் நீடித்தாலும், எங்கள் காலத்தில் நீடித்தாலும் அல்லது மத்திய ஆட்சியில் நீடித்தாலும் அதற்கு அரசாங்கத்தைக் குற்றஞ்சாட்டுவது அல்லது குறை கூறுவது என்பது அவ்வளவு பொருத்தமாக இராது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். Where the fault lies? குற்றம் எங்கே இருக்கிறது? குற்றம், சட்டத்தில் இருக்கிறது. முதல்

[திரு. எஸ். இராகவானந்தம்] [1981 பிப்ரவரி 12

அமைச்சர் அவர்கள் நினைத்தால்கூட, உங்களுக்கு ரூபாய் 50 இடைக்கால நிவாரணமாகத் தருகிறேன். வேலையிலிருந்து நீக்கப்பட்ட இன்னார் இன்னார் உடனடியாக வேலைக்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டும், ரூபாய் 50க்கு மேலே கிடைக்கவேண்டுமா இப்போது வேலையை விட்டு நீக்கியவர்களை வேலைக்கு எடுத்துக்கொள்ளச் சொல்லியிருக்கிறேனே அதுவும் நியாயமா என்பதை விசாரிக்க, பிறகு வழக்குமன்றத்திற்கு அனுப்பக்கூடிய வகையில் சட்டம் இருக்குமானால், முப்பது நாற்பது நாட்கள் ஒரு வேலை நிறுத்தம் நடந்த பிறகு அரசாங்கம் அந்த தொழிலாளர்களுக்கு ஒரு நிவாரணம் தந்துவிட்டு நிவாரணத்தின்மீது அதற்கு மேலாக தரவேண்டுமா இல்லையா என்பதை நிர்ணயிப்பதற்கு வழக்குமன்றத்திற்கு அனுப்ப முடியும். எனவே, அப்படிப்பட்டதொரு சட்டத்தைக் கொண்டு வரவேண்டுமென்று சொல்கிறோம். நான் அன்றைய தினம் மேற்கு வங்கத்தில் எட்டு மாதங்கள் வேலை நிறுத்தம் முடிந்து 1981-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 1-ஆம் நாள்தான் வேலைக்குச் சென்றார்கள் என்பதைப் படித்தேன். அதில் கூட பாருங்கள். எவ்வளவு திறமைசாலி என்று மாண்புமிகு திரு. உமாநாத் போன்றவர்கள் மார் நிமிர்த்தி எங்கள் அரசைப் பார்த்தீர்களா— ஏனென்றால் அங்கு நடப்பது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சி— நாங்கள் வந்தால் இப்படித்தான் கொண்டுவருவோம். தமிழ்நாட்டில்கூட நாங்கள் வந்தால் இப்படித்தான் செய்வோம் என்ற முறையில் சொல்கிறார்கள். அவர்கள் ஆட்சிக்கு வரவேண்டும் என்று எண்ணம் இருக்கக் கூடியது இயல்புதான். வந்தால் திரு. ஜோதிபாசு மாதிரி செய்வோம் என்ற முறையில் சொன்னார்கள். திரு. ஜோதிபாசு ஆட்சியில்கூட, The strikers demanded reinstatement of two dismissed employees எட்டு மாதங்கள் வேலை நிறுத்தம் செய்த இடத்தில் வேலையை விட்டு நீக்கப்பட்ட இரண்டு பேர்களை வேலைக்கு வைக்க வேண்டும் என்று சொன்னார்கள். According to the settlement அந்த ஒப்பந்தப் பிரகாரம் The Management and the Employees Union will submit a joint application for a reference of the dispute for adjudication by Tribunal கொடுக்கமுடியவில்லை. முதல் அமைச்சர் அவர்களே பார்த்து, இரண்டு பேர்களை வேலைக்கு எடுத்துக்கொள்ளுங்கள் என்று சொல்லமுடியவில்லை. ஜாயின்ட் ரெபரன்ஸ், செக்ஷன் 10(2)ன்படி முதலாளியும் தொழிலாளர்களும் சேர்ந்து Whether the dismissal of these two workers is justified? If not, to what other reliefs they are entitled to? என்று எழுதி வழக்குமன்றத்திற்கு அனுப்பி தீர்ப்பை எதிர்பார்க்க வேண்டும் என்றுதான் ஒப்பந்தமாகியிருக்கிறது. எட்டு மாத வேலை நிறுத்தம் மேற்கு வங்கத்தில், அதற்குப் பின்னால், அரசு தலையிட்டு ஒப்பந்தமாகி இருக்கிறது. அந்த ஒப்பந்தப்படி இரண்டு பேர்களை வேலைக்கு எடுத்துக்கொள்ள முடியவில்லை. முதலாளிகளும், தொழிலாளர்களும் ஒப்பந்தம் செய்துகொண்டு கோர்ட்டுக்கு அனுப்பி அந்த முடிவை ஏற்றுக்கொள்ளலாம்— சத்திரத்து சாப்பாட்டுக்கு தாத்தய்யங்கார் சிபார்சு ஏன் என்று



1981 பிப்ரவரி 12] [திரு. எஸ். இராகவானந்தம்]

வேடிக்கையாகச் சொல்லுவார்கள்— அதை வரவேற்கிறோம். அப்படித்தான் செய்ய முடியும். நீங்கள், வேலைக்கு எடுத்துக் கொள்ளவில்லை என்று குற்றஞ்சாட்டுவதால் சொல்கிறேன். இதுதான் சாத்தியக்கூறு.

எனவே, நாங்கள் விரும்புவது, ஒரு சட்டம் கொண்டுவர வேண்டும். அந்தச் சட்டத்தில் அதிகாரம் இருக்க வேண்டும். என்ன அதிகாரம்? வேலையில் இருந்து நீக்கப்பட்டவர்களுக்கு இடைக்கால நிவாரணம் பணமாகவோ சர்வீஸ் கண்டிஷனில் சில சலுகைகளைச் செய்து அதற்கு மேலும் அவர்களுக்குத் தரவேண்டுமா இல்லையா என்பதை நிர்ணயிப்பதற்கு வழக்குமன்றத்திற்கு அனுப்புவதுதான் எங்களுடைய, புரட்சித் தலைவர் ஆட்சியின் எண்ணம். அப்படி ஒரு ஆர்டினன்ஸ் கொண்டுவந்தோம். அதன் பின்னால் அதைச் சட்ட முன்வடிவாக இங்கே அறிமுகப்படுத்தினோம். எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது. என்னால் மிகவும் மதிக்கக்கூடிய திரு. சங்கரய்யா அவர்கள் சொன்னார்கள், நான் முதல் அமைச்சர் அவர்களுடன் பேசிவிட்டேன், நீங்கள் முதல்வர் அவர்களிடம் பேசுங்கள் என்று.

திரு. என். சங்கரய்யா: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் இப்போது குறிப்பிட்டதை அன்றும் குறிப்பிட்டார்கள். அந்தச் சட்டத்தில் இடைக்காலத்தில் அரசாங்கம் தொழிலாளர்களுக்கு ஒரு நிவாரணம் கொடுப்பதை நாங்கள் வரவேற்றோம். அந்த அம்சத்தை மட்டும் கொண்டு சட்டமாக இருந்தால் அதை ஆதரிப்பதற்குத் தயார் என்று கூறினோம். ஆனால், அதில் இன்னொன்றும் இருக்கிறது. அவ்வாறு அரசு முடிவு செய்வதை தொழிலாளர்கள் தரப்பில் அல்லது மற்றவர்கள் மீறினால் அதற்காகத் தண்டனை என்று ஒரு ஷரத்தும் இருக்கிறது. அதை நீக்கிவிட்டு இதைக் கொண்டுவாருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அதை நீக்கிவிட்டால் முதலாளிகள் ஒத்துக்கொள்ளமாட்டார்கள் என்று சொன்னார்கள். அப்படியானால் நாங்கள் ஒப்புக்கொள்ள முடியாது என்று சொன்னோம். இடைக்கால நிவாரணம் கொடுப்பது என்பதற்கு மட்டும் ஒரு சட்டம் கொண்டுவர அரசு தயாராக இருந்தால் அதை நாங்கள் ஆதரிக்கத் தயாராயிருக்கிறோம். அதை இன்றும் கூறுகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, முதலாளிகள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்று நான் சொல்லவில்லை. உங்களுக்குச் சாதகமாகத்தான் சொல்லிக்கொண்டு வருகிறோம். நீங்கள் சொன்னவுடன் நாங்கள் அதைப் பின்வாங்கிக் கொண்டோம்— உங்களுக்கு மதிப்புக் கொடுக்கின்ற வகையில். புரட்சித் தலைவர் அவர்கள் பின்வாங்கிக் கொள்ள வேண்டுமென்று சொன்னார்கள். இதிலே பேசுவதற்கு ஒன்றுமில்லை.

[திரு. எஸ். இராகவானந்தம்] [1981 பிப்ரவரி 12

திரு. என். சங்கரய்யா : அரசாங்கத்தின் முடிவை மீறினால், ஏற்றுக்கொள்ளாமல் போனால், அதற்கு அபராதம், தண்டனை என்ற வார்த்தை இருந்ததா, இல்லையா என்பதைத்தான் கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, எந்தச் சட்டத்திலும் பீனல் புரொவிஷன் இருந்தே தீரும். நான் சொல்வது, எந்தக் காரணத்திற்காக எதிர்த்தாலும், நாங்கள் அதைப் பின்வாங்கிக்கொண்டோம். இதைத்தான் நான் சொல்லிக் கொண்டு வருகிறேன். மறுபடியும், அதை ஸ்டேட் லேபர் அட்வைசரி போர்டுக்கு வைத்திருக்கிறோம். பேசி முடிவெடுக்க வேண்டும். நான் சொல்ல வருவது, இப்படியெல்லாம் அதிகாரம் அரசுக்குத் தேவை. அதை நீங்கள் ஏற்றுக்கொள்ளுகிறீர்கள். ஆனால், அது இல்லையென்று சொன்னால், (குறுக்கீடு) I am d ivin at th t. இப்போது அந்த அதிகாரம் இல்லையென்று சொன்னால், வேலை நிறுத்தம் நீடிக்கத்தான் செய்யும். அதற்காகத்தான் திரு. ஜோதிபாசு அவர்கள் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். நான் அன்றே படிக்கிறேன் என்று சொன்னேன்; அது அன்று கிடைக்கவில்லை. இன்று படிக்கிறேன்.

The West Bengal Gover ment has drafted a Bill for its application in that State. The Bill h s already been forwarded to th Union Government for c ncurrence. While introducing a New Section in the Act, the State Government proposes to assume powers to prescribe the terms and conditions of employment, for p evention of work stoppage.

வேலை நிறுத்தத்தை நிறுத்துவதற்கும் அல்லது ரெஸ்டோரேஷன் ஆப் நார்மல்சி, ஏற்கெனவே இருந்த நிலைமையை மீண்டும் கொண்டு வருவதற்கு, இண்டஸ்ட்ரீஸ் உற்பத்தியைத் தடை செய்யக்கூடாது. இதை எல்லோரும் கவனத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்.

In a developing country where mixed econ my is the order of the day, we should concentrate on increased p oduction. இதைத்தான் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். அதைத்தான் சொல்லுகிறார்கள்.

Prevention of work stoppage or restoration of normalcy in industrial p oduction.

It has proposed that the following provisio s may be incorporated in the I. D. Act as a new Section-Section a (6).



1981 பிப்ரவரி 12] [திரு. எஸ். இராகவானந்தம்]

If the State Government is sat sfied that it is necessary for public convenience or for maintenance of supplies and services essential to the life of the community or employment, it may ask any employer or workman to observe, for such period as may be specified in the order, the terms and conditions of employment prescribed by the State Government.

நாட்டின் நலனைக் கருதி, அரசு சொல்லக்கூடியதை இரு சாராரும் குறிப்பிட்ட காலத்திற்கு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சட்டத்திலே இருக்கிறது.

During the period no industry will be allowed to close, or to suspend and terminate the services of any workman.

அதுமட்டுமல்ல, சமரச பேச்சுவார்த்தைகள் மூலமாகப் பிரச்னையைத் தீர்த்துக் கொள்ள வேண்டுமென்பதற்காக,

With a view to encouraging arbitration and to make it popular, the State Government has proposed in the Bill that arbitration may be made compulsory.

இதைத் தமிழக அரசு ஏற்றுக்கொள்ளுவதா, இல்லையா என்பது சர்ச்சைக்குரியது; விவாதத்திற்குரியது. முதல்வர் அவர்களோடு பேசி முடிவெடுக்க வேண்டியது. கம்பல்சரி ஆர்பிட்ரேஷன் பற்றி இந்த அரசு இன்னும் முடிவெடுக்கவில்லை. புரட்சித் தலைவர் அவர்களோடு பேசித்தான் முடிவெடுக்க வேண்டும். ஆனால், மேற்கு வங்காள அரசு கொண்டு வந்து விட்டது.

That Government has brought a Bill that arbitration may be made compulsory in certain specific cases.

சில கேஸ்களை ஆர்பிட்ரேஷனில்தான் முடிவெடுக்க வேண்டும் என்பதற்காக சட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள். அதுதான் செக்ஷன் 10(ஏ). Section 10-A provides for compulsory arbitration in cases of breach of public peace, prolonged hardship to a large section of community and loss of employment

அது வேலை போகிற அளவுக்கு பெரும்பாலான மக்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்று சொன்னால், கட்டாயம் ஆர்பிட்ரேஷன் வரவேண்டுமென்று 10(ஏ)விலே இருக்கிறது. அந்த பில்லை வரவழைத்து பரிசிலனை செய்வதாக இருக்கிறோம். நான் இப்போது சொல்வதெல்லாம், இந்த அரசு கம்பல்சரி ஆர்பிட்ரேஷன் பற்றி இன்னும் முடிவெடுக்கவில்லை என்பதுதான். புரட்சித் தலைவர் அவர்களோடு அதைப்பற்றி பேசவில்லை. அதைப்பற்றிச் சிந்தித்து பின்னர் அதைப்பற்றிச் சொல்வார்கள். இங்கே நான் சொல்ல விரும்புவதெல்லாம், வேலை நிறுத்தத்தைத் தடை

செய்ய வேண்டும். அதற்கு முன்னதாக ஏதாவது இடைக்கால நிவாரணம் கொடுக்க வேண்டும் என்பதற்காக மேற்கு வங்காளத்திலே இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்திருப்பதன் விளைவாக, இனிமேல் வேலை நிறுத்தங்கள் அதிக காலத்திற்கு நீடிக்காமல் பார்த்துக்கொள்ள முடியும். எனவே, எங்களைப் பார்த்து இப்பேர்ப்பட்ட சட்டம் கொண்டு வருகிறீர்களே, அப்பேர்ப்பட்ட சட்டம் கொண்டு வருகிறீர்களே, நியாயமா என்றெல்லாம் கேட்கக்கூடியவர்களுக்கு இதையும் நான் காணிக்கையாக வைக்க இந்த நேரத்தில் விரும்புகிறேன்.

[முற்பகல் 11-20]

அடுத்தாற்போல் இன்னும் ஒன்று சொல்ல விரும்புகிறேன். வயலன்ஸ் வந்தால் போலீஸ் வரும் என்று மாண்புமிகு கேரள முதல்வர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அது பாலிசி. மேற்கு வங்கத்தில் ஒரு கொடுமை நடந்தது. தமிழகத்தில் நடைபெறவில்லை, நடைபெறாது, நடைபெறக்கூடாது என்று சொல்ல விரும்புகிறேன். ஒரு தொழிலாளி மீது நடவடிக்கை எடுத்த காரணத்தாலேயே எம்.எல். பால், சீப் பர்சானல் ஆபீசர், தொழிற்சாலைக்குள்ளே தொழிலாளி வேலை செய்த இடத்திற்குப் போனபோது அங்கே அசால்ட் செய்து தாக்கி கொல்லப்பட்டார்— At the very spot where the suspended worker was working— இங்கு அப்படி நடக்கவில்லை. நான் அதைப் பெருமையோடு சொல்லிக்கொள்கிறேன். உங்களை நான் பாராட்டுகிறேன். இங்கே எதிர்க்கட்சிக்காரர்கள் இப்பேர்ப்பட்ட செயல்களை எல்லாம் பார்த்துக்கொண்டிருக்க மாட்டார்கள். தொழிற் சங்கத் தலைவர்கள் தமிழகத்தில் அப்படி ஒன்று நடக்காமல் இருக்கும்படி பார்த்துக் கொள்ளுவதற்காக தலைவணங்கி எதிர்க்கட்சித் தலைவர்கள் அத்தனை பேருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

This is a cold blooded murder in the shop floor

Mr. Gupta said apprehending trouble over the suspension of the worker, a police picket was posted outside the Mill.

எனவே, அங்கேயும் போலீஸ் பந்தோபஸ்து போடவேண்டிய அவசியம், நிலை வருகிறது. இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், வன்முறை தலையெடுக்கும் நேரத்தில், போலீஸ் தலையிடும் "அப்ரெஹெண்ட்" பண்ணும்போது போலீஸ் அனுப்பப்படும்—வெட்டிய பிறகுதான், குத்திய பிறகுதான், கொலை செய்த பிறகுதான் போலீஸ் அனுப்புவது என்பது சரியல்ல— You should also be able to see far beyond your nose எதிர்காலத்தில் என்ன வரும் என்று "அப்ரெஹெண்ட்" பண்ணி இப்படி நடக்குமோ என்பதற்காகத் தலையிட்டு, பிரிவென்டிவ் ஆக்ஷன் எடுக்க வேண்டும்.





Prevention is better than cure.

நடந்த பிறகு பெரிய டாக்டரிடம் போய்ப் பயன் இல்லை; நடக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும். நாங்கள் போலீசைக் கொண்டுவருவதை அருள்கூர்ந்து நீங்கள் கண்டிக்கலாமா?

They have done it a day after the affair

மேற்கு வங்கத்தில் விஷயம் நடந்த பிறகு போலீஸ் பந்தோபஸ்து போட்டிருக்கிறார்கள். நாங்கள் முன்னதாகவே போட்டு இந்த மாதிரி நடக்காமல் பார்த்துக் கொள்கிறோம்.

அடுத்த பிரச்சினை, கோர்ட்டுக்கு அனுப்புவதில்லை என்ற
ஒரு குற்றச்சாட்டு. அதுவும் தொழிலாளி வேலை நீக்கம் செய்யப்
பட்டால் அவன் நேரடியாக தொழில் நீதிமன்றத்திற்குப் போக
லாம் என்று பரிந்துரை செய்யக்கூடிய ஒரு அரசு இப்படிச் செய்ய
லாமா என்று ஒரு விவாதம் நடைபெறுகிறது. தூக்குத் தண்டனை
கொடுக்கக் கூடாது என்று பேசிக் கொள்கிறார்கள். ஒரு
ஜட்ஜ் கூட ஒரு செமினாரில் பேசும்போது தூக்குத் தண்டனை
வேண்டாம், ஆயுள் தண்டனை போதும் என்று சொல்கிறார்.
அதே நீதிபதி நீதிமன்றத்தில் தீர்ப்புக் கொடுக்கிறபோது,
இன்றைக்கிருக்கும் சட்டப்பிரகாரம் தூக்குத் தண்டனை தரு
கிறேன் என்று சொல்லித்தான் ஆகவேண்டும்.

ஆகவே, இன்றைக்கு இருக்கும் சட்டப்பிரகாரம் தொழில்
கோர்ட்டுக்கு அனுப்புவதா இல்லையா என்று நிர்ணயிக்கக்கூடிய
அதிகாரம் அரசுக்கு இருக்கிறது. நாங்கள் பரிசீலனை செய்து
வருகிறோம். பரிசீலனை செய்த பிறகு தொழில் நீதிமன்றத்
திற்கு அனுப்புகிறோம். அதிகமாகவே அனுப்பியிருக்கிறோம்.
ஏதோ ஒன்றிரண்டு அனுப்பாமல் இருக்கலாம். உலகத்தில் நாம்
நினைக்கிறபடியெல்லாம் நடந்து விடாது. அப்படி நடந்துவிட்
டால் எதற்காக சட்ட மன்றம், எதற்காக போலீஸ், எதற்காக
சீப் மினிஸ்டர், உலகம்தான் எதற்காக? நாட்டில் நாம்
நினைக்கும் காரியங்கள் சில நடைபெறுகின்றன, சில காரியங்
கள் நடைபெறாமல் போய்விடுகின்றன. நமக்குச் சாதகமாகச்
சில நடக்கின்றன, சில பாதகமாக நடக்கின்றன. நீங்கள்
டைஜஸ்ட் பண்ணிக்கொண்டு அனலைஸ் பண்ண வேண்டும். தவறு
நடந்திருந்தால் சில அம்சங்களை நாங்கள் பார்க்கிறோம், தீர்த்து
வைக்கிறோம், இந்த அரசைப் பொறுத்தவரை பரிசீலித்து—
அசால்ட்—வன்முறை; தெப்ட்-திருட்டு போன்ற நிலை இருந்
தால் அந்த வழக்குகளைப் பற்றிப் பரிசீலனை செய்கிறோம்.
லேபர் ஆபீசர் ரிப்போர்ட்டைப் படிக்கிறேன்; கமிஷனர் ரிப்
போர்ட்டைப் படிக்கிறேன்; டி. எஸ். ரிமார்க்கைப் படிக்கிறேன்;
லேபர் செகரட்டரி ரிமார்க்கை மறுபடியும் படிக்கிறேன் பிறகு
தான் அமைச்சர் உத்திரவிடுகிறார். இத்தனையும் படித்துப்

பார்த்து அமைச்சருக்கு உண்மையாகவே தவறு நடந்திருக்கிறது என்று தெரிந்தால் வழக்கு மன்றத்திற்கு அனுப்புவதில்லை— benefit of doubt என்ற வகையில் இருந்தால் கோர்ட்டுக்கு அனுப்புகிறோம்.

வழக்கு மன்றத்திற்கு அனுப்பியிருக்கும் எண்ணிக்கையை நான் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் இருந்து சொல்ல விரும்புகிறேன். 1969-இல் 373; 1970-இல் 670, 1971-இல் 461, 1972-இல் 415, 1973-இல் 378, 1974-இல் 417, 1975-இல் 451 வழக்குகள் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பெற்றன.

Coming to Anna DMK's regime,

புரட்சித் தலைவர் ஆட்சியில், 1977-இல் 690, 1978-இல் 722 1979-இல் 719, 1980-இல் 1,036.

Let me repeat it.

1980-இல் 1,036.

ஆனால், என்ன சொல்கிறீர்கள்? திரு. உமாநாத் அவர்கள் கடுமையாகப் பேசினார்கள், நாலரை கட்டையில் பேசினார்கள். ரொம்ப தாக்கு தாக்கு என்று பேசி, நீங்கள் நீதிமன்றத்திற்கு அனுப்புவதில்லை என்று பேசினார்கள். இதற்கு அவர்கள் என்ன சொல்கிறார்கள்?

திரு. இரா. கருப்பையா: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்தக் காலத்திலே எவ்வளவு தொழிலாளர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டார்கள் என்று அவருக்கு வந்திருந்த கணக்கு எண்ணிக்கையையும் சேர்த்துக் கொடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, சட்டமன்றக் கேள்வி நேரத்தில் கேட்டால் புள்ளி விவரத்தைத் தருகிறேன். என்மீது சாட்டப்பற்ற குற்றச்சாட்டு தொழில் நீதி மன்றத்திற்கு அனுப்புவது இல்லை என்பது.

திரு. துரைமுருகன்: With your kind permission இவ்வளவு புள்ளி விவரங்களைத் திரட்டி வைத்திருக்கின்ற அமைச்சரவர்கள், திராவிட முன்னேற்றக்கழக ஆட்சிக் காலத்தில் எத்தனைபேர் வேலை நீக்கம் செய்யப்பட்டார்கள், கோர்ட்டுக்குப் போக எத்தனை பேர் அனுமதிக்கப்பட்டார்கள்; அதே போல் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் எவ்வளவு பேர் வேலை நீக்கம் செய்யப்பட்டார்கள், எவ்வளவு பேர் கோர்ட்டுக்குப்போக அனுமதிக்கப்பட்டார்கள் என்ற விவரங்களையும் சொல்லியிருந்தால் அது இந்த அவைக்கு ஏற்புடையதாக இருந்திருக்கும். அவ்வாறின்றி இப்படி ஒருதலைபட்டசமாகக் கூறுவது பொருத்தமாக இல்லை.



மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, அதைத்தான் நான் ஏற்கெனவே சொன்னேன், நாம் எண்ணியதெல்லாம் நடந்து விடாது என்று. அதைப்போல நீங்கள் நினைப்பதையெல்லாம் சொல்லிக்கொண்டிருக்க முடியாது. தனிக் கேள்வி போடுங்கள் சொல்கிறேன். எனவே, 1,036 வழக்குகள் அனுப்பியிருக்கிறோம்.

இன்னொரு பெரிய குற்றச்சாட்டு சொல்லப்பட்டது. முதலாளி பக்கம் போய்விட்டார்கள் என்று சொல்கிறார்கள். ஏன் சேர வேண்டும்? இந்த சீப் மினிஸ்டர் என்ன 24 பிள்ளைகளைப் பெற்று வைத்துக்கொண்டு, கண்ட இடத்திலே ஏதாவது செலவு செய்ய வேண்டுமென்று பணமில்லாமல் தவித்துக்கொண்டிருப்பவரா? இரண்டே இரண்டு பேர்; இராமர், சீதை— ஜானகி, சரியாய் போயிற்று பிரச்னை. மாதம் 2,000 ரூபாய் இருந்தால் லேவிஷ் லைப் லீட் செய்யலாம். கஷ்டப்பட்டு, தானே சம்பாதித்து, சம்பாதித்த பணத்தை வாரி, வாரி, வாரி வாரி வழங்கிய வள்ளல்; அவருடைய ஆட்சி நடக்கிறது. பிறகு ஏன் நாங்கள் போய் முதலாளிகளோடு சேர்ந்து கொள்கிறோம்? எதற்காகச் சேர வேண்டும்?

அடுத்து, நான் ஒருவன் இருக்கிறேன், தொழிலாளர் நல அமைச்சர். எனுக்குத்தான் என்ன குறை? பெரிய பையன் ஆயிரத்து சொச்சம் ரூபாய் சம்பாதிக்கிறார். மகள் புரபசராக இருக்கிறாள். அடுத்த பையன் என்சினியராக இருக்கிறார். அடுத்த பையன் எம்.ஏ.பி.எல்., வழக்கறிஞராக இருக்கிறார். மேலும், பணம் தேவை என்றால் கொடுப்பதற்கு வள்ளல் முதல் அமைச்சராக இருக்கிறார், பிறகு என்ன கஷ்டம்?

I have lived a full life. I am in a happy mood

எதற்காகப் போய் முதலாளி கையிலே இந்த அரசு பணம் வாங்க வேண்டிய தேவை இருக்கிறது? ஏன் முதலாளிகளோடு சேர வேண்டும்? ஒரேயடியாக இந்தப் பக்கம் சாய்ந்தால் தொழிலே நடக்காது. நான் அதையும் படிக்கிறேன் பிறகு. என்ன நடந்திருக்கிறது மேற்கு வங்காளத்தில் என்று.

But we take a balanced view

கடைசி நேரத்தில் படித்துக் காட்டுகிறேன்.

Industrialists are running away from West Bengal

தொழிலாளர்களுக்குக் கிடைக்க வேண்டியதை வாங்கித் தர வேண்டும்; தொழிலும் நசித்துப் போய்விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

Industrialists should not run away from here. The Industry should not be killed.

அதைத்தான் பார்த்துக் கொள்கிறோமே தவிர, முதலாளிகளோடு போய் சேர்ந்து கொள்கிறார்கள் என்றால் எதற்கா வேண்டும்?

இங்கே இருப்பவர்களெல்லாம் என்ன? இங்கே பாருங்கள் தமிழ். தம்பி காளிமுத்து கட்டுரை எழுதினாலே 100 ரூபாய், 100 ரூபாய், 100 ரூபாயாகக் கொடுப்பார்களே. முன்னாலேயே தருகிறோம், எடுத்துக்கொள், எழுது என்று சொல்வார்களே, கட்டுரையாக எழுதித் தள்ளிக் கொண்டிருப்பாரே. அதற்கப்புறம் பி.இ., எஞ்ஜினீயர்; அதற்கப்புறம் எம்.ஏ., பி.எல்.,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தொழிலாளர் நல இலாக்காவோடு இருந்தால் பரவாயில்லை; (சிரிப்பு.)

[முற்பகல் 11-30]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: இங்கே ஒரு பி.ஏ. பி.எல்., இவர்களெல்லாம் கோர்ட்டுக்கு வரவில்லையே என்று கோபித்துக்கொள்கிறார்கள். நீங்களெல்லாம் மந்திரியான பிறகு நல்ல வக்கீல்களை நாங்கள் இழந்துவிட்டோம் என்று சொல்கிறார்கள். எனவேதான், நான் சொல்கிறேன், நாங்கள் முதலாளிகளோடு சேர வேண்டிய தேவை இல்லை; தொழிலாளர் பக்கம் தான் நிற்போம். புரட்சித் தலைவர் தொழிலாளர் பக்கம்தான் நிற்பார். But we take a balanced and unbiassed view. அதுதான். திடீரென்று போய் ஒருபக்கத்திலே சாய்ந்துவிடக்கூடாது. ஓடத்திலே ஏறிப்போகும்போதுகூட ஒருபக்கம் சாய்ந்தால் தண்ணீரில் கவிழ்ந்து விடுவோம். ஆகவே, எச்சரிக்கையாக இருக்க வேண்டும். டி.வி.எஸ். குரூப் பொறுத்தமட்டில் ரெபரன்ஸ்லே கொடுப்பதில்லை—அதுதானே குற்றச்சாட்டு. நான் படிக்கிறேன் Brakes India Ltd non employment of திருவாளர்கள் .............7 பேர்கள். Non employment of திருவாளர்கள் வரதராஜன், ....அது ஒரு 6 பேர். Non employment of Augustine and 4 others Non-employment of Thiruvengadam Refer பண்ணியிருக்கிறோம். ஆக, டி.வி.எஸ். குரூப் என்றால், நாங்கள் ஏதோ பயப்படுகிற மாதிரியும், அல்லது அவர்களோடு ஏதோ அன்பு வைத்திருக்கிற மாதிரியும் சொல்கிறார்கள், அவர்கள் யார், என்ன, என்று அந்த முகத்தைக்கூடச் சரியாகப் பார்க்கவில்லை. அடுத்து, லூகாஸ், டி.வி.எஸ். Non-employment திருவாளர்கள்.................4 பேர். சுந்தரம் கிளேட்டன்—3-ஆம் வந்தாயிற்று. அவைதான் குரூப்—பிரேக்ஸ் இந்தியா, டி.வி.எஸ். சுந்தரம் கிளேட்டன்—திருவாளர்கள்.... 12 பேர். We have referred for adjudication. What more you want ** What else you want?

[illegible]

THIRU R. UMANATH: ** still 72 references [illegible]

[illegible] You have [illegible]

[illegible] பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் [illegible]



மாண்புமிகு பேரவைத் தலைவர்: * * என்பதை அவைக் குறிப்பிலே இருந்து நீக்கிவிடுகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: எனவே, அந்தக் குற்றச்சாட்டு சரியல்ல என்பதைத்தான் நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். யாராக இருந்தாலும் நாங்கள் ரெஃபர் செய்திருக்கிறோம். We have not shown any soft corner to any Industrialist. Breakes India Ltd., TVS Lucas Sundaram Clayton இந்தப் பிரச்சினையில் நாங்கள் தெளிவாக இருந்திருக்கிறோம். அந்த குரூப்பில் இருப்பது 3—பிரேக்ஸ் இந்தியா, டி.வி.எஸ், சுந்தரம் கிளேட்டன் என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக் கொள்கிறேன்.

அவர்கள் சிலபேர் வழக்கை அனுப்பவில்லையென்று சொல்கிறார்கள். ஆமாம், அது அப்படித்தான் நடக்க முடியும் என்பதையும் நான் எடுத்துச் சொல்லிக்கொள்கிறேன். எனவே, ரெபரன்ஸ் என்பதிலே, நாங்கள் தெளிவாக இருக்கிறோம். ஆனால், அதே நேரத்தில், எப்படியும் வேலை நீக்கம் செய்யப்பட்ட ஒவ்வொரு தொழிலாளியும் நேராக வழக்கு மன்றத்திற்குப் போகும் உரிமை வேண்டுமென்பதற்காகப் போராடியிருக்கிறது இந்த அரசு. அநேகமாக, மத்திய அரசு அந்தச் சட்டத்தைக் கொண்டு வரும். இல்லையென்றால், புரட்சித் தலைவர் ஆட்சி அந்தச் சட்டத்தைக் கொண்டுவரும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...............

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தொழிலாளர் பொறுத்த வரையில் எல்லோருக்கும் பிரச்னைகள் வந்துகொண்டே இருக்கும். நீங்கள் எதிரிலே இருந்துகொண்டு நினைத்தபொழுது கேட்டுக்கொண்டிருந்தால், எப்பொழுது முடிப்பது? நேற்று 10, 15 நிமிஷத்தில் முடியும் என்று நினைத்தேன். இப்பொழுது அமைச்சர் பேசத் தொடங்கி, 1/2 மணியாயிற்று. இன்றைக்கு சபையை முடிக்க வேண்டும். நீங்கள் இரண்டே பேர் பேசிக் கொண்டிருந்தால், இன்னும் நிறைய பில்கள் இருக்கின்றன. ஆகவே, அமைதி காத்து, அமைச்சர் தன்னுடைய உரையை முடிப்பதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. இரா. கருப்பையா: அமைச்சர் பதிலிலிருந்து எனக்கு தெளிவு தேவை.

---

*பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது [illegible]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. உமாநாத் பதி
சொல்ல இருக்கிறார். அவரிடம் சொல்லுங்கள். ஒவ்வொரு
விளக்கத்திற்கும் அவ்வப்போது தெளிவு கேட்க முடியாது.
100 பிரச்சினைகளிலே தெளிவு தேவைப்படும். அதையெல்லாம்
உடனுக்குடனே சொல்ல முடியாது. மாண்புமிகு அமைச்சர்
தொடரலாம். ஏற்கனவே 35 நிமிடம் ஆகிவிட்டது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர்
அவர்களே, குற்றம் சாட்டிய திரு. உமாநாத் அவர்கள்,
டி.வி.எஸ். குழுமத்தைப் பற்றி சொன்னதாலே, அதற்கு நான்
பதில் சொல்லியிருக்கிறேன். எங்கே வன்முறை தாண்டவம் ஆடி
யிருக்கிறது, நடந்திருக்கிறது என்று சொல்லி, அரசிற்குக் கிடைக்
கக்கூடிய அறிக்கைகள்மீது அரசு திருப்திபடுகிறதோ, அங்கே
வழக்குகளை வழக்குமன்றத்திற்கு அனுப்புவதில்லை. இது
புரட்சித் தலைவர் ஆட்சியினுடைய கொள்கை.

அடுத்து, கொண்டு வருகிற சட்டங்கள் தொழிலாளர் விரோதச்
சட்டங்களாக இருக்கின்றன என்று சொன்னார்கள். நான்
அருள்கூர்ந்து தெரிவித்துக்கொள்கிறேன். அவர்கள் சொல்கிற
மாதிரி எந்தச் சட்டமும் இன்னும் கொண்டு வரப்படவில்லை.
கொண்டு வந்திருக்கின்ற சட்டம் சஸ்பென்ஷனில் இருப்பவர்
களுக்கு சப்சிஸ்டென்ஸ் அலவன்ஸ் கொடுப்பது என்பதுதான்
நீங்கள் சொல்கிற சட்டம் அதற்காக ஏற்படுத்திய குரு
முன்னாலே இருக்கிறது. அதிலே முக்கியமாக நீங்கள்சொல்லியது
12(3) செட்டில்மெண்ட்: ஆதரிப்பீர்களென நான் எதிர் பார்த்
தேன், ஆனால் ஏமாந்தேன். இந்தத் திருத்தத்திற்கு முழுக்க
முழுக்க காரணம். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்—
இந்தத் தமிழக முதல்வர் அவர்கள். எதனாலே என்று சொன்
னால் ஒரு பெரிய வேலை நிறுத்தம் நடைபெறுகிறது. பல
பிரச்னைகள் மீது. அந்தத் தொழிற்சாலையில் 10 தொழிற்சங்கங்
கள் இருக்கின்றன. கன்சிலியேஷன் நடக்கின்றது. பல நாள்
போராட்டம் நடக்கிறது. கன்சிலியேஷன் நடந்துகொண்டிருக்கும்
போது, லேபர் ஆபீசர், அல்லது டெபுடி கமிஷனர்
அவர்கள் முன்னால், கன்சிலியேஷன் நடக்கும்போது, 10 சங்கங்
கள் வருகின்றன. கடைசியாக ஒரு ஒப்பந்தம். இதுவரையில்
தான் என்னால் முடியும். 'Thus far and no further'
என்று அவர் சொல்கிறார். நான் முதலாளியிடம் பேசிப் பார்த்
தேன். நான் இதற்குமேல் போக முடியாது என்று கன்சிலியே
ஷன் ஆபிசர் சொல்கிறார். அதை ஏற்றுக்கொண்டு 2 சங்
கங்கள் கையெழுத்திடுகின்றன, 8 சங்கங்கள் கையெழுத்திடுவ
தில்லை. இன்றைக்கு இருக்கிற சட்டத்தின் பிரகாரம், எட்டு
சங்கங்கள் கையெழுத்து இடவில்லை ; இரண்டு சங்கங்கள்
கையெழுத்திட்டாலே, அந்த ஒப்பந்தம் செல்லுமென்று இருக்
கிறது. இதை எதிர்த்து நடந்த போராட்டங்கள் பல அதற்காக
இருக்கக்கூடிய சட்டத்தை மாற்றுவதற்காகத்தான் ; இதை



மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் பரிசீலித்து பார்த்தார்கள். அப்போதே அவர்கள் சொன்னார்கள், என்னதான் சட்டம் போட்டிருந்தாலும் இரண்டு சங்கங்கள் மட்டும் கையெழுத்திட்டு, மற்ற எட்டு சங்கங்கள் கையெழுத்திடாத நிலையில் இது செல்லும் என்று இருக்கிற சட்டத்தை மாற்றவேண்டுமென்று' சொன்னார்கள். அவர்களது அறிவுரைக்கு ஏற்ப, எப்படி இந்த சட்டத்தை மாற்றலாம் என்று யோசித்துக்கொண்டு இருக்கிறோம்.

ஆனால் நிலைமை என்னவென்று சொன்னால், ஒரு தொழிலாளி வேலை நிறுத்தம் செய்ய வேண்டுமென்று சொன்னால் அது யாருக்காக? ஒரு தொழிற்சங்கம் வேலை நிறுத்தம் செய்யவேண்டுமென்று சொன்னால் அது யாருக்காக? தொழிலாளிக்காகத்தான். அப்படியானால் அதற்கு அந்த தொழிலாளியினுடைய அனுமதி வேண்டாமா? எனவேதான் வேலை நிறுத்தம் செய்ய வேண்டுமென்று சொன்னால், 60 சதவீதம் தொழிலாளிகள் அந்த வேலை நிறுத்தத்திற்கு ஆதரவு தரவேண்டுமென்று சொல்கிறோம். எப்படி அது தவறாகும்? யாருக்காக அந்த போராட்டம்? தொழிலாளிக்காகத்தான்.

எனவே, அதற்கு அந்த தொழிலாளியின் ஆதரவு 60 சதவீதம் தான் ஆதரவு இருக்கவேண்டுமென்று சொல்கிறோம். அதுபோலத்தான் எப்படி இரண்டு சங்கங்கள் கையெழுத்து போட்டாலே செல்லும் என்ற நிலைமையோ, அது கூடாதென்றுதான் இப்பொழுது இருப்பதுபடி. It will bind all the workers working in that establishment. எங்கள் கருத்து. There should be sanction from 60 per cent of the workers wo king in the industrys or from unionised workers—ஒப்பந்தத்தில் கையெழுத்திடவும் 60 சதவீதம் தொழிலாளர்கள் ஆதரவு வேண்டும் என்கிறோம். தொழிலாளிகளின் போராட்டத்திற்கு அறுபது சதவீதத்திற்கு மேற்பட்டவர்களின் ஆதரவு இருக்க வேண்டும். இருந்தால்தான், 60 சதவீதத்திற்கு மேற்பட்டவர்கள் அனுமதி தந்தால்தான், வேலை நிறுத்தம் செய்ய வேண்டுமென்று சொல்கிறோம். சட்டம் கொண்டு வருவதாக இருக்கிறோம். அந்த சட்டம் பலகட்டங்களைத் தாண்டியாக வேண்டும். நீங்கள் கூட இதற்காக முதல்வர் அவர்களிடம் பேசவேண்டியிருக்கும்.

யாருக்காக வேலை நிறுத்தம் செய்கிறோமோ, அந்த தொழிலாளியினுடைய ஆதரவு இருக்கவேண்டுமென்றுதான், இதை கொண்டுவர இருக்கிறோமே தவிர வேறு ஒன்றுமில்லை. இது தொழிலாளர் விரோத கொள்கையா?

தொழிலாளிகளுக்கு மிக மிக மதிப்பு கொடுப்பவர் நமது மாண்புமிகு புரட்சித் தலைவர் என்பதற்கு நான் ஏற்கெனவே ஒரு கருத்தைச் சொன்னேன். ஆகவே, உங்கள் குற்றச்சாட்டு

[திரு. எஸ். இராகவானந்தம்] [1981 பிப்ரவரி 12

அடுத்து, நாங்கள் கொடுக்கும் போனஸ் பற்றியது ஆகும். அது தவறான கொள்கை என்று சொன்னார்கள். போக்குவரத்துத் துறையிலே ................(குறுக்கீடு).

வேலை நிறுத்தம் செய்யாதவர்களுக்கு ஒரு தொகை கொடுப்பதைக் கண்டித்தீர்கள். நான் இந்த அவையிலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். போக்குவரத்துத் துறையிலே இந்த அரசு செய்திருப்பது 'மார்வெலஸ்' It is marvells, Achievement itself is marvellous நான் ரெயில்வே தொழிலாளியாக இருந்தபோது எதை எல்லாம் என்னுடைய ஆசையாக கனவு கண்டு கொண்டிருந்தேனோ, அவையெல்லாம் இன்று அருமைச் சகோதரர் திரு. பொன்னையன் அவர்களும், அதற்கு பின் திரு. முத்துச்சாமி அவர்களும், போக்குவரத்துத் துறையிலே, செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பார்க்கிறபோது நான் எந்த அளவுக்கு இந்த வயதான காலத்திலே கண்ணைமூடப்போகிற இந்தக் காலத்திலே சந்தோஷப்படுகிறேன் தெரியுமா?

ரெயில்வே தொழிலாளியின் குழந்தைகள் படிப்பதற்கு போனால், ரெயில்வே பாஸ் உண்டு. அதைப்போலவே இன்றைக்கு, போக்குவரத்துத் தொழிலாளிக்கும் செய்யப்பட்டிருக்கிறது.

போக்குவரத்துத் தொழிலாளியின் பையன் பாஸ்வைத்திருக்கிறான். செக்கிங் இன்ஸ்பெக்டர் கேட்கும்போது, அந்த பையன் எங்களுக்கு பஸ்ஸிலே வருவதற்கு, இரயிலிலே 'ப்ரீ பாஸ்' இருப்பதை போல, பாஸ் இருக்கிறது என்று கூறுகிறான்.

அதைப்போலவே கடலூர் பஸ்ஸிலே ஒரு கணவனும் மனைவியும் போய்க்கொண்டிருக்கிறார்கள். செக்கிங் இன்ஸ்பெக்டர் அணுகும்போது, போக்குவரத்துத் துறையிலே வேலைப் பார்ப்பதற்காகவும், குடும்பங்கள் செல்வதற்காக அளிக்கப்பட்ட பாஸ் வைத்திருப்பதாகவும் கூறுகிறார்கள். ஆகவே, ரெயில்வேயில் இருப்பதைப் போலவே, போக்குவரத்துத் துறையில் பணியாற்றுபவர்களின் குடும்பங்களுக்கும் அவர்களின் குழந்தைகளுக்கும் பாஸ் வழங்கப்பட்டு இருக்கிறது.

[முற்பகல் 11-40]

எல்லாவற்றிற்கும் மேலாக அண்மையில் அவர்களுக்கு ஊதிய உயர்வு வாரி வாரி வழங்கினார்கள், வள்ளலின் தம்பி வள்ளல் போலவே. அத்தனை தொழிலாளர்களும் சந்தோஷமாக இருக்கிறார்கள். அங்கே 'நோ ஸ்ட்ரைக் போனஸ்' கொடுப்பதைப் பற்றிச் சொன்னார்கள். வேலை நிறுத்தம் இல்லை என்று சொன்னால், வருமானம் அதிகமாகிறது. உற்பத்தி அதிகமாகிறது. மூலதனமும் அதிகம் போடுகிறோம். லாபமும்



1981 பிப்ரவரி 12] [திரு. எஸ். இராகவானந்தம்]

அதிகமாக வருகிறது. அப்படி அதிகமாக வருகிற லாபத்தை பங்கிட்டுக் கொடுக்கிறோம். அந்த அடிப்படையில் தான் இதைக் கொடுத்து இருக்கிறார்கள். என்னுடைய ஆசையை நான் சொல்லிக்கொள்கிறேன். இத்தகைய 'நோ ஸ்ட்ரைக் போனஸ்' எல்லா இடங்களிலும் அளிக்கப்பட வேண்டும். மேற்கு வங்கத்தில் எதற்காக 'டைரக்ட் ஆர்பிட்ரேஷன்' என்று சொல்லியிருக்கிறார்கள். வேலை நிறுத்த நாட்களைக் குறைப்பதற்காகத்தான் கொண்டு வந்து இருக்கிறார்கள். ஒரு தொழிற்சாலையில் வேலை நிறுத்தம் இல்லாமல் தொழில் நடந்து, அதே நேரத்தில் தொழிலாளியின் உரிமை பாதிக்கப்படவில்லை, அவனுடைய நலன்கள் காக்கப்படுகின்றன என்று சொல்கிறபோது, இத்தகைய 'நோ ஸ்ட்ரைக் போனஸ்', கொடுப்பது தவறு என்று எப்படி சொல்ல முடியும்? ஆகவே, அதிலே எந்தவிதமான தவறும் இல்லை என்று நான் சொல்லிக்கொள்கிறேன். 'There should be some encouragement and incentive.'

இதுவரையில், குற்றச்சாட்டுகள் என்று நீங்கள் கூறியவற்றிற்கு பதில் சொல்லிக்கொண்டு வந்தேன். இந்த அரசு ஆட்சி பீடத்தில் அமர்ந்து, என்ன செய்தது, ஒன்றுமே செய்யவில்லை என்று சொன்னார்கள். நாங்கள் தொழிலாளர்களுக்கு நன்மை செய்யவில்லையா? நிரம்ப நன்மைகளைச் செய்து இருக்கிறோம். இந்த அரசைப் பொறுத்தவரையில், தொழிலாளர்களுக்குச் சாதகமான சட்டங்கள் கொண்டு வரப்பட வேண்டும், அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்கிற வகையில் சட்டங்கள் கொண்டு வரப்பட வேண்டும் என்பதாகும். தொழில் தகராறு சட்டம் வந்தது; மகிழ்ச்சி. போனஸ் சட்டம் வந்தது; மகிழ்ச்சி. ஒர்க்மென் காம்பென்சேஷன் ஆக்ட் வந்தது; மகிழ்ச்சி. இவைகளெல்லாம் எப்படி தொழிலாளர்களுக்கு வெல்பேர் மெஷர் என்று கொண்டு வரப்பட்டனவோ, அதைப்போலவே இந்த அரசு வந்ததற்குப் பிறகு, தொழிலாளர்களின் நலன்களைப் பாதுகாக்கிற வகையில் பல சட்டங்களைக் கொண்டு வந்து இருக்கிறது.

ஒரு தொழிலாளி 4-5 மாதங்கள் அல்லது வருஷங்கள் வேலை செய்கிறான். பின்னர், அந்த வேலையில் தன்னைக் கன்பர்ம் செய்ய வேண்டும் என்று சொல்கிறான். அந்த நிறுவனத்தில் உடனே சொல்கிறார்கள், நீ இரண்டு மூன்றுமாதம் தான் வேலை செய்து இருக்கிறாய்; மற்றவற்றிற்கு ரிகார்ட் இல்லை என்று சொல்கிறார்கள். அதனால் தொழிலாளர்களுக்கு கஸ்டம் ஏற்படுகிறது. அந்த இன்னலைப் போக்க 'சர்வீஸ் ரிக்கார்ட்' வைக்க வேண்டும் என்று ஆணை போட்டு இருக்கிறோம்.

அதைப் போலவே, ஸ்டான்டிங் ஆர்டர்—நிலை ஆணை 100 தொழிலாளர்களுக்கு மேல் பணிசெய்யும் இடங்களுக்குத் தான் பொருந்தும் என்று இருந்ததை, 50 தொழிலாளர்களுக்கு மேல் பணி செய்யும் இடங்களுக்கும் பொருந்தும் என்று சட்டத்திருத்தம் கொண்டு வந்து இருக்கிறோம்.

[திரு. எஸ். இராகவானந்தம்] [1981 பிப்ரவரி 12

20-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை செய்யும் நிறுவனங்களுக்கு போனஸ் உண்டு என்பதை, 10-க்கும் அதற்கு மேற்பட்டும் வேலை செய்யும் நிறுவனங்களுக்கும் போனஸ் உண்டு என்று சட்டம் கொண்டு வந்து இருக்கிறோம்.

பீடி சுருட்டுத் தொழிலாளர்கள், தமிழ்நாடு 1968-ஆம் ஆண்டு பீடி சுருட்டுத் தொழிலாளர்கள் பாதுகாப்புச் சட்டத்தின் விதி 31/5-ன்கீழ் மேல் முறையீடு செய்வதற்கு ஸ்டாம்ப் பேப்பர் வாங்கி முறையீடு செய்யவேண்டும் என்று இருந்ததை, முத்திரைத் தாள் கட்டணம் இல்லாமல் செய்யலாம் என்று சட்டத் திருத்தம் செய்து இருக்கிறோம்.

1972-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் சட்டமன்றப் பேரவையில் நான் கூறியதை அரசு ஏற்று, தொழிலாளர் நலத்துறை அதிகாரிகள், தொழிலாளர்கள் நீதிமன்றங்கள் அல்லது தொழில் நடுவர் மன்றங்கள் இவற்றிற்கு தொழிலாளர்கள் சார்பாக தொழிற் சங்கங்கள் தாங்கள் செய்துகொள்ளும் மனுவில் நீதிமன்றக் கட்டண முத்திரைத்தாள் ஒட்டவேண்டும் என்று இருந்ததை, வேண்டாம் என்று சொல்லி உத்தரவிட்டு இருக்கிறோம்.

1958-ம் ஆண்டு உணவகங்கள் சட்டத்தின்கீழ் ஒரு தொழிலாளி டிஸ்மிஸ் செய்யப்பட்டு, மேல் முறையீடு செய்தால் முறையீடு அதிகாரி விசாரிப்பதற்கும், ஆவணங்களைக் கொண்டு வரச் சொல்வதற்கும், சாட்சிகளை வரவழைப்பதற்கும், அழைத்து வரவில்லை என்றால், சம்மன் அனுப்பி வரவழைப்பதற்கும், சட்டத் திருத்தம் செய்து இருக்கிறோம்.

அடுத்தாற்போல, எந்தெந்த நிறுவனங்களை குறைந்தபட்ச ஊதிய சட்டத்தின் பட்டியலில் இணைத்து இருக்கிறோமோ அதற்கு எல்லாம் தேசிய பண்டிகை விடுமுறை நாட்கள் சட்டம் பொருந்தும் என்று சட்டத் திருத்தம் கொண்டு வந்து, ஆணையிட்டு இருக்கிறோம்.

அதோடு இன்னும் சொல்லும்போது சொன்னார்கள். நீங்கள் இதுமட்டுமா செய்திருக்கிறீர்கள்? நீங்கள் ஒரு குழு அமைத்தீர்களே, அந்தக் குழுவின் பரிந்துரை என்னவாயிற்று? அன்-ஸ்கில்டு ஒர்க்கர்ஸ், மானுவல் ஒர்க்கர்ஸ் எல்லாம் சலுகை பெறுவதற்கு என்ன செய்தீர்கள் என்று கேட்டார்கள். இப்படிப்பட்ட அன்—ஆர்கனைஸ்டு தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க ஒரு சட்டம் கொண்டுவர இருக்கிறோம்.

அதுமட்டுமல்ல. இப்போது சஸ்பென்ஷனில் இருக்கக்கூடிய தொழிலாளர்களுக்கு, அவர்கள் முதல் 90 நாட்களுக்கு தற்காலிக [illegible] நீக்கம் செய்யப்பட்டிருந்தால் 50 சதவீதம் ஊதியம், [illegible] வேண்டும்; 180 நாட்களுக்கு சஸ்பெண்ட் செய்திருந்தால்



1981 பிப்ரவரி 12] [திரு. எஸ். இராகவானந்தம்]

75 சதவீதம் ஊதியம் வழங்க வேண்டும்; 180 நாட்களுக்கு மேலும் சஸ்பென்ஷன் தொடர்ந்தால் முழு ஊதியமும் கொடுக்க வேண்டும். இதற்கான ஒரு சட்ட முன்வடிவை இந்த மாமன்றத்திலே அறிமுகம் செய்திருக்கிறோம். அது இங்கே ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, நிறைவேற்றப்படும் என்று நம்புகிறோம். அப்படிப்பட்ட ஒரு சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம்.

குறைந்தபட்ச ஊதியம் வழங்குவது பற்றி இங்கே சொன்னார்கள். குறைந்தபட்ச ஊதிய சட்டம் இயற்றி தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு அளிக்கிறோம். அந்த வகையில் குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தை ஒரு தொழிற்சாலையில் நிறைவேற்ற வேண்டுமென்றால் அது ஷெடியூலில் சேர்க்கப்பட்ட தொழிலாக இருக்க வேண்டும்.

அந்த வகையில் குறைந்தபட்ச கூலி நிர்ணயம் செய்வதற்காக சட்டப்பிரிவு 27-ன்கீழ் ஷெட்யூலில் முதலில் சேர்க்க வேண்டும். ஆகவே, இந்த அரசு கீழ்க்கண்ட தொழில்களை ஷெட்யூலில் சேர்த்தது :—

தேயிலை வாங்கிப் பதப்படுத்தும் தொழில்

பாத்திரங்கள் தயாரிக்கும் தொழில்

சலவை மற்றும் சாயம் இடும் தொழில்

தையல் தொழில்.

ஆஸ்பத்திரி மற்றும் நர்சிங் ஹோமில் வேலை பார்ப்போர்

காப்பிக்கொட்டை பதப்படுத்தும் தொழில்

சோப்பு தயாரிக்கும் தொழில்

ஆகிய ஏழு தொழில்களை அட்டவணையில் சேர்த்திருக்கிறோம்.

அதைப்போல குறைந்தபட்ச கூலி நிர்ணயத்திற்காக இரண்டாம் பகுதியில் சேர்த்திருக்கும் தொழில் தற்போது அக்ரிகல்சுரல் லேபர் மட்டும்தான் இருக்கிறது. இங்கே காட்டில் வேலை செய்யும் 'பாரஸ்ட் ஒர்க்கர்ஸ்'— அவர்களையும் சேர்த்திருக்கிறோம். அதுமட்டுமல்ல. கீழ்க்கண்ட தொழில்களை ஷெட்யூலில் சேர்க்க அரசு பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது:—

டாக்சி மற்றும் ஆட்டோ ரிக்சா

சிறு எஞ்சினீயரிங் தொழில்.

கோவில்களில் வேலை பார்ப்போர்—அவர்களுக்கு இதுவரை சட்டம் இல்லை. இப்போது அவர்களுக்கும் மினிமம் வேஜ் கொண்டுவர பரிசீலிக்கிறோம்.

பதநீர் இறக்கும் தொழில்—இந்தத் தொழிலில் ஈடுபட்டவர்கள் இதுவரை இந்தச் சட்டத்தின்கீழ் வரவில்லை. அவர்களையும் சேர்த்துக்கொள்ள பரிசீலனை செய்கிறோம்.

கீழ்க்கண்ட தொழில்களை ஷெட்யூலில் சேர்க்க இயலுமா—இஸ் இட் பாசிபிள், வி ஆர் எக்ஸ்பிளோரிங்—என்பதுபற்றி பரிசீலிக்கிறோம்:—

காதி மற்றும் கிராமத் கைத்தொழில் வாரியத்தின் கீழ் இயங்கிவரும் தொழில்கள்:

கையினால் காகிதம் தயாரித்தல்.

கருங்கல் வெட்டி எடுக்கும் தொழில்.

நிப் தயாரித்தல்.

கீழ்க்கண்ட தொழில்களுக்கு முதல் முறையாக—பர்ஸ்ட் டைம்—குறைந்தபட்ச கூலி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது :—.

சந்தை, மார்க்கெட் மற்றும் இவை போன்ற இடங்களில் பாரம் ஏற்றி இறக்குவோர்.

ஆட்டோ மொபைல் ஒர்க்ஷாப்

அச்சகங்கள்

தேயிலை வாங்கி பதப்படுத்துதல்—பாட் லீவ்ஸ்

கடைகள் மற்றும் நிறுவனங்களில் பணிபுரிவோர்

ஆகியோர்களுக்கு ஷாப்ஸ் அண்ட் எஸ்டாப்ளிஷ்மென்ட்ஸ் ஆக்ட்படி மினிமம் வேஜஸ் நிர்ணயித்தவுடனே, இட் இஸ் ஆன் தி ஹை சைடு, இது மிக அதிகமாக இருக்கிறது என்று நூற்றுக் கணக்கான தந்திகள் வந்தன. கூலியை குறைக்க வேண்டுமென்று எங்களோடு பேச்சுவார்த்தைக்கு வந்தார்கள். பேட்டி கண்டார்கள். நாங்கள் கூலியை குறைக்க முடியாது என்று சொல்லிவிட்டோம். அதை எல்லோரும் பாராட்டுகிறார்கள்.

கீழ்க்கண்ட தொழில்களுக்கு குறைந்தபட்ச கூலி திருத்தி அமைக்கப்பட்டுள்ளது :—

**தீப்பெட்டி மற்றும் மத்தாப்பு தயாரித்தல்,**

**செங்கல் மற்றும் ஓடுகள் தயாரித்தல்.**



ஜவ்வரிசி தயாரித்தல்

உப்பளத்தில் வேலை செய்தல்

மோட்டார் போக்குவரத்து

புகையிலைத் தொழில் (பீடி சுற்றுவோர்கட்கு மட்டும்)

விவசாயமும் அதனைச் சார்ந்த தொழில்களும்

லாண்டரி மற்றும் சலவைத் தொழில்

எண்ணெய் ஆலைகளில் வேலை செய்வோர்

அரிசி ஆலைகளில் வேலை செய்வோர்

மாவு ஆலைகளில் வேலை செய்வோர்

பருப்பு ஆலைகளில் வேலை செய்வோர்

கயிறு தயாரித்தல்

தோல் பதனிடுதலும் தோல் தயாரித்தலும்.

கீழ்க்கண்ட தொழில்களுக்கு குறைந்தபட்சக் கூலி நிர்ணயம் அல்லது கூலியைத் திருத்தி அமைப்பது குறித்து அரசு ஆலோசனை செய்கிறது :—

கைத்தறி நெசவுத் தொழில்

தோட்டத் தொழில்

தையல் தொழில்.

அடுத்தபடியாக, குறைந்தபட்ச கூலி நிர்ணயிப்பதற்காக கமிட்டிகள் ஃபங்ஷன் பண்ணிவரும் தொழில்கள் :—

காப்பிக்கொட்டை பதப்படுத்தும் தொழில்

தங்க ஆபரணங்கள் தயாரித்தல்

மரத் தொழில்

சினிமா படம் தயாரித்தல் மற்றும் விநியோகம் செய்தல்

சலவை மற்றும் சாயமிடும் தொழில்.

[திரு. எஸ். இராகவானந்தம்] [1981 பிப்ரவரி 12]

கீழ்க்கண்ட தொழிலுக்கு குறைந்தபட்சக் கூலி நிர்ணயம் செய்ய குழுவின் பரிந்துரை அரசின் பரிசீலனையில் உள்ளது:—

செயற்கை வைரக்கற்கள் பட்டைத் தீட்டுதல்.

(முற்பகல் 11.50)

கீழ்க்கண்ட தொழில்களுக்குக் குறைந்தபட்சக் கூலி நிர்ணயம் செய்ய, திருத்தி அமைக்க குழு அமைப்பது குறித்து அரசு ஆலோசனை செய்து கொண்டிருக்கிறது: கைத்தறி நெசவுத் தொழில், கைத்தறி பட்டுத் தொழில், பனியன் தயாரித்தல், உரோமத்தினால் கம்பளி மற்றும் சால்வை தயாரித்தல், ரோடு போடுதல் மற்றும் கட்டிடம் கட்டுதல், பாத்திரம் தயாரித்தல், புகையிலைத் தொழில், பீடி சுற்றுவது தவிர ஏனைய தொழில்கள், ஈ.எஸ் ஐ. ஆஸ்பத்திரிகள் நீங்கலாக ஏனைய ஆஸ்பத்திரிகள் மற்றும் நர்ஸிங் ஹோம்களில் பணிபுரிதல், தீப்பெட்டி தயாரித்தல், மத்தாப்பு தயாரித்தல், காட்டன் ஜின்னிங் அண்ட் ப்ராசசிங் மற்றும் காட்டன் வேஸ்ட் தொழில். இவைகள் குறித்து ஆலோசனை செய்து கொண்டிருக்கிறோம். எனவே, இந்த அரசைப் பொறுத்தவரையில் நிரம்ப சாதனைகளைச் செய்துகொண்டிருக்கிறோம் என்பதைப் பெருமையாக சொல்லிக்கொள்கிறேன்.

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்களில் பொதுவாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த தோழர்கள் 'மேற்கு வங்காளத்தில் அங்குள்ள முதல்வர் செய்திருக்கிறாரே பாருங்கள்' என்று சுட்டிக்காட்டி 'அதைப் பின்பற்றவேண்டும்' என்றும் 'அப்படி ப்ரோகிரஸிவ்' ஆக இருக்க வேண்டும் என்றும் சொன்னார்கள். சி.பி.ஐ. தோழர்கள் ''கேரளாவைச் சுட்டிக்காட்டினார்கள். அப்படி சுட்டிக்காட்டி கேரளாவிலே ரிட்டையர் ஆன விவசாயத் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியமாக ரூபாய் 50 கொடுக்கிறார்கள் பார்த்தீர்களா?'' என்று சொன்னார்கள். ''இங்கே ஆளுகின்ற கட்சியைவிட எங்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்கள் மிகச் சிறப்பாக அங்கே செயல்படுகின்றனர், நாங்களும் இங்கே ஆட்சியில் இருப்போமேயானால் அப்படி எல்லாம் செய்வோம்'' என்று கூறினார்கள்.

மேற்கு வங்காளம், கேரளா ஆகிய இரண்டு அரசுகளின் மீதும் மிகவும் மதிப்பு வைத்திருக்கின்ற இந்த அரசைச் சார்ந்தவன் நான். மேற்கு வங்காளத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சியைப் பற்றி, சி.பி.ஐ. தலைவர் அவர்கள் என்ன சொல்லி இருக்கிறார் என்பதை இந்த மன்றத்தில் வைப்பது என்னுடைய கடமை. ஆகவே, அதை அவர்களுக்குக் காணிக்கையாக்குகிறேன்:



1981 பிப்ரவரி 12] [திரு. எஸ். இராகவானந்தம்]

'Mr. Bhowani Roychoudhury, General Secretary, West Bengal unit of the All India Trade Union Congress, said in Calcutta that the current strike in five big Central Government units in Bangalore would spread to such units in West Bengal, if the Centre refused to accept the demand of the workers'

என்று சொல்லிவிட்டு, ''The problems faced by the working class in West Bengal were of a special nature, he said. The Left Front Government was sympathetic towards the workers' cause, but it had not been able to create additional employment opportunities in the State.''

இந்த அரசு தொழிலாளர் பக்கம் சாதகமாக இருக்கின்றது. ஆனால், 'it had not been able to create additional employment opportunities in the State' உற்பத்தி செய்ய முடியவில்லை. '' மேலும் இந்த மாநிலத்தில் பொருட்களை உண்டாக்க முடியவில்லை,'' இவ்வாறு சொன்னது சி.பி.ஐ. 'There had been hardly any new investment either in the public or private sector in West Bengal during the last four years'

கடந்த 4 ஆண்டுக் காலத்தில் புதிதாக தொழில் நிறுவனங்கள் எதுவுமே வரவில்லை. ''He alleged that owners of jute mills and tea gardens were diverting their profits to other States for starting new units there. The unemployment problem had therefore become acute in the State''

இந்த மாநிலத்தில் வேலையில்லாத் திண்டாட்டம் மிகவும் கடுமையாக இருக்கின்றது. ''He regretted, however, that trade unions in West Bengal were unable to launch united struggles for realisation of the workers demands''

தொழிற்சங்கங்கள் ஒன்று சேர்ந்து தொழிலாளர்களின் நன்மைக்காக மேற்கு வங்காளத்தில் போராட முடியவில்லை. இதைத் தான் நான் குறிப்பாக திரு. உமாநாத் அவர்களின் கவனத்திற்கு வைக்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, நேற்றுத்தான் ஒரு லிஸ்ட் படிக்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சரவர்கள் பேசி முடித்த பிறகு நீங்கள் பேசுகின்றபோது அதுபற்றி எல்லாம் பேசலாம். இப்பொழுது அவர் பேசி முடிக்கட்டும்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : ''Difficulties were being created by the CPI (M) controlled Centre of Indian Trade Union which was 'allergic' to participate in united movements with the SUC-controlled United Trade Union Congress. (Lenin

[திரு. எஸ். இராகவானந்தம்] [1981 பிப்ரவரி 12]

Samani). This was because the CPI(M) considered the SUC as "politically untouchable", he added. It was unfortunate that the Left Front Government had either failed to implement or delayed implementation of some of the tripartite agreements reached in different industries.

லோகல் சி.ஐ.டி.யூ. யூனியன் சொன்னதினாலே வேலை இழந்தவர்களுக்கு வேலை வாங்கி வைக்க முடியவில்லை. "He pointed out that although it had been agreed in 1979 that 112 textiles workers, who had been dismissed during the Emergency period, would be reinstated within two months, nothing so far had been done about it. The State's labour Minister had said that the workers could not be reinstated because of opposition by local CITU units." Of the dismissed workers, 111 belonged to the AITUC and one to the CITU.

ஏனென்றால் 111 பேர்கள் ஏ.ஐ.டி.யூ.சி. ஒருவர்தான் சி.ஐ.டி.யூ. என்ன ஆகிறது, அந்த மாநிலத்தைப் பார்த்து, அந்த முதல்வரைப் பார்த்து, நம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்று சொன்னார்கள். மேற்கு வங்கத்தைப் பார்த்தீர்களா ? கேரளாவைப் பார்த்தீர் களா ? என்று சொன்னார்களே ? அங்கே மேற்கு வங்கத்தி லேயே, சி.பி.ஐ. கட்சியைச் சேர்ந்தவர்களே சொல்கிறார்கள்— புதிய தொழில் வரவில்லை. தொழில் அதிபர்கள் ஓடிவிடுகிறார் கள். ஒப்பந்தங்களை டிலே செய்கிறார்கள், என்று பிளெயினாக சொல்கிறார்கள்.

"He alleged that the CITU had split the All India Bank Employees Association and formed a separate employees' organisation on the flimsy plea of 'appeasement' policy of the AIBEA. He said that the AIBEA was one of the few all India employees' organisations which was not affiliated to any Central trade union and different trade union groups used to work unitedly under its banner. The Left Front had either failed to implement or delayed implementation of some of the tripartite agreements reached in different industries".

இது எங்களுடைய குற்றச்சாட்டு அல்ல, அதற்கு எங்களிடம் ஆதாரமும் இல்லை. சொல்லியிருப்பது சி.பி.ஐ. அது மாதிரி இங்கே இருக்கக் கூடிய தொழில் அதிபர்கள் அப்படி ஓடிவிடக் கூடாது, புதிய தொழில்களின் மூலம் வேலைவாய்ப்புக் கொடுப் பதற்கு வரமாட்டோம் என்று சொல்லக் கூடிய நிலைமை தமிழ கத்தில் உருவாகவும் கூடாது என்று நாங்கள் நினைக்கிறோம் அப்படி ஒரு நிலைமை உருவாவதை நாங்கள் விரும்பவில்லை இரு சாராருக்கும் நியாயமான முறையில் நடந்துகொள்ள வேண் டும் என்றுதான் நினைக்கிறோம். தொடர்ந்து நடப்போம்



1981 பிப்ரவரி 12] [திரு. எஸ். இராகவானந்தம்]

எனவே, திரு. உமாநாத் அவர்கள் சொல்லியிருக்கக்கூடிய குற்றச்சாட்டுக்கள் எதுவும் சரியானது அல்ல என்றும், அதை நான் விளக்கிச் சொன்ன பிறகாவது திருப்தி அடைந்து, புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சி புரட்சிகரமான திட்டங் களைப் போட்டு தொழிலாளர்களைப் பாதுகாக்கிறது என்கிற எண்ணத்தை ஏற்று, அவர்கள் கொண்டு வந்த தீர்மானத்தைப் பின்வாங்கிக் கொள்வார்கள் என்று நான் நம்புகிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் அவர்களின் பதிலுக்கும் திரு. உமாநாத் அவர்களை சுருக்கமாக விளக்கம் கேட்க அனுமதிக்கிறேன். 10 நிமிடத்தில் முடிந்துக் கொள்ள வேண்டும்.

திரு. என். சங்கரய்யா : அமைச்சர் அவர்கள் நீண்ட விளக் கத்தைத் தந்திருக்கிறார்கள். அதிலுள்ள முக்கியமான பிரச்னை களைப் பற்றி எடுத்துப் பேச எங்களுக்குச் சந்தர்ப்பம் தந்தாக வேண்டும்.

திரு. ஆர். உமாநாத் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் அளித்த விளக்கம் பூராவிற்கும் நான் பதில் சொல்லப் போவது இல்லை. ஏனென்றால் நான் கேட்டவைகளில் பலவற்றிற்கும் அவர் பதில் சொல்லவே இல்லை. சிலவற்றிற்கு நான் நேற்றையதினம் குறுக்கிட்டுப் பேசுகையிலே பதில் அளித்து விட்டேன். அதனால் அவர் கூறிய 2, 3 முக்கிய பாயிண்டுகளில், அவைகள் நிச்சயமாக தமிழகத்திலே இருக்கக் கூடிய மக்களுக்கும் தொழிலாளர்களுக்கும் அக்கறை இருக்கக்கூடிய பிரச்சனை என்கிறமுறையில் என்னுடைய டைமை எடுத்துக் கொள் கிறேன்.

(நண்பகல் 12-00)

இன்று பேசுகிறபோது கடைசியாக ஸி.பி.ஐ. ஸ்டேட்மென்ட் ஒன்றைப் படித்துக் காண்பித்தார்கள். அது இங்கே இருக்கக் கூடிய டிஸ்கஷன் ப்ராப்பராகப் போவதற்குப் பதிலாக—அவரே சார்ஜ் செய்தால் ஆட்சேபணையில்லை—ஒரே நிலையை எடுத் திருக்கக் கூடிய ஒருவரை ஒருவர் சிண்டு முடித்தால் அந்த ட்ராப் பில் நான் விழமாட்டேன். ஆகவே, அந்த விஷயத்திற்குள் நான் போகவில்லை.

ஆனால் ஒன்றை நான் கேட்க விரும்புகிறேன். ஸி.பி.ஐ. வெஸ்ட் பெங்கால் பற்றி கொடுத்திருக்கக்கூடிய ஸ்டேட்மென்டில் பெரிய ரிலையன்ஸ் வைத்து கோட் செய்கிறார்கள். அதே, ஸி.பி.ஐ. ரெப்ரசென்டேடிவ் திரு. கருப்பையா அவர்கள் இந்த அரசைப் பற்றி விமர்சனம் செய்தார்கள். அந்த விமர்சனங்களை ஒத்துக்கொள்கிற அமைச்சர் இந்த விமர்சனங்களை ஒத்துக்கொள் வார்களா ?

[திரு. ரா. உமாநாத்] [1981 பிப்ரவரி 12

அடுத்தபடியாக பில்ஸ் பற்றிச் சொல்லியிருக்கிறேன். அதைப் பற்றி அவர்கள் சரியாகச் சொல்லவில்லை. அந்த விவரங்களுக்கும் நான் போகவில்லை இப்போது.

கருங்காலிகள் பற்றிய பிரச்னை. நான் முதல் அமைச்சர் அவர்கள் பேசியதைக்கூட கோட் செய்தேன். அதையும் டீல் செய்யவில்லை. 1946 ஆம் ஆண்டு ஒரு பெரிய ரெயில்வே ஸ்ட்ரைக் நடந்தது. நமது அமைச்சர் அவர்கள் அப்போது கருங் காலித்தனத்தை எதிர்த்தவர்தான். இந்த முறையை எதிர்த்தவர் தான், ஷுகர் தொழிலாளர்கள் ஸ்ட்ரைக் நடந்தபோது கருங் காலித்தனத்தை எதிர்த்தவர்தான். இப்போது அதை ஏற்றுக் கொள்கிறார். அப்போது அவர் இருந்த இடம் வேறு, இப்போது அவர் இருக்கிற இடம் வேறு.

'' கம்பல்சரி ஆர்பிட்ரேஷன் '' பற்றிச் சொன்னார்கள். எங்கள் நிலை கம்பல்சரி ஆர்பிட்ரேஷன் கூடாது என்பதுதான். ஆனால், இப்போது ட்ராப்ட் சட்டம் வெஸ்ட் பெங்கால் போட் டிருக்கிறது என்று சொன்னார்கள். அதைப்படித்துப் பார்த்து தான் சொல்ல முடியும். ஆனால், நான் ஒன்று நிச்சயமாகச் சொல்கிறேன். வெஸ்ட் பெங்கால் அரசாங்கம் அனுப்பியிருக்கக் கூடிய அந்த ட்ராப்டை ஆல் இந்தியா ஸி.ஐ.டி.யூ. ஜெனரல் கவுன்சிலில் வைத்து பரிசீலனை செய்து அது தப்பு என்று ஜெனரல் கவுன்ஸில் சொன்னால் வெஸ்ட் பெங்கால் அரசாங்கம் They will not proceed beyond that என்பதைத் தொழிற்சங்க இயக்கத்தின் முடிவிற்கு வணங்கக்கூடிய சர்க்கார் பரிசீலனை செய்து கட்டுப்படும் என்று சொல்ல விரும்புகிறேன்.

ரெபரன்ஸ் பொறுத்தவரையில், கோர்ட்டுக்கு விடக்கூடிய விஷயம். அவர்கள் எவ்வளவு விட்டார்கள் எவ்வளவு விட வில்லை என்பதல்ல பாயிண்ட். கோர்ட்டுக்குச் சென்று வாதாடும் உரிமையில் இங்கே பாகுபாடுசெய்யப்படுகிறது என்பதுதான் என் குற்றச்சாட்டு. அதற்கு நிறைய எவிடன்ஸ் கொடுத்தேன். ஒரு தீர்ப்பைக்கூட படித்துக் காட்டினேன். அதற்குப் பதில் இல்லை. ஒன்று மட்டும் சொல்வேன். டி.வி.எஸ். விஷயம், தொழிலாளர் கள் மீது நடவடிக்கை எடுப்பதாக இருந்தால்—லூகாஸில்—முதல் அமைச்சர் அவர்களுக்கு ரெபர் செய்து அவர்களுடைய முடிவிற்கு கட்டுப்படுவோம் என்று அக்ரிமெண்ட் போட்ட அந்த நிர்வாகம் அந்த அக்ரிமெண்ட்படி நடக்காமல் ஏராளமான டிஸ்மிஸல்களை செய்த பிறகு அந்த டிஸ்மிஸல்களைக் கோர்ட்டுக்கு விடக்கூடிய அதிகாரம் நம் சர்க்காருக்கு இருக்கிறபோது அந்த டிஸ்மிஸல்களை இன்னும் கோர்ட்டுக்கு விடாமல் இருக்கிறது. அதற்கு அவர் பதில் சொல்லவில்லை.



1981 பிப்ரவரி 12] [திரு. ரா. உமாநாத்]

கோர்ட்டுக்கு, புது ஆக்ட்படி யார் வேண்டுமானாலும் போக லாம் என்று அனுப்பியிருப்பதாகச் சொன்னார்கள். புது ஆக்ட் டுக்கு கட்டுப்பட்டு நடக்கட்டும். புது ஆக்ட்டில் இந்த சர்க்கார் இன்று கோர்ட்டுக்கு விடக்கூடாது என்று தடை இருக்கிறதா? இல்லையே. சர்க்கார் நிச்சயமாக கோர்ட்டுக்கு விடலாம். ஆகவே, அது தடுக்கிறது என்று சொல்லாதீர்கள்.

அஸால்ட் போன்றவை பற்றி கோர்ட்டுக்கு விடுவது பற்றி, அஸால்ட் போன்றவை சம்பந்தப்பட்ட டிஸ்மிஸல்ஸ்— தாக்குதல், அடி, வன்முறை இவை சம்பந்தப்பட்ட டிஸ்மிஸல்ஸ்— எப்படி அனுப்புவது என்று கேட்டிருக்கிறார்கள். ஷாப் ஆக்ட்படி இன்று நேராக தொழிலாளர்கள் கோர்ட்டுக்குப் போகலாம். அஸால்ட் செய்த தொழிலாளர், டிஸ்மிஸலாகிய தொழிலாளர் நேராக கோர்ட்டுக்கு போகலாம் என்பதை ஒத்துக் கொண்டு டிராப்ட் அனுப்பப்படுகிறது என்று சொல்கிறார்கள். நான் கேட்கிறேன். இந்த இரண்டுக்கும் என்ன வித்தியாசம்? ஏற்கெனவே உள்ள ஷாப் ஆக்ட்படி தொழிலாளர்கள் நேராக கோர்ட்டுக்குப் போகலாம். இப்போது நீங்கள் யார் வேண்டு மானாலும் நேராக கோர்ட்டுக்கு போகலாம் என்று செய்யப் போகிறீர்கள். இப்போதுள்ள அதிகாரத்தை, கோர்ட்டுக்கு விட அதை ஏன் பயன்படுத்தக்கூடாது?

அடுத்தபடியாக, மூன்று நான்கு விஷயங்கள் பற்றி மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். பி. அண்ட் சி. மில் விஷயமாக அரசின் நிலையை விளக்க வேண்டும். நிர்வாகத்தை மாற்றியமைக்க வேண்டும் என்று மாநில அரசு மத்திய அரசுக்கு—ஐ.டி.ஆர். சட்டத்தின்கீழ் மத்திய அரசு அதை எடுக்கவேண்டுமென்று மாநில அரசு எழுதியதைப் படித்துக்காட்டினார்கள். தேவைப்பட்டால் விசேஷ சட்டம் நிறைவேற்றவேண்டுமென்று கேட்டுக்கொண்டு கடிதம் எழுதியதாக அவர்கள் படித்துக்காட்டினார்கள். அவர் கள் கூறுகிறபோது பெர்ண் அண்ட் கோ, கல்கத்தாவில் இருப்பதை மத்திய அரசு எடுக்க ஒரு விசேஷ சட்டத்தை போன பார்லி மெண்ட் கூட்டத்தில் நிறைவேற்றினார்கள்; அதன்படி எடுக்க வேண்டுமென்று நாங்கள் வலியுறுத்தியிருக்கிறோம் என்று கடிதம் எழுதியிருப்பதைச் சுட்டிக்காட்டினார்கள். அந்த நிலையை வர வேற்கிறோம். ஆனால், அந்தக் கடிதத்தைக் காட்டி நீங்கள் மெயின் குற்றச்சாட்டிலிருந்து தப்பிக்க முடியாது என்று கூற விரும்புகிறேன்.

ஏன்? அந்தக் கடிதம் எழுதப்பட்டது 1980 ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம் 5 ஆம் தேதி. அந்தக் கடிதத்தை இந்த அரசு மத்திய அரசுக்கு எழுதியது. அதாவது பி. அண்ட் சி. மில் மூடப்படுவதற்கு ஒரு மாத காலத்திற்கு முன்னதாக எழுதப்பட்ட கடிதம். அந்தக் கடிதம் எழுதி இப்போது 2½ மாத காலமாகி விட்டது. இப்போது நான் கேட்பதெல்லாம், இப்படிப்பட்ட ஒரு முக்கியமான விஷயத்தை 2½ மாதங்களாக ஏன் அரசாங்கம்

மூடி மறைத்தது? ஏன் வெளியே சொல்லவில்லை? அந்தக் கடிதத்தின் மூலம் மைய அரசாங்கத்தைக் கேட்டார்கள். அப்படி மாநில அரசாங்கம் கேட்க வேண்டாம் என்று சொல்லவில்லை. தொழிற்சங்கங்கள் கேட்கிறார்கள். அப்போதும் சொல்லவில்லை; பல கட்சிகளும் கேட்கிறார்கள்; அப்போதும் சொல்லவில்லை; அதிலே பணியாற்றக் கூடிய தொழிலாளர்கள் கேட்கிறார்கள்; அப்போதும் சொல்லவில்லை. இவ்வளவு பேர்கள் கேட்டார்கள். இப்படி டிசம்பர் மாதம் 5-ஆம் தேதி கேட்டோம் என்று தங்கள் நிலையை எடுத்துச் சொல்வதிலே என்ன தப்பு? ஏன் மக்களிடம் சொல்லக் கூடாது? ஏன் சொல்லவில்லை? ஏன் இந்த அரசு அதை மூடி மறைத்தது என்பது தெரிய வேண்டும்.

அதற்கு நேர்மாறாக, ஒரு கூட்டத்தில் முதல்வர் அவர்கள் பதில் சொல்கின்றபோது, ஒரு பத்திரிகையிலே படித்ததைச் சொல்கிறேன். இதிலே மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொல்கிறார்கள்—முதலாளிகளும், தொழிலாளிகளும் பிடிவாதமாக நிற்கிறார்கள் என்று. முதலாளிகள் பிடிவாதமாக நிற்கிறார்கள் என்று சொல்வதிலே அர்த்தமிருக்கிறது. ஆனால், அந்த மில்லை மூடுவதால் வேலையிழக்கும் 3,000 தொழிலாளர்கள், அவர்களும் பிடிவாதமாக நிற்கிறார்கள் என்று முதல்வர் அவர்களே சொல்கிறார்கள். ஆகவே, ஒரு பக்கத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்கிறார்கள்; பேனிக் பொஸிஷனை எடுத்து வைக்கின்றபோது, அப்படிச் சொல்கிறார்கள்; மறு பக்கத்தில் தொழிலாளர்கள் பிடிவாதமாக நிற்கிறார்கள் என்று முதல்வர் அவர்கள் சொல்லுகிறார்கள். என்ன விஷயம் என்பது தெரியவில்லை? பி அண்டு சி மில் விஷயத்தில் தலையிட்டு, மைய அரசுக்கு எழுதியதாகச் சொன்னார்கள். அப்படி எழுதியது சரி. ஆனால், விரைவிலே அதை ஏற்று நடத்துவதற்கு என்ன நடவடிக்கை எடுத்தீர்கள்? பெர்ன் அண்டு கம்பெனியை மத்திய அரசு எடுத்தது மாதிரி எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கடிதம் எழுதினீர்கள். அந்த விசேஷ சட்டத்தை இந்த பார்லிமெண்டிலே கொண்டு வந்து பாஸ் பண்ணப்பட்டது வாஸ்தவம். எப்படி செய்யப்பட்டது? பெர்ன் அண்டு கம்பெனி கல்கத்தாவிலே ஒரு பெரிய இன்ஜினியரிங் கம்பெனி. ஜோதி பாசு அவர்கள் மத்திய அரசுக்கு ஒரு கடிதம் எழுதினார்கள். நடவடிக்கை எடுக்கப்படவில்லை. ஆகவே, மேற்கு வங்காளத்தில் பல்வேறு கூட்டங்களிலே சொன்னார்கள். இது மாநிலத்தின் கோரிக்கை என்றார்கள். இதை மத்திய அரசாங்கம் ஏற்று நடக்க வேண்டுமென்று சொன்னார்; அதுபற்றி அடிக்கடி ஸ்டேட்மெண்ட் விட்டார்கள். மேலும், மக்களிடம் எடுத்துத் தெரிவித்தார்கள். அப்படி சொல்லியும், மைய அரசு எடுக்க மாட்டோம் என்று சொல்கிறார்கள் என்று மக்களிடம் தெரிவித்தார். ஆளும் கட்சியும், தொழிற் சங்கங்களும் சேர்ந்து ஒரு பேரணியும் நடத்தினார். கடைசியிலே இந்த கோரிக்கையை





உள்ளிட்ட ஒரு நாள் பந்த் நடத்தினார்கள். ஆளும் கட்சியும், தொழிற் சங்கங்களும் சேர்ந்து அந்த பந்தை நடத்தினார்கள். அந்த பந்த் நடத்திய கோரிக்கையை பாராட்டினார்; தொழிலாளர்களை முதலமைச்சர் அவர்கள் பாராட்டினார்கள். அதற்குப் பிறகுதான் லோக் சபையிலே அதுவும் இந்தக் கூட்டத் தொடரிலேயே பெர்ன் அண்டு கம்பெனியை மைய அரசு எடுத்திருக்கிறது. அதற்கான சட்டமும் பாஸ் செய்யப்பட்டது. அங்கே அந்த அமைச்சர் அப்படி செய்கிறார். ஆனால், இங்கே இந்த அமைச்சர், இந்த அரசின் நிலை கடிதம் எழுதி 2½ மாதங்களுக்குப் பிறகும், அதற்கு நேர்மாறாக ரகசியமாக அந்தக் கடிதத்தை வைத்திருந்து செயல்படுவதைப் பார்க்கிறோம். இந்த முக்கியமான பிரச்சினையிலே கவனம் செலுத்தவில்லை. அங்கு நடந்த மாதிரி பந்த் நடத்தவில்லை. பரவாயில்லை; விட்டு விடுங்கள். ஆனால், பி அண்டு சி மில் தொழிலாளர்கள் பந்த் நடத்த வேண்டுமென்று கேட்டபோது, அதற்கு இந்த அரசாங்கம் அவர்களைப் பாராட்டவில்லை. பாராட்ட வேண்டாம். அதற்குப் பதில் தடைச் சட்டம்தான் போட்டார்கள். நான் கேட்கிறேன். அத்தியாவசியமான, முக்கியமான விஷயத்தில், அதை ரகசியமாக வைத்துக் கொள்வதோடு, அதற்காக நடவடிக்கை எடுத்த இயக்கத்தில் தலையிட வேண்டுமா? பந்துக்கு மற்றவர்கள் ஆதரவு திரட்டுகிறார்கள். ஆனால், அதை நசுக்க சட்டம் கொண்டு வரவேண்டுமா என்றுதான் கேட்கிறேன். அப்படி செய்தால், லட்சியம் எப்படி நிறைவேறும்? இப்போது பி அண்டு சி மில்லை மத்திய அரசாங்கம் எடுக்க வேண்டுமென்றால், அதைப்பற்றி பகிரங்கமாகச் சொல்லவேண்டும். மேற்கு வங்காளத்தில் பெர்ன் அண்டு கம்பெனியை எடுத்தது மாதிரி, எடுக்க வேண்டுமென்றால் அதற்கு மக்கள் ஆதரவு திரட்டப்பட வேண்டும். அதுமாதிரியான நிலையை எடுக்க வேண்டுமென்பதற்காக, இப்போதாவது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். எல்லாக் கட்சிகளையும், எல்லாத் தொழிற் சங்கங்களையும் அழைத்து, அவர்களின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொண்டு செய்ய வேண்டும். அதற்கு அறிகுறியாக 3, 4 நாட்களாக நடைபெற்ற விவாதத்திலே சொன்னோம். அதற்கு ஒரு தீர்மானம் கொண்டு வாருங்கள். மாண்புமிகு உறுப்பினர் கருப்பையா அவர்களின் தீர்மானமே இங்கிருக்கிறது. அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றலாம். அதற்கு வேண்டிய மக்கள் ஆதரவைத் திரட்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12–10)

நீண்ட நாள் வேலை நிறுத்தங்கள் நீடிப்பது சம்பந்தமாக என்னுடைய குற்றச்சாட்டுக்குப் பதில் அளிக்கின்றபோது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேற்கு வங்கத்தில் நீண்ட நாட்கள் வேலை நிறுத்தங்களின் கணக்கைக் கொடுத்தார்கள்.

அவர்களுக்கு உண்மையில் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே நாங்கள் ஸ்டிரைக்கை ஆர்கனைஸ் பண்ணினால் சர்க்காரைக் கவிழ்ப்பதற்காக என்று கூறி வருகிறார்கள். இந்த அரசாங்கத்திற்குத் தொந்தரவு கொடுப்பதற்காக என்று கூறுகிறார்கள். ஆனால் அதே சமயத்தில் அமைச்சர் அவர்கள் புள்ளி விவரங்களைக் கொடுத்தார்கள். மேற்கு வங்கத்தில் எட்டு மாதம் ஸ்டிரைக்—எங்கள் சர்க்காரைக் கவிழ்க்க நாங்களே ஸ்டிரைக் செய்வோமா? It is not a question of political motive.

இதிலே அரசியல் நோக்கம் பார்க்கக் கூடாது. இன்றைக்கு இருக்கக்கூடிய பயங்கரமான வாழ்க்கைத் தரத்தைப் பார்க்கும்போது பல்வேறு பகுதியினரும் இன்றைக்கு இதிலே இறங்க வேண்டிய நிலைமை இருக்கிறது. தயவு செய்து வேலை நிறுத்தங்களைப் பற்றி உங்களைக் கவிழ்ப்பதற்காக என்று எண்ணாதீர்கள், மாண்புமிகு அமைச்சர் அவர்களே பதில் சொல்லி விட்டார்கள். ஆகவே, அந்த விதத்திலே தெளிவாகி இருப்பார்கள்.

இருப்பினும், மேற்கு வங்கத்தைச் சுட்டிக்காட்டி இந்த விஷயத்தில் பார்க்க முடியாது. நீடித்த வேலை நிறுத்தங்கள் என்பது மட்டுமல்ல எங்களுடைய குற்றச்சாட்டு. தலையிட முடியாது என்று, வேலை நிறுத்தங்களை நீடிக்கவிட்டு உடைப்பதற்காக என்றே தலையிடாமல் இருப்பது என்பதுதான் எங்களுடைய குற்றச்சாட்டு. We have specific issue.

லேட்டஸ்டாக பாலேகர் அவார்டு பிரஸ் நிருபர்கள் சம்பந்தமாக, ஜர்னலிஸ்ட் சம்பந்தமாக அவார்டு வந்து ரொம்ப நாள் ஆயிற்று. அதற்கு முத்தரப்புக் கூட்டத்தைக் கூட்ட அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்துக் கொண்டார்களா என்றால் இல்லை. பல மாநிலங்கள் அமல் நடத்தியிருக்கின்றன. முத்தரப்பு மாநாட்டைக் கூட்டவில்லை. யூனியன் மினிஸ்டர் வந்தபோது மாண்புமிகு முதல்வரைச் சந்தித்து முத்தரப்பு மாநாட்டைக் கூட்டி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கூறியிருப்பதாக பத்திரிகைச் செய்தியில் சொல்லியிருக்கிறார்கள். உத்தரப் பிரதேசம், பீகார் ஆகிய மாநிலங்களில் அப்படி அதை அமல் நடத்ாத பத்திரிகைகளுக்குச் சர்க்கார் அட்வர்டைஸ்மெண்ட் கொடுப்பதை கான்சல் பண்ண வேண்டுமென்று ஆர்டர் போட்டிருப்பதாகத் தெரிகிறது. தமிழ்நாட்டில் சிலபல பத்திரிகைகள் அமல் நடத்தவில்லை. அந்த ஊழியர்களுக்கு பாலேகர் அவார்டு படி வேஜஸை அமல் நடத்தவில்லை என்பது தெரியாதா? இவ்வளவு விளக்கம் தெரிந்த அமைச்சருக்கு இது தெரியாதா? ஏன் முத்தரப்பு மாநாட்டைக் கூட்டவில்லை? நாங்கள் முதலாளிகளுக்காக இல்லையென்று சொல்கிறார்—What is the objective result? இவ்வளவு நாட்கள் ஆகியும், மற்ற மாநிலங்கள் வெஸ்ட் பெங்காலைச் சொல்லவில்லை—பல மாநிலங்களில் அமல் நடத்தியிருக்கிறார்கள். பல பத்திரிகை ஊழியர்கள் பாதிக்கப்பட்ட நிலைமையில்





இருக்கும்போது, மத்திய மந்திரியும் சொல்லியிருக்க, பல மாநிலங்களில் அப்படி அமல் நடத்தாத பத்திரிகைகளுக்கு அட்வர்டைஸ்மெண்ட் கொடுப்பதைக் கான்சல் செய்திருக்க இங்கே முத்தரப்பு கூட்டத்தைக் கூடக் கூட்டாமல் எதற்காக உட்கார்ந்திருக்கிறார்கள்? அவர்கள் ஸ்டிரைக்கில் போகட்டும், நீடிக்க விடுவோம்—உடைப்பதற்காகவா என்று கேட்கிறேன். உண்மையாக இருக்கும் பாக்ட்சைச் சொல்கிறேன். மேற்கு வங்கத்தில் அரசு வேண்டுமென்றே தலையிடாமல் ஸ்டிரைக்கை நீடிக்கச் செய்து உடைக்க முயன்றதாக சிங்கிள் ஸ்டிரைக்கை அமைச்சர் அவர்கள் காட்டுவார்களா? காட்ட தைரியம் இருக்கிறதா? You dare not. ஸ்டிரைக்கை உடைப்பதற்காக நீடித்தார்கள் என்று ஒன்றையாவது காட்ட முடியுமா? நேர்மாறாக இரண்டரை இலட்சம் சணல் ஆலைத் தொழிலாளர்களுக்கு—கடந்த காலத்தில் அவர்களுக்குக் கூலி உயர்வு சரியாகக் கிடைக்கவில்லை—கூட்டணி சர்க்கார் இருந்தபோது கூட்டி வைத்து லேபர் அமைச்சர் பேசினார். கடந்த கால சரித்திரத்தில் கிடைக்காத உயர்வைச் சிபாரிசு செய்தார்—ரூபாய் 47.50 பைசா. கடந்த காலத்தில் இல்லாத அளவுக்கு அதிகமான அளவுக்கு சிபாரிசு செய்தார்கள்—அந்தச் சிபாரிசை முதலாளிகள் மறுத்தார்கள். பிடிவாதமாக என்ன ஆனாலும் கொடுக்க மாட்டோம் என்றார்கள். அது நடந்ததா? பிறகு தொழிலாளர்கள் திரும்பப் பேசினார்கள். அவர்கள் மாநாட்டை நடத்தினார்கள்.

வேலை நிறுத்தம் செய்வது என்று முடிவு செய்தார்கள். அந்த மாநாட்டிற்கு முதலமைச்சரும் சென்றார்; தொழிலாளர் நல அமைச்சரும் சென்றார். உங்களுடைய கோரிக்கை நியாயமானது என்று சொன்னார். உங்களுடைய போராட்ட முடிவும் நியாயமானது என்று சொன்னார். சொன்னது மட்டுமல்ல; நீங்கள் வேலை நிறுத்தம் செய்வீர்களேயானால் எங்களுடைய முழு ஆதரவும் உண்டு என்று பகிரங்கமாக சீப் மினிஸ்டரும், லேபர் மினிஸ்டரும் டெக்ளேர் பண்ணியதோடு நிற்காமல்; போலீசை ஸ்ட்ரைக் பவுண்ட் பேக்டரீஸ்கிட்டே அனுப்ப மாட்டேன் என்று சொன்னார். அதன்படி அந்த பேக்டரீஸ்கிட்டே அந்த போலீசை அனுப்பவில்லை. போலீசை அனுப்பாமல் இருக்கும்பொழுது ரௌடீசத்தை எப்படிக் கொண்டு வருவார்கள் முதலாளிகள்? போலீசை அனுப்பாமல் இருக்கும்பொழுது கருங்காலிகள் எப்படிப் போவார்கள்? ஆகவே, கொடுக்கவே முடியாது என்று பிடிவாதமாக இருந்தபொழுது வேலை நிறுத்தம் என்று முடிவு செய்தபொழுது, அந்த வேலை நிறுத்தத்தை ஆதரித்து வெற்றி பெறச் செய்வதற்கு துணை செய்தார்கள். ஆகவே, 50 நாட்கள் பார்த்தார்கள். பிறகு முதலாளிகள் தாமாக ஓடிவந்து, லேபர் மினிஸ்டரிடம் இப்பொழுது முடித்துக் கொள்ளலாம்; இப்பொழுது 47½ ரூபாய் தருகிறோம் என்று சொன்னார்கள். ஆனால் நடந்தது என்ன தெரியுமல்லவா? தொழிலாளர்கள் சொன்னார்கள், ஸ்ட்ரைக்குக்கு முன்னால் 47½ என்பதை

நாங்கள் ஏற்றுக் கொண்டோம். இப்பொழுது நாங்கள் 50 நாட்கள் வேலை நிறுத்தம் செய்திருக்கிறோம்.

No, we will not accept Rs. 47.50.

கடைசியிலே 62 ரூபாய் சம்பள உயர்வில்தான் அந்த வேலை நிறுத்தம் செட்டில் ஆனது. அந்த முறையிலே அங்கே நடந்தது. முதலாளிகள் சர்க்காரை மீறிக் காரியங்களைச் செய்யும்பொழுது, அப்பொழுது வேலை நிறுத்தங்களை நடத்துகிறபொழுது அதை வெற்றி பெறச் செய்வதற்காகச் சர்க்கார் தொழிலாளர்களின் பக்கம் நின்று வெற்றியடைந்த சரித்திரத்தினுடைய எக்சாம்பிள்தான் அது. (மணியடிக்கப்பெற்றது) இம்பார்ட்டன்ட் பாயிண்டுகளுக்கு நான் ரிப்ளை செய்ய வேண்டுமல்லவா ? இது சாதாரண டிஸ்கஷன் இல்லை. நான் சென்ஷூர் மோஷனைக் கொண்டு வந்திருக்கிறேன்.

I am the mover of the censure motion.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினரவர்கள் நிறைய உதாரணங்கள் கொடுத்திருக்கிறார்கள் ; நிறையப் பேசியிருக்கிறார்கள் ; நிறையச் சான்றுகளைக் காட்டியிருக்கிறார்கள். அதை நான் இல்லை என்று சொல்லவில்லை. என்றாலும் இதற்கு ஒரு எல்லை, ஒரு முடிவு வர வேண்டும் அல்லவா ?

திரு. ரா. உமாநாத் : நான் முடிவு செய்கிறேன், எனக்குத் தெரியாதா இன்றைக்கு முடிக்க வேண்டுமென்பது ? 3, 4 மேஜர் பாயிண்ட்ஸ் இருப்பதால்தான் சொல்கிறேன்.

இதே மாதிரி பல ஸ்ட்ரைக்ஸ் நடந்தன. அவைகளைப்பற்றியெல்லாம் நான் பேசப் போவதில்லை. ஒரு சேம்பிள்தான் சொன்னேன். இந்த முறையிலேதான் அங்கே நடந்தது.

இங்கு அப்படியா நீங்கள் செய்கிறீர்கள் ? இல்லை. டி.வி.எஸ். முதலாளி நடந்து கொண்ட முறையின்பொழுது தொழிலாளர்களிடம் லேபர் மினிஸ்டர் போய்ப் பேசி நாங்கள் உங்கள் பக்கம் நிற்கிறோம் என்று சொல்லவில்லை. போலீசை வாபஸ் பெற்றீரா ? குண்டர்களைக் கைது செய்தீரா ? பதிலாக, முதலாளிகளுக்குப் போலீஸ் ; குண்டர்களுக்குப் பாதுகாப்பு ; தொழிலாளிகளுக்கு 307 செக்ஷன். டி.ஐ. சைக்கிள்ஸ், பஞ்சாலையிலே லத்தி சார்ஜ். இதுதான் நடக்கிறது.

ஆகவே, முதலமைச்சரிடம் நான் கேட்க விரும்புவது என்னவென்றால், மேற்கு வங்காளத்தில் நடந்திருக்கக்கூடிய அந்த வேலைநிறுத்தங்களிலே ஒரு தொழிலாளியாவது கைது செய்யப்பட்டிருக்கிறாரா ?

Can you cite one single arrest? No, you cannot.

144 போலீஸ் சட்டம் போடப்படவில்லை. இந்த நிலைமைகளை எடுத்து அந்த ஸ்ட்ரைக்கை முடித்ததாலேதான் பிறகு என்ன நல்ல நிலைமை ஏற்பட்டது என்று சொன்னால் எஞ்சினியரிங்





முதலாளிகளும் பஞ்சாலைமுதலாளிகளும் அமைச்சரிடம் ஸ்ட்ரைக்குக்கு முன்னாலே ஓடோடி வந்து நீங்கள் முடித்துக்கொடுங்கள் என்று சொன்னார்கள். That is the way we are dealing we, என்று சொன்னால் நாங்கள் ஏதோ தவறு செய்யாதவர்கள் என்று சொல்லவில்லை. ஒரு democratic way யிலே டீல் செய்ய வேண்டும் ; ஜனநாயக முறையில் செய்ய வேண்டுமென்பதற்காகத்தான் நான் இதைச் சொல்ல விரும்புகிறேன்.

இங்கே இது மட்டுமல்ல ; நேர்மாறாக, தொழிலாளர்களுடைய உறுதியைக் கண்டு, ஓய்ந்து போன சில சந்தர்ப்பங்களில் சமரசம் செய்ய முன்வருகிறபோது நம்முடைய அரசிலிருந்து தடுக்கப்பட்ட சம்பவங்களும் உண்டு. டி.சி.எல். முன்முயற்சி எடுத்தார் பார்த்தீர்களா நீங்கள் சொன்னதற்கு மாறாக என்று சொல்கிறார்கள். சில டி.சி.எல். முன்முயற்சி எடுக்காதே என்று மேலேயிருந்து தடுக்கப்பட்டது உண்டு.

இந்த செராமிக்ஸிலே 110, 112 நாட்கள் ஆயிற்றே. நான் கேட்கிறேன். மாண்புமிகு முதல்வரவர்கள் இருக்கிறார்கள், தொழிலாளர் நல அமைச்சரவர்கள் இருக்கிறார்கள். நீங்கள் தலையிட்டு, மாநிலத்திலே இருக்கின்ற நிலைமைக்கேற்ப, சரி 20 சதவீதம் போனஸுக்கு மேலே இவ்வளவு கொடு என்று நீங்கள் தலையிட்டுச் சொன்னாலும்—52½ சதவீதம் சர்க்கார் பணம் இருக்கிற தொழில் மறுக்கவா போகிறது ? முடியுமா அவர்களாலே ? ஆகவேதான் நான் சொல்ல விரும்புகிறேன். ஜனநாயக முறையில் இங்கே நடத்த வேண்டுமென்பதற்காக நான் சொல்கிறேன். ஆகவே, மேற்கு வங்காளத்திலே போராட்டம் நீடிப்பதற்கும், இந்த ஆட்சியில் போராட்டங்கள் நீடிப்பதற்கும் சமமாக இருக்காது. மேற்கு வங்காளத்தில் நீடித்த போராட்டங்கள் பிரம்மாண்டமான வெற்றியில் முடிகிறது. இங்கே கண்ணீரும் கம்பலையும் அல்லது பகுதி வெற்றி அல்லது தோல்வியில் முடிகிறது என்று நான் சொல்ல விரும்புகிறேன்.

மூன்றாவது பாயின்ட் என்னவென்றால், மின்சாரத் தொழிலிலே மேற்கு வங்காளத்திலே, நீங்கள் எப்படி முக்கியமான, ஒரு கேந்திரமான தொழில் என்ற முறையில் டீல் பண்ணுகிறீர்களோ, ஜோதிபாசு அதே முறையிலேதான் நாங்களும் டீல் பண்ணுகிறோம் என்று சொல்கிறார். மேற்கு வங்க முதல்வரவர்கள் எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்து, ..பர்மாக டீல் பண்ண வேண்டுமென்று அந்தக் கொட்டேஷனைப் படித்தார். எந்த கொட்டேஷன் என்பது எனக்குத் தெரியவில்லை. அதை நான் கட்டாயமாகப் பார்த்து அது என்ன கொட்டேஷன் என்று பார்க்கிறேன்.

ஆனால் மின்சாரத் துறையை ஜோதிபாசு அவர்கள் எப்படி டீல் பண்ணினார் என்பது எனக்குத் தெரியும். இங்கே தூத்துக்குடியிலே வேகன்சீஸ் வந்தபோது காண்ட்ராக்ட் லேபருக்கு — அங்கிருக்கக்கூடிய காண்டிராக்ட் லேபருக்கு முதன்மை கொடுக்க வேண்டும் என்று அங்கே போராட்டம் நடத்தப்பட்டது; அது மறுக்கப்பட்டது.

[பிற்பகல் 12-20]

இங்கே போன வாரம் கேள்வி வந்தது; அது மறுக்கப்பட்டது. இப்பொழுதும் மறுக்கப்படுகிறது. ஆனால், ஜோதிபாசு, இதே மின்சாரத் துறையிலே, அவர் சொன்ன ஒரு கொட்டேஷன் — அந்த கொட்டேஷன் அமைச்சருக்குக் கிடைக்கவில்லை போலிருக்கிறது — ''ஆள் குறைப்பு செய்யப்பட்ட காண்ட்ராக்ட் தொழிலாளர்களின் நிலைமையை அரசு பரிசீலித்தது. மாநில மின் வாரியத்திலுள்ள வேக்கன்ஸிகளில் ஆள் குறைப்பு செய்யப்பட்ட காண்ட்ராக்ட் தொழிலாளிகளுக்கு 20 சதவீதம் வேக்கன்ஸி ஒதுக்கீடு செய்கிறேன்'' — இது அவருடைய பொசிஷன். அவர் சொன்னார் என்றால், தனிப்பட்ட நபர் அல்ல. அந்த கவர்ன்மென்டினுடைய அப்ரோச் — அதிலே ஜஸ்டிஸ் இருக்கிறது. இங்கே காடம்பாறை மின் திட்டத்தைக் காட்ட வேண்டாமா என்று அமைச்சர் கேட்டு, செய்த கொடுமைகளைப் பொறுத்தவரையிலும், அவர் பதில் சொல்லவில்லையென்றாலும், அது நியாயப்படுத்துவதாக ஆகாது. இதற்குப் அவர் ஜோதிபாசுவை சாட்சியமாக கூப்பிட்டார். ஃபார்மாக டீல் பண்ண வேண்டுமென்று சொல்கிற மாதிரிதான் என்று சாட்சியமாகக் குறிப்பிட்டார். ஆனால், நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். நமது அமைச்சருடைய அந்தக் கொட்டேஷனில் கூட; அந்த சாந்தினந்தா மின் நிலையத்தில் ஒரு நக்சலைட் யூனியன் இருக்கிறது, நீண்டகாலமாக இருக்கிறது. அவர்கள் அடிக்கடி அங்கே நாச வேலை செய்தார்கள். ஏனென்றால், அவர்களுக்கும், எங்களுககும் பிடிக்காது. இருந்தும் ஜோதிபாசு ஆக்ஷன் எடுக்கவில்லை. நான் நக்சலைட் யூனியன் என்று எதற்காகச் சொன்னேன் என்றால், அங்கே அவர்களை டிஸ்மிஸ் செய்தாவது நடத்த வேண்டுமென்று அவர் நினைக்கவில்லை. டிஸ்மிஸ் பண்ணவில்லை அவர்களை, நக்சலைட் யூனியனைச் சேர்ந்தவர்கள் என்று தெரிந்தும். சாபட்டேஜ் செய்கிறார்கள் என்று தெரியும், ஏனென்றால், பிரேக் டவுன் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆக்ஷன் எடுக்கவில்லை. அதற்குப் பதிலாக, கேந்திரமான இடத்திலே, சி.ஐ.டி.யூ. டெக்னிஷியன்களை, அபிஷியல்லைப் போட்டு, அவர்களைக் கவனிக்கச் சொல்லி, நிறுத்தினார்கள். நிறுத்தி, கடைசியிலே, கையும், களவுமாக, 4 பேர்கள், செய்கின்ற நேரத்திலே, பிடிக்கப்பட்டார்கள். இங்கே, அப்படி ஆளைக் கையும களவுமாகப் பிடித்தால்,





டிஸ்மிஸ் மட்டும் அல்ல, என்ன நடக்கும் என்று சொல்ல முடியுமா? ஆனால், கையுங்களவுமாகப் பிடித்த பிறகுங்கூட, அந்த 4 பேர்களை டிஸ்மிஸ் செய்ய வில்லை, சஸ்பென்ட் செய்யவில்லை. They were transferred. அந்த 'கீ' பொசிஷனில் இப்படி கண்டுபிடித்த பிறகு, அவர்களை வேறு இடத்திற்கு டிரான்ஸ்பர் செய்தார். டிரான்ஸ்பரை எதிர்த்து ஸ்ட்ரைக் பண்ணினார்கள். யாரையும் அரெஸ்ட் பண்ணவில்லை. சீப் மினிஸ்டர் ஜோதிபாசு நேராக அந்த இடத்திற்குப் போனார்கள், ஏனென்றால், கேந்திரமான இடமாயிற்றே. போய், தொழிலாளர்களிடத்திலே அவர்கள் கூட்டத்திலே, பகிரங்கமாக, ஏன் இது நடந்தது? ஏன் செய்தோம், என்று கன்வின்ஸ் பண்ணினார்கள். ஆகவே, கால் கொடுத்த ஸ்ட்ரைக் நடைபெறவில்லை. ஆகவே, அப்படித்தான் அங்கேயிருக்கிறது. ஆனால், அமைச்சரை நான் கேட்கிறேன், அதே போன்ற மின்சாரத் துறையில், காடம்பாறையில் ஸ்ட்ரைக் பண்ணவில்லை. I am asserting முதலமைச்சரிடம் நான் தயவுசெய்து சொல்ல விரும்புகிறேன், தொழிலாளிகள் அங்கே வேலை நிறுத்தம் செய்யவில்லை, நாச வேலை செய்யவில்லை, வன்முறையில் ஈடுபடவில்லை. லேபர் அதிகாரியினுடைய யோசனையை ஏற்றுக்கொண்டார்கள். அது அந்த சப் காண்ட்ராக்டருக்குப் பிடிக்கவில்லையென்பதால், அந்த லேபர் அதிகாரியினுடைய யோசனையை கேட்கிற அந்த 300 பேரையும் கம்ப்ளீட்டாக டிரான்ஸ்பர் பண்ணினார்கள். ஜோதிபாசுவும் டிரான்ஸ்பர் பண்ணினார்கள். இங்கே 300 பேர்களை டிரான்ஸ்பர் பண்ணினார்கள். அங்கே டிரான்ஸ்பர் பண்ணியது வேறு மின்சாரத் திட்டத்திற்கு. இங்கே காடம்பாறை மின் திட்டத்திலேயிருந்து கோயம்புத்தூர் சென்ட்ரல் ஜெயிலுக்கு டிரான்ஸ்பர் பண்ணினார்கள். அதுதான் diffe enc அங்கே, லேபர் அதிகாரியினுடைய யோசனையை மறுத்தால், the Gove nm nt stards by the w rking class தொழிலாளிகள் பக்கம் நிற்கிறது. இங்கே அந்த லேபர் அதிகாரியுடைய யோசனையை மறுத்த சப்–காண்ட்ராக்டருக்கு போலீஸ் பாதுகாப்பு. பஞ்சாபிலிருந்து வந்த கருங்காலிகளுக்கு போலிஸ் பாதுகாப்பு. இதுதான் வெஸ்ட் பெங்கால் முறையா? அமைச்சர் கோட் செய்தாரே Even n w நான் கேட்கிறேன். ஜாய்ன்ட் கமிஷனர் கொடுத்த அநத ஆலோசனையின் பேரிலே, அந்தத் தொழிலாளர்களைத் திரும்ப வேலைக்கு எடுத்துக்கொள்ளத் தயாரா? அவர்கள் வருவதற்குத் தயாராக இருக்கிறார்கள.

அமைச்சர் கொண்டு வந்த ஒரு மசோதாவை நாங்கள் நிராகரித்ததாகக் குறைப்பட்டார்கள. அதாவது, கம்பல்சரி ஆர்பிட்–ரேஷன், அதிலே ரொம்ப தூரம் போகவில்லை. ஏனென்றால்: நங்கள் நேரமாயிற்று என்று சொன்னதால் நான் அந்த பாய்ன்ட்டை ஸ்கிப் பண்ணி, கடைசி விஷயத்திற்கு வருகிறேன்.

[திரு. ரா. உமாநாத்] [1981 பிப்ரவரி 12

மேற்கு வங்காளத்தை இவ்வளவு கோட் பண்ணக்கூடிய அமைச்சரிடம் நான் ஒன்று கேட்க விரும்புகிறேன். 6 ஆண்டுகளுக்கு முன்னாலே, 1977-லே அதிகாரத்திற்கு வருவதற்கு முன்னாலே, டிஸ்மிஸ் செய்யப்பட்ட என்.ஜி.ஓ.க்களை, 6 ஆண்டுகளுக்கு முன்னால, Full back wages கொடுத்து, திரும்ப எடுத்துக்கொண்டு விட்டார்கள். அந்த என்.ஜி.ஓஸ். சங்கம் ஆர்டினரி டிரேட் யூனியன் ஆக்டிலே, டிரேட் யூனியன் என்று வைத்தார்களே, அப்படியானால், ஸ்டிரைக் உரிமை, ஐ.டி. ஆக்ட் உட்பட கொடுத்தாயிற்று. அவர்களுக்கு அரசியல் உரிமைகளும் இப்போது கொடுக்கப்பட்டது. ஆனால், மேற்கு வங்காளத்தை கோட் பண்ணுகிற அமைச்சரை நான் கேட்கிறேன், அப்படித்தான் நீங்கள் நடத்துகிறீர்களா? கருவூல ஊழியர்கள் ஸ்டிரைக் செய்ததற்கு நீங்கள் சம்பளம் பிடித்து விட்டீர்கள். சப்சிஸ்டன்ஸ் அலவன்ஸ் பிடிக்கக்கூடாது, வேலைக்கு வந்தால். அதையும், இப்பொழுது சம்பளத்தில் பிடித்து விட்டீர்கள். சஸ்பென்ஷன் காலத்திலே சப்சிஸ்டன்ஸ் அலவன்ஸ் கொடுத்தார்களே, அதையும் இப்பொழுது சம்பளத்திலே பிடித்திருக்கிறார்கள். வேலூரிலே எந்தக் குற்றத்திற்காக சஸ்பெண்ட் பண்ணினார்களோ கருவூல ஊழியர்களை, அதே குற்றத்திற்காக கேசும் போடப்பட்டிருக்கிறது. கேசிலே 25 பேர்கள் விடுதலை ஆனார்கள். வேலைக்கு வந்தால், கேசிலே விடுதலை ஆனாலும்கூட, மன்னிப்புக் கேட்டால்தான் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று சொன்னார்கள்.

அந்த மாதிரி அவர்களைக் கசக்கி நசுக்கக் கூடிய ஒரு ஆட்டிட்யூட் இருக்கிறது.

அடுத்து கேரளா போலீஸ் பற்றியது, கேரளா அரசைப் பற்றியது, அமைச்சர் அவர்கள் கோட் பண்ணினார்கள். கேரளாவைப் பற்றி நாங்கள் யாரும் சொல்லவில்லை. கேரளா என்பது தொழிலாளர்கள் மிகவும் ஒடுக்கப்படுகிற போது, அவர்களுக்கு வேலையில் ஏற்படுகிற எபோஷனில் அப்செட்டில் கேரளா நடக்கும். இன்றைக்கு இருக்கும் சட்டத்திலே அதற்கு தடை 'ரெஸ்ட்ரெய்ன்' பண்ணுவது என்று அர்த்தம். சட்டத்தின் படி அது தப்புத் தான். இன்றைக்கு 'பிக்கெட்டிங்' இல்லையா? அமைதியான மறியல்.

அமைச்சர் அவர்கள் படித்த இன்னொரு போர்ஷன். அதை நீங்கள் அமல் படுத்த தயாரா என்பது தான் என்னுடைய கேள்வி. "தொழில் சச்சரவில் போலீஸ் தலையீடுகூடாது" மாண்புமிகு அமைச்சர் அவர்கள் படித்தது தான். ஸ்ட்ரைக்கின் பேரால் வன்முறை நடந்தால் நடவடிக்கை எடுக்க வேண்டும் அந்த இரண்டு அம்சத்தையும் படித்தார்கள். தொழில் சச்சரவில் போலீஸ் தலையீடு கூடாதென்று சொன்னால், ஸ்டிரைக்குக்கு முன்னாலோ, அல்லது ஸ்ட்ரைக்கின் போதோ போலீஸை அழைப்பக்கூடாது என்று அர்த்தம். அது மாத்திரமல்ல, அது ... விடுதன்'.

1981 பிப்ரவரி 12] [திரு. ரா. உமாநாத்]

தொழிலாளர்கள் சட்டத்தில் தலையீடு இல்லை. பொய் கேஸ்கள் போடப்படுவதில்லை. கருங்காலிகளை எஸ்கார்ட் பண்ணுவதில்லை போலீஸ். குண்டர்களுக்கு போலீஸ் பாதுகாப்பு கொடுக்க மாட்டார்கள். பினிஷ்ட் கூட்லை கொண்டு போய், வேலையை முடிக்க போலீஸ் பாதுகாப்பு கொடுக்கமாட்டார்கள். வயலென்ஸ் ஏற்பட்டால், அந்தக் குறிப்பிட்ட நபர்கள் மீது மாத்திரம் நடவடிக்கை எடுப்பார்கள். வயலென்ஸ் பேரால் போலீஸ் நடத்துகிற அராஜகத்திற்கு அங்கே இடம் கொடுப்பதில்லை. you are differently dealing. இது தான் அதனுடைய அர்த்தம்.

(பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு முதல்வர் அவர்கள் இருப்பதால் நான் மீண்டும் பணிவாக கேட்டுக் கொள்கிறேன். சட்டக்கூலி போராட்டம். நீங்கள் நிர்ணயித்த சட்டக்கூலியை அரியலூர் தாலுகாவிலே நிலப்பிரபுக்கள் கொடுப்பதில்லை. மறுக்கிறார்கள். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு. எஸ். டி. எஸ். அவர்கள் டி. ஆர். ஓ வை வைத்து பேச்சுவார்த்தை நடத்தச் சொன்னார்கள். அது இன்னும் நடக்கவில்லை. எல்லாக் கட்சிக்காரர்களுக்கும் லாரியிலே போவதற்கு உரிமை உண்டு. இங்கே போட்ட சட்டத்திற்கு ஆதரவாக அரியலூர் மக்களை திரட்டுவதற்காக லாரியிலே, மூன்று லாரிகளிலே போனார்கள். அந்த விவசாயத் தொழிலாளர்களை போலீஸ் தடை செய்து, லாரி டிரைவரையும், கிளீனரையும் கைது செய்தார்கள். இவ்வாறு செய்தது சரிதானா என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆனால், 13ஆம் தேதி டி. ஆர். ஓ. அவர்கள் பேச்சு வார்த்தை நடத்துவதாக இருக்கும்போது, அதற்குள்ளாக அறுவடை செய்வதற்கு டிராக்டரிலே ஆட்களை நிலபிரபுக்கள் கொண்டு வருகிறார்கள். அவர்கள் அனுமதிக்கப்படுகிறார்கள். சட்டத்தை மீறுவதற்கு ஏராளமான ஆட்கள் கொண்டு வருகிறார்கள். போலீஸ் டிராக்டரை அனுமதித்திருக்கிறார்கள். ஆகவே இதில் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன். போலீஸ் கொள்கை மேற்கு வங்காளத்திலும் சரி, கேரளத்திலும் சரி முறையாக அமல் நடத்தப்படுகிறது. அந்த போலீஸ் கொள்கையை நீங்கள் படித்திருக்கிற முறையிலே அமல் நடத்துவீர்கள் என்று சொன்னால் நாங்கள் வரவேற்போம். மகிழ்ச்சியடைவதிலே நாங்கள் தான் முதலில் இருப்போம் என்று கூறிக்கொள்கிறோம்.

தொழிலாளர் விரோதக் கொள்கை தீர்மானத்தின் மீது, அமைச்சர் அவர்களுடைய பதிலிலிருந்து முழுக்க முழுக்க நியாயப் படுத்துகிறார் என்பதுதான் எங்களுடைய கருத்து. இனியும் தமிழக தொழிலாளர்கள் தாக்குதல்களை சந்திக்க வேண்டியிருக்குமென்று அவர்கள் பேசியதிலிருந்து புரிந்து கொள்கிறோம்.

[திரு. ரா. உமாநாத்] [1981 பிப்ரவரி 12

[பிற்பகல் 12.30]

தமிழகத்தில் தொழிலாளர்களை ஒடுக்க மீண்டும் மேலும் வரக்கூடிய தாக்குதல்களை நாங்கள் சந்திப்போம். நான் பெரிய சவால் விடவில்லை. இதைத் தவிர தொழிலாளி வர்க்கத்திற்கு வேறு ஒன்றும் வழி இல்லை. தேவைப்படும்போது வேலை நிறுத்தம் செய்வோம். என்ன சட்டம் இருந்தாலும் வேலை நிறுத்தம் செய்வோம். ஆனால், அதற்கு பெரிய விலை கொடுக்க வேண்டியிருக்கும் என்று நாங்கள் உணர்கிறோம். இந்த முறையில் தொடர்ந்து சட்டங்கள் நிறைவேற்றப்படுமானால் வேலை நிறுத்தப் போராட்டம் நடத்துவது என்று சொன்னால், வொர்க்கிங் கிளாஸ் அதற்கு பெரிய விலைகொடுக்க வேண்டியிருக்கும். அந்த விலையை அளிக்க நாங்கள் தயாராக இருக்கிறோம். சிறை என்றால் சிறை செல்வோம். போலீசுக்கு அடி பணியமாட்டோம். ஒன்றுபட்டு நிற்போம். தொழிலாளர் வர்க்கம் தன்னுடைய உரிமையைப் பாதுகாக்க நிச்சயம் போராடும். மத்திய நிதி அமைச்சர் சொல்லியிருக்கிறார்கள். H reafter ycu w ll h ve to le in to l ve w th short ges n future. பொருள்கள் தட்டுப்பாடும், அதனால் விலை உயர்வு என்பதும் எதிர்காலத்தில் தவிர்க்கமுடியாதது. அதோடு ஒத்து வாழ்வதற்கு (குறுக்கீடு, ஜனங்கள் பழகிக் கொள்ள வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஒத்து வாழ்வதற்கு தொழிலாளி வர்க்கம், உழைப்பாளி மக்கள் தயாராக இல்லை. அதைத் தவிர்க்கும் கடமை மத்திய அரசாங்கத்திற்கு இருக்கிறது. விநியோகிக்கும் பொறுப்பு மாநில அரசாங்கத்திற்கு இருக்கிறது. அந்தக் கஷ்டத்தைத் தாங்க தொழிலாளர்கள் தயாராக இல்லை. அவர்களுடைய ரைட்சுக்காக நிச்சயம் பாடுபடும். ஹை பிரைஸ் கொடுக்க வேண்டியிருந்தாலும் கொடுக்கும் என்று சொல்லி, தீர்மானத்தை வலியுறுத்துகிறேன்

திரு. க. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் (உமாநாத் அவர்கள் பேசும்போது விவசாயத் தொழிலாளர்களுக்கு புரட்சித் தலைவர் அரசு நியாய வாரச் சட்டம் கொண்டு வந்திருந்தும் ... அமல் நடத்தவில்லை என்று சுட்டிக் காட்டினார்கள். ஆனால், அந்த நியாய வாரச் சட்டத்தின் மூலம் கூலி கொடுக்க வேண்டியவர்கள் இப்போது இருக்கின்ற விவசாய சங்கத்தைச் சேர்ந்தவர்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ... ர்களா என்பதையும், அந்தக் கூலி கொடுக்காமல் இருக்கின்ற விவசாய சங்கத்தினரை வற்புறுத்த புரட்சித் தலைவர் அவர்கள் சட்டம் கொண்டு வந்தால், அதை ஆதரிப்பார்களா என்றும் அறிய விரும்புகிறேன்.



1981 பிப்ரவரி 12]

திரு. என். சங்கரய்யா: விவசாயத் தொழிலாளர்களுக்கு கூலி கொடுக்க மறுக்கக்கூடிய அனைவர் மீதும் கடுமையாக நட-வடிக்கை எடுக்க வேண்டும் என்பது தான் எங்களுடைய விருப்பம். விவசாயிகளுடைய ஜனநாயக உரிமைகள் பறிக்கப்படக்கூடாது என்றும் நாங்கள் சொல்கிறோம். ஆகவே, இரண்டும் தனித் தனியான விஷயங்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை;)

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலை வர் அவர்களே, எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப் பினர் திரு. உமாநாத் அவர்கள் பி. அண்டு சி. ஆலையில் நடக்கக் கூடிய நிலைமையைப் பற்றி எடுத்துக் கூறி, அந்த ஆலையைத் அரசே ஏற்று நடத்தவேண்டும் என்று 5—12—1980-லே தமிழ் எழுதி இருக்கிறார். அதற்குப் பின்னால் ''பாலோ அப் ஆக் ஷன்'' என்ன செய்தார்? மேற்கு வங்க அரசாங்கம் போல் இருந்து இருந்தால் ''பந்த் செய்வோம்'' என்று சொன்னார்கள். மேற்கு வங்கத்தையும், கேரள அரசாங்கத்தையும் இங்கே எடுத் துப் பேச வேண்டிய நிலைக்குக் கொண்டு வந்ததே, நீங்கள் பேசியபோது எடுத்துச் சொன்னதால் தான். அதற்கு பதில் அளிக்கின்ற வகையில்சொன்னேன். மேற்கு வங்கத்தில் செய்கிற பந்த் அவர்கள் கொள்கைப்படி. செய்வது. அந்த முறையில் இங்கே அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் செய்ய முடியாது என்பதை நான் சொல்லிக் கொள்கின்றேன். கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கை வேறு. எங்களுக்குப் பேரறிஞர் அண்ணா அவர்கள் வகுத்துக் கொடுத்த கொள்கைப்படிதான் நடக்கத் தெரியும். ''வி பிலீவ் இன் பேலட்ஸ் அண்ட் நாட் ** ** இன் புல்லட்ஸ்''

திரு. என். சங்கரய்யா: ** ** என்று சொல்லியிருக் கிறார்கள். ** **

அந்த வார்த்தையை நீக்கவேண்டும்.

(திரு. சோ. அழகர்சாமி எழுந்தார்)

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: நான் அண்ணா அவர்கள் சொன்னார்கள் என்று சொல்லியிருக்கிறேன். * *

We b li v n ballots, but we dc not believ in bullets.

(குறுக்கீடுகள்.)

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, ஒரு அமைச்சரானாலும் சரி, ஒரு உறுப்பினரானாலும் சரி, தங்களுடைய கொள்கை என்ன என்று சொல்ல உரிமை

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

இருக்கின்றது என்பதை திரு. சங்கரய்யா அவர்கள் ஒத்துக் கொண்டார்கள். ** பொதுவாக எங்களுக்கு ஜனநாயகத்திலே நம்பிக்கை இருக்கிறது என்று சொல்லியிருந்தால் பிரச்சனை இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ** என்ற வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட உத்தரவிடுகிறேன்.

டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, தங்களுக்கு உதவிகரமாக நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். ** ஆகவே, எடுப்பதாக இருந்தால் அமைச்சர் இராகவானந்தம் அவர்கள் சொன்னதையும், அதற்கு சங்கரய்யா அவர்கள் சொன்ன பதிலையும் எடுத்துவிட வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் எதை எதை எடுப்பது என்று அவைக் குறிப்பைப் பார்த்து நீக்கிவிடுகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: ஒரு அரசு பின்பற்றுகிற கொள்கையை எங்கள் அரசும் பின்பற்ற வேண்டிய அவசியம் இல்லை; அதை எங்கள் அரசு செய்யாது. எங்களுக்கு என்று ஒரு கொள்கை இருக்கின்றது. பந்த் செய்து தான் மத்திய அரசிடம் காரியத்தை சாதித்துக் கொள்ள வேண்டுமென்ற நிலை எங்களுக்கு இல்லை. எங்கள் புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்கள் அணுகு முறையில், மத்திய அரசை அணுகவேண்டிய முறைப்படி அணுகி, பெறவேண்டியதை உரிய நேரத்தில் பெறுவார். எங்களுக்கு அதிலே நம்பிக்கை இருக்கிறது.

'' பி. அண்ட் சி. பற்றி கடிதம் எழுதினீர்களா, யாருக்கு எழுதினீர்கள் என்று கேட்டார்கள். கடிதம் எழுதியிருக்கிறோம் என்று சொன்னோம். வலியுறுத்தினீர்களா என்று கேட்டார்கள்; வலியுறுத்தியிருக்கிறோம். அதை சட்டமன்றத்தில் சொல்ல வேண்டிய நிர்ப்பந்தம் வரும்போது இங்கேயும் சொல்கிறோமே தவிர நாங்கள் மத்திய அரசுக்கு எழுதிவிட்டு, அதை மூடி மறைக்கவில்லை. அதைத்தான் சொல்கிறேன்.

தனியார் நிறுவனங்கள் பற்றிச் சொன்னார்கள். ஒருவர் வேலை நிறுத்தம் செய்தபோது மற்றவர் வேலைக்குச் சென்றால், அது கருங்காலித்தனம். அது ட்ரேடு யூனியன் பார்லன்சில் உள்ள வார்த்தை அப்படி என்றால் கோயம்புத்தூர் டெக்ஸ்மோவில் திராவிட முன்னேற்றக் கழகம், ஜனதா, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்—இந்த மூன்று சங்கங்களும் வேலை நிறுத்தம் செய்தபோது, போராட்டம் நடத்தும்போது சி.ஐ.டி.யு.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



மட்டும் வேலை செய்ததே; அதை கருங்காலித்தனம் என்று சொல்கிறீர்களா? அதைத்தான் நான் இந்த நேரத்தில் கேட்க விரும்புகிறேன். (குறுக்கீடுகள்) நான் பேசும்போது நீங்கள் ஏன் தலையிடுகிறீர்கள்? நீங்கள் பேசும்போது நான் குறுக்கிட்டேனா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கோயம்புத்தூர் என்று சொன்னவுடன் நீங்கள் இப்படி எழும்பக் கூடாது. நீங்கள் ஒன்றைச் சொன்னீர்கள்; அதற்குப் பதில் சொன்னார்கள், தயவு செய்து எல்லோரும் உட்காருங்கள்.

திரு. என். சங்கரய்யா: அவர் கோயம்புத்தூரில் சி. ஐ. டி. யு. செய்தது பற்றி குற்றஞ்சாட்டுகிறார். அது உண்மையா இல்லையா என்று சொல்வதற்கு எங்களுக்கு உரிமை இருக்கிறது இல்லையா?

திரு. கு. ரமணி: தலைவரவர்களே, கோயம்புத்தூர் டெக்ஸ்மோ நிறுவனத்தில் 3 சங்கங்கள் போராட்டம் நடத்திய போது சி. ஐ. டி. யு. தொழிலாளர்கள் வேலைக்குச் சென்றது கருங்காலித்தனம் அல்லவா என்று அமைச்சர் கேட்கிறார். கருங்காலித்தனம் என்று சொல்லிவிட்டார் என்று கூட நான் சொல்லவில்லை; கருங்காலித்தனம் என்று சொல்லலாம் அல்லவா என்று கேட்கிறார். உண்மையான விவரம் அதுவல்ல. அங்கே இருக்கின்ற 630 தொழிலாளர்களில் 70 பேர்களைத் தவிர பாக்கி இருக்கின்ற தொழிலாளர்கள் ஸ்டிரைக் நோட்டீஸ் கொடுக்கவில்லை; ஸ்டிரைக் செய்யவில்லை: வேலை செய்தார்கள். அவர்களை புறக்கணிக்க வேண்டுமென்று மற்றவர்கள் முயற்சி செய்தார்கள். ஆனால் அது நடக்கவில்லை. 70 பேர்கள்தான் தொடர்ந்து வேலை நிறுத்தம் செய்தார்கள்; மற்றவர்கள் எல்லாம் வேலை செய்தார்கள். அதுதான் உண்மை. அமைச்சர் சொல்வது உண்மை அல்ல என்பதை தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12·40)

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு வேலை நிறுத்தம் செய்யும்போது செய்கிறவர்களுக்குச் சரி என்று பட்டால் செய்கிறார்கள். அவ்வாறு சரி என்று படாதவர்கள் வேலைக்குப் போகிறார்கள். இந்தத் தத்துவத்தைத் தமிழகத்திலே சி. ஐ. டி. யு. இனிமேல் ஏற்றுக் கொள்ளும் என்பதுகுறித்து மகிழ்ச்சி தெரிவிக்கிறேன். எந்தத் தொழிற்சாலையாக இருந்தாலும் வேலை நிறுத்தம் செய்கிறவர்கள் செய்வார்கள். வேலைக்குப் போகிறவர்கள் வேலைக்குப் போவார்கள். வேலைக்குப் போகிறவர்கள் வேலை நிறுத்தம் செய்பவர்களை தடுக்க மாட்டார்கள்.

I am thankful for the assuranee given by Mr. Ramani.

[1981 பிட்ரவரி 12

திரு. என். சங்கரய்யா : தலைவரவர்களே, அந்தத் தொழிற் ாலையின் மிகப் பெரும்பான்மையோராக உள்ளவர்கள் வேலை சய்து கொண்டிருந்தார்கள். அங்கு வேலை நிறுத்தமே நடை பறவில்லை. ஆகவே, அதிலே பிரச்சினை எங்கே வருகிறது ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே வலை நிறுத்தம் செய்பவர்களுக்கு கோரிக்கை இருக்கின்றது. செய்கிறார்கள். கோரிக்கை இல்லாதவர்கள் உள்ளே இருக்கி றார்கள், இப்படியே எல்லோரும் சொன்னால் கருங்காலித்தனம் என்ற வார்த்தையே இனி இருக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். சங்கரய்யா : தலைவரவர்களே, 60 சதவீதம் தொழிலாளர்கள் வாக்கெடுப்பிலே சம்பந்தப்பட வேண்டும் என்று இவரே சொல்லி இருக்கிறார்கள். ஆனால் திரு. ரமணி அவர்கள் கொடுத்திருக்கின்ற புள்ளி விவரப்படி 70 தொழிலாளர்களைத் தவிர பாக்கி பூராபேரும் வேலை நிறுத்த நோட்டீஸ் கொடுக்கா மல் வேலை செய்தார்கள். எனவே, என்ன கருங்காலித்தனம் என்ற பிரச்சினை வருகிறது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே இனிமேல் பெருவாரியானவர்கள் வேலை செய்தால் சிறுபான்மை யோராக இருப்பவர்கள் அதை ஏற்றுக் கொள்ள வேண்டும். அது தான் நியாயம் என்று திரு. சங்கரய்யா சொன்னதற்காக நான் ஏற்றுக் கொள்கிறேன்.

திரு. என். சங்கரய்யா : தலைவரவர்களே, அந்தத் தொழி லைப் பொறுத்த வரையில் வேலை நிறுத்தம் நடைபெறவில்லை. மாறாக 70 தொழிலாளர்கள் வேலை செய்த மற்றவர்களைத் தடுத்து இருக்கிறார்கள். அந்தத் தொழிலாளர்கள் வேலை நிறுத்த நோட்டீஸ் கொடுக்கவில்லை. ஆகவே, வேலை நிறுத்தத் தில் ஈடுபடவில்லை. பின்பு எதற்காக கருங்காலித்தனம் என்ற பிரச்சினை வருகிறது ? இவ்வளவு தூரம் கருங்காலித்தனம் பற்றி அக்கறை காட்டக்கூடிய மாண்புமிகு அமைச்சரவர்கள் தமிழகத்திலே ஏற்பட்ட பல சம்பவங்களிலே நாங்கள் எடுத்துக் கூறியதற்குப் பிறகும் பெரும்பான்மைத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தபோது சிறுபான்மை தொழிலாளர்கள்.....

HON. THIRU. S. RAGHAVANANDAM: W.en your sho[illegible] you are getting hot. (Interruption) I am always soft.



1981 பிப்ரவரி 12]

*திரு. என். சங்கரய்யா : தலைவரவர்களே, சிரித்துக் கொண்டே பேச முடியும்........(குறுக்கீடு) எங்களுக்குக் கவலை இல்லை.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே மூதறிஞர் அவர்கள் சொன்னதை....(குறுக்கீடு)....மூதறிஞர் அவர்கள் பேரறிஞர் அவர்களிடம் சொன்னதை நான் சொல்கி றேன்.

"Keep the Secretariat carridor clear of your partymen. I failed because, I did it with frown. You will succeed if you do it with a Smile."

அதாவது செக்ரட்டேரியட் காரிடோரில் கட்சிக்காரர்கள் யாரை யும் விடாதீர்கள். நான் கடுமையாக நடந்து கொண்டேன். தோற்றுவிட்டேன். நீங்கள் சிரித்துக் கொண்டே அமல் நடத் துங்கள் வெற்றி பெறுவீர்கள் என்று சொன்னார். அந்த மாதிரி நீங்களும் சிரித்துக் கொண்டே உங்களுடைய கொள்கையை அமல் படுத்தப் பார்க்கிறீர்களா மூதறிஞர் ராஜாஜி சொன்ன மாதிரி என்று கேட்க விரும்புகிறேன்.

திரு. என். சங்கரய்யா : தலைவரவர்களே, உண்மை எங்கள் பக்கத்திலே இருக்கின்றது. மேலும் வாய்மையே வெல் லும் என்பது இந்த அரசாங்கத்தின் கொள்கையாகக் கூட இருக் கின்றது. எனவே நாங்கள் சிரித்துக் கொண்டே சொல்வோம்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, அவர்களுக்கு நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கி றேன். ஒரு புது பார்முலாவை, ஒரு புது கொள்கையை இப் போது உருவாக்கி இருக்கிறார்கள். வேலை நிறுத்தம் செய்கிற வர்கள் வேலை நிறுத்தம் செய்ய வேண்டும் என்று தங்களுக்குள் நினைத்து அவர்கள் செய்கிறார்கள். உள்ளே வேலைக்கு போகிற வர்கள் இது தேவையில்லை என்று கருதி உள்ளே போகிறார்கள். இந்த கொள்கையை கன்டினியூ பண்ணலாம். அதுபற்றி மகிழ்ச்சி.

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் நாங்கள் சொல்வதாகச் சொல்லி ரிக்கார்ட் பண்ணப் பார்க்கிறீர்கள். அதாவது திரு. ரமணி அவர்கள் சொன்ன புள்ளி விவரப்படி 70 பேரைத் தவிர மற்றவர்கள் தொடர்ந்து வேலை செய்தார்கள். ஆனால் அந்த 70 பேரும், எப்படிப்பட்ட வன் முறைகள் நடக்கக்கூடாது என் பதில் கனம் முதல்வர் அவர்கள் உறுதியாக இருக்கிறார்களோ அந்த வன்முறையில் ஈடுபட்டார்கள், கல்லெறிதல், கண்ணாடி உடைத்தல், தொழிலாளர்களைத் தாக்குதல், கேட்டை

உடைத்தல், ஆகிய அத்தனை காரியங்களும் நடத்தப்பட்டன. ஆகவே, அதைத்தான் அவர் ஏற்றுக் கொள்கிறேன் என்று சொல்லி அவ்வாறு ஏற்றுக்கொள்கிறாரா ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** தலைவரவர்களே டி. வி. எஸ். பற்றிச் சொன்னார்கள்....(குறுக்கீடு)........ மறுபடியும் அதைப்பற்றி ஏன் சொல்ல வேண்டும்?

டெக்ஸ்மோவிலே நீங்கள் கருங்காலித்தனம் செய்தீர்கள் அது தான் எங்களுடைய சார்ஜ். (கூச்சல் குழப்பம்).

**திரு. என். சங்கரய்யா :** நான் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்த அரசினுடைய கொள்கையாக கருங்காலித்தனம் நடத்துவதை எதிர்ப்பாரா என்று கேட்க விரும்புகிறேன். (கூச்சல், குழப்பம்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. கோவைத்தம்பி அவர்கள்.

**திரு. கோவைத்தம்பி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் ஊருக்கு அருகில் டெக்ஸ்மோ நிறுவனம் இருக்கிறது. இந்த மன்றத்திற்கு கட்சி சார்பற்ற முறையில் ஒன்றைத் தெரிவிக்க வேண்டியது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். அந்த நிறுவனத்தில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த தொழிற்சங்கம் ஆரம்பித்து, ஏறக்குறைய 1½ ஆண்டுகள் தாம் ஆகின்றன. சி.ஐ.டி.யூ. 20 ஆண்டுகளாக இருக்கின்றன. அண்ணா திராவிட முன்னேற்றக் கழக சங்கத் தொண்டர்கள் பலாத்காரமாக, ஸ்டிரைக் செய்தார்கள் என்பதற்காக கடத்தப்பட்டிருக்கிறார்கள். காடம்பாறை நீர்த்தேக்கத்தைப்பற்றிச் சொல்லி, ஜெயிலர் அடித்ததைப் பற்றிச் சொன்னார்களே, எங்களுடைய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்களை, பலாத்காரமாக கட்டி, முதலாளியினுடைய காரில் கொண்டுபோய் பாலக்காட்டில்வைத்து அடித்து நொறுக்கியிருக்கிறார்கள். அதை இந்த மன்றத்தில், நிருபிக்க கடமைப்பட்டிருக்கிறேன் என்பதையும் சி.ஐ.டி.யூ.வின் ஆதரவில் நடைபெற்ற இச்சம்பவம், தொழிற்சங்க வரலாற்றிலேயே இந்தியாவிலே எந்த இடத்திலும் இந்த மாதிரி நிகழ்ச்சி சி.ஐ.டி.யூ.வின் வரலாற்றில் நடக்கவில்லை என்பதையும் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கு. ரமணி :** பேரவைத் தலைவர் அவர்களே கொள்கை அளவில் யார் எதைச் சொன்னாலும் எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால் சி.ஐ.டி.யூவின் ஆதரவில் நடை



பெற்றதாகச் சொன்னாரே. அது தவறு. சி. ஐ. டி. யூ.வின் ஆதரவு எந்தக் காலத்திலும் இந்த விதமான பலாத்கார நிகழ்ச்சி களுக்கு அளிக்கப் பெறுவது இல்லை. அதற்கு நாங்கள் யாரையும் என்றைக்கும் அனுமதிக்க மாட்டோம். மாறாக இவைகளை நாங்கள் எதிர்த்து நின்று போராடுகிறோம். அவரே இங்கே பேசும்போது சொன்னாரே, முதலாளிகளுடைய காரிலே கடத்தி கொண்டுபோய் பாலக்காட்டில் வைத்து அடித்தார்கள் என்று அப்படிப்பட்ட முதலாளிகளை நீங்கள் தண்டிக்கத் தயாரா? அதற்கு எங்கள் தொழிலாளர்கள் ஒருபோதும் ஆதரவு அளித் திருக்க மாட்டார்கள். அந்த முதலாளிகளின் மீது நீங்கள் நட வடிக்கை எடுத்தால், அதற்கு எங்கள் தொழிலாளர்கள் ஆதரவு தருவார்கள். ஆகையினால் சி.ஐ.டி.யூ.வைப் பற்றி அப்படிச் சொல்வது உண்மையும் அல்ல, நியாயமும் அல்ல.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** பேரவைத் தலை வர் அவர்களே, அடுத்து, டி.வி.எஸ். பற்றிச் சொன்னார்கள். அவர்கள் முதல்வர் அவர்களோடு பேசும் நேரத்தில், முதல்வர் அவர்கள் சொன்னீர்களே, நாங்கள் நடவடிக்கை எடுக்க மாட் டோம் என்று. இப்பொழுது ஏன் நடவடிக்கை எடுத்தீர்கள் என்று கேட்டார்கள். முதல்வர் அவர்கள் வாக்குறுதி கொடுத்த காலத்திலே நடந்த சம்பவங்களுக்காக தொழிலாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பெறவில்லை. அதற்குப் பின்னாலே நடந்த சில வன்முறைச் சம்பவங்களை ஒட்டித்தான் நடவடிக்கை எடுத் திருக்கிறார்கள். வேண்டுமானால் இன்னும் ஒரு வாரத்திற்குள், தேதி முதற்கொண்டு கொடுக்க நான் தயாராக இருக்கிறேன். சந்தித்துப் பேசும்போது வாயினால் சொன்ன வாக்குறுதியை முதல்வர் அவர்கள் நிறைவேற்றியிருக்கிறார்கள். ஆனால், அதற் குப் பின்னாலே நடந்த சம்பங்களும், வன்முறைகளும் ஒட்டித் தான் தொழிலாளர்கள் மீது மேல் நடவடிக்கை எடுக்கப்பெற் றிருக்கிறது என்பதை தெளிவாக்க விரும்புகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஒவ்வொருவரும் விளக் கமும், வியாக்கியானங்களும் கேட்டுக் கொண்டிருந்தால் நேரம் அதிகமாகும். எந்தவித குறுக்கீட்டையும் இப்போது அனுமதிப் பதற்கில்லை. அமைச்சர் அவர்கள் தொடரட்டும்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு, பேரவைத் தலைவர் அவர்களே, நீண்ட காலமாக வேலை நிறுத் தத்தை நீடிக்க விட்டு, தொழிற்சங்கங்களை உடைக்க முயற்சி செய்கிறோம் என்று சொல்லியபோது, மேற்கு வங்கத்தில் கூட 8 மாதம் வரையில் வேலை நிறுத்தம் நடைபெற்றிருப்பதை எடுத்துக் காட்டினேன். அதைப் பற்றிச் சொல்லும்போது மின்சார வாரியத்தில் மேற்கு வங்கத்தில் நக்ஸலைட் யூனியன் இருக்கிறது—அதனால்தான் முதல்வர் அப்படி கூறினார் என்று கூறப்பட்டது. ஆனால், எங்களுக்கு விரோதமாக தொழிற்சங் கங்களை நடத்துபவர்கள் இருக்கிறார்கள் என்றோ, எங்களுக்கு

[1981 பிப்ரவரி 12

பிடிக்காதவர்கள் விரும்பாதவர்கள் அந்தச் சங்கங்களில் இருக்
கிறார்கள் என்றோ அந்தச் சங்கங்களை நக்சலைட் யூனியன் என்று
சொல்வது எங்கள்—கொள்கை அல்ல. (மேசையைத் தட்டும்
ஒலி.)' அப்படி வேண்டாதவர்களை நக்ஸலைட் யூனியன் என்று
சொல்வது எங்கள் கொள்கையும் அல்ல, எங்கள் அரசாங்கத்தின்
கொள்கையும் அல்ல என்பதைத் தெரிவித்துக்கெள்கிறேன்.

அடுத்து பலேகார் அவார்டைப் பற்றிச் சொன்னார்கள். அதற்
தான கோப்பு நகர்ந்து விட்டது. முத்தரப்புக் கூட்டம் நடத்து
வதற்கான கோப்பில் நான் கையெழுத்திட்டாகிவிட்டது என்று
தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல் சிராமிக் பற்றிச் சொன்னார்கள். என்னுடைய
ஞாபகம் சரியாக இருக்குமேயானால், 1980-ஆம் ஆண்டு அக்
டோபர் திங்கள் 16-ஆம் தேதி முதல் வேலை நிறுத்தம் ஆரம்
பிக்கப் பட்டது. 17-10-80லிருந்து லாக் அவுட் செய்து விட்
டார்கள். 20 சதவீதம் போனஸ்—மேனேஜ்மெண்ட் தருவதாகச்
சொல்கிறார்கள். 20 சதவீதத்திற்கு மேலும் வேண்டும் என்று
சொல்லி தொழிலாளர்கள் போராடுகிறார்கள். இதிலே கவர்ன்
மெண்ட் என்ன ஸ்டேண்ட் எடுக்க முடியும்? பணம் இருந்தால்
கொடுங்கள் என்று மேனேஜ்மெண்ட்டைக் கேட்டோம்.

We t ok all concliat ry methods

இன்றைக்குச் சொல்ல வேண்டும் என்று நினைக்கிறேன். ஒரு
ஆ..பர் கொடுத்திருக்கிறார்கள். பப்ளிக் செக்டர் நடத்துகின்ற
தொழிற்சாலைகளை திறந்து வேலைக்கு வருகிறவர்களுக்கு 600
ரூபாய் தருகிறோம் என்று மத்திய அரசு சொல்லியிருக்கிறார்கள்.
அது மட்டும் அல்ல. நாங்கள் ஏற்கெனவே கொடுத்த வாக்
குறுதிப்படி 25 ரூபாய் ஊதிய உயர்வு 1981-ஆம் ஆண்டு சனவரித்
திங்கள் 1-ஆம் நாளிலிருந்தும், 600 ரூபாய் லம்ப்-சம் அமொண்டும்
நாங்கள் தருகிறோம். இந்த காரண்டியை, அந்த வார்த்தையை
நாங்கள் காப்பாற்றுவோம் என்று பப்ளிக் செக்டார் அண்டர்
டேக்கிங்ஸுகளுக்கு மத்திய அரசு சொல்லியிருக்கிறார்கள். இப்
படி ஒரு ஆபரை கொடுத்திருக்கிறார்கள். வேலை நிறுத்தத்தை
தொடர்ந்தால் அந்த ஆ..பரை வேண்டாம் என்று சொல்வதாக
பொருள். ஆ..பரை ஏற்றுக்கொண்டால் வேலை நிறுத்தத்தை
நிறுத்திவிடுவார்கள். இல்லை என்றால் வேலை நிறுத்தம் நீடிக்
கும். அது தொழிலாளர்கள் விருப்பம். இப்பொழுது இந்த
சிராமிக் நிறுவனம் 20 சதவீதம் கொடுத்தார்கள். 20 சத
வீதத்திற்கு மேல் எக்ஸ்-கிரேஷியா அமொண்ட் கொடுக்க முடி
யுமா என்று கேட்டோம். முதலாளிகள் முடியாது என்று சொல்
கிறார்கள்.



1981 பிப்ரவரி 12] [திரு. எஸ். இராகவானந்தம்]

[பிற்பகல் 12–50]

முதலாளி முடியாது என்று சொல்லுகிறார். அது மட்டு
மல்ல; அவர் என்ன சொல்லுகிறார். இன்னும் 5, 6 மாதங்
கள் அதாவது செப்டம்பர் மாதம் என்று கருதுகிறேன்—அப்
போது வேஜ் ரிவிஷன் வருகிறது. இந்த இண்டஸ்ட்ரீசிலே
நிறைய இலாபம் சம்பாதித்தோம் என்பதை ஒப்புக்கொண்டு
20 சதவிதம் போனஸ் கொடுத்து விட்டார்கள். ஆனால், வேஜ்
ரிவிஷன் வரும்போது, அந்த நேரத்தில் இந்த அதிக இலாபத்தை
மனதிலே வைத்துக்கொண்டு, பேச்சுவார்த்தை நடத்தலாம் என்று
சொல்லுகிறார்கள். அதை நாங்கள் ஏற்றுக்கொள்ளுகிறோமோ
என்று கேட்கிறார்கள்.

We are st ll contin ng conci ia ion pr ceedings

எங்களுக்கு அதிகாரம் இருந்திருக்குமானால், நாங்கள் ஏதாவது
செய்திருக்கலாம். இப்பொழுது கட்டுப்படுப் பேசுகிறோம்.
ஒத்துவராவிட்டால், ஸ்டிரைக் நடந்துகொண்டிருக்கிறது. எனவே,
சட்டத்திற்கு மேல் 20 சதவீதத்துக்கு மேல் போனஸ் வேண்டு
மென்று ஒரு போராட்டம் நடந்துகொண்டிருக்கிறது. அரசு
என்ன செய்ய முடியும்? கூப்பிட்டுப் பேசிக்கொண்டிருக்கிறோம்.
எனவே, இதிலே குற்றம் சொல்லுவதற்கு ஒன்றுமில்லை என்
பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். உமாநாத் அவர்களும்
ஆமோதித்து தலையை ஆட்டிவிட்டார்கள். மெத்த மகிழ்ச்சி.

ஆனால், எங்களைப்பற்றிச் சொல்லும்போது, போலீஸ் ஆக்
ஷனுக்கு இங்கொன்றும் இம்பிளைட் மீனிங் இல்லை. நீங்கள்
இப்படியெல்லாம் போலீஸ் நடக்க வேண்டுமென்று சொன்னீர்
கள். கேரளாவில், வையலன்ஸ் இருந்தால், அதுவும் ஸ்டிரைக்
என்ற பெயரால் வையலன்ஸ் இருந்தால் Iam sorry this word is
used நடவடிக்கை எடுப்போம் என்று சொல்லிவிட்டார்கள்.
அப்படி நாங்கள் நடவடிக்கை எடுப்போம் என்று சொல்லியிருக்
கிறார்கள். நான் சொல்வது, (கேரள அரசின்) According to the new
policy, the police will not interfere in labour disputes.
புதுக் கொள்கையின்படி லேபர் டிஸ்பியூடில் போலீஸ்
தலையிடாது; But will take action if there is violence in the
name of strike ஏதாவது வன்முறை இருந்தால் நடவடிக்கை
எடுக்கப்படும்.

ஸ்டிரைக் என்பதன் பெயரால் வன்முறையில் ஈடுபட்டால்,
நடவடிக்கை எடுப்போம் என்று கேரள அரசு சொல்லியிருக்கிறது.
எங்களுடைய அரசு, இன்னும் நாங்கள் சொல்வது, அப்படி வன்
முறையில் ஈடுபட்டால், அதைப் பற்றி விசாரித்து, அதன்மேல்
வழக்கைக் கொண்டு போவதா அல்லது தள்ளி விடுவதா என்பது
தான். கூடுமானவரையில், வழக்குகளை பின்வாங்கி இருக்கி
றோம் என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்கிறேன்.

நீங்கள் மறுமுறையும் கான்ட்ராக்ட் லேபரைப் பற்றிச் சொல்லியிருக்கிறீர்கள். மேற்கு வங்காளத்தில், மின்சார வாரியத்தில் தொழிலாளர்கள் எங்களை பர்மனென்டாக எடுத்துக் கொள்ளுங்கள் என்று சொன்னதற்கு, அரசு என்ன சொன்னது? எம்ப்ளாய்மெண்ட் எக்சேஞ்சிலே இருந்துதான் நாங்கள் எடுப்போம், உங்களை எடுக்க முடியாது என்று சொல்லிவிட்டார்கள். அதைப் படித்துக் காட்டுகிறேன், பாருங்கள்.

The Spokesman said that the Government had announced its policy to fill the vacancy through the Employment Exchange only and the payment of over time will be made only to those workers who are covered by the Factories Act.

திரு. ரா. உமாநாத் : இல்லை, இல்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் படிப்பது இன்னும் என் கைக்கு வரவில்லை; அதைப் பார்த்து நிச்சயமாக பதில் சொல்கிறேன். ஆனால், இப்போது அவையிலே நான் படித்தேன், அது முதலமைச்சர் ஜோதிபாசு அவர்களின் பேச்சு. அந்தப் பேச்சிலே, அவர் சொல்லியிருக்கிறார்—மின்சார வாரியத்தினுடைய பிராஜக்டுகளிலே வேலை செய்திருக்கக்கூடிய கான்ட்ராக்ட் லேபர்கள், அதுவும் வேலை முடிந்து ஆள் குறைப்பு செய்யப்பட்டாலும், அவர்களுக்கு மின்சார வாரியத்திலே வரக்கூடிய வேகன்சிகளில் 20 சதவீதம் அவர்களுக்கு ஒதுக்கப்படும். அதுவும் அவர்கள் 240 நாட்களை ஒருதரம் பூர்த்தி செய்தால் போதும்; 20 சதவீதம் ஒதுக்கப்படும். நான் படித்தது ஜோதிபாசு அவர்களின் பேச்சு.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : நான் சொல்வது, 1980 டிசம்பர் 30-ஆம் தேதி ஸ்டேட்மெண்ட். அதற்குப் பின்னால், நீங்கள் நாங்கள் வேண்டுமென்றே டிலே செய்கிறோம் என்று குற்றச்சாட்டைச் சொன்னீர்கள்.

உண்மையில் வருத்தப்படுகிறேன். மேற்கு வங்கத்தையும் கேரளாவையும் இழுத்திருக்க வேண்டியதில்லை. ஆனால் இரண்டு பேர்களையும் இழுத்து அங்கே பாருங்கள் என்று இரண்டு பேர்களும் சொல்வதால்தான் இங்கே பாருங்கள் என்று சொல்கிறோம் We are having a better Government here and we are doing more to the workers than anybody else. அதைத்தான் சொல்கிறோம். ஸி. பி. ஐ. உறுப்பினர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். "It was unfortunate that the Left Front Government had either failed to implement or delay of implementation of some of the tripartite agreements reached in different industries." ஒப்பந்தங்கள் செயல்படுத்தப்படவில்லை அல்லது காலதாமதமாகச் செயல்படுகின்றன என்று யார் சொல்கிறார்கள்? ஸி. பி. எம். ஐப் பற்றி ஸி. பி. ஐ. சொன்னதைத்தான் சொல்கிறேன்.



திரு. இரா. கருப்பையா : தமிழ்நாடு பற்றிச் சொன்னதற்கு அமைச்சர் அவர்கள் நேரடியாகப் பதில் சொன்னால் பரவாயில்லை. மேற்கு வங்கத்தைச் சொல்லி ஸி.பி. ஐ-க்கு பதில் சொல்ல வேண்டாம்.

திரு. ரா. உமாநாத் : வெஸ்ட் பெங்காலை இங்கே இழுத்துப் பேசியது தப்பு என்று நான் சொல்லவில்லை. அந்த போட்டியை நான் வரவேற்கிறேன். தமிழ்நாட்டுக்கு அதிகமாகச் செய்வதற்கு நாங்கள்தான் அதிகமாகச் செய்கிறோம் என்ற ஹெல்த்தி காம்பட்டிஷென் நல்லதுதான். அதை வரவேற்கிறோம். ஆனால் நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது, ஸி.பி.ஐ ஸ்டேட்மென்டைப் படிக்கிறபோது—நீங்களே அந்த சார்ஜை, வயலேட் செய்திருக்கிறோம் என்று சொல்லத் தயாரா? நீங்கள் சொல்லுங்கள். In fact that is a healthy competition.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : வந்திருப்பது, Statesman dated 20-1-81 printed at Calcutta, Published at Calcutta அதை நான் படித்துக் காண்பித்தேன். அதைத்தான் சொல்கிறேன். (குறுக்கீடு) சிண்டு முடிக்கிற வேலை இல்லை. பேப்பரில் வந்திருப்பதைப் படித்தேன் என்னிடம் சிண்டு இல்லை.

திரு. ரா. உமாநாத் : அவருக்கு சிண்டு இல்லை என்பது கரெக்ட். ஆகவே நான் முடிச்சு போடவில்லை. எங்களுக்கு சிண்டு இருக்கிறது, ஆகவே எங்கள் சிண்டை பொறாமையால் முடிச்சுப் போடுகிறார்கள்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : சிண்டு முடிக்கிறார்களா இல்லையா என்பதை ஸ்டேட்ஸ்மென் பேப்பரைத்தான் கேட்கவேண்டுமே தவிர என்னைக் கேட்கக்கூடாது.

எனவே நான் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். எந்தப் போராட்டத்திலும் நாங்கள் நியாயமாகத்தான் நடந்து கொண்டிருக்கிறோம். நீங்கள் சொல்வது போன்று எந்தக் குற்றச்சாட்டுக்கும் நாங்கள் இலாக்காகவில்லை என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

ரெபரன்ஸ் பற்றிச் சொன்னார்கள். எல்லோரும் கோர்ட்டுக்கு போகவேண்டும் என்று புரட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். அதற்கு வேண்டிய சட்டத்தை நாங்கள் இயற்றி டெல்லிக்கு அனுப்பினோம். டெல்லியில் இருக்கிறது. தொழிலாளர் நலத் துறை அமைச்சர்கள் கூட்டம் நடந்தபோது மத்திய அரசு நாங்களே கொண்டு வந்துவிடுகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். மத்திய அரசு கொண்டு வந்துவிடும் என்றுநான் நினைக்கிறேன். கோர்ட்டுக்கு அனுப்பும் அதிகாரம் நம்மிடம் இருக்கும்போது அதை பார்த்து செய்யவேண்டியதாக

இருக்கிறது. வந்ததை எல்லாம் எஸ், எஸ், எஸ், எஸ் என்று கையெழுத்து போட்டு அனுப்புவதில்லை. டிஸ்கிரிஷனை யூஸ் செய்கிறோம். ஆனால் அந்தப் பழி கூட நம் அரசுக்கு வரக்கூடாது. எல்லோரும் வழக்குமன்றத்திற்குச் செல்லக் கூடிய நிலை உருவாக வேண்டும் என்பதற்காக நாம் வந்தாடி யிருக்கிறோம். அப்படிப்பட்ட ஒரு சட்டத்தை மத்திய அரசு கொண்டுவரும், இல்லை என்றால் புரட்சித் தலைவர் ஆட்சி கொண்டு வரும் என்பதை, தொழிலாளர்கள் நேராக வழக்கு மன்றத்திற்குப் போகலாம் என்று சட்டத்தை கொண்டுவரும் என்பதை இந்த நேரத்தில் உறுதியாகச் சொல்கிறேன். நாம் டிராப்ட் அமென்ட்மென்ட் எற்கனவே அனுப்பியிருக்கிறோம். (குறுக்கீடு) இது வரை இந்த ஆட்சியின் மீது குறிப்பிட்ட குற்றச்சாட்டு எதுவும் கொண்டுவர முடியவில்லையென்பதையும் இந்த அரசு ஏற்கனவே வேண்டியளவு நன்மைகளைச் செய்வதற் கான சட்டங்களை உருவாக்கி இருக்கிறது என்பதையும் இன்னும் சொல்லப்போனால் Just, wait and see. It is af er all time-bound கொஞ்சம் அவசரப் பட்டுவிட்டார்கள். அதுதான், ஒரு ஆட்சி யின் சாதனையை நிர்ணயிப்பதற்கு ஒன்பது மாதமா, இன்னும் ஒரு ஆண்டு கழித்து என்ன செய்திருக்கிறோம் என்று பார்த்தால் —சமையல் செய்து கொண்டிருக்கும்போதே சாம்பாரை ருசி பார்ப்பதா? அதைக் கொண்டு வந்து சாப்பாட்டில் போட்ட பிறகு பார்க்கவேண்டும். அதற்கு டைம் வேண்டாமா?

திரு. என். சங்கரய்யா : ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பார்கள். இரண்டு மாதச் சாதனைகளை வைத்துக் கொண்டு பார்த்து விடலாம். நிர்பந்தம் கொடுத்தால், முயற்சித்தால் போக்கு மாறுமா என்று முயற்சிக்கிறோம்.

[முற்பகல் 1-00]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : ஒரு பானை சோற் றுக்கு ஒரு சோறே எடுத்துச் சொல்லிவிடலாம். அந்த ஒரு சோறு கூட தவறாக நடக்கவில்லை என்பதுதான் என் வாதம். எனவே, புரட்சித் தலைவர் ஆட்சியில் சாதனைகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். மேற்கு வங்கத்திலும் கேரளாவிலும் போலீசை எப்படி உபயோகப்படுத்தினார்களோ அதை விடக் குறைவாகத்தான் இங்கே உபயோகப்படுத்திருக் கிறோம். ஏற்கனவே, ஸ்டிரைக்கைத் தடை செய்ய அவர்கள் சட்டம் கொண்டு வந்து விட்டார்கள் நாங்கள் இன்னும் கொண்டு வரவில்லை. எனவே, தொழிலாளர் வர்க்கத்திற்கு இந்த அரசு நன்மை செய்து வருகிறது. மேலும் நன்மை செய்ய இருக்கிறது. நீங்கள் எல்லாம் தியாகிகள், தொழிற் சங்கத்தில் அனுபவம் உள்ளவர்கள், தோழமைக் கட்சியாக உள்ளவர்கள். நீங்கள் எங்களுக்கு அகாவ கங்க மேவம்



நன்றாக நடக்க இந்த ஆட்சிக்கு உதவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திருவாளர்கள் ஆண்டித்தேவர், நெடுமாறன், சௌரிராஜன் போன்றவர்கள் இந்த அரசுக்கு ஆலோசனைகள் கொடுத்திருக்கிறார்கள் ........ அவைகளை இந்த அரசு கவனிக்கும்.

பேராசிரியர் ஒரு கருத்தைச் சொன்னார்கள். இந்த நிதி ஆண்டில் வேலைக்கு உணவுத் திட்டத்தின் கீழ் 1—4—1980 முதல் 31—12—1980 வரை எவ்வளவு வேலைகள் எடுத்துக் கொள்ளப்பட்டன என்ற விபரங்களைக் கேட்டார்கள். அந்த விவர அறிக்கை—எடுத்துக்கொள்ளப்பட்ட வேலைகள் 35,103 முடிக்கப்பட்ட வேலைகள் 21,762; வழங்கப்பட்ட அரிசி 40,582.657 டன்கள். செலவழிக்கப்பட்ட பணம் ரூபாய் 164.29 லட்சம் முடிக்கப்பட்ட வேலைகளின் மதிப்பு ரூ. 741.62 லட்சம்; மனித உழைப்பு நாட்கள்—''மேன்டேஸ் 137.07 லட்சம் நாட்கள் என்பதைப் பெருமையோடு தெரி வித்துக் கொண்டு இந்த அரசுக்கு நீங்கள் தொடர்ந்து ஆதரவு தரவேண்டும், இந்தக் கண்டனத் தீர்மானத்தைப் பின் வாங்கிக் கொள்ளவேண்டுமென்று பணிவோடு வேண்டிக்கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

''மாண்புமிகு திரு எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்களைத் தலைவராகக் கொண்ட தமிழக அரசின் தொழிலாளர் விரோதக் கொள்கையை இப் பேரவைக் கண்டிக்கிறது.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்றுத் தோல்வி யுற்றதாக அறிவிக்கப்பெற்றது.

திரு. என். சங்கரய்யா : பேரவைத் தலைவர் அவர்களே, நான் எண்ணிக் கணிக்கும் வாக்கெடுப்புக் கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று வாக்கு கள் எண்ணிக் கணிக்கப் பெற்றன. (மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை).

ஆதரித்தோர்—57

எதிர்த்தோர்—131

நடுநிலைமை வகித்தோர்—19

தீர்மானத்திற்கு எதிராக 74 வாக்குகள் அதிகமாகக் கிடைத் துள்ளதால் தீர்மானம் தோல்வியுற்றதாக அறிவிக்கப்பெற்றது.

[1981 பிப்ரவரி 12

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று வாக்குகள் எண்ணிக் கணிக்கப் பெற்றன.

ஆதரித்தோர்.

1. திரு சோ. அழகர்சாமி.
2. திரு இரா. கருப்பையா.
3. திரு எஸ். ஆண்டித்தேவர்.
4. திரு மு. அம்பிகாபதி.
5. திரு பொ. உத்திராபதி.
6. டாக்டர் கே. சௌரிராஜன்.
7. திரு கே. தனக்கோடித் தேவர்.
8. திரு க. பாரமலை.
9. திரு ஏ. சாகுல் அமீது.
10. திரு செ. சிவசாமி.
11. திரு தி.கா. நல்லப்பன்.
12. திரு எஸ்.என். இராமசாமி.
13. திரு பி. மொக்கையன்.
14. திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்.
15. திரு என். பழனிவேல்.
16. திரு என்.ஏ. பூங்காவனம்.
17. திரு எம். ஆறுமுகம்.
18. திரு டி. மணி.
19. திரு ஜே. ஹேமச்சந்திரன்.
20. திரு மு. அப்பாதுரை.
21. திரு ப. தீர்த்தராமன்.
22. டாக்டர் மு. கருணாநிதி.
23. திரு க. அன்பழகன்.
24. திரு அன்பில் தர்மலிங்கம்.
25. திரு என். சங்கரய்யா.
26. திரு ரா. உமாநாத்.
27. திரு கு. ரமணி.
28. திரு என். வரதராஜன்.
29. திரு பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம்.
30. திரு ரா. கிருஷ்ணன்.
31. திரு க. பாவலர்.



1981 பிப்ரவரி 12]

ஆதரித்தோர்— தொடர்ச்சி.

32. திரு து. இராசரத்தினம்.
33. திரு செ. இராமலிங்கம்.
34. திரு கே.ஆர். சுந்தரம்.
35. திரு எம். செல்லமுத்து.
36. திரு இரெ. இராசமாணிக்கம்.
37. திரு த. ஆறுமுகம்.
38. திரு என். முத்துவேல்.
39. திரு வி.எம். தேவராஜ்.
40. திரு பம்மல் நல்லதம்பி.
41. திரு பாபு ஜனார்த்தனன்.
42. திரு வி. கிருஷ்ணமூர்த்தி.
43. திரு ஜே.எஸ். இராசு.
44. திரு கெ. சொக்கலிங்கம்.
45. திரு பெ.சு. திருவேங்கடம்.
46. திரு துரைமுருகன்.
47. திரு அ. செல்வராசன்.
48. திரு அ. ரகுமான்கான்.
49. திரு எஸ். ரெத்தினராஜ்.
50. திரு து. புருஷோத்தமன்.
51. திரு ப. பொன்னுரங்கம்.
52. திரு சி.த. சிதம்பரம்.
53. திரு கு.பா. பழனியப்பன்.
54. திரு என்.வி.என். சோமு.
55. திரு மு. அரங்கநாதன்.
56. திரு மு.ப. முனுசாமி.
57. திரு ப. சுந்தரம்.

எதிர்த்தோர்.

1. திரு ஆர். மணிமாறன்.
2. மாண்புமிகு திரு பி.எச். பாண்டியன்.
3. திரு சி.வி. வேலப்பன்.
4. திரு வி.வி. சுவாமிநாதன்.
5. திரு எஸ்.எஸ். இராஜேந்திரன்.

எதிர்த்தோர்—தொடர்ச்சி.

6. திரு பி. முசிறிப்புத்தன்.
7. திரு ச. அங்குசாமி.
8. திரு கே.எம். அப்துல் ரசாக்.
9. திரு எஸ். அரங்கநாதன்.
10. திரு வெ. அரங்கராசன்.
11. திரு இரா. அருணாசலம்.
12. திரு தி. அன்பழகன்.
13. திரு சேலம் மு. ஆறுமுகம்.
14. திரு எம்.வி. இரத்தினம்.
15. திரு மே.அ. இராசகுமார்.
16. திரு கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்.
17. திரு த. இராமசாமி.
18. திரு என். இராமசுப்பிரமணியன்.
19. டாக்டர் கே.பி. இராமலிங்கம்.
20. திரு. எஸ்.டி. உகம்சந்த்.
21. திரு. ம. கண்ணன்
22. திரு. கே. ஆர். கணபதி
23. மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்
24. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்
25. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்
26. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி
27. மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்
28. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்
29. மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு.
30. மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்
31. மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி
32. மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்
33. திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்
34. திரு. துரை ராமசாமி
35. திரு. இ. கணேசன்
36. திரு. சி. கணேசன்
37. திரு. கா. வே. கந்தசாமி
38. திரு. பி. கந்தசாமி



எதிர்த்தோர்—தொடர்ச்சி.

39. திரு. டி. கே. கபாலி.
40. திரு. வி. கருப்பசாமிப் பாண்டியன்
41. திரு. சோ. கலிதீர்த்தான்
42. திரு. பெ. கலியமூர்த்தி
43. திரு. நன்னிலம் ஆ. கலையரசன்
44. திரு. கா. கோ. கிருஷ்ணசாமி
45. திரு. சா. கிருட்டிணமூர்த்தி
46. திரு. ஜி. கிருஷ்ணராஜ்
47. திரு. என். குப்புசாமி
48. திரு. கே. குப்புசாமி
49. திரு. செ. குப்புசாமி
50. திரு. ப. குருசாமி
51. திரு. எம். குருசாமி என்கிற அண்ணாதாசன்
52. திரு. ந. குலசேகரபாண்டியன்
53. திரு. சி. கேசவ ஆதித்தன்
54. திரு. சி. கோபால்
55. திரு. கா. கோபாலகிருஷ்ணன்
56. திரு. ஆர். டி. கோபாலன்
57. திரு. எம். ஆர். கோவேந்தன்
58. திரு. கோவைத்தம்பி
59. திரு. ஆர். சக்கரபாணி
60. திரு. இரா. சண்முகம்
61. திரு. ஏ. சி. சண்முகம்
62. திரு. வ. சத்தியமூர்த்தி
63. திரு. சி. சபாபதி
64. டாக்டர் கே. சமரசம்
65. திரு. தா. சாமிக்கண்ணு
66. திரு. சீ. சிவப்பிரகாசம்
67. திரு. மு. சிவபெருமாள்
68. திரு. எம். சின்னசாமி
69. திரு. ஏ. சின்னதுரை
70. மாண்புமிகு திரு. கா. காளிமுத்து
71. மாண்புமிகு திரு. சி. பொன்னையன்
72. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு

[1981 பிப்ரவரி ]

எதிர்த்தோர்—தொடர்ச்சி.

73. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி
74. திரு. க. இரா. சின்னராசு
75. திரு. எம். சின்னராஜ்
76. திரு. மு. சுந்தரராஜன்
77. திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன்
78. திரு. மா. சுப்பிரமணியன்
79. செல்வி வி. விசயலட்சுமி
80. திருமதி மார்கரெட் எலிசபெத் பிலிக்ஸ்
81. திரு. ஜி. கே. சுப்பிரமணியன்
82. திரு. கு. அ. செங்கோட்டையன்
83. திரு. செ. செம்மலை
84. திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி
85. திரு. ஏ. எம். சேதுராமன்
86. திரு. கே. சௌந்திரராசன்
87. திரு. ஏ. தங்கராசு
88. திரு. ஆர். தவசி
89. திரு. ப. தனபால்
90. திரு. இரா. தாமரைக்கனி
91. திரு. பெ. திருமாறன்
92. திரு. திருமான்
93. திரு. கே. உச்சி
94. திரு. பி. துரைராஜ்
95. திரு. பூ. மு. நரசிம்மன்
96. திரு. கே. பி. நாச்சிமுத்து
97. திரு. பி. ஜி. நாராயணன்
98. திரு. செ. பட்டாபிராமன்
99. திரு. பி. என். பரமசிவ கவுண்டர்
100. திரு. சு. பழனிசாமி
101. திரு. ச. பாலகிருஷ்ணன்
102. திரு. வி. பாலகிருஷ்ணன்
103. திரு. க. பாலசுப்பிரமணியன்
104. திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்
105. திரு. எ. பாலுச்சாமி
106. திரு. எம். பிச்சை



981 பிப்ரவரி 12]

திர்த்தோர்—தொடர்ச்சி.

107. திரு. ஜே. சி. டி. பிரபாகரன்
108. திரு. ஏ. பெரியசாமி
109. திரு. என். பெருமாள்
110. திரு. ரா. கு. பெருமாள்
111. திரு. எம். எஸ். மாணிக்கம்
112. திரு. த. மாரிமுத்து
113. திரு. சு. முத்துகிருஷ்ணன்
114. திரு. இரா. முத்தையா
115. திரு. இரா. சா. முனிரத்தினம்
116. திரு. ஜி. மூர்த்தி
117. திரு. ஆர். ரங்கசாமி
118. திரு. எம். கே. ராஜமாணிக்கம்
119. திரு. மி. வின்சென்ட்
120. திரு. என். விஜயபாலன்
121. திரு. கோ. விஸ்வநாதன்
122. திரு. த. வீராசாமி
123. திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்
124. திரு. வி. சுப்பிரமணியன்
125. திரு. ஆ. வெள்ளைச்சாமி
126. திரு. பாபு கோவிந்தராஜன்
127. திரு. சு. ரங்கசாமி
128. திரு. எஸ். ஜகத்ரட்சகன்
129. திரு. பு. கோ. ஆனூர் ஜகதீசன்
130. திரு. வே. இரா. ஜெயராமன்
131. திரு. மு. ஜான் வின்சென்ட்

நடுநிலை வகித்தோர்.

1. திரு. கே. எஸ். ஜி. ஹாஜாசெரீப்
2. திரு. நா. சுந்தரராஜ்
3. திரு. என். எஸ். வி. சித்தன்
4. திரு. கே. எம். தங்கமணி
5. திரு. எல். இளையபெருமாள்
6. திரு. மெ. ஆண்டி அம்பலம்
7. திரு. தெ. இரா. இராஜாராம் நாயுடு

நடுநிலை வகித்தோர்—தொடர்ச்சி.

8. திரு. சி. பழனிமுத்து
9. திரு. மு. சுந்தரம்
10. திரு. ஆர். சுந்தரமூர்த்தி
11. திருமதி டி. யசோதா
12. திரு. ஏ. சந்திரசேகரன்
13. திரு. வெ. இராஜசேகரன்
14. திரு. கே. கல்லன்
15. திரு. எஸ். இராசாராமன்
16. திரு. எஸ். சிவராமன்
17. திரு. பி. தங்கவேலு
18. திரு. ஆர். தியாகராசன்
19. திரு. கே. நாராயணசாமி

### 3. அரசினர் சட்டமுன்வடிவுகள்—(தொடர்ச்சி).

### (ஆ) நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு 1981.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமி பேரவைத் தலைவரவர்களே, '' தமிழ் நாடு 1981-ஆம் ஆண் நிதி ஒதுக்க சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண். 18/1981) * ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெ வேண்டும் '' என்று மொழிகிறேன்.

[பிற்பகல் 1-20].

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக் எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்ற பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு, அட்டவணை ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமி பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாடு 1981-ஆம் ஆண் நிதி ஒதுக்க சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட மு வடிவு எண். 18/1981) நிறைவேற்றப்பெற வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமு வடிவு நிறைவேற்றப்பெற்றது.

---

*1981ம் வருடம் பிப்ரவரி மாதம் 6-ம் தேதியிட்ட தமிழ் ந சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.





### இ. கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு, 1981.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதலில், தமிழ் நாடு 1981-ஆம் ஆண்டு கடன் நிவாரண (திருத்த )சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 8/1981). அதையொட்டிய அவசரச் சட்டத்தை நிராகரிக்கும் தீர்மானத்தை திரு. ரகுமான்கான் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள்.

திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, ஒரு சந்தேகம், 1½ மணிக்கு சபையை முடித்துவிட்டு மறுபடியும் 2½ மணிக்குத் தானே, கூட்டப் போகிறீர்கள்? அதை முதலில் தெரிவிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 11 மணியிலிருந்து 5 மணி வரைக்கும்.

திரு. துரைமுருகன் : சாப்பாட்டிற்குப் போக வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பார்லிமென்டிலே எல்லா மெம்பர்களும் சாப்பிடுகிறார்கள். சபை நடந்து கொண்டே இருக்கிறது. இன்றைக்கு ஒரு நாளைக்கு, உதாரணமாக, நடத்திப் பார்ப்போம்.

திரு. துரைமுருகன் : பார்லிமென்டிலே ரெயில்வே கான்டீன் இருக்கிறது. மெம்பர்கள் சாப்பிடலாம், இங்கே, என்ன செய்ய முடியும்?

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : சார், அவசரமாக இருக்கிறது சட்டங்களை எடுத்துக்கொள்ளுங்கள். மீதி இருப்பதை ஒத்தி வைத்து விடுகள். வில்லேஜ் ஆபீசர்ஸ் சட்டத்தை இன்றைக்கு எடுத்துக்கொள்ள வேண்டாம், வேறு ஒரு நாளைக்கு எடுத்துக் கொள்ளுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பொழுது 1½ மணிக்கு கலைந்து, திரும்ப 3 மணிக்குத் தொடரலாம்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' ஆளுநர் அவர்களால் 19—11—19780-ஆம் தேதியன்று பிறப்பிக்கப்பெற்ற, தமிழ் நாடு 1980-ஆம் ஆண்டு கடன் நிவாரண (திருத்த) அவசரச் சட்டத்தை (தமிழ் நாடு அவசரச் சட்டம் எண். 11/1980) இப்பேரவை நிராகரிக்கிறது ''.

திரு. கெ. சொக்கலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, திரு. ரகுமான்கான் அவர்கள் மொழிந்த தீர்மானத்தை நான் வழி மொழிகிறேன்.

[1981 பிப்ரவரி 12

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''தமிழ் நாடு 1981-ஆம் ஆண்டு கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 8/1981 ஆய்வுக்கு *எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்'' * என்று மொழிகிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கடன் நிவாரணச் சட்டத்தைப் பொறுத்த மட்டில் நான் சார்ந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்த சட்டம் கொண்டு வரப்பட்டிருப்பதற்கான காரணங்கள் இங்கே தெளிவாக சொல்லப்பட்டிருக்கின்றன. அந்தச் சட்டம் கொண்டு வரக்கூடிய காரணங்களைப் பற்றி சொல்வதற்கு முன்னால் மூலச்சட்டத்தை நான் எடுத்துச் சொன்னால் கொண்டு வரப்பட்டிருக்கிற திருத்தங்கள் சரியானவையா என்ற முடிவிற்கு வரமுடியும்.

1980 ஆம் ஆண்டு கடன் நிவாரணச் சட்டத்திற்கு இந்த திருத்தம் கொண்டு வரப்படுகிறது. ஆனால், ஏற்கனவே 1980 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட கடன் நிவாரண சட்ட அடிப்படையிலே, ஒருவரின் குடும்ப வருமானம் ரூ. 4,800-க்கு மேற்படாமல் இருக்குமேயானால் அவர் கடன் பெற்றிருந்தாலும், அவரின் கடன் இந்த சட்டத்தின் அடிப்படையிலே ரத்து செய்யப்படும். கடன் கொடுத்தவர், அவர் மீது நீதிமன்றத்திலே அந்த கடனை வசூல் செய்ய வழக்கு தொடர முடியாது. இதைப் போலவே, ஒருவரின் குடும்ப வருமானம் ரூ. 4,800-க்கு மிகையாகாமல் இருந்து, தன்னுடைய மூவபிள் பிராப்பர்டியை கடன் வாங்கியவரிடம் அடகு வைத்திருந்தாலும், கடன் கொடுத்தவர் அந்த மூவபிள் பிராப்பர்ட்டியை கொடுத்திவிட வேண்டும். வாங்கிய கடன் திருப்பிச் செலுத்தப்பட்டுவிட்டதாக கருதப்படும். இது பற்றியும் ஏற்கனவே உள்ள மூலச்சட்டத்தில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. இங்கே நான் குறிப்பிட விரும்புவது, கடன் பெற்றவர்கள், அப்படி தன்னுடைய குடும்ப வருமானம் ஆண்டுக்கு ரூ. 4,800-க்கு கீழே இருக்கிறது என்ற, ஆண்டு வருமான சான்றிதழ் ஒன்றினையும், கடன் பற்றிய விவரங்கள் அடங்கிய ஒரு மனுவையும் தாசில்தார் அவர்களிடம் கொடுக்கவேண்டும். அப்படி கொடுக்கிறபோது, அவர்கள் இதை ஆறு மாதங்களுக்குள்ளாக சமர்ப்பிக்க வேண்டும். ஆறு மாதங்களுக்கு மேலாகி, அதற்கு நியாயமான காரணங்கள் இருந்தால் ஒரு மாத தாமதத்தை கணக்கில் எடுத்துக் கொண்டு தாசில்தார் அவர்கள் கடன் பெற்றவரிடம் மனுவை பெற்று, கடன் கொடுத்தவருக்கு சந்தர்ப்பம் வழங்கி, விசாரித்து, கடன் சம்பந்தமாகவும், அடகு பொருள் சம்பந்த

*1981-ம் வருடம் ஜனவரி மாதம் 28-ம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



1981 பிப்ரவரி 12] [திரு. அ. ரகுமான்கான்]

மாகவும் விசாரித்து, அதற்குண்டான உத்தரவை பிறப்பிக்க வேண்டும். அடகு பொருள்கள் திருப்பித் தர வேண்டுமென்று உத்தரவிட வேண்டும். இந்த சட்டத்தின் ஷரத்துப்படி கடன் கொடுத்தவர்களும், கடன் வாங்கியவர்களும் நடக்கத் தவறினால், ஒரு வருட சிறைத் தண்டனை அல்லது ஐயாயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்படும். இந்த சட்டத்தின் சம்பந்தமாக எந்த நடவடிக்கையும் வழக்கறிஞர் வைத்து வாதாடக் கூடாது. வழக்கறிஞர்களும் அதற்கு போகக்கூடாது. இதுதான் ஏற்கனவே கொண்டு வந்த கடன் நிவாரண சட்டம். Act of 13/180.

இந்தச் சட்டத்திற்கு திருத்தம் கொண்டு வருவதற்கு சொல்லப்படுகிற காரணம், கடன் நிவாரணச் சட்டத்தை வசதி படைத்தவர்கள் ஏமாற்றி பயன் அடைந்து விடுகிறார்கள், அதைத் தடுக்கவேண்டும் என்பதாகும்.

கடன் நிவாரணச் சட்டம் இயற்றப்பட்டு ஆறு மாதத்திற்குள் தாசில்தாரிடம் மனு செய்து, பயனடைய வேண்டும், என்று காலவரம்பு 'டைம் லிமிடேஷன்' உள்ளதால், கிராமத்தில் உள்ள ஏழை எளிய கிராம மக்களுக்கு இது தெரியாதிருப்பதால், அவர்களுக்கு அந்த கால வரம்பை நீட்டித்துத் தர வேண்டும். 1980 ஆம் ஆண்டு டிசம்பர் 31-ம் தேதி வரைக்கும் இந்த கால வரம்பை நீட்டித்து தரவேண்டும். எனவே கால வரம்பு நீடிக்கப்படுகிறது என்றும், கடன்காரர் யார் என்பதற்கு ஏற்கனவே இருக்கிற மூலச் சட்டத்திற்கும், இப்போது கொண்டு வரப்படும் திருத்தச் சட்டத்திற்கும் ஒரு புதிய விளக்கம் கொடுக்கிற முறையிலும், இந்த திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று இதிலே சொல்லப்பட்டிருக்கிறது.

ஏற்கனவே உள்ள சட்டப்படி, 'குடும்பம்' என்ற சொல்கிறபோது, கணவனையும், மனைவியையும் திருமணம் ஆகாத குழந்தைகளையும் சேர்த்துத் தான் குடும்பம் என்று மூலச் சட்டத்திலே சொல்லப்பட்டிருக்கிறது. இந்த குடும்பத்தினுடைய ஆண்டு வருமானம் 4,800 ரூபாய்க்கு கீழே இருந்தால் கடன் நிவாரண சட்டத்தின்படி அவர்கள் பயன் அடைவார்கள். ஆனால் திருத்தம் என்ன சொல்கிறது என்று சொன்னால், வருமான வரி கொடுக்கின்றவர்கள் இந்த சட்டத்தின் மூலம் பயன்பெற முடியாது, ஏனென்றால் அவர்கள் ஏழைகள் அல்ல ; அவர்களை கடனாளிகள் என்று சொல்ல முடியாது என்று சொல்லப்படுகிறது. இதை நாம் வரவேற்கலாம்.

அதைப்போலவே, சேல்ஸ் டாக்ஸ் கட்டுகிறவர்களும், 'டெட்டார்' என்ற இலக்கணத்திலே வரமாட்டார்கள், எனவே அவர்களும் இந்த சட்டத்தின் மூலம் பயன் அடைய முடியாது என்று சொல்லியிருக்கிற கருத்தையும் நாம் வரவேற்கலாம்; ஆனால், எங்களுடைய திருத்தம் என்னவென்றால்......

[1981 பிப்ரவரி 12

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சீக்கிரம் முடியுங்கள்.
நேரமாகி விட்டது. மணி இப்போது ஒன்றரை. பேரவையின்
முன் அனுமதியோடு பேரவையின் நேரத்தை இன்னும் ஐந்து
நிமிடங்களுக்கு நீட்டிக்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : ஒருவர் பஞ்சாயத்திலோ அல்லது
முனிசிபாலிட்டியிலோ அல்லது கன்டோன்மென்ட் பகுதியிலோ
அல்லது கார்ப்பரேஷன் பகுதியிலோ, அல்லது இந்தியன் யூனி
யன் டெரிட்டரியிலோ வீடோ, நிலமோ வைத்திருந்து அவரது
ஆண்டு வருமானம் 1,200 ரூபாயோ அல்லது அதற்கு மிகாமலோ
இருந்தால் அவர் கடனாளி என்று இந்தச் சட்டத்தால் கருதப்
பட மாட்டார்.

[பிற்பகல் 1-30]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதி
யுடன் பேரவையின் நேரம் 5 நிமிடம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. அ. ரகுமான்கான் : நிலமோ, வீடோ இருந்து வாடகை
வருமானம் 1,200-க்கு மேலோ அல்லது அதற்கு மிகாமலோ
இருந்தால், அவர்கள் கடன்காரர்கள் என்று சட்டத்தால் கருதப்
படமாட்டார்கள். ஆகவே, கடன் நிவாரணச் சட்டத்தின் கீழ்
பயன் கிடையாது என்று சொல்லப்பட்டு இருக்கிறது. இதைத்
தான் நாங்கள் எதிர்க்கிறோம். கடன் நிவாரணச் சட்டத்தின்
படி வசதி படைத்தவர்கள் பயன் அடையக் கூடாது என்பது
வரவேற்கத்தக்கதுதான். ஆனால் பஞ்சாயத்துப் பகுதியில்,
முனிசிபாலிட்டிப் பகுதியில், கன்டோன்மென்ட் பகுதியில், கார்ப்ப
ரேஷன் பகுதியில் நிலமோ, வீடோ இருந்தால் அதற்கு வரு
மானம் வாடகை மூலம் ரூ. 100 மாதத்திற்கு வந்தால், அல்லது
ஆன்னுயுவல் இன்கம் ரூ. 1,200 இருந்தால் அவர்களுக்கு இந்
தச் சட்டத்தின் கீழ் நிவாரணம் கிடையாது என்று சொல்வது
சரியான கருத்து இல்லை. ஆண்டு வருமானம் ரூ. 1,200
என்று சொன்னால், ஒரு மாதத்திற்கு ரூ. 100 தான் வருமானம்
என்று சொல்ல வேண்டும். சென்னையைப் பொறுத்த வரை
யில், ரூ. 100 மாத வாடகை வருகிறது என்று சொன்னால்
அவர்கள் பெரிய வசதிப் படைத்தவர்கள் என்று சொல்லிவிட
முடியாது. ஆகவே, பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன், கார்ப்
பரேஷன், கன்டோன்மென்ட் என்று ஒவ்வொரு பகுதிக்கும் நில
வாடகை அல்லது வேறு வருமானம் வித்தியாசப்படும். ஆகவே,
கிரேடு டிபரன்சியேஷன் இருக்க வேண்டும். ஒட்டுமொத்தமாக
நிலமோ, வீட்டு வாடகையோ என்று சொல்லி வியாக்கியானம்
கொடுப்பது சரியல்ல.

அடுத்த முக்கியமான பிரச்னை ஒன்றை மாண்புமிகு சபா
நாயகர் அவர்களே, தங்கள் மூலமாக அமைச்சர் அவர்களின்
கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். 4,500 ரூபாய்க்குக்



1981 பிப்ரவரி 12] [திரு. அ. ரகுமான்கான்]

கீழே வருமானம் வருகின்ற குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் தாசில்
தாரிடத்தில் மனு கொடுத்தால், அவர்கள் அந்த மனுவை உடனடி
யாக பைசல் செய்வது இல்லை. காலதாமதம் செய்கிறார்கள்.
கடன் கொடுத்தவர்களுடன் தாசில்தார் தவறான வழியில்
தொடர்பு கொண்டு, எனக்கு வந்த தகவலை வைத்துச் சொல்லிக்
கொள்கிறேன், ஏழை, எளிய மக்கள் அளிக்கிற அந்த மனுவை
பைசல் செய்யாமல், அதன் மீது தீர்ப்பு அளிக்காமல் காலம்
கடத்துகிறார்கள். ஆகவே, அப்படிப்பட்ட மனுவை அந்த
ஏழை மக்கள் கொடுத்தால், அதற்கு ரிஜிஸ்டர்ட் அக்னாலெஜ்
மென்ட் தருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அப்படி இருந்
தால் தான் தாசில்தார்கள் அந்த மனுக்களை காலம் தாழ்த்தா
மல் உடனடியாகத் தீர்ப்பதற்கு சௌகர்யமாக இருக்கும் என்று
சொல்லிக்கொள்கிறேன்.

கடன் நிவாரணச் சட்டத்தின் மூலம் வசதி படைத்தவர்கள்
பயன் அடையக்கூடாது என்பது வரவேற்கத்தக்கது தான்.
ஆனால் அதே நேரத்திலே ஆண்டுக்கு ரூ. 1,200 நிலத்தின்
மூலமோ, வாடகை மூலமோ வந்தால் அவர்களே பணக்காரர்
கள் என்று முத்திரை குத்தி இந்தச் சட்டத்தின்கீழ் பயன் இல்லை
என்று சொல்வது நியாயமாகாது என்பதைத் தெரிவித்துக்கொள்கி
றேன். அதைப்போலவே 4,500 ரூ. வருமானம் உள்ள ஏழை
எளிய மக்கள் மனு கொடுக்கிறபோது, தாசில்தார்கள் சரி
யான நடவடிக்கை எடுப்பது இல்லை. ஆகவே, இந்தச் சட்டம்
எதற்காகக் கொண்டு வரப்பட்டதோ அந்த நோக்கம் நிறை
வேற்றப்படாமல் இந்தச் சட்டம் எலும்புக்கூடாக, வெறும் ரத்த
மும் சதையும் அற்றதாக இருக்கும் சட்டமாக இருப்பதால்,
பலன் ஒன்றும் ஏற்பட்டு விடாது. அதை நடைமுறைப்படுத்த
வேண்டும்.

இந்த 3-வது பிரிவைப் பொறுத்தவரையில், வருஷத்திற்கு
1,200 ரூ. என்ற பிரிவை நீக்க வேண்டும். ஒவ்வொரு இடத்
திற்கும், ஒவ்வொரு பகுதிக்கும் தனித்தனியாக வருமான வரம்பு
பிக்ஸ் செய்யப்பட வேண்டும். சென்னை என்று இருந்தால்
ரூ. 3,00 வைக்கலாம். மதுரை என்று இருந்தால் ரூ. 200
என்று வைக்கலாம். ஆகவே, இந்தக் கருத்தை அரசாங்கம்
பரிசீலிக்க வேண்டும் என்று சொல்லி, என்னுடைய திருத்தத்தை
ஆதரித்து இந்த அளவில் முடிக்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் காலை அலு
வல்கள் இத்துடன் முடிவுற்று மாலை 3 மணிக்கு பேரவை மீண்
டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-35 மணிக்கு ஒத்தி வைக்கப்
பெற்றது.

[1981 பிப்ரவரி 12

பிற்பகல் 3–00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

3. அரசினர் சட்ட முன்வடிவுகள்— தொடர்ச்சி

(இ) கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு 1981— தொடர்ச்சி

**திரு. என். சங்கரய்யா** : பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த சட்டமன்றத்தின் ஆய்வில் இருக்கக்கூடிய இந்த சட்ட முன்வடிவு தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு கடன் நிவாரணச் சட்டத்திற்கு ஒரு திருத்தச் சட்டமாகும். அந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டபோது அதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆதரிக்கிறது. இப்போதும் இந்த திருத்தங்களைப் பொறுத்தவரையில் எந்த நோக்கத்திற்காக அந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டதோ அந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு இந்த திருத்தங்கள் பயன்பட வேண்டுமென்ற ஒரு கவலையில் தான் நாங்கள் சில திருத்தங்களைக் கொடுத்திருக்கிறோம்.

பொதுவாக 4,800 ரூபாய் ஆண்டு ஒன்றுக்கு குடும்ப வருமானம் இருக்கக்கூடிய ஒரு குடும்பத்திற்கு, அவர்கள் தனிப்பட்டவர்களிடம் வாங்கியிருக்கக்கூடிய கடன்களிலிருந்து நிவாரணம் அளிக்கக்கூடிய சட்டம்தான் மூலச் சட்டம். 1979 ஆம் ஆண்டு டிசம்பர் 31-ந் தேதி முடிய அவர்கள் தனிப்பட்டவர்களிடம் கடன் வாங்கியிருந்தால் அந்த கடனை இந்த மூலச் சட்டம் ரத்து செய்தது. அதற்கான மனுக்கள் வாங்கப்பட்டு வருகின்றன. இதற்கிடையிலே இந்த திருத்தச் சட்டத்திலே என்ன சொல்லியிருக்கிறது என்றால் சில வசதிபடைத்தவர்கள் தவறான முறையிலே இதை பயன்படுத்தி, நிவாரணம் பெறுகின்ற காரணத்தால், வசதி படைத்தவர்களுக்கு அந்த நன்மை, அந்த பலன் கிடைக்கக்கூடாது என்பதால், ஏழை எளிய மக்களுக்கு தான் அந்த பலன் கிடைக்க வேண்டுமென்று அரசு கருதுவதால் இந்த திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள்.

இதிலே இந்திய அரசாங்கத்தினுடைய வருமான வரிச் சட்டத்தின்படி வருமான வரி செலுத்தக்கூடியவர்களுக்கு இந்தச் சட்டத்தினுடைய பலன் தேவையில்லை என்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன். இந்த மாநில சர்க்காருக்கு விற்பனை வரி செலுத்தக்கூடியவர்களுக்கு இந்தச் சட்டத்தினுடைய நன்மை கிடைக்க வேண்டாம் என்பதையும் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் அதற்கு அடுத்தபடியாக வந்திருக்கிற காரணங்களைப் பொறுத்த மட்டில் எங்களுக்கு மாற்று யோசனை இருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால் ஒருவர் சொந்த வீடு வைத்திருந்தால், அதில் அவர் குடியிருந்தாலும் அவருக்கு மாதம் 100 ரூபாய் வீதம் ஆண்டுக்கு 1,200 ரூபாய் வீட்டின் வாடகையாக இருந்தால் இந்த கடன் நிவாரணச் சட்டத்திலே அவர்களுக்கு நன்மை கிடைக்காது என்று சொல்லப்பட்டிருக்கிறது.



1981 பிப்ரவரி 12] [திரு. என். சங்கரய்யா]

இன்று இருக்கக்கூடிய சூழ்நிலையில் ஒரு சாதாரண மனிதன் கூட இந்த 100 ரூபாய் வாடகைக்கு ஒரு வீட்டிலே குடியிருக்க லாம். ஒருவர் தன்னுடைய வீட்டை 100 ரூபாய் வாடகை வரும் அளவிலுள்ள வீட்டை, வாடகைக்கு விடாமல் தானே அதில் குடியிருக்கலாம். மூலச் சட்டத்தில் 4,800 ரூபாய், மாதம் ஒன் றுக்கு 400 ரூபாய் வருமானம் வந்தால்கூட அவருக்கு இந்தச் சட்டத்தினால் பலன் கிடைக்கும்.

அவர் அந்த வீட்டிலே குடியிருக்கிறார் என்றால் அதை வரு மானம் என்று சொல்ல முடியாது. ஆகவே அவர் அந்த வீட் டிலே குடி இருந்தாலும் அல்லது வாடகைக்கு விட்டிருந்தாலும் அல்லது விடாவிட்டாலும் என்று கூறப்பட்டிருக்கின்றது. அந்த வீட்டின் வாடகை என்ற அளவில் 100 ரூபாய் வந்தாலும் மேலும் 300 ரூபாய் அவருக்கு வேறு வகையிலே வருமானம் வந்தால் தானே மாதம் ஒன்றுக்கு அவருக்கு 400 ரூபாய் கிடைத்ததாக அர்த்தம். ஆகவே சாதாரணமாக வேறு ஒரு வருமானமும் இல்லாமல் வெறும் 100 ரூபாய் மட்டும் அந்த வீட்டின் மூலம் வாடகையாகப் பெற்றுக்கொண்டிருந்தால் அவருக்கு இந்த சட்டத்தின்கீழ் நன்மை கிடைக்காது. அவர் வாங்கி இருக்கின்ற கடனை அவர் திருப்பிச் செலுத்த வேண்டும் என்று இருக்கிறது அது நியாயமாகப் படவில்லை. ஆகவே நாங்கள் கொடுத்தி ருக்கக்கூடிய திருத்தம் என்னவென்றால் அப்படி ஒரு வீட்டை வைத்திருப்பவர்கள் அந்த வீட்டை வாடகைக்கு விட்டு வேறு வருமானமும் அவர்களுக்கு வந்து அது ஆண்டுக்கு 4,800 ரூபாய்க்கு மேல் போனால் அவர்களுக்கு இந்தச் சட்டத்தின் பலன் கிடைக்க வேண்டியதில்லை. ஆனால் அந்த வாடகையும், வருமானமும் இந்த குறிப்பிட்ட தொகைக்கு கீழே இருந்தால் நிச்சயமாக இந்தச் சட்டத்தின் பலன் அவர்களுக்குக் கிடைக்க வேண்டும். இதுதான் எங்களுடைய அபிப்பிராயம். இப்படிப்பட்டவர் களுக்கு ஏதோ நீதிமன்றத்தினுடைய ஆணை மற்றவைகளை வைத்துக்கொண்டு இந்த சட்டத்தின் பலன் கிடைக்காமல் செய் வது சரியாக இருக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக நிலம் வைத்திருப்பது பற்றி சொல்லப்பட்டி ருக்கிறது. அதாவது நீர்ப்பாசன நிலம் 5 ஏக்கருக்கு மேல் வைத்திருக்கக்கூடியவர்களுக்கு இந்த சட்டத்தின் பலன் கிடைக்க வேண்டியதில்லை. அதேபோல் நீர்ப்பாசனம் இல்லாத நிலம் 10 ஏக்கருக்கு மேல் வைத்துக்கொண்டிருப்பவர்களுக்கும் இந்த சட்டத்தின் பலன் கிடைக்க வேண்டியதில்லை. ஆனால் இன்டிவிஜுவலி ஆர் ஜாயின்ட்லி என்று இங்கே கொடுக்கப்பட்டி ருக்கின்றது. அதாவது 5 அல்லது 6 சகோதரர்கள் என்று இருக்கின்ற நிலைமையில் அவர்கள் அனைவருக்கும் சேர்த்து 5 ஏக்கருக்கு மேல் நீர்ப்பாசன வசதி உள்ள நிலத்தை வைத்தி ருந்தால் அவர்கள் ஒவ்வொருவருக்கும் இந்த சட்டத்தின்கீழ் பலன் கிடைக்காமல் போய்விடும். அதேபோன்று அவர்கள்

பத்து ஏக்கருக்கு மேலே நீர்ப்பாசன வசதி இல்லாத நிலம் வைத்திருந்தாலும் அவர்களில் ஒவ்வொருவருக்கும் இந்த சட்டத்தின்கீழ் பலன் கிடைக்காமல் போய்விடும். இப்படிக் கூறப்பட்டிருப்பது நியாயமா? ஆகவே அதிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற ஜாயின்ட்லி என்ற வார்த்தையை, அதாவது கூட்டாக என்று கூறப்பட்டிருக்கின்ற வார்த்தையை நீக்க வேண்டும் என்று எங்களுடைய திருத்தத்திலே கொடுத்து இருக்கிறோம். ஒருவர் தானே சொந்த முறையிலே 5 ஏக்கருக்கு மேலே நீர்ப்பாசன நிலம் வைத்திருந்தால் அவருக்கு இந்த சட்டத்தின் பலன் கிடைக்க வேண்டியதில்லை, அதேபோன்று சொந்த முறையிலே 10 ஏக்கருக்கு மேலே நீர்ப்பாசனம் இல்லாத நிலம் வைத்திருந்தாலும் இந்த சட்டத்தின் பலன் அவருக்குக் கிடைக்க வேண்டியதில்லை., அதேமாதிரி ஒருவருக்கு 4,800 ரூபாய்க்கு மேலே ஆண்டு வருமானம் வருகிறதென்றாலும் அவர்களுக்கும் இந்த சட்டத்தின் பலன் கிடைக்க வேண்டியதில்லை. அதேபோன்று 4,800 ரூபாய்க்கு மேலே வருமானம் வருகின்ற எந்த குடும்பத்திற்கும் இந்த சட்டத்தின் பலன் கிடைக்கவேண்டியதில்லை. ஆனால் அதற்குக் குறைவாக வருமானம் பெறுகின்ற எல்லா குடும்பத்திற்கும் அந்தப் பலன் கிடைக்க வேண்டும். அடுத்து 25 ஆயிரம் ரூபாய்க்கு மேற்பட்டு அசையாத சொத்துக்களை தனியாகவோ கூட்டாகவோ வைத்திருந்தால் அவருக்கு இதனால் நன்மை இல்லை என்று இருக்கின்றது. இங்கேயும் அந்த கூட்டாகவோ என்ற வார்த்தை நீக்கப்பட வேண்டும்., 25 ஆயிரம் ரூபாய் பெறுமானமுள்ள சொத்து வைத்திருந்தாலும் அதிலிருந்து வருகின்ற வருமானம் என்ன வருகின்றது என்பதைக் கணக்கிட வேண்டும். அப்படிப்பட்டவர்களுக்கு இந்த சட்டத்தில் சொல்லி இருப்பது மாதிரி ஆண்டு வருமானம் 4,800 ரூபாய்க்கு கீழே இருந்தாலும் அவர்கள் இவ்வளவு சொத்து வைத்திருப்பதன் காரணத்தால் அவர்களுக்கு இந்த சட்டத்தின் பலன் கிடைக்காமல் அவர்கள் பாதிக்கப்படுவார்கள்.

அடுத்து குழந்தைகளுக்கும், விதவைகளுக்கும் இந்த சட்டத்திலே இருந்து விலக்களிக்கப்பட்டிருப்பதை ஏற்றுக் கொள்ளலாம். ஆனால் பெண்கள் கடன் கொடுத்திருந்தாலே அவர்களுக்கு இந்த சட்டத்திலிருந்து விதிவிலக்கு அளிக்க வேண்டும் என்று இருப்பது டிஸ்கிரிமினேஷனாகும். நாம் ஆண்களும், பெண்களும் சமம் என்று சொல்கிறோம். ஆண்கள் குற்றம் செய்தாலும், பெண்கள் குற்றம் செய்தாலும் சமமாகத்தான் தண்டிக்கப்படுகின்றனர். அதேபோல் ஆண்கள் நல்லது செய்தாலும், பெண்கள் நல்லது செய்தாலும் நாம் சமமாகத்தான் பாராட்டுகிறோம். தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் லேவாதேவிக்காரர்களில் பெரும்பான்மையோர் பெண்கள். அவர்கள் கடுமையான வட்டி வாங்குகிறார்கள். ஆகவே இந்த சட்டத்திலே இப்படி சொல்லப்பட்டிருப்பதன் காரணத்தால், வழக்குகள் போடப்படுகின்ற சூழ்நிலையிலே ஒருவன் தன்னுடைய பெண்டாட்டியிடத்திலே கடன் வாங்கி இருப்பதாகச் சொல்லி அதற்கான





திலே ஏற்பாடுகளை எல்லாம் தயாரித்து, செய்தால், இந்த
சட்டத்தின் மூலம் யார் யாருக்கு நன்மை ஏற்பட வேண்டும்
என்று கருதி கொண்டுவரப்பட்டதோ அவர்கள் அனைவருக்கும்
அந்த நன்மை கிடைக்காமல் செய்யப்பட்டுவிடும் என்பதைத்
தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 3-10).

அவர்கள் செய்ய வேண்டிய ஒரே வேலை அவர்களிடத்தில்
வாங்கியிருக்கக்கூடிய பணத்தை, தன்னுடைய மனைவியிட
மிருந்து பெற்றுக் கொண்டார்கள் என்று மாற்ற வேண்டிய ஒன்று
தான். ஆகவே பொதுவாக பெண்களிடத்தில் வாங்கி கடன்
என்று சட்டத்தில் இடம் பெறக் கூடாது. அது சரியல்ல.
மொத்தத்தில் 4,800 ரூபாய்க்கு குறைவாக வருமானம் உள்ள
யர்களுக்கு கிடையாது என்றுதான் ஏற்கனவே இருக்கிறதே. அது
போதும். கைம் பெண்கள், குழந்தைகள் என்று போட்டிருக்கும்
விதி விலக்குகளை வேண்டுமானால் ஏற்றுக் கொள்ளலாம்.
ஆனால் பொதுவாக பெண்கள் என்று குறிப்பிடுவதில் பல பினாமி
கள் ஏற்பட வாய்ப்பு உண்டு. ஏனென்றால் இந்தச் சட்டம்
விளம்பரப்படுத்தப்பட்டு இப்போது தான் கொண்டு வரப்
பெற்றிருக்கிறது. அதனால் இப்போதே தாசில்தார் அலுவல
கத்தில் இப்படி விண்ணப்பங்கள் வருகின்றன. ஆகவே யாருக்கு
நன்மை செய்ய வேண்டும் என்று இந்தச் சட்டம் கொண்டு
வரப்படுகிறதோ அவர்களுக்கு நன்மையை தர முடியாது போய்
விடும் என்பதை குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

அதேபோல் கைம்பெண்கள், குழந்தைகள் என்று விதி
விலக்கு வைத்திருப்பதிலும் ஒன்றை குறிப்பிட்டுச் சொல்ல விரும்பு
கிறேன். இரண்டு மூன்று ஆண்டுகளுக்குள் திருப்பிக் கொடுத்து
விட வேண்டும் என்று கண்டிஷனோடு வட்டியை தள்ளுபடி செய்து
விட வேண்டும். அவர்களுக்கும் பணம் போய் சேர்ந்து விடும்.
கடன் வாங்கியவர்களுக்கும் உபயோகமாக இருக்கும். ஏனென்
றால் அரசு இரு தரப்பினரையும் மனத்தில் கொள்ள வேண்டும்.
கைம்பெண்கள், குழந்தைகள் ஆகியவர்களிடம் வாங்கிய கடன்
என்றாலும் கூட இப்படி ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்தால்
நலமாக இருக்கும். அது மட்டும் அல்ல. இந்தச் சட்டங்களை
நிறைவேற்ற என்று தனியாக அலுவலர்களை நியமிக்க வேண்டும்.
ஒவ்வொரு தாலுக்காவிலும், ரெவின்யூ வேலைகள் இல்லாத ஒரு
தாசில்தார் இந்த வழக்குகளை விசாரணை செய்ய என்று தனியாக
நியமிக்கப்பெற வேண்டும்.

அதுமட்டுமல்லாமல், டிசம்பர் மாதம் 31 ஆம் தேதியோடு
இதற்கான காலம் முடிந்து விடுகிறதாக குறிப்பிடப்பெற்றிருக்கி
றது. மேற்கொண்டு வேண்டுமானால் 31 ஆம் தேதி ஜனவரி
மாதம் 1981 ஆம் வருடம் வரை விலக்கு அளிக்கலாம் என்று
சொல்லியிருக்கிறீர்கள். அப்படி என்றால் 1980 ஆம் வருடம்

[திரு. என். சங்கரய்யா] [1981 பிப்ரவரி 12

..சம்பர் 31 ஆம் தேதிவரை இருக்கக் கூடிய கடன்களுக்குத் ...ான் நிவாரணம் கிடைக்கும். அதற்குப் பிறகு நிகழ்காலத்தில் ...கொடுக்கப்பெற்றிருக்கும் கடன்களுக்கு கிடைக்காது. ஆகவே, ..981 ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரையிலும் அந்த மனுக்களை ...ாங்க அனுமதி கொடுத்தால் சட்டப்படி உரிமை பெற்றவர்கள் ...ாப்பாற்றப்பெறுவார்கள். யாருக்காக யாரை காப்பாற்ற ...வண்டும் என்ற எண்ணத்தில் சட்டம் கொண்டு வரப்படுகி ...தோ, அந்த ரக மக்களுக்கு அது நன்மையை அளிக்கும் ...ன்பதை எடுத்துச் சொல்லி, இதன் மூலச் சட்டத்தை நாங்கள் ஆதரிக்கிறோம். அதற்கு இப்பொழுது கொண்டு வந்திருக்கிற திருத்தத்தைப் பொறுத்த வரையில், உங்கள் திருத்தங்களை ஏற் றுக் கொள்கிற அதே நேரத்தில் நாங்கள் கொடுத்திருக்கிற திருத்தங்களையும் பரிசீலித்து அதையும் இதனோடு சேர்த்து எந்தக் கொள்கையும் முன்பின் முரண் இல்லாத வகையில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டு அமர்கிறேன்.

திரு. கே. குப்புசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே உள்ள ஏழை எளிய கடன் பட்ட மக்களை கடன் தொல்லையிலிருந்து விடுவிக்க வேண்டும் என்ற திட்டத்தில் தமிழக அரசு இதன் மூலச் சட்டத்தை முத லிலே கொண்டு வந்து, அதையொட்டி சில வசதி படைத்தவர் கள் கடன் வாங்கிய பெயரில் அதிக லாபம் அடைந்து விடக் கூடாது என்ற எண்ணத்தில், இந்த திருத்தச் சட்டத்தை தமிழக அரசு கொண்டு வந்திருப்பதை நான் பாராட்டுகிறேன். நான் மட்டும் இல்லை இந்த கடன் சுமையிலிருந்து விடுபடவிருக்கும் ஏழை எளிய மக்கள் நிச்சயமாக இந்த அரசை பாராட்டுவார்கள் என்றும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

எனக்கு முன்னாலே பேசிய மதிப்பிற்குரிய மார்க்சிஸ்ட் கம் யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. சங்கரய்யா அவர்கள் ஒரு சில கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். அதற்குப் பதிலாக என்னுடைய கருத்தை நான் எடுத்து வைக்க கடமைப்பட்டிருக்கி றேன்.

அதிலே, பெண்கள் கடனுக்கு விதிவிலக்கு கொடுத்திருப்ப தைச் சுட்டிக் காட்டி, இப்படி விதிவிலக்கு கொடுத்திருப்பதால் பலவிதமான வேறு பயன்கள் ஏற்படும் என்றும் உதாரணமாக ஆண்கள் பெயரில் இருக்கும் கடன்களை பெண்கள் பெயரில் டுள்ள கடன்களாக மாற்றிவிடுவார்கள் என்றும் எடுத்துக் காட் டிப் பேசினார். அவருடைய கவனத்திற்கு நான் ஒன்றைக் கொண்டு வர விரும்புகிறேன். இதனுடைய மூலச்சட்டமே 1938 லே தான் முதன் முதல் வந்தது. இந்தச் சட்டத்தின் பெயரால் சென்னை உயர்நீதி மன்றத்திலும் வழக்குகள் நடை பெற்று, உச்சநீதி மன்றம் வரைக்கும் சென்று அங்கே தீர்ப்புகள் வழங்கப்பெற்றிருக்கின்றன.



1981 பிப்ரவரி 12] [திரு. கே. குப்புசாமி]

அதிலே இந்தக் கடன் யார் யாருக்கு எந்த வகையில் கட்டுப் படுத்லாம் என்பதற்கு மூன்று ஆதாரமான கருத்துக்களை தீர்ப்புகளாகக் குறிப்பிட்டிருப்பதை நான் எடுத்துச் சொல்லி யாகவேண்டும். ஒருவர் கடன்பட்டிருக்கும்போது அந்தக் கடன் யாரிடம் இருக்கிறது? at the time of incurring the debt அடுத்தபடியாக at the time of filing the suit தாவா யாருடைய பெயரில் இருக்கிறது, கடன்பட்டது யார் பேரில் இருக்கிறது, அதேபோன்று at the time of realising the debt கடன் வசூலிக்கிறபோது அந்தக் கடன் யாரிடம் இருக்கிறது. ஆகவே முதலில் ஒரு பெண் பேரில் கடன் இருந்தால் கடைசி வரை அவர் பேரில்தான், இந்த மூன்று காரியங்களுமே அவர் பெயரில் இருந்தால்தான் அந்தப் பயனை அவர் அடைய முடி யுமே தவிர மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரய்யா அவர்கள் சொன்னதுபோல் ஒரு ஆண் பேரில் உள்ள கடன் பெண்களுக்குக் கொடுத்திருக்கிற விதிவிலக்கை வைத்து நிச்சயமாக ஒரு ஆண் பயன் அடைய முடியாது என்பதற்கு உச்சநீதிமன்ற தீர்ப்புகள் பாதுகாப்பாக இருப்பதால் அதை வர வேற்க வேண் டுமே தவிர அதைத் திருத்த வேண்டிய அவசியமில்லை.

அடுத்து, ஒன்றைச் சொன்னார்கள், "Whether individually or jointly owns in this State or elsewhere" என்றிருக்கிறது. 'இன்டிவிட்யுவலி' என்றிருக்கவேண்டுமே தவிர 'ஜாயின்ட்லி' என்றிருக்கக்கூடாது என்று சொன்னார்கள், ஒட்டுமொத்தமாக இருக்கக் கூடாது என்று சொன்னார்கள். ஜாயின்ட் பாமிலி என்பதற்கு டெபனிஷன் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஜாயின்ட் பாமிலி என்பதற்கு இன்கம் டாக்ஸ் ஆக்டில் டெப னிஷன் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகிரிகல்சர் இன்கம் டாக்ஸ் ஆக்டில் ஜாயின்ட் பாமிலி என்பதற்கு டெபனிஷன் கொடுக்கப்பட்டிருக்கிறது. மத்திய, மாநிலச் சட்டங்களில் ஒரேமாதிரியான டெபனிஷன்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒட்டுமொத்தமாக வருமானத்தை அனுபவிக்கக்கூடிய ஒரு ஜாயின்ட் பாமிலி என்று வரும்போது அவர்களுக்கும் இந்தச் சட்டம் பொருந்தும்படியான வகையில்தான் இந்தச் சட்டத்தை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்களே தவிர இதில் மாற்றுவதற்கு ஒன்றுமில்லை.

கடன் பட்டவர்கள் கூட தனிப்பட்ட முறையில் வருமானம் வரக்கூடியவர்களாக இருக்கலாம். ரூ. 4,800-க்கு குறைவான வருமானம் வருபவர்களுக்கு இந்தச் சட்டம் பயன் அளிக்கிறது என்பதால் தனிப்பட்ட முறையில் சொத்து வைத்திருந்தால் நப்பித்துக்கொள்வார்கள் என்பதை அரசு உணர்ந்து ரூ. 25,000 இம்மூவையின் ப்ராப்பர்டி இருந்தாலும், அல்லது வேக் கன்ட் லேண்ட் இருந்தாலும், அல்லது ரெகுலர் இன்கம் இருந்தா லும் ஒட்டுமொத்தமாக ஒருவருக்கு ரூ. 25,000-க்கு மேல் வரு மானம் இருந்தால் அவர்களுக்கு இந்தச் சலுகை இல்லை என்று கொண்டுவரப்பட்டிருக்கிறது.

[1981 பிப்ரவரி 12

திரு. என். சங்கரய்யா : ரூ. 25,000 என்பது சொத்து
மதிப்பு.

திரு. கே. குப்புசாமி : வருமானம், சொத்து மதிப்பு இரண்
டும் சேர்த்து.

திரு. என். சங்கரய்யா : வருமானம் இல்லை, ரூ. 25,000
வருமானம் இருந்தால் யாரும் நிவாரணம் கேட்கமாட்டார்கள்.

திரு. கே. குப்புசாமி : "Whether individually or jointly owns in
this State or elsewhere both agricultural lands and other immo-
vable property, the market value of both such agricultural lands
and other immovable property exceeds twenty-five thousand
rupees."

நிலமாக இருந்தாலும், காலி இடமாக இருந்தாலும் ரூ.
25,000-க்கு மேல் வருமானம் இருந்தால் அவர்கள் பயனடைய
மாட்டார்கள். ஏற்கனவே உள்ள சட்டத்தின்படி தப்பித்துக்
கொண்டவர்கள் இந்தச் சட்டத்தின் பிடியில் வருகிற அளவிற்கு
இதைக் கொண்டுவந்தமைக்கு பாராட்டுகிறேன்,

திரு. அ. ரகுமான்கான்: நம்முடைய மாண்புமிகு அண்ணா
திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் தவறாகப் புரிந்துக்
கொண்டு பேசுகிறார் என்று நினைக்கிறேன். ஆண்டுக்கு ரூ.
25,000 என்பது—either from land or house, whether let out
or in possession or in occupation என்பதை தவறாகப் புரிந்து
கொண்டு பேசுகிறார்.

திரு. கே. குப்புசாமி : சட்டத்தைப் படித்து சரியாகத்தான்
சொல்கிறேன். வேறு ஏதாவது விளக்கங்கள் கேட்டால் பதில்
சொல்கிறேன்.

ஏற்கனவே மூலச் சட்டத்தின்படி சலுகைகளை அனுபவித்த
வர்கள் இந்தச் சட்டப்படி அவற்றை அனுபவிக்க முடியாத ஒரு
நிலை ஏற்பட்டிருக்கிறது. நிச்சயமாக அந்தச் சலுகைகளை
அவர்கள் பெறமாட்டார்கள் என்ற வகையில் 7-வது பிரிவு,
Removal of doubts என்று சேர்க்கப்பட்டிருக்கிறது. ஆகவே
வசதி உள்ளவர்கள் இந்தச் சட்டத்தில் இருந்து தப்பித்துக்
கொள்ள எந்தவிதமான இடமும் இல்லை. ஆக சிறந்த முறையில்
இந்தத் திருத்தச் சட்டத்தைக் கொண்டுவந்ததற்காக தமிழக
அரசைப் பாராட்டி இதை வரவேற்கிறேன்.

[பிற்பகல் 3-20].

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, கடன் நிவாரண திருத்தச் சட்டத்தின்
பேரால், திரு. சங்கரய்யா அவர்கள் கொடுத்திருக்கிற திருத்தத்தை
ஆதரித்து ஒருசில கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன்.



1981 பிப்ரவரி 12] [திரு. பொ. உத்திராபதி]

இந்த கடன் நிரவாரணச் சட்டம் இன்றைக்கு மத்தியிலே
இருக்கக்கூடிய காங்கிரஸ் கட்சி 2,400 ரூபாய் வருமானம் உள்ள
வர்களுக்கு நிவாரணம் கொடுப்பதற்காக கொண்டு வந்தார்கள்.
அந்தக் கடன் நிவாரணச் சட்டம் கொண்டு வருகின்றபோது,
தமிழகத்திலே பெரும்பான்மையான இடங்களிலே மக்களுக்கு
இதை எடுத்துச் சொல்லியவர்களில் நாங்களும் ஒருவர். ஆனால்,
அதன் மூலமாக ஜனங்களுக்கு, ஏழை எளியவர்களுக்கு நன்மை
கிடைத்ததா என்றால், கிடைக்கவில்லை. அதற்குப் பிறகு,
அனைத்திந்திய அண்ணா தி.மு.க. அரசு, அதிலே திருத்தம்
செய்து 4,800 ரூபாய் வருமானம் உள்ளவர்களுக்கு இந்தக் கடன்
சலுகை கிடைக்குமென்று சட்டம் கொண்டு வந்தார்கள்.
அப்படி சட்டம் கொண்டு வருகின்றபோது, இந்திய கம்யூனிஸ்ட்
கட்சி சார்பாக நாங்கள் அதை வரவேற்றோம் ; ஆதரித்தோம்.
ஆனால், சட்டம் கொண்டு வந்ததற்குப் பின்னால், இப்போது
ஒரு திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இந்த
திருத்தச் சட்டத்தின் முக்கியமான நோக்கம், எந்தச் சட்டத்தை
யும் நாம் ஆண்டு ஆண்டுகளாகப் போட்டாலும், இந்தச் சட்டத்
திலே இருக்கக்கூடிய ஓட்டைகளைப் பயன்படுத்தி பெரிய
வசதி படைத்தவர்கள், இந்த வழிமுறைகளைப் பயன்படுத்தி
பலனைப் பெற்றுக் கொள்ளுகிறார்கள்.

குறிப்பாக, இந்தச் சட்டத்திலே ஒரு திருத்தம் கொண்டு
வந்திருக்கிறார்கள். உண்மையிலேயே இந்த திருத்தப்படி ஏழை
எளியவர்களுக்கு நன்மை கிடைக்க வேண்டுமென்று சொன்னால்,
சட்டம் போட்டு இத்தனை ஆண்டுகளாகியும், எந்த மக்களுக்காக
எந்த ஏழை எளியவர்களுக்காக, இந்த நாட்டிலே உழைத்து
உழைத்து இன்றைக்கு ஒருவேளை உணவுகூட இல்லாமல்
தமிழகத்திலே 62 சதவீதம் மக்கள் வறுமைக் கோட்டிற்கு
கீழே இருக்கக்கூடிய மக்களுக்காக கொண்டு வந்திருக்கக்கூடிய
இந்தச் சட்டம் எந்த அளவுக்கு மக்களுக்கு பலன் கிடைத்திருக்
கின்றது என்பதைப் பற்றி இன்னும் ஆராயலாம். ஆனால்,
நாம் நல்ல சட்டத்தைப் போடுகிறோம் ; அதை நல்ல நோக்கத்
தோடு கொண்டு வருகிறோம் ; அந்த நல்ல நோக்கத்தோடு
இந்த சட்டமன்றத்திலே அதை விவாதிக்கிறோம் ; இறுதியிலே
அதை நிறைவேற்றுகிறோம். ஆனால், அப்படி நிறைவேற்றி
முடிந்ததற்குப் பிறகு, இந்தச் சட்டம் கீழே போகின்றபோது,
உண்மையிலேயே சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் அந்த மக்களுக்கு
அந்தப் பலன் கிடைக்கச் செய்வதற்கு அவர்கள் தயாரா என்று
பார்க்கிறபோது, இல்லை என்றுதான், அதை நான் ஒரு குற்றச்
சாட்டாகச் சொல்ல விரும்புகிறேன். காரணம், என்னிடத்திலே
ஒரு நகல் இருக்கிறது. இதே கடன் நிவாரணச் சட்டத்தின்
படி திருநெல்வேலி ஜில்லாவிலே, சங்கரன்கோவில் தாசில்தார்
கொடுத்திருக்கிறார். முதலில் ஒரு சர்டிபிகேட் ரூ. 3,860
வருமானம் என்றும், அடுத்து டிசம்பர் மாதம் ரூ. 6,590 என்றும்
கொடுத்திருக்கிறார். முதலில் கொடுத்தது, 18—8—1980லே ;
இரண்டாவது கொடுத்தது 4—12—1980-லே. (குறுக்கீடு

[திரு. பொ. உத்திராபதி] [1981 பிப்ரவரி 12

பெயரைக் குறிப்பிட வேண்டியதில்லை ; சங்கரன்கோவில்
தாசில்தார் அப்படி கொடுத்திருக்கிறார். இப்படி ஒரு தாசில்தார்
ஒரு வருடத்திற்குள் இரண்டு தடவை சர்டிபிகேட் கொடுத்திருக்
கிறார். எந்த சாதாரண மக்களுக்காக, நிவாரணம் கொடுக்க
வேண்டுமென்று நிறைவேற்றுகிறோமோ. அதை நிறைவேற்றக்
கூடிய அதிகாரி இப்படி கொடுப்பதற்குக் காரணம் என்ன
என்பதைப் பற்றி அரசு பரிசீலிக்க வேண்டும்.

என்னுடைய தொகுதியிலே நான் கண்ணாலே பார்த்திருக்
கிறேன். இப்படி ஆயிரக்கணக்கான மனுக்கள் கிராமத்திலே
வருகின்றது. இப்போது விவசாயிகள் நிலத்திலே நிலப் பிரபுக்
கள், வசதி படைத்தவர்கள் நுழையக் கூடாது என்று சொல்வதை
வரவேற்கிறோம். ஆனால், இந்தச் சட்டத்தின்படி அவர்களுக்கு
நிவாரணம் கிடைக்க வேண்டுமென்று சொன்னால், அது அவர்
களுக்குக் கிடைக்கவேண்டும்,

இப்போது இருக்கும் அதிகாரிகள் இதுவரை செய்து வந்த
முறை ஒரு விவசாயக் குடும்பத்தில் ஐந்து பேர் இருக்கிறார்கள்
என்றால், தகப்பனுக்கு ரூ. 7.80 கூலி ; பெரிய பையனுக்கு
ரூ. 7.80 கூலி ; மனைவிக்கு, ரூ. 6.20 கூலி ; பெண்ணுக்கு
ரூ. 6.20 கூலி ; சின்னப்பையனுக்கு, அரைஆள் கூலி
ரூ. 3 வருமானம் வருகிறது என்று கணக்கிடுகிறார்கள். எவ்வளவு
காலத்திற்கு அவர்களுக்கு வேலை கிடைக்குமென்றால் மூன்று
மாதங்களுக்குத்தான் கிடைக்கும். பாக்கி 9 மாதங்களுக்கு வேலை
கிடையாது. இது எல்லோருக்கும் தெரிந்த உண்மை. ஆனால்
தாசில்தார் எப்படி கணக்குப் போடுகிறார்? இந்த விகிதத்தில் 12
மாதத்திற்கும் கணக்கைப்போட்டு இந்தக் குடும்பத்திற்கு 7,000
ரூபாய் வருகிறது என்று சொல்லி கடன் பெற தகுதியற்றவர்
என்ற நிலைமையை உருவாக்கிவிடுகிறார்கள். ஆகவே,
சாதாரண ஏழை எளிய மக்களுக்கு இந்த நல்ல சட்டத்தின்
பலன் கிடைக்கவில்லை. எதிர்காலத்திலாவது அவர்களுக்கு இந்த
நன்மைகள் கிடைக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும்,
ரெவின்யூ அமைச்சர் அவர்களும் வழி செய்யவேண்டும். அதிகாரி
களுக்கு எவ்வளவுதான் எடுத்துக் கூறினாலும், அறிவுரை கூறினா
லும் இந்த மாதிரிச் சட்டங்களைப் பாதுகாக்கக்கூடிய முறையில்
இன்றுவரை அவர்கள் நடந்தது கிடையாது. இனிமேல் நடக்க
வேண்டுமென்று சொன்னால் ஒவ்வொரு ஒன்றிய அளவிலும்
எல்லாக் கட்சியினரும் கொண்ட சர்வ கட்சிக் குழு அமைத்து—
அந்தக் குழுவுக்கு தாசில்தார் தலைவராக இருக்கட்டும் ; அவர்
மனுவை வாங்கட்டும்—அவர்கள் மூலமாக குறிப்பிட்ட ஒருவர்
ஏழையா, வசதி படைத்தவரா என்று நிர்ணயித்தால் நல்ல
முறையில் நடக்கும். அப்படிச் செய்கிறபோது இந்தச் சட்டத்
தின் பெயரால் லட்சக் கணக்கான மக்களுக்குப் பலன் கிடைக்கு
மென்று பணிவான கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.



1981 பிப்ரவரி 11] [திரு. பொ. உத்திராபதி]

ஒருவருக்கு வீடு இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். அந்தக்
காலத்தில் ஐம்பதாயிரம் ரூபாய்க்குக் கட்டியிருப்பார்கள். இப்
போது இடிந்து கொண்டே இருக்கும். கவுரவத்திற்காக ஒரு
பட்டையைப் பூசிக்கொண்டு வாழக் கூடியவர்கள் நிறையப் பேர்
இருக்கிறார்கள். ஒரு வீட்டை மட்டும் வைத்தோ, 100 ரூபாய்
வாடகை வருகிறது என்பதை மட்டும் வைத்தோ அல்லது மனைவி
பெயரில் பத்து ஏக்கர், பிள்ளை பெயரில் பினாமி நிலம் இருக்
கிறது என்று சொல்லியோ முடிவு செய்ய முடியாது. நிலம்
என்று சொல்லும்போது எவ்வளவு ஏக்கர் என்பதை வரையறுத்
திருப்பதை வரவேற்கிறேன். கூட்டுறவுக் கடனுக்கு ஸ்டாண்டர்டு
ஏக்கர் என்று போட்டிருக்கிறோம். நிலம் என்று சொல்லுகிற
போது விளைகிற நிலம் இருக்கும், விளையாத நிலம் இருக்கும்.
தண்ணீர் பாயாத பிரதேசம் இருக்கும். அப்படிப்பட்டவர்
களுக்கும் இதனால் பலன் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

விவசாயத் தொழிலாளர்கள், கை வினைஞர்கள், கொத்து
வேலை செய்யக்கூடியவர்கள், ஆகியவர்களுக்கு அவர்களுடைய
வருமானத்தைக் கேட்காமல் நிவாரணம் கிடைக்கும் வகையில்
சட்டத்தைத் திருத்தினால் பலன் கிடைக்கும். அதுபற்றி நம்
முடைய அரசு மறு பரிசீலனை செய்ய வேண்டும், இந்தச்
சட்டத்தைத் திருத்தவேண்டுமென்று கேட்டு சந்தர்ப்பம்
கொடுத்த துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி அமர்
கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, 1980 ஆம் ஆண்டு தமிழ் நாடு
கடன் நிவாரணச் சட்டத்தின்கீழ், ஒரு கடனாளியாக இருப்பவர்
1—1—1980 ஆம் நாள் அன்று திருப்பிச் செலுத்த வேண்டிய
கடனை நிலுவையாக வைத்திருந்து அதே நேரத்தில் 31–12–1979
நாள் முடிவடைந்த ஆண்டுக்கு குடும்ப வருமானம் ரூ. 4,800-க்கு
மேற்படாமல் இருந்தால் அவர் கடன் சலுகைக்கு உள்ளாக்கப்
படுவார் என்று ஆக்ட் 13/80-ல் குறிப்பிட்டப்பட்டிருந்தது.

[பிற்பகல் 3-30].

ஆனால், அந்தச் சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வந்த
பிறகு, எந்த நோக்கத்தில் அந்தச் சட்டம் இயற்றப்பட்டதோ
அந்த நோக்கம் ஈடேறுவதற்குத் தடைக் கற்களாக வசதி
படைத்தவர்கள் ஆங்காங்கு இருந்தார்கள் என்ற செய்தி அரசுக்கு
வந்தபிறகுதான் இந்த அவசரச் சட்டத்தை உடனடியாகக்
கொண்டு வர வேண்டிய நிலை ஏற்பட்டது.

பணக்காரர்கள், பெரிய நிலச்சுவான்தார்கள், அளவு கடந்த
வருமானம் மிக்க கட்டிடங்களை நகர்ப்புறத்திலே உள்ளடக்கிய
வர்களெல்லாம் இதிலே பலன் பெற முயற்சித்தபோது இந்த

[திரு. சி. பொன்னையன்] [1981 பிப்ரவரி 12

அவசரச் சட்டம் அவசியமாகத் தேவைப்பட்டது. 18-10-1980-க்குள் ஏற்கனவே இருந்த சட்டத்தின் காலக்கெடு அதுவரைக்கும் மட்டும் நீட்டப்பட்டிருந்த காரணத்தால், குறிப்பாகக் கிராமப்புறங்களிலே இருக்கிற ஏழைமக்களுக்கு, படிக்காத, விவரம் புரியாத மக்களுக்கு இந்தச் சட்டத்தினுடைய தன்மை, இவ்வளவு காலம் இந்தச் சட்டம் நடைமுறையில் இருக்கிறது; அவர்களுக்குச் சலுகையை ஈர்க்க இருக்கிறது என்பதைக்கூட புரிந்து கொள்ளாத நிலையிலே கிராமத்து மக்கள் இருந்த காரணத்தால் மேலும் அவர்களுக்கு ஆறு மாத காலம் இந்தச் சட்டத்தின் பலனைப் பெறக்கூடிய அவகாசத்தைத் தர வேண்டுமென்று கருதித்தான் 18—10—1980-லிருந்து 31—12—1980 வரைக்கும் இதை நீட்டிக்க முடிவு செய்து உடனடியாக அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது.

ஆனால், முன்பிருந்த சட்டத்திற்கும், தற்போது கொண்டு வந்திருக்கின்ற மாற்றத்திற்கும் உள்ள வேறுபாடு, சில வசதி படைத்த சில பிரிவினர் இதிலே பலன் அடையக் கூடாது என்பதற்காகக் கொண்டு வரப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரய்யா போன்றவர்களெல்லாம் அதைச் சுட்டிக் காட்டிப் பாராட்டினார்கள்.

ஒரு நபர் அல்லது அவர் குடும்ப அங்கத்தினர்கள் எவரேனும் 1—4—1979-க்கு முந்தைய இரண்டு நிதி ஆண்டுகளில் ஒன்றிலோ அல்லது இரண்டு நிதி ஆண்டுகளிலோ வருமான வரி அல்லது மைய மாநில விற்பனை வரி அவர்கட்கு, அவர்கள் உட்படுத்தப் பட்டிருப்பார்களேயானால் அவர்களுக்கும் இந்தச் சட்டம் பொருந்தும் என்று இருக்கின்றபோது அதில் இன்கம் டாக்ஸ் பே பண்ணக் கூடியவர்கள் விற்பனை வரி—மைய மாநில விற்பனை வரி கட்டுகின்றவர்களெல்லாம் பொதுவாகவே வளமாக இருக்கின்ற காரணத்தால் பெரும்பான்மை ஏழைகளுக்குச் சேர வேண்டிய பலன் சேராது என்ற காரணத்தால்தான் அவர்களுக்கு இந்தச் சட்டப் பலனிலிருந்து சலுகை கிட்டக் கூடாது என்ற ஷரத்தினைக் கொண்டு வரப்பட்டது.

அதைப்போலவேதான், ஒரு நபர் அல்லது அவர் குடும்பத்தி லுள்ள அங்கத்தினர் எவரேனும் 1—10—1979-க்கு முந்தைய நான்கு அரையாண்டுகளில் ஒன்றிலோ அல்லது ஒன்றிற்கு மேற்பட்டவைகளிலோ அல்லது நான்கு அரையாண்டுகளிலோ ஒட்டு மொத்தமாக அவருக்கு இருக்கின்ற கட்டிடம் அல்லது '' நான்-அக்ரிகல்சுரல் லேண்ட் '' — விவசாயத்திற்குப் பயன்படாத மற்றச் சொத்துக்களினுடைய வாடகை மதிப்பு ஆண்டுக்கு 1,200 ரூபாய் என்ற அளவிற்கு மேல் இருக்குமேயானால் அவர்களுக்கும் இந்தச் சலுகை கூடாது என்று கொண்டு வரப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் இந்தச் சட்ட முன்வடிவினையே நிராகரிக்க வேண்டுமென்பதற்கு மையக் காரணமாகச் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரய்யா அவர்களும் இதை வலியுறுத்திச் சொன்னார்கள்.



1981 பிப்ரவரி 12] [திரு. சி. பொன்னையன்]

இந்த ஷரத்தினைக் கொண்டு வந்திதற்கு ஒரு முக்கியமான காரணம், கடன் பிரச்னையைப் பெறுத்தவரைக்கும் இரண்டு கூறாகப் பார்க்க வேண்டும்.

ஒன்று, ஒரு நபருக்கு வரக்கூடிய புரொஃபஷனல் இன்கம்; ழைப்பினால் அவர்களுக்கு வரக்கூடிய வருமானம். தொழில் ணியினால் அவர்களுக்கு வரக்கூடிய வருமானம்.

இன்னுமொன்று, சொத்து மூலமாக அவர்களுக்கு வரக்கூடிய ருமானம்.

One is professional income and the other is income derived 'm properties.

ப்படிச் சொத்து மூலமாக அவர்களுக்கு வருகின்ற வருமானத்தை பொறுத்த வரைக்கும் ஒரு குறிப்பிட்ட தடைகளை நாம் றப்பிக்காமல் இருப்போமேயானால் பணம் படைத்தவர்களுக்குச் லுகை அதிகம் கிட்டிவிடும் என்ற காரணத்தால்தான் இது செவ்வனே வரையறுக்கப்பட்டிருக்கிறது.

குறிப்பாக, தொழில் வரியைப் பொறுத்தவரைக்கும், புரொஃபஷனல் டாக்ஸைப் பொறுத்தவரைக்கும், ஒரு நபர் அல்லது குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் 1— 10— 1979க்கு முந்தைய நான்கு அரையாண்டுகளில் ஒன்றிலோ அல்லது ஒன்றுக்கு மேட்பட்டோ அல்லது சேர்த்தோ அவர்கள் '' நான்-அக்ரிகல்சுரல் லேண்ட் '' மூலமாக அவர்கள் தொழிலின் மூலமாக ஆண்டுக்கு 1,200 ரூபாய் பிராப்பர்ட்டி டாக்ஸ் அவர்கள் கட்டக் கூடியவர்களாக இருப்பார்களேயானால் அவர்களுக்கு இந்தச் சட்டத்தினுடைய சலுகை கிட்டாது என்று சொன்ன அதே நேரத்தில் அங்கு மட்டும் மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரய்யா சொன்ன அந்த எக்ஸ்ப்ளனேஷன் சேர்க்கப்பட்டிருக்கிறது. 4,800 ரூபாய் ஒட்டுமொத்த வருமானம் என்ற நிலைக்கு உட்பட்டு அவர்கள் 1,200 ரூபாய்க்கு மேல் தொழில் வரி கட்டுபவர்களாக இருக்கக் கூடாது என்று கொண்டு வரப்பட்டது. அதற்குக் காரணம்,

Income alone is the basis for professional tax. That is the main reason. அதற்கு அங்கு அந்த வரையறை கொண்டு வரப் பட்டது.

விவசாய நிலத்தை நாம் எடுத்துக்கொண்டோமேயானால், தற்போது 10 ஏக்கர் புஞ்சை அல்லது 5 ஏக்கர் நஞ்சை நிலத்தை வைத்திருக்கிறவர்களுக்கு இந்தச் சலுகை கிட்டாது என்று கொண்டு வரப்பட்டிருக்கிறது. இந்த நோக்கத்தினுடைய அடிப்படையும், அதேபோலவே விவசாயம் அல்லாத அசையாச் சொத்து வைத்திருக்கின்றவர்கள் 25,000 ரூபாய் சந்தை விலை பெறுமானம் உள்ள சொத்தை வைத்திருப்பவர்கள் என்றாலும்;

[திரு. சி. பொன்னையன்] [1981 பிப்ரவரி 12

அல்லதுஇந்த நோக்கத்தினுடைய அடிப்படையே அதை போலவே விவசாயம் அல்லாத அசையா சொத்தை வைத்திருக்கின்றவர்கள், ரூ. 25,000 சந்தைவிலை பெறுமானம் உள்ள சொத்தை வைத்திருப்பவர்கள் என்றாலும் அல்லது விவசாயம்செய்யக் கூடிய மற்றும் விவசாயம் அல்லாத அனைத்தும் ஒட்டுமொத்தமாகச் சேர்த்து அசையாச் சொத்துக்களை, ரூ. 25,000-க்கு மேல் அவர்கள் வைத்திருப்பார்களானால் அவர்களுக்கும் விதிவிலக்கு இல்லையென கொண்டு வரப்பட்டிருக்கிறது. எதற்காக நான் இதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன் என்றால், ரூ. 1,200 வீட்டு வாடகை அல்லது சொத்து வரி என்று இருக்கிறதே அது போதுமா, மிகக் குறைவு என்று சொன்னார்கள். இங்கே எழுகின்ற பிரச்னை எல்லாம் ஒரு ஒட்டுமொத்தமாக நாம் அளிக்கின்ற பொழுது விவசாயியானாலும், ஒருவருக்கு, ரூ. 1,200 என்று வருமானம், வீட்டு வாடகை ரூ. 4,800 என மாண்புமிகு உறுப்பினர் ரகுமான் கான் அவர்கள் சொல்லியது போலவோ அல்லது சங்கரய்யா அவர்கள் சொல்லியது போலவோ உயர்ந்து போகுமேயானால், அவர்களுக்கு சொத்து மதிப்பு ரூ. 1 இலட்சத்தை எட்டிவிடும். காரணம், ரூ. 1,200 என வரையறுக்கப்படுகிறபொழுது சொத்து மதிப்பு ரூ. 25,000 இருக்கும் எனத் தோராயமாகக் கணக்கிடப்படுகிறது. அதை ரூ. 4,800 என நாம் கணக்கிடுவோமேயானால், சொத்து மதிப்பு ரூ. 1 இலட்சம் என, நகர்ப்புறங்களிலே இருக்கிற கட்டிடங்களுக்கு வாடகையின் மீது நாம் நிர்ணயிக்கின்ற பொழுது ஏற்படுகிறது. ஆனால், இது பிரச்னையை அதிகமாக விவசாயத் துறையிலே உருவாக்கும் என்பதை நான் தெளிவு படுத்த விரும்புகிறேன்.

ரூ. 1 இலட்சம் மதிப்புள்ள விவசாய நிலத்தை வைத்திருக்கின்றவர்களுக்கும் விதி விலக்கு கொடுக்கவேண்டுமென்ற நிலை ஏற்பட்டுவிடும். பல இடங்களிலே நாம் பார்க்கின்றோம், தஞ்சை போன்ற பகுதிகளில் நாம் பார்க்கின்றோம், 1 ஏக்கர் நஞ்சை நிலம், தஞ்சையிலே ரூ. 5,000-க்குக் கூட விற்பனை செய்ய முடியாத நிலை பல இடங்களிலே இருக்கிறது. அப்படி இருக்கிற பொழுது, ரூ. 1 இலட்சம் விவசாய விளை நிலத்திற்கு நாம் விதிவிலக்கு தருவோமேயானால், கிட்டத்தட்ட 20 ஏக்கர் நிலத்தை வைத்திருக்கின்ற விவசாயியும் இந்தச் சட்டத்தினுடைய பலனைப் பெறவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுவிடுகிறது.



1981 பிப்ரவரி 12] [திரு. சி. பொன்னையன்]

சென்னையிலே எடுத்துக் கொண்டாலுங்கூட 3 கிரவுண்ட் அல்லது 4 கிரவுண்ட் நிலம் ஒரு மையப் பகுதியிலே இருக்குமேயானால் அவர்கள் அதன்மூலமாகக் கடன் வாங்கி, மற்றும் தொழில்கூட செய்து ஆதாயம் பெறக்கூடிய சூழ்நிலை அவர்களுக்கு ஏற்பட்டு வருகிறது. எனவே, 10 ஏக்கர் நஞ்சை நிலத்தினுடைய மதிப்பு ரூ. 50,000 என்ற அடிப்படையில் எடுத்துக் கொண்டால், புஞ்சை நிலத்தினுடைய மதிப்பு ரூ. 25,000 என்ற அடிப்படையில் எடுத்துக் கொண்டால், 5 ஏக்கர் நஞ்சை நிலத்தினுடைய மதிப்பு ரூ. 25,000 என்ற நிலையிலே எடுத்துக்கொண்டால், அதற்கு ஈடான நகரச் சொத்து, ரூ. 25,000 ஆக இருக்கும்போது, அதற்கு வாடகை வரி 1,200 ஆக கணக்கிடப்பட்டு, அது அந்த அடிப்படையில் வகுக்கப்பட்டது.

அது மட்டுமல்லாமல், மாண்புமிகு உறுப்பினர் சங்கரய்யா அவர்கள் பேசுகின்றபோழுது சொன்னார், 'வேறு யாருடன் சேர்ந்து கூட்டாக' என்ற வார்த்தையை நீக்கவேண்டுமென்று அந்த family income ரூ. 4,800 என வரையறுக்கப்பட்டதே கூட, family என்பது என்ன என்பது சட்டத்திலே மிகத் தெளிவாக வரையறுக்கப்பட்டிருக்கிறது.

'family' in relation to a person, means the individual the wife or husband, as the case may be, of such individual and their unmarried minor children. என்று வகுக்கப்பட்டிருக்கிறது. இந்த அடிப்படையிலேதான் அவர்கள் சொத்துக்களை, அசையா சொத்துக்களை வைத்திருக்கின்ற பொழுதுகூட, 'அவர்களுக்கு இந்தக் கூட்டாக' என்ற தொடர்பு ஏற்படுத்தி கொண்டு வரப்பட்டிருக்கிறது.

அது மட்டுமல்லாமல், பெண்ணுக்கு female person என்று மட்டுமே ஏற்படுத்தியதை மாற்ற வேண்டுமென்று மாண்புமிகு சங்கரைய்யா அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். 'female person' என்பதற்கு இங்கு பெண்களுக்கு என்று வெறுமனே குறிக்கப்படவில்லை. மூலச்சட்டத்திலே இருக்கிற ஷரத்தின்படி, a female person whose marriage has been dissolved by a decree of divorce or has been declared null and void, or annulled by a decree of nullity" என்ற அடிப்படையிலேதான் இங்கே female person என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகின்ற பொழுது சொன்னார்கள், இந்தச் சட்டத்தினுடைய பலனை எல்லாம், தற்பொழுது கொடுக்கப்பட்டிருக்கிற கால கெடுவிற்குள் நலிந்த பிரிவினர்கள் பெற முடியுமா? அந்தக் காலம் போதுமா என்றுகூட மாண்புமிகு உறுப்பினர் சங்கரய்யா அவர்கள் கேட்டார்கள். நான் இந்தச் சட்டம் நடைமுறையிலே என்னென்ன, பிரச்னைகளை எழுப்பி இருக்கிறது என்பதனைப் பார்த்து, தேவைப்படுமேயானால், பிறகு நடைமுறை ஆய்வுக்குப் பிறகு, மீண்டும் காலத்தை நீட்டித்து, ஏழைகளுக்கு நன்மை தர, அவர்களுக்கு வசதி செய்வதற்கு அரசு யோசிக்கும் என்று கூறி,

மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் கொண்டு வந்த தீர்மானத்தை அவர்கள் திரும்பப் பெற வேண்டுமென்று வேண்டியும் மாண்புமிகு உறுப்பினர் சங்கரய்யா போன்றவர்கள் கொண்டு வந்த திருத்தங்களையும் திரும்பப் பெற வேண்டுமெனக் கேட்டு இந்தச் சட்டத்தை நிறைவேற்றித் தருமாறு வேண்டிக் கொள்கிறேன்.

[பிற்பகல் 3-40]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் தன்னுடைய தீர்மானத்தை வலியுறுத்துகிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. அ. ரகுமான்கான் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த கடன் நிவாரணச் சட்டத்திலே நான் எழுப்பி இருக்கக்கூடிய சில ஐயப்பாடுகளுக்கும், கேள்விகளுக்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். ஆனால் இந்த சட்டத்தினுடைய நோக்கத்தின்படி பயன் பெற முடியாத வகையிலே, மாஜிஸ்ட்டிரேட்டுகளிடத்திலே போகக்கூடிய வழக்குகளை பைசல் செய்வதில் காலதாமதம் ஆகிறது. மேலும், கொடுக்கப்படுகின்ற மனுக்கள் தவறிக் கூட போய்விடுகின்றன என்று சமாதானம் சொல்லப்பட்டு விடுகின்றது. அதனால் பயனில்லாமல் போய்விடுகின்றது. மூலச்சட்டமாக இருக்கட்டும் அல்லது திருத்தச் சட்டமாக இருக்கட்டும், ஆண்டுக்கு 4,800 ரூபாய்க்கு கீழே வருமானம் பெறுகின்ற ஏழை எளிய மக்கள் கொடுக்கக்கூடிய மனுக்களுக்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கவும், உடனடியாக உத்தரவுகள் பிறப்பிப்பதற்குமான சில பிரிவுகள் அதில் இல்லாமல் இருக்கின்றன. அதுகுறித்து அரசு கவனம் செலுத்தவேண்டுமென்று நான் அமைச்சர் அவர்களை உங்கள் மூலமாக இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். எதிர்க் கட்சிக்காரர்கள் திருத்தம் கொடுக்கிறார்களே என்பதற்கா அவைகளை மறுக்க வேண்டியதில்லை. இதிலே அரசியலே கூடையாது. எனவே நான் சொல்கிற இந்த ஆலோசனையை ஏற்றுக்கொண்டு நல்ல ஒரு பதிலை அமைச்சர் சொல்வார் என்று நான் நம்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பின ரகுமான்கான் அவர்கள் பேசியதை நான் வரவேற்கிறேன் நடைமுறையில் என்னென்ன சிக்கல்கள் இருக்கின்றன எ பதை எல்லாம் ஆராய்ந்து பார்க்கவேண்டியிருக்கிறது. சி குறைபாடுகள் பற்றிக்கூட அரசின் கவனத்திற்கு வந்திரு கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. உத்திராபதி அவர்க சுட்டிக்காட்டியதைப் போல், வட்ட ஆட்சியர் அளவி கூட பல தாமதங்கள் ஏற்பட்டு ஏழை மக்களுக்கு உண்மையி





பல இன்னல்கள் உருவாகக்கூடிய சூழ்நிலைகள் பற்றி புகார்கள் அரசுக்கு வந்திருக்கின்றன. நிர்வாக உத்தரவுகள் மூலம் கடுமையான நடவடிக்கை எடுத்து அந்த குறைகளைக் களைய தக்க நடவடிக்கையை அரசு எடுக்கும் என்பதை தெரியப் படுத்திக் கொள்கிறேன்.

திரு. ரகுமான்கான் அவர்களின் தீர்மானம் பேரவையின் அனுமதியோடு திரும்ப பெற்றுக்கொள்ளப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவை முன் இுள்ள கேள்வி: "தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண். 8/1981) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று, நிறை வேற்றப் பெற்று, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று நிறை வேற்றப்பெற்றது.

பிரிவு 3.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவை முன் இுள்ள கேள்வி: "பிரிவு 3 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்."

**திரு. என். சங்கரப்பா :** தலைவர் அவர்களே, நான் கீழ்க் கண்ட திருத்தத்தை மொழிகிறேன் :

"பிரிவு 3 (iii) (3)-க்குப் பிறகு பின்வருவதைச் சேர்க்கவும்: விளக்கம்.—ஒருவருடைய வீட்டு வருமானம் ஆண்டு ஒன்றுக்கு நான்காயிரத்து எண்ணூறு ரூபாய்க்கு மேற்பட்டிருந்தால் அவருக்கு மட்டுமே (iii) ஆம் வரம்பு நிபந்தனை பொருந்தும். இச்சட்டத்தின் காரியங்களுக்காக அவர் கடனாளி என்று கருதப் படமாட்டார்.

பிரிவு 3 (v), (vi), (vii) ஆகிய உப பிரிவுகளில் "தனியாகவோ" என்ற வார்த்தைக்குப் பின் வருகிற "அல்லது வேறு யாருடன் சேர்ந்து கூட்டாகவோ" என்ற வார்த்தைகளை நீக்கிவிட்டு, பின்வருவதைச் சேர்க்கவும்:

"**விளக்கம்.**—ஒருவருடைய வீட்டு வருமானம் ஆண்டு ஒன்றுக்கு நான்காயிரத்து எண்ணூறு ரூபாய்க்கு மேற்பட்டிருந்தால் அவருக்கு மட்டுமே பிரிவு 3 (v), (vi) (vii), ஆம் வரம்பு நிபந்தனை பொருந்தும். இச்சட்டத்தின் காரியங்களுக்காக அவர் கடனாளி என்று கருதப்பட மாட்டார்."

**திருத்தம் முறைப்படி வழிமொழியப்பெற்றது.**

**திரு. என். சங்கரய்யா :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்தை கேட்டதற்கு பிறகு நான் சொல்லிக்கொள்வதெல்லாம் இதற்கு வருங்காலம் தான் பதில் சொல்லவேண்டும். நான் சொல்லியிருக்கக்கூடிய கருத்துக்கள் உண்மையாக இருக்கப்போகிறதா, அல்லது அரசு தரப்பிலே சொல்லப்பட்டிருக்கக்கூடிய கருத்துக்கள் உண்மையாக இருக்கப்போகிறதா என்பது பிறகு தான் தெரியும். நான் இப்பொழுது மூலச்சட்டத்திலே கேள்வி கேட்கவில்லை. ஆண்டு வருமானம் 4,800 ரூபாய் உள்ளவர்களுக்கு தான் நிவாரணம் கிடைக்க வேண்டுமென்பதை ஏற்றுக்கொண்டிருக்கிறோம். ஆனால், அதற்கு பாதிப்பு ஏற்படுகின்றது என்பது தான் எங்களது வாதம். இப்பொழுது அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கக்கூடிய பிரச்சினைகளை எடுத்துப் பார்த்தால், தாசில்தார் ஆண்டு வருமானம் 4,800-க்கு மேல் இருக்கிறது என்று சொல்லிவிட்டால் நிராகரித்து விடலாம். ஆகவே அந்த பாதுகாப்பு இருக்கின்றது. ஆனால், இப்பொழுது நாம் கொண்டு வந்திருப்பதை முதலிலே கொண்டுவரவில்லை. 'இப்பொழுது திருத்தம் கொண்டு வருகிறோம். பெண் என்பது பற்றிச் சொன்னார்கள். சட்டத்திலே அப்படி இல்லை. எல்லாப் பெண்களுக்கும் என்று இருக்கிறது. கல்யாணம் ரத்து செய்யப்பட்ட பெண்கள் என்று சொல்கிறார்கள். ஆனால் சட்டத் திருத்தத்திலே அப்படி இல்லை. ஆகவே, ஏற்கனவே போடப்பட்ட மனுக்கள் எல்லாம் அதாவது பெண்களிடம் வாங்கிய கடன் என்ற அளவிலே வரக்கூடிய மனுக்கள் எல்லாவற்றையும் தாசில்தார் தள்ளுபடி செய்துவிடுவார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் அளிக்கிறபோது 'குடும்பம்' என்பது ஒரு குடும்பத்தில் கணவன், மனைவி, திருமணமாகாத குழந்தை என்பதைக் குறிக்கும் என்று இங்கே சொல்லி இருக்கிறார்கள். ஆனால் இங்கே போடப்பட்டு இருப்பது அப்படி இல்லை. ஒரு குடும்பத்தில் உள்ள ஒருவர் ஜாயின்டாக மற்றவர்களோடோ அல்லது சகோதரர்களோடோ சேர்ந்து வாழ்ந்து கொண்டு இருந்தால் இந்தச் சட்டத்தால் அவர்கள் பாதிக்கப்படக் கூடும். ஏற்கனவே போடப்பட்டுள்ள சட்டத்தின் அடிப்படையில் பலர் ரூ. 4,800-க்கு கீழே வருமானம் உள்ளவர்கள் மனு போட்டுள்ளனர். அவர்களும் பாதிக்கப்படுவார்கள். ஆகவே இந்தக் கடன் நிவாரணச் சட்டத்தின் உண்மையான பலன் கிட்டாமல் போய்விடும் என்பதால் இந்தத் திருத்தத்தை வலியுறுத்துகிறேன். அமைச்சர் அவர்கள் இதை ஏற்றுக்கொள்ள இயலாது என்று சொல்லி விட்டார்கள் இருந்தாலும் எதிர்காலத்தில் இதற்கு பதில் கிடைக்கும் என்பதால், இந்தத் திருத்தத்தை வலியுறுத்துகிறேன். அது நிகழ்ச்சிக் குறிப்பில் இருக்கட்டும்.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, தோல்வியுற்றது.





**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி:

''பிரிவு 3 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெறவேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, பிரிவு 3 நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 4.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி :

''பிரிவு 4 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்''.

**திரு. என். சங்கரய்யா:** துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—

''(அ) பத்தியில் 31-12-1980 என்று குறிப்பிட்டுள்ள தேதியை 30-6-1981 என்று திருத்தவும்.

(ஆ) பத்தியில் 31-1-1981 என்று குறிப்பிட்டுள்ள தேதியை 31-7-1981 என்று திருத்தவும்''.

இதற்கான காரணத்தை நான் ஏற்கனவே கூறிவிட்டேன், அப்பிளிகேஷன் போட நேரம் போதாது என்பதால் மேற்கண்ட திருத்தத்தை வலியுறுத்துகிறேன்.

திருத்தம் வழி மொழியப் பெற்றது.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, தோல்வியுற்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி:

''பிரிவு 4 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, பிரிவு 4 நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 5.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி:

''பிரிவு 5 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்.''

**திரு. என். சங்கரய்யா:** துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன். —

''(அ) பத்தியில் 31-12-1980 என்று குறிப்பிட்டுள்ள தேதியை 30-6-1981 என்று திருத்தவும்.

(ஆ) பத்தியில் 31-1-1981 என்று குறிப்பிட்டுள்ள தேதியை 1-7-1981 என்று திருத்தவும்.''

[திரு. என். சங்கரய்யா] [1981 பிப்ரவரி 12]

திருத்தம் வழி மொழியப் பெற்றது.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, தோல்வியுற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி:

''பிரிவு 5 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று பிரிவு 5 நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 6.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி :

''பிரிவு 6 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்.''

திரு. என். சங்கரய்யா: துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்:—

''பிரிவு 6 (b) (1) (a) ல் வரும் 'அல்லது பெண்ணுக்கோ'. என்ற வார்த்தைகளை நீக்கவும். அதற்குப் பின் ஆயினும், இத்தகைய நேர்வுகளில் கடனாளி தான் வாங்கிய கடன் தொகை அசலை மட்டும் 3 ஆண்டு தவணைகளில் திருப்பிச் செலுத்தினால் போதுமானதாகும்''.

மைனர்கள், விதவைகள் அவர்களிடமிருந்து வாங்கிய கடன்கள் எல்லாம் போய்விடும். அவர்களுக்கு நிவாரணம் இல்லை. ஆகவே இத்தகைய நேர்வுகளில் கடனாளி தான் வாங்கிய கடன் தொகை அசலை மட்டும் 3 ஆண்டு தவணைகளில் திருப்பிச் செலுத்தினால், போதுமானதாகும் என்று கொடுத்துள்ள திருத்தத்தை வலியுறுத்துகிறேன்.

திருத்தம் வழி மொழியப்பெற்றது.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, தோல்வியுற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

''பிரிவு 6 சட்டமுன் வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, பிரிவு 6 நிறைவேற்றப்பெற்றது.



1981 பிப்ரவரி 12] [பேரவைத் துணைத் தலைவர்]

(பிற்பகல் 3-50.)

பிரிவுகள் 7, 8 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 8/1981) நிறைவேற்றப்பெற வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.

ஈ. பொது வக்ஃபுகள் காலவரையறையை நீட்டித்தல் திருத்தச் சட்ட முன்வடிவு, 1981.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர்களே, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு பொது வக்ஃபுகள் கால வரையறையை நீட்டித்தல் திருத்தச் சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 3/1981) ஆய்வுக்கு* எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும் என்று மொழிகிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு மாமன்றத்தின் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு பொது வக்ஃபுகள் காலவரையறையை நீட்டித்தல் திருத்தச்சட்ட முன்வடிவை இங்கே மாண்புமிகு அமைச்சரவர்கள் பிரேரேபித்திருக்கிறார்கள். இந்தச் சட்டம் சம்பந்தமாக கருத்துக்களைச் சொல்லும்போது மாண்புமிகு அமைச்சர் இராஜா முகமது அவர்கள் இந்த மாமன்றத்தில் சட்ட முன் வடிவை வைத்து, நானாகிய ரகுமான்கான் பேசுகிறேன் என்பதால் இது நமக்கு சம்பந்தப்பட்ட பிரச்சினை அல்ல என்று மாண்புமிகு உறுப்பினர்கள் அக்கறை செலுத்தாமல் இருக்க வேண்டாமென்று முதலிலே கேட்டுக் கொள்கிறேன். காரணம் இந்தப் பிரச்சனையில் எல்லா சமுதாய மக்களுக்கும் பொருந்தக்கூடிய பல்வேறு அம்சங்கள் அடங்கியிருக்கின்றன.

இந்த வக்ஃபு சொத்துக்கள் என்பது இஸ்லாமிய சமுதாயத்தில் இருக்கக் கூடிய பெரியவர்கள் மதக் காரியங்களுக்காகவும் தான தர்ம காரியங்களுக்காகவும் வசதி படைத்தவர்கள் தங்களுடைய சொத்துக்களை 'உயில்' வாயிலாக, தங்களுடைய நோக்கம் நிறைவேறுவதற்காக எழுதி வைக்கப்பட்டவை. அந்த சம்பந்தமான சட்ட முன் வடிவைத்தான் இங்கே மாண்புமிகு அமைச்சரவர்கள் பிரேரேபித்திருக்கிறார்கள். இப்படி தமிழ்நாட்டில்

*1981 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 27 ஆம் தேதி தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

ஏராளமான, இலட்சக்கணக்கான வக்ஃபு சொத்துக்கள் இருக்கின்றன. ஆனால் இந்த சொத்துக்கள் எல்லாம் இன்றைக்கு இவைகளை நிர்வகிப்பதற்காக, ஒழுங்குபடுத்துவதற்காக அன்றைய தினம் நியமிக்கப்பட்ட அந்த வக்ஃபு போர்டு ஒழுங்காக நிர்வகிக்கிறதா ? இந்தச் சொத்துக்களை எல்லாம் வக்ஃபுபோர்டு கைப்பற்றியிருக்கிறதா என்றால் இல்லை.

இலட்சக்கணக்கான, கோடிக்கணக்கான சொத்துக்களை ஏழை எளிய மக்களுக்கு தான தர்மம் செய்வதற்காக, மத காரியங்களை, மார்க்க காரியங்களை ஒழுங்காக செய்வதற்காக பெரியவர்கள் எழுதி வைத்த சொத்துக்களை இன்றைக்கு தனிப்பட்ட நபர்களும், முத்தவல்லி என்று சொல்லக் கூடியவர்களும் ஆக்கிரமிப்பு செய்திருக்கின்ற காரணத்தால் இன்றைக்கு அது யாருக்குப் போய்ச் சேர வேண்டுமோ அவர்களுக்குப் போய்ச் சேராத சூழ்நிலை இருக்கிறது. எனவே, அந்தச் சொத்துக்கள் எல்லாம் முறையாக வக்ஃபு போர்டுக்கு வந்தாக வேண்டும் ; அவைகள் மீட்கப்பட வேண்டும் என்று சொல்லி, இப்படிப்பட்ட நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இந்தியன் லிமிடேஷன் ஆக்ட் அதற்கு தடையாக இருக்கிறது.

ஒரு சொத்து, எந்த சொத்தாக இருந்தாலும், வக்ஃபு சொத்தை தன்னுடைய பொசஷனில் எடுத்துக் கொண்டு, ஒரு முத்தவல்லியோ அல்லது ஒரு தனி நபரோ எடுத்துக் கொண்டிருக்கும்போது வக்ஃபு போர்டு அதை மீண்டும் பெற வேண்டுமென்று சொன்னால் அந்த பொசஷன் எப்போது எடுத்துக் கொள்ளப்படுகிறதோ அதிலிருந்து 12 வருஷங்களுக்குள்ளாக எடுத்துக் கொள்ள வேண்டும். இல்லை என்றால் இந்தியன் லிமிடேஷன் ஆக்ட் அதை அனுமதிக்காது. ஆகவே, 1959 ஆம் வருஷம் மத்திய சர்க்கார் இந்த இந்தியன் லிமிடேஷன் ஆக்டுக்கு ஒரு விளக்கத்தைக் கொண்டு வந்தது. அப்படி 1959-லே கொண்டு வரப்பட்ட சட்டம் சம்பந்தமாக இந்தியன் லிமிடேஷன் ஆக்ட்படி 12 வருஷங்களுக்குள்ளாக வக்ஃபு போர்டு சொத்துக்களை தன்னுடைய பொசஷனில் எடுத்துக் கொள்ள வேண்டும் ; இல்லாவிட்டால் கோர்ட்டுக்குப் போக முடியாது. சூட் போட முடியாது, கேஸ் பைல் செய்ய முடியாது. ஆகவே, இந்த சொத்துக்களை திரும்பப் பெற தடை இருப்பதால் 1959 ஆம் வருஷம் சட்டம் சம்பந்தமாக இந்தியன் லிமிடேஷன் ஆக்ட்படி 1970 வரையில் அந்த சொத்துக்களை திரும்பப் பெற முடியும் ; சூட் போடலாம், கோர்ட்டுக்குப் போகலாம் என்று ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்தார்கள்.

அப்படித் திருத்தம் கொண்டு வந்ததற்குப் பிறகு 1970 ஆம் வருஷம் வரைதான் அந்தச் சொத்துக்களைத் திரும்பப் பெற முடிந்தது. ஆகவே மீண்டும் தடை ஏற்பட்டது. எனவே தமிழக அரசு இது போன்ற ஒரு அவசரச் சட்டத்தை கொண்டு வந்து அந்த சட்டத்தின் அடிப்படையிலே 1980 ஆம் வருஷம்





டிசம்பர் 31 ஆம் தேதி வரைக்கும் இந்தச் சொத்துக்களை
மீண்டும் பெற முடியும் என்றும் 12 ஆண்டுகள் என்பது குறுக்கிட
வில்லை என்றும் சொல்லப்பட்டது. அந்த வகையில் ஒரு
அவசரச் சட்டம் சட்டமாகியது.

ஆனால் இப்போது இங்கே நம்முடைய மாண்புமிகு திரு.
இராஜா முகமது அவர்கள் கொண்டு வந்திருக்கக் கூடிய இந்த
சட்டம் அந்த காலவரம்பை அதாவது 1980 ஆம் ஆண்டு டிசம்பர்
திங்கள் 31 ஆம் தேதியோடு முடிவடைகிற அந்தக் காலவரம்பை
நீடிக்கிற விதத்தில் அதாவது 1983 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள்
31 ஆம் நாள் வரை என்று எக்ஸ்டென்ட் செய்கிறது. நம்முடைய
அமைச்சரவர்கள் 'இதன் மூலம் ஆயிரம் வழக்குகள் போட
வேண்டி இருக்கின்றது' என்று சொல்கிறார்கள். 'வக்ஃபு
போர்டுக்குச் சேர வேண்டிய சொத்துக்களைத் திரும்பப் பெற
அதாவது அவற்றை பொசஷனுக்குக் கொண்டு வர, ஆக்குப்
பேஷனுக்குக் கொண்டு வர ஆயிரம் சூட்கள் போடுவதற்கு இது
வழி வகை செய்கிறது. ஆகவே நான் இதை நாங்கள் கொண்டு
வருகிறோம்' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் இந்த
டைம் எக்ஸ்டென்ஷனை வரவேற்கிறேன். ஆனால் அதே
நேரத்தில் இந்த டைம் எக்ஸ்டென்ஷன் இருப்பதால் தான் ஆயிரம்
வழக்குகள் போட முடிகிறது என்று சொன்னால் நான் ஒன்று
கேட்க விரும்புகிறேன். ஆயிரம் வழக்குகள் போடுகின்ற முயற்சி
நடைபெற்றதா ? ஏன் அதிலே காலதாமதம் ஏற்பட்டது ?
இந்த டைம் எக்ஸ்டென்ஷன் தேவை தான். ஆனால்
19,950 வழக்குகள் போட்டிருக்கிறோம் என்று கூறுகின்றபோது
இந்த ஆயிரம் வழக்குகளை உற்சாகமாக, சுறுசுறுப்பாக
தடங்கல் இல்லாமல், போட்டிருக்கலாமே. அதற்கான கால
தாமதம் என்ன ? மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவ
ரவர்களே, உங்கள் மூலமாக இந்த நாடு முழுவதும் இருக்கின்ற
முஸ்லீம் சமுதாய மக்களின் சார்பாக நான் கேட்டுக்கொள்கிறேன்.
வக்ஃபு சொத்து எவ்வளவு இருக்கிறது ? அதனுடைய மதிப்பீடு
எவ்வளவு ? அவற்றின் மூலம் எவ்வளவு வருமானம் வருகிறது ?
அவற்றிற்காக எவ்வளவு நிர்வாகச் செலவு ஆகிறது ? அந்தச்
செலவுகளை எல்லாம் மார்க்கத்தைச் சேர்ந்தவர்கள் எந்த
நோக்கத்திற்காக வழங்கி இருக்கிறார்களோ அந்த நோக்கத்
தோடு செலவழிக்கப்படுகின்றதா ? இஸ்லாம் மக்களின்
நன்மையைக் கருதி இது போன்ற விவரங்களை எல்லாம் சேர்த்து
ஒரு அறிக்கையாக வைத்தால் அது நன்றாக இருக்கும் என்று
கருதுகிறேன்.

நான் இன்னொரு கருத்தினை உங்கள் மூலமாகத் தெரிவித்துக்
கொள்கிறேன். ஏற்கனவே சூட்கள் பைல் செய்திருக்கிறார்
கள் என்று கூறுகிறார்கள். அதிலே தீர்ப்பு வழங்கப்பட்ட
வழக்குகள் குறித்து எவ்வளவு நடவடிக்கைகள் எடுக்கப்பட
டிருக்கின்றன? இது வரை எத்தனை வழக்குகள் டிக்ரி ஆகியும்

[திரு. அ. ரகுமான்கான்] [1981 பிப்ரவரி 12

கூட பொசிஷன் நடவடிக்கை எடுக்கப்படாமல் தடையாக இருக்கின்றன? அப்படித் தடையாக இருக்கின்றது என்று சொன்னால் அதற்கு என்ன காரணம் என்பதையும் நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து உங்களுடைய மேலான கவனத்திற்கு நான் ஒன்றைக் கொண்டு வர விரும்புகிறேன். இன்றைக்கு வக்ஃபு பிரச்சினை என்பது சென்னையிலேயும், சேலத்திலேயும் இன்னும் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் ஏராளமாக இருக்கின்றது. இவைகளின் வருமானத்தைப் பெருக்குவதற்கு இந்த அரசு முயற்சி எடுக்க வேண்டும். வக்ஃபு முயற்சி எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் ஏகப்பட்ட சொத்துக்கள் இருந்தாலும் கூட அவையெல்லாம் இன்றைய தினம் வருமான வழியில்லாமல் வருமானத்தைப் பெருக்க முடியாத ஒரு சூழ்நிலையிலே இருந்து கொண்டிருக்கின்றன. அந்த சொத்துக்கள் எல்லாம் சில தனி நபர்களுடைய கையிலேயோ முத்தவல்லிகளின் கையிலேயோ இருக்கின்றன. அவைகளை எல்லாம் முறையாகப் பயன்படுத்தினால் இன்னும் ஏராளமான வருமானம் வரும். அப்படிப்பட்ட வழிகளை எல்லாம் அரசு கண்டு பிடிக்க வேண்டும். வக்ஃபு போர்டும் அப்படிப்பட்ட வழிகளைக் கண்டுபிடிக்கின்ற முயற்சிகளிலே ஈடுபட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

(மாலை 4.00)

வக்ஃப் போர்டிலிருந்து குத்தகை பெற்ற முத்தவல்லிகள் தவறு செய்தால் நடவடிக்கை எடுக்க வேண்டியதுதான். ஆனால் அதே நேரத்தில் அவர்கள் மீது அரசியல் காரணங்களுக்காக நடவடிக்கை எடுப்பதோ அல்லது அதிகாரிகளை விட்டு மிரட்டுகிற காரியங்களை அமுல் செய்வதாகவோ—அமைச்சர் செய்வதாக நான் குற்றம் சாட்டவில்லை—சில பகுதிகளில் அதிகாரிகளே அது போன்ற காரியங்களில் ஈடுபடுவதாக அல்லது ஆங்காங்கு இருக்கக் கூடிய அரசியல் சார்புடையவர்கள் இதேபோன்று காரியங்களைச் செய்வதாக சில தகவல்கள் வந்திருக்கின்றன. எந்த அளவு இதில் உண்மை இருக்கிறது என்பது எனக்குத் தெரியாது. அமைச்சர் அவர்கள் அது குறித்து விசாரித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அது குறித்து அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வரச் சொன்னால் கொண்டு வந்து தருகிறேன்—அதன்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் வக்ஃப் போர்டு நிர்வாகம் சம்பந்தமாக, வக்ஃப் போர்டு ஆக்ட்டிலேயே தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். இஸ்லாம் மார்க்கத்தைப் பற்றித் தெரிந்தவர்கள் தான், சட்டம் பயின்றவர்கள்தான் அதன் நிர்வாகத்தில் உறுப்பினர்களாக இருக்க வேண்டும் என்று. அரசியல் சார்பு உடையவர்



1981 பிப்ரவரி 12] [திரு. அ. ரகுமான்கான்]

களை, தங்கள் கட்சியை ஆதரிக்கிறவர்களை மட்டும் இதன்
உறுப்பினர்களாகப் போடாமல், அந்தச் சட்டத்தை அனுசரித்து
கட்சி வேறுபாடின்றி அதன் நிர்வாகத்தை அமைக்க வேண்டும்
அமைத்தால் அது சிறப்பாக இருக்கும் என்று கேட்டுக் கொள்கி
றேன். கடந்த காலத்திலே இது போன்று மாற்றி அமைக்கப்
பெற்றதா என்ற கேள்விகள் எல்லாம் இந்தப் பிரச்னைக்கு பதி
லாக அமைந்து விடாது என்பதையும் சுட்டிக்காட்ட கடமைப்
பட்டிருக்கிறேன்.

இந்த நேரத்திலே சொல்ல விரும்புகிறேன்
இன்னொன்றையும் அமைச்சர் அவர்களுக்குத் தெரியும் என்று
நம்முடைய மாண்புமிகு இருக்கக்கூடிய வக்ஃப் போர்டு
கருதுகிறேன். இன்றைக்கு பொறுப்பற்ற முறையிலே போய்க்
நிர்வாகம் சில நேரங்களில் விரும்புகிறேன். திண்
கொண்டிருக்கிறது என்பதை சுட்டிக்காட்ட என்னுமிடத்தில்
டுக்கல் பகுதியில் இருக்கக் கூடிய வத்தலகுண்டு இருக்கிறது. அந்த
இந்த வக்ப் போர்டுக்கு சொந்தமான நிலம் சொல்லக்கூடிய ஒருவர்
ஊரிலேயே இருக்கக்கூடிய ராஜ் என்று வக்ப்போர்டுக்கும்
அந்த நிலத்தை குத்தகை எடுத்திருக்கிறார். ஒப்பந்தத்தின் அடிப்படை
அவருக்கும் ஒப்பந்தம் ஏற்படுகிறது. அந்த ஒப்பந்தத்திலேயே ஏதா
யிலே ஏலம் விடப்பெறுகிறது. அதை வக்ஃப் போர்டு ஏற்று காம்பிர
வது வில்லங்கம் இருந்தால் என்று எழுதப்பெற்றிருக்கிறது.
மைஸ் செய்து கொடுக்கும் அந்த ஏழை 30,000
ஆனால் இந்த குத்தகை எடுத்ததினால் நஷ்டத்திற்கு ஆளாக்கப்பட்டி
ரூ. முதல் 40,000 ரூபாய் வரையில் பெயரில் அவரை எதிர்த்து
ருக்கிறார். உழவாளதாரர் என்ற யார் உண்மை
வேறு ஒருவர் வழக்கு தொடர்ந்திருக்கிறார். அடிப்படை
யான உழவாளதாரரோ, யாருக்கு ஒப்பந்தத்தின் ஒப்பந்தம்
யில் குத்தகை விடப்பட்டதோ, யாரிடம் வக்ப்போர்டு போட்டி
செய்துக் கொண்டதோ, அவர் மீது பொய் வழக்கினைப் போடப்
ருக்கிறார்கள். வத்தலகுண்டு காவல் நிலையத்தில் அது
பெற்றது.

அது சம்பந்தமாக ஏலம் விட்ட வக்ப் போர்டு, ஒப்பந்தத்
திலே கையெழுத்து இட்ட வக்ப் போர்டு, ஏதாவது நடவடிக்கை
எடுத்திருக்கிறதா என்று கேட்டால் இல்லை. ஆனால் சட்டம்
படித்தவர்களுக்குத் தெரியும். வில்லங்கம் ஏற்பட்டால் சரி
கட்டுகிறேன் என்று சொல்லியது சட்ட ரீதியாக இருக்கலாம்.
அதன் உரிமையான சொத்திலே தகராறு வரும்போது தீர்த்து
வைக்க வேண்டிய பொறுப்பு வக்ப்போர்டுக்கு இருக்கிறது. இது
போன்ற காரியங்கள் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக்
கொண்டு வரப்பெற்றதா இல்லையா என்பது தெரியாது.
ஆனால் இதை முன்னின்று அவர் தீர்த்து வைக்க முன் வர
வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்றையும் தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன்.
அமைச்சர் அவர்கள் விரும்பமாட்டார்கள் என்று கருதுகிறேன்.
'இஸ்மி' என்று ஒரு பத்திரிகை வெளிவருகிறது. அது இல்

[திரு. அ. ரகுமான்கான்] [1981 பிப்ரவரி 12

லாமிய மத தத்துவங்களுக்காக கொண்டு வரப்பட்டதாக இருந்
தாலும்—அது அந்த நோக்கத்திற்காகத் தான் செயல்பட வேண்
டும் என்று டிரஸ்ட்டீட்லேயே எழுதிவைக்கப் பெற்றிருக்கிறது.
ஆனால் அது வெறும் அரசியல் பிரச்சாரங்களுக்காக மட்டுமே
இப்போது பயன்படுகிறது. அந்தப் போர்டினுடைய வரு
மானத்திலிருந்து மதப் பிரச்சாரத்திற்காக நடத்தப்பட வேண்
டும் என்று கொண்டு வரப்பெற்ற இந்தப் பத்திரிகை அரசியல்
நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படுகிறது........(குறுக்கீடு)

திரு. ஏ. சி. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்
கள் அரசியல் லாபநோக்கோடு ஒரு பத்திரிகை நடத்தப்பெறுவ
தாகச் சொன்னார்கள். எந்த விதத்திலே அது அரசியலாக ஆக்கப்
பெறுகிறது என்று குறிப்பிட்டுச் சொல்ல முடியுமா என்று கேட்
டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இவைகளைப்
பற்றி எல்லாம் விரிவாக வேண்டாம். சட்ட முன் வடிவில்
உள்ளதைப் பற்றி மட்டும் திரு. ரகுமான்கான் அவர்களைப் பேச
வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : துணைத் தலைவர் அவர்களே,
மிக முக்கியமானப் பிரச்னையைப் பற்றி நண்பர் சண்முகம்
அவர்கள் கேட்டிருக்கிறார்கள் என்றாலும், அந்தக் குற்றச்
சாட்டு எந்த அளவுக்கு சரியானது அல்லது தவறானது என்பதை
அமைச்சர் அவர்கள் அறிவார்கள் என்று கருதுகிறேன். அதன்
மேலே மேற்கொண்டு பேச எனக்கு நேரம் இல்லை. இஸ்மி
என்ற பத்திரிகை இஸ்லாமிய மதக் கொள்கையை பரப்புவதற்
கென்றே டிரஸ்ட் பணத்திலிருந்து முதலீடு செய்யப்பெற்று
கொண்டு வரப்பெற்ற ஒன்று.

சமூக சம்பந்தமான காரியங்கள் வந்தால் வரவேற்கத்
தக்கது. காரணம், அந்த நோக்கத்திற்காகத்தான் இதுபோன்ற
காரியங்கள். ஆனால் அது ஒரு குறிப்பிட்ட ஆளும் கட்சியில்
இருக்கிற அல்லது எதிர்கட்சியாக இருக்கட்டும், ஒரு குறிப்பிட்ட
அரசியல் கட்சிக்கு பிரச்சாரப் பீரங்கியாக ஆளும் கட்சிச் சாதனை
களை விளம்பரம் செய்யவோ அல்லது அதுபோன்ற விளம்பரங்
கள் செய்யவோ அல்லது ஆளும் கட்சி சார்பாக அரசியல் சார்
பாக கருத்துக்கள் அடங்கி வருவது என்றால் இந்த வக்ப்
சொத்து எந்த நோக்கத்திற்காகக் கொடுக்கப்பட்டதோ அதன்
மூலம் வருகிற வருமானத்தைக் கொண்டு நடைபெறுகிற ஒரு
பத்திரிகை அதற்கு மூல காரணமாக இருக்க முடியாது என்பதை
இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.



1981 பிப்ரவரி 12] [திரு. அ. ரகுமான்கான்]

அடுத்து, இன்றைக்கு தமிழ்நாட்டில் ஏராளமான பள்ளிவாசல்
கள் இருக்கின்றன. அவைகளுக்கு இன்று சொத்துக்கள் மிக
மிகக் குறைவாக உள்ளன. வக்ப் சொத்துக்களை முத்தவல்லி
கள் நிர்வகிக்கிறார்கள். சொத்து மிகமிகக் குறைவாக இருந்
தாலும்கூட வக்ப் போர்டுக்கு அவர்கள் ஒரு காண்ட்ரிப்யூஷன்
கொடுக்க வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது. அப்படி
ஒரு சூழ்நிலை ஏற்படுகிறபோது அவர்கள் மீது கிரிமினல் வழக்கு
கள் தொடரக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே
வக்ப் ப்ராப்பர்ட்டி குறைவாக இருக்கிறபோது, அவர்கள் காண்ட்
ரிப்யூஷன் கொடுக்க முடியாத ஒரு சூழ்நிலை ஏற்படுகிறபோது
அதை போர்ட் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கி
றேன்.

அடுத்து, இந்த வக்ப் பிராப்பர்டீஸ் எந்த நோக்கத்திற்காக
வழங்கப்பட்டதோ அந்த நோக்கம் நிறைவேறுகிறவகையில்
அரசியல் சார்பில்லாமல் அந்தப் பணம் போய் சேருகிற
விதத்தில் தனி நபர்கள் கையில் இருப்பதை எடுக்க வேண்டும்.
இன்று வக்ப் போர்ட் நிர்வாகம் சரியாக நடைபெறவில்லை.
ஆகவே, இந்தச் சொத்துக்கள் மூலம் கிடைக்கும் வருமானம்
அரசியல் சார்பான காரியங்களுக்குப் பயன்படுத்தப்படாமல் அந்த
சமுதாயத்தின் நன்மைக்காகப் பயன்படுத்தப்பட வேண்டும்
என்று கேட்டு என் உரையை முடிக்கிறேன்.

திரு. ஏ. சாகுல் அமீது : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவரவர்களே, வக்புகள் காலவரையறையை நீட்டித்தல்
திருத்தச் சட்ட முன்வடிவின்மீது என் கருத்துக்களைக் கூற
விரும்புகிறேன். இந்த வக்ப் போர்டைப் பொறுத்தவரையில்
இந்த வக்ப் நிர்வாகம் எப்படி நடக்கிறது என்றால் பொதுவாக
தமிழ் நாட்டு முஸ்லீம்கள் மத்தியில் ஒரு பெரும் அதிருப்தியை
உருவாக்கிக்கொண்டிருக்கிறது. வக்ப் என்றால் இஸ்லாமிய
இறைவன் அருளிய திருக்குர்ஆன் இஸ்லாமிய வேதத்தில் அறக்
கட்டளைகள் சம்பந்தமான கடமைகளைச் செய்வதற்கு அந்தச்
சொத்துக்களை நிர்வகிக்கக்கூடிய ஒரு அறக்கட்டளை நிறு
வனமாகும். அந்த அறக்கட்டளை நிறுவனம், வக்ப் போர்ட்
முறையாகச் செயல்படுகிறதா, அந்த அறநிலையத்திற்காக எழுதி
வைக்கப்பட்ட சொத்துக்கள் முறையாக செலவு செய்யப்படுகி
றதா என்பதையெல்லாம் ஆராய்ந்து இஸ்லாமிய மார்க்கத்
திற்கு உகந்தமுறையில் அது தன்னுடைய கடமையைச் செய்
கின்றதா என்று கண்காணிப்பதற்கு சூழ்நிலையில் இன்று வக்ப்
போர்ட் நிர்வாகக் குறைபாடு காரணமாக அது செம்மையாகச்
செயல்படவில்லை.

பள்ளிவாசல் முத்தவல்லிகளிடம் பள்ளிவாசல் வருமானத்தைக்
கேட்டு அவர்கள் அனுப்பிய படிவத்தை வாங்கியபின் அவர்
களுக்கு, டிமான்ட் நோட்டீஸ் அனுப்பி அவர்கள் கட்டவில்லை

[திரு. ஏ. சாகுல் அமீது] [1981 பிப்ரவரி 12

என்றால் நடவடிக்கை எடுக்க வேண்டியதுதான். அது அவர்கள் பொறுப்புதான். ஆனால் டிமான்ட் நோட்டீஸ் அனுப்பப் படுவதில்லை. டிமான்ட் நோட்டீஸ் அனுப்பப்படாமல் ஏழு ஆண்டுகள், பத்தாண்டுகள் என்று ஆர். ஆர். நோட்டீஸ் அனுப்பி சொத்துக்களை ஜப்தி செய்கிற அளவிற்கு வக்ப்போர்ட் நிர்வாகம் இருப்பதால் இஸ்லாமிய சமுதாய மக்களின் எண்ணம் வக்ப்போர்ட் மீது எந்த அளவிற்கு அதிருப்தியை ஏற்படுத்தியிருக்கிறது என்று சொல்ல இருக்கிறேன். ஒரு நிர்வாகம் செம்மையாக நடைபெறுகிறதா என்று அறிய வேண்டிய பொறுப்பு இருந்தாலும் முறையாக நோட்டீஸ் அனுப்பி அதற்கு பதில் வந்து நடவடிக்கைகள் எடுப்பது பற்றி ஆட்சேபணையில்லை. ஆனால் டிமான்ட் நோட்டீஸ் அனுப்புவதில்லை. ஐந்தாறு ஆண்டுகளுக்கு சேர்த்து ஆர். ஆர். நோட்டீஸ் அனுப்பி சொத்துக்களை ஜப்தி செய்வது மிகவும் தவறான செயல். சொத்துக்கள் இல்லாத பள்ளிவாசல்கள் எல்லாம் மூடிக்கிடக்கிற நிலையில் இருக்கின்றன. அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் பள்ளிவாசல்கள் மூடப்பட்டிருப்பதால் அந்த சமுதாய மக்களின் உள்ளம் எந்த அளவிற்கு புண்பட்டு இருக்கிறது என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

[மாலை 4—10.]

இன்றைக்கு வக்ப் போர்டில், இந்த அறநிலையத்தில் தலைவராக உள்ளவர் இந்த சமுதாயத்தை, இந்த மார்க்கத்தைத் தெரிந்தவராகப் போடவில்லை. ஒரு அறநிலையத்திலே தலைவராக இருக்க வேண்டுமென்றால், அவருக்கு இன்னென்ன தகுதிகள் இருக்கவேண்டுமென்று விதிமுறைகள் உள்ளன. அப்படி எங்கள் மறையிலே வற்புறுத்தப்பட்டிருக்கிறது. மார்க்கத்தை தெரிந்தவர்தான் இந்த அறநிலையத்தின் தலைவராக பொறுப்பேற்க வேண்டுமென்று வழிமுறைகள் வகுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், இன்றைக்கு அண்ணா தி.மு.க. அரசு அதற்குப் புறம்பாக ஒரு நிலையை உருவாக்கிக் கொண்டிருக்கிறது. இன்றைக்கு எங்களுடைய மார்க்கத்தைச் சேர்ந்தவர்கள் நம் முதலமைச்சர் அவர்களுக்கு அப்படிப்பட்ட ஒரு தலைவர் தான் பொறுப்பேற்க வேண்டுமென்றும், தற்போதுள்ள தலைவர் பற்றி பல புகார்களை பலமுறைகள் எழுதி அனுப்பியும், இந்த அரசு அந்தத் தலைவர் மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காதது அறிந்து எங்கள் சமுதாயம் வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிறது. அது மட்டுமல்ல. இன்றைக்கு வக்ப் போர்டில் சூபரின்டெண்டென்ட், இன்ஸ்பெக்டர்கள் போன்றவர்கள் மீது லஞ்சப் புகார்கள் இருப்பதாக பரவலாகச் சொல்லப்படுகிறது. இன்றைக்கு வக்ப் போர்டினுடைய சொத்துக்கள் எல்லாம், குத்தகை ஏலம் விடப்படும்போது, அதற்கான நடவடிக்கைகளை எடுக்கச் செல்லும் சூபரின்டென்டென்டும், இன்ஸ்பெக்டரும் அவர்களுடைய கையாள்களாக மாறி, லஞ்ச லாவண்யம் மலிவாக பரவலாகப் பேசப்படுகிறது.



1981 பிப்ரவரி 12] [திரு. ஏ. சாகுல் அமீது]

இந்த வக்ப் போர்டு தலைவரை எங்கள் இயக்கத்தை, எங்கள் கட்சியைச் சார்ந்தவராகப் போடவேண்டுமென்று நாங்கள் சொல்லவில்லை. இஸ்லாமிய சமுதாயத்தைச் சேர்ந்த மார்க்க நெறிகளைக் கடைப்பிடிக்கும் ஒருவரைத்தான் அந்த அறநிலையத்தின், போர்டின் தலைவராகப் போட வேண்டுமென்று சொல்கிறோம். ஆனால், இந்த வக்ப் போர்டும் தலைவரும், வக்ப் போர்டின் சட்டத்திற்குப் புறம்பாக அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த வக்ப் போர்டு எப்படி அமைக்கப்பட வேண்டுமென்று சட்ட விதிமுறைகள் இருக்கின்றன. அந்த விதிமுறைகளின்படி இன்றைய வக்ப் போர்டு அமைக்கப்படவில்லை. இந்த வக்ப் போர்டிலே ஒரு சட்டமன்ற உறுப்பினர் இருக்க வேண்டும்; ஒரு பாராளுமன்ற உறுப்பினர் இருக்க வேண்டும். முறைப்படி இந்த மார்க்கம் தெரிந்த ஒரு மௌலவி இருக்கவேண்டும். ஆனால், இன்றைக்கு இஸ்லாமிய மார்க்கம் நெறிகள் அனைத்தும் தெரியாதவர்களை அரசியல் காரணத்திற்காக உங்கள் கட்சியைச் சார்ந்தவர்களாக போட்டிருக்கிறீர்கள் என்பதை நான் குறையாகச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சட்டப்படி வக்ப் போர்டு தலைவர் நியமிக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

பள்ளி வாசல்களுடைய சொத்துக்கள் சரிவர பராமரிக்கப்படவில்லை. இன்றைக்கு பல சொத்துக்கள் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கின்றன. அப்படி ஆக்கிரமிக்கப்பட்டுள்ள சொத்துக்களைக் காப்பாற்ற வேண்டுமென்று, அந்தந்தப் பகுதிகளிலே உள்ளவர்கள் வக்ப் போர்டிற்கு எழுதியனுப்பியும், அதைத் தடுப்பதற்கு இது வரை எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை; வக்ப் போர்டு அதைச் செய்யவில்லை. ஆங்காங்கு ஆக்கிரமிப்புகளால் சொத்துக்கள் பாதிக்கப்பட்டு, வருமானத்தை இழந்து கொண்டிருக்கின்றது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எனவே, அந்த ஆக்கிரமிப்புக்காரர்களை வெளியேற்றுவதற்கு, ஆக்கிரமிப்புகளை நீக்குவதற்கு வக்ப் போர்டு முறையாக நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அதே நேரத்தில், எங்கள் இஸ்லாமிய மார்க்கத்தின் தலைவராக விளங்கும் நபிகள் நாயகம் அவர்களுடைய வாழ்க்கை வரலாற்றைப் பற்றி தமிழ்நாடு அரசு பாட நூல் நிறுவனம் வெளியிட்டிருக்கிறது. அப்படி வெளியிட்டுள்ள பாட நூலில் தவறான முறையிலே, இழிவுபடுத்தும் முறையிலே வெளியிடப்பட்டிருக்கின்றது என்பதை நான் வருத்தத்தோடு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக கல்வி அமைச்சர் அவர்களுக்கு சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அதேபோல், எங்களுடைய ஆண்டு 'உறிஜ்ரி' ஆண்டு என்று ஆரம்பிக்கும். அந்த உறிஜ்ரி ஆண்டை, அந்தப் புத்தகத்திலே 'துலுக்கர்' ஆண்டு என்று விஷமமாக குறித்துள்ளார்கள். தமிழ்நாடு பாட நூல் நிறுவன வெளியீடு—

[திரு. ஏ. சாகுல் அமீது] [1981 பிப்ரவரி 12

வரலாறு தொகுதி 2, பக்கம் 168—169-லே இப்படி தவறான, கடுமையான, கொடுமையான வார்த்தைகளை படிக்கும்போது இன்றைக்கு இந்தச் சமுதாய மக்கள், இஸ்லாமிய சமுதாயம் புண்படுகின்ற வார்த்தைகள் இருக்கின்றன என்பதைப் பற்றி செயற் குழுவிலே தீர்மானம் போட்டு, கல்வி அமைச்சர் அவர்களுக்கு அனுப்பினோம்.

ஆனால் இதுவரை நீக்கப்படவில்லை என்பதை சமுதாயத்தின் சார்பில் உங்கள் முன் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். தயவு செய்து இஸ்லாமிய சமுதாயத்தின் உள்ளத்தைப் புரிந்து கொண்டு அவதூறாக எழுதப்பட்ட வார்த்தைகளை நீக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். வக்ப் போர்டு என்பதற்கு முகமதியர் அறநிலையம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. முகமதியர் என்று சொல்லக் கூடாது. அதை மார்க்கம் அனுமதிக்கவில்லை என்று ஏற்கெனவே சட்ட மன்றத்தில் சொன்னேன். மாண்புமிகு முதல்வர் அவர்களும் அதைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்வதாகச் சொன்னார்கள். ஆனால் இன்னும் மாற்றப்படவில்லை. அதை மாற்றவேண்டுமென்ற கருத்தை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

சேலம், ஆத்தூர் போன்ற இடங்களில் பள்ளிவாசல் தர்கா உள்ள இடத்தின் பக்கத்தில் இருக்கும் ஜவ்வரிசி ஆலையின் கழிவு நீர் வந்து அங்குள்ள புனிதம் கெடுகிற நிலைமை இருக்கிறது (மணி அடிக்கப்பெற்றது). ஆகவே, வக்ஃப் போர்டு பற்றி நான் கூறியவற்றைப் பரிசீலித்து குறைகளை நிறைவு செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. இராஜா முகமது : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1981 ஆம் ஆண்டு பொது வக்ஃபுகள் கால வரையை நீட்டித்தல் திருத்தச் சட்ட முன் வடிவைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்களும் மாண்புமிகு உறுப்பினர் சாகுல் அமீது அவர்களும் சில கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார்கள். இந்தக் காலவரையறையை நீட்டித்தல் ஏன் செய்யப்படுகிறது என்பதை நான் விளக்க வேண்டுமென்றிருந்தேன். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் அதனுடைய வரலாறுகளை எல்லாம் சொல்லி அந்த நேரத்தை நான் எடுத்துக் கொள்ள வேண்டாத அளவுக்கு எனக்கு உதவி செய்திருக்கிறார்கள். அதற்காக என்னுடைய நன்றி. 1980 ஆம் ஆண்டு ஜனவரி 31 ஆம் தேதியோடு அந்தக் காலம் முடிவடைகிறது. அடுத்த ஒரு மூன்று ஆண்டுகளுக்கு நீடிக்கப்பட்டால்தான் மேலும் ஆயிரம் வழக்குகளைப் போட்டு தவறான முறையில் சட்ட விரோதமாகப் பாராதீனம் செய்த சொத்துக்களை மீட்க முடியும் என்ற அடிப்படையில் இந்தக் கால நீட்டிப்புச் சட்டம் கொண்டு வரப் பட்டிருக்கிறது. அதையொட்டி அவர்கள் தெரிவித்த கருத்துகளுக்கான



1981 பிப்ரவரி 12] [திரு. கே. இராஜா முகமது]

விவரங்களை அறிக்கையின் மூலமாக இந்த அவையில் வைக்க
நிச்சயமாக நடவடிக்கைகளை எடுப்பேன் என்ற உறுதியைத் தெரி
வித்துக் கொள்கிறேன். அதிலே சில முக்கியமான புள்ளிவிவரங்
களைத் தெரிவிக்க வேண்டியிருக்கிறது. சொத்து மதிப்பு எவ்
வளவு, வருமானம் எவ்வளவு என்றெல்லாம் கேட்டிருக்கிறார்
கள். அது தெளிவான புள்ளிவிவரங்களோடு இந்த மாமன்றத்
தில் வைக்கப்பட்டால்தான் சரியாக இருக்குமென்ற காரணத்தால்
தோராயமாக என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்ப
வில்லை.

இருந்தாலும் கூட, தமிழ்நாட்டில் ஆறாயிரம் வக்புகள்
இருப்பதாக மதிப்பிட்டிருக்கிறார்கள். சராசரியாக ஒரு வக்
புக்கு சில லட்சம் ரூபாய் சொத்து மதிப்பு என்று பார்த்தால் 60
கோடி ரூபாய் அளவுக்கு வக்பு சொத்துக்கள் இருக்கும். சில
வக்பு சொத்துக்கள் பல கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்துக்
கள். இன்றைய மார்க்கட் நிலவரப்படி மதிப்பீடு செய்து
பார்த்தால்தான் மதிப்பு தெரியும். அதற்கான நடவடிக்கை
களை எடுப்போம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்
கொண்டதற்கிணங்க அறிக்கையின் மூலமாகப் புள்ளிவிவரங்
களைத் தெளிவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஏன் இந்தக் காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது? ஏற்கெனவே
கொடுத்த காலக் கெடுவை வைத்துக் கொண்டே வழக்குகளைப்
போட்டிருக்கலாமே என்று கேட்டிருக்கிறார்கள். 10 ஆயிரத்
திற்கு மேற்பட்ட வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன.
பழைய தஸ்தாவேஜுகளைச் சேகரித்து, பழைய தகவல்களைச்
சேகரித்து வழக்குப் போட வேண்டியிருக்கிறது. அதிலே வக்ப்
வாரியமும் சர்க்காரும் தீவிரமாகக் கவனம் செலுத்தி வருகிறது.
சட்டவிரோதமான பாராதீனம் செய்த சொத்துக்களைத் திரும்
பப் பெற அக்கறை எடுத்து வருகிறது என்பதை மாண்புமிகு
உறுப்பினர்கள் அறிவார்கள்.

(பேரவைத் தலைவர் தலைமை)

வக்பு சொத்து என்றால் என்ன என்பதைப் பற்றி மாண்பு
மிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் தெளிவாக விளக்கி
யிருக்கிறார்கள். அதற்கு மேல் விளக்க நான் விரும்பவில்லை.
இஸ்லாமிய சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் வக்பு என்று கொடுத்
திருக்கிறார்கள். பிற சமுதாயத்தைச் சேர்ந்த நன்கொடை
யாளர்களும் சில இடங்களில் வக்பு செய்து கொடுத்திருக்கிறார்
கள். ஆனால் என்ன நோக்கத்திற்காக வக்பு செய்யப்
பட்டதோ அதை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பிலுள்ள மூத்த
வல்லிகள் தவறான முறையில் நடக்கும்போது நாம் நடவடிக்கை
எடுக்க வேண்டியிருக்கிறது.

[மாலை 4-20.]

அதிலே பாதிக்கப்பட்டவர்கள் அரசியல் ரீதியாகப் பார்க்
கிறார்கள். நான் மாமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்
கொள்ள விரும்புவதெல்லாம், இந்த வக்பு சொத்துக்களைப்

பராமரிக்கின்றவர்கள் இறை நம்பிக்கை உடையவர்களாக இருக்கிறார்கள். இதை வக்பு செய்யப்படுகின்றபொழுது இறைவன் பெயரால்தான் இது வக்பு செய்யப்படுகிறது. எனவே, இறை நம்பிக்கை உள்ளவர்கள், இறைவன் பெயரால் வக்ப் செய்யப்பட்ட இறைவனுடைய சொத்துக்களை நிர்வாகம் செய்யக் கூடியவர்கள், தவறான வழியிலே அதை நிர்வாகம் செய்கிறார்கள் என்று சொன்னால் அவர்களைச் சட்ட ரீதியாக எந்த வகையிலே திருத்திவிட முடியும் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். இன்னும் கடுமையான சட்டங்கள் ஏதாவது கொண்டு வந்து அந்தச் சொத்துக்களைக் காப்பாற்றினாலொழிய, பிரச்சாரத்தின் மூலமாகவோ அல்லது சட்ட திருத்தங்களின் மூலமாகவோ நாம் அதைக் காப்பாற்றிவிட முடியாது. ஆண்டவனுக்கே பயப்படாதவன் அரசுக்கு பயப்படுவான் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் எதிர்பார்க்க மாட்டார்கள் என்று நான் நினைக்கிறேன்.

இறை நம்பிக்கை உடையவர்களுக்கு அரசை விட ஆண்டவன் பெரியவன் ; சக்தி வாய்ந்தவன். ஆனால் அந்த நம்பிக்கையைச் சொல்லிக்கொண்டு, அதன் பெயராலே நிர்வாகம் செய்யக் கூடியவர்கள் அந்தச் சொத்தைத் தவறான வழியிலே பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்றால் நாம் என்ன செய்ய முடியும்? இருந்தாலும் கூட முடிந்த அளவிற்கு அதிருப்தி உண்டாகாத வகையில், அரசியல் சார்பற்ற முறையில் ஒரு சமுதாய நல்லெண்ணத்தின் அடிப்படையிலே அரசு செயல்பட்டுக் கொண்டு வருகிறது. அப்படிச் செய்ய வேண்டுமென்று வக்பு வாரியத்திற்கு அவ்வப்பொழுது நாங்கள் அறிவுரை வழங்கிக் கொண்டு வருகிறோம்.

நீங்கள் குறிப்பிட்ட சில நிகழ்ச்சிகளைப் பற்றி நான் தெளிவாக இந்த நேரத்திலே சொல்ல முடியாது என்றாலும் கூட, அதைக் குறிப்பிட்டு நீங்கள் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருவீர்களேயானால் வக்பு வாரியத்திடமிருந்து நான் பதில் பெற்று, இது ஏன் இப்படி நடந்தது என்பதையெல்லாம் விசாரிப்பதற்கு ஒரு வாய்ப்பாக இருக்கும். காரணம், இந்த மாமன்றத்திலே இருக்கக்கூடிய உறுப்பினர்கள், இது சம்பந்தமான விஷயங்களிலே அக்கறை எடுத்துக் கொண்டு, கேள்விகள் போடுவதன் மூலமாக, கவன ஈர்ப்புத் தீர்மானங்களைக் கொடுப்பதன் மூலமாகக்கூட சில நல்ல காரியங்களைச் செய்ய முன் வருவார்களேயானால் அதன் மூலமாக இந்த வக்பு சொத்துக்களை நாம் மேலும் பாதுகாக்க முடியும் என்ற நல்லெண்ணத்திலேதான் நான் இதைக் குறிப்பிடுகிறேன். அப்பொழுதுதான் சில புள்ளி விவரங்களை நாம் பெற முடியும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இங்கே, ''இஸ்மி'' பத்திரிகை பற்றி ஒரு கருத்தைச் சொன்னார்கள். பொதுவாக, அறக்கட்டளை என்று வருகின்றபொழுது, இந்து அறநிலையத் துறையின் சார்பிலே அல்லது



அதை ஒட்டியோ சில பத்திரிகைகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. ஆனால், தமிழகத்தைப் பொறுத்தவரையிலே வக்பு வாரியத்தின் சார்பிலே ஒரு பத்திரிகை இல்லை. அதன் மூலமாகச் சமுதாயப் பணி ஆற்ற வேண்டுமென்ற அடிப்படையிலே ''இஸ்மி'' பத்திரிகையை வக்ப் வாரியம் வெளியிட்டுக் கொண்டிருக்கிறது. அதிலே வரக்கூடிய கருத்துக்கள் அல்லது செய்திகளிலே அரசியல் இருக்குமேயானால் அது நிச்சயமாகப் போக்கிக் கொள்ளக் கூடிய ஒன்றுதான். அதைக் குறிப்பிட்டு அவர்கள் சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆனால், அது வக்ப் வாரியத்திற்கு வரக்கூடிய அந்த சகாய நிதி என்று சொல்கிறோமே கான்ட்ரிபியூசன் அதிலிருந்து நடத்தப்படவில்லை. பப்லிகேஷன் பண்ட் என்று தனியாக ஒன்றை அவர்கள் வசூல் செய்து, சந்தாக்களின் மூலமாக அந்த ''இஸ்மி'' பத்திரிகை விற்பதன் மூலமாகக் கிடைக்கின்ற பணத்திலிருந்து அது நடத்தப்படுகிறதே தவிர, வக்பு மூலமாக நாம் வசூல் செய்கிறோமே 6 சதவீதம், அந்த 6 சதவீதப் பணத்திலிருந்து நிச்சயமாக இந்தப் பத்திரிகை நடத்தப்படவில்லை. அது என்ன காரியத்திற்காக வசூல் செய்யப்படுகிறதோ அந்தக் காரியத்திற்காக மட்டும்தான் அந்தப் பணத்தை நாம் வசூல் செய்கிறோம். 6 சதவீதத்திலிருந்து ஒரு சதவீதத்தை மத்திய வக்புக்கு நாம் அனுப்பிவிடுகிறோம் ; 5 சதவீதத்தை அதிலே, வரக்கூடிய வருமானத்தை வைத்துக் கொண்டு என்னென்ன காரியங்களுக்காக நாம் செய்ய வேண்டுமோ அதை மட்டும்தான் செய்து கொண்டிருக்கிறோம். மற்றபடி இந்தப் பத்திரிகை நடத்துவது அல்லது ஏழைகளுக்குத் தையல் இயந்திரங்கள் கொடுப்பது அல்லது ஏழைக் குழந்தைகளுக்கு உதவுவது என்ற சமுதாய நலப் பணித் திட்டங்களையெல்லாம் வக்பு குழுவும், அரசாங்கத்தினுடைய ஆலோசனையின்படி தனியாகத்தான் அது செயல்படுகிறதே தவிர சகாய நிதியிலிருந்து அதற்குப் பயன்படுத்துவதில்லை ; ஒரு பைசாகூட அதற்குப் பயன்படுத்துவதில்லை என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, பத்திரிகை நடத்துவதிலே தவறு இல்லை. அதிலே வரக்கூடிய செய்திகள், ஆட்சேபகரமாக இருக்குமேயானால் நிச்சயமாக ஒரு நடுநிலைமையோடு இருக்கக்கூடிய ஒரு வாரியத்தினுடைய பத்திரிகை அப்படி இருக்கக்கூடாது என்று சொல்வதிலே எனக்கும் ஆட்சேபனை இடையாது. அப்படிப்பட்ட கருத்துக்கள் ஏதாவது இருக்குமேயானால் தயவுசெய்து எங்களுடைய கவனத்திற்குக்கொண்டு வர வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். இது ஒரு நல்ல நோக்கத்தோடு வந்திருக்கிறது, பாராட்டுகிறேன் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்களே சொல்லிவிட்ட காரணத்தினாலே இதற்குமேல் நான் விளக்க வேண்டியதில்லை என்று கருதுகிறேன்.

ஒரேயொரு கருத்து. இந்த போர்டைப் பொறுத்த அ[illegible]விலே பல்வேறு கருத்துக்களை நீங்கள் சொல்கிறீர்கள். எப்படி போட்டாலும், சமுதாயப் பிரச்னை என்று வருகின்றபொழுது

சமயப் பிரச்னை என்று வருகின்றபொழுது ஆங்காங்கே உள்ளவர்கள் அவர்களாகவே திருத்திக் கொள்ளவும், தகுதிகளை வளர்த்துக் கொள்ளவும் முயற்சி செய்யவில்லை என்று சொன்னால் நாம் அதிகமாக ஒன்றும் செய்து விட முடியாது. ஏதாவது ஒரு நல்லெண்ணத்திலே ஒரு நடவடிக்கை எடுத்தால் விளைவுகள் இன்னும் வேறுவிதமாகப் போய் விடுகின்றன. தலைவலி போய் திருகுவலி வந்தது போலத்தான். ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் வாரியங்கள் அமைக்கப்படுகின்றபொழுது ஏதாவது வந்து விடுகின்றன. இருந்தாலும்கூட அரசினுடைய கவனத்திற்கு அவ்வப்பொழுது நீங்கள் கொண்டு வருகின்றபொழுது அரசு எதையுமே அலட்சியப்படுத்திவிடவில்லை; கொஞ்சம் பொறுமையாக ஒவ்வொரு விஷயத்தையும் நாங்கள் கவனித்துக் கொண்டிருக்கிறோம். அரசைப் பொறுத்த அளவிலே, முத்தவல்லிகள் விஷயத்திலே நாங்கள் மிகவும் நிதானமாக, அவர்களுக்குரிய மரியாதை கொடுத்து, அவர்களுடைய வயதுக்குத் தக்க மரியாதையும் கொடுத்து, அவர்களுடைய பிரச்னையை நாங்கள் மிகவும் அமைதியாகக் கேட்டு, முத்தவல்லிகளுக்கு ஒரு அரசு, அமைச்சர் என்று பார்க்காமல் ஒரு பெரியவர் வருகிறார் என்று மரியாதை கொடுத்து, நாங்கள் அதையெல்லாம் விசாரணை செய்து கொண்டிருக்கிறோம். எனவே, வக்பு வாரியத்தினுடைய தீர்ப்புதான் இறுதியானது என்று கருத வேண்டியதில்லை அதிலே ஏதாவது குறை இருக்கும் என்று நீங்கள் கருதுவீர்களேயானால், அரசுக்கு நீங்கள் மனுச் செய்யலாம்; அதன் மூலமாக ஒரு ரத்து உத்தரவை நீங்கள் பெறலாம்; திரும்பப் பரிசீலனை செய்யலாம்.

எவ்வளவோ வாய்ப்புகள் இருக்கின்றன. அதைத்தான் பல்வேறு மக்கள் கூடச் செய்து பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அதையும் மனதிலே கொள்ள வேண்டும்.

வாரியத்தினுடைய நடவடிக்கையைப் பொறுத்த அளவிலே அதனுடைய பொருளாதாரம் ஓரளவுக்கு இப்பொழுது சீர்பட்டு வந்திருக்கிறது என்பதை மட்டும் நாம் மறந்துவிட முடியாது. அந்த அளவுக்குப் பொருளாதார வளர்ச்சியிலே, அதுவும் ஓரளவு வலிமை பெற்றிருக்கிறது என்று சொன்னால், இப்பொழுது இருக்கக்கூடிய அதனுடைய குழு அமைப்பு அதற்கு ஒரு காரணம் என்று சொல்ல வேண்டும்.

மற்றபடி நீங்கள் குறிப்பிட்டிருக்கக்கூடிய வத்தலகுண்டு சம்பவங்கள், மற்ற விஷயங்களையெல்லாம் தயவுசெய்து, நீங்கள் என்னுடைய கவனத்திற்குத் தனிப்பட்ட முறையிலே சொல்ல வேண்டுமென்று, அல்லது, இங்கே பேசியதிலிருந்து குறிப்பை எடுத்துக் கொண்டு அதன்மீது நிச்சயமாக நடவடிக்கை எடுப்பேன் என்று இந்த நேரத்திலே உங்களுக்கு நான் உறுதி தெரிவித்து இந்தக் காலவரையறை நீட்டிப்புச் சட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.





மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி.

'' தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு பொது வக்புகள் காலவரையறையை நீட்டித்தல் திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 3/1981) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2, 3 ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு பொது வக்புகள் காலவரையறையை நீட்டித்தல் திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 3/1981) நிறைவேற்றப் பெற வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

## 2. பச்சையப்பன் பொறுப்புக் கழக நிர்வாகத்தை அரசு எடுத்துக் கொள்ளுதல் சட்ட முன்வடிவு, 1981.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, 1981 ஆம் ஆண்டு பச்சையப்பன் பொறுப்புக் கழக (நிர்வாகத்தை அரசு எடுத்துக் கொள்ளுதல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 19/1981) ஆய்வுக்கு* எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்.''

என்று மொழிகிறேன்.

இந்தச் சட்ட முன்வடிவு இதற்கு முன்னாலே அரசால் வெளியிடப்பட்ட அவசரச் சட்டத்தை, சட்டமாக்குவதற்கான ஒரு முன்வடிவாக அமைந்திருக்கிறது. பச்சையப்பன் அறக்கட்டளை பல்வேறு கல்வி நிறுவனங்களை நடத்திக் கொண்டுவருகிறது.

---

*1981 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம், 9-ம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

[திரு. செ. அரங்கநாயகம்] [1981 பிப்ரவரி 12

அதிலே ஆசிரியர்கள் மத்தியிலேயும், மாணவர்கள் மத்தியிலேயும், பொதுமக்கள் மத்தியிலேயும், நிர்வாகம் சரியானபடி நடைபெறவில்லை யென்ற கருத்து உருவாக்கப்பட்டு, பல்வேறு நிலையிலே அதற்காகப் போராட்டங்கள் கூட நடத்தப்பட்டன. அந்த அடிப்படையிலே அந்த நிர்வாகம் செம்மையாக நடத்தப்பட வேண்டுமென்பதற்காக 2 ஆண்டுக்காலம் அந்த அறக்கட்டளையை அரசு எடுத்துக்கொள்ளுகின்ற முறையிலே அரசு அதிகாரிகளைக் கொண்டு நாம் அந்த நிர்வாகத்தை இப்பொழுது ஏற்று நடத்துகின்றோம். ஆகவே, இந்த அவசரச் சட்டத்திற்காகக் கொண்டு வரப்பட்ட சட்ட முன்வடிவினுடைய இன்றியமையாத் தன்மையை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள் என்று கருதுகிறேன். அந்த அடிப்படையிலே இதனை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் மிகப் பெரிய கல்வி நிறுவனங்களில் ஒன்றாகக் கருதப்படுகிற பச்சையப்பன் கல்லூரியினுடைய நிர்வாகத்தை இந்த அரசு ஏற்கின்ற இந்த மசோதாவின் மீது என்னுடைய கருத்துக்களை நான் சார்ந்திருக்கின்ற முன்னேற்றக் கழகத்தின் சார்பில்—சிலவற்றை, நான்—சொல்ல விரும்புகிறேன். எத்தனையோ மசோதாக்களிலே நான் பேசி இருக்கிறேன் என்று சொன்னாலும் இந்த மசோதாவிலே பேசுகிறபொழுது என் உள்ளம் ஒன்றிய நிலையிலே நான் பேசுகிறேன் என்று குறிப்பிடுகிறேன். காரணம், எங்களுடைய தாய், தந்தையருக்கு எவ்வளவு மதிப்பு கொடுக்கிறோமோ, அதற்கு அடுத்த மூன்றாவது இடத்தை, எங்களுடைய இதயத்திலே வைக்கின்ற மதிப்பிற்குரிய இடமாக, நான் கருதுவது, நான் மட்டுமல்ல, பச்சையப்பன் கல்லூரியிலே படித்த, எந்த மாணவனும் கருதுவது, எங்களுடைய பச்சையப்பன் கல்லூரிதான்.

(மாலை 4–30)

நம்முடைய திராவிட இயக்கத்தின் போர்வாளியாக இருக்கிற பேரறிஞர் அண்ணாவை உருவாக்கி இந்த தமிழகத்திற்கு தந்ததும் அந்த பச்சையப்பன் கல்லூரிதான். அந்த கல்லூரிக்கென்று ஒரு தனி வரலாறு உண்டு. அந்த கல்லூரியிலே படித்தவர்கள் யாரும் சோடையாக போனதாக வரலாறே கிடையாது. அந்தக் கல்லூரியைப் பற்றி இன்னும் சொல்லவேண்டுமென்றால்—வெளி உலக வாழ்க்கையிலே எத்தனையோ பேர்கள் எத்தனையோ பிரச்சினைகளை சந்தித்திருக்கலாம். ஆனால் உளபூர்வமான பிரச்சினையிலே நான்—பேசுகிறேன். பல்கலைக் கழகத்தின் நூற்றாண்டு விழாவினை கொண்டாடுவதற்கு முன்னதாகவே, பச்சையப்பன் கல்லூரி நூற்றாண்டு விழாவினை கொண்டாடி அரிய பல சேவைகளை செய்ததாகும்.



1981 பிப்ரவரி 12] [திரு. துரைமுருகன்]

காஞ்சிபுரத்திலே தோன்றிய பச்சையப்பனின் கொடை வள்ளல் தன்மையால், அந்த கல்வி நிறுவனத்தின் சேவைகள் இன்றைக்கு வியாபித்திருக்கின்றன. அப்படிப்பட்ட ஒரு நிர்வாகத்திற்கு ஒரு குறை ஏற்பட்டிருக்கிறது என்று கேள்விப்பட்ட உடனே, ஒரு தாய் நொடிந்த நிலையில் இருக்கிறாள் என்று கேள்விப்பட்டு துடிக்கின்ற ஒரு மகனுடைய நிலைக்குத் தான் நாங்கள் இன்றைக்கு ஆளாகியிருக்கிறோம். என்பதை இந்த மாமன்றத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அந்த பச்சையப்பன் கல்லூரியிலே படிக்கின்ற மாணவர்களைப் பொறுத்தவரையில் எந்தெந்த துறையில் அவர்களுக்கு விருப்பம் இருக்கிறதோ அந்தந்த துறையில் அவர்களை வளர்ப்பதில் அந்தக் கல்லூரிக்கு நிகர் அந்த கல்லூரி தான். "தண்ணீரும் காவிரியே, தார்வேந்த சோழனே, மண்ணாவதும் சோழ மண்டலமே" என்று ஒரு பாடல் உண்டு. அப்படி கல்லூரி என்று சொன்னால் எங்களைப் பொறுத்தவரை அது அந்த பச்சையப்பன் கல்லூரியைத்தான் குறிக்கும் என்று நாங்கள் புகழ்ந்து பேசுவதுண்டு. பச்சையப்பன் கல்லூரியிலே திட்டிய கத்தி பாராங்கல்லிலே கூட பாயும் என்பதை நண்பர்கள் எல்லாம் உணர்வார்கள். அப்படிப்பட்ட புகழுக்கும் பெருமைக்கும் உரிய கல்லூரி, அண்ணாவை உருவாக்கிய அந்த கல்லூரி இன்றைய தினம் நிர்வாக சீர்கேட்டிற்குள்ளாக்கப் பட்டுள்ளது. அந்த பச்சையப்பன் பொறுப்பு கழகத்தின் உறுப்பினர்களும் நிர்வாகமும் அறக்கட்டளைக்குச் சொந்தமான சொத்துக்களைப் பொறுத்தவரையில் முறைகேடுகள் செய்திருக்கிறார்கள் என்று கேள்விப்படுகிற போது உள்ளபடியே நாங்கள் மெத்த வருத்தப்படுகிறோம். அதற்கெல்லாம் காரணம், அங்கே டிரஸ்ட் போர்டு சேர்மெனாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஒருவர் கல்லூரி முதல்வராக இருப்பதற்குரிய எந்த தகுதியும் இல்லாதவர். சாதாரண பி.எஸ்ஸி. படித்தவர். அவர் கல்லூரியில், வேண்டுமானால் டியூட்டராகவோ டெமான்ஸ்ட்ரேட்டராகவோ இருக்கலாம். ஒரு கல்லூரியின் முதல்வராக இருந்து ரிடையர் ஆகி வீட்டுக்கு அனுப்பிவைக்கப்பட்டபிறகு தேர்தலிலே நின்று மீண்டும் டிரஸ்டு போர்டு சேர்மெனாக வந்து உட்காருகிறார் என்றால் அதிலே ஊழல் நெளியாமலா இருக்கும். முறைகேடுகள் பிறக்காமலா இருக்கும். நிர்வாகம் சீர்குலையாமலா இருக்கும். ஒட்டுமொத்தமாக நான் எல்லோரையும் சொல்லவில்லை. அந்த நிர்வாகத்தை தற்போதைய பொறுப்பிலே வைத்திருப்பவர்கள் இவ்வளவு சீர்கேட்டிற்கு கொண்டு வந்திருக்கிறார்கள் என்று சொல்கிறபோது உள்ளபடி......

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தற்போதைய நிர்வாகம் என்று சொல்ல விரும்புகிறேன். அந்த கல்லூரி நிர்வாகத்தை முன்பு பச்சையப்பன் பொறுப்பு கழகம் நிர்வகித்து குறிப்பிடுவது பற்றிச் சொல்ல

வந்தது. அவசர சட்டம் வந்தவுடனே சர்க்கார் சார்பிலே நியமிக்கப்பட்ட அதிகாரிகளின் கையிலே நிர்வாகம் இருக்கிறது. ஆகவே இதற்கு முன்னால் இருந்த நிர்வாகத்தினரைத் தான் மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகிறார் என்று நினைக்கிறேன்.

திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே, அதற்காகத் தான் நான் பர்டிகுலராகச் சொன்னேன். பெயரைச் சொல்லக் கூடாது என்பதால் பி.எஸ்ஸி. படித்தவர், முதல்வராக இருந் தவர் என்று சொன்னேன். ஆனால் ஆர்டினென்சுக்குப் பிறகு நிர்வாகத்தை அரசு எடுத்துக்கொண்ட பிறகு உள்ள நிர் வாகத்தினரை நான் குறை சொல்லவில்லை. ஒரு பி.எஸ்ஸி. படித்தவர் கல்லூரியின் டிரஸ்ட் போர்டு சேர்மெனாக வந்த பிறகு நிர்வாகம் சீர்கெட்டுவிட்டது என்பதை நினைக்கின்ற போது மனம் வேதனைப்படுகிறது. அப்படிப்பட்ட நிர் வாகத்தை சீரமைக்கவேண்டுமென்ற முறையில் சர்க்கார் இரண்டாண்டு காலத்திற்கு மட்டும் இடைக்கால நிவாரண மாக, அதை நிர்வகிக்க வேண்டும் என்று இங்கே சட்ட முன்வடிவு கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால் நான் ஒன்றைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடு) அரசாங்கத்தின் சார்பில் விளையாட்டு இளைஞர் அணி பயிற்சித் துறை இயக்குநர், அரசு இணைச்செயலாளர் (இரண்டாவது) உள்துறை, அரசு இணைச் செயலாளர், சட்டத்துறை, அரசு துணைச் செயலாளர், நிதித்துறை, கல்வித்துறை இயக்குநர், சென்னை ஆகிய வர்களெல்லாம் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் முழுநேரம் இருந்து கவனித்து செய்தாலே அதன் குறைகளை களைவது என்பது கடினம். அப்படிப்பட்ட சூழ் நிலையில் அரசாங்கத் துறையில் இருப்பவர்கள் ஏதோ ஓய்வு கிடைக்கிற நேரத்திலே அங்கே போய் பைலை பார்த்து நிர்வாகத்திலே இருக்கின்ற மொத்தக் களைகளையும் எடுத்துவிடு வார்கள் என்று சொன்னால் அது வியப்புக்குரியதாக இருக்கிறது. அண்ணா சொல்வார்—ரயில் ஓடினால் போர்ட்டருக்கு ரெஸ்ட், ரயில் நின்றால் போர்ட்டருக்கு வேலை என்று. அதைப்போல ஏதோ நேரம் கிடைத்த நேரத்தில் அவர்களால் இந்த நிர்வாகத் தின் பணிகளை கவனிக்க முடியுமே தவிர, நிரந்தரமாக உட் கார்ந்து அங்கே மலிந்து போய் கிடக்கும் குறைபாடுகளை நீக்குகின்ற முயற்சியில் ஈடுபடமுடியாது என்று சொல்லிக் கொள்கிறேன். மேலும், அது ஒரு சர்க்கார் இயந்திரமாக மாற்றமுடியுமே தவிர, உள்ளுணர்வோடு அவர்களெல்லாம் அதிலே பணியாற்றுவார்களா என்கிற ஐயம் எனக்குண்டு. அதிலே போட்டு இருக்கும் அதிகாரிகளின் திறமையையோ, சின்சியாரிட்டியையோ நான் குறைசொல்லவில்லை. நல்ல பயிற்சி பெற்றவர்களைத்தான் போட்டு இருக்கிறீர்கள். நான்





மறுக்கவில்லை. ஆனால் அவர்களுக்கு இருக்கும் குறைந்த நேரத்தில், அங்கே போய் என்ன செய்யமுடியும் என்பதை ஆராய்ந்து பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அவர்களும் அங்கே இருக்கட்டும். ஆனால் நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். உள்ளபடியே அந்த நிர்வா கத்தை சீர்படுத்தவேண்டும் என்று சொன்னால், அந்தப் பச்சையப்பன் கல்லூரியில் படித்த என்னைப் போடவேண்டும் என்று சொல்லவில்லை (சிரிப்பு). மதிப்பிற்குரிய மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் பி.யு.சி.யில் இருந்து அந்தக் கல்லூரியில் படித்தவர். அவரைப் போடலாம். மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி அங்கே படித்தவர். நம்முடைய அமைச்சர் அவர்கள் கூட அங்கேதான் படித்தார் கள். அங்கே படித்தவர்கள் என்று நாங்கள் பெருமைப்படு கிறோம். ஆகவே, இவர்களைப் போன்றவர்களைக் கொண்டு ஒரு நிர்வாகக் குழு அமைக்கலாம். அதற்கு மாண்மிகு அமைச்சர் அவர்கள் சொல்லலாம். ஏற்கனவே அங்கே இருந்த ''நான்-அபிசியல் கமிட்டியைத்'' தானே நாம் கலைத்து இருக்கிறோம் என்று. அது நியாயம் என் பதை நானும் ஒப்புக்கொள்கிறேன். ஆகவே, அங்கே போட்டுள்ள உறுப்பினர்களின் சர்வீஸ் வேண்டாம் என்று சொல்லவில்லை. அவர்களுக்கு உறுதுணையாக, அந்தக் கல்லூரி நிர்வாகத்தைச் செம்மைப்படுத்தவேண்டும் என்று உள்ளுணர்வு கொண்ட இங்கேயுள்ள சட்டமன்ற உறுப்பினர் களைக் கொண்ட ஒரு அட்வைசரி கமிட்டி போடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி செய்தால், அவர் களுக்குத் தெரியும், அந்த நிர்வாகத்தை எப்படிச் செம்மை படுத்தவேண்டும் என்று. எங்கே போவது, எந்த கிளாஸ் எங்கே உள்ளது. எந்தப் பேராசிரியர் எந்த வகுப்பு நடத்து கிறார் என்றெல்லாம் அலசி ஆராய்ந்து பார்த்து காரியங் களைச் செய்யமுடியும். ஆகவே, நான் இந்த அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ள விரும்புவது, அங்கே படித்து பட்டம் பெற்றுள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் ஆளும் கட்சியிலும், எதிர்க்கட்சியிலும் இருக்கிறார்கள். அவர்களைக்கொண்டு ஒரு அட்வைசரி கமிட்டி போடவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இதிலே யாரைச் சேர்மனாகப் போட்டு இருக்கிறீர்கள் என்றால், விளையாட்டு இளைஞர் அணி பயிற்சித் துறை இயக்குநர் திரு. யு. எஸ். நடராசன் அவர்களைப் போட்டு இருக்கிறார்கள். அவர் நல்ல அனுபவம் வாய்ந்தவர். அவர் குடிநீர் வாரியத் தலைவராகவும் இருக்கிறார். அவருக்கு நிறைய வேலைகள் இருக்கின்றன. எந்த கிராமத்திற்கு தண்ணீர் இல்லை என்று பார்க்கவேண்டும். வடாற்காடு மாவட்டம் வறண்டு கிடக்கிறது. வாணியம்பாடியில் வாய்க் கால் ஓடவில்லை என்று இப்படி பல்வேறு பிரச்சினைகளை

அவர் பார்க்கவேண்டும். அவர் எப்படி இந்த நிர்
வாகத்தை கவனிக்கமுடியும். அவருக்கு எங்கேயிருந்து
நேரம் கிடைக்கும். இந்த பச்சையப்பன் டிரஸ்டிற்கு
காசியிலிருந்து ராமேஸ்வரம் வரையில் சொத்துக்கள் இருக்
கின்றன. 7-8 கல்லூரிகள் இருக்கின்றன. செங்கல்வராயன்
பாலிடெக்னிக் இருக்கிறது. ஹாஸ்டல் இருக்கிறது. ஆகவே
24 மணி நேரம் இந்த நிர்வாகத்தைக் கவனிக்க நேரம்
இருந்தால் தான் அதைச் செம்மைப்படுத்த முடியும். அதனால்
தான் அந்த உறுப்பினர்களுக்கு உறுதுணையாக ஆலோசனை
சொல்லக்கூடிய அளவில் ஒரு அட்வைசரி கமிட்டி அமைக்க
வேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

இரண்டாண்டுகாலம் அந்த நிர்வாகத்தைச் செம்மை
படுத்த போதும் என்று சொல்லியிருக்கிறீர்கள். இரண்
டாண்டு காலத்திற்குப் பிறகு பஞ்சாயத்து தேர்தல்களைப்
போல—அங்கே வேலை இன்னும் பாக்கியிருக்கிறது. மேலும்
ஓராண்டு காலத்திற்கு நீட்டிப்புக் கேட்கக்கூடாது.
ஓராண்டு காலத்திற்குள்ளேயே அந்த நிர்வாகத்தைச் செம்மைப்
படுத்தி, அதற்கு முறையான தேர்தல் நடத்தி, அந்த
நிர்வாகம் நல்ல முறையில் நடக்க வழிவகை செய்ய அமைச்சர்
அவர்கள் உறுதி அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு,
இந்த இரண்டு ஆண்டுக்காலக் கெடு மீறக்கூடாது என்று
சொல்லி, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

(மாலை 4-40.)

திரு. என். சங்கரய்யா: தலைவரவர்களே, பச்சையப்பன்
அறக்கட்டளையை அரசு எடுத்துக்கொள்வதை நாங்கள் ஆத
ரிக்கிறோம். அதிலே ஏராளமான புகார்கள் அரசுக்கு வந்த
காரணத்தால் இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டிருக்கிறது
என்று சொல்லப்பட்டிருக்கிறது. பச்சையப்பன் அறக்
கட்டளையினுடைய மூலவர்கள் எந்த நல்ல நோக்கத்திற்காக
இந்த அறக்கட்டளையை ஏற்படுத்தினார்களோ அந்த நோக்
கம் நல்லமுறையிலே நிறைவேறுகின்ற வகையிலே அரசாங்கம்
நிரந்தரமாக அந்த நிர்வாகத்தை எடுத்துக்கொண்டால் என்ன
என்று நான் கேட்க ஆசைப்படுகிறேன். மீண்டும், மீண்டும்
இப்படிப்பட்ட புகார்கள் வருவதும், அந்த புகார்கள் வருகிற
காலத்தில் ஏதோ தாற்காலிகமாக 2 ஆண்டு அந்த நிர்
வாகத்தை அரசாங்கம் மேற்கொள்வது, மறுபடியும் அவர்கள்
கையிலே கொடுத்துவிடுவது என்றால் இதற்கு ஒரு நிரந்தரமான
முடிவு என்ன? ஐகோர்ட்டிலே பச்சையப்பன் அறக்கட்ட
ளைக்கு தேர்தல் நடைபெற வேண்டுமென்று சொல்லியிருந்தா
லும் சில நல்ல நோக்கங்களுக்காக அரசாங்கம் எந்தவிதமான
புகார்களுக்கும் இடமில்லாமல், அந்த நிர்வாகத்தை நிரந்தர
மாக ஏற்றுக்கொள்ள இந்த இடைக்காலத்திலே முடிவு செய்
வது நல்லது என்று நான் கருதுகிறேன்.



ஏராளமான சொத்துக்கள் இருக்கின்றன. பல்வேறு சமயங்
களில் பல்வேறு மாணவர்கள் பிரிவு அங்கே கிளர்ச்சிசெய்தார்கள்
இதை எல்லாம் கண்ணுற்று, இந்த இரண்டாண்டு காலத்திலே
அரசாங்கம் ஒரு முடிவுக்கு வர நல்ல வாய்ப்பு இருக்கிறது.
அதை நல்லமுறையில் யோசனை செய்து, ஒரு அடிப்படையான
நல்ல நிர்வாகத்தை ஏற்படுத்த அரசாங்கம் முயற்சி செய்ய
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் துரை முருகன்
அவர்கள் சொன்னதைப்போல இப்போது சில அதிகாரிகள் நிர்
வாகக் குழுவில் இருக்கிறார்கள். அவர்கள் மற்ற வேலைகளைச்
செய்துகொண்டு எந்த அளவுக்கு இந்த நிர்வாகத்தையும் கவனிக்க
முடியும்? ஆகவே, ஒன்றிரண்டு பேர்களையாவது முழு நேர
பொறுப்பு வகிக்கும்படி நியமிக்க வேண்டும்; அதுதான் நல்லது.
இல்லையென்றால் மற்ற வேலைகளையும் செய்துகொண்டு,
இந்த வேலையையும் அவர்களால் செய்ய முடியாது. இதற்கு
அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை நான்
அறிய விரும்புகிறேன்.

அதைப்போல பல புகார்கள் வந்திருக்கின்றன. தனிப்பட்ட
கல்லூரிகள், பல்கலைக் கழகம், பள்ளிகள் எல்லாம் இருக்
கின்றன. அவைகளுக்கும் இதைப்போன்ற ஒரே ஒரு அளவு
கோலை பயன்படுத்தி, அதன் மூலவர்கள் நோக்கங்களுக்கு
பங்கம் ஏற்படாமல் அரசாங்கத்தின் பொறுப்பில் நிர்வா
கத்தை நடத்த வேண்டும். மைனாரிட்டி இன்ஸ்டிட்யூஷன்கள்
நீங்கலாக—அவற்றை ஏற்றுக்கொள்ள இன்றைக்கு தடை
இருப்பதால்—மற்ற தனியார் நிறுவனங்களை படிப்படியாக
தமிழக அரசு தன்னுடைய நிர்வாகத்தில் கொண்டுவர முயற்சி
செய்வது பிற மாநிலங்களுக்கும் முன் உதாரணமாக இருக்கும்;
மக்கள் நலன்களுக்கு பொருத்தமாகவும் அது இருக்கும் என்று
கூறி, இந்த இடைக்காலத்தில் அமைக்கப்பட்டிருக்கிற குழு
ஆசிரியர்கள் பிரதிநிதிகளையும் மாணவர்கள் பிரதிநிதிகளை
யும் கலந்தாலோசித்து, அவர்களுடைய யோசனைகளைக்
கேட்டு, நல்லமுறையில் இந்த நிர்வாகத்தை நடத்த முயற்சி
செய்ய வேண்டுமென்று கேட்டு, இந்த மசோதாவை ஆதரித்து
அமர்கிறேன்.

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு தலைவரவர்
களே, இந்த பச்சையப்பன் அறக்கட்டளை சம்பந்தமாக நமது
அரசு கொண்டுவந்திருக்கிற சட்ட முன்வடிவை நான் வர
வேற்கிறேன்; பாராட்டுகிறேன். ஆனால் அதே நேரத்தில்
பச்சையப்பன் அறக்கட்டளையை நிறுவிய பெரியவர் மிக கஷ்ட
மான வாழ்க்கை வாழ்ந்தார்கள். தான் கஷ்டப்பட்டாலும்
இப்படிப்பட்ட ஒரு அறக்கட்டளையை நிறுவிய பெரியவர்
எண்ணத்திற்கு மாறாக இப்படிப்பட்ட தவறுகள் நடைபெற்றதால்

[திரு. எல். இளையபெருமாள்] [1981 பிப்ரவரி 12

அரசு முன்வந்து அந்த நிர்வாகத்தை எடுத்திருக்கிறது. அந்த
அறக்கட்டளையை துஷ்பிரயோகம் செய்தவர் யார் என்பதை
அரசு கவனத்திலே கொண்டு, அதற்கு தக்க நடவடிக்கை எடுத்து,
இது போன்ற பல அறக்கட்டளைகளில் இப்படிப்பட்ட தவறு
நடக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இல்லை என்றால்
அவைகளிலே தவறு நடக்கக்கூடும். ஆகவே, யாராக இருந்தாலும்
துஷ்பிரயோகம் செய்தவர் மீது தகுந்த நடவடிக்கை எடுப்பீர்
கள் என்று நம்புகிறேன்.

மேலும், இந்த அறக்கட்டளைக்கு சிதம்பரத்திலே சில சொத்
துக்கள்—மானியமாக எழுதி வைக்கப்பட்டவை—இருக்கின்றன.
அங்கே ஆரம்பப் பள்ளியிலிருந்து கல்லூரி வரையிலே இருக்கிறது.
அதைப் போன்று தனிப்பட்ட அறக்கட்டளைகள் சிதம்பரத்தில்
இருக்கின்றன; தஞ்சையில் இருக்கின்றன; காஞ்சிபுரத்தில்
இருக்கின்றன. அவைகளை எல்லாம் சிறந்த முறையிலே நிர்
வகிக்க வேண்டியிருக்கிறது. இப்போது நீங்கள் நியமித்திருக்கிற
குழுவால் அவைகளை சரியாக நிர்வகிக்க முடியுமா? அவர்களுக்கு
அதற்கு போதிய சந்தர்ப்பம் இருக்குமா என்பதை சிந்தித்
அதற்கு ஒரு தனிப்பட்ட அதிகாரியை, முழு நேர பொறுப்பு அதி
காரியாக நியமித்து, நல்ல எண்ணமுடைய ஒரு அதிகாரியை
நியமித்து, கண்காணிக்கச் செய்தால் நலமாக இருக்கும் என்று
நான் கருதுகிறேன்.

மேலும் இப்படிப்பட்ட தனிப்பட்ட அறக்கட்டளைகளில்,
குறிப்பாக பச்சையப்பன் அறக்கட்டளையால் நடத்தப்படுகின்ற
கல்லூரிகள், உயர்நிலைப் பள்ளிகள், ஆரம்பப்பள்ளிகள் எதிலுமே
தாழ்த்தப்பட்ட, மலைவாழ் சமூக மாணவர்களுக்கு உரிய முறை
யிலே இடம் கிடைக்கவில்லை என்பதோடு, உத்தியோக முறையி
லும் இந்த சமூகத்தினருக்கு சரியான இடம் கிடைக்கவில்லை.

குறிப்பாக, அரசாங்கத்திடம் கடன் பெற்று தனியார் துறை
என்ற அளவிலே தொழிற்சாலைகள் வைத்திருப்பவர்கள் இந்த
சட்டத்தை மதிப்பதில்லை. மாநில அரசின் சட்டமாக இருந்
தாலும், மத்திய அரசின் சட்டமாக இருந்தாலும் தனியார்
துறையிலே இருப்பவர்கள் வங்கிகளிலே பணம் பெற்று அவற்றை
நடத்தினாலும் இந்த சட்டத்தை நடைமுறை செய்வதில்லை.
அதேபோன்று சிறுபான்மையோர் என்று சொல்கிறவர்களும் இந்த
சட்டத்தை நடைமுறைப் படுத்துவதில்லை. இப்படி தனிப்
பட்டவர்களின் அறக்கட்டளை என்ற நிலையில் அரசின் உத்
தரவை மீறி நடந்துக் கொள்கிறார்கள். தாழ்த்தப்பட்டவர்
களுக்குரிய அந்த ஒதுக்கீட்டின்படி கல்வி நிலையிலேயும் சேர்த்துக்
கொள்வதில்லை. ஆகவே வருங்காலத்தில் இந்த மாதிரி நிலைமை
களைப் போக்குகின்ற வகையில் அரசின் உத்தரவைச் செய
லாக்கி அதன் மூலம் குறிப்பிட்ட பிரிவினருக்கு குறிப்பிட்ட அளவு
இட ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்பதை உறுதிப்படுத்தி வாய்ப்
பளிக்கின்ற வகையில் தான் [illegible]



1981 பிப்ரவரி 12] [திரு. எல். இளையபெருமாள்]

கட்டளையை எடுத்துக்கொள்ள இருப்பது மிகவும் நல்லது.
அந்த அறக்கட்டளை சம்பந்தப்பட்ட வகையில் இதுவரையில்
வாய்ப்புக்கள் கிடைக்காமல் இருக்கின்ற தாழ்த்தப்பட்ட வகுப்
பைச் சார்ந்த ஆசிரியர்களுக்கும், பேராசிரியர்களுக்கும் சந்தர்ப்
பம் கிடைக்கும். அதே போன்று மாணவர்களுக்கும் அந்த
வகையில் கிடைக்க வேண்டிய ஒதுக்கீடுகள் கிடைப்பதற்குரிய
வழிகளைச் செய்ய வேண்டும் என்று சொல்லி அந்த அறக்
கட்டளையை அரசு எடுத்துக் கொள்வதற்காக வாழ்த்துக் கூறி
என்னுடைய வார்த்தையை முடிக்கிறேன், வணக்கம்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத்
தலைவரவர்களே, நம்முடைய அமைச்சரவை இந்த பச்சையப்பன்
அறக்கட்டளையை அரசாங்கமே எடுத்துக் கொள்கின்ற அள
விலே சட்டம் கொண்டு வந்ததற்காக நான் மனதாரப் பாராட்டி,
உளமாற வாழ்த்தி, இந்த பில்லை ஆதரித்து எங்களுடைய கட்சி
யின் சார்பிலே இரண்டொரு வார்த்தைகள் சொல்லிக் கொள்ள
ஆசைப்படுகிறேன். ஆசிரியர்களுடைய குறைகளையும், மாண
வர்களுடைய குறைகளையும் நீக்குகின்ற விதத்திலும், அந்த
பச்சையப்பன் அறக்கட்டளை எப்படி நடக்க வேண்டும் என்று
கோடிக்கணக்கான ரூபாய் சொத்துக்களை விட்டுச் சென்றார்
களோ அந்த விதத்தில் நடத்துவதற்குரிய முறையிலும் அந்த
அறக்கட்டளையை அரசே ஏற்றுக் கொள்வதற்கு முடிவு செய்
திருப்பதை நான் மீண்டும் ஒருமுறை பாராட்டுகிறேன்.

அடுத்து, இதுபோன்று எந்தெந்த அறக்கட்டளைகளில் கோளா
றுகள் இருக்கின்றனவோ— நீங்கள் எல்லாம் நல்ல காரியத்தைச்
செய்யக்கூடியவர்கள்— அவைகளையும் எடுத்துக் கொள்வதற்குரிய
முயற்சியைச் செய்ய வேண்டும். அண்ணாமலை பல்கலைக்
கழகம் போன்று இன்னும் எதை எதை அரசு எடுத்துக் கொள்ள
வேண்டுமோ அவைகளையும் அரசு எடுத்துக் கொள்வதற்குரிய
வகையிலே ஏற்பாடு செய்யவேண்டும். அண்ணாமலைப் பல்
கலைக் கழகத்தை விரைவிலே அரசு எடுத்துக் கொண்டால்
நன்றாக இருக்கும் என்று வலியுறுத்திக் கூறிக் கொள்கிறேன்.

அடுத்து பல கோடி ரூபாய் சொத்துக்களை உடையதாக
நம்முடைய தந்தை பெரியார் அறக்கட்டளை இருக்கின்றது.
நாட்டுக்கும், சமுதாயத்திற்கும் பயன்படக்கூடிய அளவிலே அந்த
அறக்கட்டளையையும் எடுத்துக்கொள்கின்ற வகையில் ஒரு பில்
லைக் கொண்டு வந்தால் இன்னும் சாலச் சிறந்ததாக இருக்கும்
என்று பணிவோடு கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. இளையபெருமாள்
அவர்கள் சொல்வது போல் தனியார் கல்லூரிகளிலே தாழ்த்தப்
பட்டவர்களுக்குரிய ரிசர்வேஷன் சரியாகச் செய்வதில்லை. 18
சதவீதம் என்று இருப்பதை சரியாகச் செய்யாமல், அந்த வகை
யிலே போதிய வேலைவாய்ப்பு கொடுக்காமல் இருக்கின்ற நிலை

இருக்கின்றது. அப்படிப்பட்ட நிர்வாகங்களையும் அரசாங்கமே எடுத்துக் கொண்டால் அந்தப் பிரச்சினையை ஓரளவுக்குத் தீர்க்க முடியும் என்று வலியுறுத்திக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். இந்த அமைச்சரவை கொண்டுவந்திருக்கின்ற இந்த பச்சையப்பன் அறக்கட்டளையை எடுத்துக் கொள்வது பற்றிய பில்லை முழு மனதோடு ஆதரித்து விடை பெற்றுக் கொள்கிறேன்.

திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பச்சையப்பன் பொறுப்புக் கழகத்தின் நிர்வாகத்தை அரசே மேற்கொள்ளக்கூடிய அளவில் கொண்டுவரப்பட்டிருக் கின்ற சட்ட முன்வடிவை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார் பாக நான் வரவேற்கிறேன். இந்த சட்டத்தை நிறைவேற்று வதற்குரிய முழுமையான ஆதரவை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நான் சுருக்கமாக ஒரே ஒரு வார்த்தையில் எங்களுடைய கருத்தைக் கூறி முடிக்கிறேன். இரண்டாண்டு காலத்திற்கு மட்டும் இந்த நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக்கொள் கின்ற வகையில் இந்த சட்ட முன்வடிவு கொண்டுவரப்பட்டிருக் கின்றது. ஆனால் முழுமையாக இந்த பச்சையப்பன் கல்லூரி நிர்வாகத்தை அரசு மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை எடுத்து அதற்கான சட்டத்தை உடனடியாகக் கொண்டுவர வேண்டும் என்று கூறி இந்த சட்டத்திற்கு எங்களுடைய முழுமை யான ஆதரவைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[மாலை 4–50]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, பச்சையப்பன் அறக் கட்டளை நிர்வாகம் செம்மையாக நடைபெறவில்லை என்கிற புகார்கள் வந்ததன் அடிப்படையில் அதை அரசு பொறுப்பிலே ஏற்று 2 ஆண்டு காலத்திற்கு அதை செம்மையாக நடத்துவதற்கான வாய்ப்புகளையும் உருவாக்கி தரவேண்டும் என்ற முயற்சியின் அடிப்படையில்தான் அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பெற்று, அது இன்றையதினம் சட்ட முன்வடிவாக வந்திருக்கிறது. இதன் மீது கருத்துக்களைத் தெரிவித்து மாண்புமிகு உறுப்பினர்கள் பொது வாக அளித்த ஆதரவிற்கும், வரவேற்பிற்கும் என்னுடைய நன்றி யைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அந்தக் கல்லூரி நிர்வாகத்தின் பொறுப்புக் குழு எந்த அள விற்கு நடந்துக் கொண்டு இருந்தது என்பதற்கு சில நிகழ்ச்சி களை—சில சந்தர்ப்ப சாட்சியங்களை இந்த அவையின் கவனத் திற்குக் கொண்டு வருவது என் கடமை என்று கருதுகிறேன். 1980-லேயிருந்து அரசு எடுத்துக் கொண்ட காலம் வரைக்கும் கணக்குகள் காட்டப்பெற வேண்டும் என்று அவர்கள் கேட்டு





கொள்ளப் பெற்று, இந்த வருடம் அங்கே போய் பரிசீலனை செய்து பார்த்த போது, கையெழுத்துப் போட்ட பிளாங்க் செக்குகள் நிறைய இருந்தன.

A numb.r o. bl.nk cheques noticed .c .av been s.gn d by .he chairman in many cheque books. Financia Trust es and th. இந்த மாதிரி கையெழுத்துப் போட் டல செக்குகளிலே அவர்கள் இந்த மாதிரி கையெழுத்துப் போட் டுத் தந்திருக்கிறார்கள் என்பதையும் ஆய்வுக்கு சென்றவர்கள் பார்த்திருக்கிறார்கள். அதற்கு அடுத்து, அதே டிரஸ்டின் நிர் வாகத்தில் செயல்படும் கந்தசாமி நாயுடு கல்லூரியைப் பொறுத்த வரைக்கும் அதன் நிர்வாகம் சரிவர கவனிக்கப்பெறவில்லை, சரி வர நடக்க வில்லை என்பதோடு, அந்தக் கல்லூரிக்காக இந்த அரசு ஒதுக்கி தந்த நிலத்தை கட்டிடம் கட்ட எந்த வகையிலும் பயன்படுத்தாமல் இருந்ததோடு, கட்டிடம் கட்ட வெளியாரிட மிருந்து பணம் வசூல் செய்து அந்தப் பணத்திற்கும் எந்தவித கணக்கும் தராததோடு அந்த நிலத்தை இன்னொரு கல்வி நிறு வனம் வாங்கக் கூடிய அளவிற்கு நிலைமையை, அந்த நிர் வாகத்தினர் போதுமான நிலையில் கொண்டு சென்றிருக் கிறார்கள். ஆகவே அந்த பொறுப்புக் குழுவும் சரியானபடி நடக்கவில்லை என்பதை அரசு புரிந்து கொண்டது.

அதேபோல் ஆசிரியர்களை கல்லூரி பதவிகளில் நியமிக்கிற போது, முதலில் அரசாங்கத்திடமிருந்து அனுமதி பெறவேண்டும். ஆனால் இந்தப் பொறுப்புக் குழுவினர்கள் அப்படி அனுமதி பெறாமலேயே நியமித்திருக்கிறார்கள். போஸ்ட் இல்லாமலேயே நியமித்திருக்கிறார்கள். இவைகள் எல்லாம் தவறுகள் நடைபெற்றதை காட்டும் முகமாக வெளிப்படையாக தெரிகிற உண்மைகள். இதுபோன்று இன்னும் எவ்வளவோ இருக்கின்றன. அதற்கு அடுத்து, அரசு பி.யூ.சி.யை எடுத்துவிட்டபிறகு, ஒவ்வொரு கல்லூரியிலும் இருக்கும் அதிகப்படியான ஆசிரியர்களுக்கு பணிப் பாதுகாப்பு தரும் பொருட்டு, அவர்களை வேறு காலியிடங்களுக்கு மாற்றவோ அல்லது வேறு பணி பாதுகாப்பு தரும் வகையில் முயற்சி எடுக் கவோ வசதியாக இருக்கும் பொருட்டு, அப்படிப்பட்டவர்களின் எண்ணிக்கை, தகுதி போன்ற விவரங்களை ஒவ்வொரு கல்லூரி யிடத்தும் கேட்டிருந்தது. அப்படிக் கேட்ட போது அத்தகைய விவரங்களை தராமல் அதிகப்படியான ஆசிரியர்களை வைத்துக் கொண்டு, சர்க்காருடைய அனுமதியில்லாமல் பொறுப்புக் கழ கத்திலிருந்து அவர்களுக்கு பணத்தை எடுத்து சம்பளமாக தந்துக் கொண்டு இருந்தார்கள் என்றால், அந்த நிர்வாகத்தினர் எந்த அளவிற்கு சர்க்காரோடு ஒத்துழைக்காமல் செயலாற்றியிருக் கிறார்கள் என்பதை நினைத்துப் பார்க்க வேண்டும்.

அதற்கு அடுத்து, சென்னையிலே இருக்கிற செல்லப்பா கல் லூரி முதல்வர் அவர்களை சில காரணங்களால் விடுமுறை எடுக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்தப்பெற்று அவரும் விடுமுறை

யில் சென்றார். அதற்குப் பிறகு விசாரணை நடைபெற்று
முடிந்ததற்குப் பிறகு அவருக்கு ஒரு பதவியை தர அந்த நிர்
வாகம் கடைமைப்பட்டிருந்தது. ஆனால் அப்படி எந்தக் காரி
யத்தையும் செய்யாமல் அவர் பதவியில் இருக்கிறாரா, விடு
முறையில் இருக்கிறாரா என்ற நிலைமையை புரிந்து கொள்ள
முடியாத அளவில் ஒரு சூழ்நிலையையும் உருவாக்கி வைத்திருந்
தார்கள்.

அதற்குப் பிறகு யூ.ஜி.ஸி. கிராண்ட் 5 லட்சம் ரூபாய்க்கு
பட்டப் படிப்பிற்காக தந்திருக்கிறார்கள். அப்படி தரப்பெற்ற
அந்தப் பணத்தை இந்தக் கல்லூரி நிர்வாகம் சரியான முறையில்,
எதற்காக தரப்பெற்றதோ அதற்குப் பயன்படுத்தவில்லை. அர
சைப் பொறுத்தவரையில், மிகப் பெரிய குறைபாடு இந்த நிர்
வாகத்தைப் பொறுத்தவரையில் என்னவென்றால், சாதாரண
மாக அதிக சொத்துக்களே இல்லாத பல நிர்வாகங்கள் நல்ல
முறையில் நடந்து கொண்டிருக்கின்றன. ஆனால் நிறைய
சொத்துக்கள் உள்ள இந்த நிர்வாகம் அதனை சரியானபடி சரி
யான காரணங்களுக்குப் பயன்படுத்தாததோடு, அந்த சொத்துக்
களே அழிந்து படும் நிலைக்கு கொண்டு விட்டிருக்கின்றன
என்பதுதான்.

சாரதா கல்லூரி என்று ஒரு கல்லூரி சேலத்தில் இருக்கிறது.
மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கே போய் பார்க்கவேண்டும்
என்று கேட்டுக் கொள்கிறேன். நமது முன்னாள் அமைச்சர்
திரு. எஸ். வி. இராமசாமி அவர்கள் துணைவியார் நடத்திக்
கொண்டிருக்கிற கல்லூரி அது. சாதாரண நர்சரி பள்ளியாக
ஆரம்பிக்கப்பெற்ற அது இப்போது பி.எச்.டி. பண்ணுகிற கல்வி
முறையினையும் தன்னகத்தே கொண்ட ஒரு சிறந்த கல்லூரியாக
இயங்கிக் கொண்டிருக்கிறது. அந்த அம்மையார் வேறு பல
சமூக சேவைகளையும் செய்து வருகிறார்கள். சாதாரணமாக
நிறுவப்பெற்ற அந்த நிறுவனம் இன்று 3 கோடி ரூபாய்க்கு மேல்
சொத்துக்களைக் கொண்டதாக இருக்கிறது. அந்தத் துறைக்கு
சர்க்கார் கொடுத்த பணியாளர்களை வைத்துக் கொண்டும், பல
வெளியார் தருகிற டொனேஷன்களை வைத்துக் கொண்டும்
திறமையாக நிர்வாகத்தை நடத்திக் கொண்டு போவதினால்
இந்த அளவிற்கு சொத்துள்ள ஒரு நிறுவனமாக அது வளர்ந்
திருக்கிறது.

ஆனால் இங்கே இவர்கள் கோடிக்கணக்கான சொத்துள்ள
ஒரு நிறுவனமாக இருந்து கொண்டு இவர்கள் அந்தப் பணத்
தைச் செலவு செய்யவில்லை என்பது மட்டுமல்ல, யு. ஜி. ஸி.
போன்ற நிறுவனத்தில் இருந்து வந்த பணத்தையும் இதற்காக
பயன்படுத்தாத அளவிற்கு அவர்கள் நிர்வாகத்தை நடத்திக்
கொண்டிருக்கிறார்கள். தென்னங்குடி எஸ்டேட் என்ற ஒரு
எஸ்டேட் இருக்கிறது. தஞ்சை ஜில்லாவில், சீர்காழி பக்கத்தில்

[திரு. செ. அரங்கநாயகம்] [1981 பிப்ரவரி 12

அறக்கட்டளைக்குச் சொந்தமான சொத்துக்களுக்கு குறைந்த வாடகை இருக்குமானால் அதற்கு நியாயமான வாடகை கிடைப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும் படியும் அவர்களைக் கேட்டுக்கொண்டிருக்கிறோம், மற்ற குறைபாடுகளை, இங்கே சொன்னதை தீர்ப்பதற்கான நட வடிக்கைகளை அவர்கள் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதை நல்ல முறையில் நடத்தி அதற்குப் பிறகு இரண்டு ஆண்டு காலத்தில் அந்த நிர்வாகத்தை தேர்தல் மூலமாக வருகிற உறுப்பினர்களிடம் தரவேண்டும் என்ற அடிப்படை யில்தான் இரண்டாண்டுகள் என்று சொல்லியிருக்கிறோம். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரய்யா அவர்கள் கூறியதுபோல் இரண்டாண்டுக் காலம் நாம் வைத்துக்கொண்டு ஓரளவு சீர்திருத்திவிட்டு பிறகு பழையபடி அந்த தேர்தல் முறையில் வந்து—அப்படி தேர்தல் மூலம் வந்தவர்களால் வந்த வினைகள்தான் இவை எல்லாம். அவர்கள் நல்லவர்களா கெட்டவர்களா என்பதைப்பற்றி சொல்லத் தேவை இல்லை.

ஆனால் ஒரு தவறான பாதையில் போய்க்கொண்டிருந்ததால் இன்று இப்படிப்பட்டதொரு நிலைக்கு அறக்கட்டளை ஆளாகி யிருக்கிறது. மறுபடியும் அவர்களிடம் தரவேண்டுமா என்பதை யோசிக்கவேண்டும் என்று அவர்கள் கேட்டிருக் கிறார்கள். அந்தக் கருத்து யோசிக்கவேண்டிய ஒன்றுதான். என்றாலும்கூட நிச்சயமாக அதே மாதிரியான ஒரு அமைப் பிற்கு நாம் திருப்பித் தருகிற முறையில்—அதேமாதிரி அமைப் பாக நிச்சயமாக இருக்காது என்பதை இங்கே சொல்லிக் கொள்ளவிரும்புகிறேன் ஒரு, மாறுதலை அதில்செய்ய நினைத்துக் கொண்டிருக்கிறோம்.

இப்போதும் கூட முழுநேரமும் வேலை பார்க்கிறவர்களால் வந்த வினைதான் இவை. முழுநேரமும் பச்சையப்பன் அறக்கட்டளையில் வேலை பார்த்த விளைவின் அடிப்படையில் ஏற்பட்டதுதான் இப்போது ஏற்பட்டிருக்கிற குறை என்று கருதுகிறோம். அதிகாரிகளைப் போட்டிருப்பது என்றால் அவர்களால் முடியும் என்று கருதி போட்டிருக்கிறோம்.

இன்னொன்று, சிலவற்றைச் சொல்லவில்லை. அதாவது டெப்டி கலக்டர் அளவில் ஒரு அதிகாரி போட்டிருக்கிறோம். வரவு-செலவுக் கணக்கு பார்க்க ஒரு அதிகாரியை டெப்யூட் செய்கிறோம். அவர்கள் முழுநேரமாக இருந்து அன்றாட நிர்வாகத்தை சரியாகப் பார்த்துக்கொள்வார்கள். சர்க் கார் அதிகாரிகள் இவர்களைத் தவிர வேறு யாரும் இல்லை என்று தயவுசெய்து உறுப்பினர்கள் நினைக்கவேண்டாம். வேறு அதிகாரிகளையும் போடுகிறோம்.

[மாலை 5-00]

அதற்கடுத்து, மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன பல் வேறு கருத்துக்களை நாம் கவனத்திலே வைத்து, இந்த பச்சையப்பன் அறக்கட்டளைப்பற்றி திரு. இளையபெருமாள்



1981 பிப்ரவரி 12] [திரு. செ. அரங்கநாயகம்]

அவர்கள், இந்த பச்சையப்பன் அறக்கட்டளை பற்றியும், இந்த அறக்கட்டளைக்கு எவ்வளவு கஷ்டப்பட்டு பணத்தைத் தேடித்தந்தார்கள் என்பதை யெல்லாம் எடுத்துச்சொன்னதை கவனத்தில் வைத்து, இந்த அரசு செயல்படும். உள்ள படியே சிதம்பரத்தைப் பற்றி நினைக்கின்றபோது, அண்ணா மலைப் பல்கலைக்கழகத்தில் இந்தப் பட்டப் பிரிவு ஒன்று இருப்பதினால், அந்தப் பல்கலைக்கழகம் சரிவர இயங்காத தற்கு ஒரு காரணமாக இருக்கிறது. அந்த நேரத்திலே இரண்டு கல்லூரிகள் ஆரம்பிக்க வேண்டுமென்று சொன்னதை நினைக்கின்ற போது, இந்த அறக்கட்டளையில் அவர்கள் எந்தக் காரியத்தை எல்லாம் செய்ய வேண்டுமென்று நினைத் தார்களோ, அதைச் செய்ய முடியாத நிலை இருக்கிறது. ஆகவே, அந்த நிலையிலே இந்த அறக்கட்டளை எடுத்துக் கொள்ளப்படுகிறது.

இந்த அறக்கட்டளையின் சொத்துக்களைக் கொண்டு, இந்த அரசு வருமானத்தைப் பெருக்கி, அந்த வள்ளல் எந்த நோக்கத் திற்காக இந்த அறக்கட்டளையை ஏற்படுத்தினாரோ, மற்றவர்கள் இந்த அறக்கட்டளைக்கு எந்த நோக்கத்தோடு தங்கள் சொத்துக்களை எழுதி வைத்தார்களோ அந்த நோக்கம் நிறைவேறுவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்கும். அப்படி நடவடிக்கை எடுக்கும்போது, இப்போது இருப்பதைவிட பல மடங்கு, மாண்புமிகு துரைமுருகன் தான் படித்த பச்சை யப்பன் கல்லூரியை எப்படிப் புகழ்ந்து பேசினார்களோ, இன்றைக்கு பேசியதைவிட, 100 மடங்கு அதிகமாகப் புகழ்ந்து பேசுகின்ற அளவுக்கு சிறப்பான ஒரு கல்வி மைய மாக, உயர் கல்விமையமாக இந்த பச்சையப்பன் கல்லூரியை உருவாக்க வேண்டுமென்ற எண்ணம் நமக்கிருக்கிறது. மற்றக் கல்லூரிகளையும் இப்படிப்பட்ட கல்லூரிகளாக ஆக்கவேண்டு மென்ற எண்ணம் இருக்கிறது. ஆகவே, வள்ளல் பச்சையப்பன் அறக்கட்டளை நல்லபடியாக நாடு முழுவதும், உலகம் முழுவதும் தெரிந்துகொள்ளும் அளவிற்கு சிறந்த கல்வி நிலையமாக 2 ஆண்டுகளில் நம்மால் செய்ய முடியும் என்ற உறுதியை இந்த நேரத்தில் உங்களுக்குத் தந்து, எங்களுக்கு ஆதரவு தந்த உங்களுக்கு நன்றி கூறி என்னுடைய பேச்சை முடிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி:

"1981 ஆம் ஆண்டு பச்சையப்பன் பொறுப்புக் கழக (நிர்வாகத்தை அரசு எடுத்துக் கொள்ளுதல்) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 19/1981)" ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 16 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே "1981ஆம் ஆண்டு பச்சையப்பன் பொறுப்புக் கழக (நிர்வாகத்தை அரசு எடுத்துக் கொள்ளுதல்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 19/1981)" நிறைவேற்றப்பெற வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

### 5. அறிவிப்பு.

நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெறும் பகுதிகள் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்று காலை தொழிலாளர் நல அமைச்சரும் திரு சங்கரய்யாவும் பேசிக் கொண்டதில் குறிப்பிடப்பெற்ற * * * என்ற வார்த்தையை அப்போதே அவைக் குறிப்பிலே இருந்து நீக்கும்படி உத்தரவிட்டேன். அது பத்திரிக்கைகளில் வராது. அது சம்பந்தமாக எதையெதை எடுப்பது என்று அவைக் குறிப்பைப் பார்த்துச் சொல்வதாக காலையில் குறிப்பிட்டிருந்தேன்.

தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் பேசும்போது* *

குறிப்பிட்டதையும், திரு சங்கரய்யா அவர்கள், * *

குறிப்பிட்டதையும், * * * *

என்று நான் குறிப்பிட்டதையும், தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள், * * * * *

என்று குறிப்பிட்டதையும், முதலமைச்சர் அவர்கள் * * என்று குறிப்பிட்டதையும், நான் ** என்று குறிப்பிட்டதையும், எதிர்கட்சித் தலைவர்கள் ** என்று குறிப்பிட்டதையும், அவைக் குறிப்பிலே இருந்து நீக்குமாறு உத்தரவிடுகிறேன்.

---

***மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



### 6. அரசினர் தீர்மானம்

பேரவை ஒத்திவைக்கப் பெறுதல்

மாண்புமிகு திரு. க. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடைபெறும் கூட்டத்தை 12-2-1981ஆம் தேதியோடு முடித்துக் கொள்ளலாம் என்று அலுவல் ஆய்வுக் குழுவில் தீர்மானித்தபடியால், பேரவை 25(1) விதியின்படி, பேரவை ஒத்திவைக்கப் பெற்று, மீண்டும் பிப்ரவரி திங்கள் 26ஆம் தேதி வியாழக்கிழமை காலை 11-00 மணிக்கு கூடலாம் என்ற தீர்மானத்தை மொழிகின்றேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, மீண்டும் 26-2-1981 வியாழக்கிழமை காலை 11·00 மணிக்கு கூடும்.

பின்னர் பேரவை மாலை 5·05 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

### 7. பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

202. தமிழ்நாடு 1962 ஆம் ஆண்டு வேளாண்மை விளைபொருள் அங்காடி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து, வேளாண்மைத் துறையின் 21-6-1980 ஆம் தேதியிடப்பெற்ற 1175 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண்மை விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29(4)பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

203. 16-7-1980 ஆம் தேதியிடப்பெற்ற தமிழ்நாடு அரசிதழின் பாகம்-3, பிரிவு1(அ), பக்கம் 391-ல் வெளியிடப்பெற்ற வேளாண்மைத் துறையின் எஸ். ஆர். ஓ./ஏ.197/80-ஆம் எண் அறிவிப்பிற்கு வேளாண்மைத் துறையின் 4-11-1980ஆம் தேதியிடப் பெற்ற 83788/ஏ.எம்./3/80/4 ஆம் எண் கடிதத்தில் வெளியான பிழை திருத்தம் [தமிழ்நாடு 1969 ஆம் ஆண்டு வேளாண்மை விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29(4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

204. பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தின் 1980 ஆம் ஆண்டிற்கான ஆறாவது ஆண்டறிக்கை (ஆங்கிலம்). (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619 'அ' பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

[1981 பிப்ரவரி 12

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

44. இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் 1974-75, 1975-76 ஆம் ஆண்டுகளுக்கான (வணிகத் துறைகள் பற்றிய) அறிக்கைகளின் மீதான, பொது நிறுவனங்கள் குழுவின் இரண்டாவது அறிக்கை.

45. தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் மீதான, பொது நிறுவனங்கள் குழுவின் மூன்றாவது அறிக்கை.

46. 1972-73 முதல் 1975-76 வரையிலான ஆண்டுகளுக்கான தமிழ்நாடு மின்வாரியத்தின் கணக்குகளின் மீதான தணிக்கை அறிக்கைகள் பற்றிய பொது நிறுவனங்கள் குழுவின் நான்காவது அறிக்கை.

47. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1970–71 ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் கண்டுள்ள தமிழ்நாடு மின் வாரியம் தொடர்பான குறிப்புகள் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் (1974–75) இரண்டாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய பொது நிறுவனங்கள் குழுவின் ஐந்தாவது அறிக்கை.

48. 1975–76 ஆம் ஆண்டிற்கான வாக்களிக்கப்பெற்ற மானியக் கோரிக்கைகளுக்கும் சாட்டப்பெற்ற நிதி ஒதுக்கீடுகளுக்கும் கூடுதலாகச் செலவழித்த தொகைகள் பற்றிய பொதுக் கணக்குக் குழுவின் ஏழாவது அறிக்கை.

49. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு வரி செலுத்த மறுக்க அல்லது தள்ளிப்போடத் தூண்டுதலைத் தடுக்கும் சட்ட முன் வடிவிற்குப் (சட்டமன்றப் பேரவையின் சட்ட முன்வடிவு எண். 11/1981), தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு வாழ்க்கைப்படி வழங்கல், சட்ட முன்வடிவுற்குப் (சட்ட மன்றப் பேரவையின் சட்ட முன்வடிவு எண். 13/1981) வெளியான பிழை திருத்தம்.

50. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு வேளாண் விளை பொருள் அங்காடிகள் (திருத்த சட்ட முன்வடிவின் நகலும், இணைப்பும் (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 17/1981.)

51. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 18/1981).

52. 1981 ஆம் ஆண்டு பச்சையப்பன் பொறுப்புக் கழக நிர்வாகத்தை அரசு எடுத்துக் கொள்ளுதல் சட்ட முன் வடிவு சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 19/1981.)



1981 பிப்ரவரி 12]

## இணைப்பு I.

(திரு. எல். பலராமன், எம்.எல்.ஏ., அவர்களால் கேட்கப்பெற்ற வினா எண் 618-ஐக் காண்க.)

தமிழ்நாட்டில் மாவட்ட வாரியாக 1979–80-ல் குடும்ப நலத் திட்டத்தை ஏற்ற ஆண், பெண் விவரங்கள்—

| | மாவட்டம். | ஆண் அறுவை சிகிச்சை. | பெண் அறுவை சிகிச்சை. | மொத்தம். |
|---|---|---|---|---|
| | (1) | (2) | (3) | (4) |
| 1 | செங்கல்பட்டு .. | 4,901 | 3,818 | 8,719 |
| 2 | கோயம்புத்தூர் .. | 1,707 | 7,424 | 9,131 |
| 3 | தர்மபுரி .. | 1,130 | 3,975 | 5,105 |
| 4 | கன்னியாகுமரி .. | 562 | 3,284 | 3,846 |
| 5 | மதுரை .. .. | 2,141 | 14,934 | 17,075 |
| 6 | நீலகிரி .. .. | 235 | 2,396 | 2,631 |
| 7 | வட ஆற்காடு .. | 1,739 | 15,326 | 17,065 |
| 8 | இராமநாதபுரம் | 1,261 | 4,160 | 5,421 |
| 9 | சேலம் .. .. | 1,709 | 11,987 | 13,699 |
| 10 | தென்னாற்காடு . | 3,975 | 3,622 | 7,597 |
| 11 | தஞ்சாவூர் .. | 3,612 | 8,860 | 12,724 |
| 12 | திருச்சிராப்பள்ளி .. | 1,790 | 7,225 | 9,015 |
| 13 | திருநெல்வேலி .. | 382 | 4,372 | 4,547 |
| 14 | சென்னை .. .. | 4,172 | 16,483 | 20,655 |
| 15 | பெரியார் .. | 442 | 7,349 | 7,791 |
| 16 | புதுக்கோட்டை .. | 1,147 | 827 | 1,974 |
| | மொத்தம் | 30,905 | 1,16,042 | 1,46,947 |

கருத்தடை வளையம்.

| மாவட்டம். | | காப்பர் "டி." | லிப்பிஸ் லூப். | மொத்தம். |
|---|---|---|---|---|
| | | (5) | (6) | (7) |
| 1 | செங்கல்பட்டு .. | 962 | 328 | 1,290 |
| 2 | கோயம்புத்தூர் .. | 528 | 696 | 1,224 |
| 3 | தர்மபுரி .. | 705 | 316 | 1,021 |
| 4 | கன்னியாகுமரி .. | 221 | 80 | 301 |
| 5 | மதுரை .. .. | 3,231 | 1,556 | 4,787 |
| 6 | நீலகிரி .. .. | 97 | 136 | 233 |
| 7 | வட ஆற்காடு .. | 916 | 418 | 1,334 |
| 8 | இராமநாதபுரம் | 1,181 | 381 | 1,562 |
| 9 | சேலம் .. .. | 770 | 978 | 1,748 |
| 10 | தென்னாற்காடு .. | 922 | 399 | 1,231 |
| 11 | தஞ்சாவூர் .. | 1,627 | 1,144 | 2,771 |
| 12 | திருச்சிராப்பள்ளி .. | 950 | 1,214 | 2,164 |
| 13 | திருநெல்வேலி .. | 911 | 553 | 1,464 |
| 14 | சென்னை .. .. | 7,616 | 302 | 7,918 |
| 15 | பெரியார் .. | 242 | 263 | 5'5 |
| 16 | புதுக்கோட்டை .. | 293 | 291 | 585 |
| | | 21,172 | 8,965 | 30,137 |



தமிழ்நாட்டில் மாவட்ட வாரியாக கொடுக்கப்பட்டிருக்கும் 1980-81-ஆம் ஆண்டிற்கான குடும்ப நலத் திட்ட இலக்கு

| மாவட்டம். | | அறுவை சிகிச்சை. | கருத்தடை வளையம் பொருத்துதல் |
|---|---|---|---|
| (1) | | (2) | (3) |
| 1 | செங்கல்பட்டு .. .. | 12,900 | 3,400 |
| 2 | கோயம்புத்தூர் .. .. | 12,000 | 3,300 |
| 3 | தர்மபுரி .. .. | 4,070 | 1,0[illegible] |
| 4 | கன்னியாகுமரி .. .. | 5,400 | 1,400 |
| 5 | மதுரை .. .. .. | 17,500 | 4,600 |
| 6 | நீலகிரி .. .. .. | 2,200 | 600 |
| 7 | வட ஆற்காடு .. .. | 16,600 | 4,400 |
| 8 | இராமநாதபுரம் .. | 12,700 | 3,300 |
| 9 | சேலம் .. .. .. | 13,300 | 3,500 |
| 10 | தென்னாற்காடு .. .. | 16,100 | 4,200 |
| 11 | தஞ்சாவூர் .. .. | 16,000 | 4,100 |
| 12 | திருச்சிராப்பள்ளி .. .. | 14,200 | 3,700 |
| 13 | திருநெல்வேலி .. .. | 14,200 | 3,700 |
| 14 | புதுக்கோட்டை .. .. | 3,700 | 1,000 |
| 15 | சென்னை .. .. .. | 10,500 | 2,900 |
| 16 | பெரியார் .. .. | 7,100 | 1,800 |
| மொத்தம் | .. | 1,82,200 | 47,800 |

## இணைப்பு II.

ஊர் வளர்ச்சி-உள்ளாட்சித்

வேலைக்கு உணவுத் திட்டம் 1979–80ஆம் ஆண்டு மாவட்ட

(திரு. எல். பலராமன், சட்ட மன்ற உறுப்பினர் விடுத்த உடுக்

விவர

விவர அறிக்கை I

| தொடர் எண்ணும் மாவட்டத்தின் பெயரும். | | தொழிலாளர்களுக்கு ஊதியமாக வழங்கப்பட்ட அரிசியின் அளவு (மெட்ரிக் டன்களில்) |
|---|---|---|
| | (1) | (2) |
| 1 | செங்கற்பட்டு .. .. .. | 2,385,678 |
| 2 | வட ஆற்காடு .. .. .. | 2,752,125 |
| 3 | தென்னாற்காடு .. .. | 1,830,078 |
| 4 | சேலம் .. .. .. .. | 3,422,662 |
| 5 | கோயம்புத்தூர் .. .. | 1,368,000 |
| 6 | பெரியார் .. .. .. | 629,712 |
| 7 | தஞ்சாவூர் .. .. .. | 6,671,720 |
| 8 | திருச்சிராப்பள்ளி .. .. | 8,232,000 |
| 9 | மதுரை .. .. .. | 7,477,000 |
| 10 | நீலகிரி .. .. .. .. | 198,302 |
| 11 | இராமநாதபுரம் .. .. | 6,634,026 |
| 12 | புதுக்கோட்டை .. .. | 1,736,159 |
| 13 | திருநெல்வேலி .. .. | 4,551,530 |
| 14 | கன்னியாகுமரி .. .. .. | 654,287 |
| 15 | தர்மபுரி .. .. .. | 2,093,000 |
| | மொத்தம் .. | * 150,636.279 |



(தனி) துறை.

வாரியாக உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டது குறித்து விவர அறிக்கை—

குறியிடாத வினா எண் 627-க்கு கொடுத்துள்ள விடையை தயவு செய்து காண்க.

அறிக்கை I.

குறிப்பு.

(மெட்ரிக் டன்களில்.)

| (3) | (4) |
|---|---|
| நெடுஞ்சாலை-கிராமப்பணித்துறை .. | 3,891.884 |
| உணவுத் துறை .. .. .. | 223,500 |
| வனத்துறை .. .. .. .. | 634.657 |
| | * 4,750.041 |
| *ஊர்வளர்ச்சி-உள்ளாட்சித்துறை .. | 50,636.279 |
| *ஏனைய துறைகள் .. .. .. | 4,750.041 |
| மொத்தம் .. .. | 55,386.320 |

வேலைக்கு உணவுத் திட்டத்தின் கீழ் 1980–81ஆம் ஆண்டில் ஒன்றியங்கள் தயார் செய்து வழங்க இருக்கும் வேலைகளின் மதிப்பீடு.

1980–81ஆம் ஆண்டிற்கு மத்திய அரசு ஒரு இலட்சம் டன்கள் அரிசியை மானியமாக வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதன் மதிப்பு ரூபாய் 1,520 இலட்சங்களாகும். இதைத் தவிர, இந்த திட்டத்திற்காக பணமாக ரூபாய் 70 இலட்சம் எல்லா மாநிலங்களுக்கும் மானியமாக பகிர்ந்தளிக்கப்படும் எனவும், இதில் ஒரு பகுதி இந்த மாநிலத்திற்கும் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. 1980–81-இல் திட்டத்திற்குட்பட்ட மற்றும் திட்டத்திற்குட்படாத வேலைகளை எடுத்துச் செய்வதற்கு ஒதுக்கப்பட்டிருக்கும் நிதி ஒதுக்கீட்டையும் கணக்கெடுத்துப் பார்த்தால் மாநில முழுவதற்கும் ஒன்றியங்கள் வாயிலாக கிட்டதட்ட ரூபாய் 20 கோடி பெறுமான வேலைகள் எடுத்து செயலாக்கப்படலாமென மதிப்பிடப்பட்டுள்ளது. எனினும், இது மத்திய அரசு இம்மாநிலத்திற்கு இறுதியாக வழங்கும் அரிசி மற்றும் பண மானியத்தைப் பொறுத்து உள்ளது.



## இணைப்பு III.

திரு. இல. பலராமன், எம்.எல்.ஏ., அவர்களால் கேட்கப்பெற்ற வினா எண் 975-ஐக் காண்க.

| | தாலுகா. | பதிவு செய்யப்பட்டது. | | | நடவடிக்கை முடியப்பெற்றது. | | | நீதி மன்ற விசாரணையிலுள்ளது. | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1978. | 1979. | 1980. | 1978. | 1979. | 1980. | 1978. | 1979. | 1980. |
| | (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
| 1 | அரக்கோணம் .. | 4 | 1 | 1 | 3 | 1 | .. | 1 | .. | 1 |
| 2 | ஆம்பூர் .. .. | 11 | 2 | .. | 10 | 2 | .. | 1 | .. | .. |
| 3 | போளூர் .. .. | 5 | .. | .. | 2 | .. | .. | 1 | .. | .. |
| 4 | திருவண்ணாமலை .. | 2 | 9 | .. | 2 | 8 | .. | 3 | .. | .. |
| 5 | ஆரணி .. .. | 1 | 5 | .. | 1 | 5 | .. | .. | .. | .. |
| 6 | செய்யார் .. .. | 3 | .. | .. | 2 | .. | .. | .. | .. | .. |
| 7 | வாலாஜா .. .. | 3 | 4 | .. | 3 | 2 | .. | .. | 2 | .. |
| 8 | செங்கம் .. .. | 2 | 12 | .. | 2 | 12 | .. | .. | .. | .. |
| 9 | வாணியம்பாடி .. | 3 | 6 | 4 | 3 | 6 | 3 | .. | .. | 1 |
| 10 | வேலூர் .. .. | 12 | 7 | .. | 9 | 7 | .. | 3 | .. | .. |
| 11 | குடியாத்தம் .. .. | 15 | 11 | .. | 14 | 11 | .. | 1 | .. | .. |
| 12 | வந்தவாசி .. .. | 1 | 2 | 51 | 1 | 2 | 51 | .. | .. | .. |
| 13 | திருப்பத்தூர் .. .. | .. | 128 | .. | .. | 128 | .. | .. | .. | .. |
| | மொத்தம் .. | 62 | 187 | 56 | 53 | 184 | 54 | 9 | 3 | 2 |

## இணைப்பு IV.

(திரு. ஆர். இருவண்ணன், எம்.எல்.ஏ., அவர்களால் கேட்கப்பெற்ற வினா எண் 1171-ஐக் காண்க விடை.

(அ) மற்றும் (ஆ).

நிதியாண்டு 1978–79-ம் மற்றும் 1979–80 ஆண்டுகளில் கையகப்படுத்தப்பட்ட நில அளவுகளும், இதற்கென வழங்கப்பட்ட பட்டாக்களும், நஷ்ட ஈடாக வழங்கப்பட்ட தொகையும் மாவட்ட வாரியாக இத்துடன் இணைப்பக்கப்பட்டுள்ள அட்டவணைகளில் கொடுக்கப்பட்டுள்ளன.

1978-ஆம் ஆண்டு அரிசனங்களுக்கு தனியார் நிலங்களை கையகப்படுத்துவதன் மூலம் வழங்கப்பட்ட வீட்டு மனைகள்.

| மாவட்டம். | 1978 | | | |
|---|---|---|---|---|
| | கையகப் படுத்தப் பட்ட நில அளவு. | கையகப் படுத்தப் பட்ட மனைகள். | வழங்கப் பட்ட பட்டாக்கள். | செலவிடப் பட்ட தொகை. |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | | | (ரூபாய் இலட்சத்தில்.) |
| செங்கல்பட்டு .. .. .. | 124.22 | 1,916 | .. | 8.62 |
| வட ஆற்காடு .. .. .. | 157.02 | 2,665 | 637 | 9.77 |
| தென் ஆற்காடு .. .. .. | 232.06 | 3,828 | 449 | 14.39 |
| சேலம் .. .. .. .. | 213.79 | 3,667 | 710 | 21.64 |
| தர்மபுரி .. .. .. .. | 102.69 | 1,673 | 437 | 4.00 |
| திருச்சிராப்பள்ளி .. .. .. | 145.32 | 2,757 | 1,716 | 9.61 |
| புதுக்கோட்டை .. .. .. | 101.18 | 1,622 | .. | 0.57 |
| தஞ்சாவூர் .. .. .. | 380.34 | 6,404 | 361 | 11.84 |
| கோயம்புத்தூர் .. .. .. | 156.98 | 3.142 | .. | 8.73 |
| பெரியார் .. .. .. | .. | .. | .. | .. |
| ராமநாதபுரம் .. .. .. | 135.70 | 2,093 | 949 | .. |
| மதுரை .. .. .. .. | 46.21 | 779 | .. | 10.90 |
| திருநெல்வேலி .. .. .. | 37.32 | 577 | 245 | 2.63 |
| கன்னியாகுமரி .. .. .. | 9.53 | 181 | .. | 2.51 |
| நீலகிரி .. .. .. .. | .. | .. | .. | .. |
| சென்னை .. .. .. .. | .. | .. | .. | .. |
| மொத்தம் .. | 1,842.36 | 31.304 | 5.504 | 111.29 |

**1979–81-ல் அரிசனங்களுக்கு தனியார் நிலங்களை கையகப்படுத்துவதன் மூலம் வழங்கப்பட்ட வீட்டு மனைகள்.**

| மாவட்டம். | 1979–80 கையகப் படுத்தப் பட்ட நில அளவு. | கையகப் படுத்தப் பட்ட மனைகள். | வழங்கப் பட்ட பட்டாக்கள். | செலவிடப் பட்ட தொகை. | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | | | | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| செங்கல்பட்டு .. .. .. | 205.36 | 3,561 | 1,566 | 7.68 | |
| வட ஆற்காடு .. .. .. | 123.52 | 2,030 | 1.412 | 9.27 | |
| தென் ஆற்காடு .. .. | 157.00 | 1.962 | 6.105 | 6.10 | |
| சேலம் .. .. .. .. | 205.37 | 3,497 | 1,442 | 14.21 | |
| தர்மபுரி .. .. .. | 58.25 | 965 | .. | 3.56 | |
| திருச்சிராப்பள்ளி.. .. .. | 271.45 | 4,803 | 1,230 | 9.51 | |
| புதுக்கோட்டை .. .. | 20.01 | 348 | 85 | 0.38 | |
| தஞ்சாவூர் .. .. .. | 98.51 | 1,633 | 633 | 4.77 | |
| கோயம்புத்தூர் .. .. .. | 15.64 | 285 | 1,062 | 5.84 | |
| பெரியார் .. .. .. | 22.05 | 398 | .. | 0.28 | |
| இராமநாதபுரம் .. .. .. | 122.29 | 1,868 | 338 | 4.76 | |
| மதுரை .. .. .. | 281.98 | 5,080 | 3,050 | 16.71 | |
| திருநெல்வேலி .. .. .. | 38.10 | 572 | 264 | 0.86 | |
| கன்னியாகுமரி .. .. .. | 4.48 | 66 | 71 | 0.63 | |
| நீலகிரி .. .. .. | .. | .. | .. | .. | |
| சென்னை .. .. .. | .. | .. | .. | .. | |
| மொத்தம் .. .. | 1,624.01 | 27.068 | 17.258 | 84.56 | |

[1981 பிப்ரவரி

## இணைப்பு V.

சட்ட மன்றப் பேரவை உறுப்பினர் திரு. இரா. தாமரைக்
கனி அவர்கள் கீழ்க்கண்ட 1,329 எண்ணுள்ள உடுக்குறி
யிடாத வினாவை எழுப்பியுள்ளார்கள்.

(அ) நிலவள பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் திருவில்லிப்
புத்தூர் வட்டத்தில் 1975 முதல் 1979 முடிய எத்தனை ஏக்கர்
நிலங்கள் சாகுபடிக்கு லாயக்கு உள்ளதாக கொண்டுவரப்
பட்டுள்ளன.

(ஆ) மேற்படி திட்டம் எவ்வாறு செயல்படுத்தப்படுகிறது.

விடை :

(அ) திருவில்லிப்புத்தூர் வட்டத்தில் மண்வளப் பாதுகாப்பு
திட்டத்தின் கீழ் 1974–75 முதல் 1978–79 முடிய சாகுபடிக்கு
மண்வள பாதுகாப்பு முறைகள் மேற்கொள்ளப்பட்ட வேலையின்
விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| வருடம். | | சம உயர வரப்பிடுதல். | நிலம் சமன்செய்தது | பாசனக் குழாய் அமைத்தல். |
|---|---|---|---|---|
| | | | (ஏக்கரில்) | |
| 1974–75 | .. | 31.54 | 27.95 | |
| 1975–76 | .. | 414.55 | 52.44 | .. |
| 1976–77 | .. | 1,387.74 | .. | 4.1 |
| 1977–78 | .. | 1,227.03 | 4.98 | 22.0 |
| 1978–79 | .. | 8,73.01 | 91.12¾ | 64.38 |
| மொத்தம் | .. | 3,933.87 | 176.49¾ | 90.59 |

(ஆ) மண்வளப் பாதுகாப்புத் திட்ட நோக்கங்களும்
செயல்படும் விதமும்.

மண்வளப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் திருவில்லிப்
புத்தூர் தலைமையிடமாகக் கொண்டு 1968ஆம் ஆண்டு முதல்
மலைப்பகுதிகளிலும், சம வெளிகளிலும் மண்வளப்பாதுகாப்புத்
திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
1–4–1974 முதல் வறட்சிப் பகுதி திட்டத்தின் கீழ் இவ்வுட்
கோட்டம் செயல்பட்டு வருகிறது.



1981 பிப்ரவரி 12]

இராமநாதபுரம் மாவட்டத்தில் நீண்டு பரந்து கிடக்கும்
மானாவாரி நிலங்கள் மழையை நம்பியே விவசாயத்திற்கு
ஏற்ற நிலமாக மாறும். நிலைமையிலுள்ளது. ஆனால், கடந்த
நான்கு ஆண்டுகளாக இம்மாவட்டம் இம்மாநிலத்தில் இருமுறை
தாக்குதலுக்குட்பட்டு வறட்சியாலும், வெள்ளத்தாலும் பாதிக்கப்
பட்டு வருகிறது. இவ்விரு இடர்பாடுகளிலிருந்து மானாவாரி
நிலங்களில் வளமான மேல் மண்ணைப் பாதுகாக்கவும், வறண்ட
காலங்களில் சிறிதளவே கிடைக்கும் மழை நீரை சேர்த்து
வைக்கவும், தமிழ்நாடு அரசின் வேளாண்மைத்துறையின் கீழ்
மண்வள பாதுகாப்புத் திட்டம் கீழ் காணும் பணிகளைச் செய்து
வருகிறது.

(1) சமவெளியில் :

(1) சரியான நிலங்களில் சம உயர வரப்புகள் அமைத்தல்;

(2) பாசன வசதி உள்ள மேடு பள்ளமான நிலங்களைச்
சமன் செய்து கொடுத்தல்.

(3) பாசனக் குழாய் அமைப்புகள் அமைத்துக் கொடுத்தல்.

(4) ஓடைகளில் தடுப்பணைகள் கட்டுதல்.

(5) நீரூற்றுக் குட்டைகள் அமைத்தல்.

(2) மலைப்பகுதிகளில் :

(1) சம உயரக் கற் சுவர்கள் அமைத்தல்.

### திட்டம் செயல்படும் விதம்.

விவசாயிகளிடம் தேவையான ஒப்பந்தப் பத்திரங்கள்
வாங்கப்பட்டு இவ்வலுவலகத்தில் மூலம் விவசாயிகளின் நிலங்
களில் மண் வளப் பாதுகாப்பு வேலைகள் செய்து தரப்படு
கின்றன. திட்டம் முடிவுபெற்ற 2 ஆண்டுகளுக்குப் பின் 10
வருட சம தவணைகளில் இதற்கான பணம், நிர்வாகச் செலவு
சேர்க்கப்பட்டு பிறகு (அரசினர்) மானியம் கழிக்கப்பட்ட பின்
அப்போது அமுலில் உள்ள வட்டியுடன் விவசாயிகளிடம் இருந்து
வசூல் செய்யப்படுகிறது. சமவெளிகளில் செய்யப்படும் மண்
வளப் பாதுகாப்பு வேலைகளுக்கு 1977–78ஆம் ஆண்டு சிறிய,
பெரிய விவசாயிகளுக்கு 25 சதவீதம் மானியமும் மிகச் சிறிய
விவசாயிகளுக்கு 33 1-3 சதவீதம் மானியமும் அரசாங்கம் அனு
மதித்து வருகிறது. 1978–79ஆம் ஆண்டு முதல் சிறிய விவசாயி
களுக்கு 25 சதவீதம் மானியமும், மிகச் சிறிய விவசாயிகளுக்கு
33 1-3 சதவீதம் மானியமும் அளிக்கப்படுகிறது. புறம்போக்கு
நிலங்களில் அமைக்கப்படும் கசிவு நீர் குட்டை அமைத்தல். மற்றும்
தடுப்பாணை கட்டும் வேலைகளுக்கு 100 சதவீதம் மானியமும்
அளித்து வருகிறது. உழுது தரும் பணிக்கு முழு பணமும்
கடனாக வழங்கப்பட்டு, 2 வருடங்கள் கழித்து 10 வருட சம
தவணைகளில் வட்டியுடன் பிடித்தம் செய்யப்படுகிறது.

## இணைப்பு VI.

(திரு. ப. புருடோத்தமன், எம்.எல்.ஏ., அவர்களின் உடுக்குறியிடாத வினா எண் 1353-க்கான விடையைக் காண்க.)

1970–71ஆம் ஆண்டிலிருந்து 1979–80ஆம் ஆண்டு வரை தமிழ்நாட்டில் மாவட்ட வாரியாக நெல் பயிரிடப்பட்ட பரப்பளவு (ஹெக்டேரில்).

| வரிசை எண்ணும் மாவட்டமும். (1) | 1970–71 (2) | 1971–72 (3) | 1972–73 (4) | 1973–74 (5) | 1974–75 (6) |
|---|---|---|---|---|---|
| 1 செங்கல்பட்டு | 329,032 | 327,064 | 326,415 | 304,647 | 253,754 |
| 2 தென்னாற்காடு | 324,395 | 381,201 | 329,803 | 321,164 | 260,188 |
| 3 வட ஆற்காடு | 294,428 | 274,020 | 290,422 | 286,993 | 233,373 |
| 4 சேலம் | 72,677 | 69,708 | 90,572 | 7,065 | 46,084 |
| 5 தர்மபுரி | 51,247 | 50,610 | 57,102 | 53,309 | 46,351 |
| 6 கோயம்புத்தூர் } 7 பெரியார் | 97,660 | 103,408 | 133,976 | 97,679 | 94,573 |
| 8 திருச்சிராப்பள்ளி | 226,852 | 284,928 | 190,949 | 179,664 | 142,729 |
| 9 புதுக்கோட்டை | | | 117,832 | 112,006 | 73,478 |
| 10 தஞ்சாவூர் | 649,680 | 656,141 | 623,096 | 621,237 | 576,990 |
| 11 மதுரை | 145,885 | 148,531 | 167,875 | 162,445 | 129,851 |
| 12 இராமநாதபுரம் | 255,171 | 278,088 | 276,599 | 288,881 | 179,857 |
| 13 திருநெல்வேலி | 116,929 | 150,595 | 160,643 | 159,066 | 124,605 |
| 14 உதக்மண்டலம் | 3,220 | 3,628 | 5,565 | 3,184 | 3,455 |
| 15 கன்னியாகுமரி | 58,542 | 62.062 | 61,723 | 54,485 | 52,734 |
| மொத்தம் | 26,35,718 | 26,89,984 | 28,50,572 | 27,03,825 | 22,38,022 |



| வரிசை எண்ணும் மாவட்டமும். | 1975–76 (7) | 1976–77 (8) | 1977–78 (9) | 1978–79 (10) | 1979–80 (11) |
|---|---|---|---|---|---|
| 1 செங்கல்பட்டு | 342,483 | 357,900 | 369,321 | 366,581 | 370,000 |
| 2 தென்னாற்காடு | 293,324 | 290,769 | 317,258 | 331,758 | 335,000 |
| 3 வட ஆற்காடு | 241,298 | 275,767 | 315,797 | 274,840 | 310,000 |
| 4 சேலம் | 62,587 | 33,450 | 63,090 | 70,913 | 75,000 |
| 5 தர்மபுரி | 50,106 | 33,188 | 49,591 | 53,984 | 55,000 |
| 6 கோயம்பத்தூர் | 125,984 | 53,581 | 118,394 | 113,224 | 40,00 |
| 7 பெரியார் | | | | | 80,000 |
| 8 திருச்சிராப்பள்ளி | 160,482 | 122,884 | 160,393 | 180,975 | 185,000 |
| 9 புதுக்கோட்டை | 111,105 | 101,761 | 120 372 | 120,111 | 125 000 |
| 10 தஞ்சாவூர் | 625,325 | 526,697 | 591,736 | 597,447 | 600,000 |
| 11 மதுரை | 146,119 | 98,798 | 163,681 | 158,778 | 170,000 |
| 12 இராமநாதபுரம் | 235,930 | 234,569 | 292,554 | 269,118 | 280,000 |
| 13 திருநெல்வேலி | 112,341 | 106,333 | 167,846 | 149,236 | 170,000 |
| 14 உதகமண்டலம் | 3,434 | 3,379 | 3,236 | 3,369 | 4,000 |
| 15 கன்னியாகுமரி | 53,034 | 44,580 | 49,243 | 46,280 | 52,000 |
| மொத்தம் | 25,63,552 | 22,83,656 | 27,82,333 | 27,56,451 | 28,51,000 |

## இணைப்பு VII.

வினா எண் 1691 (உடுக்குறியிடாதது) திரு இரெ. இராச மாணிக்கம், எம்.எல்.ஏ.—

தஞ்சை மாவட்டத்தில் கோயில்களைப் புதுப்பிக்கும் பணிகளுக்கு 1978–79, 1979–80ஆம் ஆண்டுகள் வழங்கப்பட்டுள்ள மானியங்களின் விவரம்.

தஞ்சை மாவட்டத்தில் 1978–79 மற்றும் 1979–80 ஆண்டுகளில் முறையே 12 மற்றும் 14 ஆலயங்களுக்கு அரசு மான்யம் வழங்கப்பட்டு, அவற்றில் 1978–79ஆம் ஆண்டிற்கு 6 ஆலயங்களுக்கும், 1979–80ஆம் ஆண்டிற்கு 2 ஆலயங்களுக்கும் அரசு மான்யத் தொகை விடுவிக்கப்பட்டுள்ளது. அவற்றின் விவரம் கீழ்க்கண்டவாறு :—

1978–79ஆம் ஆண்டிற்கு வழங்கப்பட்ட அரசு மான்ய விவரம் :

| | ஆலயத்தின் பயர். | தொகை. |
|---|---|---|
| | | ரூ. |
| 1. | அருள்மிகு அரண்மனை தேவஸ்தானம் தஞ்சாவூர் .. .. .. | 20,000 |
| 2. | அருள்மிகு ஸ்வேதாரண்யேஸ்வரர் ஆலயம், திருவெண்காடு .. .. | 25,000 |
| 3. | அருள்மிகு கல்யாண ரெங்கநாதர் ஆலயம் திருநகரி .. .. .. .. | 25,000 |
| 4. | அருள்மிகு அட்சரபுரீஸ்வரர் ஆலயம், இன்னம்பூர் .. .. .. | 10,000 |
| 5. | அருள்மிகு மாசிலாநாதர் ஆலயம், தரங்கம்பாடி .. .. .. | 25,000 |
| 6. | அருள்மிகு சுப்ரமணியசுவாமி ஆலயம், திருவிடைக்கழி .. .. .. | 15,000 |
| 7. | அருள்மிகு தியாகராஜசுவாமி ஆலயம், திருவாரூர் .. .. .. | 25,000 |
| 8. | அருள்மிகு மாரியம்மன் ஆலயம், மோகனூர் .. .. .. | 20,000 |
| 9. | அருள்மிகு நாராயணப் பெருமாள் ஆலயம், நாங்கூர் .. .. .. | 15,000 |
| 10. | அருள்மிகு லட்சுமி நாராயணப் பெருமாள் ஆலயம், நாங்கூர் .. | 15,000 |
| 11. | அருள்மிகு ஆஞ்சநேயசுவாமி ஆலயம், சீர்காழி நகர் .. .. .. | 5,000 |
| 12. | அருள்மிகு பிரம்மசிரகண்டீஸ்வரர் ஆலயம், கண்டியூர் .. .. | 1,000 |
| | மொத்தம் .. | 2,01,000 |



1979–80ஆம் ஆண்டிற்கு வழங்கப்பட்ட அரசு மான்யம் விவரம் :

| | ஆலயத்தின் பெயர். | தொகை. |
|---|---|---|
| | | ரூ. |
| 1. | அருள்மிகு முத்துமாரியம்மன் ஆலயம், குருவிக்கரம்பை, பட்டுக்கோட்டை வட்டம் .. .. .. .. | 5,000 |
| 2. | அருள்மிகு சௌந்தரேசுவரர் ஆலயம், பேட்டை. முத்துப்பேட்டை .. | 10,000 |
| 3. | அருள்மிகு கைலாசநாதர், லட்சுமி நாராயண பெருமாள் ஆலயம், கம்மங்குடி. | 30,000 |
| 4. | அருள்மிகு கல்யாண ரெங்கநாதர் ஆலயம், திருநகரி .. .. .. .. | 25,000 |
| 5. | அருள்மிகு முத்துமாரியம்மன் ஆலயம், மோகனூர் .. .. .. .. | 29,000 |
| 6. | அருள்மிகு நாராயணபெருமாள் ஆலயம், நாங்கூர் .. .. .. .. | 22,000 |
| 7. | அருள்மிகு சிவலோகநாத சுமாமி ஆலயம், கீரனூர் .. .. .. .. | 5,000 |
| 8. | அருள்மிகு வனதுர்க்கையம்மன் ஆலயம், கதிராமங்கலம் .. .. .. | 10,000 |
| 9. | அருள்மிகு வீர ஆஞ்சநேயசுவாமி ஆலயம், சீர்காழி .. .. .. .. | 10,000 |
| 10. | அருள்மிகு மீனாட்சியம்மன் ஆலயம்: மணவாளநல்லூர் .. .. .. | 5,000 |
| 11. | அருள்மிகு அழகியநாத சுவாமி ஆலயம், திருத்துறைப்பூண்டி .. .. .. | 5,000 |
| 12. | அருள்மிகு சுப்ரமணியசுவாமி ஆலயம், திருவிடைக்கழி .. .. | 20,000 |
| 13. | அருள்மிகு வீரமாகாளியம்மன் ஆலயம், மாளிகைத்திடல் .. .. .. | 1,000 |
| 14. | அருள்மிகு சந்தான மாரியம்மன் ஆலயம், உப்பிலியப்பன் கோயில் .. .. | 10,000 |
| | மொத்தம் .. | 1,87,000 |

அரசு மானியத் தொகை விடுவிக்கப்பட்ட ஆலயங்கள் விவரம் :—

| ஆண்டு. | ஆலயத்தின் பெயர். | தொகை. |
|---|---|---|
| | | ரூ. |
| 1978–79 | அருள்மிகு மாரியம்மன் ஆலயம், மோகனூர் .. .. .. | 20,000 |
| .. | அருள்மிகு கல்யாண ரெங்கநாதர் ஆலயம், திருநகரி .. .. .. | 25,000 |
| .. | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி ஆலயம் திருவிடைக்கழி .. .. .. | 15,000 |
| .. | அருள்மிகு நாராயணபெருமாள் ஆலயம், நாங்கூர் .. .. .. | 15,000 |
| .. | அருள்மிகு ஆஞ்சநேய சுவாமி ஆலயம், சீர்காழி .. .. .. .. | 5,000 |
| .. | அருள்மிகு பிரம்மசிரகண்டீசுவரர் ஆலயம், கண்டியூர் .. .. | 1,000 |
| | மொத்தம் .. | 81,000 |
| 1979–80 | அருள்மிகு முத்துமாரியம்மன் ஆலயம், மோகனூர் . .. .. .. | 29,000 |
| .. | அருள்மிகு அழகியநாதசுவாமி ஆலயம், திருத்துறைப்பூண்டி .. .. | 5,000 |
| | மொத்தம் .. | 34,000 |

மற்ற ஆலயங்களுக்கு வழங்கப்பட்ட மானியத் தொகையை விடுவிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.



## இணைப்பு VIII

சட்டமன்றப் பேரவை உறுப்பினர் திரு. இல. பலராமன், எம்.எல்.ஏ., அவர்கள் கீழ்க்கண்ட உடுக்குறியிடாத வினாவை (எண் 2580) எழுப்பியுள்ளார்,

(அ) 1979–80-ல் வடஆற்காடு மாவட்டத்தில் ஒழுங்கு முறை விற்பனைக்கூடம் மூலம் விவசாயிகளின் விளைபொருள்கள் என்னென்ன விற்கப்பட்டன, டன் அளவுகள்?

(ஆ) இதன் மதிப்பு யாது?

இதற்கான விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளது.

1979–80ஆம் ஆண்டில் வடஆற்காடு மாவட்டத்தில் ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களின் மூலம் விற்கப்பட்ட விவசாய விளைபொருட்கள் அளவு, மதிப்பு விவரம்.

| வரிசை எண்ணும் விளைபொருள்களின் பெயரும். | | வரத்து. (டன்களில்) | மதிப்பு. (ரூபாயில்.) |
|---|---|---|---|
| அறிக்கையிடப்பட்ட விளைபொருள்கள். | | | |
| 1 | கரும்பு வெல்லம் .. .. | 980.0 | 7,62,360.00 |
| 2 | மணிலா .. .. | 25,300.00 | 8,09,69,9.2000 |
| 3 | எள் .. .. | 420.0 | 15,65,840.00 |
| 4 | நெல் .. .. | 64,000.00 | 7,68,07,080.00 |
| 5 | ஆமணக்கு .. | 149.0 | 3:43,945.93 |
| 6 | கம்பு .. .. | 288.9 | 95,063.73 |
| 7 | சோளம் .. .. | 93.4 | 98,780.54 |
| 8 | ராகி .. .. | 132.4 | 1,34,315.79 |
| 9 | துவரை .. .. | 8.2 | 38,120.56 |
| 10 | மிளகாய் .. .. | 72.7 | 4,58,426.32 |
| 11 | கொள்ளு .. | 56,6 | 67,912.80 |
| 12 | தேங்காய் .. | 1767 (எண்களில்) | 1,767.00 |
| | மொத்தம் .. | 91,501.2 மற்றும் 1767 (எண்ணம்) | 16,15,43,532.7 |

| வரிசை எண்ணும் விளைபொருளின் பெயரும். | வரத்து. (டன்களில்) | மதிப்பு. (ரூபாயில்) |
|---|---|---|
| அறிக்கையிடப்படாத விளைபொருள்கள். | | |
| 1 மஞ்சள் .. .. | 2.0 | 8,390.40 |
| 2 தனியா .. .. | 6.6 | 23,10.00 |
| 3 உளுந்து .. .. | 41.9 | 1,15,230.00 |
| 4 மொச்சை .. | 0.7 | 2,100.00 |
| 5 காராமணி .. | 11.7 | 35,100.00 |
| 6 பச்சைப்பயிறு .. | 4.3 | 11,825.00 |
| 7 முந்திரிக்கொட்டை | 0.2 | 1,400.00 |
| 8 கடுகு .. .. | 0.2 | 1,000.00 |
| 9 புளி .. .. | 1.4 | 4,200.00 |
| 10 பருத்தி .. | 25.5 | 11,041.50 |
| 11 வெங்காயம் .. | 8.2 | 4,100.00 |
| 12 சூரியகாந்தி .. | 1.2 | 3,300.00 |
| மொத்தம் .. | 103.9 | 2,20,786.90 |



சுருக்கம்.

| | வரத்து. (டன்களில்.) | மதிப்பு. (ரூபாயில்.) |
|---|---|---|
| அறிக்கையிடப்பட்ட விளைபொருள்கள். | 91,501.2 மற்றும் 1767 எண்ணம். | 16,15,43,532.72 |
| அறிக்கையிடப்படாத விளைபொருள்கள். | 103.9 | 2,20,786.90 |
| கூடுதல் .. | 91,605.1 | 16,17,64,319.62 |

## இணைப்பு IX.

(வினா எண். 3374-க்கான விடையைக் காண்க.)

1980ஆம் வருடம் ஜூலை மாத இறுதி வரை பதிவு செய்தவர்கள் எண்ணிக்கை—அறிக்கை.

| வட்டம். | 8ஆம் வகுப்புக்கு கீழ். | 8ஆம் வகுப்புக்கு மேல் 10ஆம் வகுப்புக்குக் கீழ். | 10ஆம் வகுப்புக்கு மேல் ஆனால் புகுமுக வகுப்பு மற்றும் மேல்நிலைப் பள்ளி இறுதி வகுப்புக்குக் கீழ். | பி.யு.சி.க்கு மேல்நிலைப் பள்ளி இறுதி வகுப்புக்கு மேல். | பட்டதாரிகள். | மொத்தம். |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| வடாற்காடு மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம் வேலூர்.— | | | | | | |
| 1. அரக்கோணம் .. .. | 378 | 864 | 1,458 | 84 | 109 | 2,893 |
| 2. ஆரணி .. .. .. | 298 | 1,314 | 2,428 | 78 | 108 | 4,226 |
| 3. ஆற்காடு .. .. | 226 | 595 | 1,125 | 69 | 101 | 2,116 |
| 4 செய்யார் .. .. | 238 | 988 | 2,514 | 67 | 166 | 3,967 |
| 5 குடியாத்தம் .. .. | 1,808 | 2,176 | 3,018 | 273 | 154 | 7,429 |
| 6 போளூர் .. .. | 409 | 626 | 726 | 121 | 138 | 2,020 |
| 7 திருவண்ணாமலை .. | 425 | 1,011 | 3,214 | 135 | 239 | 5,024 |
| 8 வேலூர் .. .. .. | 2,251 | 2,871 | 4,948 | 457 | 567 | 11,094 |
| 9. வாலாஜா .. .. | 1,013 | 985 | 2,544 | 109 | 162 | 4,813 |
| 10. வந்தவாசி . .. .. | 258 | 646 | 646 | 56 | 78 | 1,684 |
| 11. செங்கம் * .. .. | 443 | 1,202 | 893 | 273 | 134 | 2,945 |
| 12. திருப்பத்தூர் .. .. | 956 | 2,032 | 1.674 | 809 | 343 | 5,814 |
| 13. வாணியம்பாடி .. .. | 598 | 2,061 | 1,229 | 663 | 221 | 4,772 |
| மொத்தம் | 9.301 | 17,371 | 26,417 | 3,194 | 2:514 | 58,797 |

*துணை வேலைவாய்ப்பு அலுவலகம், ஆலங்காயம் என்ற [illegible] அதிகார வரம்பிற்குட்பட்டது.

நட்சத்திரக்குறியிடாத வினா விடைப் பட்டியலிலுள்ள அச்சுப் பிழையும் திருத்தமும்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 2 | 6 | திருவில்லிபுத்னூர் | திருவில்லிபுத்தூர் |
| 3 | 7 | புனூரில் | புதூரில் |
| 7 | 9–10 | விடையளி பாரா | விடையளிப்பாரா |
| 8 | 8 | திருவில்லிபுத்னூர் | திருவில்லிபுத்தூர் |
| 9 | 15 | கிராம நல அளவை | கிராம நில அளவை |
| 14 | 1 | தொடர் எண். 227-ஐ சேர்த்துப் படிக்கவும். | |
| 14 | 2 | கம்மை நெல்லூரின் | கம்பை நெல்லூரின் |
| 14 | 22 | 227 | 228 |
| 14 | 31 | 228 | 229 |
| 15 | 21 | 229 | 230 |
| 16 | 25 | 230 | 231 |
| 17 | 15 | 233 | 232 |
| 19 | 28 | ஆழபடுத்துல் | ஆழப்படுத்தும் |
| 22 | 12 | ஆய்வ0ளர்களுக்கு | ஆய்வாளர்களுக்கு |
| 23 | 11 | புனூர் | புதூர் |
| 30 | 32 | வேடச னூர் | வேடசந்தூர் |
| 41 | 2 | பட்டதாரிகள் | பட்டதாரிகள் |
| 41 | கடைசி வரி | 3விடை | விடை |
| 42 | 12–13 | விரிவாகப் பணி | விரிவாக்கப்பணி |
| 46 | 27 | முடிந்துடுடும் | முடிந்துவிடும். |
| 46 | 29 | கிராமத்துக்கு நீர் | கிராமத்துக்கு குடி நீர் |
| 47 | 30 | 389 | 289 |
| 48 | 25 | 15'442 | 15·442 |
| 50 | 6 | சரவளஞ்சான்பட்டி | கரவளஞ்சான்பட்டி |
| 50 | 11 | அச்சஞங்குளம் | அச்சங்குளம் |
| 50 | 12 | சரவளஞ்சான்பட்டி | கரவளஞ்சான்பட்டி |
| 50 | 32 | 9—8—1976 | 19—8—1976 |



| | | | |
|---|---|---|---|
| 51 | 23 | 42/16. | 420/6 |
| 60 | 24 | கூமப் பட்டியில் | கூமாப்பட்டியில் |
| 60 | 27 | கூமப் பட்டியில் | கூமாப்பட்டியில் |
| 65 | 12-ல் கடைசியில் வரும் 'மல்' என்னும் வார்த்தையை நீக்கிப் படிக்கவும். | | |
| 78 | 38 | பகுதி 6' 399-க்கு பதிலாக 309 என்று படிக்கவும். | |
| 78 | 44 | பகுதி 7—585-க்கு பதிலாக 584 என்று படிக்கவும். | |
| 79 | 23 | பகுதி 2-ல் 10,500க்கு பதிலாக 10,900 என்று படிக்கவும். | |
| 80 | 4 | திரு. எஸ். பலராமன் | திரு. எல். பலராமன் |
| 84—85 | 27 | பகுதி 5-ல் 6·8 என்று வாசிக்கவும். | |
| 89 | 4 | இம்மாநிலத்தில் | இயற்கையில் |
| 89 | 5 | இருமுறை | இருமுனை |
| 89 | 35 | 33 1-3சதவிதம் | 33 1/3 சதவீதம். |
| 89 | 38 | 33 1-3சதவிதம் | 33 1/3சதவீதம் |
| 89 | 40 | தடுப்பாணை | தடுப்பணை |

D (
V211,31 N81
N83-1232
122175